

1.10.1995 ரூ.3

ஹாக்கி விளையாட்டரங்கம்

எழும்பூர்



திரு முத்துக்கூத்தன்
- பொம்மலாட்டம்

நிகழ்ச்சிகளில் சில...

கூத்துப்பட்டறைக் குழுவினரின்
- தப்பாட்டம்

இந்த இதழில்...

ஈடு இணையற்ற உயர்ந்த தலைவர்
- மாண்புமிகு முதல்வர்....................2

திக்கெட்டும் புகழ் மணக்கும்
தெற்காசிய விளையாட்டுப் போட்டி.......3

படமும் - செய்தியும்....................12

தமிழ்ப்புலவோர் கண்ட சால்பு
- கவிஞர் ஐ. உலகநாதன்....................13

காட்டுவளம் காக்க வாரீர்!
- புலவர் அ. இராசேந்திரன்....................17

பசும்பொன் முத்துராமலிங்கத்
தேவர் மாவட்டம்:
- காயிதெமில்லத் பிறந்தநாள்
நூற்றாண்டு விழா:....................18

மகாத்மாவும், மகாகவியும்
- டாக்டர் அ. பிச்சை....................21

தருமபுரி மாவட்டம்
- பல்துறைப் பணி விளக்க முகாம்............24

பெண் குலத்தின் பொன்விளக்கு
–கவிநிலவு தர்மராஜ்....................26

நூல்நயம்....................34

'பத்துப்பாட்டு' காட்டுகிற வீர
இலக்கணம்
- முனைவர் சிற்பி பாலசுப்பிரமணியம்......36

மானுடம் பாடும் வானம்பாடி
- டாக்டர் ச.சு. இளங்கோ....................40

திண்டுக்கல்-அண்ணா மாவட்டம்
- காயிதெமில்லத் பிறந்தநாள்
நூற்றாண்டு விழா:....................44

தமிழ் எங்கள் உயிர்
- செல்வி ப. காயத்ரி....................46

இதழ்தோறும் ஓர் இனிய குறள்

**நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும் (28)**

பயன் நிறைந்த மொழிகளில் வல்ல சான்றோரின் பெருமையை, உலகத்தில் அழியாமல் விளங்கும் அவர்களுடைய மறைமொழிகளே காட்டிவிடும்.

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026
புரட்டாசித் திங்கள் : 15
மலர்: 26 இதழ்: 7
1.10.1995
விலை ரூபாய்: 3

199919

ஈடு இணையற்ற உயர்ந்த தலைவர்!

–மாண்புமிகு முதல்வர்

'**ம**காத்மா காந்தி' என்கிற மந்திரச் சொல், சாதாரண இந்தியனை உலகச் சரித்திரத்தில் சுயமரியாதையோடும், பெருமையோடும் அறிமுகப்படுத்தி வைத்த பெயர். இந்தியாவைக் 'காந்தி தேசம்' என்று அழைக்க வேண்டுமெனத் தந்தை பெரியார் கேட்டுக் கொண்டாரென்றால், அண்ணல் காந்தியின் பெருமைகளை விளக்கிச் சொல்ல வேறு எவரும் நமக்குத் தேவையில்லை.

காந்திஜி சாமானிய மனிதனின் கண்ணோட்டத்திலும், பெரிய பிரச்சினைகளை அணுகத் தெரிந்து வைத்திருந்த சீர்திருத்தச் செம்மல், சுருக்கமாகச் சொன்னால், இந்த நாட்டில் எவரோடும் ஒப்பிடமுடியாத ஈடுஇணையற்ற உயர்ந்த தலைவர் காந்திஜி.

'பிறப்பிலேயே நானொரு ஜனநாயகவாதி' என்று தன்னை அழைத்துக் கொண்ட மகாத்மா காந்திதான், எதற்கும் பயப்படுகிற இந்தியனை வலிமையோடு நிமிர்ந்து நிற்கச் செய்தவர், வெறும் கோரிக்கை மனுக்களைச் சமர்ப்பித்துச் சுதந்திரம் பெற முடியாது என்பதால், தன்னலமற்ற வழியில், பொது நலச் சேவைக்காக சத்தியாக்கிரகத்தையும், ஒத்துழையாமையையும், நமது சுதந்திரப் போராட்டத்தில் புகுத்தி வெற்றி கண்டவர்.

'சத்தியாக்கிரகம்' என்பது இரண்டு நபர்களுக்குள்ளோ, அல்லது இரண்டு பிரிவினருக்கு இடையேயோ ஏற்படும் முரண்பாடல்ல, அது, உண்மைக்கும் பொய்மைக்கும், நல்லவைகளுக்கும் கெட்டவைகளுக்கும் இடையே நடக்கும் போராட்டம், என்ற உண்மையை உலகிற்கு உணர்த்தியவர் அண்ணல் காந்தி.

சுதந்திர இந்தியாவின் பிரச்சினைகள் எப்படி இருக்கும் என்பதைத் தனது தொலைநோக்குப் பார்வையில் கணித்து, தமது ஒபபற்ற காந்தியக் கொள்கைகளின் மூலம், அவற்றிற்கெல்லாம் வழிமுறைகளையும் வகுத்துச் சொன்னார் அவர். எனவே தான், 'The first and foremost indigenous Social Scientist of India' என்று அழைக்கப்பட்டார்.

அரசியல் சுதந்திரம் மட்டுமின்றி, பொருளாதாரச் சுதந்திரத்தையும் இந்தியா அடைய வேண்டும் என்பதே, அவரது அனைத்து எண்ணங்களிலும் மூலப் பொருளாய் விளங்கியது.

அரசியலில் ஈடுபட்டிருந்த மகாத்மா காந்தி அவர்களின் வாழ்க்கை நெறி, வரலாற்று ஆசிரியர்களுக்குப் பெரிய வியப்பைத் தந்தது.

'சத்தியம்' 'உண்மை' என்ற மாபெரும் தத்துவம அவரது எண்ணங்களிலும், செயல்களிலும், மற்றும் அனைத்து வாழ்க்கைக் கூறுகளிலும் பரவியிருந்த பாங்கு அவர் ஏற்றிருந்த பொதுப் பணிகளுக்குத் தீவிரமான வழியமைத்துத் தந்தது. இந்த உலகத்தில் தோன்றிய தலைவர்களில் எவருமே காந்தியடிகளைப் போன்று அரசியல், பொருளாதாரம், சமுதாயம், ஆன்மீகம் என்று தாம் தொட்ட அனைத்துத் துறைகளிலும் இந்தத் தத்துவத்தைப் பின்பற்றவில்லை என்பது, உலக வரலாற்றில் அதிசயிக்கத்தக்க உண்மையாகும்.

–'புரட்சித் தலைவியின் முழக்கம்' தொகுதி-1-லிருந்து.

திக்கெட்டும் புகழ் மணக்கும் தெற்காசிய விளையாட்டுப் போட்டி

புரட்சித்தலைவியின் வெற்றிச் சரித்திரத்தில் ஒரு பொன்னேடு!

தமிழ்நாட்டின் விளையாட்டுத் தரத்தை, சர்வதேசத் தரத்துக்கு உயர்த்த வேண்டும், தமிழகத்து வீரர்கள் உலகப் போட்டிகளில் வாகை சூட வேண்டும் என்பதில் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தனிக் கவனம் செலுத்தி வருகிறார். இவ்வெண்ணத்திற்கு முதல் கட்டமாக, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழ்நாட்டிலுள்ள இளைஞர்களின் விளையாட்டுத் திறனை மேம்படுத்தும் வகையில், ஜூலை 1992-இல் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தை உருவாக்கினார். இந்த முயற்சியே தமிழ்நாட்டின் விளையாட்டு வளர்ச்சியின் ஒரு திருப்புமுனை எனலாம்.

தமிழ்நாட்டு வீரர்களுக்குத் தக்க தகுதிகள் இருந்தும், போட்டிகளில் வெற்றி பெறாமைக்குக் காரணம் சரியான சர்வதேசத் தரத்தில் விளையாட்டரங்கங்கள் இல்லாமை என்பதை மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் உணர்ந்து, தமிழ்நாட்டில் சர்வதேசத் தரத்தில் விளையாட்டரங்கங்களை அமைக்கும் முயற்சியை மேற்கொண்டார். அவரது முயற்சியின் முதல் உருவமே, உலகமே வியக்கும் வண்ணம் ரூ.45 கோடி மதிப்பீட்டில் ஏழு மாதத்திற்குள்ளாகவே உருவான ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு மாவட்டத் தலைநகரிலும் ஒரு திறந்தவெளி விளையாட்டரங்கம், உள் விளையாட்டரங்கம் மற்றும் நீச்சல் குளம் அமைத்திடும் சிறப்புத் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிமுகப் படுத்தினார்.

அட்டை சொல்லும் கட்டுரை

சேலம் மற்றும் ஈரோட்டிலுள்ள மாவட்ட விளையாட்டு வளாகங்கள், திறந்தவெளி விளையாட்டு அரங்கத்தையும், உள் விளையாட்டரங்கத்தையும் பெற்றிருக்கின்றன. சேலத்திலும், ஈரோட்டிலும் நீச்சல் குளங்கள் அமைக்க மொத்த மதிப்பீடான ரூ.27 இலட்சத்திற்கு 1995-96-இல் ரூ.13.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

இதேபோல விளையாட்டு வளாகம் இல்லாத மாவட்டத் தலைநகர்களுக்கும் படிப்படியாக விளையாட்டு வளாகங்கள் கட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் திட்டமிட்டுள்ளார். இத்திட்டத்தின் கீழ் 1995-96-இல் சிவகங்கையிலும், திண்டுக்கல்லிலும் மாவட்ட விளையாட்டு வளாகங்கள் ரூ.38 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு வருகின்றன.

தற்போது 14 மாவட்டங்

களில் விளையாட்டரங்கங்கள், 3 மாவட்டங்களில் நீச்சல் குளங்கள், 4 மாவட்டங்களில் விளையாட்டு உள்ளரங்கங்கள் உள்ளன.

விஞ்ஞானிகள், ஆராய்ச்சி யாளர்கள், விற்பன்னர்களைப் போல விளையாட்டு வீரர்களும், தான் பிறந்த நாட்டுக்குப் புகழ் தேடித் தருகிறார்கள். எனவே, அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்பதை மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஒரு முறை அறிவித்தார். அதனைத் தொடர்ந்து, விளையாட்டுத் துறையில் சிறந்து விளங்கும் விளையாட்டு வீரர், வீராங்கனை களைத் தமிழக அரசு தத்தெடுத்து ஊக்குவிக்கும் திட்டத்தை அறிமுகப்படுத்தினார்.

சலுகைகள்

தகுதியிருந்தும், தக்க வசதியின்றி, ஆர்வமிருந்தும் உற்ற ஆதரவின்றி, வெம்பிப்போன வீரர், வீராங்கனைகளுக்கு ஒரு நம்பிக்கையொளியாய் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் சிறந்த விளையாட்டு வீரர்களுக்குப் பல்வேறு நிதியுதவிகளை வழங்கி வருகிறார். அவற்றுள் சில:

1. இளம் நீச்சல் வீரன் குற்றாலீசுவரனை, தமிழக அரசு தத்தெடுத்துள்ளது. மாதந்தோறும் ரூ.1,000 உதவித் தொகையும், ஆண்டுதோறும் விளையாட்டு உபகரணங்கள் வாங்க ரூ.1,500-ம் வழங்கப்படுகிறது. உலகத்தில் 5 ஜலசந்திகளைக் கடக்க இவ்விளம் வீரனுக்கு ரூ.15.29 இலட்சம் நிதியுதவி அளித்துள்ளது.

தடகளப் போட்டி வீராங்கனை செல்வி சோலைமதியை அரசு தத்தெடுத்து அவருக்கு மாதந்தோறும் ரூ.1000 உதவித் தொகையும், ஆண்டுதோறும் விளையாட்டு உபகரணங்கள் வாங்க ரூ.1,500 நிதியுதவியும் அரசு வழங்கி வருகிறது. இது தவிர, மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி, செல்வி சோலைமதியின் பெயரில் இந்தியன் ஓவர்சீஸ் வங்கியிலும் ரூ.2 இலட்சம் நிரந்தர வைப்பு முதலீடு செய்யப்பட்டு, அதிலிருந்து கிடைக்கும் வருவாயைத் தன்னுடைய விளையாட்டு வளர்ச்சிக்குப் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யப்பட்டுள்ளது.

நிதியுதவி

மேலும், தடகள வீரர் ஆனந்த நடராஜன் ஸ்வீடன் நாட்டில் சென்று சிறப்புப் பயிற்சி பெற மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.2 இலட்சத்து 50 ஆயிரம் வழங்கியுள்ளார். மற்ற வீரர்களும், அவர்களுக்குத் தமிழ்நாடு அரசு வழங்கிய நிதியுதவியும் பின் வருமாறு:

1. செல்வி சாமுண்டீஸ்வரி, பவர்லிப்டிங் வீராங்கனை - ரூ.30,000

2. செல்வன் சோம்நாத் கராத்தே விளையாட்டு வீரர் - ரூ.1.20 இலட்சம்

3. திரு எஸ். கோதண்டன் மற்றும் குழுவினர், கராத்தே - ரூ.3.68 இலட்சம்

4. செல்வன் மணிமாறன். இந்தோனேஷியாவில் நடந்த ஊனமுற்றோருக்கான ஒலிம்பிக் போட்டியில் பங்குபெற ரூ.18,500

5. திரு எஸ். ராஜரெத்தினம், கபடிவீரர் - ரூ.1.00 இலட்சம்

6. திரு பி. கணேசன், கபடிவீரர் - ரூ.1.00 இலட்சம்

7. திரு கே. பாஸ்கரன், கபடிவீரர் - ரூ.1.00 இலட்சம்

8. திரு எஸ்.ஹுசைனி, கராத்தேவீரர் - ரூ.3.00 இலட்சம்

இப்படி நிதியதவி பெற்ற விளையாட்டு வீரர்களின் பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

விளையாட்டு வீரர்களுக்கு வீடுகள்

ஒலிம்பிக் மற்றும் சர்வதேச விளையாட்டுப் போட்டிகளில் பதக்கம் பெறும் விளையாட்டு வீரர், வீராங்கனைகளுக்கு வீட்டு வசதி மற்றும் நகர் வளர்ச்சித் துறையின் அரசாணை எண் 639-இல் குறிப்பிட்டுள்ளபடி, வீடுகள் வழங்கும் திட்டத்தை மாண்புமிகு முதல்வர் அறிமுகப் படுத்தியுள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் தங்கப் பதக்கம் பெறும் விளையாட்டு வீரர், வீராங்கனைக்கு உயர் வருவாய்ப் பிரிவு குடியிருப்பு ஒன்று அல்லது வீட்டுமனை ஒன்று, வெள்ளிப்பதக்கம் பெற்றவருக்கு மத்திய வருவாய்ப் பிரிவு குடியிருப்பு ஒன்று, வெண்கலப்பதக்கம் பெற்றவருக்குக் குறைந்த வருவாய்ப் பிரிவு குடியிருப்பு ஒன்று அரசு வழங்குகிறது.

இதுவரை மாண்புமிகு முதல்வர் அவர்களின் ஆணையின்படி, ஹிரோஷிமாவில் நடந்த ஆசியப் போட்டியில் கலந்து கொண்டு தங்கப்பதக்கம் பெற்ற கபடி வீரர்கள் ராஜரெத்தினம், பாஸ்கரன், கணேசன் ஆகியோருக்கு வீடுகள் வழங்க ஆணையிடப் பட்டுள்ளது. 1990-ஆம் ஆண்டு காமன்வெல்த் போட்டியில் பளுதூக்கும் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற திரு ரெங்கசாமிக்குக் கொரட்டூரில் வீட்டுமனை வழங்கப் பட்டுள்ளது.

டிரயதலான் வீராங்கனை செல்வி அமுதாவிற்கு உயர் வருவாய்க் குடியிருப்பு ஒன்று பாடியில் வழங்கப்பட்டுள்ளது அவருடைய தந்தைக்கு அரசுப் பணி நிரந்தரம் செய்யப் பட்டுள்ளது.

கராத்தே வீரர் திரு ஹுசைனிக்கு மொகப்பேர் விரிவாக்கத்தில் வீட்டுமனை ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

இப்படி விளையாட்டில் சாதனைகள் படைக்கும் வீரர், வீராங்கனைகளுக்குச் சலுகைகள் செய்வதில சாதனைகள் படைக்கும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைச் சென்னையில் நடத்த வேண்டும். இதனால் தமிழக வீரர்களுக்குப் புதிய உற்சாகமும், அவர்களின் பார்வையில் புதிய பரிமாணமும் கிடைப்பதோடு பல சர்வதேசத் தரத்திலான விளையாட்டரங்கங்களில் பயிற்சி பெறும் வாய்ப்பும் கிடைக்கும் என்று விரும்பினார்.

ஏழாவது தெற்காசியப் போட்டிகள் இவ்வாண்டு டிசம்பர் திங்கள் 18-ஆம் நாள் தொடங்கி 10 நாட்களுக்குப் பிரம்மாண்டமாக சென்னையில் நடைபெறவுள்ளது. இதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

தோழமையின் தூய வடிவம்

விளையாட்டு வீரத்தின் வெளிப்பாடு, விவேகத்தின் தாய்

இளம் நீச்சல்வீரன் செல்வன் குற்றாலீஸ்வரன்

பவர்லிப்டிங் வீராங்கனை செல்வி சாமுண்டீஸ்வரி

வீடு, கூட்டு முயற்சியின் தூய வடிவம், நல்லொழுக்கத்தையும், நற்பண்பையும் தனி மனிதனிடத்தில் வளர்த்து, தோழமை உணர்வைத் தூண்டி, மேலாண்மைப் பண்பை மேம்படுத்தி, தனி மனித வளர்ச்சியோடு சமூக வளர்ச்சியையும் காண்பது விளையாட்டுப் போட்டி.

நன்னம்பிக்கையின் விளைபொருள்

நாடுகளிடையே வேற்றுமையைக் களைந்து ஒற்றுமையை உருவாக்க முடியும் என்ற நன்னம்பிக்கையின் விளைபொருளே நாடு தழுவிய, உலகளாவிய, வீரங்கொப்பளிக்கும் விளையாட்டுப் போட்டிகள். அவை, உலகம் ஒரு கிராமம். உள்ளோர் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற உன்னதக் கோட்பாட்டின் பயன்படு பொருள்.

பொறுப்பு மிகுந்த உறுப்பு நாடுகள்

ஒருமைப்பாட்டையும், சகோதரத்துவத்தையும், வளர்க் வேண்டும் என்ற இலக்கை எல்லையாகக் கொண்டு உருவாக்கப்பட்டது தெற்காசிய நாடுகளின் விளையாட்டு இணையம். இது 1984-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இதன் உறுப்பு நாடுகள், வங்காள தேசம், பூட்டான், இந்தியா, மாலத் தீவு, நேப்பாளம், பாகிஸ்தான் மற்றும் இலங்கை ஆகிய ஏழு நாடுகள் ஆகும். இந்நாடுகளுக்கிடையே இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை விளையாட்டுத் திறமையை வளர்க்கும் வகையில் விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

போட்டி நடைபெற்ற நாடுகள் - ஆண்டு - இடம்:

1. நேப்பாளம் - 1984 - காட்மண்டு.

2. வங்காளதேசம் - 1985 - டாக்கா.

3. இந்தியா - 1987 - கல்கத்தா.

4. பாகிஸ்தான் - 1989 - இஸ்லாமாபாத்.

5. இலங்கை - 1991 - கொழும்பு.

6. வங்காளதேசம் - 1993 - டாக்கா.

வங்காளதேசம் மட்டும் இரண்டு முறை தெற்காசியப் போட்டிகளை நடத்திய பெருமையை ஈட்டியுள்ளது. ஏழாவது தெற்காசியப் போட்டியை சென்னையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நடத்துவதால் இந்தியாவுக்கு இரண்டாவது முறை இப் போட்டியை நடத்திய பெருமை கிடைக்கப் போகிறது. மாண்புமிகு இந்தியப் பிரதமர் இப்போட்டிகளைத் தொடங்கி வைக்கப் போகிறார்.

விளையாட்டுச் சுடர்

மாண்புமிகு முதல்வர் அவர்கள் 1993-ஆம் ஆண்டில் டாக்கா மாநகரில் நடைபெற்ற ஆறாவது தெற்காசியப் போட்டியின் இறுதி நாளன்று தன்னுடைய சார்பாக மாண்புமிகு கல்வியமைச்சர் அவர்களை அனுப்பி, விளையாட்டுச் சுடரைப் பெற்று, ஏழாவது தெற்காசிய போட்டியைச் சென்னையில் நடத்துவதற்கான ஒப்புதலையும் அளித்து வரச் செய்தார்.

முதல் நிகழ்ச்சியாக, ஏழாவது தெற்காசிய விளையாட்டுச் சுடரை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 28.10.95 அன்று வரலாற்றுப் புகழ்பெற்ற சென்னை புனித ஜார்ஜ் கோட்டைக் கொத்தளத்தில் ஏற்றி வைத்து, சுடரோட்டத்தைத் தொடங்கி வைக்கிறார்.

அனைத்திந்தியத் தலைநகரிலும் வலம் வரும் சுடர்

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றில், முதன் முதலாக விளையாட்டுச் சுடர் இந்தியாவிலுள்ள அனைத்து மாநிலத் தலைநகர்களுக்கும் எடுத்துச் செல்லப்படுகிறது. இது மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சி த்தலைவி அவர்களின் விருப்பப்படி செயல்படுத்தப்படுகிறது.

இச்சுடரோட்டம், 28.10.95 அன்று சென்னையில் தொடங்கி தொடர்ந்து 25 மாநில - யூனியன் பிரதேசத் தலைநகர்களில் பயணம் செய்து, மீண்டும் 17.12.95 அன்று சென்னை திரும்புகிறது.

விளையாட்டுக் கிராமம்

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றில் இதுவரை கண்டிராத வகையில் முதன் முறையாக நவீன வசதிகள் நிரம்பிய 'விளையாட்டுக் கிராமம்' மாண்புமிகு புரட்சித்தலைவியின் விருப்பப்படி அமைக்கப்பட்டுள்ளது. ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடத்தப்பட வேண்டும் என்ற முடிவு எடுக்கும் முதல் ஆலோசனைக் கூட்டம் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் வாயிலாக 10.7.1993 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்று முதல் சென்னை மாநகரம் சர்வதேசப் போட்டிகள் நடத்தப்படும் வளமான தளமானது. சர்வதேசத் தரத்தில் 560 குடியிருப்புகள் 35 ஏக்கர் நிலப்பரப்பில் சென்னை அண்ணா நகர் அருகே கட்டப்பட்டுள்ளன. இவற்றில் 304 குடியிருப்புகள் மூன்று படுக்கையறை வசதியும், 256 குடியிருப்புகள் இரண்டு படுக்கையறை வசதியும் கொண்டவை. மொத்தம் 5 தளங்களில் கட்டப்பட்டுள்ளன. கட்டுமானப் பணிகளைத் தமிழ்நாடு வீட்டு வசதிக் கழகம் ரூ.70 கோடி செலவில் கட்டி முடித்துள்ளது. இவ்விளையாட்டுக் கிராமத்தில் 2,500 விளையாட்டு வீரர், வீராங்கனைகள் தங்கலாம். இங்கு தங்குவோருக்கு 5 நட்சத்திர விடுதியிலிருந்து உணவு வழங்கப்படும். மேலும், இவ்விளையாட்டுக் கிராமத்தில் வணிக வளாகம், தகவல் மற்றும் ஒலி, ஒளி மையம், வங்கி வசதிகள், தொலைத் தொடர்பு வசதிகள் போன்றவையும் உண்டு.

போக்குவரத்து வசதிகள்

விளையாட்டுக் கிராமத்திலிருந்து நகரின் அனைத்துப் பகுதிகளுக்கும் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. இந்தப் பேருந்துகள் சிறப்பாக வண்ணம் பூசப்பட்டு அழகுறக் காட்சியளிக்கும்.

விளையாட்டு வீரர்கள்

ஏழு தெற்காசிய நாடுகளிலிருந்தும் 2,200 விளையாட்டு வீரர், வீராங்கனைகளும், ஏறக்குறைய 1,700 விளையாட்டு அலுவலர்களும் கலந்து கொள்கின்றனர்.

டிரயதலான் வீராங்கனை செல்வி அமுதா

விளையாட்டு	நடைபெறுமிடம்	நடைபெறும் நாட்கள் (டிசம்பர் திங்கள்)
1. தடகளப் போட்டிகள்	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம	20 முதல் 24 முடிய
2. கூடைப்பந்து	டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப்பந்து விளையாட்டு உள்ளரங்கம், கீழ்ப்பாக்கம	22 முதல் 26 முடிய
3. குத்துச்சண்டை		19 முதல் 23 முடிய
4. கால்பந்து	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்	21 முதல் 25 முடிய மற்றும் 27
5. ஹாக்கி	எம்.ஆர்.சி. விளையாட்டரங்கம்	21 முதல் 24 முடிய
6. ஜூடோ	கலைவாணர் அரங்கம்	19 முதல் 21 முடிய
7. கபடி	நேரு பூங்கா விளையாட்டரங்கம	19 முதல் 22 முடிய
8. துப்பாக்கி சுடும் போட்டி	வீராபுரம் மற்றும் அலமாதி துப்பாக்கி சுடும் பயிற்சிக் களம	19 முதல் 21 முடிய
9. நீச்சல்	நீச்சல் குள வளாகம் வேளச்சேரி	19 முதல் 23 முடிய 25 முதல் 26 முடிய
10. டென்னிஸ்	டென்னிஸ் விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம்	19 முதல் 23 முடிய
11. டேபிள் டென்னிஸ்	சாந்தோம் மேல்நிலைப் பள்ளி வளாகம	19 முதல் 23 முடிய
12. பளுதூக்கும் போட்டி	கலைவாணர் அரங்கம்	22 முதல் 26 முடிய
13. கைப்பந்து	உள்ளரங்கம்	19 முதல் 23 முடிய 25 முதல் 26 முடிய
14. மற்போர்	டாக்டர் ஜெ. ஜெயலலிதா விளையாட்டு உள்ளரங்கம் கீழ்ப்பாக்கம்	19 முதல் 21 முடிய

காட்சி விளையாட்டரங்கங்கள்

1. கோ கோ	நேரு பூங்கா விளையாட்டு வளாகம	23 முதல் 24 முடிய
2. சிலம்பம்	உள்ளரங்கு	25 முதல் 26 முடிய
தொடக்க விழா	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்	18
நிறைவு விழா	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்	27

ஊரக விளையாட்டு மையங்கள்

கிராமத்து இளைஞர்களிடையே புதைந்து கிடக்கும் விளையாட்டுத் திறமைகளை வெளிக்கொணர, 380 ஒன்றியங்களில் ஊரக விளையாட்டு மையங்கள் ரூ.38 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகின்றன.

பங்குபெறும் விளையாட்டுகள்

சென்னையில் நடக்கும் இப்போட்டியில்தான், இதுவரை நடந்த போட்டிகளையெல்லாம் விட, அதிகப்பட்சம் 14 விளையாட்டுப் பிரிவுகள் நடக்கவுள்ளன. அவை, டென்னிஸ், நீச்சல், குத்துச்சண்டை, பளுதூக்குதல், ஹாக்கி, கால்பந்து, தடகளப் போட்டி, டேபிள் டென்னிஸ், கபடி, துப்பாக்கிச் சுடும் போட்டி, கைப்பந்து, கூடைப் பந்து, மற்போர், ஜூடோ ஆகும். இந்தியா, இலங்கை, வங்காள தேசம் ஆகிய மூன்று நாடுகளும் அனைத்து விளையாட்டுகளிலும் பங்கு பெறுவதை உறுதிச் செய்துள்ளன. ஜூடோ தவிர பிற விளையாட்டுகள் அனைத்திலும் பாகிஸ்தான் பங்கு பெற விருப்பம் தெரிவித்துள்ளது.

சிலம்பம்

காட்சி விளையாட்டுகளாக கோகோ மற்றும் தமிழ்நாட்டின் கிராமியச் சிலம்பம் ஏழாவது தெற்காசியப் போட்டிகளில் அறிமுகப்படுத்தப்படவுள்ளன.

விளையாட்டுகள் அனைத்தும் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ள, 11 விளையாட்டரங்களில் நடைபெறும். எந்தெந்த விளையாட்டுகள், எங்கெங்கு நடைபெறும். எந்தத் தேதியில் நடைபெறும் என்பதற்கான முதல் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

போட்டிகள் நடைபெறும் 11 வளாகங்களில் 5 விளையாட்டரங்கங்கள் புதிதாகக் கட்டப்படுகின்றன. அவையாவை, நீச்சல் குள வளாகம் - வேளச்சேரி, டென்னிஸ் விளையாட்டரங்கம் - நுங்கம்பாக்கம், ஹாக்கி, விளையாட்டரங்கம் - எழும்பூர், பல்நோக்கு விளையாட்டு உள்ளரங்கம் - பழைய மிருகக் காட்சிசாலை வளாகம் மற்றும் துப்பாக்கி சுடும் தளம், வீராபுரம் ம்ற்றும் அலமாதி.

நீச்சல்குள வளாகம்

வேளச்சேரியில் முக்கியமான இடத்தில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் சர்வதேசத் தரத்தில் (FINA Standard) புதிய நீச்சல் குள வளாகம் ரூ.11 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வருகிறது. இங்கு 4,500 பேர் அமர்ந்து பார்க்க செயற்கை இழையாலான நாற்காலிகளும், மிக மிக முக்கியப் பிரமுகர்களுக்கான ஓய்வறை, மருத்துவக் குழு அறை போன்ற வசதிகளும் செய்யப்பட்டுள்ளன. இதுதவிர, நீருக்கடியில் புகைப்படம் எடுக்கும் நவீன வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

மேலும், நீச்சல் போட்டி நடக்கும் குளம், பயிற்சிக் குளம், உயரேயிருந்து தாவிக் குதிக்கும் பகுதி போன்ற வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன.

டென்னிஸ் வளாகம்

நுங்கம்பாக்கத்திலுள்ள மனமகிழ் மன்றம் அமைந்துள்ள பகுதியில் 6 ஏக்கர் பரப்பளவில் டென்னிஸ் விளையாட்டரங்கம் ரூ.7.5 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு உள்ளது. இங்கு 5,000 பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கும் நாற்காலி வசதி மற்றும் தொலைக்காட்சி எடிட்டிங் மற்றும் மிக்சிங் போன்ற சிறப்பு வசதிகளும் செய்யப்பட்டுள்ளன.

ஹாக்கி விளையாட்டரங்கம்

எழும்பூரில் உள்ள மையப் பகுதியில் 9 ஏக்கர் நிலப்பரப்பில் 5,500 பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கக் கூடிய ஹாக்கி விளையாட்டரங்கம் ரூ.8 கோடி செலவில் கட்டப்பட்டுள்ளது. இவ்வரங்கில் அஸ்ட்ரோ டர்ப் தரை விரிப்பு, சர்வதேசத் தரத்தில் பதிக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு உள்ளரங்கம்

ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கின் அருகேயுள்ள

பழைய மிருகக் காட்சிச் சாலைப் பகுதியில் இந்த நவீன விளையாட்டு உள்ளரங்கம் ரூ.25 கோடி செலவில் 10,000 பேர் பார்த்துக் களிக்கும் வகையில் முழுவதும் குளிர்ப்பதனப் படுத்தப்பட்டு அமைக்கப்பட்டுள்ளது. இரவைப் பகலாக்கும் நவீன விளக்குகள் மற்றும் தேக்கு மரத்தளமும் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ளன. இவ்வரங்கில் கூடைப்பந்து, கைப் பந்து, குத்துச்சண்டை, ஜூடோ, பூப்பந்து போன்ற விளையாட்டுகள் விளையாட வசதிகள் உள்ளன. இங்குப் போதை மருந்து சோதனை அறை மற்றும் முக்கியப் பிரமுகர் ஓய்வறை, தொலைக்காட்சி எடிட்டிங் மற்றும் மிக்சிங் வசதிகள உள்ளன.

புதிய துப்பாக்கிச் சுடும் தளம்

வீராபுரத்தில் உள்ள தமிழ்நாடு சிறப்புக் காவல் படை மைதானத்தில் ரூ.1.40 கோடி மதிப்பீட்டில் புதிய துப்பாக்கிச் சுடும் தளம் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

மேற்கண்ட புதிய விளையாட்டு வளாகங்களைத் தவிர, ஏற்கெனவே சாந்தோமில் உள்ள சர்வதேசத் தரத்தில் அமைந்துள்ள புனித தாமஸ்மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் டேபிள் டென்னிசும், கலைவாணர் அரங்கத்தில் பளு தூக்கும் போட்டியும், ஜூடோ போட்டிகளும், டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப் பந்தாட்ட உள்ளரங்கத்தில் கூடைப்பந்துப் போட்டிகளும், ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கில் தடகளப் போட்டிகளும், கால்பந்து போட்டியும் நடைபெறும். மேலும் தொடக்க விழா மற்றம் நிறைவு விழா நிகழ்ச்சிகளும் கலை நயத்தோடு ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெறும்.

விளையாட்டு உபகரணங்கள்

சர்வதேசத் தரம் வாய்ந்த விளையாட்டு உபகரணங்கள் ஏறக்குறைய ரூ.4 கோடிக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான மொத்தச் செலவு ரூ.200 கோடி அளவில் இருக்கும் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

தொடக்க விழா மற்றும் நிறைவு விழாக் கொண்டாட்டங்கள்

உலகெங்கிலுமுள்ள மக்கள் அனைவரின் கவனமும் சென்னையை நோக்கித் திரும்பும் வண்ணம், கலைநயத்தோடு பலவகையான நடனம் புரிய ஏறக்குறைய 4,000 கலைஞர்கள் சென்னையில் ஒரு மாதக் காலத்திற்குத் தங்கிப் பயிற்சி செய்து தொடக்க விழா மற்றும் நிறைவு விழாக்களில் தங்கள் திறமைகளைக் காட்டவுள்ளனர். இவர்களின் கலை நிகழ்ச்சிகள், காலத்தால் மறக்க முடியாதவை மட்டுமல்ல, உலகிலுள்ள மக்கள் அனைவருக்கும் சகோதரத்துவம், அமைதி, நல்லெண்ணம் மற்றும் உயர்ந்த உள்ளம் போன்ற குணங்களை வெளிப்படுத்தும். விழாக் கொண்டாட்டங்களுக்கு மத்திய அரசின் ஆலோசகரும், அண்மையில் தில்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா மற்றும் நிறைவு விழா ஏற்பாடுகளைச் செய்த மேஜர் ஜெனரல் நரேந்தர் சிங் அவர்கள் தலைமையில் அனைத்து ஏற்பாடுகளும் நடைபெறுகின்றன.

சுடர் ஏந்திய சிங்கக் குட்டி இலச்சினை!

விளையாட்டு வீரர் உடையில் இன்முகத்தோடு, கையில் சுடரேந்திய, கம்பீரமாகப் பாய்ந்தோடும் சிங்கக் குட்டி ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான இலச்சினையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளது.

மாநில அளவிலான விளையாட்டுப் போட்டிகள்

★ தமிழ்நாட்டின் விளையாட்டு வரலாற்றில் முதன்முதலாக 12 வயதுக்குட்பட்ட சிறுவர்களிடையே விளையாட்டுப் போட்டிகள் மாநில அளவில் நடத்தப்பட்டு வருகின்றன.

★ நலிவுற்ற நிலையில் வாழ்ந்து வரும் வயதான விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு வழங்கப்படும் மாத உதவித்தொகை ரூ.75 லிருந்து ரூ.500 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

விளையாட்டு வீரர்களை ஊக்கப்படுத்தி, அவர்களின் குறிக்கோளை அடைய அரசு உதவி

★ பெண்களுக்கான துப்பாக்கி சுடும் போட்டியில் தேசிய அளவில் பங்கேற்று, தங்கப்பதக்கம் வென்ற செல்வி ரூபா உன்னிகிருஷ்ணனுக்கு துப்பாக்கி சுடும் பயிற்சிக்குத் தேவையான உபகரணங்கள் வெளிநாட்டிலிருந்து தருவிக்க அரசு ரூ.3.50 இலட்சம் நிதி வழங்கியுள்ளது. இது தவிர போட்டிகளில் அவர் பங்கேற்கச் செல்லும்போது, அதற்காகும் விமானப் பயணக் கட்டணத்தையும் அரசே ஏற்றுக்கொள்ளும்.

வரலாற்றுச் சிறப்பு வாய்ந்த பிரம்மாண்டமான இந்த மாபெரும் விளையாட்டுப் போட்டியை மிகச் சிறப்பான முறையில் நடத்திடவும், பணிகள் விரைவாக நடைபெறவும், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தனிக் கவனம் செலுத்தி வருகிறார். இதற்கென அமைச்சர் பெருமக்கள், முக்கியப் பிரமுகர்கள், உயர் அலுவலர்கள் கொண்ட 15 மேல்மட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுச் செயல்பட்டு வருகின்றன. அவை வருமாறு:

1. அமைப்புக் குழு (Organising Committee)

2. வழிப்படுத்தும் குழு (Steering Committee)

3. சுடர்க் குழு (Flame Committee)

4. விளையாட்டுக் கிராமக் குழு (SAF Games Village Committee)

5. விருந்தோம்பல் மற்றும் உறைவிடக் குழு (Hospitality & Accomodation Committee)

6. விழாக் குழு (Ceremonies Committee)

7. கட்டமைப்புக் குழு (Infrastructure Committee)

8. போக்குவரத்துக் குழு (Transport Committee)

9. மருத்துவக் குழு (Medical Committee)

10. தொழில்நுட்பக் குழு (Technical Committee)

11. பாதுகாப்புக் குழு (Security Committee)

12. ஒருங்கிணைப்புக் குழு (Co-ordination Committee)

13. செய்தியாளர்கள் மற்றும் தொலைக்காட்சிக் குழு (Media Committee)

14. விளம்பரம் மற்றும் மலர்க் குழு (Publicity Sponsorship and Souvenir Committee)

15. கலை, பண்பாட்டுக் குழு (Art, Cultural and Entertainment Committee)

மேல்மட்டக் குழுக்களோடு, விளையாட்டுப் போட்டியின் முன்னேற்பாடுப் பணிகளைக் கவனிக்க கூடுதலான அரசு அலுவலர்களை மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியமித்துள்ளார். தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் உறுப்பினர் - செயலாளர் திரு மோகன் பியாரே, இ.ஆ.ப., மற்றும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிப் பணிகளைச் சிறப்பாகக் கவனிக்க, தனியாக ஒரு இயக்குநரையும் அவருக்குத் துணையாக நான்கு கூடுதல் இயக்குநர்கள் மற்றும் தனிச் செயலாளராக திரு டி.எல். ஸ்ரீதரன், இ.ஆ.ப., அவர்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் நியமித்துள்ளார்.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னைக்கு ஒரு நீங்காச் சிறப்பை வழங்குவதுடன், போட்டிகளை முன்னிட்டு அமைக்கப்படும் விளையாட்டு அரங்குகள் நம் விளையாட்டு வீரர்களின் ஆர்வத்துக்கு உந்து தளமாகவும், தமிழக விளையாட்டு வளர்ச்சியின் ஒரு மறுமலர்ச்சியாகவும், திருப்பு முனையாகவும் அமையும் என்பது மிகையல்ல. இப்போட்டிகள் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் வெற்றிச் சரித்திரத்தில், சில பொன்னேடுகளை அலங்கரிக்கப் போகின்றன என்றால் அது மிகையல்ல.

—மா. அசோகன்

படமும் செய்தியும்

ஆசியாவிலேயே அதி நவீன 'பாலிபுரப்பலில்' என்ற மேல் நாட்டுப் பொருள் கொண்டு, ஆகாய விமானத்தின் உள் அமைப்பைப் போல் குளிர்சாதனம் பொருத்திய "டாக்டர் ஜெ.ஜெயலலிதா போக்குவரத்துக் கழகம்" ஹைடெக் பேருந்தை, மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பார்வையிட்டார். (18.9.95)

தந்தை பெரியார் அவர்களின் 117-வது பிறந்த நாளையொட்டி, அண்ணா மேம்பாலம் அருகில் அமைந்துள்ள திருவுருவச் சிலைக்கு, மாண்புமிகு'நிதிமைச்சர் நாவலர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு இரா. சேடபட்டி முத்தையா மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். (17.9.95)

தமிழ்ப்புலவோர் கண்ட சால்பு:

திறம் மிகுந்த புரட்சித்தலைவி தலைமையில் அறம் வளர்ப்போம், ஆற்றல் குவிப்போம்!

-கவிஞர். ஐ. உலகநாதன்

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் "தமிழ்ப் புலவோர் கண்ட சால்புகள்" என்னும் பொருளில் நடைபெற்ற கவியரங்கில் பங்கேற்று கவிஞர் ஐ. உலகநாதன் அவர்கள் 'அறம்' என்னும் தலைப்பில் பாடிய கவிதை.

இளமைக்குப் பொருளாகி,
இனிமைக்குக் கருவாகி,
பழைமைக்கும், புதுமைக்கும்
பாலமென உருவாகி,
வளமைக்கும் செழுமைக்கும்
பாலாகித் தேனாகி
நலம் பயக்கும் தாயே!
நற்றமிழே எனை அணைப்பாய்!
அணைப்பாரை அணைப்பாய் நீ.
அகல்வானுக்கும் நிழல் தருவாய்.
நினைப்பாரின் நெஞ்சேறி
நினைப் பாட வைப்பாய் நீ!
எனைப்பேணிக் கவியரங்கில்
இனிப்பே நீ வரவேண்டும்!
உனைப் போற்றும் சொல்லுக்கு
உயிர் நீதான் தர வேண்டும்.
தரமுடியா துயர் அனைத்தும்
தமிழ்ப் பகைவர் தந்தாலும்,
வரமுடியா வறுமை என்னை
வட்டமிட்டு வந்தாலும்,
பெறமுடியா உன்அருளைப்
பெற்றுவிட்டால் அதுபோதும்,
மறுநொடியே செத்தாலும்
வாழ்ந்திருப்பேன் எப்போதும்.
மொழிக்கெல்லாம் முதலே, மூச்சுக்கு மூச்சே,
பழிக்கெல்லாம் நான் பொறுப்பு
நல்ல பாட்டுக்கு நீ பொறுப்பு!

தொழுகின்ற கைகளிலே தொடர்கின்ற
காவியம் நீ!
எழுகின்ற மனங்களிலே எழுதுகின்ற
ஓவியம் நீ!
விழுகின்ற அறம் காக்க விரைகின்ற
தெய்வம் நீ!
அழுகின்ற தமிழ் இனத்தை அணைக்கவா
தமிழ்த்தாயே!

வணக்கம்!

மாநாடு கண்ட மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு வாழ்த்து

அட்சய பாத்திரமே, ஐந்தெழுத்து மந்திரமே!
உச்சரிக்கும் நாவிலெலாம்
உயிர்மணக்கும் சந்தனமே!
நெஞ்சம் மணக்க, நெல்மணக்க,

நீதிநெறி நூல்மணக்க,
தஞ்சை மணக்க, தமிழ்மணக்க,
தரணியே மணக்குதம்மா!
தமிழ்த் தரணியேமணக்குதம்மா!

அட்சய பாத்திரமே, ஐந்தெழுத்து மந்திரமே!
உச்சரிக்கும் நாவிலெல்லாம்
உயிர்மணக்கும் சந்தனமே!
வில் பறக்க,
வெல்லும் புலி பறக்க,
துள்ளும் மீன் பறக்க,
வான் பறக்கும் வண்ணத் தமிழ்க் கொடியே
உன்னை
வில்லான புருவத்தில்,
மீனான விழிவடிவில்
பொல்லாத பகைமுன்னே புலியாகும்
வீரத்தில்
புரட்சித் தலைவியிடம்
புலவன் நான் காண்கின்றேன்!

வெற்றித் திருமகள் நீ உன்னைப்
பற்றித் தமிழ்தரும்
விந்தைக் கவி தருவேன்.
மனம் முத்திக் கனிந்தவன்
கற்ற புலமையைக் கொட்டிச் சுவை
தருவேன்.
நான்
பட்டத்தரசியின் பாதச்சிலம்புகள் பாடும்
இசை வடிப்பேன்!
நீ
கட்டக் கலந்திடும் கன்னித் தமிழ் மகள்
கார் குழல் பூ முடிப்பாய்!
தக்கத் தமிழ்ச் சுவையை
மிக்கப்
புவிபெறல்
இக்கணம் உன் அருளே!
இக்கட்டுகள் தீர திக்கட்டும் பரவ
நிற்கட்டும் உன் புகழே!
குப்பைத் தொட்டிக் குழந்தைகள்கூட
கும்பிட வைத்தாயே!
அவர் செப்பிடும் பெயர் முன் ஜெ.ஜெ.
எழுத்தும் சேர்த்திட வைத்தாயே!
இனிஷியல்,
பெயர் தெரியாத குழந்தைகளுக்கு
இனிஷியல் ஜெ.ஜெ.!

ஜே.ஜே. என்று வாழ்வார்கள் அவர்கள்.
ஜெ.ஜெ. வாழியவே!
ஜே.ஜே. என்று நாளும் வாழ்த்துவேன்
செந்தமிழ் வாழியவே!

தொடக்க உரை நிகழ்த்திய மாண்புமிகு அமைச்சர் புலவர் இந்திரகுமாரி அவர்களுக்கு வாழ்த்து

சமூகநலம் காத்து தமிழ் நலமும் அதில்
சேர்த்து,
அமைவான கைத்தறிபோல்
அழகு தமிழ் சித்திரித்து
அறம்சூடி ஔவைபோல்,
அந்தநாட் பெண் புலவர்
திறம்எல்லாம் காட்டிச்
செவியினிக்க,
சிந்தையெல்லாம் இனிக்க,
கவியரங்கைத் தொடங்கி வைத்த
மரபுவழி வந்த மாண்புமிகு நல்லமைச்சர்,
செந்தமிழ்ப் புலவர் இந்திரகுமாரிக்குச்
செப்பினேன் என் வணக்கம்.
ஒப்பி எனை ஏற்க!

கவியரங்கத் தலைவர் வணக்கம்.

பார்வதியாள் மார்பகத்தில்
ஞானப்பால் தீர்ந்ததனால்,
பாரதத் தாய் மார்பகத்தில்
ஞானப்பால் அருந்தியவன் பாரதி!
அவன்
தலைப்பாகை கட்டிக்கொண்டு
தமிழ்ப்பாகை திரட்டியவன்
விலைபோகும் அடிமைகளை விரட்டியவன்.
பாப்பாவைக் கூப்பிட்டுப் பாட்டமுதம்
தரும்போதே
தீப்பாயும் வேகத்தைத் தேகத்தில்
தடவியவன்.

எதிர்காலம்

* எதிர்காலத்தைப் பற்றி எண்ணாதே. அது தானாகவே வரக்கூடியது.

–ஆல்பர்ட் ஐன்ஸ்டின்

தமிழ்ப் பசியாற்றவே தன் பசி துறந்தவன்.
பாட்டினையே பசியாறிப் பரிமாறி
வாழ்ந்தவன்!
பட்டினியில் செத்துப் பாட்டாக
வாழ்ந்தவன்!

இவன் தாசன்
சிட்டுக் குருவிகளின் சிறகொடித்துத்
தின்னும்
வல்லூறுகளின் வாயைப் பிளந்து
வாட்டி வறுத்தவன்
இவன்தான் பாரதிதாசன்
மூட்ட வந்த மூடக் கட்டுகளை அறுத்தவன்.
பட்டுத் தமிழ்போல் பச்சைத் தமிழன் நடக்க
சிவப்புக் கம்பளம் விரித்தவன்.
செத்தும் சாகாமல்
செந்தமிழர் நெஞ்சமெல்லாம் பறித்தவன்!
அவனுக்குத் தாசன் சுரதா!
கனக சுப்புரத்தின தாசன்!
இங்கே பாவரங்கத் தலைவர்!
தேன் மழை தந்த வான்புகழ்க் கவிஞன்.
திசைகளை வசமாக்கி உவகை தரும்
உவமைக் கவிஞன்
உண்மைக் கவிஞன்!
திருட்டுக்குத் தேதி தந்து,
இருட்டுக்குச் சேலை தரும்
இளமைக்கு இவன் கவிதை சாட்சி!
கவிதைக்குப் பொருள் தேன்!
காலத்தை வென்று நிற்கும்
இந்தக் கவிமன்னன் சொல்லே
இன்று கவிதைக்கு அரசாட்சி.
தலைமைக் கவிஞரே! உன்னை உன்
சொல்லாலேயே
வாழ்த்தி வணங்குகிறேன்.
"அமுதும் தேனும் எதற்கு? நீ
அருகினில் இருக்கையிலே எனக்கு!"
ஆன்றோரே பெரியோரே!
சுவைஅறிந்து அவைஅறிந்து
வந்தோரே, தாய்மார்களே!

* பழைய சட்டையை அணிந்தாவது புதிய புத்தகத்தை வாங்கிப் படி!

–பிலிப்ஸ்

உங்கள் அனைவருக்கும் வணக்கம்.
நான் இங்கே அறம் பாட வந்துள்ளேன்
வேரோடும் அறம் எல்லாம்
வெற்றிபெறச் செய்திடுவேன்.
கன்னியர் எழில்பாடி, கருவிழித்
திறம்பாடி,
வெண்ணிலா முகம்பாடி,
வீணை இசைக் குரல்பாடி,
கிண்ணமது இதழ் பாடி,
கிறுகிறுக்கும் நகை பாடி,
மின்னல் இடை பாடி, மேலான நிறம்பாடி,
பின்னல் சடை பாடி, பித்தான
விதம்பாடி,
அன்ன நடை பாடி, அடைந்த சுகம்
ஏதுமில்லை! ஏதுமில்லை!

எழில்பாடி, இடைபாடி, நடை பாடி,
அடைந்த சுகம் ஏதுமில்லை!
இன்றோ,
ஏழை நிலைபாடி, ஏற்றதொரு வழிபாடி,
வாழும் தமிழ் பாடி, வண்ணக் கொடி பாடி,
சூழும் படைபாடி, தூய மறம் பாடி,
ஆளும் வகைபாடி, அறம்பாட
வந்துள்ளேன்.

அறம் எனப்படுவது தர்மம் மட்டுமா?
அதற்கும் மேலே!
எதற்கும் மேலே?
பட்டினியில் தவிப்பார்
பசியறிதல் அறமாகும்.
பசியறிந்து உணவிடுதல்
பாரறிந்த அறமாகும்
வெட்டியாய்த் திரிபவர்க்கு
வேலைதருதல் அறமாகும்
வேலை செய்ய மறுப்பவரை
விலக்குதலும் அறமாகும்
இல்லார்க்கு இருப்பவர்கள்
ஈவதும் ஓர் அறமாகும்
இல்லையென இறவாமை
ஏற்றதொரு அறமாகும்!
கல்லாத பேருக்குக் கல்விதரல் அறமாகும்
கற்றவர்கள் மற்றவர்க்குக்
கைகொடுத்தல் அறமாகும்!
அறம் எனப்படுவது தர்மம் மட்டுமா?

அதற்கும் மேலே!
எதற்கும் மேலே?
தமிழுக்கு நலம் செய்தல்
தக்கதொரு அறமாகும்
தமிழ்ப் பகையை முன்சென்று
தடுப்பதுவும் அறமாகும்
தமிழுக்குத் தலை கொடுத்தல்
சாகாத அறமாகும்
தமிழ் வாழத் தான் தேய்தல்
சத்தியமாய் அறமாகும்!

இல்லறம் என்பது நல்லறம் என்றார்,
துறவறம் என்பதும் தூயது என்றார்!
இல்லறம் என்பது நல்லறம் ஏற்போம்
துறவறம் என்பது தூயதா?
கேள்விதான்!
சந்திசிரிக்கும் சாமியார் துறவறம்.
அந்தோ, சொல்லவோ அடடா கேவலம்!
போதைப் பொருளால்
பொருளைச் சேர்த்தார்
போதை பொருளாய் அவரே மாறினார்.
துறந்தார் என்பவர் இறந்தாரைப் போல்
மறந்தால் மக்கள் மனங்கள் திருந்தலாம்.
துறந்தும் தமிழைத் துறவா இளங்கோ
சிறந்தார், தமிழைச் சிறக்கச் செய்தார்.
சிலப்பதிகாரம் செய்தார் தமிழில்,
சிறப்பு அதிகாரம் செய்து வாழ்கிறார்.
இத்தகு துறவு இலட்சியத் துறவு
இவரைப் போன்றோர் எவருக்கும் உறவு.

நல்லறம் பூண்டார் நற்றமிழ் மொழிக்கு
வில்லும் மரங்களின் விளக்கைத் தந்தார்.
ஈகை செய்வார், வாகை பெறலாம்
சாகா உண்மை, சரித்திரம் இதுதான்!
ஆனால்,
தோகை மயிலுக்குப் போர்வை தருவதும்
சோகை முல்லைக்குத் தேரைத் தருவதும்
சரிதானா? இதைச் சரி செய்ய வேண்டும்!
கொடை மடம் என்னும் குறையைப் போக்கி
அனைவரும் நலம் தரும் அறங்கள்
செய்வோம்.

முல்லைக்குத் தேர் கொடாதீர். மக்கள்
தொல்லைக்குத் தோள் கொடுப்போம்.
மயிலுக்குப் போர்வை வேண்டாம்.
வெய்யிலுக்குக் குடை கொடுப்போம்.

அறம் செய்யக் காரணம் அன்புதான்.
அதுபோல மறம் புரியவும்
ஈரமுள்ள மனமேதான் காரணம்!
தாய் அன்பால் பழித்தவனின்
தலைபறித்தல் அன்புதான்.
தமிழன்பால், பழித்தவனின் தலையிலே
கல்லேற்றி, தூய அன்பை உணர்த்திய...
சுடரும் வரலாறு சொல்லவா வேண்டும்?
எல்லோருக்கும் புரியும்!
'அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை'
—இது வள்ளுவம்.
ஊரிலே நாட்டிலே
கொல்லாமை ஓர்' அறம்.
போரிலே களத்திலே
கொல்வதே அறமாகும்.
பொய்யாமை ஓர் அறம். ஆனால்,
பொல்லாங்கு தீமைகளைப்
போக்குமானால்,
பொய்யும் அப்போது புனிதமான
அறமாகும்.
அறம் எனப்படுவது தர்மம்தானா?
அதற்கும் மேலே!
எதற்கும் மேலே?
இதற்கும் மேலே வளர்ப்பது விடுத்து,
இனிய அறம் இனி வளர்க்கவென்று
தடைகளை உடைத்துத் தமிழ் அறம் வாழ
தமிழ்த் தாயிடம் நான் விடைபெறுகின்றேன்
வாழிய தமிழ் அறம், வாழிய செந்தமிழ்! ●

அடிமைத்தனம்

★ தான் வாழ்வதற்காக மற்றவர்களை உழைக்கச் செய்துவிட்டு, தான் மட்டும் உழைக்காமல் வாழ முடியும், என்கிற நிலை படைத்த மனிதன் எங்கே இருக்கிறானோ அங்கே அடிமைத்தனம் நிச்சயமாக இருக்கும்.'

—டால்ஸ்டாய்



காட்டுவளம் காக்க வாரீர்!

(எண்சீர் ஆசிரிய விருத்தம்)

புலவர் அ. இராசேந்திரன்

நாட்டுக்கு நல்லழகை ஊட்டும் காடு!
நாமெல்லாம் நடமாடும் இன்ப வீடு!
பாட்டுக்குள் காட்டுவளம் கண்ட தெல்லாம்
பழம்பெருமை எனச்சொல்லி ஒதுக்க வேண்டாம்!
வீட்டுக்கோர் மரம்வளர்ப்போம் என்று சொல்லி
விளம்பரத்தால் நமக்கெல்லாம் புகட்டும் பாடம்
காட்டுக்கு வந்தபெரும் சோகம் என்றால்
சோதனையும் வேதனையும் போவ தெந்நாள்?

மனிதனுக்கு மரங்கொடுக்கும் பயன்கள் கோடி!
மரத்திற்கோ இவனிழைக்கும் துயர்பல் கோடி!
கனிதந்து, காய்தந்து, கட்டை தந்து,
கட்டிலுடன் தொட்டில்சேர் மரச்சா மான்கள்,
அணிதந்து, பிணிதீர்த்தே அரிய தொன்றாம்
அரியணையும் அரசர்களுக் குவந்த ளிக்கும்
இனியதொரு காட்டழகை வெட்டிச் சாய்க்க
இதயமுள்ள மனிதர்கள் விரும்பு வாரோ?

பயன்மரங்கள் உள்ளூரில் பழுத்த மாண்பும்!
பலநோய்கள் தீர்த்துதவும் மரத்தின் நோன்பும்!
நயனுடையார் ஈகையினைச் சுட்டிக் காட்ட
நற்புலவர் வள்ளுவனார் நவின்ற தெல்லாம்
பயனற்றுப் பழங்கதையாய்ப் போக லாமா?
பழுதுள்ள காற்றினைத்தான் சுவாசம் செய்து
துயர்போக்கும் உயிர்க்காற்றை நமக்குத் தந்த
தூயமனத் தோழனையே அழிக்க லாமா?

தேக்குமரக் கூட்டங்கள் செழித்து வாழ
தேடரிய சந்தனத்தின் மரமும் ஓங்க
நூக்குநுணா, வேங்கையுடன், கோங்கும் வாழ
நீண்டுவளர் தென்னையுடன், பனையும் வாழ;
பாக்குமரம், பவழமல்லி, மருதும், ஆங்கே
பலாசமுடன் செடிகொடிகள் அடர்ந்து காண
நோக்குமிடம் எல்லாமும் காடாய் மாற
நல்லதொரு திட்டத்தை வகுப்போம் வாரீர்!



பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தில் காயிதேமில்லத் பிறந்த நாள் நூற்றாண்டு விழா

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம், இளையான்குடியில் தமிழக அரசின் சார்பில், காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் பிறந்தநாள் நூற்றாண்டு விழா 24.9.95 அன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை ஏற்றார். காயிதேமில்லத் புகைப்படக் கண்காட்சியைத் திறந்துவைத்து மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் சிறப்புரை யாற்றினார். மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் காயிதேமில்லத் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து, அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கி விழாப் பேருரையாற்றினார்.

விழாவில் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு ப. சிவக்குமார், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார். செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முகராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கவுரை யாற்றினார். இளையான்குடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு மா.சா.மா. இராமச்சந்திரன் முன்னிலை வகித்தார்.

தலைமையுரையில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசும்போது கூறியதாவது:

"அடித்தள மக்களின் வாழ்வுக்காகப் பாடுபடுவது இந்த அரசு. மனித நேயத்திற்காகப் பாடுபட்ட தலைவர்களைச் சிறப்பிக்கும் வகையில் அரசின் சார்பில் விழா எடுத்து நகரின் முக்கிய இடத்தில் சிலைகளை அமைத்து அவர்களின் புகழ் பரப்புவது இந்த ஆட்சியில்தான்.

"காயிதேமில்லத்துக்குக் கண்ணியத்தென்றல் என்ற பட்டத்தைத் தந்து அவரைச் சிறப்பித்தது புரட்சித்தலைவி ஆட்சியில்தான். காயிதேமில்லத் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவரானாலும் அன்னவருக்காகவும் பாடுபட்டவர். மனித நேயத்துக்காகப் பாடுபட்ட அவரது பிறந்தநாள் விழாவை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அரசு, தமிழ்நாடு முழுவதும் ஒரு ஆண்டு கொண்டாடுகிறது" என்று கூறினார்.

மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் காயிதேமில்லத் புகைப்படக் கண்காட்சியைத் திறந்துவைத்துப் பேசும்போது, "பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்ஜிஆர். ஆகியோரின் ஆட்சிமுறைகளைப் பின்பற்றி மூன்றாவது தலைமுறையாக மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஆட்சி செய்கிறார். புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் ஆட்சியின்போது முஸ்லீம் மசூதிகள் சீரமைக்க நிதி உதவி செய்தார். புரட்சித் தலைவியின் ஆட்சியில், வக்ஃப் போர்டு வறுமையில் வாடிய போது ஒரு கோடி ரூபாய் வழங்கி உதவி செய்தார். இவர்களுக்கு முன் ஆட்சியில் இருந்த முதல் அமைச்சர்கள் யாரும் எங்களுக்கு இவ்வாறு உதவிகள் செய்ததில்லை. புரட்சித்தலைவி ஆட்சியில்தான் முஸ்லீம் மதத்தைச் சேர்ந்தவருக்கு அமைச்சர் பதவி, மேலவை உறுப்பினர் பதவி, எம்.எல்.ஏ பதவிகள் கிடைத்தன. எனவே, எங்கள் சமுதாயத்துக்கு உதவிகள் செய்து வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுக்கு நன்றி கூறுகிறோம். எனவே தான், இந்த அரசை எங்கள் சமுதாயம் ஆதரிக்கிறது" என்று கூறினார்.

காயிதேமில்லத் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்து அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கி மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் திரு எஸ். கண்ணப்பன் அவர்கள் பேசும் போது "மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி அவர்கள் சாதி, மதம் பார்க்காமல் அனைவரின் நல்வாழ்வுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்திவருகிறார். நாட்டுக்கு உழைத்தவர்களின் பெயரில் மாவட்டங்கள் அமைத்தும், அவர்களின் தியாகங்களைப் பின்னால்வரும் சந்ததியர்கள் தெரிந்துகொள்ளும் வகையில் சிலைகள் அமைத்தும், அவர்களைச் சிறப்பித்து வருகிறது எங்கள் புரட்சித்தலைவி அரசு என்று கூறக் கடமைப் பட்டுள்ளேன். மக்களிடையே செல்வாக்குப் பெற்றவர்கள் 2 பேர். ஒருவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். இரண்டாமவர் காயிதேமில்லத். இவர்கள் மக்களிடையே வாக்குக் கேட்காமலேயே தேர்தலில் வெற்றி பெற்றவர்கள்.

"இளையான்குடிப் பகுதியில் மின் பற்றாக்குறையைப் போக்க, இளையான்குடியில் ரூ.3 கோடித் திட்டத்தில் துணை மின் நிலையம் அமைக்கப்படும். மேலும், குடிநீர்ப் பற்றாக் குறையை நீக்க நடவடிக்கை எடுக்கப்படும்" என்று கூறினார். செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் (பொறுப்பு) திரு இரெ. மருதமுத்து அவர்கள் நன்றி கூறினார்.

விழாவில், தமிழ்நாடு வக்ஃப் போர்டு வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப், அனைத்திந்தியப் பொதுச் செயலாளர்—இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மற்றும் தமிழ்நாடு மாநிலத் தலைவர் திரு அப்துல்சமது, சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஜீனத்சர்புதீன், நாடாளு மன்ற உறுப்பினர் திரு மஸ்தான், சிவகங்கைத் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் கரு. முருகானந்தம், காரைக்குடித் தொகுதி சட்ட மன்ற உறுப்பினர் திருமதி கற்பகம் இளங்கோ ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர்.

சிறுசேமிப்பு – உங்கள் குடும்பத்தின் முதல் செல்வாக இருக்கட்டும்

கிசான் விகாஸ் பத்திரம்
செழிப்பான வாழ்விற்கு சிறப்பான திட்டம்



சிறப்பு அம்சங்கள்

- 5 1/2 ஆண்டுகளில் முதலீடு இரட்டிப்பாகும்.
- 18.18% சாதாரண வட்டி.
- முதலீட்டுக்கு உச்சவரம்பு இல்லை.
- இரண்டரை வருடங்களுக்குப் பிறகு தேவைப்பட்டால் பணத்தை திரும்பப்பெறலாம்.
- வங்கிகளில் அடமானம் வைத்து கடன் பெறலாம்.
- வாரிசுதாரர் நியமன வசதி உண்டு.
- 1.4.95 முதல் தமிழ்நாட்டில் உள்ள அஞ்சலகங்களில் ரூபாய் 1,000/-மும் அதற்கு மேலும் முதலீடு செய்வோருக்கு 2% ஊக்கத்தொகை வழங்கப்படும்.

மேலும் விவரங்களுக்கு அணுகவும் :

ஆணையர், சென்னை மாநகராட்சி (சிறு சேமிப்பு பிரிவு), சென்னை – 600 003. தொலைபேசி : 584440.

மண்டல இயக்குநர், தேசிய சேமிப்பு நிறுவனம், சென்னை – 600 002. தொலைபேசி : 849962.

மாவட்ட ஆட்சியாளர்கள், வட்டாட்சியர்கள்,

வட்டார வளர்ச்சி அலுவலர்கள், அஞ்சலக அதிகாரிகள் மற்றும் சிறுசேமிப்பு முகவர்கள்.

இயக்குநர், சிறு சேமிப்புத்துறை,

'சயர் மேன்ஷன்', 621, அண்ணா சாலை, சென்னை – 600 006. தொலைபேசி : 8251784, 8251685.

சிறுகுடும்பம் செல்வக்குடும்பம்

சிறுசேமிப்பு – செழுமையின் அடையாளம்.

DIRP/DIS/95

மகாத்மாவும் மகாகவியும்

–டாக்டர் அ.பிச்சை, காந்திகிராமம்

இந்தியாவில் சுதந்திரக் காற்றைச் சுவாசம் செய்ய வைத்தவர்கள் மகாத்மாவும் மகாகவி சுப்பிரமணிய பாரதியாரும் ஆவர். திலகரின் சீடரான பாரதியாரும் கோகலேயின் சீடரான மகாத்மா காந்தியடிகளும்தான் அன்னை பாரதத்தின் விடுதலைக்கும் சமூகப் பண்பாட்டு மறுமலர்ச்சிக்கும் அயராது உழைத்தவர்கள்.

விடுதலை வேள்வி

பாரதமாதாவின் அடிமை விலங்கை உடைத்தெறிவதே இருவரது பொது நோக்கமாக இருந்தது. இருவரும் சில இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடுகளில் (காசி 1905, சூரத் 1907) கலந்து கொண்டு கட்டுக்கடங்காச் சுதந்திரத் தாகம் பெற்றனர். ஆனால், அவர்கள் ஒருவரை ஒருவர் சந்தித்தது கிடையாது. சூரத் கூட்டத்தில் இந்திய தேசிய காங்கிரஸ் மிதவாதிகள், தீவிர வாதிகள் எனப் பிரிந்தது.

மிதவாதப் போக்கைக் கொண்ட கோகலே அணியில் மகாத்மா சேர்ந்தார். தீவிரவாதப் போக்கைத் தழுவிய திலகர் அணியில் பாரதியார் இருந்தார். திலகரின் வேகமான அரசியல் மற்றும் சமூக விடுதலைக் கொள்கைகளைத் தம் கவிதைகள், கட்டுரைகள் வாயிலாகப் பாரதியார் பிரச்சாரம் செய்தார். திலகரின் மரணத்திற்குப் பின்பு மிதவாதிகளின் செல்வாக்கு அதிகரிக்கின்றது. இக் கால கட்டத்தில் மகாத்மா தென்னாப்பிரிக்காவிலிருந்து வந்து இந்தியாவில் நிரந்தரமாகத் தங்கி இந்திய தேசியக் காங்கிரஸிற்கு வழி காட்டுகின்றார். இவரது தலைமையை ஏற்றுப்போற்றி "வாழ்க நீ எம்மான்" என்று மகாத்மா காந்தி பஞ்சகம் இயற்றுகின்றார்.

ஆகவே, சுதந்திர வேள்விக்கு மேடையிட்டு அக்னிக்குஞ்சை வளர்த்துக் கொடுத்தவர் பாரதியார். சுதந்திர அக்னி நன்கு வளர அகிம்சை என்னும் நெய்யூற்றி சத்தியாக்கிரகம் என்னும் விறகிட்டு அணையாமல் காத்து வேள்வியின் பயனை நுகரச் செய்தவர் மகாத்மா.

இரு துருவங்களின் சந்திப்பு

மகாகவி பாரதியார், மகாத்மாவைப் பற்றி 1909-ஆம் ஆண்டிலேயே அறிந்துள்ளார் என்பதற்கு அவர் "இந்தியா" என்னும் இதழில் வெளியிட்ட கருத்துப்படம் (18-12-1909) சான்றாக உள்ளது. "ஸ்ரீகாந்தி யென்ற பசுவானது தனது கன்றுக்குட்டியாகிய இதர இந்தியர்களின் நன்மையின் பொருட்டு இங்கிலாந்துக்குப் போய்ப் பேசிவிட்டு சிறையிலடைபடுவதற்கு மறுபடியும் திரான்ஸ்வாலுக்கு வந்திருக்கின்றது. தென் ஆப்பிரிக்கா உத்தியோகஸ்தர்களாகிய புலிகள் இவருடைய மேன்மையை அறியாமல் சிறையிலடைத்தார்கள்" என்று பாரதியார் இந்தியா பத்திரிகையில் எழுதியுள்ளார். சித்திர விளக்கத்தில்- "இப்பசுவைப் போல நடந்து கொண்ட நமது ஸ்ரீகாந்தி பிரபுவை தென் ஆப்பிரிக்கா புலிகள் என்ன செய்கின்றன பார்த்தீர்களா?" என்று வினவுகின்றார். இதிலிருந்து மகாத்மாவைப் பற்றி (தென் ஆப்பிரிக்காவில் இருக்கும்பொழுதே) பாரதியார் அறிந்துள்ளார் என்றும், அவருடைய அகிம்சைக்

கொள்கையை அறிந்துள்ள தோடு மட்டுமின்றி, அவர் மீது மரியாதையும் வைத்திருந்தார் என்றும் உய்த்துணரலாம்.

காந்தியார் சந்திப்பு

மகாகவியும் மகாத்மாவும் 'நேருக்கு நேர்' சந்திப்பது 1919-ஆம் ஆண்டு மார்ச்சில் தான். மகாத்மா ரவுலட் சட்ட எதிர்ப்பு விஷயமாக இந்திய நாட்டுத் தலைவர்களைச் சந்திக்க சென்னை வந்த பொழுது இராஜாஜியின் விருந்தினராக இருந்த பொழுது, பாரதியார் மகாத்மாவைச் சந்தித்தார். பாரதியார் மகாத்மாவிடம் தான் இன்று பேசும் கூட்டத்திற்குத் தலைமை தாங்க வரமுடியுமா என்று கேட்க, மகாத்மா இன்று வேறொரு அலுவல் இருப்பதால் நாளை ஒத்திப்போட முடியுமா என்று வினவ, 'இயலாது' என்று பதிலிறுத்து விட்டு மகாத்மாவின் ஒத்துழையாமை இயக்கத்திற்கு வாழ்த்துச் சொல்லிவிட்டு உடனே சென்று விடுகின்றார்.

பின்பு, மகாத்மா 'இவர் யாரென்று' இராஜாஜியிடம் வினவ, அவர் தமிழ்நாட்டுத் தேசியக்கவி சுப்பிரமணிய பாரதியார்' என்று கூறினார் மகாத்மா 'பாரதியாரை' நன்கு பாதுகாக்க வேண்டும் என்று விருப்பம் தெரிவித்துள்ளார். இச்சந்திக்குப்பின்பு தான் 'வாழ்க நீ எம்மான்' என்ற பாடலைப் பாரதியார் பாடியிருக்க வேண்டும்.

மகாத்மாவும் மகாகவியும் சில அணுகுமுறைகளில் கருத்து வேறுபாடு கொண்டிருந்தாலும் இரு துருவங்களாகக் காட்சியளித்தாலும் சமூக மேம்பாட்டுச் சிந்தனைகளில் ஒன்றுபடுகின்றனர்.

பத்திரிகையாளர்கள்

மக்களாட்சி என்னும் மாளிகையின் நான்காவது தூண் பத்திரிகை என்பர். இந்தியாவில் இதழியல் இனிது வளர முன்னோடிகளாகச் செயல்பட்டவர்களான மகாத்மாவும் மகாகவியும், தமது கருத்துக்கான உச்சி மீது வானிடிந்து வீழ்கின்ற போதிலும் அச்சமின்றித் துணிவோடு எழுதி வெளியிட்டார்கள்.

பாரதியார் 1904-இல் சென்னைக்கு வந்து 'சுதேச மித்திரன்' என்னும் இதழுக்கு உதவியாசிரியராகச் சேர்ந்தார். பின்பு 'சக்ரவர்த்தினி' என்னும் மாதப் பத்திரிகையின் பொறுப்பாசிரியராகச் செயல்பட்டார். 1908-1910-ஆண்டு கால கட்டத்தில் இவர் 'இந்தியா' என்னும் பத்திரிகைக்கு ஆசிரியராக இருந்து வெளியிட்டார். இதில் தரமான கட்டுரைகளையும் கருத்துப்படங்களையும் வெளியிட்டுப் புரட்சி செய்தார். மேலும், விஜய (தினசரி), சூர்யோதயம் (வார இதழ்) பால பாரதா (ஆங்கில வார இதழ்), கர்மயோகி (மாத இதழ்) போன்றவைகள் ஆரம்பிக்கப்பட்டு நின்று போயின. 'சித்ராவளி' என்னும் ஆங்கில-தமிழ் கருத்துப் படப் பத்திரிகைத் திட்டமும் நிறைவேறவில்லை. இவையாவும் பாரதியாரின் பத்திரிகைத் துறையில் உள்ள ஆழ்ந்த ஈடுபாட்டையும் சிறந்த பத்திரிகையாளர் என்பதையும் கோடிட்டுக் காட்டுகின்றன.

மகாத்மா தென்னப்பிரிக்காவில் வாழ்ந்தபொழுது 'இந்தியன் ஒப்பினியன்' என்னும் இதழைத் தொடங்கித் தனது 'சுயராஜ்ய' சிந்தனைகளை வெளியிட்டு வந்தார். இந்தியா வந்து நிரந்தரமாகத் தங்கிய பின்பு 'யங்இந்தியா' (1919), 'ஹரிஜன்' (1933) போன்ற இதழ்களைத் தொடங்கி நடத்தினார். அரசியல், சமூகம், சமயம், தேசீயம், மருத்துவம், தொழில் பற்றிய பல செய்திகளையும் கட்டுரைகளையும் எழுதி வெளியிட்டார். அவை இன்று 100-க்கு மேற்பட்ட தொகுதிகளாக (Collected Works of Mahatma Gandhi) வெளிவந்துள்ளன. பாரதியாரின் 'வந்தே மாதரம் என்போம்' 'ஆடுவோமே பள்ளுப்பாடுவோமே' 'பகைவனுக்கருள்வாய்' என்னும் பாடல்களை இராஜாஜி ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கொடுக்க, மகாத்மா 1928-இல் தமது 'யங் இந்தியா' பத்திரிகையில் வெளியிட்டார். எனவே, இருவரும் பொறுப்பு மிக்க பத்திரிகையாளராக விளங்கி, கருத்துச் சுதந்திரம் வளர வழி காட்டியவர்கள்.

★ **தண்டனை என்பது நோய் தீர்க்கும் மருந்தாகப் பயன் படுவது. ஆனால், சில சமயங்களில் தீ வளர்க்கும் நெய்யாக மாறிவிடுகிறது.**

—பினாஷ்

சமுதாயச் சீர்திருத்தவாதிகள்

இருவரும் இந்திய விடுதலை மட்டும் போதாது என்று திடமாகத் தீர்க்கமாக எண்ணினார்கள். இந்தியச் சுதந்திரப் போராட்டத்தோடு சமூகச் சீர்திருத்த எண்ணங்களையும் இந்திய மண்ணில் தூவி வளர்த்தனர். பண்பாட்டுப் புரட்சிகளும் சமூக மாறுதல்களும் இந்திய விடுதலையோடு சேர்ந்து நிகழும்படி செய்தனர். பெற்ற சுதந்திரத்தைப் பேணிக் காப்பதற்கும் அறியும் ஆற்றலும் ஆளுமையும் தேவை என்று நன்குணர்ந்தனர்.

இந்தியா அரசியல் அதிகாரத்தில் ஆங்கில ஏகாதிபத்யத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்ததைப் போலவே, இந்திய மக்களும் சாதி, சமயம், பாலினம் போன்ற பிரிவினைகளுக்கு அடிமைப் பட்டும் மூடநம்பிக்கையில் அமிழ்ந்தும் போயிருந்தனர். மகாத்மாவும் மகாகவியும் சமூகம், சமயம், கல்வி, பொருளாதார்ரம், மருத்துவம், கலைகள் போன்ற பல நிலைகளிலும் விழிப்புணர்ச்சி ஊட்ட முனைந்தனர். விதவை மறு மணத்தைப் பற்றிக் கூறுகையில் மகாத்மாவின் கருத்தின் ஒரு பகுதியை ஆதரித்தும் இன்னொரு பகுதியையும் எதிர்த்தும் விதவை மறுமணத்தை வலியுறுத்தி அழுத்தமாகப் பாரதியார் விவாதித்துள்ளார்.

மகாத்மாவின் மகத்தான சிந்தனைகளையும் மகாகவியின் மானுடவளர்ச்சிக்கான கருத்துக்களையும் ஒப்பிட்டு ஆராய்வதற்கு நிறைய வாய்ப்பிருக்கின்றது. இருவரின் சிந்தனைகள் ஒன்றுபட்டுக் குவிகின்ற இடங்கள் பல. பொதுமக்கள் இலக்கியம், தாய்மொழிக்கல்வியின் சிறப்பு, மதச்சார்பின்மை, மூடநம்பிக்கை மற்றும் தீண்டாமை ஒழிப்பு, ஏழைகளுக்குச் செல்வந்தர்கள் செல்வத்தைப் பகிர்ந்தளித்தல், பொதுவாழ்வில் ஒழுக்கம், தனி வாழ்க்கையில் வாய்மை போன்றவற்றுள் இருவருக்கும் நிறைய ஒற்றுமைகள் காணப்படுகின்றன. இவற்றை ஆராய்ந்து வெளிச்சத்திற்குக் கொண்டுவர வேண்டியது அறிஞர்களின் கடமையாகும்.

தமிழரசு

சந்தா விவரம்

'தமிழரசு' தமிழ் (மாதம் இருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.72
அரையாண்டுச் சந்தா ... ரூ.36

'தமிழரசு' ஆங்கிலம் (மாதம் ஒருமுறை)
ஆண்டுச் சந்தா ... ரூ.36

சந்தாத் தொகையை - மணியார்டர் அல்லது பாங்க் டிராப்ட் மூலம் அனுப்ப வேண்டிய முகவரி:

உதவி இயக்குநர்
'தமிழரசு'
அரசினர் தோட்டம்
சென்னை-600 002.

தமிழரசு

படிக்க — பயன்பெற — பாதுகாக்க

தருமபுரி மாவட்டத்தில்

அரசின் திட்டங்கள், ஆக்கப் பணிகள் ஆகியவற்றைப் பல்வேறு விளம்பரச் சாதனங்கள் மூலம் விளக்கி மக்களை விழிப்படையச் செய்வதுதான், பல்துறைப் பணி விளக்க முகாம்களின் நோக்கமாகும்.

தருமபுரி மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க முகாம் மற்றும் கண்காட்சி 29.9.95 அன்று தொடங்கியது. பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியினை, மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் தொடங்கி வைத்தார். மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் விழாத் தலைமை யேற்று, பல்துறைப் பணி விளக்க முகாமினைத் தொடங்கி வைத்தார்.

கண்காட்சியைத் தொடங்கி வைத்துப் பேசிய மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் அவர்கள் தமது உரையில், வீட்டு வசதித்துறை மூலம் தமிழ்நாடு அரசு தருமபுரி மாவட்டத்திற்குச் செய்துள்ள சாதனைகளை விளக்கிக் கூறினார்.

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் அவர்கள், தமது தலைமை உரையில், அரசு செயல்படுத்தி

வரும் திட்டங்களை மக்கள் புரிந்துகொள்ளும் வகையிலும், அத்தகையத் திட்டங்களைப் பயன்படுத்திக்கொள்ளும் வழிமுறைகளைத் தெரிந்துகொண்டு அதற்கான முயற்சிகளைக் கையாளும் வகையிலும் முகாம் நடத்தப்படுகிறது என்று கூறினார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ-ஆ.ப. அவர்கள் முன்னதாகத் தமது விள க்க உரையில், நடப்பு நிதியாண்டில் 10 மாவட்டங்களில் இத்தகைய முகாம்களை நடத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணைக்கு ஏற்ப, இது ... மூன்று மாவட்டங்களில் ந... பட்டு, நான்காவதாக த... மாவட்டத்தில் சிறப்பாக ந... பட்டு வருகிறது என்றும், ... ஆறு மாவட்டங்களில் ... முகாம் தொடர்ந்து நடத்த... என்றும், பொதுமக்கள் ... முகாமின பயன்களை முழுவதும் அடைய நன்முறையில் பங்குபெற வேண்டும் எனறும் கூறினார்.

தருமபுரி மாவட்ட வருவாய் அலுவலர் திரு ரகுபதி அவர்கள வரவேற்புரை நிகழ்த்தினார். துணை இயக்குநர் திரு மா. விஸ்வநாதன் அவாகள் நன்றி கூறினார். விழா முடிவில் திரைப்பட நடிகா டைப்பிஸ்ட் கோபு குழுவினரின 'நல்லதே நடக்கும்' எனும் சாதனை விளக்க நாடகம் நடைபெற்றது. விழா தொடங்குவதற்கு முன். அன்னை சத்யா போக்குவரத்துக் குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது. விழாவில் ஆயிரக் கணக்கான மக்கள் பங்கேற்றுச் சிறப்பித்தனர்.

பல்துறைப் பணி விளக்க முகாமினை ஒட்டி தருமபுரி மாவட்ட விளையாட்டு அரங்கில் கண்காட்சி ஒன்று அமைக்கப் பட்டிருந்தது. இக்கண்காட்சியில் தமிழக அரசின் பல்வேறு துறைகள் பங்குபெற்றன.

23 அரங்குகள் தங்கள் துறையின் சாதனைகளை விளக்கும் வகையில் அமைந்திருந்தன. 29.9.95 முதல் 5.10.95 வரை ஊராட்சி ஒன்றியங்களில் கீழ்க் கண்டவாறு தினசரி காலை 10.00 முதல் மாலை 3.00 மணிவரை பல்வேறு துறை பங்குபெற்ற விளம்பர முகாம்கள் நடைபெற்றன.

இம்முகாமில் இலவச மருத்துவப் பரிசோதனை, கால்நடைகளுக்கு இலவசச் சோதனை, சமூகநலத்துறை மூலம் பெண்களுக்கான திட்டங்கள், வேளாண்மைத்துறையின் மூலம் இலவச விதைகள், பூச்சி மருந்துகள், வனததுறை மூலம் இலவச மரக்கன்றுகள, ஊரக வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, பிற்பட்டோர் நலத்துறை, ஆதி திராவிடர் நலத்துறை மூலம் இலவச உதவிகள் ஆகியவை வழங்கப்பட்டன.

இவைதவிர, மாவட்டத்தி லுள்ள 18 ஊராட்சி ஒன்றியங்களில் தளி ஒன்றியம் தவிர 17 ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் நாளொன்றுக்கு மூன்று படக் காட்சிகளும், பர்கூர் ஒன்றியப் பகுதிகளில் 6 படக்காட்சிகளும் ஆக மொத்தம் 29.9.95 முதல் 5.10.95 வரை 378 படக்காட்சிகள் காண்பிக்கப்பட்டன.

இதுதவிர, அரசின திட்டங்கள மற்றும் சாதனையை விளக்கும் வகையில், முகாம் நடைபெறும் 7 நாட்களுக்கும் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் 40 இடங்களில் நாடகம் மற்றும் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. முகாம் இறுதி நாளான 5.10.95 அன்று கண்காட்சியில் பங்கு பெற்ற சிறந்த அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன.

அரசுச் சார்பு நிறுவனங்கள் அரங்கம்:

முதல் பரிசு - தருமபுரி மாவட்ட வளர்ச்சிக் கழகம்.

2-வது பரிசு - அன்னை சத்யா போக்குவரத்துக் கழகம்.

3-வது பரிசு - அறிவொளி இயக்கம்.

அரசுத்துறை அரங்கம்:

முதல் பரிசு - வேளாண்மைத் துறை.

2-வது பரிசு - ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத்துறை.

3-வது பரிசு - பட்டுவளர்ச்சித் துறை.

பெண் குலத்தின் பொன்விளக்கு தமிழ் மாநிலத்தைக் காக்க வந்த மணிவிளக்கு

திருமதி கவிநிலவு தர்மராஜ்

கடந்த ஜனவரித் திங்களில், தஞ்சை மாநகரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் 'பெண்ணின் பெருமை' என்னும் தலைப்பில் நடைபெற்ற மகளிர் கருத்தரங்கு நிகழ்ச்சியில் பங்கேற்று, சட்டமன்ற உறுப்பினர் கவிநிலவு தர்மராஜ், 'சமூகம்' என்னும் பொருளில் ஆற்றிய உரை:

சமூகம் என்ற சொல், மனிதர்களைப் பொறுத்தவரை, உயர்ந்த எண்ணங்களைப் பொறுத்தவரை உபயோகிக்கக் கூடிய அருமையான சொல். தமிழ் என்று சொன்னாலே அதிலே சீரும் இருக்கிறது சிறப்பும் இருக்கிறது. ஆனால் அதைக் கையாளும்போது கவனமும் இருக்க வேண்டும். அப்படிப்பட்ட அருமையான சொல், தமிழிலே இருக்கக் கூடிய சமூகம் என்ற சொல்.

சமூகம், சுமூகம் ஆக்கப்பட வேண்டும்

அன்று காட்டிலேயும் மேட்டிலேயும் தனித்து வாழ்ந்து கொண்டிருந்த மனிதன், தன்னுடைய எண்ணங்களையும் சிந்தனைகளையும், கனவுகளையும், நனவுகளையும் பிறரோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று எண்ணியபோதுதான், அவனுடைய எண்ணங்கள் பிரதிபலிக்கப்பட வேண்டும் என்று நினைத்த போதுதான் மொழி உருவாயிற்று. அந்த மொழியை அவன் மொழிய ஆரம்பித்தபோது, மக்கள் ஒருவரை ஒருவர் சாரச் சார சேரச் சேர, அது சமூகம் ஆனது. அந்தச் சமூகம், சுமூகம் ஆக்கப்பட வேண்டும். அந்தச் சமூகத்திலே பலவகை இருக்கிறது. ஆண்களும் பெண்களும் சேர்ந்ததொரு சமூகத்தை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் சமூகத்திலே மட்டும் ஆண்கள் சமூகம், பெண்கள் சமூகம், படித்தவர் சமூகம், படிக்காதவர் சமூகம், ஏழை சமூகம், பணக்கார சமூகம், ஆளுகின்ற சமூகம், ஆளுகைக்கு உட்பட்ட சமூகம், அதோடு மட்டுமல்லாமல், ஆதிக்க சமூகம், அடிமை சமூகம் என்று பல்வேறு வகையிலே கவிஞர்கள், அறிஞர்கள் பகுத்துத் தொகுத்துப் பிரித்து ஆய்வு செய்திருக்கிறார்கள். விலங்குகளைப் பொறுத்தவரை சமூகம் என்ற வார்த்தை பயன்படுத்தப்படுவதில்லை. மனித, உயர்நிலை மக்களுக்கு மட்டுமே இந்த அருமையான பொருள் பயன்படுத்தப்படுகிறது.

சொல்லுவதோ சக்தி என்று!
தள்ளுவதோ சகதி நிலைக்கு!!

இந்தச் சமூகம் ஆதாரமாகக் கொண்டிருப்பது யாரை? அச்சாணியாக, ஆணிவேராகக் கொண்டிருப்பது பெண்ணை. இந்தப் பெண்ணை வைத்துத் தான் இந்த சமூகம் வாழ்ந்து கொண்டிருக்கிறது. மக்கள் தொகுதியிலே, மக்கள் தொகையைக் கணக்கெடுப்போமேயானால் பெண்கள் பாதிக்கு மேலாக இருக்கிறார்கள். இப்படி ஆணி வேராக, அச்சாணியாக, அடிப்படையாக இருந்து கொண்டிருக்கிற பெண்களுடைய நிலைமை, இடைக்காலத்திலே எப்படி இருந்தது? அந்தக் காலத்திலே நாம் பல இலக்கியங்களைப் படித்தோம். புத்தகங்களைப் படித்தால் படிப்புக்குத் தலைவி பெண், பக்திக்குத் தலைவி பெண், நாட்டுக்குத் தலைவி, நடிப்புக்குத் தலைவி, வீட்டுக்குத் தலைவி, விவேகத்திற்குத் தலைவி, பொறுமைக்குத் தலைவி, பூமிக்குத் தலைவி என்று இப்படி அனைத்துக்கும் தலைவி பெண் என்று சொல்லி, நதிக்கும் தலைவியைப் பெண்ணாக வைத்து, கலைமகள், மலர்மகள், அலைமகள் என்றும், அன்னலட்சுமி, தானிய

லட்சுமி, அஷ்ட லட்சுமி, வீரலட்சுமி, ஜெயலட்சுமி, கஜலட்சுமி, ஆதிலட்சுமி, சந்தான லட்சுமி, தைரிய லட்சுமி என்றும் வைத்திருக்கிறார்கள். ஆனால் பெண்களுடைய நிலைமை எப்படி இருக்கிறது? இருந்தது? சமுதாயத்திலே பார்க்கும்போது அது மிக மிக சகதி நிலையிலே இருந்தது. அந்த சகதி நிலையை நினைக்கும்போதுதான், நமக்கு வேதனையாக இருக்கிறது.

பாவையர் நிலைமை
பாதத்திற்கும் கீழே!

மனுநூல், மனு தர்மம், மனு சாஸ்திரம், அர்த்தம் உள்ள இந்து மதம் என்று சொல்கிறார்களே அதிலே பெண்களை எப்படிக் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள்? பிரம்மனின் தலையிலே அந்தணன், தோளிலே அரசன், இடுப்பிலே வாணிகன், காலிலே சத்திரியன், பாதத்திலே சூத்திரன். பெண்களுக்கென்று ஒரு இடமே இல்லை. பாதத்திற்கும் கீழாக! அப்படி என்றால் நம்முடைய நிலைமை? நம்மை மதிக்கிறார்களா, மிதிக்கிறார்களா?

விதி ஒன்றே கதி,
பதி ஒன்றே எங்களுக்கு விதி,
காலிலே நீ போட்டு மிதி,
எங்களுக்கு மண்டையிலே
கிடையாது மதி,
இதுதான் பெண்கள் தலைவிதி!
நீயில்லாமல் எங்களுக்கு
வரப்போவது அதோகதி!

என்றெல்லாம் நினைத்துக் கொண்டு, அடுப்பு ஒன்றையே எடுப்பான துடுப்பாகக் கொண்டு அல்லவா, பெண்கள் வாழ்ந்து கொண்டிருந்தார்கள்.

கட்டிலறைப் பாவை
பெட்டியறைப் பதுமை

முன்னே இருள் சூழ்ந்து தண்ணீர் மேவிய இந்த நன்னீர் உலகத்திலே, பெண்கள் கண்ணீர் விடுவதற்காகவே படைக்கப்பட்ட பாத்திரங்களாக இருந்தாகள்! அப்படிப்பட்ட ஒரு நிலைமை இன்று மாறியிருக்கிறது. மாற்றப்பட்டிருக்கிறது. இனிமேல் அப்படிப்பட்ட ஒரு நிலைமை வராது. ஏனென்று சொன்னால், பெண்ணுக்கெல்லாம் பெண்ணரசியாக விளங்கிக் கொண்டிருக்கிற, தமிழ்த் தெய்வம் இந்த தமிழ் நாட்டினை ஆண்டு கொண்டிருக்கிறது. இல்லையென்றால் எங்களுடைய நிலைமை - பாரதி எங்களைக் கும்மி அடிக்கச் சொன்னான். நாங்கள் கும்மியா அடித்தோம்? விம்மி விம்மி அழுது கொண்டிருந்தோம். பாடமே சொல்லித் தரவில்லை மம்மி என்கிறான் பையன்; வீட்டு வேலை செய்யறது ரொம்ப கம்மி என்கிறார் மாமியார்; சம்சாரம்னு தான் பேர், இது வெறும்டம்மி என்கிறார் வீட்டுக்காரர்; இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில் அல்லவா பெண் சமுதாயம் தத்தளித்துக் கொண்டிருக்கிறது! இதற்கு நூலாசிரியர்கள் ஒரு பங்கு, இலக்கியங்கள் பெரும் பங்கு.

> **நூல்கள் பல விதம்**
>
> ★ புத்தகங்கள் மூன்று வகையுண்டு. சில புத்தகங்கள் படித்து ஆராய்ந்து பார்க்க வேண்டியவை. சில படித்து மனப்பாடம் செய்ய வேண்டியவை. சில மென்று தின்று ஜீரணிக்க வேண்டியவை.
>
> —பேகன்

பெண்களைப் புகழ்வதற்காகவும், பெண்களைப் பாராட்டுவதற்காகவுமே இலக்கியத்தில் பெண்கள் படைக்கப்பட்டிருக்கிறார்கள். போகப் பொருளாக, அனுபவிக்கக் கூடிய பொருளாக, பெட்டிப் பாம்பாக, பெட்டியறைப் பதுமையாக, கட்டிலறைப் பாவையாக, பிள்ளை பெற்றுத் தரும் எந்திரமாக மட்டுமே இலக்கியங்களில் பெண்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறார்கள் ; படைக்கப்பட்டிருக்கிறார்கள். அப்படி ஒரு நினைப்புத் தான், அந்த சமுதாயத்திலே இருப்பவர்களுக்கும் இருந்திருக்கிறது. அந்த நிலைமைமாறி இப்போது நாங்கள் பெண்களுடைய உரிமைகளை, கேட்பதற்கு முன்பாகவே பெற்றுக் கொண்டிருக்கிறோம்.

வஞ்சமன நெஞ்சம்
கொண்டவளோ பெண்?

வயிற்றிலே பத்து மாதம் கருவிலே அடிமை, பெற்றவுடன் பெற்றோருக்கு அடிமை, மணந்த உடன் மணாளனுக்கு அடிமை, பிறகு மகனுக்கு அடிமை, பிறகு மண்ணுக்கு அடிமை. இப்படியெல்லாம் எங்களுடைய நிலைமை இருக்கிறதே என்று அந்தக் காலத்திலே பெண்கள் கண்ணீர் வடித்தார்கள். ஆனால் எந்தப் பயனும் இல்லை. அதற்கு யாராவது ஒரு நூலாசிரியரோ, யாராவது ஒரு இலக்கியவாதியோ துணை போனார்களா என்று சொன்னால், சத்தியமாக இல்லை. எனக்கு முன்னால் பேசிய சகோதரி அவர்கள், சிலப்பதிகாரத்தைப் பற்றிச் சொன்னார்கள். சிலப்பதிகாரத்திலே பெண்ணி

னுடைய பெருமை மிகவும் அழகாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அந்த சமூகவாதிகள், அவர்களும் ஒரு நூலாசிரியர் என்ற முறையிலேதான் கோடிட்டுக்காட்டி இருக்கிறார்கள். கண்ணகியைப் பற்றிப் பாராட்டி சொல்லியிருக்கிறார். கண்ணகியைப் பற்றி நமக்கு அறிமுகப்படுத்தும் போது

"போதிலார் திருவினாள்
புகழுடை வடிவென்றும்
தீதிலா வடமீனின்
திறம்இவள் திறமென்றும்,
மாதரார் தொழுதேத்த
வயங்கிய பெருங்குணத்துக்
காதலால் பெயர்மன்னுங்
கண்ணகி யென்பாள் மன்னோ"
- என்று சொல்கிறார்.

பாட்டு சொல்லும்போதே நம்மை கொஞ்சம் மிரட்டுகிறார்கள். திறமெனில் சிறப்போடு இருக்க வேண்டும்; கற்போடு இருக்க வேண்டும்; காதலனோடு இருக்க வேண்டும்; அவர் என்ன சொன்னாலும் கேட்க வேண்டும்; இதுதான் நூலாசிரியர்களுடைய எண்ணம்.

★ புத்தகங்கள் இளைஞர்களுக்கு வழிகாட்டி. முதியவருக்குப் பொழுதுபோக்கு.

—பெரிமி காலியர்

★ உங்களை அதிகமாகச் சிந்திக்க வைக்கும் புத்தகங்களே, உங்களுக்கு உதவி புரிபவை.

—தியோடர் பார்க்கர்

காலம் ஒரு குரு

★ **ஏனைய எல்லா ஆசிரியர்களையும் விட மிகச் சிறந்த ஆசிரியர் காலம். அது புகட்டிய பாடங்களுக்கு நிகராக இதுவரை யாருமே எப்போதுமே புகட்டியது கிடையாது.**

—எட்மண்ட் பர்க்

பெண்ணுக்குள் அடங்கியிருக்கும் திறமையை புரிந்து கொள்க

பெண்களைத்தான் நச்சுப் பாம்பாக, நாசகாரிகளாக, அடிமைகளாக இலக்கியவாதிகள் சித்திரிக்கிறார்கள். அதேநேரத்தில் காரியம் ஆக வேண்டுமென்று சொல்லுகிற பொழுது இதே கோவலன் கண்ணகியிடம் போய்ச் சொல்லுகிறான் "மாசறு பொன்னே, வலம்புரி முத்தே, காசறு விரையே, கரும்பே தேனே, அரும்பெறும் பாவாய், ஆருயிர் மருந்தே, பெருங்குடி வாணிகன் பெரு மடமகளே, மலையிடை பிறவா மணியே என்கோ, அலையிடை பிறவா அமிழ்தே என்கோ, யாழிடை பிறவா இசையே என்கோ, தாழிரும் கூந்தல் தையால்" என்றெல்லாம் பாராட்டுகிறான். இது நியாயமா? என்றுதான் கேட்கிறோம். துன்பம் வந்தால் உங்களுக்கு உதவி செய்வது பெண். இன்பம் வேண்டுமென்றால் வருவது பெண், ஆனால் தலைமை தர மட்டும் ஏன் மறுக்கிறீர்கள்? பெண்மை என்பது மென்மை, அதனுள் அடங்கி இருக்கிறது திறமை, இதைப் புரிந்து கொண்டால் உங்களுக்கு நன்மை, புரியாவிட்டால் நீங்கள் சந்திக்க வேண்டும் எதிர் காலத்திலே திண்மை, இதுதானே உண்மை. இதைச் சொல்லுவது என்னுடைய உரிமை, செவி மடுத்துக் கேட்பது உங்கள் கடமை, இப்படிப்பட்டு இருக்கிறது நிலைமை. ஆனால் இப்பொழுது இருக்கிறது அருமையான, பெருமையான திறமையான, வளமோடு, செழுமையோடு நடந்து கொண்டிருக்கிற புரட்சித் தலைவியினுடைய ஆட்சி, அது வேறு நிலைமை.

கோவலன் காலை ஒடித்தது நியாயமே

பெண்களைக் கேவலப்படுத்தி, போகப் பொருளாக சித்திரிப்பது எந்த விதத்தில் நியாயம்? இதே கோவலன், "என்னோடு போந்திருந்து, என்துயர் களைந்து, பொன்னே, கொடியே, தேனின் பாவாய், மீனின் கொழுந்தே, கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி", என்றெல்லாம் பாராட்டியவன் கடைசியிலே என்ன செய்தான்? இப்படிப்பட்ட ஒரு இழிநிலை பெண்ணுக்கு வரலாமா? ஒரு கல்லூரியிலே பாடம் நடத்திக்கொண்டிருந்த ஒரு தமிழ்ப் பேராசிரியர் கோபமாக வெளியே வந்தார். நான் என்னவென்று விசாரித்தேன், அப்போது அவர் சொன்னார், கோவலனுக்குப் பக்கத்திலே இருக்கிற காலைப் போடாமல், கோவலனை கேவலன் என்று ஒரு மாணவி எழுதியிருக்கிறாள், நான் அதை திருத்து என்று சொல்கிறேன், ஆனால், திருத்த

மாட்டேன் என்று சொல்கிறாள்" என்று என்னிடம் சொன்னார். உடனே நான் அந்த மாணவியை அழைத்து, "உனக்கும் கோவலனுக்கும் என்னம்மா சண்டை? ஏன் இப்படி கோவலன் காலை அநியாயமாக உடைத்தாய்? என்று கேட்டபோது, அதற்கு அந்த மாணவி சொல்கிறாள்: "அம்மா, நான் சிலப்பதிகாரம் படித்தேன், அதிலே அநியாயமாய் அழகுப் பதுமை கண்ணகியை விட்டு விட்டு மாதவியோடு இந்த கோவலன் ஓடி, கேவலத்தனமான வேலையைச் செய்தான், அதை என் மனம் ஜீரணிக்கவில்லை, அன்றைக்கு அவங்க அம்மா அப்பா அவன் காலை ஒடிக்கவில்லை, இன்னைக்கு நான் ஒடித்திருக்கிறேன்" என்னால் பதில் சொல்ல முடியவில்லை. உண்மை. நாம் ஜீரணித்துக் கொள்ள வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்டவர்களையும் இந்த சமுதாயம் மன்னித்துக் கொண்டிருக்கிறது. அதற்கு இலக்கியங்கள் உதவிக் கொண்டிருக்கின்றன.

பாதகம் விளையுது பழமொழியால்!

இலக்கியங்களை மட்டுமல்ல, பழமொழிகளையும் அதற்கு தகுந்தமாதிரி உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அர்த்தத்தையே மாற்றுகிறார்கள். 'பெண் புத்தி பின்புத்தி'. அந்த 'பின்' என்பதிலே வரக்கூடிய 'ன'கர வேறுபாடுகளை அவர்கள் அறியவில்லை. பின் என்றால் கூர்மை. பெண்புத்தி கூர்மையான புத்தியுடையவர்கள் என்பது பொருள். இன்னொரு பழமொழி, 'ஆவதும் பெண்ணாலே, அழிவதும் பெண்ணாலே' நல்லதை ஆக்குபவளும் பெண், தீயதை அழிப்பதும் பெண்.

'மேட்டான்காட்டை உழுதவனும் கெட்டான், மேனாமினுக்கியை கட்டினவனும் கெட்டான்' என்று ஒரு பழமொழியாம். இவர்களுக்கு வசதியாக பழமொழியை எழுதிக் கொள்வது. இதைத் திருப்பி எழுதுவதற்கு பெண்களால் முடியாதா? சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

சேதம் அடைந்தோம் கவிமொழியால்

கவிதைகள் வேறு எழுதுகிறார்கள். பெண்களைப் பற்றி நல்ல கருத்துக்களைக் கவிதைகளாக எழுதக் கூடாதா? "இல்லந்தோறும் பெண்களைப் படைத்துவிட்டு பிறகு ஏன் எமனை படைத்தாய்?" இப்படி ஓர் ஆசிரியர் எழுதியிருக்கிறார். அதோடு மட்டுமல்ல, 'ரோஜாவின் அழகு, புறாவின் மென்மை, தேனின் இனிமை, அதோடு கொஞ்சம் நல்ல பாம்பின் விஷம், இவைகளையெல்லாம் சேர்த்து படைக்கப்பட்டதுதான் பெண்' என்று ஒரு கவிஞர் எழுதுகிறார், அதற்கு ஒரு பரிசு. அதோடு மட்டுமல்லாமல், நகைச்சுவை என்று பத்திரிகையிலே வரக்கூடிய துணுக்குகளில் கூட பெண்களை தரம் தாழ்த்தி, கேவலமாக அடிமைப்படுத்தி எழுதுகிறார்கள். ஒரு ஜோசியரைப் பார்க்க ஒருவர் போகிறார். ஜோசியர்அவரைப் பார்த்துவிட்டு உங்களுக்கு சனி பிடித்து ஏழு வருஷமாச்சு என்கிறார், உடனே பார்க்கப் போனவர் சொல்லுகிறார், "கரெக்டா சொன்னீங்க, எனக்குக் கல்யாணம் ஆகி ஏழு வருஷம் ஆச்சு, என் சம்சாரத்தின் பெயர் பத்மாசனி". என்றாராம். இதற்குப் பத்திரிகையிலே பரிசு கொடுக்கிறார்கள். இப்படிச் செய்யலாமா? இது நியாயமா? இது அடுக்குமா? இப்படி நீங்கள் எதைவேண்டுமானாலும், பழமொழிகளாக இருந்தாலும், அல்லது சாதாரண கருத்துக்களாக இருந்தாலும், நகைச்சுவையாக இருந்தாலும் பெண்களைக் கேவலப்படுத்தி எழுதலாமா?

★ **கல்வியறிவு இல்லாதவன் துர்ப்பாக்கியத்தின் மூல வேர்.**

- பிளேட்டோ

★ **பேராசையைப் போக்க நினைத்தால் அதன் தாயாகிய படாடோபத்தை ஒழிக்க வேண்டும்.**

- சிசரோ

இரு கட்சிக்கும் பொதுவாக இருக்க வேண்டிய பொருள் அல்லவா கற்பு

திருவள்ளுவர் பெருமையைப் பற்றி எனக்கு முன்னால் பேசியவர் சொன்னார், "பெண்ணின் பெருந்தக்க யாவுள"! இத்தோடு அவர்கள் நிறுத்திவிட்டார்கள். மீதியைச் சொல்லுங்கள், "கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்".

அது ஏன் அப்படிப் போட்டு மிரட்டுகிறீர்கள்? 'கற்பென்னும் திண்மை உண்டாகப் பெறின்" என்றால் என்ன பொருள்? பெண்ணுக்குக் கற்பு வேண்டும்! கற்பு வேண்டும்; ஆனால் இரு கட்சிக்கும் அதை பொதுவிலே வைப்போம். அதுதானே நியாயம்?

'வாழ்க்கைத் துணை நலம்' என்று எழுதியிருக்கிற வள்ளுவரைப் பார்த்து கேட்கிறேன். ஏன் ஆண்களுக்கென்று 'வீட்டுக்காரர் துணை நலம்' என்று ஏதாவது வைத்திருக்கலாம் அல்லவா? இல்லறம் வைத்திருக்கிறீர்கள், வாழ்க்கைத் துணை நலம் வைத்திருக்கிறீர்கள, மக்கள் பேறு வைத்திருக்கிறீர்கள். ஏன் எல்லாம் பெண்களுக்கே புத்தி மதியா? வேதனையாக இருக்கிறது. கடந்த காலத்தை நாங்கள் புரட்டிப் பார்க்கிறபோது, பெண்களுடைய நிலைமை மிகவும் கீழாகப் போய்க் கொண்டிருக்கிறது.

இப்படிப் பெண்கள்படும் வேதனைகளைப் பார்த்து ப்ாரதியாரும் பாவேந்தரும் கூட சேர்த்து அந்த பெண்ணினுடைய அழுகைக் குரலாக ஒரு கவிதையை சொல்லுகிறார்கள். ஒரு பெண் சொல்லுகிறாள், தன்னுடைய கணவனைப் பார்த்து. "ஐயா எனக்கு அடுப்பும் நீங்கள் -- அவள் தன்னுடைய வீட்டிலே இருப்பதைப் பார்த்து சொல்லுகிறாள் - எனக்கு அடுப்பும் நீங்கள், துடுப்பும் நீங்கள்; சட்டியும் நீங்கள், பானையும் நீங்கள்; வீடும் நீங்கள் மாடும் நீங்கள்; வெறுப்படைந்து வெளியே சென்றால் காடும் நீங்கள் கட்டையும் நீங்கள்; கழுதையும் நீங்கள் குதிரையும் நீங்கள்; எனக்கு எல்லாமே நீங்கள் தான்" என்று. அந்தக் கருத்துக்கு அந்த வீட்டுக்காரர் பரிசு கொடுக்கிறார். அதோடு மட்டும் அல்லாமல் பாவேந்தர் சொல்லுகிறார்

'ஆடை அணிகலன் ஆசைக்கு
வாச மலர் தேடுவதும்,
ஆண்களைச் சேவித்து இருப்பதும்,
அஞ்சுவதும், நாணுவதும்,
ஆமையைப் போல வாழ்வதும்,
கெஞ்சுவதுமாய் கிடக்கும்
மகளிர் குலம்
மனித சமூகத்திலே
ஒரு வலுவற்ற பகுதி"

என்று சொல்லுகிறார். அவர்களைப் பார்த்து வேதனைப் படுவதைத் தவிர என்ன செய்ய முடிந்தது?

இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்திலே தான், பெண்களுடைய நிலை கேவலம் அடைந்துக் கொண்டிருக்கின்ற ஒரு சூழ்நிலையிலேதான், இதே கவிஞர்கள் பெண்களுக்குக் குரல் கொடுக்க வேண்டும் என்று வந்தார்கள். குரல் கொடுத்தார்கள்.

பத்தாதா பத்து குணம்?
பின்னும் பற்ற வேண்டுமா
பயிர்ப்பு குணம்

மானம், மரியாதை, சூடு, சுரணை, ஆண்மை, வீரம், அன்பு, அடக்கம், அறிவு, அச்சம் என்று பத்து குணங்களை எல்லாருக்கும் மொத்தமாக இருக்கும் போது பெண்ணுக்கு என்று அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்று தனியாக நான்கு குணங்கள் எதற்கு? அச்சத்தை விடுங்கள், அது பயம். அது போல மடம் என்றால் அறிந்தும் அறியாதது போல, தெரிந்தும் தெரியாதது போல இருக்கக்கூடிய பேதமைத் தன்மை; நாணம் என்னும் வெட்க குணம் நமக்கெல்லாம்... ஏன் எல்லோருக்கும் இருக்கலாம். இந்த பயிர்ப்பு என்ற குணம் என்ன தெரியுமா? பயிர்ப்பு என்ற குணத்திற்கு என்ன பொருள்? ஒரு பெண்ணின் மீது அவளுடைய உடலின் மீது, அல்லது ஆடையின் மீது தன்னுடைய கணவன் அல்லாதவருடைய தீண்டுதலோ, அல்லது ஸ்பரிசமோ பட்டாலும் கூட அவள் அதைத் தடுத்து, திருத்தி, ஒதுக்கி உணர வேண்டும். இதுதான் பயிர்ப்பு. அப்படியென்றால் இந்தக் காலத்திலே கல்லூரிக்கு எத்தனைப் பேர் போக முடியும்? பேருந்திலே எத்தனைப் பேர் பயணம் செய்ய முடியும்? இப்படிப்பட்ட நிலைமையிலிருந்து, எங்களுடைய தங்கத் தமிழகத்தின் சிங்கத் தலைவியே, நீங்கள் தான், இந்த நானிலத்திலே, யாருமே செய்ய முடியாத அளவுக்கு, மூன்று தமிழ் என்று மூவாயிரம்

★ **ஒவியம் என்பது மௌனக் கவிதை. கவிதை என்பது பேசும் ஒவியமாகும்.**

—எமர்சன்

சம்மதமில்லா மதம்
தாமதம்!

★ **தாமதம் செய்யாதே; பொன்னான காலங்கள் பறக்கின்றன.**

—லாங்ஃபெல்லோ

ஆண்டுகளாகச் சொல்லிக் கொண்டிருந்ததற்கு, நான்காவது தமிழை நானிலத்தில் சொன்ன நீங்கள் தான், எங்களுக்கு ஒரு விடிவு காலத்தை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறீர்கள்.

பெண் குலத்தை வாட்டும்
பெரும் சிக்கல்

"நிமிர்ந்த நன்னடையும், நேர்கொண்ட பார்வையும், நிலத்தில் யாருக்கும் அஞ்சாத தன்மையும், தெளிந்த ஞான செருக்கும் உடைய செம்மை மாதர் திறம்... " என்று சொல்லுகிறார்கள். " மாதர் தம்மை இழிவு செய்யும் மடமையைக் கொளுத்துவோம், ஏட்டினைப்பெண்கள் தொடுவது பாவம் என்றே எண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார், வீட்டுக்குள்ளே பெண்ணை பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்றெல்லாம் சொல்லுகிறார்கள். பெண்கள் கல்வி கற்றார்கள். ஆனால் பெண்களுடைய சமூகத்திலே இருக்கக் கூடிய அவலநிலை மாறியதா? வரதட்சணைக் கொடுமை மாறியதா? என்பதை எண்ணிப் பாருங்கள். இதிலே என்ன கொடுமை தெரியுமா? விலை பேசுவதும் பெண், விலை யாவதும் பெண், விலைக்கு விற்கப்படுபவளும் பெண். இப்படிப்பட்ட ஒரு சமூக சிக்கல் இந்தப் பெண் குலத்தை வாட்டிக் கொண்டிருக்கிறது.

ஒரு பெண்ணைப் பார்ப்பதற்கு மாப்பிள்ளை வீட்டார் போகிறார்கள். பெண்ணைப் பிடித்து விட்டது. உடனே மாப்பிள்ளையின் தாய், பெண்ணினுடைய தாயைப் பார்த்துக் கேட்கிறாள் மத்த விஷயம் பேசலாமா? என்று. பேசுங்கள் என் பெண்ணின் தாய் சொல்லுகிறாள். உடனே அவள் சொல்லுகிறாள்:

அருமை நிறை, பெருமை நிறை
திறமை நிறை பையன்,
அமெரிக்கா சென்று பட்டம்
வாங்கி வந்த பையன்.
அஞ்சு இலட்சம், ஆறு இலட்சம்
செலவழிச்ச பையன்,
அத்தனைக்கும் தட்சணையை
நம்பி இருக்கும் பையன்.
சீர் வரிசை பெரிதல்ல ஸ்டீல்
பீரோ ஏழு போதும்,
எவர்சில்வர் பாத்திரங்கள்
எழுநூறு போதும் போதும்,
ஹீட்டர் போட்டுக் குளிப்பவன்,
ஸ்கூட்டரிலே தான் போவான்,
லேட்டஸ்டா வாங்கிடுங்க அவன்
டேஸ்டுக்கு ஒத்து வரும்.
என் மகன்,
பாரதியார் பக்தன் அவன்,
மாருதி கார் பிரியன் இவன்,
மாருதி கார் ஒன்று போதும்
சாரதி கூட தேவையில்லை,
அமெரிக்காவிலே படிச்சதுக்கு
அம்பது பவுன் போடுங்க,
இந்தியாவிலே படிச்சதுக்கு
இருக்க வீடு ஒண்ணு எழுதுங்க
பொண்ணு பிள்ளை
பொழைச்சுக்க பொட்டியிலே
அஞ்சு இலட்சம்
மொத்தமாகத் தந்திட்டால்
முகூர்த்த நாள் பார்த்துடலாம்.
சீர் வரிசை பெரிசல்ல!"

என்று சொன்னாளாம் பிள்ளையைப் பெற்றப் பெருமகள்.

வேதனைப் படுகிறோம், வெட்கப்படுகிறோம், வரதட்சணை கொடுமை எப்படி தலை விரித்தாடுகிறது. கன்னித் தன்மை கழியாமல் எத்தனை கன்னிப் பெண்கள் கண்ணீர் விட்டுக் கொண்டிருக்கிறார்கள்? கன்னியர்கள் ஏங்கிக் கொண்டிருக்கிறார்கள்? இதிலே சமூகம் எங்கு சமூகமாக வாழ்வது? ஆணிவேராக, அச்சாணியாக இருக்கக் கூடிய பெண்கள் பாதிக்கப்பட்டுக் கொண்டிருக்கும்போது, எப்படி சமூகம் சமூகமாகும்?

பாரதி சொன்ன
புதுமைப் பெண்
பார் புகழ்
புரட்சித்தலைவியே!

இந்த நிலைமையெல்லாம் மாறி, பெண் விடுதலைக்கு வித்திட்டு, அந்த பாரதி சொன்னானே- புதுமைப் பெண், புரட்சிப் பெண், புதுயுகப் பெண் என்று சொன்னானே, அகக் காற்றாய், இகக் காற்றாய், யுகக் காற்றாய், தமிழ் என்று சொல்லக் கூடிய உயிர்க் காற்றாய் வலம் வந்து இன்று பெண்கள் எல்லாம் சட்டமன்ற உறுப்பினர்களாகவும், அமைச்சர் பெருமக்களாகவும் வாழக்கூடிய விதத்திலே முப்பது பெண்களை முத்தாக சட்டமன்ற உறுப்பினர்களாக சட்டமன்றத்திலே அமர்த்திக் காட்டி, எங்களை அழகு பார்த்துக் கொண்டிருக்கிற அழகு தேவதையே, நீங்கள்

சுதந்தரம்

★ **சுதந்தரம் இல்லாத தேசம், உயிரில்லாத உடல் போல. உயிர் வாழ உணவு எப்படி அவசியமோ, அது போல சுதந்தரமாய் வாழத் தியாகம் அவசியமாகும்.**

—மூதறிஞர் ராஜாஜி

தமிழ்! தாயே! தமிழே தமிழுககு மகாநாடு எடுக்கிற அதிசயத்தை நான் இங்குதான் பார்க்கிறேன். முத்தமிழின் தேவதையே, அந்த தமிழுககு நீங்கள் மகாநாடு எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள். இன்று பெண் சமுதாயம் உயர்ந்து கொண்டிருக்கிறது. தலைநிமிர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கிறது. இன்று பெண் சமுதாயத்தைப் பொறுத்தவரை, எதையும் சாதிக்க முடியும் என்ற ஆற்றலோடு இருக்கிறது. அப்படிப் பட்ட ஒரு திறமையை நீங்கள் வளர்த்திருக்கிறீர்கள். பார்த்தீர்கள் நீங்கள், எதனால் பெண் அடிமை ஏற்படுகிறது? எதனால் பெண்ணுக்கு தாழ்வு மனப் பான்மை உண்டாகிறது? அந்தக் கல்வியைக் கொடுக்க வேண்டும், இட்டீர்கள் கட்டளை. பேசினார்கள், 100 விழுக்காடு கல்வி வேண்டும் என்று. 100 விழுக்காடு பெண் கல்வியை தாயே நீங்கள் வழங்கியிருக்கிறீர்கள், அறிவொளி இயக்கத்தின் மூலம், முறைசாராக் கல்வி முறையான கல்வி, நேர்முக கல்வி, அஞ்சல் வழி கல்வி, எல்லா வழிக் கல்வியிலும், 100 விழுக்காடு பெண் கல்வியை கொடுத்திருக்கிறீர்கள். அந்த கல்விச் செல்வம் வந்தபிறகு தான் அறியாமை மாறும், அந்த அறிவொளி எரியும் போது தான் அறியாமை இருள் அகலக் கூடும், என்பதை எண்ணி, நீங்கள் அறிவொளியை ஏற்றி விட்டீர்கள்.

பெண் சமூகத்தைக் காக்க பேருள்ளம் கொண்ட தலைவி

தாயே! சிந்தித்துப் பார்த்தீர்கள் ஜாதிக் கொடுமையை. ஜாதிக் கொடுமை இருக்கும் வரை மீள முடியாது, சமூகத்தைத் திருத்த முடியாது. எனவே திட்டம் போட்டீர்கள், சட்டம் ஆக்கினீர்கள். 69 சதவிகிதம் என்பதைச் சொல்லி மக்கள் மன்றத்திலே மட்டுமல்ல, உலக அரங்கிலேயே உயர்ந்த தலைவியாக, உயர்ந்து விட்டீர்கள்.

அண்ணா சொன்னார் "பெண்கள் எல்லாம் யாராவது ஒருவரைக் காவலுக்கு அழைக்கிறார்கள். பெண்ணுக்குக்காவல் இருப்பதை மாற்றி, பெண்ணே காவல் காக்கக் கூடிய ஒரு சூழ்நிலை வரும்போது தான் இந்த நாடு விடியும்" என்று சொன்னார். வெண்தாடி வேந்தர் பகுத்தறிவுக் காவலன் பெரியார் சொன்னார், "பெண்கள் காவலராக்கப்பட வேண்டும்". அவர்கள் சொன்ன வழி, தாயே, பெண்ணைக் காவலராக்கி, நாங்கள் வீட்டை மட்டும் நடத்தவில்லை, இந்த நாட்டையும் நடத்துவோம், ஏன் பேருந்தையும் சேர்த்து நடத்துவோம் என்று ஓட்டுநராக, நடத்துனராக, காவலராக, பெண்களை ஆளுநராக, அரசியல் மேதைகளாக, விஞ்ஞானியாக, மெய்ஞ்ஞானியாக இன்று உயர்த்தியிருக்கிறீர்களே, பெண்கள் சமூகம் இன்று உயர்ந்திருக்கிறது. தலைநிமிர்ந்து நிற்கிறது தாயே. இதைத்தான் பெண் சமூகம் வேண்டிக் கொண்டிருக்கிறது. இதைதான் பெண் சமூகம் கேட்டுக் கொண்டிருக்கிறது.

பொறுக்காத அழுக்காற்றுச் சமூகத்தைப் புறந்தள்ளுவோம் திறம் கொள்ளுவோம்

இந்த உலகத்தமிழ்

> பெண்ணின் நிலை உயரும் போது ஆணின் நிலையும் உயரும். ஒவ்வொருவரின் நிலையும் உயரும் போது மனித சமுதாயத்தின் நிலையும் உயர்வடையும்.
>
> —அண்ணல் காந்தியடிகள்

மாநாட்டை, நீங்கள் சீரும் சிறப்புமாக நடத்தும்போது, பெண் சமூகமே உச்ச நிலைக்கு, இமயத்தின் உச்சிக்குப் போய் விட்டது. அது பொறுக்காத ஒரு சமூகம் இருக்கிறது. அது அழுக்காறு சமூகம். அந்த அழுக்காறு சமூகம் இந்த உலகத்தமிழ் மாநாடு நடக்காது, நடக்க முடியாது, நடக்க விட மாட்டோம் என்றது. ஒருவரைப் பற்றிப் பாராட்ட வேண்டும் என்றாலும் சரி அல்லது ஒருவரைப் பற்றி குறை சொல்ல வேண்டும் என்றாலும் சரி, அதற்கு நமக்கு தகுதி வேண்டும். ஆனால் தகுதியே இல்லாதவர்கள் எல்லாம், குறை சொல்லுகிறார்கள் என்று நினைக்கும்போது உண்மையிலேயே வேதனையாக இருக்கிறது, நாட்டுக்கு வேதனையாக இருக்கிறது, தமிழுக்கே வேதனையாக இருக்கிறது, இந்தத் தரணிக்கே வேதனையாக இருக்கிறது.

குறை சொல்வதற்கு முன்பு நீங்கள் உங்களுக்குள்ளாக சொந்தத் தலைவர் யார், வந்த தலைவர் யார், சேர்ந்த தலைவர் யார், போன தலைவர் யார்



> நாம் இலட்சியத்தை நோக்கி எவ்வளவு தூரம் போகிறோம் என்பது பின்பற்றும் வழிகளின் தூய்மையையே பொறுத்திருக்கிறது.

> அகிம்சை ஆராய்ச்சிகளைச் செய்யவும், தீரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ளவும் ஆணையிடப் பெண்ணே அதிகத் தகுதி வாய்ந்தவள்.

> அன்பே மனித வர்க்கத்தின் தருமம்; மிருக பலத்தைவிட அது பெரியது; உயர்வானது.

> நீயும் வாழ்; மற்றவர்களையும் வாழவிடு. ஏனெனில், சகிப்புத் தன்மையும் பொறுமையுமே வாழ்க்கையின் விதியாகும்.

என்பதை முடிவு செய்து விட்டு, அடுத்தவர்களைப் பற்றியெல்லாம் பேசலாம். பாராட்டுவதற்கும் உங்களுக்குத் தகுதி வேண்டும். புரட்சித்தலைவியைப் போல உங்களுக்கு அந்த அளவுக்கு பெருமனது கிடையாது. அவர் இன்று குன்றின் மேல் இட்ட விளக்காய் குவலயத்தின் மணி விளக்காய், மாதர் குல மங்கா விளக்காய், பெண்களின் பெரு விளக்காய், கன்னியர் போற்றக்கூடிய கற்பூர விளக்காய், துறவியரும் வாழ்த்தக் கூடிய தூய விளக்காய், வழி காட்டக் கூடிய ஒளி விளக்காய் மிளிர்ந்துக் கொண்டிருக்கிறார். அந்த அளவுக்கு அவர்களுக்குத் பெருந்தன்மை கிடையாது. ஆனால் தகுதி பார்த்து பேச வேண்டும். புரட்சித் தலைவி மாநாட்டை நடத்துவாரா என்று கேட்டார்கள். நடத்தி வி[illegible]ார். நிகழ்ச்சிகள் நடந்துக் கொண்டிருக்கிறது. பிரதம அமைச்சர் வருவார், பேசுவார், செல்வார். இறுதியில் புரட்சித் தலைவியே வெல்வார் என்பது தமிழக மக்களுடைய தீர்ப்பு. இதுதான் சமுதாயத்தினுடைய வெற்றி. பெண்சமூகம் உயர்கிறதே, பெண் சமூகம் நினைத்ததை நடத்திக் காட்டுகிறதே. இதுதான் புரட்சித் தலைவியினுடைய வளர்ச்சி.

புரட்சித் தலைவியினுடைய ஆட்சியிலேதான் பெண் சமூகத்தினுடைய அடிப்படையான கொடுமை, இந்த சிசுக் கொலை, தடுத்து நிறுத்தப்பட்டது. உலக மக்கள் இங்கு அணி திரண்டு வந்திருக்கிறீர்களே, மணி மணியாய். அமர்ந்திருக்கிறீர்களே, இந்த அன்பு தெய்வத்தை பாராட்ட வந்திருக்கிறீர்களே, நீலப்பூ குழலாக, குவளைப்பூ கண்களாக, எள்ளிற்பூ மூக்காக, சங்குப்பூ செவியாக, நீலாம்பூ வாயாக, கோவைப்பூ இதழாக, வெண்டைப்பூ விரலாக, குறிஞ்சிப்பூக் கரமாக, அனிச்சம்பூ நிறமாக, ஆம்பல்பூ அமைப்பாக இந்த அவனியை கவனிக்க பவனி வந்து கொண்டிருக்கிற, இந்த சரித்திரத்தின் பவித்ர தேவியாக விளங்கிக் கொண்டிருக்கிற, புரட்சித்தலைவியினுடைய சட்ட திட்டம் தான், அருமையான முறையிலே இன்று பெண் சமூகத்தை உயர்த்தியிருக்கிறது. இடைக்காலத்திலே தாழ்ந்திருந்தது. இன்று உயர்ந்திருக்கிறது. இமாலய வெற்றியை அடைந்திருக்கிறது".

இவ்வாறு திருமதி கவிநிலவு தர்மராஜ் அவர்கள் உரையாற்றினார்.

வர்மக் கலையும் வைத்தியமும்

ஆசிரியர் : சீதாராம் சுப்பிரமணியம்

வெளியீடு : கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்
92, கங்கையம்மன் கோயில் தெரு
வடபழனி
சென்னை - 600 026.

பக்கம்: 128 விலை: ரூ.18

உலக முழுவதும் தற்போது பிரபலமாகி இருக்கும் ஜப்பானியத் தற்காப்புக் கலைகளின் தோற்றமே தமிழகம்தான் என்கிறார்கள் ஆராய்ச்சியாளர்கள்.

வர்மக்கலையும் தமிழ்நாட்டில் தோன்றிய அரிய கலைகளில் சித்தர்களால் தோற்றுவிக்கப்பட்ட ஒன்று. இவ்வரிய கலையை விளக்குகிறது இந்நூல்.

வர்மக் கலைகள், அவற்றைப் பிரயோகிக்கும் முறைகள், விடுவிக்கும் முறைகள், மருத்துவத்தில் எப்படி அவை பயன்படுகின்றன என்பதை எளிதில் புரிந்து கொள்ளக்கூடிய வகையில் படங்களோடு விளக்கப்பட்டிருக்கிறது.

—குமார்

எல்லா நோய்களுக்கும் தமிழ் வைத்தியம்

ஆசிரியர்: தூரியநாத்

வெளியீடு: கார்த்திகா பப்ளிகேஷன்ஸ்,
வடபழனி,
சென்னை - 600 026.

பக்கம்: 128 விலை: 18

'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்' என்பது முன்னோர் வாக்கு. நோயுறும்போது நம் உடல் மட்டுமின்றி உள்ளமும் பாதிக்கப்படுகிறது என்பது மறுக்க முடியாத உண்மை. இந்நிலையை முற்றிலும் தவிர்க்க, இந்நூலில் நம் உடலின் ஒவ்வொரு உறுப்பையும் குறிப்பிட்டு, அதன் அமைப்பு, அவற்றைத் தாக்கும் நோய்கள், நோய்த் தடுப்பு முறைகள், தேவையான மருந்துகள் தயாரிக்கும் முறை, உபயோகிக்க வேண்டிய அளவுகள் என அனைத்து விவரங்களையும் தெள்ளத் தெளிவாகக் குறிப்பிடப் பட்டிருப்பது சிறப்பம்சமாகும்.

—கு. மல்லிகா

பல்வேறு பிளாஸ்டிக் பொருட்களைத் தயாரிப்பது எப்படி?

ஆசிரியர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு

வெளியீடு: மணிமேகலைப்பிரசுரம்,
தபெ. எண் 1447
4, தணிகாசலம் சாலை
தியாகராய நகர்
சென்னை 600 0177

பக்கம்:120 விலை ரூ.16.50

பிளாஸ்டிக் பொருட்கள் எப்படித் தயாரிப்பது அதற்கு என்னென்ன தேவை, இத்தொழிலுக்குத் தேவையான பொருட்கள் எங்கே கிடைக்கின்றன. அரசு செய்யும் உதவிகளிலிருந்து, உத்தேச வரவு செலவுத் திட்டங்கள் வரை விரிவாக விளக்கும் நூல். இத் தொழிலுக்குச் சிறந்த வழிகாட்டி!

கணபதியம்

ஆசிரியர்: கோ. கோமகன்

வெளியீடு: வெண்தாமரை வெளியீடு
78/2, மந்தைவெளித் தெரு, மந்தைவெளி,
சென்னை 600 028

விலை: ரூ.10.00 பக்கம்: 99

நூலின் பெயர் கணபதியம் என்றிருந்தாலும், முதலில் குண்டலினி இயக்கம் பற்றி விவரித்து (விளக்கப் படங்களுடன்), விநாயகத் தத்துவம், விநாயக சதுர்த்தி, விநாயக வழிபாடு பற்றியெல்லாம் ஓர் ஆய்வே நடத்தியிருக்கிறார் ஆசிரியர்.

தமிழ்நாட்டில் இலவசச் சட்ட உதவிகளைப் பெறுவது எப்படி?

ஆசிரியர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு

வெளியீடு: மணிமேகலைப் பிரசுரம்
4, தணிகாசலம் சாலை,
சென்னை 17.

விலை: ரூ.17 பக்கம்: 123

உழைக்கும்போது உயிருக்கு ஆபத்து ஏற்பட்டால் எந்தச் சட்டத்தின்கீழ் அதன் இழப்பீட்டைப் பெறுவது, சட்ட வகைகள், தமிழ்நாடு மாநிலச் சட்ட உதவி மற்றும் ஆலோசனை வாரியமும், அதன் பணிகளும் மேல் முறையீடுகள், சட்ட உதவித் திட்டம், வழக்குரைஞர்களின் ஊதியம், நிவாரணத் தொகை, சிறைக் கைதிகளுக்கும் சட்ட உதவி என்று பாமரரும் சட்டங்களை எளிதாகப் புரிந்து கொள்ளும் வகையில், நூல் அமைந்துள்ளது.

—குமாரசாமி

சின்ன சின்ன சிட்டுகள் சிங்காரப் பாட்டுகள்

ஆசிரியர்: கவிஞர் சங்கை வேலவன்

வெளியீடு: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிட்.,
41பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.
சென்னை-600 098

விலை: ரூ.9 பக்கம்: 88

சிறுவர்களின் அறிவாற்றலை வெளிக் கொணர உதவும் வண்ணம் வெளியிடப்படும் நூல்களின் வரிசையில் இக் கவிதைத் தொகுப்புக்கும் முக்கிய இடமுண்டு. எளிய நடையில் தொகுக்கப்பட்டுள்ள இந்நூலில், இயற்கைப் பூக்கள், உறவுப் பூக்கள், மழலைப் பூக்கள், விளையாட்டுப் பூக்கள், அறிவுப் பூக்கள், நீதிப் பூக்கள், பொதுப் பூக்கள் எனப் பல வகையான நறுமண வண்ணப் பூக்களை, இனிய தமிழ் எனும் நார் கொண்டு மாலையாக்கி, சிறுவர்களின் உள்ளங்களில் மணம் கமழும் வண்ணம் படைத்துள்ளார் ஆசிரியர்.

—அ. மதிமாறன்

தியாக மலர்கள்

ஆசிரியர்: கவியழகன், எம்.ஏ.,

வெளியீடு: சூடாமணி பிரசுரம்,
36-4/7, கோவிந்தன் சாலை,
(முதல்தளம்),
மேற்கு மாம்பலம்,
சென்னை 600 033

விலை: ரூ.15 பக்கம்: 92

நமது தமிழ் நீதி நூல்களில் எடுத்துரைக்கப்பட்டுள்ள எக்காலத்திற்கும் பொருத்தமான நீதிக் கருத்துக்களுடன், இக்காலச் சூழ்நிலைக்கும் ஏற்றவாறு எழுதப்பட்டுள்ள சிறுகதைத் தொகுப்பு இது. எழுத்தறிவு, இயக்கப்பணி, இரத்ததானம், பணிவுடைமை, தேசப்பற்று, நீதிக் கருத்துக்கள் போன்றவற்றை விளக்கும் கதைகள் இந்நூலில் இடம் பெற்று உள்ளன. ஒவ்வொரு கதையும் நீதி போதிக்கின்றன. இளைய தலைமுறையினர் அனைவரும் படித்துப் பயன்பெற வேண்டும்.

விடுதலை வீராங்கனை ருக்மிணி லட்சுமிபதி

ஆசிரியர்: ரகமி

வெளியீடு:
ஸ்ரீமதி ருக்மிணி லட்சுமிபதி நூற்றாண்டு விழாக் கமிட்டி,
27, இரண்டாவது பிரதான சாலை, சி.ஐ.டி. காலனி,
சென்னை 600 004.

பக்கம்: 223 விலை: ரூ.70

விடுதலை வேள்வியில் தம்மை அர்ப்பணித்துக் கொண்ட தியாகத் தீபங்கள் பலர். அவர்களுள் ருக்மிணி லட்சுமிபதிக்கும் முக்கிய இடமுண்டு. இளம் வயதிலேயே பொதுவாழ்வில் ஈடுபட்டுச் செயலாற்றியவர். சைமன் கமிஷன் குழு பகிஷ்கரிப்புப் போராட்டம், வேதாரண்யம் உப்புச் சத்யாக்கிரகம், ஒத்துழையாமை இயக்கம், தனி நபர் சத்யாக்கிரகம் இப்படிப் பல போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர் இவர். முதல் பெண் துணை சபாநாயகர், முதல் பெண் அமைச்சர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. அன்னாருடைய வாழ்க்கை வரலாற்றைத் துல்லியமாக ஆராய்ந்து, அரிய புகைப் படங்களுடன் திரட்டித் தந்திருக்கிறார் நூலாசிரியர் ரகமி. குறிப்பாக, இளைய பாரதம் இந்நூலைப் படித்துப் பயன்பெற வேண்டும்.

—பி.வி. கிரி

மண்ணுக்குள் அறிவியல்

ஆசிரியர்: தமிழ்மணி

வெளியீடு: மோகன் புத்தக நிலையம்,
4, வள்ளலார் தெரு,
பத்மநாப நகர்,
சூளைமேடு.
சென்னை - 600 094.

பக்கம்: 112 விலை: 14

மண்ணின் தோற்றம், எரிமலைகளும் அதன் விளைவுகளும், நில அதிர்ச்சி, மண்ணுக்குள் கனிவளம், நிலத்தடி நீர், வேளாண் துறையில் மண், நில எண்ணெயும் நில வாயும், மணிக் கற்களும் - குறை மணிக் கற்களும் ஆகிய 8 தலைப்புகளின் கீழான கட்டுரைகளின் தொகுப்பு நூல் இது.

மண்ணில் கலந்துள்ள அல்லது மண்ணில் புதைந்துள்ள அறிவியல் உண்மைகள் ஒவ்வொரு கட்டுரையிலும் உருப்படியாக விளக்கப்பட்டிருக்கின்றன. அறிவியல் தமிழ் வளர இவ்வகை நூல்கள் பெரிதும் வரவேற்கப்படலாம்.

கடினமான அறிவியல் செய்திகள் எளிமையான தமிழில் விளக்கப்பட்டுள்ளன. படித்துப் பயன்பெறலாம்.

—சோழராஜா

★ புத்தகங்கள் சிந்தனைக்குப் போதை தரும் புனிதப் பொருள்கள்.

—ராபர்ட்

★ புத்தகங்கள் அற்ற வீடு, உயிரற்ற உடல்.

—சிசேரோ

'பத்துப்பாட்டு' காட்டுகிற வீர இலக்கணம்

புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரம்!

முனைவர். சிற்பி. பாலசுப்பிரமணியம்

1995-ஆம் ஆண்டு ஜனவரித் திங்களில் தஞ்சைத் தரணியில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், 'பண்டைய இலக்கியம்' பற்றி நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்று, முனைவர். சிற்பி பாலசுப்பிர மணியம் அவர்கள் 'பத்துப் பாட்டில் வீரம்' என்னும் தலைப்பில் ஆற்றிய உரை.

வீரம் தமிழ்நாட்டினுடைய ஒப்பற்ற விளைபொருள். மேற்கு மலையிலே தேக்கும், கிழக்குக் கடலிலே முத்தும் விளைவது போலத் தமிழ்நாட்டு மண்ணிலே விளைந்த ஒப்பற்ற பொருள் வீரம். இந்த வீரத்தை

"சதையைத் துண்டு துண்டு ஆக்கினும்
உன் எண்ணம் சாயுமோ"

என்று கேட்ட பாரதியுடைய பாடலில் பார்த்திருக்கிறோம்.

"வெங்கொடுமைச் சாக்காட்டில்
விளையாடும் தோள்
எங்கள் வெற்றித் தோள்கள்"

என்று பாடிய பாரதிதாசனுடைய கவிதையிலே ஒலிக்கக் கேட்டு இருக்கிறோம்.

"பொருதடக்கை வாள் எங்கே?
மார்பு எங்கே?

"போர்முகத்தே எவர் வரினும்,
புறங்கொடாத

"பருவயிரத் தோள் எங்கே?
எங்கே? என்று

"பைரவியைக் கேட்பாளைக்
காண்மின்! காண்மின்!

என்று ஒலித்த கலிங்கத்துப் பரணியிலே கேட்டு இருக்கிறோம்.

"பட்டாங்கில் யானுமோர் பத்தியே
யாமாகில்,

"ஒட்டேன் அரசோடு ஒழிப்பேன்
மதுரையையும்!"

என்று முழங்கிய கண்ணகியின் சிலம்பின் ஒலியிலே இந்தக் குரலை நாம் கேட்டு இருக்கிறோம்.

"மன்னர் அழைத்து வரப் பணித்து இருக்கிறார்; இல்லை என்றால் இழுத்துவரக் கட்டளையிட்டு இருக்கிறார்" என்று சொன்ன நேரத்திலே,

"நாமார்க்கும் குடியல்லோம்
நமனை அஞ்சோம்"

என்று பேசிய மகத்தான வீரத்தைத் திருநாவுக்கரசருடைய தமிழில் சந்தித்து இருக்கிறோம்.

இத்தனை வீரத்திற்கும் அடிப்படையாக அமைந்தது- நம்முடைய சங்க காலச் சான்றோர் பெருமக்கள் எழுத்துக்கு எழுத்து மெருகேற்றி நம்முடைய நெஞ்சிலே அமர்த்தியிருக்கின்ற வீரம்தான் இத்தனைப் பண்பாட்டை நமக்கு

ஏற்படுத்தித் தந்திருக்கிறது என்று பார்க்கிறோம்.

தனித் தன்மை மிக்க வீரம்

அப்படிப் பேசுகிற நேரத்திலே கூட புறநானூற்றிலே வீரம், பதிற்றுப் பற்றிலே வீரம் என்று சொல்லியிருந்தால் அது மிகப் பொருத்தமாக இருந்திருக்கக்கூடும். ஆனால் எனக்கு 'பத்துப் பாட்டிலே வீரம்' என்ற தலைப்பைத் தந்திருக்கிறார்கள்.

ஏன் என்று நாம் சிந்தித்துப் பார்த்தேன். அப்போதுதான் விளங்கிற்று, பத்துப்பாட்டில் அமைந்திருக்கின்ற வீரத்தின் கூறுகள் தனித்தன்மை வாய்ந்தவை என்று நான் உணர்ந்து கொண்டேன்.

திருமுருகனின் தீரம்

பத்துப்பாட்டிலே முத்துப் பாட்டான முதல் பாட்டாக அமைந்திருப்பது திருமுருகாற்றுப்படை. நக்கீரருடைய திருமுருகாற்றுப்படை. அந்தத் திருமுருகாற்றுப்படையிலே முருகனுடைய வீரம், அசுரர்களை அழித்த வீரம் மேலோங்கி நிற்பதைப் பார்க்கிறோம். திருமுருகாற்றுப்படை பேசும் 'வீரவேல், தாரை வேல், விண்ணோர் சிறைமீட்ட தீரவேல், செவ்வேல், திருக்கை வேல், வாரிகுளித்த வேல், சூர்மார்பும் குன்றும் துளைத்த வேல் உண்டே துணை" என்று பேசுகின்ற வீரமிகு மாட்சியை நாம் திருமுருகாற்றுப்படையிலே பார்த்திருக்கிறோம்.

முருகனுடைய திருக்கரம் 'செருநர் தேய்த் செல்லுதல் தடக்கை' என்று பகைவர்களைத்

தலைமையின் கடமை

★ உலகம் விழித்திருக்கும் சமயம் தலைமை தூங்கினால் கேடில்லை. உலகம் தூங்கும்போது கண்டிப்பாகத் தலைமை விழித்திருக்க வேண்டும்.

–யார்க்

தேய்த்து அழித்த மாட்சியைத் திருமுருகாற்றுப்படையிலே பார்த்து இருக்கிறோம்.

பொருநர்ஆற்றுப்படையிலே கரிகால் வளவனுடைய வீரத்தைப் பேசுகிறபோது அவன், "உருவப்பஃறேர் இளஞ்சேட் சென்னியினுடைய சிறுவன். முருகனைப் போன்ற சீற்றம் உடையவன்" என்ற கருத்திலே 'முருகன் சீற்றத்து உருகெழு குருசில்' என்று பேசப்பட்டிருப்பதைப் பார்க்கிறோம்.

எழுவர் கொண்ட ஈகைச் செம்முகத்தை தாங்கிய ஒருவன்

அதேபோலச் சிறுபாணாற்றுப் படையிலே ஒய்மாநாட்டு நல்லியக்கோடன் என்பவனைப் பாடுகின்ற புலவர் பேசுகின்றபோது, ஏழு வள்ளல்களையும் வரிசைப்படுத்திச் சொல்லி பேகனை, பாரியை, காரியை, ஆய் அண்டிரனை, அதியமானை, நல்லியை, ஓரியை, இந்த எழுவரையும் சிறப்பித்துப் பேசி, அந்த எழுவர் பூண்ட ஈகை செம்முகத்தை ஒரு முகமாகத் தாங்கி நின்ற பெருமைக்குரியவன் ஒய்மாநாட்டு நல்லியக் கோடன் என்று சிறுபாணாற்றுப் படையில் வீரத்தோடு ஈரத்தையும் கலந்து பேசுகின்ற மாட்சிமையை நாம் பத்துப்பாட்டிலே பார்க்கின்றோம்.

பெரும்பாணாற்றுப்படையிலே அதுபோலவே, தொண்டமான் இளந்திரையனைக் கடியலூர் உருத்திரங்கண்ணனார் பாடுகின்ற நேரத்தில், அவனுடைய ஒப்பற்ற வீரம் எவ்வாறு விளங்குகின்றது என்று சொல்லுகின்ற நேரத்தில், அவனை 'மறவர் மறவன்' என்று சிறப்பித்துப் பேசுகின்ற அழகைப் பார்க்கிறோம்.

அதுபோலவே மதுரைக் காஞ்சியிலே, நெடுநெல்வாடையிலே என்று வரிசையாக வரக் கூடிய ஒவ்வொரு நூலிலேயும், நாம் வீரத்தினுடைய மாட்சியைப் பார்க்கின்றோம்.

வான்வீழ்த்தி, வளி மாற்றும் கரிகாலனின் வீரம்

எல்லாவற்றுக்கும் மேலாக மிகச் சிறப்பான முறையில், பட்டினப்பாலையில், காவிரிப் பூம்பட்டினத்தில் தலைவனாகிய கரிகாலன் எப்பேர்ப்பட்ட வீரக் குணம் உடையவன் என்று பேசுகின்றபோது, புலிக்குட்டி கூட்டிலே வளர்ந்ததைப்போல இளமைப்பிராயத்திலே சிறைப் பட்டிருந்த சிறந்த வீரனாகிய கரிகால் வளவன், தான் முன்னெழுந்து இளமைக் காலத்தில் போர் தொடுக்க முற்பட்ட நேரத்தில் மலையை நான் தோண்டி எறிவேன், கடலைத் தூர்த்துவிடுவேன், வானத்தை வீழ்த்துவேன், காற்றைத் திசைமாற்றுவேன்' என்று சொல்லுகிற வீரம் உடையவனாகக் கரிகால்

வளவன் இருந்த செய்தியை 'மலை அகழ்குவனே, கடல் தூர்க்குவனே, வான் வீழ்த்துவனே, வளி மாற்றுவனே' என்று தான் நினைத்தபடி உலகத்திலே செயல்படக்கூடியவன் கரிகால் வளவன் என்று சொல்லிய நேர்த்தியைப் பார்க்கிறோம்.

விலங்குகளின் வீரம்

'மலைபடுகடாம்' என்ற கூத்தர் ஆற்றுப்படையிலே மனிதனுடைய வீரத்தைக் காட்டிலும் விலங்குகளுடைய வீரம்கூட ஒப்பற்றதாக விளங்கியது என்பதைக் காட்டுகின்ற வகையிலே, மலைகளின் ஓரத்தில் காணப்படுகின்ற பல்வேறு மாட்சிமை மிகுந்த காட்சிகளை வர்ணித்துக் கொண்டு போகின்றபோது, இரு நிலங்களைச் சேர்ந்த விலங்குகள் போரிடுகின்ற காட்சியைப் புலவர் சொல்லுவார். குறிஞ்சி நிலத்திலே இருக்கக்கூடிய எருதும், முல்லை நிலத்திலே இருக்கக்கூடிய ஆண் மானும் மோதிக்கொள்கின்றன. அந்த இரண்டு விலங்குகள் போரிடுகின்ற ஆற்றலை அவர் எடுத்துப் பேசுவார்.

வீரத்தின் உச்சி

இவ்வாறெல்லாம் பத்துப் பாட்டினுடைய ஒவ்வொரு வரியிலேயும் வீரம் பளிச்சிடுகின்ற காட்சியை நாம் பார்க்கின்றோம். அப்படியானால் இந்த பத்துப்பாட்டு நூலிலே காணப்படுகின்ற வீரத்தினுடைய உச்சி எது என்று கேட்டீர்களானால், வீரத்தினுடைய உச்சியாகப் பேசப்படுகின்ற சிறப்பை மிக அருமையாக மதுரைக் காஞ்சியிலே புலப்படுத்திக் காட்டியிருக்கின்றார், மிகச் சிறப்பான முறையிலே மாங்குடி மருதனார்.

எழுவரை வென்ற செழுதகை மாட்சி

தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் என்ற அந்த மகத்தான போர் வீரனைப்பற்றி வர்ணிக்கக்கூடிய மதுரைக்காஞ்சியில், மாங்குடி மருதனார் அவன் பெற்ற வெற்றிகளை எல்லாம் சொல்லி, சேரனை, சோழனை, திதியனை, எழினியை, எருமையூரனை, இருங்கோவேள்மாணை, பொருனனை என்று இந்த எழுவரையும் வென்ற மாட்சிமையை எல்லாம் சொல்லுகிறார். அவனுடைய சிறப்புகளை எல்லாம் அடுக்கி அடுக்கிச் சொல்லிவிட்டு, கடைசியிலே அந்தப் புலவர் சொல்வார்:

"அன்னாய் நின்னொடு முன்னிலை

எவனோ, பொன்னொன்று
கிளக்குவன் அடுபோர் அண்ணல்

கேட்டிசின் வாழி கெடுகநின்
அவலம்"

என்று பேசுகின்ற அந்த மூன்று வரியிலே, எத்தனை வெற்றிகளை நீ பெற்றாலும், எத்தனை வாள் முனையிலே ரத்தத் துளிகளை நீ சிந்தியிருந்தபோதிலும்கூட அவை எல்லாம் உனது ஆற்றலுக்குப் பெருமை சேர்ப்பன அல்ல; 'ஐம்பொறிகள் நுகர்வனவாய் முன்னிற்பன, உன்னோடு என்ன உறவுண்டு' என்று கேட்கின்றபோது, உலகத்தினுடைய பொருட்களினுடைய தன்மைகளிலே நிலையாமை எப்படி மிகவும் மேம்பட்டிருக்கிறது என்பதைக் காஞ்சித் திணையிலே எடுத்துச் சொல்லி, அந்த நிலையிலே வீரம் ஓர் எல்லையை அடைகிறது என்று சுட்டிக்காட்டுகின்ற சிறப்பைப் பார்க்கின்றோம்.

உண்மையான வெற்றி

அதனுடைய அடையாளமாகத்தான் பத்துப்பாட்டிலே திருமுருகாற்றுப்படை முதலாவதாக வைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருத்தையே எத்தனை வெற்றிகள் பெற்றாலும், எத்தனை மேலோங்கிய போர்க்களங்களைக் கண்டாலும் உண்மை வெற்றி என்பது மனதை வெற்றி கொள்வதுதான் என்று குறிப்பிட்டு ஔவையார் பேசினார். 'ஒன்றாகக் காண்பதே காட்சி, புலன் ஐந்தும் வென்றான் தன் வீரமே வீரம்' என்று.

முருகப் பெருமானைக் காண முன்செல்லும் பேறு பெற்றார்

எவன் ஐம்புலன்களையும் வெல்லுகிறானோ, அவனே வீரத்தில் சிறந்தவன் என்று பேசுகிறார். அப்படி மனத்தை அடக்கி ஆண்டு வெல்லுகிற வீரம் இருக்கிறதே, அதனுடைய மாட்சிமையைச் சொல்லுகின்ற காரணத்தால்தான் திருமுருகாற்றுப்படையிலே முதன்மையான ஒரு கருத்தை வைத்தார்.

அறுபடை வீடுகளுடைய அழகுகளைச்சொல்லிக்கொண்டு வருகின்ற நேரத்தில் அந்த அறுபடை வீடுகளில் ஒன்றாக இன்று நாம் 'பழனி' என்று சொல்லுகின்ற திருவாவினன் குடியை வர்ணிப்பார். அந்தத் திருவாவினன்குடி என்ற திருத்தளத்தில் காணுகின்ற ஒரு சிறப்பான காட்சி என்னவென்றால், முருகப்பெருமானைக் காண்பதற்காகப் பலரும் வருகிறார்கள். யார் யார் வருகிறார்கள் என்றால் கருடக் கொடியை உயர்த்திய திருமால் வருகின்றார்; வெள்ளேற்றுக் கொடியை உயர்த்தியிருக்கிற சிவபெருமான் வருகின்றார்; ஆயிரம் கண்ணாகிய இந்திரன்; வருகின்றான்; தேவாதி தேவர்கள் எல்லாம் வருகிறார்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள் வருகிறார்கள்; தேவர்கள், அசுரர்கள், தைத்தியர்கள் என்று சொல்லப்படுகின்ற பதினெட்டுக் கணங்கள் வருகிறார்கள். ஆனால் அவர்களுக்கெல்லாம் முன்னால் போகின்ற உரிமை யாருக்குத் தரப்பட்டிருக்கிறது என்று சொன்னால், மர உரியையே உடுத்தி இருக்கக்கூடியவர்களாக, வலம்புரிச் சங்குபோல் தலை நரைத்திருப்பவர்களாக, மாசற இமைக்கும் பேரொளி உருவினராக, எலும்பு தோலாக, பசித்துப் பசித்து எப்போதாவது உணவைப் புசிக்கின்ற காரணத்தினால் எலும்பும் தோலுமாக இருக்கின்ற மேனியர்களாக, பகையையும், கோபத்தையும் நீக்கிய மனத்தினர்களாக, கற்றவர்களும் அறியமுடியாத எல்லையை உடைய பேரறிவு படைத்தவர்களாக, கற்றோர்க்குத் தாம்வரம்பாகிய தலைமையர்களாக, கடும் சினம் நீக்கியவர்களாக, இடும்பையாவதும் அறியா இயல்பினராக விளங்கக்கூடிய, மனத்தை வென்ற சான்றோர்கள் இருக்கிறார்களே!... அவர்கள்தான் இத்தனைத் தெய்வங்களுக்கும் முன்னால் திருவாவினன் குடியிலே முதன்மையாகப் போகின்ற பேறு பெற்றவர்கள் என்று திருமுருகாற்றுப்படையிலே, நக்கீரர் எடுத்துச் சொல்லுகிறார்!.

பத்துப்பாட்டின் வீரம் பண்பாட்டின் வீரம்

எனவே, எல்லா வெற்றிகளையும் விட பெரிய வெற்றி, எல்லா வீரத்தையும்விட பெரிய வீரம் என்பது 'ஒன்றாகக் காண்பதே காட்சி, புலன் ஐந்தும் வென்றான்தன் வீரமே வீரம்' என்ற அந்த உயர்ந்த கருத்தைத் திருமுருகாற்றுப்படை என்ற அந்த மாணிக்கத்திலே முதன்மையாகப் பதித்து வைத்திருக்கக் கூடிய சீர்மையைப் பத்துப் பாட்டு நமக்கு வழங்குகிறது. அதுதான் பத்துப்பாட்டு நமக்கு எடுத்துச் சொல்லியிருக்கின்ற வீரம், நம்முடைய பண்பாட்டை வளர்க்கக்கூடிய வீரம், மேன்மையான வீரம்! ●

தோல்வியின் தோல்வி!

★ இளமை பருவத்தின் அகராதியில் தோல்வி என்ற சொல்லுக்கு இடமே கிடையாது.

—லிட்டன்

எயிட்ஸ் ஓர் எச்சரிக்கை!

—கவிஞர் மயிலை முத்தெழிலன்

நித்தமொரு நோய்வந்தே நாட்டை வாட்டும்
நிலத்திலுள மருத்துவர்க்கே ஆட்டங் காட்டும்!
இத்தரையில் அறிஞரிதை ஓட்டு தற்கே
இரவுபகல் ஆய்ந்தாய்ந்தே மருந்தைக் காண்பர்!
எத்தனையோ நோய்களைநாம் கண்டே யுள்ளோம்
ஏற்றதொரு மருந்தளித்தே ஓட்டி யுள்ளோம்!
சுத்துகடல் சூழ்நாட்டைக் கலங்கச் செய்யும்
காமநோயாம் எயிட்சிற்கு மருந்தே இல்லை!

பிறநோய்கள் காற்றாலும் நீரினாலும்
பலபேரைப் பீடிக்கும் ஆட்டி வைக்கும்!
முறைகேடாய் உறவாடும் மனிதர் தம்மை
மடியவைக்கும் கொடுநோயே எயிட்சு நோயாம்!
உறவுகொளும் முறையினிலே ஒழுங்கிருந்தால்
ஒருவரையும் எயிட்ஸ்அணுகப் போவதில்லை
உறவின்றி நோய்க்குருதி ஏற்ப தாலே
உடன்பற்றும் இந்நோய்தாம் உணரு வீரே!

மானுடம் பாடும் வானம்பாடி!

டாக்டர் ச.சு. இளங்கோ
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,
சென்னை.

அந்தாதி பார்த்து அந்தாதி, கலம்பகம் பார்த்துக் கலம்பகம், பிள்ளைத்தமிழ் பார்த்துப் பிள்ளைத்தமிழ், பரணி பார்த்துப் பரணி பாடிய புலவர்கள் மத்தியில் ஒரு புதிய திருப்பமாகப் பாரதி தோன்றினார். தேசியம் என்ற ஒரு வட்டத்திற்குள் நின்றுவிடாமல், சமுதாயக் கொடுமைகளைக் கண்டு கொதித்துப் பாடினார்.

துப்பாக்கி வயிற்றில் பீரங்கிக்குண்டு தோன்றியது போலப் பாரதிக்குப் பிறகு பாரதிதாசன் சாதி மத பேதமற்ற ஒரு சமுதாயத்தை வடிவமைக்கக் கவிதையில் வழி காட்டினார். இன உணர்வுக்கும், மொழி உணர்வுக்கும் பாட்டுப் பாதையில் புத்துணர்ச்சி ஊட்டினார்.

அவருடைய மாணவர்களில் ஒருவராகக் கவிதை உலகில் தோன்றியவர் 'அக்கினிக்குஞ்சு' பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரனார். பாவேந்தரின் உதவியாளராகப் பணியாற்றிய பட்டுக்கோட்டையார், அவருடைய தலைமையிலேயே திருமணம் செய்து கொண்டார். இன்று பலர் எழுதத் தொடங்குமுன் பிள்ளையார் சுழி போட்டு எழுதுவது போல் அல்லாமல் பட்டுக்கோட்டையார் பாடல் எழுதும் முன் "பாரதிதாசன் வாழ்க" என்று எழுதிவிட்டுத் தொடங்குவதை வழக்கமாகக் கொண்டிருந்தார். அந்த அளவிற்குப் பாவேந்தரின் மீது பற்றுக் கொண்டவர் பட்டுக்கோட்டையார்.

திரைப்படங்களில் இடம் பெற்ற பக்திப் பாடல்களுக்கு ஒரு புதுவடிவம் தந்தவர் பாபநாசம் சிவன். சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களைத் திரைஇசைப் பாடல்களில் எடுத்துரைப்பதில் முன்னணிக் கவிஞராகத் திகழ்ந்தவர் உடுமலை நாராயணகவி. அவருக்குப் பின்னர் பட்டுக்கோட்டையார் தேரோடும் வீதியில் மன்னவன் வருவான் எனக் காத்திருந்த காலத்திற்கு ஒரு முடிவு கட்டிவிட்டுப் பொதுஉடைமைக் கோட்பாடுகளை ஏழை, எளிய மக்கள் புரிந்து கொள்ளும் வகையில் திரைப்படப் பாடல்கள் வாயிலாக வழங்கினார். தமிழ்த் திரைப்படப் பாடல்கள் வரலாற்றில் பட்டுக்கோட்டையின் இடம் தனித் தன்மை வாய்ந்த சிறப்புக்குரியது.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் - நினைவு நாள்: அக்டோபர் - 8

"இவருடைய பாடல்கள் இசைப் பாடல்களாகவே வெளி வந்துள்ளன. அதிலும், பெரும்பாலும் கிராமியப் பண்பையும், பண்ணையும் தழுவி வெளி வந்துள்ளன. உருவங்களைக் காட்டாமல் உணர்ச்சிகளைக் காட்டுகிறார். கிராமத்துச் சாதாரண மனிதனின் மொழியில் பேசுகிறார். பாடல்கள் எளிய நடையில் இருந்தாலும், கருத்தாலும் அவை ஆழமாக இருக்கின்றன. இருக்கும் குறைகளைச் சுட்டிக் காட்டுகிறார். பொதுவாகக் கவிதைகள் சிந்தைக்கினியனவாக, வாழ்வுக்கு வளமூட்டுவனவாக இருக்கின்றன" என்று தவதிரு குன்றக்குடி அடிகளார் பட்டுக்கோட்டையாரின் பாட்டுச் சிறப்பைச் சுட்டிக் காட்டுவது இவண் குறிப்பிடத்தக்கது.

"தேனாறு பாயுது செங்கதிர் சாயுது
ஆனாலும் மக்கள் வயிறு காயுது
மானே இந்த நாட்டில் வகையான
மாறுதல்
வந்தாலன்றி ஏது நீதிகள்?"
(படித்தபெண் - படம்)

என்று பாடுபடும் பாட்டாளி மக்கள் தங்கள் நிலையைப் பற்றிச் சிந்திக்கவும், அந்த நிலையை மாற்றிச் செயல்படத் தூண்டும் வகையிலும் பாடியது அவருக்கே உரிய சிறப்பாகும். அறிவுடைய மக்களாக வாழ வேண்டும் எனில், மூட நம்பிக்கைகளை அகற்ற வேண்டும்; தன்னம்பிக்கையுடனும், தன்மான உணர்ச்சியுடனும், வாழ வேண்டும் என்பதைத் தனக்கே உரிய பாங்கில்,

வேப்ப மர உச்சியில் நின்னு
பேயொன்னு ஆடுதுன்னு
விளையாடப் போகும்போது
சொல்லி வைப்பாங்க - உன்
வீரத்தைக் கொழுந்திலேயே
கிள்ளி வைப்பாங்க

என ஒரு சிறு குழந்தையும் புரிந்து கொள்ளும் வகையில் பாடலை இயற்றியுள்ளார்.

மாறுகின்ற காலத்திற்கேற்ப, மொழி உட்பட பல துறைகளில் ஒரு புதிய மாறுதலைக் கொண்டு வர முயலவேண்டும் என்பதைத்

"தூங்காது! கண் தூங்காது
இருள் சூழும் உலகில்
பொது வாழ்வு தோன்றும் வரை
தூங்காது கண் தூங்காது"
(கற்புக்கரசி 1957)

என்று வெகு எளிமையாகவும், கருத்து மக்கள் மனதில் பதியும் வகையிலும் பாடியவர். எல்லாம் தலைவிதி என்று துன்பத்தைச் சகித்துக் கொள்ளுகின்ற மனப்போக்கை மாற்றி விதியை மதியால் வெல்ல வேண்டும் என்ற கருத்துடன்,

"தனியுடைமைக் கொடுமைகள்
தீரத் தொண்டு செய்யடா"

என்று பாடலில் எடுத்துரைத்தார்.

வேட்டுச் சத்தம் கேட்டும் விழிக்காத தமிழ் மக்களைப் பாட்டுச் சத்தத்தால் விழிக்கச் செய்யும் பாங்குடன்,

'நல்ல பொழுதையெல்லாம்
தூங்கிக்கெடுத்தவர்கள்
நாட்டைக் கெடுத்ததுடன்
தானுங்கெட்டார். சிலர்
அல்லும் பகலும்
தெருக் கல்லாயிருந்துவிட்டு
அதிர்ஷ்டமில்லையென்று
அலட்டிக்கொண்டார்"

என்று தமிழ் மண்ணில் வாழும் மக்கள் விதியை நம்பித் தெருக் கற்களைப்போல் இருந்து விடக் கூடாது என்று எச்சரித்து விட்டுப் போயிருக்கிறார்.

செல்வந்தர் - ஏழை; ஆண் - பெண் - மேல்சாதி; கீழ்சாதி ஆண்டான் - அடிமை; படித்தவர் - படிக்காதவர் என்று பல மேடுபள்ளங்களைக் கொண்ட இச் சமுதாயத்திற்குத் தனது பாடல்கள் வாயிலாக நல்ல கருத்துக்களை எடுத்துக் கூறியவர். இக் கோட்பாட்டில் இறுதி மூச்சு வரை இடையறாது பணியாற்றியவர் பட்டுக்கோட்டையார். இலட்சங்களுக்கு விலை போகாமல் இலட்சியக் கவிஞராக அவர் வாழ்ந்து காட்டியதால் தான், 'மக்கள் கவிஞர்' என்று சிறப்புப் பெயர் பெற்றார். "மாட மாளிகைகளில் வாழும் சுதந்திரமே! நீ எப்போது ஏழைக் குடிசைக்கு வருவாய்? அப்போதுதான் சுதந்திரம் என்ற உன்பெயர் பொருந்தும்" என மேலைநாட்டுக் கவிஞர் பாடியுள்ளதைப் போல் சுதந்திரம் என்பது ஏழை குடிசைக்கும் வர வேண்டும் என்று பட்டுக்கோட்டையார் விரும்பினார்.

'நாட்டு நிலைமையை நல்லாப்
பாத்து
ஏற்றத் தாழ்வை ஒழிக்க வரப்பில்
போட்டது துளையைப் புரட்சி
நண்டு'

எனப் புரட்சிக் குரலெடுத்துக் கொடுத்திருக்கிறார்.

★ விவேகம் மனிதனை அடிமைத் தனத்திலிருந்து விடுதலை செய்கிறது.
- எமர்சன்

இன்றைய மனித சமூக அமைப்பில் போட்டிகளும் பொறாமைகளும் மலிந்து காணப்படுகின்றன. மேலும் செல்வந்தர்கள் எல்லாவற்றையும் தங்கள் உடைமைப் பொருள்களாக ஆக்க முயல்கிறார்கள். வறுமைக் கோட்டிற்குக் கீழ் வாழும் ஏழை எளிய மக்களின் இழிந்த நிலையைப் பற்றி அவர்கள் எண்ணிப் பார்ப்பதே இல்லை. அத்தகைய தீயவர்கள் எண்ணிப் பார்த்துத் திருந்துவதற்காகவும் இவ்வாறு ஏழைகளின் குருதியை, அட்டைகளைப் போன்று உறிஞ்சும் செல்வந்தர்கள் ஒவ்வொருவருக்கும் எட்டு அடி நிலம்தான் இறுதியில் சொந்தம் என்பதை நினைவூட்டுவதற்காகவே பின்வரும் பாடலைப் பாடியுள்ளார்:

'குள்ளநரி மாட்டிக்கிட்டா
கொறவனுக்குச் சொந்தம்
தட்டுக்கெட்ட மனிதர்கண்ணில்
பட்டதெல்லாம் சொந்தம்
சட்டப்படி பார்க்கப்போனால்
எட்டடிதான் சொந்தம்!

எல்லோரும் புரிந்துகொள்ளுகின்ற வகையில் உவமைகளை அடுக்கிக்காட்டிக் 'கொறவனுக்குச் சொந்தம்' எனும் இப்பாடலைச் சிறப்பாகப் பட்டுக்கோட்டையார் அமைத்துள்ளார்.

உவமைகளைப் புதுமையாகச் சொல்வதுடன், அவற்றை ஏழை மக்கள் எளிதில் உணர்ந்து கொள்ளவும் பாடுவது பட்டுக்கோட்டையாரின் பாடற் பண்பு.

'கதிராடும் கழனியில்
சதிராடும் பெண்மணி
கலைமேவும் அழகாலே
கவர்ந்தாய் கண்மணி
முதிராத செடியே
முல்லை மலர்க் கொடியே'

> ★ பரஸ்பர நம்பிக்கை, நன்னடத்தை, நல்லொழுக்கம் ஆகியவையே வெற்றிக்கான வழிகளாகும்.
>
> —மூதறிஞர் இராஜாஜி

என்று காதற் பாடல்களில் கவின்மிகு உவமைகளை எடுத்தாளுகிறார்.

காதலர்கள் ஒருவரோடு ஒருவர் பிரியாமல் இணைந்திருப்பதை 'ஈருயிர் ஒருடல்' என்று பொதுவாகக் குறிப்பிடுவர். சங்க காலச் சான்றோர்கள் முதல் பாரதிதாசன் வரை இப்பிரியா வாழ்க்கையைக் குறித்து பலவகையான உவமைகளைப் பெய்துள்ளனர். ஆயின் பட்டுக்கோட்டையார் உவமை புதுமையாகவும் சமூகப் பார்வையுள்ளதாகவும் அமைந்துள்ளது.

காதலர் இருவர் ஒன்றுபட்டு இருப்பதை 'உழவனும் ஓயாத உழைப்பும் போல் நாமே ஒன்றுபட்டு வாழ்க்கையில் என்றுமிருப்போம்' என்று உழவனும் அவன் உழைப்பும் போல் காதலர் இருவர் ஒன்றுபட்டு இருந்தனர் எனக் குறிப்பிடுவது இங்குச் சுட்டத்தக்கது.

ஆலை அதிபர்களின் செல்வப் பெருக்குக்குக் கால்கோளாக அமைவது தொழிலாளர்கள் உழைப்பாகும். பிறரை வாழவைக்கின்ற அவர்களுடைய வாழ்க்கையோ இரங்கத்தக்கதாக உள்ளது. குடிப்பதற்குக் கூழ் இன்றிக் கந்தை ஆடையை உடுத்திக் குடிசையில் குந்திக் கிடக்கின்ற இவர்களுடைய வாழ்விற்கு இன்னும் விடிவு பிறக்கவில்லை. எனவே, அவர்கள் 'செக்கில் இட்ட தேங்காய் போல்' துயருறுவதாகப் பட்டுக்கோட்டையார் பாடியுள்ளார்.

ஆதிக்க சக்தியை எதிர்த்து மக்கள் கொதித்து எழுவதை 'வெடித்த குண்டாய் கிளம்புகின்ற பொறிகள்' என்று பொருள் பொதிந்த உவமை வழி வெளிப்படுத்துகிறார்.

கவிஞர்கள் பாடல்களில் கருத்துகளை ஏற்றிக் கூறுவதைத் தற்குறிப்பேற்றணி என்று கூறுவர். பட்டுக்கோட்டையார் இவ்வணியைச் சிறப்பாகப் பல விடங்களில் பயன்படுத்தியுள்ளார். எடுத்துக்காட்டுக்கு ஒன்று—

கழனியில் வானத்தை நோக்கி நிமிர்ந்து நின்ற பயிர்களைப் பார்த்த பட்டுக்கோட்டையார் 'உழைப்பவர் பலனை ஒட்ட உருஞ்சி ஒதுங்கிப் பதுங்கும் உல்லாச மனிதரின் துணிவையும் கருங்காலிச் செயலையும் கொல்லும் ஈட்டி போல் குருத்துகள் நின்றன' என்று பாடியுள்ளார்.

உழவர்களின் உழைப்பை உறிஞ்சி வாழும் நிலவுடைமையாளர்களின் கொடுஞ்செயல்களை எதிர்க்கும் ஈட்டிகளைப் போன்று பயிர்கள் நின்றன என்று பட்டுக்கோட்டையார் தன் கருத்துகளை இங்கு ஏற்றிக் கூறியுள்ளார்.

அவர் காலத்தில் வெளிவந்த தமிழ் இதழ்கள் பலவற்றில் பிறமொழிச் சொற்கள் மிகுதியாக

இடம்பெற்றிருந்தன. இதைக் கண்டு வெகுண்ட பட்டுக்கோட்டையார், "தமிழ்நாட்டில் நடத்தப்படும் பத்திரிகைகள் தமிழ்ச் சொற்களைக் கையாள வேண்டும் என்று விரும்பினார். தமிழ்நாட்டுப் பத்திரிகைகள் 'தமிழ் மணம்' பரப்ப வேண்டும் என்பது பட்டுக்கோட்டையாரின் வேட்கை. மேலும், தமிழ் இதழ்களில் பொய்மை படர்ந்து கிடக்கும் நிலத்தினில் உண்மைகளை விதைக்கவும், ஒளி பொங்கிவரும் கதிர்போல மக்கள் விழிக்கவும் பாடுபட வேண்டும் என்று நெறிப்படுத்தியுள்ளார்.

"தமிழ் - என் தாய்
தமிழ் - என் துணைவி
தமிழ் - என் மகள்
இயல் - என் தாய்
இசை - என் துணைவி
நாடகம் - என் மகள்"

என்ற கவிதை வரிகள் அவருடைய தமிழுணர்வுக்குத் தெளிந்த சான்றாகும்.

இவ்வாறு 'தமிழே தன் குடும்பம்' என்று கருதி வாழ்ந்தவர் பட்டுக்கோட்டையார் எனில் மிகையாகாது.

"நாங்க பொறந்த தமிழ்நாடு - இது
நாலு மொழிகளின் தாய்வீடு!
ஓங்கி வளரும் கலையைத்
தலையிலே
தாங்கி வளரும் திருநாடு
அன்று
எதிர்ப்படை யெழுந்து
பற்றி மிகச் சினந்து
இமயச்சரிவில் வந்த போதிலே
வெற்றி
எமக்கென்றே முழங்கிற்று காதிலே".

எனத் தமிழகத்தின் சிறப்பைப் பாடிய கவிஞரின் வரிகள், தமிழர் ஒவ்வொருவரும் எண்ணிப் பார்க்க வேண்டியதாகும்.

உழைப்பின் உயர்வைத் தனது ஒவ்வொரு பாடலிலும் எடுத்துக் காட்டியவர்.

"சாமிக்குத் தெரியும், பூமிக்குத்
தெரியும்
ஏழைகள் நிலைமை - அந்தச்
சாமி மறந்தாலும் பூமி தந்திடும்
தகுந்த பலனை'

என்று செய்யும் தொழிலே தெய்வம் என்ற கருத்துடன் தெய்வத்துக்கும் மேலாக உழைப்பின் உயர்வைத் துணிவாகப் பாடலில் எடுத்துக் கூறியவர். இதைப் போன்றே பெண்ணடிமைத் தனத்தையும் சாடிப் பாடியுள்ளார்.

இந்திய மக்களைச் சாதியோ, சமயமோ பிரிக்க முடியாது என்ற கருத்துடையவர் பட்டுக்கோட்டையார். இந்து, முஸ்லீம் என்று சமயத்தின் அடிப்படையில் மக்களைப் பிரிப்பது ஒற்றுமையுணர்வைப் பலவகைப் படுத்திவிடும். எனவே இந்து, முஸ்லீம், கிறித்தவர்கள், சீக்கியர்கள் இன்ன பிற சமயத்தார் அனைவரும் ஒரு தாய் மக்கள் என்ற உணர்வை பட்டுக்கோட்டையார் ஏற்றிப் போற்றினார்.

> ★ காலம் உறுதியான நண்பனாகவும் இருக்கிறது. அதே சமயம் கருணையற்ற பகைவனாகவும் இருக்கிறது.
>
> —அண்ணல் காந்தியடிகள்
>
> ★ வாழ்க்கையில் நாம் முன்னேற முன்னேறத்தான் நம் திறமைகளின் வரம்புகளைத் தெரிந்து கொள்கிறோம்.
>
> —சாக்ரட்டீஸ்
>
> ★ கஷ்டங்களை நாம் அனுபவித்தால்தான் பின்னர் நாம் சுகத்தின் அருமை தெரிந்து நடந்து கொள்ள முடியும்.
>
> —மூதறிஞர் இராஜாஜி

இந்து முஸ்லீம் ஒற்றுமையை வலியுறுத்துவதற்காக அவர் எழுதிய கதைப் பாடல் 'இராஜாதேசிங்கு' ஆகும். ஒரு வரலாற்று நிகழ்வை இந்து முஸ்லீம் ஒற்றுமை வளரப் பயன்படுத்தியுள்ளார்.

தமிழ்த் திரைப்படக் கவிஞர்களுள் இதுவரை யாரும் எடுத்துக் கூறத் தயங்கிய பல புதிய கருத்துக்களைத் துணிவுடன் எடுத்துக் காட்டித் திரைப்படப் பாடல்களின் உள்ளடக்கத்திற்குப் புதிய உத்தி முறையைத் தந்தார். வாழ்வில் அவர் பெற்ற பல்வேறு அனுபவங்களைக் கவிதைகளாய் வடித்தெடுத்த பட்டுக்கோட்டையார் தமிழ்த் திரைப் படப் பாடல்கள் வரலாற்றில் ஒரு புதிய கால கட்டத்தை உருவாக்கியவர் எனலாம்.

"உணர்ச்சியோடு, உற்சாகத்தோடு பாடவேண்டும். பாடிய பின் எழுத வேண்டும்: இப்படி எழுதும் பாடல்கள் எக்காலத்திலும் சாகாது" என்று பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் பாட்டுக்கு வகுத்த இலக்கணத்திற்கு ஏற்ப அவருடைய பாடல்கள் சாகாவரம் பெற்றவை என்பது உண்மை. வெறும் புகழ்ச்சியில்லை!

திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தில் காயிதெ மில்லத் பிறந்த நாள் நூற்றாண்டு விழா

கண்ணியத் தென்றல் காயிதெ மில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு விழா 30.9.95 அன்று, திண்டுக்கல் பேகம்பூர் "ஹஜ்ரத் அமீருன்னிசா" பேகம் ஓரியண்டல் நடுநிலைப் பள்ளி" வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவிற்கு முன்னதாக, விழா மேடையின் அருகே அமைக்கப்பட்ட கண்ணியமிக்க காயிதெ மில்லத் அவர்களின் வாழ்க்கை வரலாற்றுப் புகைப் படக் கண்காட்சியை, மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு எஸ். காந்திராஜன் அவர்கள் திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சிக்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமை வகித்தார்.

திண்டுக்கல் அண்ணா மாவட்ட ஆட்சித் தலைவர் திரு த. பிச்சாண்டி, இ.ஆ.ப., அவர்கள் விழாவிற்கு வந்தவர்களை வரவேற்றார். செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் விழாத் தொடக்கவுரையாற்றினார். மாண்புமிகு சட்டப்பேரவைத் துணைத் தலைவர் திரு எஸ் காந்திராஜன் அவர்கள் கண்ணியத் தென்றல் காயிதெ மில்லத் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்து, தமிழக அரசு காயிதெ மில்லத் பிறந்தநாள் நூற்றாண்டு விழா கொண்டாடுவது பற்றியும், அன்னாரின் வாழ்க்கை வரலாற்றையும், தமிழுக்கும், தமிழ்ச் சமுதாயத்திற்கும் அவர் செய்த தியாகத்தையும் எடுத்துக் கூறினார்.

விழாவிற்கு மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமைத் தாங்கிப் பேசியதாவது:

"தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவின் பேரில் காயிதெ மில்லத் பிறந்தநாள் விழா கோலாகலமாக மாவட்டந் தோறும் கொண்டாடி வரு

கிறோம். இந்த நூற்றாண்டு விழாவை ஓராண்டு நடத்த உத்தரவிட்டுள்ளார். அவரது விழாவை யாராலும் கொண்டாட முடியாத அளவுக்குக் கொண்டாட வேண்டும் எனப் புரட்சித்தலைவி அவர்கள் உத்தரவிட்டுள்ளார். யார் இந்த மண்ணுக்காகப் பாடுபட்டாரோ, யார் தமிழ் வளர்ச்சிக்காகப் பாடுபட்டாரோ, அந்தப் புகழுக்கு உரியவரை நாம் பாராட்ட வேண்டும். காயிதெ மில்லத் மறைந்த பின்னும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். மண்ணில் பிறந்தவர்களுக்கு மரணம் நிச்சயம். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் மடியத்தான் வேண்டும். தண்ணீரில் பிறந்த உப்புக்குத் தண்ணீரில் தான் மரணம். பைசா கோபுரம் எப்படிச் சாய்ந்தும் சாயாமல் உள்ளதோ, அதுபோல காயிதெ மில்லத் அவர்கள் மறைந்தும் மக்கள் மனதில் மறையாமல் இருக்கிறார்".

விழாவில் மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் திரு எஸ். நாகூர் மீரான் அவர்கள் பேசியதாவது:

"காயிதெ மில்லத் அவர்கள் நூற்றாண்டு விழா கொண்டாட, புரட்சித்தலைவி உத்தரவிட்டதாலும், காயிதே மில்லத் அவர்கள் திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டமான என் மாவட்டத்தில் பிறந்ததாலும் நான் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைகிறேன். தமிழ்நாட்டில் இதுவரை 10 முதல் அமைச்சர்கள் பதவியில் இருந்து வந்துள்ளனர். அதில் 3 முதல் அமைச்சர்கள் சமுதாயத்தைப் பார்த்தனர். பேரறிஞர் அண்ணா முதல்வராக இருந்தபோது, நபிகள நாயகம் அவர்கள் பிறந்த தினத்தை அரசு விடுமுறை நாளாக அறிவித்தார். புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் அவர்கள் முதல்வராக இருந்தபோது மசூதிகளில் பணிபுரியும் உலமாக்களுக்குப் பென்சன் வழங்க உத்தரவிட்டார். புரட்சித் தலைவி அவர்கள் வக்ப் வாரியத்திற்கு ரூ.1 கோடி நிதி தந்தார். மேலும், வரவு செலவுத் திட்டத்தில் ஆண்டுக்கு ரூ.30 இலட்சம் நிதி தருவதாகக் கூறி, முதல் கட்டமாக ரூ.1 கோடியே 30 இலட்சம் தந்துள்ளார். முஸ்லீம் சமுதாயம் அவருக்கு நன்றிகூறக் கடன்பட்டுள்ளது".

இங்கர்சாலின் இனியமொழிகள்

★ உங்களுக்கு எந்தெந்த உரிமைகள் தேவையென்று கருதுகிறீர்களோ அந்த உரிமைகளை மற்றவர்களுக்கும் அளியுங்கள்.

★ மனிதனின் அதிர்ஷ்டம் அவன் தலைவிதியில் இல்லை. அவன் நடத்தையில்தான் இருக்கிறது.

★ படித்தவன் சிந்திக்கிறான், சிந்திக்கிறவன் முன்னேறுகிறான்.

★ உண்மை மனிதனை நாகரிகமானவனாகப் பரிசுத்தமானவனாக மாற்றி அவனுக்குத் தைரியம் அளிக்கிறது.

விழாவில், தமிழ்நாடு வக்ப் வாரியத் தலைவர் திரு முகமது ஆசிப், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் மாநிலத் தலைவர் திரு ஏ.கே.ஏ. அப்துல் சமது, திருமதி ஜீனத்சர்புதீன், எம்.எல்.ஏ., ஆகியோர் சிறப்புரையாற்றினர். திண்டுக்கல் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சி. சீனிவாசன், திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் திருமதி ர. நிர்மலாதேவி ஆகியோர் முன்னிலை உரையாற்றினர். திரு ப. குமாரசாமி, எம்.பி, திரு எஸ்.எம். துரை, எம்.எல்.ஏ., திரு ஏ.டி.செல்லச்சாமி, எம்.எல்.ஏ., திரு ஆ. சுப்புரத்தினம், எம்.எல்.ஏ., பால்வளத் தலைவர் திரு வி.ஆர். இராஜாங்கம், மற்றும் திரு இசட் ஜபருல்லா ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

விழா முடிவில், திண்டுக்கல் அண்ணா மாவட்டச் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு எம். அண்ணாமலை நன்றி கூறினார்.

தமிழ் எங்கள் உயிர்!

—செல்வி ப. காயத்ரி

தமிழாய்ந்த சான்றோர்களே, தேமதுரத் தமிழோசை கேட்கத் தஞ்சைக்கு வந்திருக்கும் எம் அருமைத் தமிழ் அன்பர்களே! வணக்கம்.

தமிழ் மிகச் சிறந்த மொழி என்ற கருத்து அறிஞர்களால் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் எழுதிய டாக்டர் கால்டுவெல் தமிழின் தொன்மையை, தமிழின் மேன்மையை தமிழின் இலக்கணப் பெருமையை, தமிழின் இலக்கணத் தூய்மையை உலகம் அறியச் செய்தார்.

தமிழின்பால் காதல் கொண்ட போப் பாதிரியார் திருக்குறளால் ஈர்க்கப்பட்டு, திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி மாற்றம் செய்து அதன் அருமை பெருமைகளை உலகம் உணரச் செய்தார்.

சங்க இலக்கியங்களைப் படிப்போர் தமிழால் முடியும் என்ற கருத்தை ஒப்புக்கொள்ளத் தயங்குவதில்லை. பத்துப் பாட்டையும், எட்டுத்தொகையையும், பதினெண்கீழ்க்கணக்கு நூல்களையும், எழுத்தெண்ணிப் படிக்கின்ற புலவர் பெருமக்கள், அவற்றில் இல்லாத அறிவியல் துறை கருத்துக்கள், கலைத் துறைக் கருத்துக்கள் எதுவுமே இல்லையெனப் பாராட்டிப் பேசுவதைப் பார்க்கின்றோம்.

தமிழைவிட வயதில் இளைய மொழியான ஜப்பானிய மொழியில் அறிவியல் துறைக் கருத்துக்களைக் கூறுகிறார்கள். தமிழைவிட வயதில் இளைய மொழியான ரஷ்ய மொழியிலும் அறிவியல் துறை கருத்துக்களைக் கூறுகிறார்கள். ஜப்பானிய மொழியிலும், ரஷ்ய மொழியிலும் எந்தத் துறை கருத்துக்களையும் கூற இயலும் என்ற உண்மையைப் பார்க்கின்றோம்.

இந்த மொழிகளை எல்லாம் விட பண்பட்ட மொழி, தொன்மை மிகுந்த மொழி நம் தமிழ் மொழி. இந்த மொழிகள் தோன்றாத காலத்திற்கு முன்பே தமிழ் தோன்றி உலகை ஆண்டு வந்திருக்கிறது. கல்வெட்டு கண்ட மொழி தமிழ் மொழி. காகிதமும், அச்சு எழுத்தும் தோன்றாத நாளிலிருந்து பனை ஓலையில் படியெடுக்கப்பட்ட பெருமை தமிழ் மொழிக்கு உண்டு.

சித்தர் பாடல்கள்

மருத்துவமும், மருந்தியலும் தமிழால் முடியாது என்றா நினைக்கிறீர்கள்?

சித்தர் பாடல்கள் உங்களுக்குத் தெரியாதா? சித்த மருத்துவம் தமிழ்நாட்டில் காலங்காலமாகக் குடும்ப மருத்துவ முறையாக இருந்து வந்திருக்கிறது. சித்த மருத்துவம் என்பது தமிழ் மருத்துவம்தானே!

பட்டிதொட்டிகளில் எல்லாம் பதுங்கிக் கிடந்த தமிழ் மருத்துவ நூல்களைத் தேடித் திரட்டி, தஞ்சையை அரசாண்ட சரபோஜி 'சரபேந்திர வைத்திய முறைகள்' என்று பெயரிலான நூல் ஒன்றை வெளியிட்டிருக்கிறார். கரையான்களுக்கும், கரப்பான்களுக்கும் இரையாக இருந்த தமிழ் மருத்துவ நூல்களைப் படித்துப் பார்த்து அவற்றை ஆதாரமாகவும் அடிப்படையாகவும் கொண்டே சரபேந்திரர் தன்னுடைய மருத்துவ முறைகளைத் தமிழ் அன்னைக்குப் படைத்தார்.

தமிழன்னைக்குக் காணிக்கை

சத்திரங்களும், சாவடிகளும் கட்டிய சரபேந்திரரின் தலைநகராகிய தஞ்சை மாநகரில், சரித்திரம் காணாத அளவுக்குத் தானங்களும் தருமங்களும் செய்த சரபேந்திரரின் தலைநகராகிய தஞ்சை மாநகரில், ஆரோக்கியச் சாலைகளையும், ஆங்கிலக் கலாசாலைகளையும் நிறுவிய சரபேந்திரரின் தலைநகராகிய தஞ்சை மாநகரில்- சரஸ்வதி மகால் ஒன்றை அமைத்து ஆய கலைகள் அறுபத்து நான்கும் வளர்த்த சரபேந்திரரின் தலைநகராகிய தஞ்சை மாநகரில்- இன்று உலகமே கண்டு வியக்கும் அளவுக்கு உலகத் தமிழ் மாநாடு நடைபெறுகிறது என்று சொன்னால் அது, எங்கள் தமிழ்ச் செல்வி புரட்சித்தலைவி தமிழ் அன்னைக்குச் செலுத்தும் காணிக்கையாகும்.

ஆசிரியர்கள் முதலில் மாணவர்களுக்குச் சுய மரியாதை இன்னதென்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். மானம், ஆண்மை இன்னதென்பதைக் கற்றுக்கொடுக்க வேண்டும். சமத்துவத்தைக் கற்றுக்கொடுக்க வேண்டும். மக்களிடத்தில் அன்பு செலுத்தக் கற்றுக்கொடுக்க வேண்டும்.

—தந்தை பெரியார்

ஆங்கில மோகம்

கிழக்கிந்தியக் கம்பெனி ஆட்சி தொடங்கிய நாளிலிருந்து இந்த நாடு ஆங்கிலத்திற்கு அடிமையாயிற்று.

டி.பி. மெக்காலே போன்ற மேல்நாட்டு அறிஞர்கள் ஆங்கிலத்தின் வழி மட்டுமே அறிவு வளரும், ஆங்கிலத்தின் வழிமட்டுமே அறிவு பெருகும் என்று கூறியதை நம் முன்னோர் வேத வாக்காக ஏற்று ஆங்கிலத்தின்பால் மோகம் கொண்டனர்.

தமிழிலே எழுதுவது, தமிழிலே பேசுவது, தமிழிலே எண்ணுவது கூட 200 ஆண்டுகளாகத் தடைபட்டுப் போயிற்று.

பாரதியார், பாரதிதாசன் போன்ற அறிஞர்களின் கவிதைகளாலும், மறைமலையடிகளார், திரு.வி.க. போன்ற அறிஞர்களின் உரைநடைகளாலும் விழிப்புணர்ச்சி பெற்ற தமிழ் இனம், இன்றைக்குத் தமிழால் முடியும் என்ற கருத்தை உலகம் உணரச் செய்து வருகின்றது. வரலாறு, பொருளியல், புவியியல், அரசியல் போன்ற மானிடயியல் தொடர்பான கருத்துக்களாக இருந்தாலும், வேதியல், உயிரியல், இயற்பியல் போன்ற அறிவியல் தொடர்பான கருத்துக்களாக இருந்தாலும், தமிழால் தெரிவிக்க முடியும் என்ற நிலைமையைக் கண்கூடாகப் பார்க்கிறோம்.

உங்களில் எத்தனைப்பேர் 'கலைக்கதிர்' என்ற மாத இதழைப் படிக்கிறீர்கள் என்பது எனக்குத் தெரியாது. மின்னல் வேகத்தில் வளர்ந்துவரும் மின்னியலிலிருந்து எல்லா அறிவியல் கருத்துக்களையும், தெளிவாகத் . தமிழில் அதிகம் படிக்காத பாமரர்கூட புரிந்து கொள்ளும் வகையில் கலைக் கதிர் . கட்டுரைகள் தமிழையும், அறிவியலையும் பாங்கோடு வளர்ப்பது ப்ாராட்டுக்குரியது.

பலருக்குத் தெரியாத ஆங்கிலச் சொற்களுக்கு நேரான தமிழ்ச் சொற்களைக் கூறி, நாளும் தமிழ்வளர்க்கும் பணியில் மாத இதழ் 'கலைக்கதிர்' ஈடுபட்டிருப்பதை இங்கு நினைவுகூர விரும்புகிறேன்.

இசையும் தமிழும்

அரசு ஆணைகளைத் தமிழில் வெளியிட முடியும். சட்டங்களைத் தமிழில் இயற்ற முடியும். அரசியல் அமைப்பினைத் தமிழில் செய்ய முடியும். தொலை தூரத் தந்தியைக்கூட தமிழில் அனுப்ப முடியும்.

அதுமட்டுமல்ல; கணிப்பொறியைக்கூட தமிழுக்கு அடிமையாக்க முடியும் என்ற உண்மைகளை மெய்ப்பிக்கிற மாத இதழ் 'செந்தமிழ்ச் செல்வி ஆகும். இசையிலும் நாட்டியத்திலும்கூட தமிழால் முடியும் என்பதைப் பல்லவர் காலச் செப்பேடுகளும், கல்வெட்டுகளும், தெரிவிக்கின்றன.

கர்நாடக சங்கீதத்தின் வேராகவும், விழுதாகவும் கருதப்படுகின்ற ஏழு சுரங்களையும் தமிழ்தான் முதலில் தந்தது என்பதைத் தெரிவிக்கின்றன. புதுக்கோட்டைப்பகுதியில் உள்ள இசைக் கல்வெட்டுகள் இன்று கர்நாடக சங்கீதத்தின் வேராகக் கருதப்படுகிற ஏழு சுரங்களையும் தந்தது என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும்.

'மாதவிப் பொன்மயிலாள் தோகை விரித்தாள் என்ற செய்தியைச் சொல்லும் இளங்கோ, நாட்டியக் கலையின் பிறப்பிடமே தமிழகம்தான் என்பதை உணர்த்துகிறார்.

எண்கள் பற்றிய உண்மை

இன்றைக்கு நாம் அராபிய எண்கள் என்று அழைக்கின்ற ஒன்று முதல் பத்து வரையிலான எண்கள் தமிழ் எண்கள்தான் என்கிற செய்தி உங்களுக்குத் தெரியுமா? தமிழகத்தில் தோன்றிய எண்களை அராபியர்கள் கற்று, இன்று உலகத்தின் ஏழு கண்டங்களிலும் எழுதப் படுகின்ற அளவுக்கு அது பரவியிருக்கிறது. கணக்கியலின் அடிப்படையே எண்கள்தானே? எண்களைக் கண்டுபிடித்த தமிழர்கள் கணக்கியலையும் கண்டுபிடித்ததாகக் கருதுவது நியாயமாக அமையும் என்று கருதுகிறேன்.

ஆட்சி மொழிகள்

நாகரிகத்தின் தாயாகவும், தலைவியாகவும் கருதப்படுகின்ற சிந்துவெளி நாகரிகத்தில்கூட ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழே பேசப்பட்டது என்ற தகவலை- தமிழே எழுதப் பட்டது என்ற தகவல் ஸ்பெயின் நாட்டுத் தொல்பொருள் ஆராய்ச்சியாளர் ஈராஸ் பாதிரியார் அவர்கள் வற்புறுத்தும் உண்மை என்பதை நினைவு கூர விரும்புகிறேன்.

இன்றைக்கு நம்முடைய அரசியல் அமைப்பு குறிப்பிடும் ஆட்சி மொழிகள் அனைத்திலும் முதலாவதாகப் பிறந்த பெருமை மூத்த மொழியாக இருக்கும் அருமை, மூவேந்தர்களுக்கும் தாய்மொழியாக இருக்கும் சிறப்பு வேறு எந்த இந்திய மொழிகளுக்கும் இல்லை. இந்திய மொழிகளிலே தமிழ்த் தாய்தான் முதல் முதலில் அச்சேறும் பெருமை பெற்றாள் என்ற செய்தியைக் கேட்கிற போது, ஒவ்வொரு தமிழனின் நாடி நரம்புகள் முறுக்கேறுவதைப் பார்க்கலாம். குருதி நாளங்களில் புது வெள்ளம் பாய்வதை உணரலாம்.

தம்பிரான் வணக்கம்

இன்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்னரே, போர்ச்சுக்கீசிய நாட்டின் தலைநகரில்தான் முதல் தமிழ் நூல் ஒன்று அச்சிடப்பட்டதாம்.

பின்னர் 25 ஆண்டுகள் கழித்து மேலைக் கடற்கரையின் கொச்சி என்னும் கோ நகரில் 'தம்பிரான் வணக்கம்' என்ற தலைப்பில் இந்திய மண்ணில் முதல் தமிழ்நூல் ஒன்று அச்சிடப் பட்டது. 'தம்பிரான் வணக்கம்' என்ற தலைப்பு தம்பிரானுக்குக் கூறப்பட்ட வணக்கம் மட்டும் அன்று, தமிழுக்கும் கூறப்பட்ட வணக்கம் ஆகும்.

பெரிய கோயில்

தஞ்சையில் திரண்டிருக்கின்ற தமிழ் அன்பர்களே, உங்களுக்குத் தஞ்சைப் பெருவுடையார் கோவில் பற்றிய செய்தி ஒன்றைச் சொல்லுவேன்.

பெரிய கோவில் கோபுரத்தின் கலசமாக அமைந்திருக்கும், செப்புக் கலசங்களை வெறும் கலசங்களாக மட்டும்தானே காண்கிறீர்கள்? அவை வெறும் கலசங்கள் மட்டும் அல்ல!

காலங்காலமாக பெருவுடையாரின் திருக்கோவிலை, இடி மின்னல போன்ற இயற்கைச் சீற்றங்களிலிருந்து காக்கும் இடி தாங்கியாக அவை செயல்பட்டு வருகின்றன. தமிழர்களின் அறிவியல அறிவுக்கு இதைவிட சிறந்ததொரு சான்றை என்னால் நினைத்துக்கூட பார்க்கமுடியவில்லை!

தமிழால் முடியும் என்ற கருத்தை ஒப்புக்கொள்ளத் தயங்கும் அன்பர்கள், 20ஆம் நூற்றாண்டு முடிந்து 21ஆம் நூற்றாண்டில் நுழைய இருக்கின்ற இத்தருணத்தில், தமிழால் மட்டுமே முடியும். தமிழால் முடிகின்ற அளவுக்கு வேறு எந்த மொழியாலும் முடியாது என்ற கருத்தை விரைவிலே ஏற்றுக் கொள்வார்கள் என்ற நம்பிக்கை எனக்குண்டு.

'தமிழுக்கும் அமுதென்று பேர், அந்தத் தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்' என்று கூறி- 'எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு' என்று முழங்கி- 'செந்தமிழே, நறுந்தேனே, செயலினை மூச்சினை உனக் களித்தேனே' எனச்சொல்லி தஞ்சைக்கும் தமிழ் மண்ணுக்கும் பெருமை சேர்க்க வந்திருக்கும் உங்களது பாதங்களைத் தொட்டு வணங்கி விடைபெறுகிறேன்.

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு மாணவர் அரங்கில் கல்லூரி அளவில் நடைபெற்ற பேச்சுப் போட்டியில் முதல் பரிசு பெற்ற சென்னை எஸ்.ஆர்.எம். உடலியக்கவியல் கல்லூரி மாணவி செல்வி ப. காயத்ரி ஆற்றிய உரையிலிருந்து.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

தமிழரசு

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)/PP-2

16.10.1995 ரூ.3



நீச்சல் அரங்கம்
வேளச்சேரி





திரு. மோசஸ் திலக் - களரிப் பயிற்று

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர்!

நிகழ்ச்சிகளில் சில....

திரு. நா. முத்துசாமி - சவால் நாடகம்

இந்த இதழில்...

வன உயிரின வார விழா
- மாண்புமிகு முதல்வர் வாழ்த்துச் செய்தி 2

'முதலமைச்சரின் பதக்கம்' வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் உரை 3

மீனவர் சேமிப்புத் திட்டம்
- மாண்புமிகு முதல்வர் நிதியுதவி 15

அரசுப் போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குப் போனஸ் 16

அண்ணல் காந்தியடிகள் பிறந்தநாள் விழா 17

மதுரையில் உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி 22

வட ஆர்க்காடு-அம்பேத்கர் மாவட்டத்தில் பல்துறைப் பணி விளக்க முகாம் 24

ஏழை எளியோர் ஏற்றம் பெற கதர் வாங்குவீர்!
- மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு பெ. ஈஸ்வரமூர்த்தி 27

சிறு குடும்பம் போதுமே!
- கவிஞர் வி.மு. உலகநாதன் 31

புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடம் கண்டுபிடிப்பு 32

கலை உலகம் போற்றும் கலைமாமணி 33

எங்கள் கவிமணி
- கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம் 36

'ஆட்சி மொழி'
- திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., ... 42

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

குணமென்னும் குன்றேறி நின்றார் வெகுளி
கணமேயுங் காத்தல் அரிது (29)

நல்ல பண்புகளாகிய மலையின்மேல் ஏறி நின்ற பெரியோா, ஒரு கணப்பொழுதே ஆயினும் சினம் கொண்டு காத்தல் அரிதாகும்.

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026
புரட்டாசித் திங்கள் : 30
மலர்: 26 இதழ்: 8
16.10.1995

விலை ரூபாய் : 3

ஜெ. ஜெயலலிதா

முதலமைச்சர்

தலைமைச்செயலகம்

சென்னை 600 009.

நாள் 7.10.1995

வன உயிரின வார விழா - 1995

வாழ்த்துச் செய்தி

பழங்காலம் தொட்டே தமிழக மக்கள் வனங்களையும் வன விலங்குகளையும் பேணிக்காத்து வந்துள்ளனர் என்பதைச் சங்க நூல்கள் எடுத்துக் காட்டுகின்றன. வன உயிரினங்களின் உய்விடமான வனப்பகுதிகள் எந்தக் காரணத்திற்காகவும் பிற பணிகளுக்குப் பயன்படுத்தலாகாது என்பதில் தமிழக அரசு பிற மாநில அரசுகளைவிட உறுதியாக உள்ளது. மொத்த வனப்பகுதியில், வன உயிரின உய்விடப்பகுதி பல மாநிலங்களில் 10 விழுக்காட்டிற்கும் குறைவாக இருக்கும் சூழ்நிலையில் தமிழகத்தில் அதன் பரப்பு 12 விழுக்காட்டிற்கு மேல் உள்ளது என்பதைப் பெருமிதத்துடன் குறிப்பிட விரும்புகின்றேன். மேலும், கொடைக்கானல் போன்ற சில வனப்பகுதிகளையும் வன உயிரின உய்விடமாக்கத் தமிழக அரசு தனி அக்கறை கொண்டுள்ளது. முன்னோர்கள் பேணிக்காத்து வந்த வனமும், வன உயிரினமும், எந்தக் காலத்திலும் அழிந்து விடக்கூடாது என்ற சீரிய நோக்கம் இந்த அரசுக்கு உண்டு.

வனத்தில் உள்ள அனைத்து உயிரினங்களும் ஒன்றை ஒன்று சார்ந்து வாழ்ந்து வருகின்றன. மனித வாழ்வு வன வளத்தைச் சார்ந்துள்ளது. இயற்கைச் சமன்பாட்டில் மனிதனும் ஓர் அங்கமாக உள்ளான். இந்தச் சூழலில், எந்த வன உயிரினத்திற்கும் ஏற்படும் தீங்கு மனித சமுதாயத்தை நேரடியாகவோ, மறைமுகமாகவோ பாதிக்கும். எனவே, வன உயிரினங்களைப் பாதுகாக்க அனைவரும் சீரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற எனது பேரவாவினைத் தெரிவித்து, வன உயிரின வார விழா சிறப்புடன் நடைபெற எனது மனமார்ந்த வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

ஜெ. ஜெயலலிதா

தமிழக முதலமைச்சர்

“காவலர்களுக்கு, அரசாங்கம், ஒரு பாதுகாப்புக் கேடயமாக விளங்குகிறது”

அட்டை சொல்லும் செய்தி

‘முதலமைச்சரின் பதக்கம்’

வழங்கும் விழாவில்

மாண்புமிகு முதல்வர் பெருமிதம்

[illegible] ... நிதி [illegible] அடைந்த [illegible] தீவிரமாக [illegible] ஒரு இலட்சம் [illegible] செலவில் [illegible] [illegible] அனைத்து [illegible] 5,000 காவலர் குடியிருப்புகள் கொண்ட ஒரு காவல் நகரம் (Police City) உருவாக்கப்படும்.

☆ கோவை மாநகரில் படிப்படியாக எல்லாக் காவல்துறைப் பணியாளர் களுக்கும் குடியிருப்புகள் கிட்டதட்ட 20 கோடி ரூபாய் செலவில் கட்டித்தரப்படும்.

தமிழகத்தின் தனிப் பெரும் நகரங்களில் ஒன்றாகவும், தொழில் துறையில் தென்னிந்தியாவின் Manchester என்ற சிறப்பினையும், புகழினையும் பெற்ற மாநகரமாகவும், எளிமை, அடக்கம், வீரம் போன்ற, பழந் தமிழர் பண்பாட்டுச் சிறப்புகளைத் தன்னகத்தே

கொண்டு விருந்தோம்பலுக்குத் தன்னிகரற்று விளங்கும் கொங்கு தமிழ் கொஞ்சி விளையாடும், கோவை மாநகருக்கு வருகை தந்துள்ள பெருமக்களை என் மீது அளவிலா அன்பும், எல்லையில்லாப் பாசமும் கொண்ட, இப்பகுதி வாழ் பெருமக்களை, இங்கே ஒருங்கே காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும அடைகிறேன். தமிழகக் காவல்துறை, சிறைத் துறை, தீயணைப்புத்துறை மற்றும் ஊர்க்காவல் படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்களின் சீரிய சேவைக்காகவும், சிறப்பு மிக்க செயல்களுக்காகவும் முதலமைச்சரின் பதக்கங்களைத் தமிழக மக்களின் சார்பில் வழங்கியதில், எனது மகிழ்ச்சி இரட்டிப்பாகி உள்ளது.

தங்களது சீரிய பணியாலும், கடமை உணர்ச்சி மிக்க செயலாற்றலாலும், இன்று பதக்கங்களைப் பெற்ற வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், எனது நெஞ்சம் நிறைந்த பாராட்டுக்களையும், இதயம் கனிந்த வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

நாட்டு மக்களின் உயிரையும், உடைமைகளையும் பாதுகாத்துச் சட்டம் ஒழுங்கை அன்றாடம் நிலைநாட்டி, நல்லோரைக் கொடியோரின் பிடியிலிருந்து காப்பாற்றி, கொடியவர்களைச் சட்டத்தின் பிடியில் சிக்க வைத்து, அதன் மூலம் மக்கள் அனைவரும், அவரவருக்கு உரிய பணிகளை மேற்கொள்ள, தகுந்த அமைதியான சூழ்நிலையை, உருவாக்கித் தருகின்ற மாபெரும் கடமை, காவல்துறைக்கு உண்டு. அதேபோன்று, தமிழக மக்களைப் பல்வேறு இன்னல்களிலிருந்து காத்து, அரும்பணி ஆற்றும் கடமை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை மற்றும் ஊர்க்காவல் படைக்கும் உண்டு.

காவல்துறை என்றாலே, நமது மனதில் முதலில் தோன்றுவது, அவர்களது மிடுக்கான தோற்றமும், சட்டத்தை நிலைநாட்டும் கடமை உணர்வும் தான். அரசுத் துறையில் மற்ற பிரிவுகளில் பணியாற்றுவோர் சில பிரச்சினைகளையும், இடையூறுகளையும் சந்திக்க நேர்ந்தாலும், காவல்துறையில் பணிபுரிபவர்கள், எதிர்கொள்ள வேண்டிய அளவிற்கு, சவால்களையும், சங்கடங்களையம், ஆபத்துக்களையும், அசாதாரண சூழ்நிலைகளையும், அனுதினமும் சந்திப்பது இல்லை. மற்ற பணிகளில் இருப்போர், இன்னல்களையும், சவால்களையும் ஒரு சில நேரங்களில் மட்டுமே, எதிர்கொள்ள வேண்டி இருக்கும். ஆனால், காவல்துறை வீரர்களும், வீராங்கனைகளும், எந்நேரமும் அபாயத்தை எதிர்நோக்கியே, பணிபுரிய வேண்டியுள்ளது. இன்றைய சூழ்நிலையில், காவல்துறையினருடைய பொறுப்பும், கடமையும்

கூடியுள்ளன. அதே நேரத்தில், அவர்களது பணியின் கடினமும், ஆபத்தும் அதிகரித்துள்ளது.

மக்களின் உயிரையும், உடைமைகளையும், பாதுகாக்கும் பணியில் ஈடுபடுபவர்களுக்கு, மக்கள் பாராட்டு அளிப்பது இயல்பு தானே? அந்த வகையில் தான் 6 கோடி தமிழக பெருமக்களின் பிரதிநிதியாக இன்று நான் தமிழ்நாட்டின் முதலமைச்சர் என்கின்ற முறையில், காவல்துறை, தீயணைப்புத்துறை, சிறைத்துறை, மற்றும் ஊர்க்காவல் படையைச் சேர்ந்த வீரர்களுக்கும், வீராங்கனைகளுக்கும், பதக்கங்களை வழங்கிக் கௌரவித்துள்ளேன். காவல் துறையினர், மேலும் சிறந்த பணியைத் தமிழக மக்களுக்கு அளிக்க தங்களை அர்ப்பணித்துக் கொள்ள, இந்தப் பதக்கங்களும் பாராட்டுக்களும், ஊக்கம் அளிக்கும் என்பது உறுதி.

ஒரு காலத்தில், Scotland Yard-க்கு நிகரான பெயரையும், புகழையும் பெற்றிருந்த தமிழகக் காவல்துறை, இடைப்பட்டக் காலத்தில், சில தடங்கல்களுக்கும், சங்கடங்களுக்கும் ஆளாக வேண்டி வந்தது. அத்தகைய காவல்துறை மீண்டும் புதிய பொலிவினையும் ஏற்றத்தையும் பெற வேண்டும் என்று பதவி ஏற்ற முதல் நாளே, நான் ஒரு சூளுரையை மேற்கொண்டேன்.

காவல்துறை, நலிந்தவர்களுக்கும் சட்டத்தை மதிப்போருக்கும் அன்புக் கரம் நீட்ட வேண்டும். கொடியவர்களுக்கும், சட்டத்தை உடைப்போருக்கும், இரும்புக்கரம் காட்ட வேண்டும், என்பதே எனது எதிர்பார்ப்பு அந்த எண்ணங்களைச் செயல்படுத்த காவல்துறையின், இந்தக் காலத்திற்கு ஒவ்வாத பழைய ஆயுதங்களையும், சாதனங்களையும், கடைப்பிடிக்கும் பழைய நடைமுறைகளையும், முறைப்படுத்தப்படாத திறமைகளையும், பழங்காலப் பயிற்சி முறைகளையும் மாற்றியமைக்க வேண்டும் என்பதை அறிந்து, காவல்துறையை நவீனப்படுத்தத் திட்டமிட்டேன். அதே நேரத்தில், காவல்துறையின் சேவைகள், மக்களுக்குச் சென்றடைய நல்ல மனப்பான்மையையும், மக்கள் நல் எண்ணத்தையும், காவலர்கள் மத்தியில் வளர்க்க வேண்டும் என்றும் விரும்பினேன்.

எனவே தான், காவல்துறையை நவீனமயமாக்கும் அதே நேரத்தில், அதை மனிதாபிமானமிக்க ஒரு இயக்கமாகவும் மாற்ற, எங்கள் அரசு மிகுந்த ஈடுபாட்டுடன், திட்டங்களைச் செயல்படுத்தத் தொடங்கியது. கடந்த 4 ஆண்டு காலத்திற்கு மேலாக, காவல்துறையை நவீனமயமாக்க தமிழக அரசு, நூற்றுக்கணக்கான கோடி ரூபாய்களைச் செலவு செய்துள்ளது. புதிய பணியிடங்கள் தோற்றுவித்தல், புதிய பணியாளர்கள் நியமனம், காவல் நிலையங்களுக்கு வாகனங்கள் வழங்குதல், நவீன ரகத் துப்பாக்கிகள் மற்றும் தோட்டாக்கள் அவற்றை இயக்க முறையான பயிற்சி, நவீன தொலைத் தொடர்புச் சாதனங்கள் அலுவலகக் கட்டடங்கள், காவலர்களுக்கு வீட்டுவசதி மற்றும் பல்வேறு அவசியச் சலுகைகள் என்று காவல்துறையின் வளர்ச்சிக்கு, ஒன்றன் பின் ஒன்றாக, பல திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றிக் காட்டியது உங்கள் அன்புச் சகோதரியின் அரசு தான் என்பதைப் பெருமிதத்துடன் சுட்டிக் காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

ஓர் அரசு, வளர்ச்சிப் பணிகளைச் செயல்படுத்தி, மாநிலத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்ல வேண்டும் என்றால் அங்கே பொது அமைதி நிலவ வேண்டும். அத்தகைய நல்ல சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுப்பதில் காவல்துறையினுடைய பங்கு மிக முக்கியமானதாகும். சீர்கெட்டுக் கிடந்த தமிழகத்தின் சட்ட அமைதிப் புரட்சியின் விளைவாக பல்வேறு துறைகளில் தமிழகம் இன்று தன்னிறைவைப் பெற்று வருகின்றது. எனது எதிர்பார்ப்புகளுக்கு ஈடு கொடுத்து, செயலாற்றி வரும் காவல்துறையினருக்கு எனது இதயம் கனிந்த பாராட்டுதல்களை, உரித்தாக்கிக் கொள்கிறேன்.

★ நமக்கு நாமே சொல்ல முடியாத ஒன்றை எவனால் சொல்ல முடிகிறதோ, அவனே நமக்கு விலை மதிப்பற்ற நண்பனாவான்.

—எமர்சன்

'அன்பு' தான் உலகிலேயே மிகவும் மலிவான பொருள். அது, தன்னைப் பெறுபவருக்கும் வழங்குபவருக்கும் அதிகமான இன்பத்தை வழங்கும்.

– இங்கர்சால்

நவீன அறிவியல், மற்றும் தொழில் நுட்ப முன்னேற்றத்தினாலும், தொடர்ந்து நிகழ்ந்து வரும் அரசியல், பொருளாதார மற்றும் சமுதாய மாற்றங்களினாலும், இன்றைய அளவில் மனித சமுதாயம், இதுவரை எந்தக் கால கட்டத்திலும் எதிர்கொள்ளாத அளவிற்குப் புதிய பிரச்சினைகளையும், சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியுள்ளது. இத்தகைய சமுதாய மாறுதல்கள் நிகழ்கின்ற போது, முதலில் பாதிப்புகளுக்கு உள்ளாகும் அரசுத்துறை, காவல்துறை தான். பல்வேறு பிரச்சினைகளை, உள்ளடக்கிய ஒரு சமுதாயத்தில் பொது அமைதியும், சட்டம் ஒழுங்கும், காவல் துறை மூலம், நிலை நாட்டப்பட்டால் தான், சமுதாயமும் அதிலே வாழ்கின்ற மக்களும், புதிய மாற்றங்களுக்கு ஈடுகொடுத்து, இயல்பான வாழ்க்கையை மேற்கொள்ள இயலும். ஆகவே, காவல் துறையில் பணியாற்றுவோர் தாங்கள் வாழ்கின்ற சமுதாயத்திற்கு ஆற்ற வேண்டிய சேவையின் தன்மையை அறிந்து, பொது மக்கள் போற்றுகின்ற வண்ணம், பணியாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கான அனைத்து முயற்சிகளையும், நீங்கள் எடுக்க வேண்டும் என்று உங்கள் அனைவரையும் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

காலத்தின் தேவைகளுக்கு ஏற்ப, சீரிய முறையில் மக்கள் பணியாற்ற, தமிழகக் காவல் துறையை நவீனமயமாக்கவும் இந்தியாவிலேயே, ஏன் உலக நாடுகளிலேயே ஒரு சிறந்த காவல்துறையாக, தமிழகக் காவல்துறை பரிணமிக்க நாங்கள் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றோம்.

காவல்துறையினர் மேற்கொள்ள வேண்டிய ஆபத்தான பணிகளையும் அவர்கள் எதிர்கொள்ள வேண்டிய சங்கடமான சூழ்நிலைகளையும் கருத்தில் கொள்ளாமலே காவல்துறையின் மீது, ஒட்டுமொத்தமாக, பழி போட்டு வந்த சூழ்நிலை, இன்று மறைந்துவிட்டது. காவல் துறையினரின் பணி ஆர்வத்தை உயர்த்தவும், அவர்களது நல்வாழ்விற்கு வழி வகுக்கவும், காவலர்களுக்கு அரசாங்கம் ஒரு பாதுகாப்புக் கேடயமாக விளங்குகிறது என்பதையும் எங்கள் செயல்பாடுகள் சந்தேகமற நிரூபித்துள்ளன.

காவல்துறையினரின் பொது நலனைக் கருத்தில் கொண்டு நாங்கள் செயல்படுத்தி வரும் சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் இன்று இந்தியத் துணைக் கண்டத்திற்கு முன்னோடியாக, வழிகாட்டியாக விளங்கி வருகின்றன. காவலர்களின் மனச் சோர்வை நீக்கி, பணி உற்சாகம் ஏற்படுத்திடவும் அவர்களுக்குச் சமூகப் பாது

காப்பை அளித்திடவும் நாங்கள் மேற்கொண்ட முயற்சிகளின் விளைவாக, இன்று காவலர்கள் நிம்மதியான மனதுடன் சஞ்சலம் ஏதுமின்றிப் பணியாற்றுகின்ற நல்லதொரு சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. காவல்துறையின் முழு சேவையும் இன்று பொதுமக்களுக்குக் கிடைக்க இந்தத் திட்டங்கள் வழி வகுத்துள்ளன என்பதைப் பலரும் ஒப்புக் கொண்டுள்ளார்கள்.

காவலர்களை வெறும் கருவிகளாக, இயந்திரங்களாக நினைத்து, காவல்துறை இயக்கப்பட்ட நிலை, இன்று அடியோடு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. காவலர்களின் பொருளாதார மேம்பாட்டிற்கும், பணி உயர்வுக்கும் சமூகப் பாதுகாப்பிற்கும், சமூகத்தில் ஒரு அந்தஸ்திற்கும், கடந்த 4 ஆண்டுகளுக்கு மேலாக, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எண்ணில் அடங்கா!

இருப்பினும், அவற்றில் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டுவது எனது கடமை என்று கருதுகிறேன்.

காவல் பணியின் தன்மை காரணமாக உடல்நலம் பாதிக்கப்பட்ட, 93 காவல்துறை அலுவலர்கள், மற்றும் அவர்தம் குடும்பத்தினருக்கு, ஒரே நேரத்தில் 33.5 இலட்சம் ரூபாய் நிதி உதவி என்னால் வழங்கப்பட்டது. இந்தியத் துணைக் கண்டத்திலே, இது போன்ற ஒரு நிகழ்ச்சி நிச்சயமாக இதற்கு முன்பு, நடந்திராது என்பது உறுதி. கடமை ஆற்றும்போது பல்வேறு சூழ்நிலைகளில் உயிர் இழந்த காவலர்களின் குடும்பங்களுக்கு நடைமுறைப்படி வழங்கப்பட வேண்டிய நிதி உதவிகளோடு மேலும் ஒரு இலட்சம் ரூபாய் "முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து" வழங்கப்பட்டு வருகின்றது. குறைந்த பட்சம் இரண்டரை இலட்சம் ரூபாய்க்கான நிதியை, அந்தக் குடும்பங்கள் விரைவில் பெறுகின்ற ஒரு சூழ்நிலை, எனது நேரடி ஆணையின் கீழ் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

சமீபத்தில் காவல் துறையினருக்கான சிறப்பு மருத்துவச் சிகிச்சைத் திட்டம் ஒன்று 50 இலட்சம் ரூபாய் மூல நிதியுடன் தமிழக அரசால் தொடங்கப்பட்டுள்ளது இந்த நிதியிலிருந்து பெறப்படுகின்ற வருவாயிலிருந்து காவல்துறையைச் சேர்ந்தவர்களுக்குத் தனியார் மருத்துவமனைகளில் செலவினம் அதிகமிக்க உயர்தர மருத்துவச் சிகிச்சையை மேற்கொள்ள நிதி உதவி வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

★ இன்பமும், துன்பமும் பணத்தைச் சார்ந்தவை அல்ல. மனத்தைச் சார்ந்தவை.

–பெர்னாட்ஷா

இணைபிரியாத்தோழர்கள்

★ உண்மையும் உழைப்பும் உங்களுக்கு இடைவிடாத தோழர்களாய் இருக்கட்டும்.

–பிராங்க்ளின்

பணியின் தன்மையைக் கருதி, காவல்துறையில் பணியாற்றும் 40 வயதைக் கடந்த காவலர்களுக்கு, கட்டாய மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அவர்கள் உடல் நலத்தை மேலும் பேணிப் பாதுகாப்பதற்கான திட்டத்தின் முதல் கட்டப் பணி என்னால் ஏற்கெனவே, சட்டமன்றப் பேரவையில் அறிவிக்கப்பட்டபடி சமீபத்தில் தொடங்கப்பட்டுள்ளது.

4.8.1995 அன்று பிறப்பிக்கப்பட்ட ஒரு ஆணையின் மூலமாக 1,700 Naik நிலை பதவிகளில் உள்ளவர்களுக்கு, முதல் நிலைக் காவலர்களுக்குரிய பதவி உயர்வும், ஊதிய விகிதமும் வழங்கப்பட்டுள்ளன. இது போன்று, காவல்துறையினரின் நலம் காக்க வேறு எந்த அரசும், செய்திராத பல்வேறு பணிகளை, முனைப்புடன் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு செயல்படுத்தி வருகிறது.

1990-91-ஆம் ஆண்டு காவல் துறைக்கு ஒதுக்கப்பட்ட நிதி 236 கோடி ரூபாய் மட்டுமே. அந்த ஒதுக்கீடு 1995-96-ஆம் ஆண்டு 420 கோடி ரூபாயாக உயர்ந்துள்ளது. காவல்துறையின் முன்னேற்றத்தில், இந்த அரசு, உங்கள் அரசு கொண்டுள்ள, உறுதியையும் ஈடுபாட்டையும் இது தெளிவாக்கும் என்று கருதுகிறேன். முன்பிருந்த ஆட்சியில் கலைக்கப்பட்ட காவலர் வீட்டு வசதிக் கழகம், மீண்டும் ஆரம்பிக்கப்பட்டு அதன்மூலம் ஆண்டொன்றிற்கு 1,000 வீடுகள் கட்டப்படுகின்றன. சென்னை நகரத்தில், அனைத்து

அடிப்படை வசதிகளுடன் 3,000 காவலர் குடியிருப்புகள் கொண்ட ஒரு காவல் நகரம் Police Cityஐ விரைவில் உருவாக்கிட ஆயத்தப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு, காவல்துறையினருக்குத் தேவைப்படும் ஆயுதங்களைப் பெற்றுத் தருவதிலாகட்டும் தொலைத்தொடர்புச் சாதனங்களைப் பெற்றுத் தருவதிலாகாட்டும், எங்கள் ஆட்சியைப் போல் வேறு எந்த ஆட்சிக் காலத்திலும் செய்யப்படவில்லை என்பதை உறுதியாகக் கூற முடியும். Digital Trunk Radio System மூன்று கோடி ரூபாய் செலவில் அமைக்கப்பட்டுள்ளது. போக்குவரத்துக்குப் பயன்படாத நிலையில் இருந்த, 384 வாகனங்களை ஒரே நேரத்தில் மாற்றம் செய்து அவற்றிற்குப் பதிலாகப் புதிய வாகனங்கள் வாங்க, ஆணை பிறப்பிக்கப் பட்டது. ஒரு துறையில் உள்ள 384 வாகனங்களைக் கழித்து, புதிய வாகனங்களைப் பெறுவதற்குச் சாதாரணமாகப் பல ஆண்டுகள் ஆகும்.

தமிழ்நாட்டில் அமைக்கப்பட்ட "அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்" இன்று சமுதாயத்தில், ஒரு புதிய விழிப்புணர்ச்சியையும் மறுமலர்ச்சியையும் ஏற்படுத்தி இருக்கின்றன. இந்தச் சாதனையை இன்று இதர மாநில அரசுகள் பாராட்டுவதோடு, தங்களது மாநிலத்திலும் அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, அமைத்து வருகின்றன. ஏன், சில அண்டை நாடுகளும், அனைத்து மகளிர் காவல் நிலையங்களை, தொடங்கி வைத்துள்ளன என்றால், அது நமது முயற்சிக்குக் கிடைத்த மாபெரும் பாராட்டு என்றே நான் கருதுகிறேன்.

57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள், தமிழகத்தில் செயல்படும் நல்லதொரு சூழ்நிலையை எண்ணி நான் மன மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்தியாவில் முதன் முறையாக, Victims Assistance Fund - பாதிப்புக்குள்ளானோர் உதவி நிதி ஒன்று ஒரு கோடி ரூபாய் செலவில் தமிழக அரசால் சமீபத்தில் ஏற்படுத்தப் பட்டுள்ளது. கொலை, கற்பழிப்பு, போன்ற பெரும் குற்றங்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, இத்திட்டத்தின் மூலம் மறுவாழ்வு அளிக்கவும், நிதி உதவி வழங்கவும், முனைந்துள்ள ஒரே அரசு தமிழக அரசு தான்என்பதைப்பெருமிதத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாநகர்க் காவல் பிரிவில் பணியாற்றும், 1,969 பணியாளர்களில், 773 பேர் மட்டுமே, அரசுக் குடியிருப்புகளில் வசித்து வருகிறார்கள், என்பதையும் மற்றவர்கள் அரசு வழங்குகின்ற வீட்டு வாடகைப் படியைப் பெற்றுக்கொண்டு தனியார் வீடுகளிலும் குடியிருப்புகளிலும் அதிக வாடகை கொடுத்துத் தங்கி வருகிறார்கள் என்பதையும் நான் அறிவேன். கோவை மாநகர் பகுதிகளில் தனியார் வீடுகளின் வாடகை அதிகரித்து வருவதால், காவலர்களுக்கு ஏற்பட்டுள்ள சிரமத்தையும் நன்கு புரிந்து கொண்டுள்ளதால், அவர்களது குறைகளை நீக்கி, கோவை மாவட்டத்தில் விரைவில், கூடுதலாகக் காவலர் குடியிருப்புகள் கட்டித் தரப்படும் என்பதையும் கோவை மாநகரில் படிப்படியாக, எல்லாக் காவல் துறைப் பணியாளர்களுக்கும் குடியிருப்புகள் கிட்டத்தட்ட 20 கோடி ரூபாய் செலவில் கட்டித்தரப்படும் என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோவை மாநகரத்தின், பல்முனை வளர்ச்சியின் விளைவாக, இந்த மாநகரத்தில் புழக்கத்தில் உள்ள வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. வாகனங்களின் போக்குவரத்தை முறைப்படுத்தவும், போக்குவரத்தைச் சீர்படுத்தவும், குற்றத்தடுப்புப் பணியைச் சீரிய முறையில் மேற்கொள்ளவும் கோவை மாநகரத்தில் சுற்றுக் காவல் பணியை மேற்கொள்ள கூடுதலாக வாகனங்கள் விரைவில் வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

காவல்துறையினர் மேற்கொள்ளும் கடுமையான பணிகளின் போது, காவல்துறையினர் பல சமயங்களில் தங்கள் இன்னுயிரையும், தியாகம் செய்கின்ற சூழ்நிலைகள் ஏற்படுகின்றன. மக்கள் நலம் காக்க, தங்கள் இன்னுயிரை அர்ப்பணித்த, நல்லவர்களின் தியாகம், என்றென்றைக்கும் சரித்திரமாக நிலைத்து நிற்க, இனி நினைவிடங்கள் அதாவது Memorial-கள் கட்டுவது என்ற கொள்கை முடிவை எடுத்துள்ளோம் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கென, தேவையான நிதி ஒதுக்கீடும் செய்யப்படும். இந்தக் கொள்கை முடிவின்படி, முதல் கட்டமாக, மறைந்த பிரதமர் அமரர் ராஜீவ் காந்தி அவர்களுடன், வீர மரணம் அடைந்த 9 காவலர்களின் நினைவாக, ஸ்ரீபெரும்புதூரில் ஒரு இலட்சம் ரூபாய் செலவில், ஒரு நினைவிடம் - Memorial-கட்டப்படும் என்பதையும் 9.4.1993 அன்று, சந்தனக் கடத்தல் வீரப்பன் வைத்த கண்ணிவெடி விபத்தில், வீர மரணம் அடைந்த 5 காவலர்கள், மற்றும் 2 வனக் காவலர்களின் தியாகத்தை நினைவுகூரும் வண்ணம், 50,000 ரூபாய் செலவில் ஒரு நினைவிடம் கட்டப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன். பொது நன்மைக்காக, தங்களது விலைமதிக்க இயலாத உயிரை அர்ப்பணித்தவர்களுக்குத் தமிழக மக்கள் என்றென்றும் நன்றி பாராட்டுவார்கள் என்பதை இந்த நினைவிடங்க்ள் எதிர் காலச் சந்ததியினருக்கு எடுத்துக் காட்டும், என்று உறுதியாக நம்புகிறேன்.

1990-ஆம் ஆண்டு காவல் துறையில் பணியிலிருந்த பணியாளர்களின் எண்ணிக்கையை, 1995-ஆம் ஆண்டில் பணிபுரியும் பணியாளர்களின் எண்ணிக்கையோடு ஒப்பிட்டு நோக்கும்போது எந்த அளவிற்கு இன்று காவல்துறை வளர்ந்துள்ளது என்பது புலனாகும்.

1990-ஆம் ஆண்டு, 73 காவல்துறைக் கண்காணிப்பாளர்கள் மட்டுமே, செயல்பட்டு வந்தனர். அந்த எண்ணிக்கை இன்று, 94 ஆக உயர்ந்துள்ளது. அதேபோல், 1990-ஆம் ஆண்டு, 44 என்ற நிலையில் இருந்த, கூடுதல் காவல்துறைத் துணைக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை, இன்று 72-ஆக உயர்ந்துள்ளது. காவல்துறை துணைக் கண்காணிப்பாளர்களின் எண்ணிக்கை 357-லிருந்து 519-ஆகவும், காவல்துறை ஆய்வாளர்களின் எண்ணிக்கை, 1,441-லிருந்து 1,855-ஆகவும், உதவி ஆய்வாளர்களின் எண்ணிக்கை, 4,587-லிருந்து 5,139-ஆகவும், தலைமைக் காவலர்களின் எண்ணிக்கை, 6,750லிருந்து 9,772 ஆகவும் முதல் நிலை காவலர்களின் எண்ணிக்கை 5,878-லிருந்து, 23,411 ஆகவும் உயர்ந்துள்ளன என்பதை ஒப்பிட்டுப் பார்க்கும் போது இந்த நான்கு ஆண்டுகளில், காவல்துறை அடைந்துள்ள பரிணாம வளர்ச்சியின் பரிமாணங்கள் எளிதில் புரியும் என்று நம்புகிறேன்.

மிகச் சிறிய வயதிலேயே, மாற்றாரின் உயிரைக் காப்பாற்றுகின்ற, வீர தீரச் செயல்களில் ஈடுபட்டு அரிய சாதனைகளைப் புரிந்தவர்களுக்கு

நல்லதை நினைப்போம்!

★ **நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ அதுதான் நடக்கும்.**

—விவேகானந்தர்

ஒவ்வொரு ஆண்டும் "அண்ணா விருது" தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகின்றது. சில நேரங்களில் அத்தகையவர்கள் அடுத்தவர்களின் உயிரைக் காப்பாற்றுகின்ற முயற்சிகளில், நிரந்தரமாக ஊனமாகிவிடுகின்ற சூழ்நிலைகள் கூட, ஏற்படுவது உண்டு. அவர்களுக்கு வெறும் பதக்கங்களும், நிதி உதவியும் கொடுப்பதோடு மட்டும் நின்று விடாமல், அவர்களின் எதிர்காலத்திற்குப் பயன் உண்டாகும் வண்ணம், மருத்துவக் கல்வி, பொறியியல் கல்லூரி, விவசாயக் கல்வி போன்ற எல்லாத் தொழில் நுட்பக் கல்விகளைப் பயில, வருகின்ற கல்வி ஆண்டு முதல் தனியே இட ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை இந்த நல்ல நேரத்தில் அறிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

வீர தீரச் செயல்களுக்குப் பெயர் பெற்ற காவல்துறையின் திருவிழாவான, இந்த இனிய நாளில் அண்ணா விருது பெற்றவர்களுக்கு, இந்தப் புதிய சலுகையை நான் அறிவிப்பது பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

தமிழ்நாடு காவலர் வீட்டு வசதிக் கழகத்தால், கோயம்புத்தூர் கணபதி கிராமத்தில் கட்டி வழங்கப்பட்ட குடியிருப்புகளை வாங்கி அதில் வசித்து வரும் ஓய்வு பெற்ற காவலர்கள் ஒரு கோரிக்கையை இன்று என்னிடம் கொடுத்துள்ளார்கள். 1986-ஆம் ஆண்டு கழகத்தால் நிர்ணயிக்கப்பட்ட வீட்டின் மதிப்பைத் தாங்கள் கட்டி முடித்த பின்பு, கிட்டத்தட்ட 10 ஆண்டுகள் கழித்து பத்திரப் பதிவு செய்யும் போது, இன்றைய மார்க்கெட் நிலவரப்படி, பத்திரப் பதிவுக் கட்டணம் Stamp duty செலுத்தக் கட்டாயப் படுத்தப்படுவதாகவும், எனவே, பழைய மதிப்பின் அடிப்படையில், பத்திரப் பதிவு செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார்கள்.

ஓய்வு பெற்ற காவலர்களின் இந்தக் கோரிக்கையை, முழுமையாக ஏற்றுக் கொண்டு, கணபதி கிராமத்தில் காவலர் வீட்டு வசதிக் கழகத்தால் கட்டப்பட்ட, 432 வீடுகளுக்கு, 1986-ஆம் ஆண்டு நிர்ணயித்த வீட்டு மதிப்புப்படி, ஏற்கெனவே பணம் செலுத்தியவர்கள், கூடுதலாகப் பத்திரப் பதிவுக் கட்டணம் எதுவும் கட்ட வேண்டியதில்லை என்பதை அறிவிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன்.

அந்த வீட்டிற்கான பழைய மதிப்பையே, பத்திரப் பதிவின் போது கணக்கில் கொள்ள வேண்டும் என்று விரைவில் ஆணை வழங்கப்படும். இதனால் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 20,000 ரூபாய் வரை கட்ட வேண்டிய கூடுதல் பத்திரப் பதிவுக் கட்டணத்திலிருந்து, விலக்குக் கிடைக்கும். ஓய்வு பெற்ற பின்பு கூட, காவலர்களுக்கு உதவிக்கரம் நீட்ட எங்கள் அரசு என்றைக்கும் தயாராக உள்ளது என்பதை, இந்த நிகழ்ச்சி எடுத்துக்காட்டும் என்று நம்புகிறேன்.

காவல்துறையிடம் அதிகமான சேவையையும், நல்ல பணியையும், பொதுமக்கள் எதிர்பார்ப்பதால் தான், தாங்கள் எதிர்பார்த்த சேவை, கிடைக்கவில்லையே என்ற ஆதங்கம் அவர்கள் மனதில் எழுகின்றது.

> ★ **சமுதாயத்தைப் பின்பற்றி மனிதன் அடக்கமாகப் பணியாற்ற வேண்டும்.**
>
> **–அண்ணல் காந்தியடிகள்**

மக்களுடைய எதிர்பார்ப்புகளுக்கும், நம்பிக்கைக்கும் ஈடு கொடுத்து, நீங்கள் குற்றக் கண்டுபிடிப்புப் பணியிலும், குற்றத் தடுப்புப் பணியிலும் பொதுமக்களின் உடைமைகளையும், உரிமைகளையும் பாதுகாக்கும் பணியிலும் உங்களுக்கே உரித்தான ஒரு புதிய உத்வேகத்துடன் செயல்பட வேண்டும் என்று இந்த நல்ல நேரத்தில் அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

வாய்ப்பும், வசதியும் அற்ற ஏழை எளிய மக்களுக்கு அது கிராமங்கள் ஆனாலும் சரி, நகரங்கள் ஆனாலும் சரி தாங்கள் எதிர்கொள்ளுகின்ற பல்வேறு சட்டம் ஒழுங்கு, உரிமை மீறல்; உடைமைப் பறிப்பு போன்ற பிரச்சினைகளுக்குத் தீர்வு காண, நம்பிக்கையுடன் அவர்கள் நாடுகின்ற ஒரே புகலிடம், காவல் நிலையம் தான். சட்டத்தின் கீழ், தங்களுக்குப் பாதுகாப்பும்; நிவாரணமும் வேண்டி, இந்தச் சமுதாயத்தின் அடிமட்டத்து மக்கள், ஏழை எளிய மக்கள், ஆதரவற்றோர், மகளிர், முதியோர் ஆகியோர் காவல்துறையை அனுதினமும் நாடுகிறார்கள். தங்களுடைய குறைகளை முறையிட்டுத் தீர்வு காண, காவலர்களை நாடி வருகின்ற, எண்ணற்ற ஏழை

மக்களிடம் உற்றதொரு நண்பராக, பாதுகாவலராகக் காவல்துறையினர் நடந்து கொள்ள வேண்டும். அதன் மூலம் தற்போது காவல்துறை ஆற்றி வரும் சேவை, மேலும் பன்மடங்கு சிறப்படையும் என்பது உறுதி.

காவல்துறையைப் போலவே, சிறைத் துறையினரும், தீ அணைப்புத் துறையினரும், பல்வேறு கடினமான சூழ்நிலைகளில் செயலாற்றி வருகின்றார்கள். இத்துறைகளைச் சேர்ந்தவர்கள், தங்கள் கடமைகளைச் சீரிய முறையில் செயலாற்றும் போது, இயல்பாகவே, பொதுமக்களின் மனமார்ந்த பாராட்டுதல்களையும், நல் வாழ்த்துக்களையும், எளிதில் பெற்றுவிடுவார்கள். இந்த உண்மையை மனதில் நிறுத்தி, இத்துறையைச் சேர்ந்தவர்கள் செயலாற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

வண்ணமயமான இந்த விழாவினை எல்லாச் சிறப்புகளுடன் மிகவும் சீரிய முறையிலே அமைத்து இங்கே பெருந்திரளாகக் குழுமியுள்ள பொதுமக்கள், அனைவரின் உள்ளங்களையும் கொள்ளை கொள்ளும் பல்வேறு கலை நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்த காவல்துறை இயக்குநர், திரு வால்டர் தேவாரம் அவர்களுக்கும், அவர் உடனிருந்து பணியாற்றிய அனைத்து மாவட்டக் காவல்துறை அதிகாரிகளுக்கும், காவலர்களுக்கும், என்னுடைய மனமார்ந்த பாராட்டுக்களையும் நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். குறிப்பாக, தமிழ்நாடு முதலமைச்சர் பதக்கம் வழங்குகின்ற, இந்த விழா தமிழகக் காவல்துறையின் அனைத்துப் பிரிவினரும், ஒன்று சேர்ந்து எடுக்கிற ஒரு இனிய திருவிழாவாக உருவாக்கிக் காட்டியதற்காகக் காவல்துறை இயக்குநர் திரு வால்டர் தேவாரம் அவர்களுக்குத் தனிப்பட்ட முறையில் எனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

உலகெங்கும் பெண்களின் சம உரிமைத் தத்துவம் புதிய பரிமாணத்தைப் பெற்று வருகின்ற சூழ்நிலையில், தமிழகக் காவல் துறையின் மிக முக்கியமான அங்கமாக விளங்கும் பெண் காவலர்கள் பிரிவினைச் சேர்ந்த பெண் காவலர்களும், விளையாட்டுக்களிலும், கலை நிகழ்ச்சிகளிலும் பங்குகொண்டு "நாங்கள் எவருக்கும் சளைத்தவர்கள் அல்ல" என்பதை, இங்கே நிரூபித்துக் காட்ட உள்ளார்கள். வீர விளையாட்டுக்களிலும், மற்ற நிகழ்ச்சிகளிலும், பங்கு கொள்ள உள்ள அனைவருக்கும், மீண்டும் எனது உள்ளங்கனிந்த வாழ்த்துக்கள். வண்ணமிகு இந்த விழாவிற்குப் பெருந்திரளாக வந்து, சிறப்பு சேர்த்த, எனது அன்பிற்குரிய தமிழகத்துப் பெருமக்கள் அனைவரும், எல்லா நலனும் வளமும் பெற்று, வாழ்வாங்கு வாழ்க என்று நெஞ்சார வாழ்த்துகிறேன்.

ஆதிதிராவிடர் மாணவர்க்கான விடுதிக் கட்டடங்கள்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ/மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்காக, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. அவைகளில் மாணவ/மாணவியர்களின் கல்வி பாதிக்காதிருக்க புதிய விடுதிகள் திறத்தல் மற்றும் ஏற்கெனவே இருக்கிற விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டுதல் என்பதும் ஒன்றாகும். ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலைக்கேற்ப விடுதிகளுக்குக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

1995- 96- ஆம் ஆண்டில் ஆறு மாணவர் விடுதிகளுக்கும் பத்து மாணவியர் விடுதிகளுக்கும் எல்லா வசதிகளும் கொண்ட நிலையான கட்டடங்கள் கட்டுவதற்கு அரசாணை (நிலை) எண். 160, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 12.9.95-இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

'தமிழ்நாடு முதலமைச்சரின் பதக்கம்' வழங்கும் விழா!

கோவையில் ஜவகர்லால் நேரு விளையாட்டு அரங்கத்தில், "மாண்புமிகு தமிழக முதலமைச்சர் பதக்கம் வழங்கும் விழா" 8.10.95 அன்று மிகக் கோலாகலமாக நடந்தேறியது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள், காவல், தீயணைப்பு மற்றும் ஊர்க்காவல் படையில் சிறந்த பணியாற்றி வந்த காவலர்களுக்குப் பதக்கங்கள் வழங்கிச் சிறப்பித்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், காரின் முன்னும் பின்னும் குதிரைப்படை வீரர்கள் அணிவகுத்து அழைத்து வர, மங்கள வாத்தியங்களின் வானதிரும் முழக்கத்தோடு, அதற்கு ஈடுகொடுக்கும் வகையில், அரங்கில் அமர்ந்திருந்தோரின் ஆரவாரத்தோடும், நேரு விளையாட்டு அரங்கிற்கு வருகை தந்தார். மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களைத் தமிழ்நாடு காவல்துறைத் தலைவர் திரு டபிள்யூ ஐ. தேவாரம், இ.கா.ப., அவர்கள் வரவேற்றார்.

திடலில் அமைக்கப்பட்டிருந்த எழில்மிகு மேடைக்குச் சென்று, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், காவலர்கள் அளித்த வீர அணிவகுப்பு மரியாதையை ஏற்றுக் கொண்டார்கள். பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெண்ணிற ஜீப்பில் ஏறி, கூடியிருந்த மக்கள் அனைவருக்கும் தன் அன்பையும் வாழ்த்தையும் தெரிவித்துக் கொண்டே வலம் வந்தார். மக்களும் வானதிர ஆரவாரம் செய்து தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்தனர். பின்னர், தமிழகக், காவல்துறை, சிறைத்துறை, தீயணைப்புத்துறை மற்றும் ஊர்க்காவல் படை ஆகியவற்றைச் சேர்ந்தவர்களின் சீரிய சேவைக்காகவும், சிறப்புமிக்க செயல்களுக்காகவும் முதலமைச்சரின் பதக்கங்களை, 85 காவலர்களுக்கு வழங்கிப் பெருமைப்படுத்தினார்.



மேலும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், சந்தன மரக் கடத்தல் வீரப்பனிடம் சிக்கியிருந்த பிணையாளர்களை உயிருடன் பிடிக்க மிகச் சிறப்பான முறையில் நற்பணி ஆற்றியமைக்காக, கோவை மாவட்ட முன்னாள் ஆட்சித் தலைவர் திரு சி.வி. சங்கர், இ.ஆ.ப., அவர்கள் மற்றும் சந்தன மரக் கடத்தல் வீரப்பனிடம் சிக்கியிருந்த பிணையாளர்களை மீட்க, சிறப்பு அதிரடிப் படைக்குத் தளபதியாக நடத்திச் சென்ற போற்றத்தக்க நற்பணியைப் பாராட்டி, தமிழகக் காவல்துறைத் தலைவர் திரு வால்டர் தேவாரம், இ.கா.ப., அவர்கள் உள்ளிட்ட 13 காவல்துறை அலுவலர்களுக்குத் "தகுதி நற்சான்றிதழ்" வழங்கியும் பெருமைப்படுத்தினார். அத்துடன் கமாண்டோ பயிற்சி பெற்ற காவலர்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் சிறப்பான முறையில் திறமையைக் காண்பித்த 3 காவலர்களுக்குப் பதக்கங்களும், காசோலைகளும் வழங்கப்பட்டன.

விருதுகள் வழங்கிய பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். பிறகு பதக்கங்கள் பெற்ற காவலர்களோடு புகைப்படம் எடுத்துக்கொண்டார்.

அடுத்து, தமிழகக் காவல் துறையின் சார்பாக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு காவல்துறைத் தலைவர் திரு வால்டர் தேவாரம், இ.கா.ப., அவர்கள் நினைவுப் பரிசு வழங்கினார்.

அதனைத் தொடர்ந்து மாண்புமிகு முதல்வர் அவர்கள், காவலர்கள் நிகழ்த்திய அற்புதமான கலை நிகழ்ச்சிகளைக் கண்டுகளித்தார்.

திடலில் இருந்த காவலர் ஒருவர், கையில் தீப்பந்தத்துடன் ஓடி வந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள் கரங்களில் தீப்பந்தத்தைக் கொடுக்க, வேறு ஒருவர் அதை வாங்கிச் சென்று திடலில் வைக்கப்பட்டிருந்த பீரங்கியின் வாயில் திணிக்க, அரங்கமே அதிர இடியோசையையும் தோற்கடிக்கும் சப்தத்தோடு பீரங்கி முழங்க, எதிரே கோட்டை வாசல் போன்று அலங்கரிக்கப்பட்டிருந்த கதவுகள் திறந்து அதிலிருந்து வெளிவந்த காவலர்கள் நிகழ்த்திய கலை நிகழ்ச்சிகள் கண்ணையும் கருத்தையும் பெரிதும் கவர்ந்தன.

'புரட்சித்தலைவியின் நெருப்புக் கணைகள்' என்றழைக்கப்படும் மகளிர் மற்றும் ஆடவர் காவலர்கள் நடத்திக்காட்டிய மோட்டார் சைக்கிள் வீர தீரச் செயல்களும், கையில் தீப்பந்தத்தை

தேனுபுரீஸ்வரர் திருக்கோயில் பராமரிப்புக்கு

–மாண்புமிகு முதல்வர் உதவி

செங்கல்பட்டு-எம்.ஜி.ஆர். மாவட்டம் மாடம்பாக்கம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலைச் சரிபார்க்கும் பணிகளும் புனரமைப்புப் பணிகளும் மேற்கொள்வதற்காக நிதி தேவைப்படுகின்றது என்றும், அதனை முதலமைச்சரின் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து வழங்க வேண்டும் என்று கோரியும் இந்து சமய அறநிலையத் துறை ஆணையர், மாண்புமிகு தமிழக முதலமைச்சரும் தமிழ்நாடு திருக்கோயில் நிர்வாக வாரியத் தலைவருமான டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் கோரிக்கை ஒன்றினை அனுப்பி இருந்தார்.

மிகவும் பழமையானதும், சோழர் காலத்தில் கட்டப்பட்டு பின்னர் விஜயநகர மன்னர்களால் பராமரிக்கப்பட்டு, அருணகிரிநாதர் போன்ற சமயப் பெரியோர்களால் பாடப்பெற்ற திருக்கோயில்களில் இதுவும் ஒன்று.

அருள்மிகு தேனுபுரீஸ்வரர் திருக்கோயிலின் சிறப்பினையும், அதனுடைய எழில்மிகுந்த சிற்ப வேலைப்பாடுகளைப் பராமரிக்கப்பட வேண்டிய அவசியத்தைக் கருதியும், அத்திருக்கோயிலின் புனரமைப்பு மற்றும் பராமரிப்புப் பணிகளுக்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முதலமைச்சர் திருக்கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதியிலிருந்து ஒன்பது லட்சம் ரூபாய் நிதி வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார். இதற்கான பணிகள் விரைவில் தொடங்கப்பட்டு அத்திருக்கோயில் திருப்பணி விரைந்து நடைபெற வேண்டும் என்றும் உத்தரவிட்டுள்ளார்.

வைத்துக்கொண்டு Thanks to CM என்றும், welcome to CM என்றும் எழுத்து வடிவம் காண்பித்த அந்தத் திறமையும் மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகவே இருந்தது. முன்னதாக, காவல்துறைத் தலைவர் திரு வால்டர் தேவாரம், இ.கா.ப., அவர்கள் வரவேற்றுப் பேசினார். உள்துறைச் செயலர் திரு வரதராஜுலு, இ.ஆ.ப., அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். அனைத்து அமைச்சர் பெருமக்களும் வாரியத்தலைவர்களும், சட்டமன்ற உறுப்பினர்களும், உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பித்தனர்.

இந்த மாபெரும் விழாவில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் காவல் அலுவலர்களுக்கு அளித்த விருதுகள், காவல் துறைக்கு ஒரு புதிய உத்வேகத்தையும், தங்கள் பணியில் மேலும் ஆழ்ந்து ஈடுபடுத்திக் கொள்ளும் சீரிய நோக்கத்தையும் ஏற்படுத்தும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

--நிகழ்ச்சித் தொகுப்பு

க. சண்முகசுந்தரம்.

மீனவர் சேமிப்புத் திட்டத்துக்கு

ரூ 11½ கோடி!

–மாண்புமிகு முதல்வர் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆலோசனை மற்றும் அறிவுரையின் அடிப்படையில், தமிழக அரசு தமிழ் நாட்டிலுள்ள மீனவச் சமுதாயத்தினரின் நல்வாழ்வுக்காகப் பல்வேறு நலத்திட்டங்களைக் கடந்த நான்கு ஆண்டுகளாகச் செயல்படுத்தி வருகின்றது.

தமிழக அரசு இதுவரை நடைமுறைப் படுத்தியுள்ள திட்டங்களில் மீனவச் சமுதாயத்தினரை மிகவும் கவர்ந்துள்ள திட்டம் 'மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டம்' ஆகும். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின் படி, நடைமுறைப் படுத்தப்பட்டிருக்கும் மீனவர்களின் நலம் காக்கும் 'மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்' கீழ் மீன்பிடிப்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்கள் தங்கள் சேமிப்புத் தொகையாக மாதம் ரூ.45 வீதம் எட்டு மாதங்களுக்கு ரூ.360 செலுத்துவார்கள். இவ்வாறு மீனவர்களால் சேர்க்கப்பட்ட தொகைக்கு ஈடாக மத்திய மற்றும் மாநில அரசு தங்கள் பங்கான ரூ. 720-ஐ செலுத்துவார்கள். இந்தத் தொகையானது மீன் பிடிப்பு இல்லாத பருவ காலங்களில் மாதம் ரூ.270 வீதம், நான்கு மாதங்களுக்கு மொத்தம் ரூ1080 ஆக, இத்திட்டத்தில் சேர்ந்த மீனவர்களுக்கு வழங்கப்படும். இந்த அரசு பதவியேற்ற 1991-92-ஆம் ஆண்டில் மீனவர்கள் இத்திட்டத்தின் கீழ் ரூ.10 மட்டும் மாதம்தோறும் செலுத்த வேண்டியிருந்தது. மீன் பிடிப்பு, பருவ காலங்கள் அற்ற நாட்களில் அந்தத் தொழில் ஒன்றினையே நம்பியிருக்கும் பல்லாயிரக் கணக்கான மீனவச் சமுதாயத்தினர் பயனடையும் வகையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மீனவர்கள் மாதம்தோறும் கட்டவேண்டிய தொகையாக ரூ.10 ஐ, ரூ.45 ஆக உயர்த்தியதை அடுத்து, மாதம் ரூ.750 ஐ நான்கு மாதங்களுக்குப் பெற வழி வகுத்தார். 1991-92-இல் 76,610 மீனவர்கள் மட்டும் இத்திட்டத்தில் சேர்ந்திருந்தனர். ஆனால், தற்போது 1,59,010 மீனவர்கள் இத்திட்டத்தில் பங்கேற்றுள்ளனர்.

மீனவர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்று விளங்குகின்ற இந்த "மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரணத் திட்டத்தின்" கீழ் நடப்பு ஆண்டான 1995-96-ஆம் ஆண்டில் 11.45 கோடி ரூபாயைச் சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகையாக வழங்கிட, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்கள். இத்திட்டத்தின் கீழ், 1991-92-ஆம் ஆண்டில் 65.8 இலட்சம் ரூபாயும், 1992-93-ஆம் ஆண்டில் 5.36 கோடி ரூபாயும், 1993-94-ஆம் ஆண்டில் 7.20 கோடி ரூபாயும், 1994-95-ஆம் ஆண்டில் 9.49 கோடி ரூபாயும் 'சேமிப்பு மற்றும் நிவாரணத் தொகையாக வழங்கப்பட்டது.

அரசுப் போக்குவரத்துக்கழகத் தொழிலாளர்களுக்குப் போனஸ்!

—மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு

தமிழ்நாட்டிலுள்ள போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்கு 1994-95-ஆம் ஆண்டுக்கான போனஸ் தொகையாக சென்ற ஆண்டைப் போலவே இந்த ஆண்டும் போனஸ் சட்டப்படி குறைந்தப் பட்ச போனசாக 8.33 சதவீதம் வழங்கப் படும். அதோடு தொழிலாளர் ஒவ்வொரு வருக்கும் கருணைத் தொகையாக 8.67 சதவீதமும் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

இந்த அறிவிப்பின்படி, போக்குவரத்துக் கழகத் தொழிலாளர்களுக்குச் சென்ற ஆண்டைவிட 0.75 சதவீதம் கூடுதலாக போனஸ் கிடைக்க வகை செய்யப் பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் இந்த அறிவிப்பின் மூலம், தமிழக அரசு போக்கு வரத்துக் கழகத்தொழிலாளர்கள் 1,16,000 பேர் பயன் பெறுவார்கள். போனஸ் தொகையும், கருணைத் தொகையும் சேர்த்து, போக்குவரத்துக் கழக ஊழியர் களுக்கு மொத்தம் 58.57 கோடி ரூபாய் வழங்கப்படும்.

போனஸ் சட்டத்தின்படி, போனஸ் பெற வாய்ப்பில்லாத சுமார் 2,000 பேர்களுக்குத் தலா 2,500 ரூபாய் கருணைத் தொகையாக வழங்கப்படும். போனஸ் பெறுவதற்கான கால அளவு தகுதி ஒரு ஆண்டுக்குக் குறைவாக இருப்பினும், கருணைத் தொகை முழுமையாக வழங்கப் படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சென்ற ஆண்டுக்கு (1993-94) உரிய போனஸ் நிலுவைத் தொகையையும், அந்த ஆண்டுக் குரிய கருணைத் தொகையையும், இந்த ஆண்டு வழங்க ஆணை பிறப்பித்துள்ளார். நிலுவைத் தொகையாக மொத்தம் 18.76 கோடி ரூபாய் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும். இந்த நிலுவைத் தொகை மட்டும் தமிழர் திருநாளாம் பொங்கல் தினத்தை ஒட்டி வழங்கப்படும்.

எந்த ஆண்டும் இல்லாத அளவிற்கு, தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டி லுள்ள 19 அரசுப்போக்குவரத்துக் கழக ஊழியர்கள் 1,16,000 பேர் பயன்பெறும் வகையில் மேற்கண்ட ஆணைகளை வெளி யிட்டுள்ளார்.

★ உங்களைவிட உங்களுக்கு யாருமே நல்ல அறிவுரையை வழங்க முடியாது.

—சிஸேரோ

★ பிறரைச் சீர்திருத்தும் கடமையை விடத் தன்னைச் சீர்திருத்துவதே முதல் கடமை.

—பெர்னாட்ஷா

★ நன்மைக்கு நன்மை செய். தீமைக்கும் நன்மை செய்.

—இங்கர்சா

அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா

தமிழக அரசின் சார்பாக, அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாள் விழா 13.10.95 அன்று, கலைவாணர் அரங்கில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது.

மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் அண்ணல் காந்தியடி களின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார். மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் தலைமையேற்றார். மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு பி. ஈஸ்வரமூர்த்தி அவர்களும், மாண்புமிகு கால் நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர் திரு சி. தாமோதரன் அவர்களும் மாணவ, மாணவி யருக்குப் பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார்கள்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு. தி.சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப அவர்கள் விழாத் தொடக்கவுரையாற்றிப் பேசும் போது குறிப்பிட்டதாவது:

"டாக்டர் புரட்சித் தலைவி யின் ஆணைக்கிணங்க, பாட்டுக் கொரு புலவன் பாரதிக்கும், நாட்டை ஆள்பவருக்குக் கடமை கண்ணியம், கட்டுபாடு வேண்டு மென உரைத்த பேரறிஞர் அண்ணாவுக்கும் ஈட்டியதெல் லாம் ஏழைகளுக்கே என்று வாழ்ந்த புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்க்கும், கருமவீரர் காமராஜருக்கும் இன்னும் இது போன்று நாட்டுக்குழைத்த நல்லவர்களுக்கெல்லாம் விழா எடுத்து வருகின்றது தமிழக அரசு. அதேபோல் அண்ணல் காந்தியடிகளுக்கு இந்த நாளை நினைவுக்கூர்ந்து வருங்காலத் தலைமுறை வளர்ந்து நலம் பெறவும், அவரது பிறந்த நாளில் நமது நன்றியையும், அவர்பால் நாம் கொண்டுள்ள பற்றையும் எடுத்துக் காட்டிடவும் அரசு விழா எடுத்துச் சிறப்பித்து வருகின்றது.

"இன்றைய மாணவர்கள் நாளைய சமுதாயத்தின் முதுகெலும்புகள். காந்தியடிகள் போதித்த நெறியைப் பின்பற்றி நடந்தாலே போதும், அவர்களது வாழ்க்கைப் பிரகாசிக்கும்.

"காந்தியடிகள் ஆற்றிய தொண்டு, மகத்தான தொண்டு. வாழ்ந்த வாழ்க்கை மகத்தான வாழ்க்கை. ஒரு நாள் காந்தியடி களுக்கு ஒருவர் பணத்தைக் கொடுத்தார். 'போதாது' 'போதாது' என்று கூறி காந்தியடிகள் இன்னும் வாங்கிக் கொண்டே இருந்தார்.

அண்ணலைப் பற்றி அண்ணா

அண்ணல் காந்தியடிகள் எல்லாத் துறைகளிலும் தமது முத்திரை பொறித்துச் சென்றவர்;

அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே ஒரு துறைக்கு அல்ல, எல்லாத் துறைகளுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத் துறைகளிலும் வெற்றி காணவேண்டும். அவைகளின் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்று கணக்குப் பார்க்க வேண்டும்.

ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ்விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடையாது. ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு இந்நாட்டுக்குக் காந்தியடிகள் வடிவத்திலே கிடைத்தது. எனவேதான், காந்தியடிகளின் பிறந்தநாள் ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாக மட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த பொற்காலம் என்ற முறையிலே சிறப்புப் பெறுகிறது.

–பேரறிஞர் அண்ணா

மறுபடியும் மறுபடியும், வாங்கிக் கொண்டே இருந்தார். இதைக் கண்டதும் காந்தியடிகளிடம், "நீங்கள் போதும் என்றே சொல்லமாட்டீர்களா?" என்று கேட்டார். அதற்குக் காந்தியடிகள் சொன்னது; "கொடுங்கள், நான் வேறல்ல, இந்த தேசம் வேறல்ல; நான் வேறல்ல இந்தத் தேசத்து மக்கள் வேறல்ல: இந்தத் தேசத்து மக்களுக்கு அதிகப் பசி உள்ளது. அவர்களுக்கு இந்தப் பணம் பயன்பட வேண்டும்" என்று கூறினார்.

"இன்னும் ஒரு சம்பவம். ஒரு நாள் காந்தியடிகள் சிறையில் வாழ்ந்த போது, சிறை அதிகாரிகள் விளக்கெண்ணெய் வைத்து அடுப்பெரித்து, சுடுநீர் வைத்துக் கொண்டிருந்தார்கள். சுடுநீரை அந்த அடுப்பிலிருந்து இறக்கிவிட்டபோதும், அந்த அடுப்பை அணைக்கவில்லை. அப்போது காந்தியடிகள் அந்த அடுப்பில் உள்ள தீயை அணைக்கச் சொன்னதற்கு, அது வீணானால் பரவாயில்லை. அது அரசுப் பணந்தானே" என பதில் கூறினார்கள். அதற்குக் காந்தியடிகள் கூறியது "நாம் வேறல்ல, அரசு வேறல்ல, நம் பணம் வேறல்ல, நம் அரசுப் பணம் வேறல்ல" என்று சொன்னார்.

"அண்ணல் காந்தியடிகள் சொன்ன கருத்துக்களை, அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறி முறையை அவரது நற்பண்புகளை நாம் அனைவரும் பின்பற்றி வாழுதல் வேண்டும்".

பேராசிரியை திருமதி சாரதா நம்பி ஆரூரன் அவர்கள் பேசும்போது கூறியதாவது:

"காந்தியடிகள் எதைச் சொன்னாரோ, அதைச் செய்தார். எப்படி வாழ வேண்டும் என்று சொன்னாரோ, அப்படியே வாழ்ந்தும் காட்டினார். முதலில் தியாகம் செய்ய வேண்டும். தியாகம் செய்யும் நல்ல உள்ளங்களால் தான் நன்மை செய்ய இயலும்; மனமும் இருக்கும். அரசியல் பற்றி மாணவர்களிடம் அறிவுரை சொல்ல வேண்டுமானால், "அரசியலைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். ஆனால், அரசியலில் சேராதீர்கள்" என்று கூறலாம். அறிஞர் அண்ணா கூட இதைப்பற்றிக் கூறியபோது. "அரசியல் என்பது அத்தை மகள் போல, பாசத்துடன் பழகு; தொட்டுப் பார்க்க எண்ணாதே' என அவர் பாணியிலே கூறினார். பெண்களுக்கு முழு சுதந்திரம் வேண்டும் எனக் கூறியவர் அண்ணல் காந்தியடிகள். அவர் விழாவினை இங்கு அரசு நடத்திக் கொண்டிருப்பது மிகப் பொருத்தமாகும்".

பள்ளிக் கல்வி இணை இயக்குநர் திரு மூ.ராஜாராம் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"காந்தியடிகள் திருக்குறளைப் படித்துவிட்டு, நான் தமிழ் முழுவதும் கற்க விரும்புகிறேன் என்று கூறினார். அத்தகைய காந்தியடிகளுக்கு அரசு, இன்று பிறந்த நாள் விழா எடுத்துப் பெருமை சேர்க்கின்றது. காந்தி அடிகளைப் பற்றி ஆங்கிலேயர், Prince of Peace என்று வர்ணித்திருக்கிறார்கள். புத்தர், ஏசுவுக்கு நிகராக வாழ்க்கையை வாழ்ந்திருப்பவர் காந்தியடிகள். அவரின் அகிம்சை வழியைக் கடைப்பிடித்து வாழ்வதே நமது இலட்சியமாக இருக்க வேண்டும்".

சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜீனத் சர்புதீன் அவர்கள் பேசுகையில், "வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடத்தி வெற்றி கண்ட அண்ணல் காந்தியடிகளுக்கு வெள்ளை மனம் படைத்த புரட்சித்தலைவி அவர்கள் விழா எடுத்து வருவது மிகவும்,

பொருத்தமானது" என்று கூறினார்.

மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு. சி. தாமோதரன் அவர்கள் தனது சிறப்புரையில் குறிப்பிட்டதாவது:

"இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு எதை எதை எப்போது செய்ய வேண்டுமோ, அதை அதை அப்போது செய்து வருகிறது. மார்பில் தன்னைச் சுட்டவனை மன்னித்து விடுங்கள் என்று கூறிய ஒரு மகா ஆத்மாவுக்கு இன்று அரசு விழா எடுத்து வருவது பெருமைக்குரியது. மகாத்மா தன் தவறுகளையெல்லாம் தன் சுயசரிதைகளில் சுட்டிக்காட்டியவர்.

"தமிழ்நாட்டை நேசித்தவர், தமிழை நேசித்தவர். இந்தியர்கள் எப்போது முழு ஆடை புனைந்து கொள்ளும் வேளை ஏற்படுகிறதோ அப்போதுதான் தான் முழு ஆடை அணிவேன் என்று மேலாடை அணியாமலே தம் வாழ்நாளைக் கழித்தவர். பெண்ணுரிமைக்குக் குரல்

கொடுத்தவர். இந்திய தேச விடுதலைக்கு வித்திட்டவர். அந்த மகாத்மாவை உலகமே போற்றுகிறது.

"அண்ணல் காந்தியடிகளின் கனவுகளை நிறைவேற்றி, 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை, மகளிர் ஆசிரியைகளே நியமனம் செய்து, 10-ஆம் வகுப்பிலும், 11-ஆம் வகுப்பிலும் தமிழ்ப் பாடத்தில் முதல் இடத்தைப் பெறும் மாணவ, மாணவியருக்குத் தங்கப் பதக்கம் வழங்கும் திட்டத்தையும் தீட்டி, பல சாதனைப் படைத்து வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், இன்று விழா நடத்தி வருவது மிக மிகப் பொருத்தமான ஒன்று".

"மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு. பி. ஈஸ்வரமூர்த்தி அவர்கள் தமது சிறப்புரையில் கூறியதாவது:

"அகிம்சை என்ற சொல்லை உலகிற்கு அறிமுகப்படுத்திய ஒப்பற்றத் தலைவர் அண்ணல் காந்தியடிகள்.

"கிராமம் வாழ வேண்டுமானால், கிராம மக்கள் நன்றாக வாழ வேண்டும். கிராம மக்கள் நன்றாக வாழ்ந்தால் தான், நாடு

முன்னேற முடியும் என்பதில் காந்தியடிகள் பெரும் நம்பிக்கைக் கொண்டிருந்தார். நமது இதய தெய்வம் அவர்கள் கிராமத்திற்கும், கிராம மக்களுக்கும், ஏழை, எளியோர்க்கும் பல திட்டங்களைத் தீட்டி இந்தியத் துணைக் கண்டத்திலே மிகச் சிறப்பான முறையில், நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அண்ணல் காந்தியடிகள் அவர்களுக்கு, எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள், விழா எடுத்துப் பெருமைப்படுத்தி வருவது மிகவும் பொருத்தமானதாகும்.

அண்ணலைப் பற்றி அண்ணா

அண்ணல் காந்தியடிகள் எல்லாத் துறைகளிலும் தமது முத்திரை பொறித்துச் சென்றவர்;

அவர் ஒரு நாட்டின் காலம்! ஒரே ஒரு துறைக்கு அல்ல, எல்லாத் துறை களுக்கும் ஒரு திருப்பத்தை, ஒரு புதிய பொலிவை, வலிவைக் கொடுத்தவர்.

ஒரு நாட்டின் முன்னேற்றம் ஏதோ ஒரு துறையிலே மட்டும் பெறப்படுகிற வெற்றியைப் பொறுத்தது அன்று. எல்லாத் துறைகளிலும் வெற்றி காணவேண்டும். அவைகளின் ஒட்டு மொத்தத்தைக் கொண்டே அந்நாடு முன்னேற்றம் அடைந்திருக்கிறதா என்று கணக்குப் பார்க்க வேண்டும்.

ஒரு நாட்டின் வரலாற்றிலே அவ் விதமான ஒரு கணக்கு அடிக்கடி கிடையாது. ஒரு நூற்றாண்டுக்கு ஒரு முறை கிடைக்கும் என்றும் கூறிவிட முடியாது. அந்தக் கணக்கு இந்நாட்டுக்குக். காந்தியடிகள் வடிவத்திலே கிடைத்தது. எனவேதான், காந்தியடிகளின் பிறந்தநாள் ஒரு மாபெரும் தலைவரின் பிறந்த நாளாக மட்டுமின்றி, ஒரு நாட்டுக்குக் கிடைத்த பொற்காலம் என்ற முறையிலே சிறப்புப் பெறுகிறது.

–பேரறிஞர் அண்ணா

மறுபடியும் மறுபடியும், வாங்கிக் கொண்டே இருந்தார். இதைக் கண்டதும் காந்தியடிகளிடம், "நீங்கள் போதும் என்றே சொல்லமாட்டீர்களா?" என்று கேட்டார். அதற்குக் காந்தியடிகள் சொன்னது; "கொடுங்கள், நான் வேறல்ல, இந்த தேசம் வேறல்ல; நான் வேறல்ல இந்தத் தேசத்து மக்கள் வேறல்ல: இந்தத் தேசத்து மக்களுக்கு அதிகப் பசி உள்ளது. அவர்களுக்கு இந்தப் பணம் பயன்பட வேண்டும்" என்று கூறினார்.

"இன்னும் ஒரு சம்பவம். ஒரு நாள் காந்தியடிகள் சிறையில் வாழ்ந்த போது, சிறை அதிகாரிகள் விளக்கெண்ணைய் வைத்து அடுப்பெரித்து, சுடுநீர் வைத்துக் கொண்டிருந்தார்கள். சுடுநீரை அந்த அடுப்பிலிருந்து இறக்கிவிட்டபோதும், அந்த அடுப்பை அணைக்கவில்லை. அப்போது காந்தியடிகள் அந்த அடுப்பில் உள்ள தீயை அணைக்கச் சொன்னதற்கு, அது வீணானால் பரவாயில்லை. அது அரசுப் பணந்தானே" என பதில் கூறினார்கள். அதற்குக் காந்தியடிகள் கூறியது "நாம் வேறல்ல, அரசு வேறல்ல, நம் பணம் வேறல்ல, நம் அரசுப் பணம் வேறல்ல" என்று சொன்னார்.

"அண்ணல் காந்தியடிகள் சொன்ன கருத்துக்களை, அவர் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறி முறையை அவரது நற் பண்புகளை நாம் அனைவரும் பின்பற்றி வாழுதல் வேண்டும்".

பேராசிரியை திருமதி சாரதா நம்பி ஆரூரன் அவர்கள் பேசும்போது கூறியதாவது:

"காந்தியடிகள் எதைச் சொன்னாரோ, அதைச் செய்தார். எப்படி வாழ வேண்டும் என்று சொன்னாரோ, அப்படியே வாழ்ந்தும் காட்டி னார். முதலில் தியாகம் செய்ய வேண்டும். தியாகம் செய்யும் நல்ல உள்ளங்களால் தான் நன்மை செய்ய இயலும்; மனமும் இருக்கும். அரசியல் பற்றி மாணவர்களிடம் அறிவுரை சொல்ல வேண்டுமானால், "அரசியலைப் பற்றித் தெரிந்து கொள்ளுங்கள். ஆனால், அரசியலில் சேராதீர்கள்" என்று கூறலாம். அறிஞர் அண்ணா கூட இதைப்பற்றிக் கூறியபோது. "அரசியல் என்பது அத்தை மகள் போல, பாசத்துடன் பழகு; தொட்டுப் பார்க்க எண்ணாதே' என அவர் பாணியிலே கூறினார். பெண்களுக்கு முழு சுதந்திரம் வேண்டும் எனக் கூறியவர் அண்ணல் காந்தியடிகள். அவர் விழாவினை இங்கு அரசு நடத்திக் கொண்டிருப்பது மிகப் பொருத்தமாகும்".

பள்ளிக் கல்வி இணை இயக்குநர் திரு மூ.ராஜாராம் அவர்கள் பேசும்போது குறிப் பிட்டதாவது:

"காந்தியடிகள் திருக்குறளைப் படித்துவிட்டு, நான் தமிழ் முழுவதும் கற்க விரும்புகிறேன் என்று கூறினார். அத்தகைய காந்தியடிகளுக்கு அரசு, இன்று பிறந்த நாள் விழா எடுத்துப் பெருமை சேர்க்கின்றது. காந்தி அடிகளைப் பற்றி ஆங்கிலேயர், Prince of Peace என்று வர்ணித் திருக்கிறார்கள். புத்தர், ஏசுவுக்கு நிகராக வாழ்க்கையை வாழ்ந் திருப்பவர் காந்தியடிகள். அவரின் அகிம்சை வழியைக் கடைப்பிடித்து வாழ்வதே நமது இலட்சியமாக இருக்க வேண்டும்".

சேப்பாக்கம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஜீனத் சர்புதீன் அவர்கள் பேசுகையில், "வெள்ளையனே வெளியேறு இயக்கம் நடத்தி வெற்றி கண்ட அண்ணல் காந்தியடிகளுக்கு வெள்ளை மனம் படைத்த புர ட்சித்தலைவி அவர்கள் விழா எடுத்து வருவது மிகவும்,

பொருத்தமானது" என்று கூறினார்.

மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர் திரு. சி. தாமோதரன் அவர்கள் தனது சிறப்புரையில் குறிப்பிட்ட தாவது:

"இதய தெய்வம் புரட்சித் தலைவியின் அரசு எதை எதை எப்போது செய்ய வேண்டுமோ, அதை அதை அப்போது செய்து வருகிறது. மார்பில் தன்னைச் சுட்டவனை மன்னித்து விடுங்கள் என்று கூறிய ஒரு மகா ஆத்மாவுக்கு இன்று அரசு விழா எடுத்து வருவது பெருமைக்குரியது. மகாத்மா தன் தவறுகளையெல்லாம் தன் சுயசரிதைகளில் சுட்டிக்காட்டி யவர்.

"தமிழ்நாட்டை நேசித்தவர், தமிழை நேசித்தவர். இந்தியர்கள் எப்போது முழு ஆடை புனைந்து கொள்ளும் வேளை ஏற்படு கிறதோ அப்போதுதான் தான் முழு ஆடை அணிவேன் என்று மேலாடை அணியாமலே தம் வாழ்நாளைக் கழித்தவர். பெண்ணுரிமைக்குக் குரல் கொடுத்தவர். இந்திய தேச விடுதலைக்கு வித்திட்டவர். அந்த மகாத்மாவை உலகமே போற்று கிறது.

"அண்ணல் காந்தியடிகளின் கனவுகளை நிறைவேற்றி, 1 முதல் 5-ஆம் வகுப்பு வரை, மகளிர் ஆசிரியைகளே நியமனம் செய்து, 10-ஆம் வகுப்பிலும், 11-ஆம் வகுப்பிலும் தமிழ்ப் பாடத்தில் முதல் இடத்தைப் பெறும் மாணவ, மாணவியருக்குத் தங்கப் பதக்கம் வழங்கும் திட்டத்தையும் தீட்டி, பல சாதனைப் படைத்து வரும் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள், இன்று விழா நடத்தி வருவது மிக மிகப் பொருத்தமான ஒன்று".

"மாண்புமிகு கதர்த்துறை அமைச்சர் திரு. பி. ஈஸ்வர மூர்த்தி அவர்கள் தமது சிறப்பு ரையில் கூறியதாவது:

"அகிம்சை என்ற சொல்லை உலகிற்கு அறிமுகப்படுத்திய ஒப்பற்றத் தலைவர் அண்ணல் காந்தியடிகள்.

"கிராமம் வாழ வேண்டு மானால், கிராம மக்கள் நன்றாக வாழ வேண்டும். கிராம மக்கள் நன்றாக வாழ்ந்தால் தான், நாடு முன்னேற முடியும் என்பதில் காந்தியடிகள் பெரும் நம்பிக்கைக் கொண்டிருந்தார். நமது இதய தெய்வம் அவர்கள் கிராமத் திற்கும், கிராம மக்களுக்கும், ஏழை, எளியோர்க்கும் பல திட்டங்களைத் தீட்டி இந்தியத் துணைக் கண்டத்திலே மிகச் சிறப்பான முறையில், நல்லாட்சி நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அண்ணல் காந்தியடிகள் அவர் களுக்கு, எங்கள் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள், விழா எடுத்துப் பெருமைப்படுத்தி வருவது மிகவும் பொருத்த மானதாகும்.

● **தூய்மையான இருதயம் இல்லாத எந்த ஆணும் பெண்ணும் இறைவன் சந்நிதியை நெருங்கவே முடியாது.**

● **மாணவனுக்கு மிகச் சிறந்த பாடப் புத்தகம், அவனுடைய ஆசானே!**

—அண்ணல் காந்தியடிகள்

மாண்புமிகு செய்தி-விளம்பரத் துறை அமைச்சர், திரு. மு.தென்னவன் அவர்கள் தமது தலைமையுரையில் கூறியதாவது:

"கடலுக்கு நதிகள் எடுக்கும் விழா, தென்றலுக்குச் செந்தூரப் பூக்கள் எடுக்கும் விழா. நீர் தரும் மேகங்களுக்குப் பயிர்கள் எடுக்கும் விழா, அது போலத் தான் அண்ணல் காந்தியடிகளுக்கு நமது அன்னை புரட்சித் தலைவி எடுக்கும் விழா.

"புருஷர்க்கு மகா புருஷர் என்றும்,

நதிக்கு மகா நதி என்றும் கூறுவது போல,

ஆத்மாவுக்கு மகா ஆத்மா என்ற பெயரைப் பெற்று உலக அரங்கில் உலவி வந்தவர் உத்தமர், அண்ணல் காந்தி அடிகள்.

"வாழ்ந்த காலத்திலேயே, மகா ஆத்மா என்று வாழ்ந்து மங்காப்புகழ் படைத்தவர் மகாத்மா காந்தி அவர்கள். இப்பேர்ப்பட்ட வீரர்களுக்கும், தியாகிகளுக்கும் விழா எடுத்துப் பெருமைச் சேர்ப்பதே எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவியின் கடமை என்றாகிறது.

"நாடெல்லாம் சுதந்திரக் காற்றைச் சுவாசிக்கச் செய்ய, தனது மூச்சுக் காற்றை நிறுத்தித் தியாகங்கள் செய்து நாட்டைக் காப்பாற்றியவர் அண்ணல் காந்தியடிகள். அத்தகைய தியாகிகளின் நினைவைப் போற்றும் வகையில்தான் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி, அவர்கள் தியாகிகளுக்கு ஒரு நினைவுத் தூண் எழுப்பித் பெருமைச் சேர்த்தார். மகாத்மா போதித்த மதுவிலக்கை ஆதரித்து, மதுவை விலக்கி, மதுவிலக்கில் ஒரு மகாத்மாவாகத் திகழ்கிறார் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள்.

"அண்ணல் காந்தியடிகளின் கனவை நனைவாக்கும் விதத்திலும், பிற்பட்டோரின் வாழ்க்கையை முன்னேற்ற வேண்டும் என்ற நோக்கிலும் புரட்சித்தலைவி, ஆதிதிராவிட மக்களுக்கென 10 அம்சத் திட்டம் ஒன்றைத் தயாரித்து, செயல்படுத்தி வருகிறார். டாக்டர் புரட்சித்தலைவியின் ஆட்சியில் தான், அண்ணல் காந்தியடிகளின் கனவுகள் நனவாயிருக்கின்றன என்பது யாரும் மறுக்க முடியாத உண்மை. டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தான் அண்ணல் காந்தியடிகளுக்கு விழா எடுத்து நடத்துவதற்கு மிகப் பொருத்தமானவர் என்று என்னால் திட்டவட்டமாகச் சொல்ல முடியும்".

விழாப் பேருரையாற்றிய மாண்புமிகு [illegible]துறை அமைச்சர் திரு இ. மதுசூதனன் அவர்கள் பேசும்போது தெரிவித்ததாவது:

"தங்கள் இன்னுயிரைத் தந்து, பாரத நாட்டைச் சுதந்திரம் பெற வைத்தவர் நம் அண்ணல் காந்தியடிகள். முதலில் காங்கிரஸ் இயக்கத்தை அன்னிபெசன்ட் அம்மையார் அமைத்தார். அவரைத் தொடர்ந்து கோகலே, திலகர். மோதிலால் நேரு, ஜவகர்லால் நேரு போன்றோரால் தலைமை தாங்கப் பட்டது. 1916 -ல்தான் இந்தியத் தேசியக் காங்கிரஸ் தொடங்கப் பட்டது. கல்லாமை, இல்லாமை, இயலாமை, தீண்டாமை என்ற கொடுமைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என்பதற்கு அரும்பாடுபட்டவர் அண்ணல் காந்தியடிகள்.

"கிராம முன்னேற்றமே நாட்டு முன்னேற்றம்' என்று முழங்கியவர் நமது மகாத்மா. கிராமங்களை நகரங்களாக மாற்ற வேண்டும் என்று கோடு போட்டவர் நமது மனிதப் புனிதர் புரட்சித்தலைவர் அவர்கள். அதற்கு ரோடு போட்டவர் நமது இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள். கிராமப் பள்ளிகளில் கம்ப்யூட்டர் கல்வி கொண்டுவர வேண்டும் என்றவர் நமது இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். நடு இரவில் ஒரு இளம் பெண் உடலில் தங்க நகைகளை அணிந்து கொண்டு பயமில்லாமல் எப்போது நடமாட முடிகிறதோ, அன்று தான் நாட்டிற்கு முழுச் சுதந்திரம் கிடைத்தது போலாகும் என்றார் அண்ணல் காந்தி அடிகள். பெண்ணுரிமை

சிலம்புச் செல்வர் ம.பொ.சி. யின் மருத்துவச் செலவு: தமிழக அரசு ஏற்கும்

அண்மையில் மறைந்த சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சி. அவர்களின் மருத்துவச் செலவைத் தமிழக அரசே ஏற்றுக் கொள்ளும் என, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

மறைந்த சிலம்புச் செல்வர் திரு ம.பொ.சிவஞானம் அவர்கள் சென்னையில் ஒரு தனியார் மருத்துவமனையில் இதய நோய், மூளையில் இரத்தக் கசிவு மற்றும் கீழே விழுந்ததால் இடுப்பில் ஏற்பட்ட முறிவு ஆகியவற்றிற்காகக் கடந்த 11.8.1995 அன்று அனுமதிக்கப் பட்டார். 3.10.1995 வரை அந்த மருத்துவமனையின் தீவிரக் கண்காணிப்புப் பிரிவில் அவருக்குச் சிறந்த மருத்துவ நிபுணர்களைக் கொண்டு தீவிர மருத்துவச் சிகிக்சை அளிக்கப் பட்டு வந்தது. அவர் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு, அவர் மறைந்த நாள் வரை அவருக்கு அளிக்கப்பட்ட மருத்துவச் செலவான 1,28,000 ரூபாயை அவர் தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் ஆற்றிய சேவையைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசே அந்த மருத்துவச் செலவை ஏற்றுக் கொண்டு, மருத்துவமனைக்கு அந்தச் செலவை நேரடியாகச் செலுத்தும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

திரு ம.பொ.சி. அவர்களின் குடும்பத்தினருக்கு இந்த மருத்துவச் செலவு ஒரு சுமையாக இருந்து விடக் கூடாது என்ற எண்ணத்திலும், தமிழ் மொழிக்கும், தமிழ்நாட்டிற்கும் அவர் ஆற்றிய அருந்தொண்டினை மதிக்கும் வண்ணமும், திரு ம.பொ.சி அவர்களது மருத்துவச் செலவைத் தமிழக அரசு ஏற்றுக் கொள்ளும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

கிடைக்க வேண்டும் என்பதற்குப் பெரும்பாடு பட்டவர் அண்ணல் காந்தியடிகள். பெண் கல்விக்கு மாபெரும் நல்ல திட்டங்களைத் தீட்டி வரும் இதய தெய்வம் புரட்சித்தலைவி அவர்கள் இந்த விழாவினை எடுத்து நடத்தி வருவது மிகவும் பொருத்தமான ஒன்றாகும் என்பது உண்மை".

முன்னதாக, செய்தி -மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர் திரு. ஆர்.பரதன் அவர்கள் விழாவுக்கு வருகை தந்தோரை வரவேற்று உரையாற்றினார். விழா முடிவில், செய்தி -மக்கள் தொடர்புத்துறை துணை இயக்குநர். திரு. இரா. பா.கார்மேகம் அவர்கள் நன்றி நவின்றார். விழாவில் பங்கேற்ற அனைவருக்கும் செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. தி.சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப. அவர்கள் நினைவுப் பரிசுகளை வழங்கிச் சிறப்பித்தார்.

இவ்விழாவில், பல பள்ளிகளைச் சார்ந்த மாணவ, மாணவியர்கள் பங்கேற்ற கலை நிகழ்ச்சிகள், கண்ணைக் கவரும் விதத்தில் அமைந்திருந்தது.

—விழாத்தொகுப்பு:
க.சண்முகசுந்தரம்.

தமிழ்நாட்டில் முதன் முறையாக ரூ.1 கோடி செலவில்

மதுரையில் உடல் ஊனமுற்றோருக்கான பள்ளி

மதுரையில் உடல் ஊன முற்றோர் மறுவாழ்வுத்துறையின் மூலம் உடல் ஊனமுற்றோர், கண்பார்வையிழந்தோர், காது கேளாதோர் மற்றும் மன வளர்ச்சி குன்றியவர்கள் பலன் பெறும் வகையில், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் நல்லாட்சியில் நாளும் ஒரு திட்டம் தீட்டப்பட்டுச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இத்திட்டங்களைச் செயல் படுத்தி வெற்றி காண்பதில், மதுரை மாவட்ட மறுவாழ்வு அலுவலகம் முனைப்புடன் செயல்பட்டு முன்னோடியாய் உள்ளது. இந்த ஆண்டு மதுரை மாவட்டத்தில் 14,141 உடல் ஊனமுற்ற நபர்களுக்கு அடையாள அட்டைகளும், 40 சதவிகிதம் உடல் ஊனமுற்றவர் களுக்கு வயது வித்தியாசமின்றி அனைவருக்கும் இலவசப் பேருந்துப் பயணச் சலுகையும் வழங்கப்பட வேண்டுமென்ற மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் உத்தரவின்பேரில் 78 நபர்களுக்கு இச்சலுகை வழங்கப்பட்டுள்ளது.

ஆரம்பக் கல்வி முதல் உயர்கல்வி வரை பயிலும் உடல் ஊனமுற்ற 1,416 மாணவ, மாணவியர்க்கு ரூ.70,000 நிதியுதவி, சுயவேலைவாய்ப்புத் திட்டத்தில் பல்வேறு சிறு தொழில்கள் தொடங்க 50 நபர்களுக்கு ரூ.50,000 அரசு மானியத்துடன் கடனுதவி, எந்த வேலையும் செய்ய இயலாத கடும் உடல் ஊனமுற்றவர் களைக் காப்பாற்றிடும் வகையில் மாதம் ரூ.100 வீதம் 50 நபர்களுக்கு உதவித்தொகை, தண்டுவடம் பாதிக்கப்பட்ட வேலை செய்ய இயலாத குடும்பத்தலைவி 13 நபர்களுக்கு, ரூ.3,000 வீதம் 39,000 நிதியுதவி, உதடு பிளவுபட்டு அழகு சீர்குலைந்தவர்களின் அவலங் களைத் துடைத்திடும் வகையில், இந்த ஆண்டு மாநில அளவில் 35 நபர்களுக்கு ஒட்டுறுப்பு அறுவைச் சிகிச்சை (Plastic Surgery) ரூ.3,000 செலவில் செய்திட உத்தரவிடப் பட்டுள்ளதைத் தொடர்ந்து, மதுரை மாவட்டத்திலிருந்து 28 நபர்கள் அறுவைச் சிகிச்சைக்காகப் பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. இரு சக்கரவாகனங்கள் பயன் படுத்தும் 10 நபர்களுக்கு எரிபொருள் சலுகையும் வழங்கப்படுகிறது.

இளம்பிள்ளைவாதத்தை முற்றிலுமாக ஒழிக்கவும் இதனால் பாதிக்கப்பட்டவர் களுக்கு மறுவாழ்வு அளிக்கும் வகையில் 317 காலிப்பர் பூட்ஸ் இலவசமாக வழங்கப் பட்டுள்ளது. மேலும், ரூ.3 இலட்சம் செலவில் 100 நபர்களுக்கு மூன்றுச் சக்கரச் சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளன.

மதுரை மாவட்டத்தில் அரசு நிதியுதவியுடன் உடல் ஊன முற்றோருக்காக 2 பள்ளிகள், கண்பார்வையற்றோருக்கு 2 பள்ளிகள், காது கேளாதோருக்கு 2 பள்ளிகள்; மன வளர்ச்சி குன்றியோருக்கு 3 பள்ளிகளும் இயங்கி வருகின்றன. இப்பள்ளி களில் மாணவ, மாணவிகள் பயின்று பலன் பெற்று வருகின்றனர்.

உடலால் மட்டுமே ஊனம் - உள்ளத்தால் அல்ல. அவர்களும் பள்ளிசென்று படித்து முன்னேறி அரசுப் பணியில் மட்டுமல்லாது, விளையாட்டு போன்ற அனைத்துத் துறை யிலும் சாதனைகள் புரிய வேண்டுமென்ற வளரும் இளம் உடல் ஊனமுற்றோரை ஊக்குவிக்க வேண்டும் என்ற உயர்ந்த தொலைநோக்கு எண்ணம் கொண்ட மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆணைப்படி, தமிழகத்திலேயே, முதல் முறையாக உடல் ஊனமுற்றோருக்கென ரூ.1 கோடி செலவில் புதிய பள்ளிக் கட்டடம் கட்டி முடிக்கப் பட்டுள்ளது.

மாண்புமிகு சமூகநலத்துறை அமைச்சர் திருமதி புலவர் இந்திரகுமாரி அவர்கள் தலைமையில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு. சேடபட்டி இரா. முத்தையா அவர்களால் திறந்து வைக்கப் பட்டு, சீரோடும் சிறப்போடும் செயல்பட்டு வருகிறது இப்பள்ளி.

தற்போது 8-ஆம் வகுப்பு வரை உள்ள இப்பள்ளியை இனி வரும் காலங்களில் மேல்நிலைப் பள்ளி மற்றும் தொழில்நுட்பப் படிப்பு போன்ற வகுப்புகள் தொடங்கிட ஏற்பாடு மேற் கொள்ளப்பட்டு வருகின்றது. மேலும், இக்கட்டட வளாகத்தில் உடல் ஊனமுற்றோருக்கான அங்க அவயங்கள் உற்பத்தி செய்யும் நிலையமும் செயல் பட்டு வருகின்றது.

உடல் ஊனமுற்றோர், பார்வையற்றோர், காது கேளாதோர், மனவளர்ச்சி குன்றியோர் ஆகிய அனைவரும் ஒரே இடத்தில் ஆலோசனை, தொழிற்பயிற்சி, வேலைவாய்ப்பு, உற்பத்தி, விற்பனை மற்றும் உடற்பயிற்சி, 'பிசியோதெரபி' ஆகிய பலன்களைப் பெறுகின்ற வகையில் மதுரையில் சுமார் 60 செண்ட் இடத்தில் ரூ.25 இலட்சம் செலவில் புதிய கட்டட மையம் ஒன்றைக் கட்ட, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நிதி ஒதுக்கித் தந்துள்ளது குறிப்பிடத் தக்கது. ●

கள்ளச் சாராயம் :

மரணமடைந்த குடும்பத்திற்குத் தலா ரூ.10,000 உதவி!

மாண்புமிகு முதல்வர் ஆணை

காமராஜர் மாவட்டம் சாத்தூரில் கள்ளச் சாராயம் அருந்தியதால் பாதிக்கப் பட்டு சாத்தூர் அரசுப் பொது மருத்துவ மனையிலும், மதுரை ராஜாஜி பொது மருத்துவமனையிலும் சேர்க்கப்பட்டு, அதில் 22 பேர் மரணம் அடைந்ததை அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இந்தத் துயர நிகழ்ச்சிக் குறித்து தனது ஆழ்ந்த கவலையை யும், வருத்தத்தையும் தெரிவித்துள்ளார்.

இந்த விரும்பத்தகாத சம்பவத்தில் மரணமடைந்தவர்களின் குடும்பத்தினருக்கு தனது இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் திரு வி. சத்தியமூர்த்தி, மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு அ.மா. பரமசிவன் ஆகியோரை அனுப்பி வைத்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் சிலர் கள்ளச் சாராயம் அருந்துகின்ற கொடிய பழக்கத்தைக் கைவிட வேண்டும் என்றும், இதுபோன்ற துயரச் சம்பவங்களை நிச்சயமாகத் தவிர்க்க வேண்டும் என்றும் கருத்து தெரிவித்துள்ளார். மேலும், இந்தத் தகாத சம்பவத்திற்குக் காரணமானவர்களை உடனடியாகக் கண்டுபிடித்து, அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்படி காவல்துறைக்கு ஆணை பிறப்பித்துள்ளார்.

கள்ளச் சாராயம் அருந்தி மரணம் அடைந்ததற்காக அரசு தரப்பிலிருந்து உதவித்தொகை வழங்குவது கொள்கை ரீதியாக அரசுக்கு ஏற்புடையதாக இல்லாவிட்டாலும், அந்தக் குடும்பங்கள் வறுமையில் வாடாமல் இருக்கவேண்டும் என்கின்ற ஒரு நல்லெண்ணத்தின் அடிப்படையில், இதை ஒரு தவறான முன்னோடியாக எடுத்துக் கொள்ளாமல், இதை ஒரு சிறப்பு இனமாகக் கருதி, இந்தச் சம்பவத்தில் மரணம் அடைந்த குடும்பங்கள் ஒவ்வொன்றிற்கும் 10,000 ரூபாய் நிதி உதவித் தொகையை மாண்புமிகு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்.

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் - பல்துறைப் பணி விளக்க முகாம்

பல்துறைப் பணி விளக்க முகாம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூரில், பழைய பேருந்து நிலையத்தில் 10.10.1995 அன்று தொடங்கி 16.10.1995 முடிய சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு சமூகநலம் மற்றும் கைத்தறித்துறை அமைச்சர் புலவர் திருமதி ஆர். இந்திர குமாரி அவர்கள் விழாவுக்குத் தலைமை வகித்து, பல்துறைப் பணி விளக்கக் கண்காட்சி மற்றும் பல்துறைப் பணி விளக்க முகாமினைத் தொடங்கிவைத்து விழாப் பேருரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:

"பல்துறைப் பணி விளக்க முகாம்கள் பல்வேறு மாவட்டங்களில் அரசு நலத் திட்டங்களையும் சாதனைகளையும் விளக்குகின்ற வகையில் நடத்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி அவர்களின் சீரிய தலைமையில் உள்ள அரசு தான், முதன் முதலாக இதுபோன்ற பல்துறைப் பணி விளக்க முகாம்களை நடத்தி வருகின்றது.

"இம்மாவட்டத்தில் மொத்தம் 420 கிராமங்களில், வீடியோ திரைப்படக்காட்சிகள் காண்பிக்கப்படும், 52 கிராமங்களில் கிராம மக்கள் பயன்பெறும் வகையில், அரசின் நலத் திட்டங்களை விளக்குகின்ற வகையில் கலை நிகழ்ச்சிகள், நாடகங்கள் நடத்தப்படவுள்ளன. இம்முகாம்களில் இலவசமாகக் குழந்தைகளுக்குத் தடுப்பு ஊசிகள், இலவசக் கண்சிகிச்சை முகாம், இலவசக் கால்நடை மருத்துவ முகாம், சொந்தமாகச் சுயதொழில் தொடங்குவது பற்றியும், குடும்பநலம் பற்றியும் முகாம்கள் நடத்தப்படும்" என்று குறிப்பிட்டார்.

"வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் 20 வீடியோ வாகனங்கள், பல்வேறு கிராமங்களுக்குச் சென்று அரசு நலத் திட்டங்களையும் சாதனைகளையும் கிராம மக்களுக்கு விளக்கிடும் வகையில் வீடியோ திரைப் படம் காண்பிக்கப்படும்" என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்.

இப்பல்துறைப் பணி விளக்க முகாமில், தமிழ்நாடு தோல் வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு பாண்டுரங்கன், தமிழ்நாடு வேளாண் விளைபொருள் விற்பனை வாரியத் தலைவர் திரு சி. கோபால், பேரணாம்பட்டு சட்டமன்ற உறுப்பினரும், தமிழ்நாடு சிறுசேமிப்புப் பொதுக்குழுத் துணைத் தலைவருமான திரு பரந்தாமன், காட்பாடித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திருமதி கே.எம். கலைச்செல்வி, அணைக்கட்டுத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திரு கே தர்மலிங்கம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் சங்கத் தலைவர் திரு ப. நீலகண்டன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்கள்.

முன்னதாக, இப்பல்துறைப் பணி விளக்க முகாம் தொடக்க விழாவில், திருப்பத்தூர் கோட்ட வளர்ச்சித் தலைவர் திரு அர. சக்திவேல் அவர்கள்அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., அவர்கள் தமது விளக்கவுரையில் கூறியதாவது:

"இந்தப் பல்துறைப் பணி விளக்க முகாம்கள், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் சிதம்பரனார் மாவட்டம், இராமநாதபுரம் மாவட்டங்களில் நடத்தப்பட்டன. கடந்த ஆண்டு, திருவண்ணாமலை சம்புராயர் மாவட்டம், திண்டுக்கல்-அண்ணா மாவட்டம், விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம் மற்றும் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட்டன.

"மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உத்தரவின் பேரில், இந்த நிதி ஆண்டில் 10 மாவட்டங்களில் இதுபோன்ற முகாம்களை நடத்திட ஆணை பிறப்பித்து உள்ளார்கள். அதன் அடிப்படையில், புதுக் கோட்டை மாவட்டம், காமராஜர் மாவட்டம், நீலகிரி மாவட்டம், தர்மபுரி மாவட்டங்களில் ஏற்கெனவே பல்துறைப் பணி விளக்க முகாம்கள் நடத்தப்பட்டன. இந்தப் பல்துறைப் பணி விளக்க முகாம், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் திருப்பத்தூரில் தொடங்குவது இந்த ஆண்டின் ஐந்தாவது மாவட்டமாகும்.

"இதுபோன்ற பல்துறைப் பணி விளக்க முகாம்கள் பெரியார் மாவட்டம், தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் ஆகிய மாவட்டங்களில் நடத்தப்பட உள்ளன."

முத்தோர் சொல்:

★ தேவைகள் குறைய குறையத் தான் தெய்வத்தன்மையை அடைவோம்.

—சாக்ரட்டீஸ்

★ மிகச் சிறந்த உண்மைகள் எளிமையாக உள்ளன. தலைசிறந்த மனிதர்களும் அப்படியே இருக்கின்றனர்.

—ஹேர்

★ உங்கள் எண்ணங்கள் எப்படியோ, அப்படித்தான் உங்கள் வாழ்க்கையும் அமையும்.

—மார்கஸ் அரேலியஸ்

★ சிறந்த இலட்சியங்களே! மானிட சாதியின் மாபெரும் முயற்சிகளே! வீரத் தன்மைகளே! அஞ்சா நெஞ்சர்களின் அரிய செய்கைகளே! நீங்கள் என் கடவுள்கள்.

—வால்ட் விட்மன்

விழா முடிவில், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் துணை இயக்குநர் (மக்கள் தொடர்பு) திரு மா. விசுவநாதன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். விழாத் தொடக்கத்தில் கீதாலயா குழுவினரின் மெல்லிசை நிகழ்ச்சி நடைபெற்றது. விழா முடிவில் திரைப்பட நடிகர் டைப்பிஸ்ட் கோபு குழுவினர் நடித்த "நல்லதே நடக்கும்" நாடகம் நடைபெற்றது.

பல்துறைப் பணி விளக்க முகாம் விழா மேடையில், தினமும் பள்ளி மாணவ மாணவியர்களின் கலை நிகழ்ச்சிகளும், செய்தி-மக்கள் தொடர்புத்துறையின் மூலமாக நாடகங்களும், நடத்தப்பட்டன.

பல்துறைப் பணி விளக்க முகாம் விழா மேடையில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு துறையின் அலுவலர்களைக் கொண்டு ஒவ்வொரு துறை நாள் கொண்டாடப்பட்டது. இதில் கலந்துகொண்ட துறைகள் வருமாறு:

ஊரக வளர்ச்சித்துறை நாள்- 11.10.95, பொது சுகாதாரத்துறை நாள் - 12.10.95, சமூகநலத்துறை நாள் - 13.10.95, கல்வித்துறை நாள் - 14.10.95, சிறுசேமிப்புத் துறை நாள் - 15.10.95, தோட்டக் கலை, வனத்துறை நாள் - 16.10.95 என்று நாள்தோறும் அவ்வத்துறைகள் பற்றிய சாதனைகள் பொதுமக்களுக்கு விளக்கிக் கூறப்பட்டன.

பல்துறைப் பணி விளக்க முகாம் முடிவில், சிறந்த முறையில் அமைக்கப்பட்ட அரங்குகளுக்குப் பரிசுகள் வழங்கப்பட்டன. பட்டுக் கோட்டைப் போக்குவரத்துக் கழகத்திற்கு முதல் பரிசும், ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம் மற்றும் வனத்துறைக்கு இரண்டாவது பரிசும் கூட்டுறவுத் துறைக்கு மூன்றாவது பரிசும் வழங்கப்பட்டது. இப்பரிசுகளை, திருப்பத்தூர் கோட்ட வளர்ச்சி அலுவலர் திரு சக்திவேல் அவர்கள், செய்தி-மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் வழங்கினார்.

பல்துறைப் பணி விளக்க முகாம் கண்காட்சியில் செய்தித் துறை, தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்துத் திட்டம், கைத்தறித் துறை, கூட்டுறவுத் துறை, குடும்ப நலத்துறை, பொது சுகாதாரத் துறை, வேளாண்மைப் பொறியியல் துறை, வனத்துறை, மீன்துறை, கால்நடைப் பராமரிப்புத்துறை, பட்டு வளர்ச்சித் துறை, கதர் கிராமத் தொழில் வாரியம், வேளாண்மைத் துறை, சுற்றுலாத்துறை, தோட்டக் கலைத் துறை, சிறுசேமிப்புத் துறை, பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் ஆகிய துறைகள் சிறப்பான அரங்குகளை அமைத்திருந்தன.

ஈயமற்ற பெட்ரோல்

மாசுக் கேட்டைத் தவிர்க்கும் விதமாக, ஈயம் கலவாதப் பெட்ரோல் விற்பனை இவ்வாண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து அறிமுகமாயிற்று. இதன் பயன்பாடு மெல்ல, மெல்ல அதிகரித்து வருகிறது. ஏப்ரல் ஜூலை ஆகிய மாதங்களில், நான்கு மாநகரங்களில் 3,228 மெட்ரிக் டன் ஈயக் கலப்பற்ற பெட்ரோல் விற்பனையாகியுள்ளது. தில்லிக்கு 2,166 மெட்ரிக் டன். பம்பாய்க்கு 606 மெட்ரிக் டன், சென்னைக்கு 234 மெட்ரிக் டன், கல்கத்தாவுக்கு 224 மெட்ரிக் டன்.

ஈயக் கலப்பற்றப் பெட்ரோலைப் பயன்படுத்து முன், கார்களில் Catalytic converter சாதனம் பொருத்தப்பட வேண்டும். தில்லியில், இந்த நான்கு மாதங்களில், இந்தச் சாதனம் பொருத்திய 13,905 கார்கள் விற்கப்பட்டுள்ளன. பம்பாயில் 4,411 கார்களும், கல்கத்தாவில் 1,848 கார்களும் விற்பனையாகியுள்ளன.

தில்லியிலுள்ள மொத்தம் 261 பெட்ரோல் விற்பனை மையங்களில் 84-இல் ஈயக் கலப்பற்ற பெட்ரோல் விற்கப்படுகிறது. பம்பாயில் 255-க்கு 35-லும், கல்கத்தாவில் 192-க்கு 31-லும், சென்னையில் 165 இல் 10-இல். மட்டுமே ஈயமற்ற பெட்ரோல் விற்பனையாகிறது. இவை தவிர, நாட்டின் நெடுஞ்சாலைகளில் இத்தகைய 29 நிலையங்கள் இயங்குகின்றன. சென்னையிலிருந்து வெளியே செல்லும் நெடுஞ்சாலைகளில் இத்தகு நான்கு விற்பனை நிலையங்கள் உள்ளன.

வரும் 1998-ஆம் ஆண்டுக்குள் அனைத்து மாநிலத் தலைநகரங்களிலும், வரும் 2000-வது ஆண்டில் நாடு முழுவதிலும், ஈயக் கலப்பற்ற பெட்ரோல் கிடைக்கும்.

—அமெரிக்கத் தகவல் நிலையம்

ஏழை எளியோர் ஏற்றம் பெற கதர் வாங்குவீர்!

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர்
திரு. பெ. ஈஸ்வரமூர்த்தி அவர்கள்

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் நல்லாசியுடன், அண்ணல் காந்தியடிகளின் 126-வது பிறந்த நாள் விழாவினை 2.10.95-இல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் சிறப்பாகக் கொண்டாடுகிறது.

கடந்த 35 ஆண்டுகளாக இவ்வாரியம் கிராமப்புறக் கைவினைஞர்களின் முன்னேற்றத்தினை முக்கிய குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டு வருகின்றது.

புரட்சித்தலைவி அவர்களின் பொற்கால ஆட்சிக் காலத்தில் வாரியத்தின் வளர்ச்சிப் பணிகள் பன்மடங்கு அதிகரித்து வந்துள்ளன. உற்பத்தி, விற்பனை, வேலைவாய்ப்பு அளித்தல், திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்துதல் ஆகியவற்றில் இவ்வாரியம் சிறப்பான முன்னேற்றித்தினை அடைந்துள்ளது. நிர்வாகக் கட்டமைப்பிலும், திட்டங்களைத் திறமையாகச் செயல்படுத்துவதிலும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் இந்தியாவின் மற்ற வாரியங்களுக்கு முன்னோடியாகவும், எடுத்துக்காட்டாகவும் திகழ்கிறது.

1993-94-ஆம் ஆண்டின் புள்ளி விவரப்படி, கதர் உற்பத்தியிலும் கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தியிலும் மற்ற மாநிலங்களைவிட தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் முதலிடம் வகிக்கிறது என்பது பெருமைப்படத் தக்கதாகும். இந்தப் பெருமையைப் பெற்றுத் தந்தவர், நமது மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களாவார்.

வாரியத்தின் திட்டங்கள் அனைத்தும் கீழ்க்காணும் மூன்றடுக்கு முறையில் செயல்பட்டு வருகின்றன :

1. வாரியத்தின் சொந்த அலகுகள் - 1,290

2. வாரியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் - 1,880

3. வாரியத்தின் மூலம் நிதி உதவி பெற்றுள்ள கைவினைஞர்கள் - 79,734

1995-96-ஆம் ஆண்டில் ரூ.53.50 கோடிக்குக் கதர் ரகங்களும், ரூ.354 கோடிக்குக் கிராமத் தொழில் பொருட்களும் ஆக மொத்தம் ரூ.407.50 கோடிக்குக் கிராமத் தொழில் பொருட்களும் உற்பத்தி செய்திட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

1995-96-இல் ரூ.46 கோடிக்குக் கதர் ரகங்கள் விற்பனை செய்யவும், ரூ.453 கோடிக்குக் கிராமத் தொழில் பொருட்கள் விற்பனை செய்யவும் இலக்குகள் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. நிர்ணயிக்கப் பட்டுள்ள விற்பனை இலக்குகளை அடைந்திடத் தேவையான நடவடிக்கைகள் இவ்வாரியத்தில் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

இவ்வாரியத்தின் மூலம் இதுவரை வேலை வாய்ப்புப் பெற்றுள்ளோர் 14,31,000 பேர். இதில் மகளிர் மட்டும் 4,96,510 பேர். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் 3,16,000 பேர். இவர்கள் அனைவரும் கிராமப்புற ஏழை, எளிய மக்கள் என்பது குறிப்பிடத்தக்கது. ஏழை மக்களின் வாழ்வை வளம் பெறச் செய்வதில் புரட்சித் தலைவி அவர்களின் அரசு மிகுந்த அக்கறை காட்டி பல்வேறு திட்டங்களைத் திறம்படச் செயல்படுத்தி வருவதால்,

இத்தனைப் பெரிய அளவில் வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பம்பாய் கதர் ஆணைக்குழு வரும் மூன்றாண்டுக் காலத்திற்குள் ரூ.5,600 கோடி செலவினத்தில் 20 இலட்சம் ஊரகக் கைவினைஞர்களுக்கு வேலைவாய்ப்பினை ஏற்படுத்திடத் திட்டமிட்டுள்ளது. இச்செலவினத்தில் மூன்றில் ஒரு பங்கினை, கதர் ஆணைக் குழுவும், ஏனையத் தொகையை நிதி நிறுவனங்களும் ஏற்கும்.



தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் ரூ.676.32 கோடி மதிப்பீட்டில் 2.09 இலட்சம் கைவினைஞர்கள் வேலைவாய்ப்புப் பெறும் பொருட்டுத் திட்டமிட்டுள்ளது. இத்திட்டம் பம்பாய் கதர் ஆணைக்குழுவின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தில் உற்பத்தி அளவினை இரண்டு மடங்கு உயர்த்துவதும், கதர் கிராமத் தொழில் பொருட்களை உள்நாட்டில் அதிக அளவு விற்பனை செய்வதோடு, அயல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது போன்றவையும் அடங்கும்.

கதர்த் திட்டத்தின் கீழ் கதர் நூல் உற்பத்தி, கதர்ப் பட்டு, கம்பளி மற்றும் பாலியஸ்டர் ரகங்கள் உற்பத்திக்கு முதலீடுகளுக்குத் தேவையான நிதி கோரப்பட்டுள்ளது. கிராமத் தொழில் பிரிவின் கீழ் அலுமினியப் பொருட்கள், உணவுப் பொருட்கள் பக்குவப்படுத்துதல், பிளாஸ்டிக் பொருட்கள், தோல் பொருட்கள், தேனீ வளர்த்தல், மின்னணுப் பொருட்கள் மற்றும் விற்பனைக் கூடங்களுக்குத் தேவையான நிதி உதவியும் கோரப்பட்டுள்ளது.

சென்ற ஆண்டு, அண்ணல் காந்தியடிகளின் 125-வது பிறந்தநாளையொட்டி அகில இந்திய அளவில் 125 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டு, பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவால் மாநிலக் கதர் கிராமத் தொழில் வாரியங்கள் மூலமாகவும், கதர் கிராமத் தொழில் நிறுவனங்கள் மூலமாகவும், பல சிறப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டில் காமராஜர் மாவட்டம் நரிக்குடி, சிதம்பரனார் மாவட்டம் விளாத்திக்குளம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் சிங்கம்புனரி, தர்மபுரி மாவட்டம் பர்கூர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம் - ஜவ்வாதுமலை ஆகிய 5 ஊராட்சி ஒன்றியங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் தொகுதியில் உள்ள பர்கூர் ஊராட்சி ஒன்றியத்தில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில்

பள்ளிகளில் கணிணி அறிவு மற்றும் பயிற்சித் திட்டம்

வளர்ச்சி அடைந்த மேலை நாடுகளுக்கு இணையாக நமது நாட்டிலும் கம்ப்யூட்டர் புரட்சி நடைபெற்று வருவதாலும், அனைத்துத் துறைகளிலும் கம்ப்யூட்டர்கள் புகுத்தப்பட்டு "கணிணிப் பயிற்சி" (Computer Training) இன்றி எதிர்காலத்தில் எந்தத் துறையிலும் முழு வளர்ச்சியை அடைய முடியாது என்ற கருத்தின் அடிப்படையிலும், தமிழ்நாட்டில் பள்ளி அளவில் கணிணிப் பயிற்சி விரைந்து அளிக்கப்பட வேண்டும் என்ற கருத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏற்கெனவே வெளியிட்டிருந்தார்.

இந்தக் கம்ப்யூட்டர் பயிற்சியானது இளைய தலைமுறையினருக்குப் பள்ளிக் கல்வி அளவிலேயே அளிக்கப்பட்டால் தான் அவர்களுடைய மேற்படிப்புக்கும், அவர்கள் மேற்கொள்ள இருக்கின்ற தொழில் முயற்சிகளுக்கும் உதவிகரமாக இருக்கும் என்ற கொள்கையின் அடிப்படையில், பள்ளிகளில் "கணிணி அறிவு மற்றும் பயிற்சித் திட்டம்" (Computer Literacy and Studies in class) அதாவது "CLASS" என்று பெயரிடப்பட்ட திட்டம் ஒன்று வகுக்கப்பட்டு, அதைச் செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 170 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின்படி, தமிழ்நாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட 25 பள்ளிகளில் "கணிணிப் பயிற்சி" (computer Training) நடப்பு ஆண்டில் அளிக்கப்படும். இதற்கான கணிணிகளும் அதற்குத் தேவைப்படுகின்ற உபகரணங்கள் மற்றும் பயிற்சிச் சாதனங்களும், தமிழ்நாடு அரசு நிறுவனமான ELCOT மூலமாக வழங்கப்படும். இந்தக் கணிணி பயிற்சியானது விரைந்து மாணவ மாணவியர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டுமென மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

வாரியம் மற்றும் புதிதாக 1546 நபர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தும் திட்டங்கள் பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் பரிசீலனையில் உள்ளன. இத்திட்டத்திற்குக் கதர் ஆணைக்குழு, ஊரக வளர்ச்சித் திட்டம், மற்றும் வங்கிகள் மூலமாக நிதி ஆதாரங்கள் திரட்டப்பட்டு பர்கூர் ஊராட்சி ஒன்றியத் தீவிர மேம்பாட்டுத் திட்டமாக, அண்ணல் காந்தியடிகளின் 125-வது பிறந்தநாளான 2.10.94 அன்று அறிவிக்கப்பட்டது.

இதன் முதற்கட்டமாக 3 கதர் நூற்பு நிலையங்கள் தொடங்கப்பட்டன. அவை 1. திப்பனூர், 2. கொரகுப்பம், 3. ஜெகதேவி ஆகிய கிராமங்களில் இயங்கி வருகின்றன. இதன் மூலம் 90 பெண்கள் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றனர்.

மேலும் நரிக்குடி, விளாத்திகுளம், சிங்கம்புனரி, ஜவ்வாது மலை, ஆகிய 4 ஊராட்சி ஒன்றியங்களில் கதர் கிராமத் தொழில் நிறுவனங்கள் மூலம் திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றன.

தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில்கள் மூலம் புதிய வேலைவாய்ப்புகளை ஏற்படுத்திட மாவட்டச் சிறப்பு வேலைவாய்ப்புத் திட்டம் திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தற்போது கதர் கிராமத் தொழில் நிறுவனங்கள் மூலம் செயல்படுத்தப்படுகின்றன. இத்திட்டம் மேலும் பல மாவட்டங்களில் அறிமுகப்படுத்திடக் கதர் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த ஆண்டில் 1995-96-இல் 2,000 காலணிப் பணிக்கூடங்கள் மற்றும் தையல் இயந்திரங்கள் இலவசமாகக் காலணித் தொழில் செய்பவர்களுக்கு வழங்கப்படவுள்ளன. ஒவ்வொன்றும் ரூ.10,000 மதிப்புள்ளது. இதற்கு மொத்தம் ரூ.2 கோடி அரசு அனுமதித்துள்ளது. கொளுத்தும் வெயிலிலும், கொட்டும் மழையிலும் துன்புற்று வாடும் 2,000 ஏழை அருந்ததியினர் இனி நல்ல வசதியுடன் பொருள் ஈட்டலாம்.

இதுவரை அதிகப்பட்சம் 12 கதர் இராட்டைகளதான் நூறபுப பணிக்குப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இனி, புதிதாக 48 கதர் இராட்டைகளை உருவாக்கி அறிமுகப்படுத்திட, பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணையம் ஒப்புதல அளித்துள்ளது. தமிழ்நாடு அரசு நடப்பு ஆண்டு, 48 கதர் இராட்டைகளில் நூல் உற்பத்தி செய்திட, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திற்கு அனுமதித்துள்ளது.

பனைத் தொழிலாளர்கள் சுலபமாகப் பனை மரம் ஏறுவதற்காக, நவீன மரம் ஏறும் சாதனங்கள் (Palm Tree Climbing device) 1,000 பேருக்கு ஒவ்வொன்றும் ரூ.1,000 செலவில் இலவசமாக அரசு அனுமதித்துள்ளது. இது நடப்பு ஆண்டில் நிறைவேற்றப்படும்.

இவ்வாண்டு அண்ணல் காந்தியடிகள் பிறந்த நாளான 2.10.95 அன்று முதல் தீபாவளிப் பண்டிகை முடிய ரூ.44.98 கோடிக்கு இவ்வாரியத்தின் மூலம் கதர்த் துணி ரகங்கள் விற்பனை செய்ய இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

குறளகத்திலுள்ள காதி கிராப்டிலும் சென்னை நகரத்திலுள்ள இதரக் காதி கிராப்டுகளிலும் தீபாவளிப் பண்டிகைக் காலத்தில் சுமார் ரூ.8.04 கோடிக்குக் கதர் ரகங்கள் விற்பனை செய்ய குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முழுவதும் 225 காதி கிராப்டுகள் மூலமும், 4 பட்டு எம்போரியங்கள் மூலமும் பல்வேறு தற்காலிகக் காதி கிராப்டுகள் மூலமாகவும் பெரும் அளவில் கதர் ரகங்கள் விற்பனை செய்யப்படவுள்ளன. புத்தம் புதிய நவீன ரகங்களில் 100 சதவிகிதப் பட்டுச் சரிகைப் புடவைகளும், பாலியஸ்டர் மற்றும் கதர் ரகங்களும் ஏராளமாக இவ்வாண்டு விற்பனைக்குத் தயாராக உள்ளன.

கதர்ப் பாலியஸ்டர் நெய்வோரின் நாள் ஊதியம் ரூ.23 லிருந்து ரூ.28 பெறுவதற்கு ஏதுவாக 1994-95-ஆம் ஆண்டில் தலா ரூ.1,500 பெறுமானமுள்ள நவீன தறியும், பிற உபகரணங்களும், 500 நெசவாளர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. இதேபோல் 1995-96-ஆம் ஆண்டில் 500 நெசவாளர்களுக்கு நவீன தறிகளும் பிற உபகரணங்களும் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் மொத்த செலவினம் ரூ.7.50 இலட்சமாகும்.

1994-95-ஆம் ஆண்டில் புதிய வடிவமைப்பில் பட்டு நெய்து அதிக ஊதியம் பெறுவதற்கு ஏதுவாக ஒவ்வொன்றும் ரூ.600 பெறுமானமுள்ள இரண்டு ஜாக்குவார்டுப் பெட்டிகள் வீதம் 300 பட்டு நெசவாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதேபோல் 1995-96-ஆம் ஆண்டிலும் 60 கதர்ப் பட்டு நெசவாளர்களுக்கு ஜாக்குவார்டுப் பெட்டிகள் வழங்கிட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இத்திட்டத்தின் மொத்தச் செலவினம் ரூ.7.20 இலட்சமாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் மட்டும் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலம் 5.37 இலட்சம் கிராமப்புற மக்களுக்குக் கூடுதலாக வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்பது மிகவும் பெருமைப் படத்தக்கதாகும்.

பொதுமக்கள் அனைவரும் ஒத்துழைத்தால்தான், இந்தக் கதர் விற்பனை இலக்கை எய்த முடியும். கதர்த் துணியின் மதிப்பிலும் பெரும்பகுதி அதனை உற்பத்தி செய்யும் ஏழை மக்களுக்கே ஊதியமாகப் போய்ச் சேருகிறது. அதிக அளவில் கதர் ரகங்களை வாங்கி இந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ள பல்லாயிரக்கணக்கான ஏழை மக்கள் வாழ்வு வளம் பெற உதவும்படி, தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் அனைவரையும் வேண்டிக் கேட்டுக்கொள்கிறது. ●

சிறு குடும்பம் போதுமே!

-கவிஞர் வி.மு. உலகநாதன்

சிறு குடும்பம் போதுமே - அது
சிறந்த தாகுமே (சிறு)

இருமக்களுக்குமேல் பிறவாமை கண்டு
இன்பந் துய்த்துமே வாழ (சிறு)

வறுமை அடையாமல்
வாய்த்த வருவாயில்
வளமோடு தோன்றும் நாளும் - இன்ப
அறிவில் புகழ்பெற்று
அன்பில் தலைப்பட்டு
அமைதிநல மேவும் குடும்பம் (சிறு)

கடனரக்கன் வீழ
கவலைப் பேய் மாய
களிப்புக் கடல்நீந்தித் திளைக்கும் - என்றும்
கடமை நனிபோற்றிக்
கண்ணியம் நெறிகாக்கும்
கட்டுப்பாடுடைய குடும்பம் (சிறு)

வேலையின்றி நாட்டில்
வருந்தும் துயர்மாற்றி
விழுப்பம் படர்ந்தோங்கச் செய்யும் - பசும்
சோலை எழில்போலச்
சுபிட்சக் கனிதோன்றித்
துய்க்கத் தந்திடும் குடும்பம் (சிறு)



புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடம் கண்டுபிடிப்பு!

தமிழ்நாடு அரசு தொல் பொருள் ஆய்வுத்துறை விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டம், செஞ்சி அருகே சோழங்குணம் என்னும் கிராமத்தில் புதிய கற்கால மக்கள் வாழ்ந்த இடங்களைக் கண்டுபிடித்துள்ளது. இவ்வாழ்விடங்களில் புதிய கற்காலக் கருவிகள் சிலவும் குத்துக்கல் என்று கூறப்படும் வட்டமான கல் ஒன்றும் கண்டுபிடிக்கப்பட்டது. சமத்குப்பம் என்ற ஊரைச் சேர்ந்த திரு ஈஸ்வர முதலியார் அவர்கள் கொடுத்த தகவலின் பேரில் தொல்பொருள் ஆய்வுத்துறைப் பதிவு அலுவலர் திரு மா. சந்திரமூர்த்தி அவர்கள் இவ்விடத்தைக் கண்டறிந்து புதிய கற்காலக் கருவிகளைச் சேகரித்துள்ளார்.

இங்கு கிடைத்துள்ள கோடாரி, சுரண்டிகள், உளி போன்ற கருவிகளைக் கொண்டு இப்பகுதியில் வாழ்ந்த புதிய கற்கால மக்கள் காய்கனிகளை உண்டும், வேளாண்மை செய்தும் உயிர் வாழ்ந்திருக்கலாம் என்று கருத முடிகிறது. செஞ்சிப் பகுதியில் புதிய கற்கால வாழ்விடங்களைக் கண்டறிந்திருப்பது இதுவே முதல் முறையாகும்.

இதுகாறும், தமிழ்நாட்டின் வடபகுதிகளான சேலம், தருமபுரிப் பகுதிகளில் மட்டும் புதிய கற்கால மக்கள் வாழ்விடங்கள் இருந்துள்ளன என்ற கருத்தினை மாற்றும் வகையில் இப்புதிய கண்டுபிடிப்பு அமைந்துள்ளது. கி.மு. 3000 2000 ஆம் நூற்றாண்டுகளில் புதிய கற்கால மக்கள் சேலம், தருமபுரிப் பகுதிகளிலிருந்து இடம் பெயர்ந்து செஞ்சிப் பகுதிக்கு வந்து தங்கியிருக்கலாம் என்று கருதவும் இடமேற்படுகிறது. மேலும், மேற்கூறிய கருவிகள் அனைத்தும் வட்டமான தரைப்பகுதியில் கிடைத்திருப்பதால் புதிய கற்கால மக்கள் வட்டமான குடிசைகளில் வாழ்ந்துள்ளனர் என்பது இதன் மூலம் உறுதியாகிறது.

இப்பகுதியில் புதிய கற்கால வாழ்விடங்களை மேலும் கண்டறிவதற்காகத் தொல்பொருள ஆய்வுததுறை விரிவான வகையில் கள ஆய்வு செய்யவும் அதன் மூலம் புதிய கற்கால மக்களின் பண்பாட்டைப் பற்றி விளங்கிக் கொள்ளவும் திட்டமிட்டுள்ளது.

நல்லவனாய் இரு!

★ நல்லவன் எப்படியிருக்க வேண்டுமென்று அறிவுரை செய்யாதே. நீயே நல்ல வனாய் இருந்து விடு!

–மார்க்கஸ் அரேலியஸ்

நற்செயல்

★ பல நல்ல செயல்களை மறைப்பதற்கு ஒரு சில தீய செயல்கள் போதும்.

–புளூட்டார்ச்

கலை உலகம் போற்றும் கலைமாமணி

சு. தங்கவேலு
உதவி இயக்குநர்
அரசு அருங்காட்சியகம்
சென்னை

ஆனந்த கென்டிஸ் குமாரசாமி ஆகஸ்டு 22, 1877-ஆம் ஆண்டு கொழும்பில் பிறந்தார். இவருடைய தகப்பனார் சர் முத்துக்குமாரசாமி புகழ்மிக்க யாழ்ப்பாணத் தமிழர். இவருடைய தாயார் இலிசபெத் கிளே பீபி, இங்கிலாந்து நாட்டில் கென்டிஸ் என்னுமிடத்தில் மேட்டுக்குடியில் பிறந்தவர்.

குழந்தையும், திருமதி முத்துக் குமாரசாமியும் இங்கிலாந்தில் இருந்தபோது, சர் முத்துக் குமாரசாமி திடீரென்று மாரடைப்பால் கொழும்பில் காலமானார். இந்த அதிர்ச்சி யிலிருந்து மீண்ட திருமதி முத்துக் குமாரசாமி இங்கிலாந்தில் தங்கி ஓராண்டு ஒன்பது மாதங்களே ஆன ஆனந்தை உருவாக்குவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். ஆனந்து முதலில் வீட்டிலும், பின் வேகிளிப்புக் கல்லூரியிலும் பயின்றார். பின்னர் இலண்டனில் உள்ள பல்கலைக்கழகக் கல்லூரியில் பி.எஸ்ஸி., புவியியல் படித்துச் சிறப்பாகத் தேறினார்.

26 வயதே ஆன ஆனந்து 1903-இல் இலங்கைக் கனிமப் பொருள் அளவை இயக்ககத் தின் இயக்குநராக நியமிக்கப் பட்டார். 'தோரியனைட்' மற்றும் 'செரின்டிபைட்' ஆகிய கனிமங் களைக் கண்டுபிடித்துச் சிறந்த சாதனை புரிந்தார். மேலும், பல புவியியல் கட்டுரைகளை எழுதிப் பலராலும் பாராட்டு தலைப் பெற்றார். இலங்கைப் புவியியல் மேற்கொண்ட ஆய்வுக்காக இவருக்கு டி.எஸ்ஸி., பட்டம் இலண்டன் பல்கலைக் கழகத்தால் அளிக்கப்பட்டது.

கனிமங்களைக் கண்டு பிடிக்கும் நோக்கத்துடன் நாட்டின் பல பாகங்களுக்கும் பயணம் மேற்கொண்டார். அப்போது கண்டி மற்றும் பிற சிங்களக் கைவினைஞர்களைச் சந்திக்கும் சந்தர்ப்பம் அவருக்கு ஏற்பட்டது. மேலும், இலங்கை அருங்காட்சியகத்துடன் தொடர்பு வைத்திருந்த காரணத்தால், இலங்கை மற்றும் இந்தியக் லையையும் கைவினைப் பொருட்களையும் அறியக்கூடிய வாய்ப்பும் இவருக்குக் கிட்டியது. இதனால் இவர் கலை வரலாறு, மொழி வரலாறு, தத்துவம் ஆகியவை களில் ஆர்வம் ஏற்பட்டு புவியியலைப் புறக்கணிக்கக் காரணமாக அமைந்தது.

இலங்கையிலும் இவருடைய வாழ்க்கையின் நோக்கம் மாறியது. இவர் பயிற்சியினால் விஞ்ஞானியாக இருந்தாலும், ஆர்வத்தினால் கலையைப் போற்றும் கலா ரசிகராக விளங்கினார்.

இந்தியக் கலையும் கைவினைப் பொருட்களும் அந்நிய ஆதிக்கத்திலிருந்து உயிர் பெற்றாலும், இயந்திரங்களின் வருகையாலும், அந்நிய அரசின் ஆதரவின்மையாலும் அழியக் கூடிய நிலைக்கு ஆளானது. இவர் இயந்திரங்களைக் கொண்டு, ஒரே மாதிரியான

மலைவாழ் மக்களின் இருப்பிடங்களுக்கே சென்று அத்தியாவசியப் பொருள்கள் வழங்க ஏற்பாடு

மலைப் பகுதிகளில் வாழ்கின்ற மக்கள் குறிப்பாக மலை ஜாதியினர், பொது விநியோகத் திட்டத்தின் கீழ் வழங்கப்படுகின்ற எல்லா அத்தியாவசியப் பொருள்களைப் பெறுவதற்கு எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

மலைப் பகுதிகளில் வாழும் மக்கள் அத்தியாவசியப் பண்டங்களைப் பெற இனி "நடமாடும் நியாய விலை அங்காடிகள்" அமைத்து அத்தியாவசியப் பொருள்களை அவர்கள் வசிக்கின்ற இடங்களுக்கே கொண்டு சென்று வழங்க வேண்டும் என்றும் அதற்குத் திட்டம் தீட்டிச் செயல்படுத்தவும் கருத்துத் தெரிவித்திருந்தார்.

அதன்படி, தற்போது முதல் கட்டமாக, தமிழ்நாட்டில் சேலம் மாவட்டதிலுள்ள கொல்லி மற்றும் கல்ராயன் மலைப்பகுதிகளிலும், தென்ஆர்க்காடு வள்ளலார் மாவட்டத்தில் உள்ள கல்ராயன் மலை பகுதிகளில் உள்ள மலைவாழ் பகுதி மக்களுக்கு, பொது விநியோகத் திட்டத்தின் கீழ் அத்தியாவசியப் பொருள்கள் வழங்க 3 "நடமாடும் நியாய விலை அங்காடிகள்" அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 12,00,000 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்தத் திட்டத்தின் கீழ் வேன்களில் அத்தியாவசியப் பொருள்கள் மலைப் பகுதிகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அந்தப் பகுதிவாழ் மக்களுக்கு அவர்களின் இல்லங்களிலேயே அவை வழங்கப்படும். இதன் மூலம் இதுவரை தங்களது இருப்பிடங்களைக் கடந்து, நெடுந்தூரம் சென்று அத்தியாவசியப் பொருள்கள் வாங்க வசதியற்ற சுமார் 40,000 மக்கள் பயன் பெறுவார்கள்.

எண்ணற்ற பொருட்களை உற்பத்தி செய்வதை விரும்பவில்லை. மாறாக, கலையம்சத்தில் வேறுபட்ட கைவினைஞர்களின் கற்பனையில் உருவாகும் பொருட்களையே விரும்பினார். இப்படிக் கலையும் கலையம்சமும் மிக்க பொருட்கள் இல்லங்களில் இல்லாமல், அருங்காட்சியகங்களில் மட்டுமே காட்சிக்கு வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு வருத்தப்பட்டார். கைவினைஞர்களின் கைவன்மையால் உருவாகும் கலைப் பொருட்களைப் பேணிப் பாதுகாக்கப்பட வேண்டுமென்றும், அக்கலை எவ்வகையிலும் அழிய இடமளிக்கக் கூடாது என்ற கருத்தையும் இவர் மேற்கொண்டிருந்தார்.

இவரது நண்பர்களும் உறவினர்களும் நமது கலையையும் பண்பாட்டையும் புறக்கணித்து, அந்நிய நாகரிகத்தில் அமிழ்ந்திருந்தது இவருக்கு வருத்தத்தைக் கொடுத்தது. இந்தியப் பண்பாட்டைப் பரவச் செய்யும் நோக்குடன் இவர் இந்திய ஆடையைத் தலைப்பாகையுடன் அணிந்து வரலானார். இவ்வாறு இந்தியப் பண்பாட்டின் மேன்மையை உலகறியச் செய்தார்.

1906-ஆம் ஆண்டு இறுதியில் இவர் இயக்குநராகப் பணிபுரிந்து, ஒப்பந்தம் முடிந்த தறுவாயில், இலங்கையை விட்டு இந்தியாவிற்கு மூன்று மாதப் பயணம் மேற்கொண்டார். அப்போது மேலும் இந்தியச் சிற்பங்கள், சித்திரங்கள், கைவினைப் பொருட்கள் ஆகியவற்றை அறிய, இவருக்கு வாய்ப்புக் கிட்டியது. வாரணாசியில் அருங்காட்சியகம் அமைக்கப்படுமேயானால், தான் சேகரித்த அனைத்துக் கலைப் பொருட்களையும் அதற்குப் பரிசாக அளிக்க முன் வந்தார். மேலும், இந்துப் பல்கலைக்

கழகத்தில் கலை பண்பாட்டுத் துறைப் பேராசிரியராகப் பணியாற்ற விருப்பம் தெரிவித்தார். ஆனால், இவரது விருப்பம் நிறைவேறவில்லை. இவர் ஐரோப்பிய நாகரிகத்தை விமர்சித்தக் காரணத்தால் அப்போதிருந்த ஆங்கிலேய அரசு இவரது கனவு நனவாக எந்த உதவியும் புரியவில்லை.

அதிர்ஷ்டவசமாகப் பாஸ்டன் நுண்கலைக் கூடத்தின் அறங்காவலர் டென்மன் ராஸ், இவரது கலைப்பொருட்கள் அனைத்தையும் விலை கொடுத்து வாங்கியதுடன், அங்கு ஆராய்ச்சியாளராகப் பணிபுரியவும் வழிவகை செய்தார். பாஸ்டனில் பணிபுரிய நேர்ந்தது இவரது' வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. இவர் இந்தியப் பாரசீக • மற்றும் முகமதியக் கலைகளுக்குக் காப்பாளராகப் பணிபுரிய வாய்ப்புக்கிடைத்தது.

தனது கட்டுரைகளின் மூலம் நடராசர் சிலையின் மகத்துவத்தை உலகறியச் செய்த பெருமை ஆனந்த குமாரசாமியைச் சேரும். சிவ நடனத்தின் கருப்பொருளை இவர் மூவகையில் விளக்கினார். ஒன்று, சிவனுடைய ஆனந்த நடனம் அண்டத்தில் எல்லா அசைவுகளுக்கும் காரணமென்பதை திருவாசி எடுத்துக்காட்டுவதாகவும் இரண்டாவதாக, இந்த நடனத்தினால் எண்ணற்ற ஆத்மாக்கள் மாயையிலிருந்து விடுபடுவதாகவும் மூன்றாவதாக, இந்த நடனம் நடைபெறுவது பிரபஞ்ச மத்தியில் உள்ளத்தின் உள்ளடங்கிய சிதம்பரம் ஆகுமென்றும் விளக்கினார்.

ஆனந்த குமாரசாமி பரதநாட்டியத்தைப் போன்ற தரமான நமது நடனத்தைத் தனது கட்டுரைகளின் மூலமாகவும், தான் தயாரித்த படங்களின் மூலமாகவும், அமெரிக்கா மட்டுமல்லாமல் மற்ற உலக நாடுகளும் அறியச் செய்தார். அவரது அரும்பெரும் முயற்சியால் மேற்கத்திய நாடுகள் பரதநாட்டியம் மற்றும் தரமான பிற நடனங்களையும் கர்நாடக இசையையும் அறிந்துகொள்ளவும் பாராட்டவும் முற்பட்டனர்.

கலையும் கலையம்சமும், அலெக்சாண்டர் நமது நாட்டின் மீது படையெடுத்தபோது அறிமுகப்படுத்தப்பட்டதாக பெரும்பாலான நுண்கலை மற்றும் இந்தியப் பண்பாட்டு விற்பன்னர்களும் நம்பியிருந்தனர். அவர்களின் கூற்றுப்படி, புத்தரின் உருவம் கிரேக்க-புத்தர் கலைப்பள்ளியில் தோன்றியதாகும். பெரும்பாலான திறனாய்வாளர்கள் இதனை ஏற்றுக்கொண்ட நிலையில், டென்மார்க் நாட்டின் தலைநகரான கோபன்ஹேகனில் நடந்த கருத்தரங்கு மாநாட்டில், ஆனந்த குமாரசாமி ஆதாரத்துடனும் ஆணித்தரமாகவும் இது இந்திய வழி வந்ததென்பது விளக்கிக்கூறி அனைவரையும் வியப்பில் ஆழ்த்தினார்.

> ★ **சிக்கனம் நல்லதுதான். அத்துடன் வள்ளன்மையும் சேர்ந்திருக்க வேண்டும்.**
>
> **–பென்**
>
> ★ **வாழ்க்கை என்பது உருகி மறைந்து போகும் மெழுகு வர்த்தியல்ல, அது ஒரு அற்புதத் தீபம் ஆகும்.**
>
> **–பெர்னாட்ஷா**

இந்தியா, இந்தோனேசியா மற்றும் ஆசிய கலைகளைப் பற்றி 500-க்கும் மேற்பட்ட புத்தகங்களையும் கட்டுரைகளையும் தனது 30 ஆண்டு பாஸ்டன் அருங்காட்சியகச் சேவையில் எழுதிய சிறந்த தத்துவ மேதையாகவும் விளக்கமளிக்கும் வித்தகராகவும் விளங்கினார். அவரது புத்தகங்கள் அனைத்தும் அவரது அறிவுக்கூர்மையையும், புலமையையும் பறைசாற்றுவனவாக அமைந்துள்ளன. பொதுவாக, ஆசியா, குறிப்பாக, நமது நாட்டின் மதம், பண்பாடு, கலைகளைத் தனது திறமையினால் அறியச் செய்ததற்காக நாம் அவருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளோம்.

அவர் பணியிலிருந்து ஓய்வுபெற்றபின், தனது இறுதிகாலத்தை இமயமலையில் கழிக்க எண்ணியிருந்த நேரத்தில், திடீரென்று செப்டம்பர் 7, 1947-இல் நீதம், மாஸேசூட்ஸில் இருந்த தனது இல்லத்தில் இயற்கை எய்தினார்.

சிவனது நாட்டியத்திற்கு விளக்கமளித்ததற்காகவும், இராஜபுத்திரச் சித்திரங்களை அடையாளம் காட்டியதற்காகவும், புத்தரின் உருவம் தோன்றிய மூலத்தைக் கூறியதற்காகவும், இந்தியக் கலையின் அறிகுறியைக் காட்டியதற்காகவும் அவரது புகழ் என்றும் நிலைத்திருக்கும். ●

விண்ணின் அளவு பெண்ணின் பெருமை பாடிய கண்ணின் மணிக்கவி எங்கள் கவிமணி!



-கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம்

அன்னைத் தமிழுக்கு வணக்கம்

இங்குள்ளோர் அனைவருக்கும் என் வணக்கம்.
மூத்த தமிழுக்கு முன் வணக்கம்
எங்கள் தமிழ்த் தாயே
தலைச் சங்கத்தில் நீதலையழகு காட்டினாய்
இடைச் சங்கத்தில் நீ இடையழகு காட்டினாய்
கடைச் சங்கத்தில் நீ கண்ணின் கடையழகு காட்டினாய்.
நஞ்சையும் புஞ்சையும் நாலாபுறத்திலும்
நெஞ்சையே அள்ளும் தஞ்சையில் இன்று உன்
செஞ்சொல் வளம் காட்டினாய்
இன்ப சுகத்தையே கூட்டினாய்
என் இதயத்தை என்றும் நீ வீணையாய்
மீட்டினாய்; நல்வழி காட்டினாய்
உன்னை வணங்குதற்கு என் பெயருக்கு ஏற்ப
பன்னிரு கைகள் இருந்தாலும் போதாது.
ஆதலால் தமிழ்த் தாயே.
என்னிரு கைகளால் இதயத்தால் வணங்குகிறேன்.
என் கவியைத் தொடங்குகிறேன்.

மாண்புமிகு முதல்வருக்கு வணக்கம்

மதுரை மீனாட்சி.
தான் கருப்பாய், பச்சையாய் இருக்கிறோம் என்ற தன்
மனக்கவலை தீர மண்ணில்சிவப்பாய்ப் பிறக்க சிந்தித்துப்
பிறந்ததுபோல் இருக்கும்
எங்கள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி
அவர்களே.
புரட்சித் தலைவியின் காலடித் தாமரைகள்
நிலத்தில் பட்டதால் அன்றோ
பொய்கையில் மட்டுமே தாமரைப் பூக்கள் பூக்கும்
என்பது பொய்யாய்ப் போனது.
புரட்சித் தலைவியின்
கார்கூந்தலுக்குத் தோற்றுப் போனதால் அல்லவா
கார் மேகங்கள் தொடர்ந்து மழையைக்
கப்பமாய் இப்பொழுதெல்லாம் தவறாமல் கட்டி
வருகின்றன.
இந்த மார்கழி மாதத்திலும்
தமிழ்நாட்டில் தமிழ் வளர்க்கும் ஆண்டாள் இவர்
தஞ்சையைப் பொறுத்தவரை குந்தவை நாச்சி இவர்
சரசுவதி மகால் இருக்கும் தஞ்சைக்கு வந்த சரசுவதி
இவர்.
'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டும் அம்மா' என்ற
கவிமணியின் பாட்டு வரிக்கு நல்ல
எடுத்துக்காட்டாய் இருப்பவர் இவர்.
அம்மா, நீங்கள் மங்கையாய்ப் பிறந்தது
இந்த மங்கையர்கள் செய்த மாதவம் தான் என்பேன்
நான்.
உங்களால் இந்த மங்கையர் குலத்துக்கே
மதிப்பு உயர்ந்து விட்டது அம்மா.
கணவனிடத்தில் மனைவியின் மதிப்புகூட எந்தக்
கட்டணமும் இல்லாமல் கஷ்டமும் இல்லாமல்
மளமளவென்று உயர்ந்து விட்டது அம்மா.
மனைவியைக் கணவன் மாடுபோல் நடத்திய காலம்
இன்று உங்களால் மலையேறி விட்டது அம்மா.
நீங்கள் அரியணையில் அமர்ந்ததால்
அடுப்பு ஊதிக்கொண்டு இருந்த பெண்களுக்கு
அச்சம் என்பது அடியோடு போய் விட்டது அம்மா
மங்கையரெல்லாம் இன்று உங்களால்
மாண்புமிகு மங்கையர் என மாறி விட்டார்கள் அம்மா.
ஆதலால் எங்கள் கவிமணி பாடிய,
'மங்கையராகப் பிறப்பதற்கே நல்ல
மாதவம் செய்திட வேண்டும் அம்மா'
என்பது உங்களால் நிஜமாகி விட்டது அம்மா.
கவிமணியின் வாக்கை நிஜமாக்கிய உங்களை
இந்தக் கவியரங்கில் கைகூப்பி வணங்குகிறேன்.
நிலையாய் நீங்கள் வாழிய என்று என் நெஞ்சார
வாழ்த்துகிறேன்.
மனைவி ஒழுங்காகச் சமைத்துப் போடும்பொழுதே
உப்பு குறையுது; காரம் குறையுது என
தப்பு, தவறு சொல்லி தலைமுடியைப் பிடித்து இழுத்து
சண்டை பிடித்த ஆடவர்கள்
இப்பொழுதெல்லாம் அப்படியே ஒருசமயம்
நிஜமாகக் குறைந்தாலும் கண்டுகொள்ளாமல்
சண்டைகள் போடாமல் சமாதானமாய்ப்
போய் விடுகிறார்கள் என்றால்
இந்தச் சமாதான சகவாழ்வை
உங்கள் ஆட்சி அல்லவா சாதித்தது!
பொறுமையை ஆண்களுக்குப் போதித்தது.
பெண்ணைக் கட்டிக் கொடுக்கும் பெற்றோர்
மணமக்களுக்குப் பரிசாய் கட்டில் கொடுப்பார்கள்
நீங்களோ பெண் சிசுக்களைக் கட்டிக் காக்க
தொட்டில் கொடுத்தீர்கள்
தூக்கி எறியப்படும் பெண் சிசுக்களைக்
காப்பாற்றி வாழ்வு கொடுத்தீர்கள்.
கவிமணியின் வார்த்தைக்கு உயிர் கொடுத்தீர்கள்,
'பின்னி முடிச்சிடம்மா;
பிச்சிப்பூ சூட்டிடம்மா'
இந்தப் புவியில்
பெற்றதாய் பின்னி முடிக்காத பிஞ்சுக் குழந்தைகளுக்கு
எல்லாம்
உற்ற தாயாகி பின்னி முடிக்க வைத்தீர்கள்.
பிச்சிப் பூ சூட வைத்தீர்கள்.
கவிமணி, "உள்ளத்து உள்ளது கவிதை உண்மை
உருவெடுப்பது கவிதை" என்றார்.
நீங்களே ஒரு கவிதையாய் இருக்கிறீர்கள் காரணம்.
நீங்கள் மக்களுக்கு உண்மையாய் இருக்கிறீர்கள்.
ஆதலால்,
அவர்கள் உள்ளத்திலும் இருக்கிறீர்கள்.
மக்கள் உள்ளத்தில் இருக்கும் கவிதை
கவிமணி காண விரும்பிய கவிதை
நீங்கள் யுக்தியின் வடிவம்

சக்தியின் மறு வடிவம்
தமிழர்கள் கொண்ட தமிழ்ப் பற்றின் வடிவம்
சாதி மதங்களாம் சங்கிலிகளை அறுத்தெறிந்த
நீதியின் வடிவம். நியாயத்தின் வடிவம்
உங்கள் ஆட்சியில்.
பெண்ணுக்காகப் பாடிய கவிமணி பற்றி
கவிபாடுவதில் நான் உண்மையிலேயே
பெருமைப்படுகிறேன்.

கவியரங்கத் தலைவருக்கு வணக்கம்

தஞ்சை மண்ணின் தரையைப் பார்த்தாலோ
எங்கும் பச்சை நிறம்.
இந்தக் கவியரங்கின் தலைவர்
தலையைப் பார்த்தாலோ, மீசையைப் பார்த்தாலோ
ஒரே பஞ்சு நிறம்.
என் அண்ணனே; கவிதை மன்னனே!
உன் தலையில் கொஞ்சம் ரோஜா நிறம் தடவினால்,
உன் பேரப் பிள்ளைகளுக்கு
என்றுமே பஞ்சு மிட்டாய்க்குப் பஞ்சம் வராது.
உன் நரை பித்தநரை அல்ல. சுத்த நரை.
தலை நரைத்த உன்னிடத்தில் தமிழ் மட்டும்
எப்படித் தஞ்சைப் பயிரைப்போல்
என்றும் பசுமையாய் இருக்கிறது?
புலமையால் நீ முதியவன்
உன்னை இந்த இளையவன் பாசமுடன் வணங்குகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கு வணக்கம்

கவியரங்கைத் தொடங்கி வைத்த
அமைச்சர் கு.ப. கிருஷ்ணன் அவர்கள்
எட்டாவது குழந்தையாய் வட மதுரையில் பிறந்த
கிருஷ்ணன் பெயரோடு
எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டுக் கவி அரங்கைத்
தொட்டுத் தொடங்கி வைத்த எங்கள் அமைச்சர்
கிருஷ்ணனின் உறவெல்லாம் நெற்பயிரோடு.
சம்பா விவசாயம் தொடங்கியதா என
அன்பாய் விசாரிக்கும் இவர், இருபதாம் நூற்றாண்டுப்
பாவலர்கள் செய்த பா விவசாயம் பற்றி
பாட்டரங்கைத் தொடங்கி வைத்துள்ளார்.
எம்பெருமான் பள்ளி எழுந்தருளாய் எனப்பாடி
தூங்கும் கடவுளையே தட்டி எழுப்ப
வேண்டிய நிலையில் இருக்கும் திருவரங்கத்தார்
வேண்டும் முன் எழுந்து விவசாயம் பார்க்கும்
வேளாண்மைத் துறைக்கு அமைச்சராய் விளங்குகிறார்.
மாடுகள் இல்லாமல் விவசாயம் ஏது?
அந்த மாடுகள் கிருஷ்ணனிடம் அல்லவா மயங்கி நிற்கும்?
ஆதலால் இவர் அப்பொழுதே
மாட்டுக்கார வேலன் கூட்டத்தில் சேர்ந்து விட்டார்.
ஆதலால் இந்தப் பாட்டுக்கார வேலன் இங்கே பாசமுடன்
வணங்குகிறேன்.
தென்னவன் தமிழ் வளர்த்த முன்னவன்
மீன் கொடி பிடித்து நடந்த மன்னவன்
அன்னவன் முன்னிலையில் அன்று
ஆயிரமாயிரம் புலவர்கள் கவியரங்கம் ஏறினார்
தென்னவனாம் அமைச்சர் முன்னிலையில் இன்று இந்தக்
கவியரங்கம்.
என்றும் தமிழுக்குக் காவலராய் இருக்கும் நாவலரை
மதியின் இளவலாய் மண்ணில் தோன்றிய சட்ட
அமைச்சரை
தமிழ்ப் பயிர் வளர எருவாய் இருந்த வருவாய்
அமைச்சரை
பசிப்பிணி மருத்துவன் பண்ணனின் வழியில்
பசிப்பிணி போக்கும் உணவு அமைச்சரை
மற்றும் உள்ள அமைச்சர்களை,

மன்றத்தவரை மனமார வணங்குகிறேன்.
இலையில் எடுத்துப் போடுவதற்கு
எப்பொழுதும் சோறுடைத்தது சோழ வளநாடு
எப்பொழுதும் சோறு படைத்தது சோழ வளநாடு
என்பார்கள்.
தஞ்சை இராசராசனும், இராசேந்திர சோழனும்
குந்தவை நாச்சியாரோடு அமர்ந்திருந்து
மந்திர ஆலோசனை பல புரிந்து
மண்ணெலாம் வென்று வாகை அணிந்து
விண்ணெலாம் கொடி பறக்க மனமகிழ்ந்து
பெரிய கோயிலையே பிரியமுடன்
உரிய கோயிலாய் இந்த மண்ணுக்குத் தந்துவந்து வலம்
வந்து
பேரரசை உருவாக்கிய நகரம்
ஐந்து கிளைகளாய்க் காவிரி பிரிந்து
ஏழு ஸ்வரங்களுக்கும் ஏற்ப இசைந்த
இந்தத் தஞ்சையில்தான்.
ஐயாற்றில் இசை மீட்ட இந்தத் தஞ்சையில்தான்.
கருநாடக சங்கீதம், வேங்கட மகியால் விளக்கம் பெற்றது.
சங்கீதம், நடனம், சாஸ்திரம், நாதஸ்வரம், ஓவியம்
இங்கே வளர்ந்தது போல் வேறு எங்கும்
வளர்ந்தது இல்லை.
தஞ்சைக் கலைகளின் தாயகம் ஆதலால் இந்தத்
தஞ்சையை நெஞ்சை நிமிர்த்தி நான் வணங்குகிறேன்.
கவிமணி, ஒரு விந்தையான கவிஞர்
காந்தி யுகத்தில்
உமர்கய்யாமை மொழி பெயர்த்து வென்றவர்.
கள்ளுக்கடைகளுக்கு முன்னால்
மறியல் செய்து கொண்டிருந்த கால கட்டத்தில்
மதுக்கோப்பைக் கவிதைகளுக்கு மறு பிறப்புக்
கொடுத்தவர்.
ஆசிய ஜோதி என்று நேருவுக்கு
அகிலம் புகழ்மாலை அணிவிப்பதற்கு முன்னால்
ஆசியஜோதி புத்தன் என்று அழகான நூல் படைத்தவர்
வெள்ளையனே வெளியேறு என்று இந்த நாடு
வெள்ளையர்களை விரட்டிக் கொண்டிருந்த நேரத்தில்
அந்த
வெள்ளையர்களின் கவிதைகளையெல்லாம்
நல்ல தமிழிலே எழுதி நம்மை வரவேற்க வைத்தவர்
வெள்ளைக்காரன் மேலே வெறுப்பு இருந்த காலத்தில்
'தோட்டத்தில் மேயுது வெள்ளைப் பசு, அங்கே
துள்ளிக் குதிக்குது கன்றுக் குட்டி' என்று
பாட்டு பாடியவர், இந்தக் கவிஞர்.
வயதால் பாரதிக்கும் மூத்தவர். இந்த நாட்டைப்
பாரதிக்குப் பின்னாலும் இருந்து பார்த்தவர்.
எவரையுமே வைது எழுதாத இவருக்கு
வையாபுரிப் பிள்ளைதான் முன்னுரை எழுதியவர்.
இந்தக்கவிமணி பெண்களைப் பற்றி மட்டுமே
பெருமையாகப் பாடியதற்குக் காரணம்
இந்திய நாட்டின் கடைக்கோடியில் இருக்கும்
கன்னியாகுமரிக்கு அருகில் பிறந்தது
ஒரு காரணமாய் இருக்கலாம்.
கல்வி நிலையங்களில் கன்னியருக்குத்
தமிழ் கற்றுக் கொடுத்தது
மற்றொரு காரணமாகவும் ஆகலாம்.
காரணங்கள் ஆயிரம் இருந்தாலும் இந்தக் கவிமணியின்
கவிதைகள்
ஆரணங்குகளுக்கு ஆரத்தித் தட்டுக்களாய் ஆகிவிட்டன.
'சாதிகள் இல்லையடி பாப்பா' என்று பாடிய பாரதிக்குப்
பின்
"ஓடும் உதிரத்தில் வழிந்தொழுகும்
கண்ணீரில் தேடிப் பார்த்தாலும்
சாதி தெரிவதுண்டோ அப்பா"
என அப்பவே பாடியவர்.

இவர் பெண்களைப் பற்றி எழுதியதைக் கூட
வாசிப்பதற்கு வசீகரமாய் இருக்கிறது.
"மானைப் பழித்த விழியுடையாள்;
ஒரு மாமயில் போலும் நடையுடையாள்
தேனைப் பழித்த மொழியுடையாள்; பெண்ணின்
தெய்வம் எனத்தகும் சீருடையாள்'.
பெண்மணி பற்றிய இந்தக் கவிமணியின் சொல்மணிகள்
நம் கண்மணியைக் கூட கவர்ந்து இழுக்குமே;
தேசிக விநாயகம் என்பதால் தானோ என்னவோ
இவர் தேசிய விநாயகம்;
விநாயகம் என்பதால் தானோ என்னவோ
இவரது பாடல் வரிகளில் கூட வினா எழுகிறது.
"சூரியன் வருவது யாராலே?
சந்திரன் வருவது யாராலே?"
என்றெல்லாம் பாடலில்
வினாக்கள் தொடுத்து, விளையாடும் குழந்தைகள்
குழந்தைச் செல்வங்களையும் சிந்திக்கத் தூண்டினார்.
அதனால் நாமக்கல் கவிஞர் ராமலிங்கம் பிள்ளையும்
'தேசிய விநாயகத்தின் கவிப் பெருமை,
தினமும் கேட்பது எந்தன் செவிப் பெருமை'
என்று புகழ்ந்து கொண்டாடினார்.
அத்தகு கவிமணியின் புகழ் இத்தரையில் என்றும்
இருக்கும்.

(கடந்த ஜனவரித் திங்களில் தஞ்சைத் தரணியில் சீருடன் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், "இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள்" என்னும் தலைப்பில் கவிமணி தேசிக விநாயகம் அவர்களைப் பற்றி, கவிஞர் குருவிக்கரம்பை சண்முகம் அவர்கள் பாடிய கவிதை).

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டக் கிட்டங்கிகள்

தமிழகச் சமூகநல மற்றும் சத்துணவுத் துறையின் கீழ் நடத்தப்பட்டு வருகின்ற (ICDS) Integrated Child Development Scheme ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டத்திற்குத் தேவையான, சத்துணவு மற்றும் மருந்துகள் ஆகியவற்றைத் தக்க முறையில் வைத்துக் கொள்வதற்காக, திட்டக் கிட்டங்கிகள் கட்டுவதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஒரு கிட்டங்கிக்கு இரண்டரை இலட்சம் ரூபாய் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்ட 20 இடங்களில் கிட்டங்கிகள் கட்டுவதற்கு 50 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

ஒன்றியத் தலைமை இடங்களில் கட்டப்படவுள்ள இந்த ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டக் கிட்டங்கிகள் கீழ்க்கண்ட மாவட்டங்களில் கட்டப்படும்:

வட ஆர்க்காடு அம்பேத்கர் 1, புதுக்கோட்டை 2, கோயம்புத்தூர் 3, மதுரை 2, தர்மபுரி 3, தஞ்சாவூர் 1, சேலம் 1, கன்னியாகுமரி 1, இராமநாதபுரம் 1 மற்றும் செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். 5

இந்தக் கிட்டங்கிகள் கட்டும் பணி விரைவில் முடிக்கப்பட வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

தங்கும் விடுதிகளில் தங்கிப் படிக்கும் மாணவர்க்கு சன்னரக மற்றும் மிகச் சன்ன ரக அரிசி வழங்கப்படும்!

இந்த ஆண்டு 1995, ஆகஸ்ட் மாதம் சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில், கலந்துகொண்டு உரையாற்றியபோது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், ஆதிதிராவிடர்களுக்கான மாணவ மாணவியர் விடுதிகளிலும், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான மாணவ மாணவியருக்கான விடுதிகளிலும், தங்கிப் பயிலும் மாணவ மாணவியருக்குத் தற்போது அளிக்கப்பட்டு வரும் சாதாரண அரிசிக்குப் பதிலாக, சன்னரக மற்றும் மிகச் சன்ன ரக அரிசி வழங்கப்படும் என்ற அறிவிப்பு ஒன்றினை வெளியிட்டிருந்தார்.

தற்போது மாவட்டங்களில் உள்ள ஆதிதிராவிடர்களுக்கான தங்கும் விடுதிகளிலும், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் தங்கும் விடுதிகளிலும், தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலம் பொது விநியோகத் திட்டத்தின்கீழ், வழங்கப்படுகின்ற விலையில், கல்லூரி மற்றும் தொழிற்பயிற்சி விடுதிகளில் பயில்கின்ற மாணவ மாணவியர் ஒவ்வொருவருக்கும் 18 கிலோ அரிசியும், பள்ளிகளில் உள்ள தங்கும் விடுதிகளில் தங்கிப் பயிலும் ஒவ்வொருவருக்கும் 12 கிலோ அரிசியும் வழங்கப்படுகின்றன. தமிழ்நாட்டிலுள்ள அனைத்துத் தங்கும் விடுதிகளிலும் உள்ள 1,792 தங்கும் விடுதிகளில் தங்கிக் கல்வி பயில்கின்ற 1,19,178 மாணவ மாணவியர்க்கு, மொத்தம் ஒரு கல்வி ஆண்டில், அதாவது 10 மாதங்களுக்கு 1,82,766 குவிண்டால் சதாரண ரக அரிசி வழங்கபபடுகிறது.

தற்போது மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இத்தகைய தங்கும் விடுதிகளில் தங்கிப் பயில்கின்ற மாணவ மாணவியருக்கு 5.17 இலட்சம் ரூபாய் கூடுதல் மானிய செலவில் சன்னரக மற்றும் மிகச் சன்ன ரக அரிசி வழங்கப்படும் என்று ஆணை பிறப்பித்துள்ளார். இந்த ஆணை உடனடியாக அமலுக்கு வருகின்றது.

காளை மாடு இன வளர்ச்சிக்கான புதிய திட்டம்

கால்நடை துறை வளர்ச்சிக்காகப் பல்வேறு திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகின்ற தமிழக அரசின் கால்நடைத் துறையானது நடப்பு ஆண்டான 1995-96-இல் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின்படி, நவீன தொழில்நுட்பச் செய்முறைகளைக்கால்நடை வளர்ச்சிப் பணிகளுக்குப் பயன்படுத்துவதற்காகவும், மேலை நாடுகளில் உள்ள காளை மாடுகளுக்கு இணையாக நமது மாநிலத்தில் உள்ள காளை மாடுகளும் அதிக வளர்ச்சியோடும், ஆற்றலோடும் இருக்க வேண்டியதன் அவசியம் கருதியும் காளை மாடு இன வளர்ச்சிக்காகத் தனித் திட்டம் ஒன்றினைத் தயாரித்து அரசின் ஒப்புதலைக் கோரி இருந்தது.

தமிழகக் கால்நடைத் துறையின் இந்தப் புதிய திட்டத்தைப் பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டில் காளை மாடு இன வளர்ச்சித் திட்டம், செயல்படுத்துவதற்காக 105 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார். இத்திட்டம் விரைந்து செயல்படுத்தப்பட வேண்டுமென்றும் உத்தரவிட்டுள்ளார்.

ஆட்சி மொழித் தமிழ் வளர்க்கும் அருப்பணியை இயக்கமாய் மாற்றி வெற்றி கொள்வோம்!

திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப.,

***மா**நிலத் தேர்தல் ஆணையாளர் திரு கே. மலைச்சாமி, இ.ஆ.ப., அவர்கள் கடந்த ஜனவரித் திங்களில் தஞ்சை மாநகரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் "ஆட்சிமொழி" என்னும் தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கில் பங்கேற்று ஆற்றிய உரை*

"உலகப் பாதைகளெல்லாம் ரோமாபுரியை நோக்கிச் சென்றன" என்று ஒருவன் அன்று ஒரு நாள் சொன்னான். இன்று அவனைக் கூப்பிட்டுக் கேட்டால், உலகப் பாதைகள் பலவும் தஞ்சைத் தரணியை நோக்கிப் போய்க் கொண்டு இருக்கின்றன. அதுமட்டுமல்ல, எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில், தமிழ்ப் பரணி பாடிக்கொண்டிருக்கிறது என்று சொல்லிக் காட்டுவான் அத்தகைய சிறப்போடு இன்றைக்கு எட்டாம் உலகத் தமிழ் மாநாடு எழிலாக, ஏற்றத்தோடு, எட்டுத் திக்கும் பரவி, விரவி இருக்கின்ற ஒரு அரிய செயலை நாம் கண்டு கொண்டிருக்கிறோம்.

பயனுள்ள மாநகராய் மாறியது தஞ்சை

எங்கு நோக்கினும் வண்ணத் தோரணங்கள், வளைவு வாயில்கள், வருக வருக என்ற வரவேற்புகள், துலங்கும் தோரண வாயில்கள், தொங்கும் வின்ச் ரெயில், மிதக்கும் பாலம், மிளிரும் கோபுரங்கள், சிலைகள், சின்னங்கள், மண்டபங்கள், பளபளக்கும் பாதைகள், பலப் பல கட்டடங்கள், புதுப்புதுப் புராணச் சின்னங்கள், இப்படியாக, பலப்பல மேம்பாட்டுப் பணிகள் நடந்து தஞ்சை மாநகரத்தை ஒரு ஆற்றல் மிக்க நகரமாக, அருமை நகரமாக இங்கே ஆக்கித் தந்திருக்கிறார்கள்.

அருமைக்கும் பெருமைக்கும் உரிய, பயனுள்ள ஒரு மாநகரமாக இந்தத் தஞ்சை இங்கே மாறி இருக்கிறது.. இப்படிப்பட்ட பெரும் பணியையெல்லாம் செய்து, எத்தனை உலகத் தமிழ் மாநாடுகள் நடந்தாலும், இங்கே நடக்கின்ற இந்த மாநாடு மற்ற மாநாடுகளைவிட விஞ்சியும், மிஞ்சியும் இருக்கிறது என்று சொல்லத்தக்க வகையில் ஒரு அபரிமிதமான ஆற்றல்மிக்க மாநாட்டைப் படைத்துக் காட்டிய முதலமைச்சர் அவர்களையும், அவர்களைச் சார்ந்த அமைச்சர் பெருமக்களையும், பாராட்டுகிறேன்.

கலாச்சாரக் கண்ணாடி! பண்பாட்டுப் பலகனி!

ஆட்சி மொழியைப் பற்றிப் பேசுவதற்கு முன் மொழி என்றால் என்ன என்று நீங்கள் தெரிந்தாக வேண்டும். மனிதன் கண்டுபிடித்த கண்டுபிடிப்புகளிலேயே மகத்தானது மொழி. தனது உணர்வை, உள்ளத்தை, கருத்தை, வெளிப்பாடாகச் செய்கின்ற மாபெரும் கருவிதான் மொழி. எழுத்தானாலும், பேச்சானாலும் கலாச்சாரத்தின் கண்ணாடியாக, பல கலைகளுக்கும் பலகணியாக இருக்கின்ற, பண்பாட்டுக்குப் பல கணியாக இருக்கின்ற மொழிதான் மிகச் சிறந்த மொழி. அப்படிப்பட்ட ஒரு இலக்கணத்தை வரையறை வைத்துக்

கொண்டு, நமது தமிழ் மொழியைப் பார்த்தால் அது அருமையான மொழி, தனிமையான மொழி, தொன்மையான மொழி, தனித்தன்மை பெற்ற மொழி, வளமும், நலமும், நயமும் பெற்ற மொழி. அது இன்பமயமானது இனிமையானது என்றெல்லாம் நாம் சொல்லுகிறோம்.

ஏனைய மொழிக்கெல்லாம் சவால் விடுகிறான் பாரதி

பாரதிதாசனை, பாவேந்தனை அவனுடைய பாணியில் சொல்லுவது என்றால்,

கனியிடையேறிய சுளையும்,
முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும், காய்ச்சுப்
பாகிடை ஏறிய சுவையும் நனிபசு
பொழியும் பாலும், தென்னை
நல்கிய குளிரிள நீரும் இனிய
என்பேன் எனினும், தமிழை,
என் உயிர் என்பேன்.
என்றான், புரட்சிக் கவி.

அதோடு நின்றானா?

"மங்கை ஒருத்தி தரும் இன்பம்
என்றன்
மாத்தமிழுக்கு ஈடில்லை கண்டீர்"

என்றான்.

பாரதிதாசன் இப்படிச் சொன்னார் என்றால், அவனது ஆசான் பாரதி. பாவில் வல்லவன், பன்மொழிப் புலவன், "யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்று ஏனைய மொழிகளுக்கெல்லாம் சவால் விட்டுப் பார்க்கிறான். இப்படி இனிமையான மொழியாக, இன்பமயமான மொழியாக, தமிழ் இருந்தது என்பதைவிட, அதற்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற கவசத்தைப் பாருங்கள் அதற்கு அணிவிக்கப்பட்ட ஆடையைப் பாருங்கள். வேறு எந்த மொழிக்கும் இல்லாத அளவுக்கு அருந்தமிழ், இன்தமிழ், ஒண்தமிழ், கலைத் தமிழ், கவின் தமிழ், தண்டமிழ், தென் தமிழ், தென்னவன் தமிழ், நற்றமிழ், நறுந்தமிழ், முத்தமிழ், மூத்த தமிழ், மூவர் தமிழ் என்றெல்லாம் வரிசை வரிசையாக அடுக்குகின்ற அளவுக்கு ஏற்றம் பெற்றிருக்கிறது. தமிழ் மொழி மட்டுமல்ல, தமிழ் மொழி பேசும் தமிழர் அறிவால், ஆற்றலால், பண்பாட்டால், பழக்க வழக்கத்தால், நாகரிகத்தால் அத்தனையிலும் சிறந்து உயர்ந்து இருக்கிறார்கள். அக்காலத்திலே தமிழர்கள் கடல்போர் புரிந்து இருக்கிறார்கள். கல்லணையைக் கட்டி இருக்கிறார்கள். இப்படிக் கடல் பயணம் செய்வது, கப்பலைக் கட்டுவது, கல்லணையைக் கட்டுவது என்றால் அவர்களுக்கு எவ்வளவு நுணுக்க நுண்ணறிவு இருந்திருக்க வேண்டும்!

> ★ **உழைப்பதில் மட்டுந்தான் உண்மையான பெருமை கிடைக்கிறது.**
>
> *—கால்ரிட்ஜ்*

கடலியல், காற்றியல், வானியல், கோளியியல், பொறியியல் இப்படி இத்தனை இயல்களும் தெரிந்தவனாக இருந்து இருந்தால்தானே, அவன் அவ்வளவு தூரத்திற்கும் உயர்ந்து இருக்க முடியும்? மற்ற இனத்தவரெல்லாம் காட்டிலே கந்த மூலாதிகளைச் சாப்பிட்டுக் கொண்டு அலைந்து திரிந்து அந்தக் காலத்தில், காட்டுமிராண்டிகளாக மற்றவர்கள் வாழ்ந்திருந்த காலத்தில், தமிழன் ஏடும் எழுத்தாணியையும் எடுத்து, இறவாத இலக்கியங்களைப் படைத்துக் கொண்டிருக்கிற அளவுக்கு நாகரிகச் சிறப்பைப் பெற்றிருக்கிறான். அப்படிப்பட்ட நாகரிகத்தால், பண்பாட்டால், பழக்க வழக்கத்தால், மொழி வளத்தால், உயர்ந்திருந்த காரணத்தால்தான், இன்றிலிருந்து ஏறத்தாழ ஐந்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாகத் தமிழ் வாழ்ந்து, வளர்ந்தது.

ஹரப்பா, மொகஞ்சோதாரா நாட்டினுடைய கால எல்லையை, காலத்தின் அறுதியை ஐந்தாயிரம் ஆண்டுகள் என்று கணித்து இருக்கிறார்கள். கணக்கிட்டு இருக்கிறார்கள். ஐந்தாயிரம் ஆண்டுகளாகத் தமிழ் வளர்ந்தது வாழ்ந்தது உயர்ந்தது. ஆகவே, ஐந்தாயிரம் ஆண்டுகளாக ஆட்சி மொழியாக அது இருந்தது. கிறிஸ்து பிறப்பதற்கு முன்பாகவும், கிறிஸ்து பிறப்பதற்கு பின்பாகவும் ஆட்சிமொழியாக இருந்தது. உங்களுக்குத் தெரியும். சங்க காலமாயினும் சங்கம் மருவிய காலமாயினும், பாண்டியர் காலமாயினும், பல்லவர் காலமாயினும், சோழர்கள் காலமாயினும், நாயக்கர்கள் காலமாயினும், முகமதியர்கள் காலமாயினும் இந்த அனைத்துக் காலங்களிலும், ஐரோப்பியர்கள் காலம்

ஒன்றை மட்டும் தவிர்த்து, ஏனைய அனைத்துக் காலங் க்ளிலும் தமிழ் ஆட்சி மொழி யாகச் சுடர்விட்டுப் பிரகாசித் தது. ஆனால், ஆங்கிலேயர் வருகை, அன்னிய ஏகாதி பத்தியம் நமது தமிழ்மொழியைக் கட்டுப்படுத்தியது. தடைப் படுத்தியது. அதை அடிமைப் படுத்தியது. ஆகவேதான், அந்தத் தாய்மொழி, தனிமொழியாக நின்ற மொழி, அநாதை மொழியாக நின்றது. வீட்டு விளக்காக, குடும்பத் திலகமாக நின்ற மொழி, பணிப் பெண்ணாக வீட்டிலே இருக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஆங்கிலேயர் ஆட்சியில்தான் வந்துவிட்டது. ஆக, ஆங்கிலேயர்கள் ஏனைய எல்லா மொழிகளையும் ஒதுக்கிவிட்டு, முழுக்க முழுக்க ஆங்கிலத்தை ஆட்சி மொழியாக ஆக்கினார்கள்.

மக்களை மட்டுமன்றி, மொழியையும் அடிமைப் படுத்தினான் ஆங்கிலேயன்!

ஏனையவரெல்லாம், அது முகமதியராயினும் சரி, நாயக்கர் களாயினும் சரி, என்ன செய் தார்கள்? அவர்கள் தமிழை ஒதுக்கவில்லை, புறக்கணிக்க வில்லை, ஓரம்கட்டவில்லை. அதேநேரத்தில், அவரவர்கள் மொழியைச் சேர்த்துக் கொண் டார்கள். முகமதியர் காலத்திலே உருதுச் சொற்கள் சில தமிழ் ஆட்சியில் புகுந்தன. இன்றைக்கு நீங்களெல்லாம் தெரிந்து வைத்திருக்கிறீர்களே, தாசில்தார், சிரஸ்தார், டபேதார், ஹூசூர், கஜானா இவையெல்லாம் நம் தமிழ் அல்ல. முகமதியர் காலத்திலே வந்த உருதுச் சொற்கள், நம்மை ஆண்டன. அதேநேரத்தில் தமிழ் ஆட்சி மொழிக்கு அது ஆபத்தை விளைவிக்கவில்லை. அடியிலே நின்று சில இடங் களைப் பிடித்தது. அவ்வளவு தான்.

ஆனால், ஆங்கிலேயர் காலத்தில்தான் அனைத்தும் போய்விட்டது.

ஆங்கில ஏகாதிபத்தியம் அரசாண்ட 200 ஆண்டுகளுக்கு, தமிழ் மொழி அவர்களிடத்தில் அடிமைப்பட்டு விட்டது. நாம் அடிமைப்பட்ட பிறகு நமது மொழிபோய் விட்டது. ஆங்கிலம் சன்னஞ்சன்னமாக ஆட்சி மொழியாக ஆகிவிட்டது. ஆங்கிலச் சொற்கள் எப்படி யெல்லாம் நமக்கு இயற்கை யாகவே வந்துவிட்டது என்று இங்கே சொன்னார்களே, அந்த இழப்புக்குக் காரணம், தமிழ் இழப்புக்குக் காரணம் ஆங்கில ஆட்சி.

ஆட்சிமொழி ஆனபின்னும் அடைந்ததா வளர்ச்சி?

ஆங்கில ஆட்சியில் ஏற் பட்டன இந்தச் சங்கடங்கள் என்பது சரிதான். ஆனால், அதை அடுத்து நாடு விடுதலை பெற்றதே அதன்பிறகு நமது தமிழ் ஆட்சிமொழி ஆயிற்றா என்றால், அதற்கும் காலம் 1950-இல் தான் வந்தது. இந்திய அரசியல் சட்டம் என்ற ஒரு சட்டம் வந்த பிறகு, ஆட்சி மொழியைப் பற்றிப் பேசுகின்ற ஒரு சூழ்நிலை வந்தபிறகு, இந்திதான் ஆட்சிமொழி இந்தியாவிற்கு என்றுசொன்ன பிறகு, அதே நேரத்தில 1950-லிருந்து 15 ஆண்டுகளுக் குள் அதாவது அரசியல் சட்டம் ஏற்பட்ட 15 ஆண்டுகளுக்குள் ஒவ்வொரு மாநிலமும் தனக்கு ஒரு மொழி ஆட்சிமொழி யாக வேண்டுமென்றால், அதற்கு சட்டம் இயற்றி அதை நிர்மாணித்துக் கொள்ளவேண்டும் தவறினால், அந்த இடத்தையும் 'ஆங்கிலமே எடுத்துக் கொள்ளும் என்று ஒரு ஷரத்து வந்தால் தான், இந்திய அரசியல் சட்டம் குறிப்பிட்ட காரணத்தால்தான், தமிழகத்தில் 1956-இல் அந்தச் சட்டத்தை நிறைவேற்றி 1957-இல் இருந்து இன்று வரை தமிழ் ஆட்சிமொழியாக இருக்கிறது.

1957-லிருந்து இன்றைக்கு 1994 முடிந்து 1995 வரை 37 ஆண்டுகளில் தமிழ் ஆட்சிமொழியாக அரசோச்சிக் கொண்டிருக்கிறது. இப்போது தான் நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். ஆட்சிமொழியான பிறகு ஆட்சிமொழி தமிழ் வளர்ந்து இருக்கிறதா? என்று நினைத்துப் பார்க்கின்றபோது, சில சமயங்களில் மகிழ்ச்சி யாகவும், சில சமயங்களில் துக்கமாகவும் இருக்கிறது. 37 ஆண்டுகள் ஆட்சிமொழியாக இருக்கின்ற இந்தத் தமிழ் மொழி என்ன சாதித்தது? என்ன சந்தித்தது? எங்கே சாதிக்கத் தவறியது? என்று நாம் ஒரு ஆய்வு நடத்திப் பார்த்தால் நான் சொன்னேனே, Mixed feeling என்று சொல்லக்கூடிய ஒரு கலந்த மனப்பான்மைதான் நமக்கு ஏற்பட முடியும்.

★ **வெற்றிக்குக் காரணம் திறமையன்று. தளராத ஊக்கமேயாகும்.**

—சார்லஜ் பக்ஸ்டன்

★ **அறிவு பணக்காரர்களின் ஆபரணம். ஏழைகளின் செல்வம்.**

—தாமஸ் கார்லைஸ்

தடைக்கற்கள் எதுவாயினும் தவிடுபொடி ஆக்கிடுவோம்!

60 சதவிகிதம் ஆட்சிமொழி வெற்றி பெற்றுவிட்டது என்று கணக்கிட்டுச் சொல்லுகிறார்கள் நமது நண்பர்கள். வரவேற்கத் தக்கதுதான். ஏனைய மாநிலங் களை ஒப்பிட்டுப் பார்க்கின்ற போது, தமிழகத்தில் தமிழ் மொழி ஆட்சிமொழியாகச் செயல்படுவததைப்போல் எந்த மாநிலத்திலும் செயல்படுத்தப் படவில்லை. கணக்குக் கொடுத்து இருக்கிறார்கள். வரவேற்கிறோம். ஆனால் 37 ஆண்டுகளில் நடந்து வந்த பாதை போதுமா, போதாதா என்றால் போதாது, போதாது, போதாது. இந்த ஆமை வேகத்தை அடித்து நொறுக்க வேண்டும். அதற்கு நீங்கள் சில தீவிர நடவடிக்கைகள் எடுத்தாக வேண்டும். அவ்வாறு செயல் படுவதற்கு த் தடைக்கற்கள் எவை என்றாலும், அவற்றைச் சிதறடித்து, . தவிடுபொடியாக ஆக்கவேண்டும் என்ற ஒரு சூழ்நிலை வராத வரை நாம் வெற்றி காணமுடியாது. இந்த 60 சதவிகிதமாகவும், 65 சதவிகித மாகவும், 70 ஆகவும் இன்னும் எத்தனை ஆண்டுகள் காத் திருப்பது?

கெட்டழிக்கும் அடிமைப்புத்தியை விட்டொழிப்போம்- வீரங்கொள்வோம்!

நமது ஆட்சிமொழியைச் செயல்படுத்துகின்ற அரசாங்க அலுவலர்கள், பணியாளர்கள், நிறுவனங்கள், அமைப்புகள் இவர்களைக் கேட்டால், அவர்கள் என்ன சொல்லு கிறார்கள்? ஆங்கிலத்தைப் போல், அருமையான ஆற்றல் நமக்குத் தமிழில் இல்லை. தமிழ் நமக்குப் பழக்கமில்லை. நிர்வாக மொழிக்கு ஆங்கிலம் நல்ல அருகதை பெற்றுவிட்டது எனக்குப் பழக்கதோஷம் ஆக, இப்படிப்பட்ட ஒரு சூழ்நிலையில், அது ஆற்றல் இல்லாத மொழி, பழக்கம் இல்லாத மொழி, அதிலே சிரமம் இருக்கிறது, அதைச் சொல்லுகின்றபோது, முழு அர்த்தம் தொனிக்க வில்லை என்றெல்லாம் சொல்லிக் காட்டுகிறார்கள். நான் மனதைத் திறந்து சொல் வதற்கு மன்னிக்க வேண்டும். ஆங்கிலேயன் நம்மை விட்டுப் போய்விட்டாலும், அவன் விட்டுச் சென்ற அடிமைப் புத்தி நம்மை விட்டுப் போகவில்லை என்பதுதான் இதற்கெல்லாம் பெரும் காரணம். இங்கே சுட்டிக்காட்டினார்களே, ஆங்கில மோகம். இக்கரைக்கு அக்கரைப் பச்சை என்ற நிலைமை. இந்த நிலைமை மாறாத வரை நாம் நிச்சயமாக முன்னேற முடியாது. இங்கே இதைச் செயல்படுத்து கின்றவர்களுக்கு இதில் ஒரு தீவிரம் வேண்டும். ஒரு தீவிர ஈடுபாடு வேண்டும். மாறாக, தமிழ் மொழியைக் கற்று அதில் சிறப்பு அடைய வேண்டும் என்ற ஒரு பற்றின்மைதான், நமது தோல்விக்கு மிக மிக முக்கியக் காரணமாக எனக்குப்படுகிறது.

புதுப்புதுச் சொல் வேண்டுமோ? பேச்சிலே தேடுக! இலக்கியத்தில் காண்க!

பலப்பல நிறுவனங்களும், அமைப்புகளும் இருந்தும்கூட இந்த 37 ஆண்டுகளில் நீங்கள் 60 சதவிகிதம்தாம் ஆட்சியிலே தமிழை அரசோச்சினீர்கள், அரியணை ஏற்றினீர்கள் என்றால் இதற்கு என்ன தடை? அவர்கள் சொல்லுகிறார்கள், தடை இருக்கிறது. பல காரணங்கள் இருக்கின்றன. தமிழ் ஆட்சிச் சொற்கள் நமக்கு வேண்டிய அளவுக்கு கிடைக்க வில்லை என்று சொல்லு கிறார்கள். கிடைக்கவா இல்லை? நீங்கள் ஆட்சிச் சொற்களைத் தேட வேண்டுமானால், பேச்சு மொழியைப் பாருங்கள். இலக்கிய மொழியைப் பாருங்கள். கல்வெட்டுக்களைப் பாருங்கள். புதுப்புதுச் சொற்களை ஆக்குங்கள். இலக்கணத்தைப் பாருங்கள் என்று என்னால் சுட்டிக்காட்ட முடியும்.

பேச்சு மொழி பேசுகிறோம். கிராமங்களிலிருந்தெல்லாம் நிறையபேர் இங்கே வந்திருக் கிறார்கள். கிராமங்களில் சொல்லுவார்கள் ஒரு பெண் பருவத்திற்கு வந்துவிட்டால், அவள் சமைந்து விட்டாள் என்று சொல்லுவார்கள். 'சமைந்து விட்டாள்' இந்த

'சமைந்து' என்ற சொல்லை கொஞ்சம் சிந்தித்துப் பாருங்கள். சர்வசாதாரண சாமான்யனாகிய எனது கிராமத்தான் சொல்கிறான் 'சமைந்தாள்' என்று! இந்த சமைந்தாள் என்கிற வார்த்தையில், சொல்லில் எவ்வளவு ஆழம் இருக்கிறது அருமை இருக்கிறது. ஒரு வியாபார சம்பந்தமாக சின்னக் கடையிலே விலையைக் குறைத்துக் கேட்டால், இது எனக்குக் கட்டுப்படியாகாது என்கிறார்கள். 'கட்டுப்படி' என்னும் அந்தச் சொல்லில் எவ்வளவு பொருளாதார அறிவு இருக்கிறது என்று பாருங்கள். இதைக் கொடுக்க முடியாது என்பதற்குக் கட்டுப்படியாகாது என்கிறார்கள். வியாபாரம் என்றால் கொள்வதும் மிகை கொள்ளாது, கொடுப்பதும் குறைவு படாது இருக்க வேண்டும் அல்லவா? "இந்த விலைக்குக் கொடுக்க எனக்குக் கட்டுப்படியாகாது". இதுதான் பேச்சு மொழி.

இல்க்கிய மொழியை எடுத்துக் கொள்ளுங்கள். சங்க இலக்கியங்களைப் பார்க்கலாம் பத்துப்பாட்டு, எட்டுத்தொகையை எடுத்துக் கொள்ளலாம் காப்பியங்களில் சிலப்பதிகாரம், மணிமேகலையை எடுத்துக் கொள்ளலாம். எவ்வளவு அருமையான மிக அருமையான சொற்கள், ஆட்சிச் சொற்கள் அங்கே இருக்கின்றன. மதிமொழி, 'அட்வைஸ்' என்பதற்கு மதிமொழி. எவ்வளவு அழகாகச் சொல்லி இருக்கின்றார்கள். 'கான்வர்சேஷன்' என்பதற்கு சொல் ஆடல். இவையெல்லாம் சங்க இலக்கியமாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டில் இருக்கின்றது. சொல் ஆட்சிக்கு வேண்டுமானால் நீங்கள் பாரதியைக்கூட கேட்டுப் பாருங்கள்

"நீலத் திரைக்கடல் ஓரத்திலே
நின்று
நித்தம் தவம் செய்யும் குமரி
எல்லை
வட மாலவன் குன்றும்
இவற்றிடையே
புகழ் மண்டிக் கிடக்கும் தமிழ்நாடு"

அந்த 'மண்டி' என்ற சொல்லைப் பாருங்கள். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்றோர் மணி ஆரம் படைத்த தமிழ்நாடு. 'அள்ளும்' என்ற சொல்லை எடுத்துக்கொள்ளுங்கள். எடுத்து விட்டு அதற்கு ஒரு மாற்று டூப்ளிகேட் போட முடியுமா? சிந்தித்துப் பாருங்கள் சிந்தித்துப் பாருங்கள் இயலுமா? இயலவே இயலாது. ஆக, சொல்லாட்சி. கல்வெட்டுக்களில் சொல் இருக்கிறது.

இலக்கணக் கடுமையோ கொடுமையோ இனிய தமிழிலே என்றுமே இல்லை!

அதேபோல, நமது இலக்கணம் கடுமையானது என்கிறார்கள். இல்லவே இல்லை. இலக்கணம் என்ன சொல்லுகிறது? நாம் பேசுகிறதை அப்படியே எழுதுவதுதான் இலக்கணம். அவன் வந்தான் என்றால் அவன் வந்தான். இங்கே ஆங்கிலத்தில்தான், b, u, t, but; p, u, t put; but, put இது ஆங்கிலத்தில் உள்ள சங்கடமே தவிர, நமக்கல்ல. தமிழுக்கல்ல. உச்சரிப்பு கந்தசாமி என்றால், கந்தசாமி, காரியசாமி என்றால், காரியசாமி அதிலே மாற்றம் கிடையாது. ஏனைய மொழிகளில் வேண்டுமானால் உச்சரிப்பிலே பிழை இருக்கலாம். ஆனால், தமிழில் கிடையாது. ஆக, இந்தக் குறைபாடுகள் எப்படி வருகின்றன என்றெல்லாம் நாம் பார்க்கின்றபோது, சொற்களை நாம் கண்டுபிடிக்க வேண்டும். அவை மேலெழுந்தவாரியாக நமக்குக் கிடைக்கவில்லை என்றால் விட்டுவிடக் கூடாது. முத்தை எடுக்க வேண்டுமானால் மூழ்கிப் பார்க்கவேண்டும். வைரத்தை எடுக்க வேண்டுமானால் மண்ணைத் தோண்டிப் பார்க்க வேண்டும். இந்த முயற்சி இல்லாத வரை நமக்குச் சொற்கள் எப்படிக் கிடைக்கும்?

தேவையான புதுசொறகளை நாம் எடுக்கின்றபோது பிற சொற்களிலிருந்து நாம் கடன் வாங்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டால், வாங்கலாம். சொற்களை வாங்குங்கள், கருத்துக்களை வாங்குங்கள், எழுத்துக்களை மட்டும் வாங்கி விடாதீர்கள். நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம். ஸ்ரீவில்லிபுத்தூர், ஸ்ரீரங்கம். இந்த 'ஸ்ரீ' எங்கேயிருந்து வந்தது? நமக்கு 247 எழுத்துக்கள் இருக்கின்றன. ஆனால் ஆங்கிலேயன் என்ன செய்தான்? 26 எழுத்துக்களை வைத்துக்கொண்டு அதிலே

★ **ஊக்கமுள்ளவனே தினமும் செல்வத்தைச் சேர்க்கிறான்.**

—ஹேமன்

அனைத்தையும் அடக்கி விட்டான். எதை வேண்டுமானாலும் அவன் எழுத்திலே எழுதுவானே தவிர, இந்த ஸ்ரீயையோ, ராஷ்ட்டிரபதியில் உள்ள இந்த 'ஷ்'ஷையோ, ராஜ்பவன் என்பதில் உள்ள இந்த 'ஜ்'ஜையோ அவன் கடன் வாங்கவில்லை. மாறாக, எழுத்தை ஆங்கிலேயன் அப்படியே வைத்துக்கொண்டான். நாம் 247 எழுத்துக்களை வைத்துக் கொண்டு, கடன் வாங்கிக் கொண்டே இருக்கிறோம். ஆக, சொல்லை வாங்கலாம் கருத்தைக் கடன் வாங்கலாம். ஆனால், எழுத்தை மட்டும் கடன் வாங்கவே கூடாது என்ற ஒரு நிலை ஏற்பட வேண்டும்.

உருவாக்கிக் காட்டுவோம் உன்னத அறிவியல் தமிழ்!

உலகத் தமிழ் மாநாட்டின் தொடக்க விழா நடந்தபோது நமது மாண்புகெழுமிய முதலமைச்சர் தலைமையில் ஆன்றோரும் சான்றோரும் வலியுறுத்திய ஒரு கருத்துக்கு இங்கே வழிமொழிந்து பேசினார்கள். தமிழ் அறிவியல் மொழியாக ஆகவேண்டும். தமிழ் ஆற்றல்மிக்க மொழியாக ஆகவேண்டும். உலகளாவிய உயர் கருத்துக்களைச் சொல்லுகின்ற மொழியாக வேண்டும் என்று சொன்னார்கள். அது முக்கியமான மிக மிக முக்கியமான, ஒன்றாகும்.

நாமெல்லாம் அன்றைய நாளில் அறிவியலில் உயர்ந்து இருந்தோம் ஆற்றலில் உயர்ந்து இருந்தோம். அன்று இருந்தது உண்மை. இன்று, இல்லை. இன்றைக்கு, கம்ப்யூட்டர் காலம். இந்த கணிப்பொறி காலத்தில் நாம் ஹைதர் அலி சங்கதிகளைப் பேசிக்கொண்டு இருப்பதில் நியாயம் இல்லை. நாம் வளர்ந்து இருந்தது அன்றைக்கு. இன்றைக்கு அறிவியல் துறையில், ஆற்றல் துறையில், தொழில் நுட்பத் துறையில் நாம் பின்னோடிக் கிடக்கிறோம். மொழி என்றால் முழுமைத் தன்மை பெற்றிருக்க வேண்டிய அவசியம் இல்லை.

ஜெபர்சன், ''A language cannot be taken something given one for all'' என்று சொல்லுகிறான். ஆக, Everything is language என்று சொல்லி விட முடியாது.

எந்த ஒரு மொழியும் எல்லாமுமேயாக ஆகிவிட முடியாது. நம்மிடத்திலே குறை உண்டு. இன்னும் நிறைவு ஆக வேண்டும் சில குற்றங்கள்கூட உண்டு என்று நாம் சொல்லுவதில் தவறில்லை. ஆகவே, அறிவியல் தமிழை வளர்க்க வேண்டும், ஆற்றல் தமிழை வளர்க்க வேண்டும், தொழில் நுட்பத் தமிழை நிச்சயமாக வளர்க்க வேண்டும். அப்படி வளர்க்கின்ற முயற்சியில் நாம் தீவிரமாக ஈடுபட்டாக வேண்டும்

ஆட்சிமொழித் தமிழ் அறிவை மேலிடத்திலிருந்து கொணருவோம்

நமது தமிழகத்தைப் பொறுத்த வரையில் தற்போது இருக்கின்ற அறிவியல் அறிவு எந்த அளவிற்கு இருக்கிறது என்றால், சீமான் வீடுகளில் இருக்கின்ற குரோட்டன்ஸ் செடியைப்போல வளர்ந்திருக்கிறது. அது செடியாகவோ, கொடியாகவோ, மரமாகவோ வளர வேண்டும் என்ற உயரிய ஒரு கருத்தை நாம் ஏற்றாக வேண்டும். ஆட்சி மொழிச் சட்டத்தை ஏற்படுத்தி பெரும்க்கள் கீழிருந்து மேல் என்று ஒன்றை நிர்மாணித்து விட்டார்கள். ஆனால், அதேநேரத்தில் அது மேலிருந்து வந்திருந்தால் எவ்வளவு நன்றாக இருந்திருக்கும் என்று நான் நினைத்துப் பார்க்கிறேன். தலைமைச் செயலாளர் அவர்கள் அங்கே எழுதுகிறார்கள் என்றால், இங்கே கீழே உள்ள ரெவின்யூ இன்ஸ்பெக்டர் ஒழுங்காக எழுதுவார். நாம் என்ன செய்து கொண்டிருக்கிறோம். கீழிருந்து மேலே காத்தடித்துக் கொண்டிருக்கிறோம். மேலிருந்து தள்ளுவதில்லை. ஆக, கீழிருந்து போவதற்குப் பதிலாக மேலிருந்து வரவேண்டும் என்ற ஒரு உறுதியை நாம் எடுத்துக் கொள்ள வேண்டும்.

★ **ஒவ்வொரு துன்பமும் ஒரு வழிகாட்டி. இதுவே நன்மை செய்யத் தூண்டுகிறது.**

—எமர்சன்

தமிழ் வளர்க்கும் பணி என்ன? தமிழறிஞர்கட்கே உரித்தானதா?

தமிழை வளர்ப்பது என்பது தமிழறிஞர்களுக்கு மட்டுமே உரிய தொழில் என்று அவர்கள் நினைப்பதும், ஏனைய பேரறிஞர்களும், பெருமக்களும் இதில் நமக்கும் அதற்கும் சம்பந்தம்

ஆதிதிராவிடர் மாணவர்களுக்கு மேலும்
20 விடுதிகள்

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நல மாணவ/மாணவியர்களின் கல்வி வளர்ச்சிக்காக, தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. குறிப்பாக ஏழை ஆதி. திராவிட மாணவ/மாணவியர்களின் கல்வி பாதிக்காதிருக்க அவர்கள் தொடர்ந்து படிக்கும் பொருட்டு உண்டு உறைவிடம் கூடிய புதிய விடுதிகள் ஒவ்வொரு ஆண்டும் நிதிநிலைக்கேற்ப திறக்கப்பட்டு வருகின்றன. தற்போது ஆதி திராவிட மாணவ/மாணவியருக்காக 1995-96-ஆம் ஆண்டில் புதியதாக 20 விடுதிகள் திறப்பதற்கு அரசாணை (நிலை) எண். 159, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, நாள் 11.09.95 -இல் வெளியிடப்பட்டுள்ளது. இதனால் ஆண்டிற்கு 1000 மாணவ மாணவியர்கள் பயன்பெறுவார்கள். இதனால் அரசுக்கு ரூ. 32.44 இலட்சங்கள் தொடர் செலவும், ரூ 14.14 லட்சங்கள் தொடராச் செலவும் ஏற்படும்.

இல்லை என்று ஒதுங்குவதுமாக ஒரு அபாயகரமான சூழ்நிலை இங்கே இருக்கிறது. ஆங்கில மொழி, பிரெஞ்சு மொழி வளர்ந்தது என்றால், ஏனைய பெரியவர்களையெல்லாம் அந்த மொழி அறிஞர்களைத் தவிர்த்த ஏனைய பெருமக்களையெல்லாம் வரவழைத்து, கருத்தாளர்களையெல்லாம் எழுதச் சொல்லி, எழுதச் சொல்லி அந்த மொழியை வளர்த்தார்கள். அத்தகையதொரு நல்ல சூழ்நிலை அந்த மொழிக்கெல்லாம் இருந்தது. அதே வாய்ப்பு, தமிழ் மொழிக்கும் கிடைத்திட வேண்டும். தமிழ்ப் பேராசிரியர்களும், தமிழ் அறிஞர்களும், இது தனது தனது என்று, தமிழ் வளர்க்கும் கடமையைத் தனது மூலதனச் சொத்தாக நினைக்காமல், ஏனையோர்களும் இதில் வந்து பங்குபெற வேண்டும் என்ற ஒரு சூழ்நிலையை இங்கே உருவாக்க வேண்டும். எதையும் சட்டததால் சாதிக்க முடியாது. சட்டம் ஓரளவிற்குத்தான் உதவி செய்யும் என்ற உயரிய கருத்தை, சட்டம் ஓரளவுக்குத்தான் பாதுகாக்கும் என்ற கருத்தை ஏற்றுக் கொள்கிறேன். பாதுகாத்தல் மட்டும் போதாது. படைப்பாளர்கள் தேவை. தமிழைப் படைப்பவர்கள் யாராக இருந்தாலும் அவர்களை இங்கே கொணர்ந்தாக வேண்டும்.

டாக்டர் மு.வ. சொன்ன தத்துவத்திற்கு இலக்கணம்- முதல்வர் புரட்சித்தலைவி!

"சிக்கல எதிர்ப்படும்போது ஒதுங்கிச் செல்வதுண்டு. அன்றி ஒடுங்கிச் செல்வதுண்டு. ஒதுங்கிச் செல்லும் வாழ்க்கை அக்கறையற்றது ஒடுங்கிச் செல்லும் வாழ்க்கை அச்சம் நிறைந்தது. இவை இரண்டுமே பயனற்றவை. சிக்கலை எதிர்த்து வெல்லும் வீரமே வேண்டும். அதுவே புத்துலகத்தின் திறவுகோல், என்று டாக்டர் மு.வ. சொல்லிய தத்துவத்திற்கு இலக்காக நின்று, கடந்த மூன்றாண்டுக் காலமாக நமது முதலமைச்சர் அவர்கள் தமிழகத்தைத் திறமோடு ஆண்டு கொண்டிருக்கிறார்கள். அவர்களிடத்திலே இந்தத் தமிழ் ஆட்சிமொழி எப்படிச் செயல்பட வேண்டும் என்று அதனுடைய காரண காரியங்களை, அதனுடைய தாக்கத்திற்கும் தயக்கத்திற்கும், தடுமாற்றத்திற்கும் தாமதத்திற்கும் உள்ள காரணத்தைச் சொல்லி இதனை ஒரு இயக்கமாக மாற்ற வேண்டும். எனது தாய் மொழி, தமிழ் மொழி ஆட்சிமொழியாக அரசோச்ச வேண்டும் என்ற முனைப்பும் துடிப்பும் ஏற்பட வேண்டும். அன்னைத் தமிழ் மொழியே அரசோச்ச வேண்டும் என்ற அந்த 'அர்ஜ்', அந்தத் 'துடிப்பு' உங்களிடத்திலே ஏற்படவேண்டும், சாகும்போதும் தமிழ் படித்துச் சாக வேண்டும், எந்தன் சாம்பலும் தமிழ் மணந்து வேகவேண்டும்" என்ற ஒரு துடிப்பு உங்களிடத்திலே வர வேண்டும், வர வேண்டும். ●

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்



1.11.1995

திருமதி கோமள வரதன்
- நாட்டியம்

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995
யாதும் ஊரே யாவரும் கேளிர் !

டாக்டர் ஸ்ரீநிதி ரங்கராஜன்
- நாட்டியம்

நிகழ்ச்சிகளில் சில...

இந்த இதழில்...

அரசின் அற்புதத் திட்டங்கள் பற்றி
அறிய ஓர் அறிவுப் பயணம்
- பொது அறிவுப் புதிர் 7

தமிழன் எனும் அடையாளத்தை
இழக்க மாட்டோம்
- தந்தோ எம். குமரன் 18

முன்னாள் அமைச்சர் கக்கனுக்கு
முழு உருவ வெண்கலச் சிலை
- மாண்புமிகு முதல்வர் அறிவிப்பு 21

சர்க்கரை ஆலை, மின்வாரியம்,
வனக்கழக ஊழியர்களுக்கு போனஸ்
- மாண்புமிகு முதல்வர் ஆணை 22

படமும் செய்தியும் 24

முத்துராமலிங்கத் தேவரின்
இலட்சியத்தை நிறைவேற்றும் முதல்வர்
- மாண்புமிகு அமைச்சர்கள் புகழாரம் 27

காவல்துறை மேம்பாட்டுக்கு
கவின்மிகு திட்டங்கள்
- மாண்புமிகு முதல்வர் ஆணைகள் 31

நீர் ஆதாரங்களை மேம்படுத்த
ரூ. 808 கோடிக்குப் புதிய திட்டம்
- மத்திய திட்டக் குழு ஒப்புதல் 37

வீட்டுவசதி மேம்பாடு: தமிழ்நாட்டுக்கு
இரண்டு தேசிய விருதுகள்
- 80 ஆண்டுகளை 4 1/2 ஆண்டு மிஞ்சியது 38

ஆதிதிராவிட மகளிர் நலன்காக்க
அற்புதத் திட்டங்கள்
- கோடிக்கணக்கில் மானிய உதவி 40

ஒரு கோடி ரூபாய் மதிப்புக்கு
ஜெர்சி பசுக்கள் இறக்குமதி
- டென்மார்க்கிலிருந்து தமிழ்நாடு வந்தன 42

தெய்வத் தமிழ்மகள்
பெருமையைப் போற்றுவோம்
- முனைவர் ஞான குலேந்திரன் 44

இதயங்கவரும் சுடரோட்டம்

பக்கம் ... 2



அபூர்வ ஐம்பொன் சிலைகள் மீட்பு

பக்கம் ... 29

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

அந்தணர் என்போர் அறவோர்மற் றெவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டொழுக லான் (30)

எல்லா உயிர்களிடத்திலும் செம்மையான அருளை மேற்கொண்டு ஒழுகுவதால், அறவோரே அந்தணர் எனப்படுவோர் ஆவர்.

199919

இந்திய மண்ணெங்கும் இதயங்கவரும் சுடரோட்டம்!

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதல் அட்டை சொல்லும் கட்டுரை:

வரலாற்றுப் புகழ்பெற்ற சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் மாண்புமிகு தமிழகமுதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் 28.10.95-ஆம் நாள் காலை 11 மணியளவில் இன்னொரு வரலாற்றுச் சிறப்பான ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் சுடரோட்ட நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டது.

நிகழ்ச்சி நாளன்று காலை 10 மணி. பளீரென்று வெயில். முதல் நாளிரவு முழுவதும் பன்னீர் தெளித்தது போல் பெய்த மழையின் ஈரம் மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது.

போர்வீரர் நினைவுச்சின்னத்திலிருந்து கோட்டை வாயில் வரை சாலையின் இருமருங்கிலும் வண்ணவண்ண உடைகளில் ஏறத்தாழ 2500 சின்னஞ்சிறு பள்ளிக் குழந்தைகள். அவர்களின் கையில், ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் இலச்சினையான இளஞ்சிங்க உருவம் பொறித்த கொடிகள். அதுவும் பல நிறங்களில். அவர்களின் பின்னால் அலையலையாகப் பொது மக்கள். கோட்டை வாயிலின் முன்புறம் கூட்டமாக இளம் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் வண்ணச் சீருடைகளில். கோட்டைக் கொடி மரக் கொத்தளத்தின் மேல் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் வாரியத் தலைவர்கள். இவர்களைத் தவிர, மூத்த அரசு அலுவலர்கள் எல்லோரும் அந்த வரலாற்று நிகழ்ச்சிக்காகக் காத்திருந்தனர். மேடையில், சுடரேந்திய இளஞ்சிங்க இலச்சினை அமைக்கப்பட்டு அது பூவேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது, நிகழ்ச்சிகளைப் பொது மக்களுக்கு அவ்வப்போது தக்க விளக்கத்துடன் இனிமையான குரலில் கவியரசர் இளந்தேவன் அவர்களும், டாக்டர் சுதா சேஷய்யன் அவர்களும் நேர்முக வர்ணனை செய்து கொண்டிருந்தார்கள்.

இளஞ்சிங்க இலச்சினை பொறிக்கப்பட்ட காகிதத் தொப்பிகளைப் பார்வையாளர்களுக்கு விளையாட்டுத்துறை உதவி இயக்குநர் திரு மோகன் வழங்கினார்.

விளையாட்டுச் சுடர்

ஆறாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி, வங்காள தேசத் தலைநகர் டாக்காவில் 1993-ஆம் ஆண்டு நடந்தது. அங்கிருந்து தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடரை, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணையின் பேரில் பெற்றுவந்தார். தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் தொடங்கும்போது அதை ஏற்றி வைப்பது மரபு. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்றி வைக்கப்படும் இந்த விளையாட்டுச் சுடர் இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து மாநிலத் தலைநகர்களிலும் வலம் வர வேண்டும், இதன் மூலம் இந்திய ஒருமைப்பாட்டுக்குப் புத்துணர்வு தரப்படவேண்டும் என்று விரும்பி அதனைப் புதுமையாகச் செயல்படுத்துகிறார்.

குதிரைப்படை அணிவகுப்பு

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சரியாக 10.45 மணிக்கு, போர் நினைவுச் சின்னத்தருகே வந்தார். அங்கிருந்து குதிரைப் படையைச் சேர்ந்த 18 குதிரைகள் அவரது காரின் முன்னும் பின்னும் கம்பீரமாக அணிவகுத்து வந்தன. காவலர்களின் இசைவாத்தியம் முழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேடைக்கருகே வந்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களை, சுடர்க்குழுவின் தலைவரும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருமான திரு.எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் முதலாவதாக வர

இந்திய மண்ணெங்கும் இதயங்கவரும் சுடரோட்டம்!

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடங்கி வைத்தார்.

முதல் அட்டை சொல்லும் கட்டுரை:

வரலாற்றுப் புகழ்பெற்ற சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் மாண்புமிகு தமிழகமுதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களால் 28.10.95-ஆம் நாள் காலை 11 மணியளவில் இன்னொரு வரலாற்றுச் சிறப்பான ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் சுடரோட்ட நிகழ்ச்சி தொடங்கி வைக்கப்பட்டது.

நிகழ்ச்சி நாளன்று காலை 10 மணி. பளீரென்று வெயில். முதல் நாளிரவு முழுவதும் பன்னீர் தெளித்தது போல் பெய்த மழையின் ஈரம் மெல்ல மெல்ல மறையத் தொடங்கியது.

போர்வீரர் நினைவுச்சின்னத்திலிருந்து கோட்டை வாயில் வரை சாலையின் இருமருங்கிலும் வண்ணவண்ண உடைகளில் ஏறத்தாழ 2500 சின்னஞ்சிறு பள்ளிக் குழந்தைகள். அவர்களின் கையில், ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் இலச்சினையான இளஞ்சிங்க உருவம் பொறித்த கொடிகள். அதுவும் பல நிறங்களில். அவர்களின் பின்னால் அலையலையாகப் பொது மக்கள். கோட்டை வாயிலின் முன்புறம் கூட்டமாக இளம் விளையாட்டு வீரர், வீராங்கனைகள் வண்ணச் சீருடைகளில். கோட்டைக் கொடி மரக் கொத்தளத்தின் மேல் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், மாண்புமிகு நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் வாரியத் தலைவர்கள். இவர்களைத் தவிர, மூத்த அரசு அலுவலர்கள் எல்லோரும் அந்த வரலாற்று நிகழ்ச்சிக்காகக் காத்திருந்தனர். மேடையில், சுடரேந்திய இளஞ்சிங்க இலச்சினை அமைக்கப்பட்டு அது பூவேலைப்பாடுகளால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. நிகழ்ச்சிகளைப் பொது மக்களுக்கு அவ்வப்போது தக்க விளக்கத்துடன் இனிமையான குரலில் கவியரசர் இளந்தேவன் அவர்களும், டாக்டர் சுதா சேஷய்யன் அவர்களும் நேர்முக வர்ணனை செய்து கொண்டிருந்தார்கள்.

இளஞ்சிங்க இலச்சினை பொறிக்கப்பட்ட காகிதத் தொப்பிகளைப் பார்வையாளர்களுக்கு விளையாட்டுத்துறை உதவி இயக்குநர் திரு மோகன் வழங்கினார்.

விளையாட்டுச் சுடர்

ஆறாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி, வங்காள தேசத் தலைநகர் டாக்காவில் 1993-ஆம் ஆண்டு நடந்தது. அங்கிருந்து தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடரை, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் ஆணையின் பேரில் பெற்றுவந்தார். தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் தொடங்கும்போது அதை ஏற்றி வைப்பது மரபு. ஆனால் மாண்புமிகு முதல்வர் அவர்கள், ஏற்றி வைக்கப்படும் இந்த விளையாட்டுச் சுடர் இந்தியத் துணைக் கண்டத்தின் அனைத்து மாநிலத் தலைநகர்களிலும் வலம் வர வேண்டும், இதன் மூலம் இந்திய ஒருமைப்பாட்டுக்குப் புத்துணர்வு தரப்படவேண்டும் என்று விரும்பி அதனைப் புதுமையாகச் செயல்படுத்துகிறார்.

குதிரைப்படை அணிவகுப்பு

மாண்புமிகு முதல்வர் அவர்கள் சரியாக 10.45 மணிக்கு, போர் நினைவுச் சின்னத்தருகே வந்தார். அங்கிருந்து குதிரைப் படையைச் சேர்ந்த 18 குதிரைகள் அவரது காரின் முன்னும் பின்னும் கம்பீரமாக அணிவகுத்து வந்தன. காவலர்களின் இசைவாத்தியம் முழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் மேடைக்கருகே வந்தார்.

மாண்புமிகு முதல்வர் அவர்களை, சுடர்க்குழுவின் தலைவரும், மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சருமான திரு எஸ். டி. சோமசுந்தரம் அவர்கள் முதலாவதாக வர

வேற்றார். தொடர்ந்து, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள், இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன், தலைமைச் செயலாளர் திரு. என். ஹரிபாஸ்கர், இ.ஆ.ப., கல்வித்துறையின் செயலாளர் திரு. எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு. எஸ். இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., காவல்துறைத் தலைவர் திரு. டபுள்யு.ஐ. தேவாரம், இ.கா.ப., செய்தி-மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., மற்றும் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், வாரியத் தலைவர்கள் வணங்கி வரவேற்றார்கள்.

முக்கியப் பிரமுகர்களின் வரவேற்பை முதல்வர் அவர்கள் ஏற்றுக் கொண்டார். சரியாக 11 மணியளவில் டாக்காவிலிருந்து கொண்டு வரப்பட்ட சுடரை இந்திய ஒலிம்பிக் கழகத் தலைவர் டாக்டர் பா. சிவந்தி ஆதித்தன் வழங்க, முதல்வர் அவர்கள் ஏற்றி வைத்து உயரே தூக்கிப் பிடித்தார். அப்போது இன்னிசை முழங்கியது. வண்ண, வண்ண

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் சுடர் ஓட்டம் செல்லும் வழிகள்



சுடரேந்தும் அடலேறுகள்!

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடரைப் பெற்ற விளையாட்டு வீரர் திரு. ஞானசேகரன் மற்றும் வீராங்கனை செல்வி ருஷ்மி சக்கரவர்த்தி ஆகியோர் பற்றிய செய்திகள் பின்வருமாறு:

ஓட்டப்பந்தய வீரர்
திரு ஆர். ஞானசேகரன்

- **பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் மாவட்டம் பழையூரைச் சேர்ந்தவர்.**
- **1978-ஆம் ஆண்டு பாங்காக்கில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டியில் 200 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டு தங்கப் பதக்கம் வென்றார்.**
- **இந்திய விளையாட்டு வீரர்களுக்குப் பயிற்சியளித்து சியோல் சென்று பயிற்சி பெறுவதில் பட்டயம் பெற்றுள்ளார்.**
- **1974-ஆம் ஆண்டிலிருந்து 1979-ஆம் ஆண்டு வரை இந்தியாவின் மிக வேகமான ஓட்டப்பந்தய வீரராகத் திகழ்ந்து, தான் பிறந்த இந்தியத் திருநாட்டுக்குப் பல தங்கப்பதக்கங்களைப் பெற்றுத் தந்தவர்**

டென்னிஸ் விளையாட்டு வீராங்கனை
செல்வி. ருஷ்மி சக்கரவர்த்தி

- **சென்னை எத்திராஜ் கல்லூரி மாணவி.**
- **1993-ஆம் ஆண்டு வங்காள தேசத்தில் நடைபெற்ற 6-வது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் டென்னிஸ் விளையாட்டுப் போட்டியில் கலந்து கொண்டு வெள்ளிப் பதக்கம் பெற்றவர்.**
- **1994-ஆம் ஆண்டு தில்லியில் நடைபெற்ற பெடரேசன் கோப்பைப்போட்டியில் இந்தியாவின் சார்பில் கலந்து கொண்டுள்ளார்.**
- **டென்னிஸ் விளையாட்டில் அகில இந்திய அளவில் சிறப்புத்தரம் பெற்ற விளையாட்டு வீராங்கனை.**

பலூன்கள் ஆகாயத்தை நோக்கி மெல்ல மெல்லப் பறந்தன. குழந்தைகள், பொதுமக்கள் கைகளைத் தட்டி தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டார்கள். இது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது.

நிகழ்ச்சியின் பெருமையைக் கண்ட வெயில்கூட தன் கடுமையைக் குறைத்தது போல் வெப்பத்தைக்குறைத்தது.

விளையாட்டு வீரர்கள்

பின்னர், ஏற்றப்பட்ட விளையாட்டுச் சுடரை தடகள விளையாட்டு வீரர் திரு. ஞானசேகரன், டென்னிஸ் விளையாட்டு வீராங்கனை செல்வி ருஷ்மி சக்கரவர்த்தி ஆகியோரிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கி பெருமைமிகு வரலாற்றுச் சிறப்புமிக்க சுடரோட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

சிங்க இலச்சினை உலா

சுடரை ஏந்தி, விளையாட்டு வீரர்கள் இருவரும் சாலையில்

ஓடத் தொடங்கினார்கள். தொடர்ந்து ஆயிரக்கணக்கான விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மஞ்சள் நிறப் பனியனும், பச்சைநிறக் கால்சட்டையும் அணிந்து கம்பீரமாக ஓடினார்கள். இவர்கள் சென்னை மீனம்பாக்கம் விமானநிலையம் வரை தொடரோட்ட முறையில் சென்றடைந்தார்கள். இவர்களின் முன்னால், அழகாக அலங்கரிக்கப்பட்ட தெற்காசிய விளையாட்டுப் போட்டியின் இலச்சினையான இளஞ்சிங்க உருவப் பொம்மையை ஏற்றிய வாகனம் ஒன்று சென்று கொண்டிருந்தது.

மாநிலத் தலைநகர்களில் சுடரோட்டம்

விளையாட்டுச் சுடரை 28.10.95 அன்று மாலை விமானத்தில் விளையாட்டு வீரர் திரு. ஞானசேகரன் பம்பாய்க்கு எடுத்துச் சென்றார் பின்னர் இந்தியத் துணைக் கண்டத்தின் இருபத்தாறு மாநிலத் தலைநகர்களுக்கும் இந்தச் சுடர் கொண்டு செல்லப்பட்டு, மீண்டும் டிசம்பர் மாதம் 17-ஆம் நாள் சென்னைக்குக் கொண்டு வரப்படுகிறது.

பன்னாட்டுத் தூதர்கள்

நிகழ்ச்சியில், சென்னையில் உள்ள மலேசிய உதவித் தூதர் திரு ஷபி பின் அபு சமா அவர்கள், சென்னையிலுள்ள ஜப்பான் நாட்டுத் தூதர் திரு. யுசுகி காகு அவர்கள், சென்னையிலுள்ள சிங்கப்பூர் நாட்டுத் தூதர் திரு. டி. என். முருகன் அவர்கள், இலங்கைத் தூதர் திரு. கௌதமதாசா அவர்கள், மேஜர் ஜெனரல் ரஞ்சித்சிங் நக்ரா ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

என்றென்றும் ஒளிவீசட்டும்!

இந்தச் சுடரோட்டம் இந்தியத் திருநாடெங்கும் வேற்றுமை எனும் இருளையகற்றி, தேசிய ஒருமைப்பாடு எனும் ஒளியைத் தந்து வலம் வருகிறது. இச்சுடர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் தொலை நோக்குப் பார்வைக்கு ஒரு எடுத்துக்காட்டாக என்றென்றும் நின்று நிமிர்ந்து ஒளிவீசப் போகிறது.

- நிகழ்ச்சித் தொகுப்பு: மா. அசோகன்

சுடர்க்குழு ஆலோசனைக் கூட்டம்

தலைமைச் செயலகத்தில் தெற்காசிய நாடுகளின் விளையாட்டுப் போட்டிகள் தொடர்பான சுடர்க்குழுக் கூட்டம் 24.10.95 அன்று, மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு எஸ்.டி. சோமசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தில் செய்தி மற்றும் சுற்றுலாத்துறைச் செயலாளர் திரு எஸ். இராமகிருஷ்ணன், இ.ஆ.ப., கல்வித்துறைச் செயலாளர் திரு எல்.என். விஜயராகவன், இ.ஆ.ப., செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், திரு தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., விளையாட்டுத்துறைச் சிறப்புச் செயலாளர் திரு டி. ஸ்ரீதரன், இ.ஆ.ப., மற்றும் சென்னை மாநகரக் காவல்துறை ஆணையர், திரு வீரராகவன், இ.கா.ப., ஆகியோர் கலந்து கொண்டனர்.

உங்கள் அறிவுக்கூர்மைக்கு ஓர் அறைகூவல்

அரசின் அற்புதத் திட்டங்கள் பற்றி அறிய ஓர் அறிவுப் பயணம்!

தமிழக அரசின் நலத்திட்டங்களை விளக்கும் பொது அறிவுப் புதிர் இது. மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் செயல்படுத்திவரும் புதுமைத் திட்டங்கள் பற்றியும், வழங்கி வரும் நலத்திட்ட உதவிகள் பற்றியும் நீங்கள் எந்த அளவு அறிந்திருக்கின்றீர்கள் என்பதற்கு இது ஓர் அளவு கோல். அன்றாடம் நமது வாழ்வில் பின்னிப் பிணைந்திருக்கும் அரசின் திட்டங்கள் பற்றிய உங்கள் நுண்ணறிவை உரசிப் பார்க்க, வாசகர்களே, உங்களை அன்போடு அழைக்கின்றோம். புதிரை ஒவ்வொரு எண்ணாக விடுவிக்க விடுவிக்க வெற்றி உங்கள் கையில். வாகை சூடும் பயணம் தொடங்கட்டும், இனி!

1. தமிழக மக்களின் பேராதரவைப் பெற்று, பொதுத் தேர்தலில் வெற்றி வாகை சூடி, தங்கத் தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சராக, புரட்சித் தலைவி டாக்டர் ஜெஜெயலலிதா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்ட பின்னர், முதன் முதலாக பங்கேற்ற நலத்திட்ட உதவிகள் வழங்கும் பொதுக் கூட்ட நிகழ்ச்சி...

அ. நாகப்பட்டினம்
ஆ. பர்கூர்
இ. சென்னை

(உங்கள் விடை நாகப்பட்டினம் எனில் செல்லுங்கள் எண் 5க்கு)

(உங்கள் விடை பர்கூர் எனில் எண் 9க்குச் செல்லுங்கள்)

(உங்கள் விடை சென்னை எனில் செல்லுங்கள் எண் 13க்கு)

2. விளையாட்டுத் துறையில் தனி ஆர்வம் காட்டி அதன் வளர்ச்சிக்கு அரும்பாடுபட்டு வரும் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், ஓட்டப் பந்தயத்தில் சாதனை படைத்த வீராங்கனை ஒருவரின் பெயரில் ரூ.2 இலட்சம் நிரந்தர வைப்புநிதியாகச் செலுத்தி அதிலிருந்து பெறப்படும் வட்டித் தொகையை அவரது விளையாட்டுச் செலவுகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்று அறிவித்தார். அந்த வீராங்கனையின் பெயர்...

அ. செல்வி ரூபா உன்னி கிருஷ்ணன்
ஆ. செல்வி சோலைமதி
இ. செல்வி அமுதா

(உங்கள் விடை செல்வி ரூபா உன்னி கிருஷ்ணன் எனில் செல்க எண் 10க்கு)

(உங்கள் விடை செல்வி சோலைமதி எனில் எண் 15ஐக் காண்க)

(உங்கள் விடை செல்வி அமுதா எனில் எண் 21க்குச் செல்லுங்கள்)

3. மெத்த சரி. பல்லாண்டு காலமாக் திருப்பணி வேலை எதுவும் நடத்தப்படாமல் சீரழிந்து கிடக்கும் கோயில் களுக்குத் திருப்பணி செய்யவும், வருமானம் இல்லாத கோயில் களைப் பராமரித்து வழிபாடு நடத்தவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடங்கிய திட்டம் "முதலமைச்சரின் கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி" ஆகும். ஆலயத் திருப் பணிக்கென அற்புதத் திட்டமாக இதனை அமைத்து, முதல் நன்கொடையாக ரூ.1 இலட்சத்து 8 ஆயிரம் ரூபாய் வழங்கி திட்டத்தைத் தொடங்கி வைத்தார், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். சிறப்புமிகு இந் நிதியிலிருந்து இதுவரை 57 திருக்கோயில்களுக்கு ரூ.163.48 இலட்சம் திருப்பணிக்கென அளிக்கப்பட்டுள்ளது. வெற்றிக் களிப்போடு அடுத்து நீங்கள் செல்ல வேண்டிய எண் 2.

4. இல்லை, "பெண் குழந்தை களுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா திட்டம்" என்பது ஒன்று அல்லது இரண்டு பெண் குழந்தைகள் இருந்து, ஆண் குழந்தைகள் இல்லாத ஏழைக் குடும்பத்தினர் கருத்தடை அறுவை சிகிச்சை செய்து கொண்டால், அப்பெண் குழந் தைகளின் பெயரில் ரூ.2000 முதலீடு செய்து அதன்மூலம் அவர்களது தொடர் கல்வி, நடுநிலைக்கல்வி, உயர், மேல் நிலைக் கல்வி முடிப்பதற்கு ஏதுவாக, குறிப்பிட்ட காலங் களில் உதவி வழங்கும் திட்டம் ஆகும்.. மேலும் அப்பெண் குழந்தை 20 வயது அடைகிற போது தன்னுடைய வாழ்க் கையை அமைத்துக் கொள் ளவோ, உயர்கல்வியைத் தொடர வோ ஒட்டு மொத்தத் தொகை யாக ரூ.10,000 வழங்கப்படும் என முதலில் கணக்கிட்டு அறி விக்கப்பட்டது. பின்னர், டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் இந்த ஒட்டு மொத்தத் தொகையை ரூ.20,000 ஆக அதிகரித்ததோடு, அப்பெண் குழந்தையின் முதல் பிறந்த நாளில் தங்க மோதிரம் ஒன்றும் வழங்கப்படும் என்றும் அறிவித்துள்ளார். எனவே, எண் 25-க்கு திரும்பிச் செல்க.

5. தொடக்கம் கொஞ்சம் தடுமாற்றம். மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் நாகப்பட்டினம் சென்றார்கள் என்பது சரி. ஆனால் முதல் வராகப் பதவியேற்று முதன் முதலாகப் பங்கேற்ற நிகழ்ச்சி அதுவன்று. மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 18.10.91 அன்று நாகப்பட்டினத் தில் நடைபெற்ற மாபெரும் விழாவில், நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம் என்னும் புதிய மாவட்டத்தைத் தொடக்கிவைத்தார். மேலும் இவ்விழாவில் ரூ.[illegible] கோடி அளவில் புதிய நலத் திட்டங் களைத் தொடக்கியும் வைத்தார். எண் 1-க்கு சென்று மீண்டும் முயல்க.

உதயமாகிறது நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்



6. மிக மிக மிகச் சரி. சேலம் மதுரை மாவட்டங்களில் சில இடங்களில் பெண் குழந்தைகள் பிறந்தவுடன் கொல்லப்படு கிறார்கள் என்னும் சோகச் செய்தி கேட்டு, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாங் கொணாத் துயர் கொண்டு அக்கொடுமையைத் தடுத்து நிறுத்திட அறிவித்த திட்டம் தான் "புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந் தைகள் பாதுகாப்புத் திட்டம்". இத்திட்டத்தின்படி இம்மாவட் டங்களில் ஆரம்பச் சுகாதார நிலையம் மற்றும் சத்துணவுக் கூடங்கள் முன்பு தொட்டில்கள் வைக்கப்பட்டன. பெண் குழந் தைகள் வேண்டாம் என்றெண் ணும் வீணர்கள் குழந்தைகளை அந்தத் தொட்டில்களில் போட அரசே அவர்களை வளர்த்து வருகிறது. 4.11.92 அன்று தொடங்கப்பட்ட இத்திட்டத்தின் பயனால் உயிர் தப்பிய மழலைச் செல்வங்கள், வடிவோடு வளர்ந்து, புரட்சித்தலைவியின் ஆசியோடு அண்மையில் 'கான்வென்ட்' பள்ளிகளில் சேர்க்கப்பட்டு உள்ளனர் என்பது எவ்வளவு மகிழ்ச்சி தரும் செய்தி. இந்த மகிழ்ச்சி ததும்பும் மனதோடு மறு கேள்விக்குச் செல்லுக எண் 22.

'கான்வென்ட்' செல்ல ஆசிபெறும் கவின்மழலைச் செல்வங்கள்

7. சிதைந்த நிலையில் சீரிழந்து நிற்கும் கோயில்களின் பழம் பெருமையை மீட்கவும், வழிபாடு நடத்தக்கூட வழியின்றி வறிய நிலையில் இருக்கும் ஆலயங் களின் நிலைமாற்றி அணி சேர்க்கவும் தமிழக முதல்வர் மாண்புமிகு ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடங்கிய அற்புதத் திட்டம்.......

அ. கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி

ஆ. ஒரு கால பூஜை தொடர் திட்டம்

(உங்கள் விடை கோயில் திருப்பணி மற்றும் பராமரிப்பு நிதி என்றால் எண் 3க்குச் செல்லுக)

(உங்கள் விடை ஒரு கால பூஜை தொடர் திட்டம் எனில் செல்லுங்கள் எண் 11க்கு)

8. இல்லை. வறுமைக் கோட் டுக்குக் கீழே வாழும் மக்களில் பெண்களை மையமாகக் கொண்டு, அவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு அளித்து அவர் களின் வாழ்க்கைத் தரத்தை முன்னேற்றும் வகையில் செயல் படுத்தப்பட்டுவரும் திட்டம்தான் "மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம்". ஒருங் கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் துணைத் திட்டமான இத்திட்டத்தின் மூலம் கடந்த நான்காண்டுகளில் 37,976 பெண்கள் சுய வேலைவாய்ப்புப் பெற்றுள்ளார்கள். இதற்கென சுழல்நிதி உதவியாக ரூ.403 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. எண் 25க்கு திரும்பச் சென்று மறு முயற்சி செய்க.

9. அருமையான ஆரம்பம். தர்மபுரி மாவட்டம் பர்கூரில் உள்ள மாதேபள்ளி எனும் கிராமத்தில் நடைபெற்ற மாபெ ரும் அரசு நலத்திட்ட விழாவில் தான், மாண்புமிகு புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழ் நாட்டின் முதலமைச்சராகப் பொறுப்பேற் றுக் கொண்ட பின்னர் முதன் முதலாகக் கலந்துகொண்டார். இவ்விழா நிகழ்ச்சியின் மூலம் தர்மபுரி மாவட்டமும் பர்கூர் தொகுதியும் பயன்பெறும் வகை யில் ரூ.33 கோடியே 97 இலட்சம் மதிப்பீட்டில் புதிய திட்டங்

களைத் தொடக்கி வைத்தார், மாண்புமிகு முதல்வர். இப்படியே வெற்றி தொடரட்டும்; இசை வான கேள்வி காத்திருக்கிறது எண் 7-இல். செல்க.

10. தவறு. செல்வி ரூபா உன்னிகிருஷ்ணன் பெண்களுக் கான துப்பாக்கி சுடும் போட்டி யில், தேசிய அளவில் பங்கேற் றுத் தங்கப்பதக்கம் வென்றவர். இவரது பயிற்சிக்குத் தேவை யான உபகரணங்களை வெளி நாட்டிலிருந்து தருவிக்க அரசு ரூ.3.50 இலட்சம் நிதி வழங்கி யுள்ளது. இது தவிர, போட்டி களில் பங்கேற்கச் செல்லும் போது, அதற்காகும் விமானக் கட்டணத்தையும் அரசே ஏற்றுக் கொள்ளும் என்றும் புரட்சித் தலைவி அவர்கள் அறிவித் துள்ளார். எண் 2-க்கே திரும்பச் சென்று மீண்டும் ஒரு முறை முயற்சிக்கலாம்.

11. இல்லை. "ஒரு கால பூஜை தொடர் திட்டம்" என்பது நலிந்த கோயில்களில் ஒரு காலப் பூஜை யேனும் தொடர்ந்து நடந்திட மாண்புமிகு முதல்வர் அவர் களால் தொடங்கப்பட்ட தனித் திட்டம் ஆகும். இத் திட்டத்தின் படி நலிவுற்ற திருக்கோயில்கள் ஒவ்வொன்றுக்கும் வைப்புநிதி யாக ரூ.25,000 அரசே முதலீடு செய்து, அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு ஒருகால பூஜை நடத்தப்பெறும். இத்திட்டத் தின் கீழ் மொத்தம் 6,231 திருக்கோயில்கள் பயனடைய வழிவகை செய்யப்பட்டுள்ளது. எண் 7-க்கே திரும்புக.

12. தவறு. மதுரையில் திறக்கப் பட்ட அனைத்து மகளிர் காவல்நிலையம் தமிழகத்தின் இரண்டாவது மகளிர் காவல் நிலையம் ஆகும். மதுரை தல்லாகுளம் பகுதியில் புதியதாக அமைக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையத்தை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் 14.7.93 அன்று திறந்து வைத்தார். ஆக, மீண்டும் சென்றிடுக, எண் 22-க்கு.

13. கிடையாது. சென்னையில் பங்கேற்ற முதல் விழா, ஆசிரியர் தின விழா - திரு.வி.க. விருது வழங்கும் விழா - நல்லாசிரியர் விருது வழங்கும் விழா - சிறந்த மாணவ மாணவியருக்குப் பரிசு வழங்கும் விழா ஆகிய நான்கு

புன்னகை மணக்கும் புகழ் மணக்கும் சோலைமதிக்குப் பரிசு

விழாக்களும் ஒருங்கிணைக்கப் பட்டு சென்னைப் பல்கலைக் கழக நூற்றாண்டு விழா மண்ட பத்தில் 5.9.91 அன்று நடை பெற்றது. இவ்விழாவில் விருது களும் பரிசுகளும் வழங்கப் பட்டன. அன்றி, நலத்திட்ட உதவிகள் ஏதும் வழங்கப் படவில்லை. திரும்ப எண் 1-க்கே செல்க.

14. குடிப்பழக்கத்திற்கு அடிமை யாகி, மது அரக்கனின் ஏவலாளாக, போதையின் கிடுக் கிப் பிடிக்குள் சிக்கித் தவிக்கும் பேதை மக்கள் விழிப்புணர்ச்சி பெற்றிடவும், மனமாற்றம் கொள்ளவும் வேண்டி, சக்தி வாய்ந்த விளம்பர சாதனமான திரைப்படத்துறையைச் சார்ந்து, தமிழக அரசு தயாரித்த மது விலக்குப் பிரச்சாரத் திரைப் படம்...

அ. வெளிச்சம்

ஆ. இலக்கியச் சோலை

இ. நீங்க நல்லா இருக்கணும்

(உங்களது பதில் வெளிச்சம் எனில் செல்க எண் 17க்கு)

(உங்கள் விடை இலக்கியச் சோலை எனில் செல்க எண் 19க்கு)

(உங்கள் விடை நீங்க நல்லா இருக்கணும் எனில் எண் 23க்குச் செல்லுங்கள்)

15. மிகவும் சரி. மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களிடமிருந்து ரூ.2 இலட்சம் நிதியுதவி பெற்ற

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் "இலக்கியச் சோலை" வெளியீடு

ஓட்டப்பந்தய வீராங்கனை செல்வி சோலைமதி தான். இவர் இந்தியாவின் அதிவேக வீராங் கனை ஆவார். அடுத்த கேள்வி காத்திருக்கிறது எண் 25-இல்.

16. மெத்த சரி. "குற்றவாளி களைத் தாயன்போடு அணுகி கண்டிக்க வேண்டியவற்றைக் கண்டித்து, அன்பு காட்டித் திருத்த வேண்டிய குறைபாடு களைத் திருத்தும் கைவண்ணம் பொதுவாக மகளிர் காவலர் களிடம் இருக்கிறது. எனவேதான் முற்றிலும் மகளிரையே கொண்ட காவல் நிலையத்தை அமைக்கலாம். அதில் குறிப்பாக இளங் குற்றவாளிகளையும், முதல் குற்றவாளிகளையும் கையாளலாம்" என்று பிரகடனப் படுத்தி மற்ற மாநிலங்களுக் கெல்லாம் முன்னோடியாக, முழுக்க முழுக்க பெண்களே பணியாற்றும் முதல் அனைத்து மகளிர் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் 13.4.92 அன்று சென்னை ஆயிரம் விளக்கில் தொடக்கி வைத்தார். எனவே, அடுத்த கேள்விக்கு எண் 14-ஐக் காண்க.

17. 'குடி' என்பதால் ஏற்பட்ட சிறு மனமயக்கமோ!' "வெளிச்சம்" என்பது மதுவிலக்குப் பிரச் சாரத்திற்காகத் தயாரிக்கப்பட்ட நாடகம் ஆகும். திரைப்படம் அன்று. மதுவின் மயக்கத்தில் மனைவி மக்களை உதறித்தள்ளி இருளிலே மூழ்கிக் கிடக்கும் எண்ணற்ற ஏழை எளியவர் களை வெளிச்சத்திற்குக் கொண்டு வரும் வகையில் "வெளிச்சம்" மேடை நாடகத்தை திரு குன்னக்குடி வைத்தியநாதன் இசையில், நாடகக் காவலர் திரு ஆர்.எஸ். மனோகர் தயாரித்து இயக்கினார். ரூ.2 இலட்சம் செலவில் தமிழக அரசே இந்நாடகத்தைத் தயாரித்துத் தந்தது. அது சரி. எண் 14-இன் சரியான பதிலுக்கு திரும்பச் சென்று இன்னொரு முயற்சி செய்திடுக.

18. சென்னை மெரினாக் கடற்கரையில் அமைந்த பாரத ரத்னா, புரட்சித்தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களது நினைவகம், எழிலுற மாற்றி அமைக்கப்படும் என மாண்பு மிகு முதல்வர் அவர்கள் அறி வித்தபடியே ரூ.1.965 கோடி செலவில் மாற்றியமைக்கப்பட்டு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலிதா அவர்களாலேயே திறந்து வைக்கப்பட்டது. புதுப் பொலிவுடன் டாக்டர் எம்.ஜி.ஆர். நினைவகம் திறந்து வைக்கப் பட்ட நாள்...

அ. 31.1.92

ஆ. 31.3.92

இ. 24.12.92

(உங்களது பதில் 31.1.92 எனில் எண் 31க்குச் சென்று காண்க)

(உங்கள் விடை 31.3.92 எனில் எண் 34க்குச் செல்க)

(உங்கள் விடை 24.12.92 எனில் செல்லுங்கள் எண் 37க்கு)

19. பூவின் மென்மையும், பொன்னின் மேன்மையும் அறிவுச்சுடர் கொளுத்தும் வன்மையும், ஆதி காண இயலாத தொன்மையும் கொண்ட அன்னைத் தமிழின் சிறப்புக்குச் சிறப்பு சேர்க்க, தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், கடந்த ஜனவரித் திங்களில் தஞ்சைத் தரணியில் நடத்திய எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், தமிழரின் பெருமையை உலகுக்கு உணர்த்திட, தமிழ் இலக்கியக் காட்சிகளைத் தொகுத்து கண்ணுக்கு விருந்தாகவும் கருத்துக்கு செறிவாகவும், தமிழ்நாடு அரசு சார்பில் இயக் குநர் ஆர்.வி. உதயகுமார் அளித்த திரைப்படம்தான் இலக் கியச் சோலை. தமிழின் சிறப்பை

எடுத்துக்காட்ட எடுக்கப்பட்ட படமே தவிர, இலக்கியச் சோலை, மதுவிலக்கு பிரச்சாரப் படம் அன்று. எனவே, உரிய விடை காண உடன் மீண்டு செல்க எண் 14-க்கே.

20. மன்னிக்கவும். கோவையில் திறக்கப்பட்ட அனைத்து மகளிர் காவல் நிலையம், தமிழகத்தின் மூன்றாவது நிலையம் ஆகும். கோவை காந்திபுரம் காட்டூர் காவல் நிலைய வளாகத்தில்

அனைத்து மகளிர் காவல் நிலையம் உலகிற்கே முன்னோடி

அமைக்கப்பட்ட இந்த அனைத்து மகளிர் காவல் நிலையத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். இதனைத் தொடர்ந்து தமிழகம் முழுவதும் 57 அனைத்து மகளிர் காவல் நிலையங்கள் தற்போது இயங்கி வருகின்றன. திரும்புக எண் 22-க்கே.

21. இல்லை. தாய்நாட்டுக்கும் தமிழ்நாட்டுக்கும் பெருமை தேடித்தந்த செல்வி அமுதா, நீச்சல்-ஓட்டம்-மிதிவண்டிப் பந்தயம் என்று முப்போட்டிகள் இணைந்த டிரையத்லான் வெற்றிச் செல்வி ஆவார். செல்வி அமுதாவைத் தமிழக அரசு தத்தெடுத்துக் கொண்டது என அறிவித்து தொடர்ந்த பயிற்சிக்கென, சர்வதேச விளையாட்டுகளில் பயன்படுத்தப்படும் ரூ.50,000 மதிப்புள்ள மிதி வண்டியைத் தமிழக முதல்வர் பரிசாக வழங்கினார். அதுமட்டுமன்றி அ.இ.அ.தி.மு.க. சார்பில் ரூ.25,000 நிதி உதவி, தமிழ்நாடு விளையாட்டு வளர்ச்சிக் குழுமத்தின் மூலம் ரூ.1 இலட்சம் பரிசு, அவரது குடும்பம் குடியிருக்க ஓர் இல்லம், தினக் கூலியாக இருக்கும் அவரது தந்தையின் பணி நிரந்தரம் ஆகிய சலுகைகளையும் செல்வி அமுதாவுக்கு புரட்சித்தலைவி வழங்கியுள்ளார். ஆகவே, எண் 2 நோக்கி மீண்டும் போகலாமே.

22. அகில இந்தியாவுக்கே முன்னோடியாக, வேறெந்த மாநிலத்திலும் இல்லாத புதுமைத்திட்டமாக, பெண்கள் அச்சமோ தயக்கமோ இன்றி, தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக புகார் கொடுத்திட ஏதுவாக, முழுக்க முழுக்க பெண்களே பணிபுரியும் மகளிர் காவல் நிலையங்கள் தற்போது மாவட்டத் தலைநகரங்களில் இயங்கி வருகின்றன. முதன்முதலாக, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்த மகளிர் காவல் நிலையம் அமைந்த இடம்...

அ. மதுரை

ஆ. சென்னை - ஆயிரம் விளக்கு

இ. கோயம்புத்தூர்

(உங்கள் பதில் மதுரை எனில் எண் 12க்குச் செல்லுங்கள்)

(உங்கள் விடை சென்னை ஆயிரம் விளக்கு என்றால் செல்க எண் 16க்கு)

(உங்கள் விடை கோயம்புத்தூர் எனில் எண் 20க்குச் செல்லுங்கள்)

23. சரியான பதில். மதியை மயக்கும் குடியை, சமுதாயத்திலிருந்து முற்றிலுமாக அகற்ற வேண்டுமாயின், மக்கள் தாங்களாகவே அதைத் தவறு என உணர்தல் வேண்டும். அவ்வாறு, அந்தத் தவறைத் தவறென்று அவருக்கு உணர்த்த, தமிழக அரசு தயாரித்த மதுவிலக்குப் பிரச்சாரத் திரைப்படம் தான் "நீங்க நல்லா இருக்கணும்". நிழல்கள் ரவி, பானுப்பிரியா முதலானோர் நடிக்க, விசு இயக்க 26.11.92 அன்று வெளியிடப்பட்ட இப்படத்திற்குத் தமிழக அரசு கேளிக்கை வரி விலக்கு அளித்தது. வெற்றிக்கு வாழ்த்துக்கள். அடுத்த கேள்விக்குச் செல்க எண் 38

24. ஐயா, கேள்வி - உருவான மாவட்டம் பற்றியது. திருவள்ளுவர் மாவட்டமோ உருவாகப் போகும் மாவட்டம். நிர்வாக

"நீங்க நல்லா இருக்கணும்" - குத்துவிளக்கேற்றும் மணிவிளக்கு

நலன் கருதி, திருச்சிராப்பள்ளி மாவட்டத்தை மூன்று ஆகப் பிரித்து, திருச்சிராப்பள்ளியைத் தலைமையிடமாகக் கொண்டு, 'திருச்சிராப்பள்ளி பெரும்பிடுகு முத்தரையர் மாவட்டம்' என்றும், கரூரைத் தலைமையிடமாகக் கொண்டு 'கரூர் தீரன் சின்னமலைக் கவுண்டர் மாவட்டம்' என்றும், பெரம்பலூரைத் தலைமையிடமாகக் கொண்டு 'பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்' என்றும் பெயர் சூட்டி அமைப்பது என 25.7.95 அன்றுதான், தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது. ஆகவே எண் 38-க்கு மீண்டும் சென்று முயன்றிடுக.

25. பொருளாதாரச் சுமை யின் காரணமாகப் பெண் குழந்தைகள் பிறந்தவுடன் கொல்லப்படும் கொடுஞ்செயலினைத் தடுப்பதற்கென, அத்தகைய பெண் குழந்தைகளை அரசே வளர்க்கும் என்று, உலகே வியக்கும் வண்ணம் ஓர் ஒப்பற்ற திட்டத்தை தமிழக முதல்வர் அவர்கள் அறிவித்தார்கள். அந்தத் திட்டம்...

அ. பெண் குழந்தைகளுக்கான புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா திட்டம்

ஆ. புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம்

இ. மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டம்

(உங்கள் விடை பெண் குழந்தைகளுக்கான புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா திட்டம் எனில் நீங்கள் செல்ல வேண்டிய எண் 4)

(உங்கள் பதில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா பெண் குழந்தைகள் பாதுகாப்புத் திட்டம் எனில் செல்லுங்கள் எண் 6க்கு)

(உங்கள் விடை மகளிர் மற்றும் குழந்தைகள் நல மேம்பாட்டுத் திட்டமாக இருக்குமானால் நீங்கள் காண வேண்டிய எண் 8)

26. தவறு. ரூ.200 ஆக வழங்கப்பட்டு வந்த தொகை ரூ.300 ஆக உயர்த்தப்பட்டது, கருவுற்ற பெண்களுக்கு வழங்கப்பட்டுவரும் உதவித் தொகையாகும். கருவுற்ற பெண்களும், பாலூட்டும் தாய்மார்களும் ஊட்டமான உணவை உட்கொள்ள வசதி செய்து தரும் வகையில் அரசு அளித்து வந்த ரூ.200 உதவித்தொகையை, ரூ.300 ஆக உயர்த்திக் கொடுத்துள்ளார் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள். திரும்பச் செல்லுக எண் 35.

27. மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் முதல்வராகப் பொறுப்பேற்று முதலில் தொடங்கிய புதிய மாவட்டம் என்று கேட்டிருந்தால் 18.10.91 அன்று தொடங்கிவைத்த நாகப்பட்டினம் காயிதெமில்லத் மாவட்டம் என்பது சரியான பதிலாக இருந்திருக்கும். 38-க்கு சரியான விடை வேண்டுமாயின் இன்னொரு முறை முயற்சிப்பதே உத்தமம்.

28. கேரள மாநில திருவனந்தபுரத்தில் உள்ள பொன்னார

ஸ்ரீதர் அறக்கட்டளை நிறுவிய, "ராஷ்டிரிய பீஷ்மாச்சாரிய விருது" நிகரற்ற முற்போக்கு எண்ணங்கள், ஏராளமான தீர்க்கதரிசனம், மகத்தான அர்ப் பணிப்பு, ஏழை எளியோரின் முன்னேற்றத்திற்காக தியாகம் செய்யும் உள்ளம், அதிசயிக்கத் தக்க அளவுள்ள கிரகித்துக் கொள்ளும் தன்மை, ஆகிய வற்றால் தமிழக அரசியல், பொருளாதார, சமுதாய மறு மலர்ச்சியை உருவாக்கி சிறந்த சேவை புரிந்தமைக்காக மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர் களுக்கு வழங்கப்பட்டது. விருதுடன் வழங்கப்பட்ட ரூ.25,000- த்தை கேரளாவிலுள்ள அநாதைக் குழந்தைகள் இல்லமான 'ஸ்ரீசித்ரா ஏழைக் குழந்தைகள் இல்லத்துக்கு' நன்கொடையாக வழங்கினார் மாண்புமிகு முதல்வர். அப்படியானால், எண் 39-ன் சரியான பதில்? உரிய விடைக்கு உங்கள் பார்வையை எண் 33-க்கு செலுத்துங்கள்.

29. பெருத்த பொருளும், பெரும்புகழும் அள்ளி வழங்கும் வள்ளல்துறைதான் கலைத்துறை. ஆனால் அந்தச் சிறப்பு எல்லாருக்குமா வாய்க்கிறது? இல்லையே. அப்படி அதிர்ஷ்ட தேவதையின் அருட்பார்வை கிடைக்காமல், அல்லல்பட்டு நலிந்துபோன கலைஞர்களது குடும்பங்களின் நல்வாழ்வுக் கென நிதியுதவியாக ரூ.250 வழங்கி வந்ததை மாற்றி, அவர் தம் உள்ளம் மகிழ ரூ.400 ஆக உயர்த்திக் கொடுத்திருக்கிறார் மாண்புமிகு தமிழக முதல்வர். ஆக ரூ.250-லிருந்து ரூ.400-ஆக

'தொட்டில் மழலை'க்கு
அன்பு முத்தம் ஆயிரம்.

உயர்த்தப்பட்டது நலிந்த கலைஞர்களுக்கான நிதி உதவி! பிறகென்ன? இன்னொரு முறை எண் 35க்குச் சென்று, முயன்று பார்க்க வேண்டியதுதான்.

30. மிக அருமை. தென்னார்க்காடு மாவட்டதத்தை இரண்டாகப் பிரித்து புதியதாக அமைக்கப் பட்ட 'விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம்' தான்; தமிழகத்தின் இளைய மாவட்டம் - 23-வது மாவட்டம் ஆகும். சாதி, சமய அரசியல் மாச்சரியங்களைக் கடந்து, நல்லார்களின் பெயரை மாவட்டங்களுக்குச் சூட்டுவதே நனி நாகரிகம் என்று குறிப் பிட்டு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் 30.9.93 அன்று, தென்னார்க்காடு மாவட்டத் திலிருந்து விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டத்தை உருவாக்கியும், தென்னார்க்காடு மாவட்டத் திற்கு, 'தென் ஆர்க்காடு வள்ளலார் மாவட்டம்" என்று பெயர் சூட்டியும் புதிய மாவட் டத்தைத் தொடக்கி வைத்தார். மகிழ்ச்சியோடு அடுத்த கேள்விக்குச் செல்லுக எண் 35

31. தவறு தவறு. 31.1.1992 அன்று நடைபெற்ற விழா, வள்ளல் பெருமனத்தவன் - வாடா மலர் முகத்தினன் - வரலாற்று நாயகன் புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்களின் திருவுருவபபடத்தை சட்டப் பேரவையில் திறந்து வைக்கும் கோலாகலமான விழாவாகும். 'வரையாது வழங்குவதே வாழ்வின் குறிக்கோள்' என்னும் புரட்சித்தலைவரின வாழகைகத் தத்துவததைத தாரக மந்திரமாகத் தாங்கி நிற்கும் அவரது திருஉருவப்படத்தை மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்தார்கள். மீண்டும் செல்க எண் 18க்கே.

பாரத ரத்னா டாக்டர் எம்ஜி-ஆர். நினைவகம்





32. மிகச் சரி. பத்திரிகைத் துறையிலிருந்து ஓய்வு பெற்ற ஏழ்மை நிலையிலுள்ள பத்திரி கையாளர்களுக்கு ரூ.400 ஆக இருந்த ஓய்வூதியத்தை ரூ.500 ஆக உயர்த்தி வழங்குமாறு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். 1.4.92 முதல் பத்திரிகையாளர் ஓய்வூதியமாக ரூ.500 வ்ழங்கப்பட்டு வருகிறது. அடுத்து செல்க எண் 18.

33. சரி. மிகமிகச் சரி. டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் ஆற்றல்மிகு சிந்தனைகளை அளப்பரிய செயல்திறன்களை, அரும்பெரும் குணங்களைப் பட்டியலிட்டு அதற்கென சென்னைப் பல்கலைக் கழகம் 19.12.91 அன்று அவருக்கு டாக்டர் பட்டம் வழங்கியது. அன்றைய மேதகு ஆளுநரும் சென்னைப் பல்கலைக்கழக வேந்தருமான திரு பீஷ்ம நாராயண்சிங் இப்பட்டத்தை வழங்கினார். சென்னைப் பல்கலைக்கழக நூற்றாண்டு விழா மண்டபத்தில், குழுமியிருந் தோரின் பலத்த கை தட்டலுக்கு இடையே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இனி கடையைக் கட்டி, கடைசிக் கேள்வி 40ஐ நாடிச் செல்வோமா?

34. தவறு. 31.3.92 அன்று புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர் போக்குவரத்துக் கழகம் அல்லவா தொடங்கி வைக்கப்பட்டது! பெரியார் மற்றும் பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகங்களி லிருந்து 639 பேருந்துகளைப் பிரித்துப் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். போக்குவரத்துக் கழகம் என்ற புதிய போக்குவ ரத்துக் கழகம் காஞ்சிபுரத்தைத் தலைமையிடமாகக் கொண்டு தொடங்கப்பட்டது. இந்தப் பேருந்துகள் 587 வழித் தடங்களில் இயக்கப்பட்டு வரு கின்றன. சரி, திரும்ப 18க்கே செல்வோமா? வேறெதற்கு! இன்னொரு முறை முயற்சிக்கத் தான்!

35. தம்முடைய உழைப்பை யெல்லாம் பத்திரிகைத் துறைக்கே செலுத்தி, உலகுபுகழ் பெருமை கொண்டோர் அண்மையிலே அணைந்து நிற்கும் போதையினால், வாழ்

நாள் முழுமையும் பத்திரிகைகளுக்கே பணி செய்து, வளம் என்னும் சொல்லின் வரலாறு அறியாது ஏழ்மை நிலையில் வாடி வதங்கிக் கொண்டிருக்கும் ஓய்வு பெற்ற பத்திரிகையாளர்கள் பெற்றுக் கொண்டிருக்கும் ஓய்வூதியத்தை, அவர்தம் குடும்பத்தின் நிலையறிந்து உயர்த்தி வழங்கிட டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணையிட்டார்கள். அப்படி உயர்த்தப்பட்டத் தொகை...

அ. ரூ.200 லிருந்து ரூ.300

ஆ. ரூ.250· லிருந்து ரூ.400

இ. ரூ.400 லிருந்து ரூ.500

(உயர்த்தப்பட்டத் தொகை ரூ.200 லிருந்து ரூ.300 என்று கருதுவீர்களேயானால் நீங்கள் காண வேண்டியது எண் 26.)

ரூ.250 லிருந்து ரூ.400 ஆக அல்லவா உயர்த்தப்பட்டது என்று நினைப்பீர்களேயானால் நீங்கள் செல்ல வேண்டியது எண் 29க்கு)

(உங்கள் விடை ரூ.400 லிருந்து ரூ.500 என்பதாக இருக்குமானால் செல்லுக எண் 32க்கு)

36. உலக்மே வியக்க, மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தஞ்சைத் தரணியில் நடத்திய எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், தொடக்க நாளான 1.1.95 அன்று திறந்து வைத்த இராஜராஜ சோழன் மணி மண்டபமே, கலையழகு மிளிரும் அக்கட்டடம்.

(நீங்கள் கட்டங்கட்டமாகக் கடந்து வந்த வெற்றிப் பாதையைக் காண வேண்டுமா? பக்கம் எண்........... புரட்டிப் பாருங்கள். வெற்றிக் கோப்பையைப் பெற்றுத் தரும் வழியைக் கண்டு மகிழ்ந்திடலாம்.)

உணர்ந்து படிக்கும் ஒரு பக்கம், விரைந்து படித்த ஒரு முழு புத்தகத்தைவிட மேலானது.

—மெக்காலே

துயர்துடைக்கும் கரம், துன்பம் தீர்க்கும் கரம், தூக்கிவிடும் கரம்

37. சரியான பதில், 24.12.92 அன்றுதான் டாக்டர் எம்.ஜி.ஆர் அவர்கள் மீளாத்துயில் கொண்டுள்ள இடத்தை, தாமரை இதழ்கவிந்து தண்மை சேர்க்கும் தன்மையதாய், கட்டடக் கலைச் சிறப்புடன் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் திறந்து வைத்தார். அன்று பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் நினைவு நாளும் கூட. மாண்புமிகு முதல்வர் அவர்களும், அமைச்சர் பெருமக்களும், இலட்சக்கணக்கான பொதுமக்களும் அன்று டாக்டர் எம்.ஜி.ஆர் நினைவகம் சென்று அஞ்சலி செலுத்தினர். அடுத்து கீழே ஒரு எண் தள்ளி, 39-க்கு செல்க.

38. தன்னிகரற்ற தங்கத் தமிழகத்தின் இளைய மாவட்டம். அதாவது கடைசியாக உருவான - மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் தொடக்கி வைத்த — புதிய மாவட்டம்...

நலிவடைந்த மக்களுக்கு நலத்திட்ட உதவிகள்

அ. பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம்

ஆ. நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம்

இ. விழுப்புரம்-இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம்

(உங்கள் விடை பெரம்பலூர் திருவள்ளுவர் மாவட்டம் என்றால் செல்லுக எண் 24க்கு)

(உங்கள் பதில் நாகப்பட்டினம் காயிதேமில்லத் மாவட்டம் எனில் எண் 27க்குச் செல்லுங்கள்)

(உங்கள் விடை விழுப்புரம் இராமசாமிப் படையாட்சியார் மாவட்டம் எனில் காண்க எண் 30ஐ)

39. உறுதியாக விரைந்து முடிவெடுத்தல், ஆக்க சக்தி, புதுமைநடை, சிந்தனைத் தெளிவு, அரசியல் நுட்பம் இவற்றுக்காகவும், பழமை மற்றும் புதுமைக் கலைகளுக்கிடையே பாலம் அமைத்துள்ள விழுமிய ஆற்றொழுக்கான சிந்தனைக்காகவும், அடிமைத் தளையினின்று மனித உணர்வுகளை விடுவிக்கும் எண்ணங்களுடன் இடையறாது செயல்படும் பாங்கினுக்காகவும், சமுதாயத்தின் மக்கள் சக்தியினை நெறிப்படுத்தும் உறுதிக்காகவும், நடவடிக்கைகளுக்காகவும், தமிழினத்தின் மொழி மற்றும் கூட்டாட்சிச் சிந்தனைகளை எடுத்துக்கூறும் தெளிவினுக்காகவும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி செல்வி ஜெ. ஜெயலலிதா அவர்களுக்கு வழங்கப்பட்ட விருது...

அ. ராஷ்டிரிய பீஷ்மாச்சார்யா விருது

ஆ. சென்னைப் பல்கலைக் கழக டாக்டர் பட்டம்

(உங்கள் விடை ராஷ்டிரிய பீஷ்மாச்சாரீயா விருது என்றால் நீங்கள் செல்ல வேண்டிய எண் 28)

(உங்களது பதில் சென்னைப் பல்கலைக் கழக டாக்டர் பட்டம் எனில் எண் 33க்குச் செல்லுங்கள்)

40. நன்று, மிக நன்று. சுற்றிச் சுழன்று, வாகை சூடி விட்டீர்கள். வெற்றிக்கனியைப் பறிக்க விரைந்து செல்லும் வழி 21 படிகள் கொண்டது. அந்த வழி 1-9-7-3-2-15-25-6-22-16-14-23-38 30-35-32-18-37-39-33-40. வெற்றிக் களிப்புடன் செல்கின்ற வேளையில், நிறைவாக ஒரு கேள்வி. கீழே படத்தில் காணப்படுகிறதே, மண்டபம், அண்மையில், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களால் திறந்து வைக்கப்பட்டு உலகப் பெருமை சூடிக் கொண்ட இந்த புகழ் மண்டபம் என்ன மண்டபம்? விடை வேண்டுமென்றால் எண் 36-ஐக் காண்க.

—சார்வபௌமன்



வாழ்கின்ற நாடு எதுவாக இருந்தாலும் தமிழன் என்னும் அடையாளத்தை இழந்திடாது வாழ்வோம்!

தத்தோ எம். குமரன்

தத்தோ எம். குமரன் அவர்கள், மலேசியா நாட்டின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகத்தில் நாடாளுமன்றச் செயலாளராகச் சிறப்புடன் செயலாற்றி வருபவர். கடந்த ஜனவரித் திங்களில், தஞ்சைத் திருநகரில் நடைபெற்ற எட்டாவது உலகத் தமிழ்நாட்டில் மலேசிய நாட்டின் சார்பாக இவர் பங்கேற்று, "இருபத்தொன்றாம் நூற்றாண்டும் கலைகளும்" என்னும் தலைப்பில் நடை பெற்ற கருத்தரங்குக்கு முன்னிலை வகித்து ஆற்றிய உரை:

தமிழகத்திலே நடைபெறுகின்ற எழிலார்ந்த எட்டாவது தமிழ் மாநாட்டிலும், அதனையொட்டி நடைபெறுகின்ற 'இருபத்தொன்றாம் நூற்றாண்டும் கலைகளும்' என்ற கருத்தரங்கிலும், அயலகத் தமிழன் என்ற முறையில் கலந்து கொண்டு ஓரிரு வார்த்தைகள் முன்னுரையாகக் கூறுவதில் மிகவும் மகிழ்ச்சி அடைகின்றேன்.

தாய்த் தமிழகத்தில் கலையைப் பற்றி, அதனுடைய வளர்ச்சியைப் பற்றி, அதனுடைய நிலைபாட்டிற்குச் செய்யப் படுகின்ற வேலைகளைப் பற்றியெல்லாம் தொடக்க உரை ஆற்றிய அமைச்சர் அவர்களும், தலைமையுரை ஆற்றிய அமைச்சர் அவர்களும் கூறினார்கள். இது தாய்த் தமிழகம். கலைகளின் பிறப்பிடம். ஆனால், வந்திருக்கும் எங்களுக்கோ, அயலகம். ஆகவே, தமிழன் என்ற பெயரால், அந்த மொழியைப் பேசுகின்ற காரணத்தினால், அந்தக் கலையை ஒழுகுகின்ற காரணத்தினால், அந்த உறவோடு இங்கே வந்திருக்கிறோம்.

அரசியலிலே உங்களோடு எங்களுக்கு ஒட்டும் உறவும் இல்லாவிட்டாலும், எங்களுடைய கலை வாழ்விற்கு, எங்களுடைய மொழி வாழ்விற்கு, எங்களுடைய பண்பாட்டு வாழ்விற்கு நாங்கள் உங்களை நம்பியிருக்கிறோம்.

எப்படியோ எங்களுடைய மூதாதையர் இந்த நாட்டிலிருந்து அயல் நாடுகளுக்குச் சென்றார்கள். சென்ற இடங்களில் கிடைத்த வாய்ப்புகளை, கிடைத்த வசதிகளைப் பயன் படுத்திக் கொண்டு, அவர்கள் அவர்களாக, அதாவது தமிழர்கள் தமிழர்களாகவே வாழ்வதற்குப்போராடிக்கொண்டே வருகிறார்கள்.

தமிழர்கள் தமிழர்களாக வாழ வேண்டும் என்ற உந்துதலால், அந்த உணர்வால், தமிழை வாழ வைக்க வேண்டும்; தமிழ்ப் பண்பாட்டைப் பேண வேண்டும்; தமிழ்க் கலையைப் பின்பற்ற வேண்டும், என்ற உந்துதலால்தான், முதலாவது உலகத் தமிழ் மாநாட்டைக் கோலாலம்பூரிலே நாங்கள் நடத்தக் கூடிய வாய்ப்புப் பெற்றோம். காரணம், அதுபோன்ற மாநாடுகளையெல்லாம் நடத்தாவிட்டால், எங்கே எங்களிடையே இருக்கின்ற உணர்வுகள் அற்றுப்போய்விடுமோ என்ற அச்ச உணர்வின் காரணமாக,'பேட்டரியை சார்ஜ்' செய்வதுபோன்று [illegible] அதை மேலும் மேலும் வளர்த்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில்தான் இதுபோன்ற முயற்சிகளிலே ஈடுபட்டோம்.

வீரபாண்டிய கட்டபொம்மனின் உறவினர் முதுபெரும் தமிழறிஞரின் பேத்திக்கு அரசுப் பணி

-மாண்புமிகு முதல்வர் ஆணை-

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தைச் சேர்ந்த சித்ரா என்ற பெண்மணி, தான் இந்திய விடுதலைக்காகத் தனது இன்னுயிரை ஈந்த மன்னர் வீரபாண்டிய கட்ட பொம்மனின் நெருங்கிய உறவினரான முதுபெரும் தமிழ்ப் பேரறிஞர் கவிராஜ பண்டிதர் ஜெகவீர பாண்டியனார் அவர்களின் சொந்தப் பேத்தி என்றும், தான் கணவனால் கைவிடப்பட்டவர் என்றும், பள்ளியில் பயிலும் சிறிய குழந்தைகளுடன் பொருளாதார ஆதரவின்றி வறுமையில் வாடுவதாகவும், முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணிக்கான தகுதி தனக்கு இருப்பதால், தனது குடும்பச் சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, தனக்கு அரசுப் பணி அளிக்க வேண்டும் என்றும் கோரி கருணை மனு ஒன்றினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மனுதாரரின் குடும்பச் சூழ்நிலையையும் அவர் தமிழுக்குத் தொண்டாற்றிய முதுபெரும் தமிழ் அறிஞர் ஒருவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர் என்பதைக் கருத்தில் கொண்டும், திருமதி சித்ராவிற்கு, தமிழ்நாடு கல்வித்துறையில் முதுநிலைப் பட்டதாரி ஆசிரியர் பணியிடம் அளிக்க தக்க ஆணை பிறப்பித்துள்ளார்.

அடிநாளிலே வந்தவர்கள், இந்நாளிலே இல்லை. ஆனால் தமிழகத்தைவிட்டு அயல் நாடுகளுக்கு, அயலகத்திற்கு, குறிப்பாக மலேயத்துக்கு வந்தவர்கள் எல்லாம் பிழைப்பைத் தேடி வந்த நிலையிலே இருந்தாலும், அங்கே வாழ்கின்ற அந்தச் சமுதாயம், ஒரு நிலைபெற்ற சமுதாயமாக, தன்னுடைய அடையாளத்தை இழந்துவிடாத நிலையிலே இருக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான் அவர்கள் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள்.

பாரதிதாசன் அவர்கள் கூறுவது போன்று - பாரதிதாசன் அவர்கள் ஏறக்குறைய 40, 45 ஆண்டுகளுக்கு முன்னால் உங்களையெல்லாம் பார்த்து ஒரு ஏக்கக் கவிதையைப்பாடினார்; அந்தக் கவிதையைப் பார்க்கின்றபோது, அது உங்களுக்காக பாடிய கவிதை இல்லை, கடல் கடந்து வாழ்கின்ற தமிழர்கள், தமிழர்களாக வாழ வேண்டுமென்ற ஒரு உணர்வால் அவர் பாடியதாகத் தான் அதை நாங்கள் எப்பொழுதுமே எடுத்துக் கொள்வோம், "என்னரும் தமிழ்நாட்டின் கண்" என்று அந்தக் கவிதை வரிகளிலே பாரதிதாசன் குறிப்பிட்டுக் கூறுகின்றார். ஆனால், நாங்கள் அந்தக் கவிஞனுடைய அனுமதியைப் பெறாமல், உங்களுடைய அனுமதியைப் பெறாமல், அந்தத் 'தமிழ்நாடு' என்பதை மாற்றி 'மலைநாடு' என்று வைத்துக்கொண்டு, அந்தக்

கவிதைக்கு இலக்கணமாக எங்களுடைய வாழ்க்கையை அமைத்துக்கொள்வதற்கான முயற்சியிலே நாங்கள் ஈடுபட்டுக்கொண்டு வருகிறோம்.

"என்னரும் மலைநாட்டின் கண், எல்லோரும் கல்வி கற்று". கல்வியை அடுத்துக் கூறுகின்றார் பாவேந்தர், "பன்னரும் கலை ஞானத்தால்" என்று. கலை என்று கூறவில்லை, அருங் கலை என்று கூறவில்லை, பல அருங்கலை என்று கூறுகின்றார். ஆகவே, "பன்னரும் கலை ஞானத்தால், பராக்கிரமத்தால், அன்பால், உன்னத இமயமலையைப் போல், ஓங்கிடும் கீர்த்தி எய்தி இன்புற்றார்" என்று சொல்லிவிட்டு அடுத்துச் சொல்கிறார்: "மற்றோர் இயம்பிடக் கேட்டிடல் என்னாளோ?" என்று. யார் அந்த மற்றோர்? தமிழகத்திலே பார்க்கின்ற இடமெல்லாம் தமிழர்கள். ஆகவே, அங்கே மற்றோர் என்று கூறியபோது, நாங்கள் எவ்வாறு எடுத்துக் கொண்டோம் என்றால், நாங்கள் மலாயக் கார மக்கள் மத்தியிலே வாழ்கின்றோம், சீனர் மத்தியிலே வாழ்கின்றோம், பல்வேறு மொழிக் குடும்பத்தைச் சார்ந்தவர்கள் மத்தியிலே வாழ்கின்றோம், பல்வேறு பண்பாட்டு மூலங்களைக் கொண்டவர்கள் மத்தியிலே வாழ்கின்றோம், ஆகவே, அங்கே பாவேந்தன் எங்களுக்காகச் சொன்னான். மற்றோர் என்கிறபோது சீனர்களும், மலாயக்காரர்களும் பார்க்க நீ கல்வியிலே சிறந்து, கலையிலே சிறந்து, அறிவிலே சிறந்து, ஆற்றலிலே சிறந்து, நீ வாழ வேண்டுமென்று அவர் எங்களுக்குக் கூறியதைப் போன்று அந்தக் கருத்தினை ஏற்று எங்களுடைய கலையை, நம்முடைய கலையை, அயல கத்திலே, மலையகத்திலே வளர்ப்பதற்காகப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறோம்.

தமிழ்ப் பெருமக்களே, ஒன்றை நான் உங்களுக்கு கூறுவேன். 50 ஆண்டுகளுக்கு முன்னால், 12 விழுக்காடு சமுதாயமாகத் தமிழ்ச் சமுதாயம் மலையகத்திலே இருந்தது. அந்தச் சமுதாயம், அந்த பெருமைக்குரிய சமுதாயம், கால ஓட்டத்தில், கால வளர்ச்சி யின் காரணமாக, நாளுக்கு நாள் குறைந்து கொண்டே வருகின்றது. இன்றைய நிலை யிலே எங்களுடைய சமுதாயத்தின் எண்ணிக்கை 9.8 விழுக்காடு. எங்களுடைய நாடு துரித வளர்ச்சி கண்டு, துரித வளர்ச்சியின் காரணமாக 30 ஆண்டுத் திட்டங்களை வைத்து, அந்த இலக்கை அடைவதற்கான முயற்சியிலே ஈடுபட்டு வருகின்றது. அரசாங்கத்தின் புள்ளிவிவரப் படி, அந்த இலக்கை நாங்கள் அடை கின்றபோது, 5.6 விழுக்காடு சமுதாயமாக நாங்கள் இருக்கப் போகிறோம்.

5.6 விழுக்காடு சமுதாயமாக இருக்கின்ற இந்தத் தமிழ்ச் சமுதாயம் தன்னுடைய பண்பாட்டை இழக்காமல், தொடர்ந்து வாழ வேண்டுமானால், தமிழகம் எங்களுக்கு எல்லா நிலைகளிலும், உதவிகளைச் செய்ய வேண்டுமென்று இந்த வேளையிலே கேட்டுக்கொள்ள விரும்புகிறோம்.

நாங்கள் தமிழராக இருக்கின்ற, காரணத்தினால்தான், இங்கே இந்தத் தமிழ் மாநாட்டுக்கு வந்திருக்கிறோம். இந்த எழிலார்ந்த எட்டாவது மாநாட்டை இவ்வளவு சீரும் சிறப்புமான முறையிலே நடத்துவதற்கு அனைத்தாலும் முயன்று வெற்றியை ஈட்டியுள்ள மாண்புக்கும், மரியாதைக்கும் உரிய புரட்சித் தலைவி டாக்டர் ஜெயலலிதா அவர்களுக்கு எங்களுடைய நாட்டின் தமிழ் மக்களின் சார்பில், எங்களுடைய பணிவன்பான நன்றியைத் தெரிவித்துக் கொண்டு, நான் கூறியதுபோன்று, எங்களுடைய கலைத் தேவையை, எங்களுடைய பண்பாட்டுத் தேவையை, மொழித் தேவையை, எங்க ளுடைய சமயத் தேவையை நிறைவு செய்ய நீங்கள் தயாராக இருக்க வேண்டுமென்று பணிவுடன் கேட்டுக் கொள்கின்றேன். ✱

முன்னாள் அமைச்சர் கக்கனுக்கு முழு உருவ வெண்கலச் சிலை!

மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவிப்பு

மதுரை மாவட்டம், மேலூர் வட்டம் தும்பைப்பட்டி என்ற ஒரு சிறிய கிராமத்தில் தாழ்த்தப்பட்ட ஒரு ஏழ்மையான குடும்பத்தில் பிறந்து, சுதந்திரப் போராட்டத்தில் பங்கேற்று, சிறை சென்று, தன்னலமற்ற பொதுச் சேவையில் ஈடுபட்டு, தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட வரான திரு பி. கக்கன் அவர்களது சீரிய தொண்டினை நினைவுகூரும் வண்ணம், மதுரை மாநகரில் அவருக்குச் சிலை அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழக அமைச்சரவையில் பங்கேற்று அமைச்சராகச் சிறப்பாகப் பணியாற்றியவர் திரு பி. கக்கன் அவர்கள். நாடாளுமன்ற உறுப்பினராகவும், சட்டமன்ற உறுப்பின ராகவும் பணியாற்றி, தமிழ்நாட்டிலுள்ள தாழ்த்தப்பட்ட மக்களுடைய ஒட்டுமொத்த வாழ்க்கை முன்னேற்றத்திற்கும், அவர்தம் மேம்பாட்டிற்கும் பாடுபட்டு, பொது வாழ்க்கையில் நற்பண்புகளைக் கடைப் பிடித்த திரு பி. கக்கன் அவர்களின் தொண்டை நினைவுகூர்கின்ற வண்ணம், அவரது முழுவுருவ வெண்கலத் திருவுருவச் சிலை ஒன்றினை தமிழக அரசின் சார்பில் அமைக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் பிரதிநிதியாகச் செயலாற்றி, அவர்களின் நன்மைக்காகப் பாடுபட்ட திரு பி. கக்கன் அவர்களின் திருவுருவச் சிலை, வெகுவிரைவில் மதுரையில் திறந்து வைக்கப்படும் என்றும் அதற்கு ஒரு விழா நடத்தப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

மாண்புமிகு முதல்வர் ஆணை

நலிந்த ஆலைத் தொழிலாளர்களுக்கு நிவாரண உதவித்தொகை

தமிழகத்தில் நலிவடைந்து மூடப்பட்ட 17 ஆலைகளில் பணிபுரிந்து தற்போது வேலையின்றி அவதியுறுகின்ற 10,484 தொழிலாளர்களின் குடும்பங்கள், தீபாவளி யைக் கொண்டாடுவதற்காக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், குடும்பம் ஒன்றுக்கு 400 ரூபாய் வீதம் நிவாரண உதவித் தொகை வழங்கி ஆணையிட்டார். இதன்படி 1.1.1990க்குப் பிறகு நலிவடைந்து மூடப்பட்ட 17 ஆலைகளில் பணிபுரிந்த 10,484 தொழிலாளர்களின் குடும்பங்கள் பயன் அடைந்தன.

கடந்த ஆண்டு வழங்கப்பட்டது போலவே இந்த ஆண்டும் இந்தக் குடும்பங்கள் ஒவ்வொன்றுக்கும் 400 ரூபா கருணைத் தொகை வழங்கப்பட்டது. மொத்தத் தொகையான 42 இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார். தொழிலாளர் நல ஆணையர் அவர்கள் மூலமாக, இந்த நிவாரண உதவித்தொகை பாதிக்கப்பட்ட, தொழிலாளர்கள் பயன்பெறும் வண்ணம், தீபாவளிக்கு முன்பாக வழங்கப்பட்டது.

● சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு ரூ.10 கோடி
● மின்வாரிய ஊழியர்களுக்கு ரூ.28 கோடி
● வனக்கழக ஊழியர்களுக்கு ரூ.2.3 கோடி

போனஸ் வழங்க மாண்புமிகு முதல்வர் ஆணை

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் தொழிலாளர் மற்றும் அலுவலர்களுக்கும், மின் வாரியத்தில் பணி செய்யும் தொழிலாளர் மற்றும் அலுவலர்களுக்கும், அரசு ரப்பர் கழகம், தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம், மற்றும் தமிழ்நாடு வனத் தோட்டக் கழகம் ஆகிய வனக் கழக ஊழியர்களுக்கும் போனஸ் வழங்கிட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

சர்க்கரை ஆலை ஊழியர்களுக்கு போனஸ்

தமிழகத்தில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத்துறைச் சர்க்கரை ஆலைகளில் பணி புரியும் 15,000 தொழிலாளர் மற்றும் அலுவலர்களுக்கு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர், ஜெ.ஜெயலலிதா அவர்கள் இந்த ஆண்டிற்கான போனஸ் தொகையை அறிவித்து ஆணையிட்டுள்ளார்.

கடந்த ஆண்டைப் போலவே போனஸ் பெறுவதற்குத் தகுதி பெறாத புதிதாக அமைக்கப்பட்டு செயல்பட்டு வரும் 3 கூட்டுறவு சர்க்கரை ஆலைகளை தவிர்த்து மற்ற அனைத்து சர்க்கரை ஆலைகளிலும் பணிபுரியும் ஊழியர்களுக்கு 20 சதவிகிதம் போனஸ் வழங்கப்படும். போனஸ் விடுமுறைக் காலத்திற்குள் உள்ள 3 ஆலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் குறைந்தபட்ச போனஸ் தொகையாக 8.33 சதவிகிதம் வழங்கப்படும் என அறிவித்துள்ளார். புதிய ஆலைகள் உட்பட 15 சர்க்கரை ஆலைகளில் பணி புரியும் நிரந்தரப் பணியாளர்களுக்கு 500 ரூபாய் வீதமும், தினக்கூலியாகப் பணியாற்றுபவர்களுக்கு 300 ரூபாய் வீதமும் கருணைத் தொகை வழங்கவும் ஆணையிட்டுள்ளார்.

போனஸ் சட்டத்தின்படி போனஸ் பெற வாய்ப்பு இல்லாத அலுவலர்களுக்கும், ஊழியர்களுக்கும் கருணைத் தொகையாக 2,500 ரூபாய் வழங்கப்படும்.

உயர்த்தப்பட்ட போனஸ் உச்ச வரம்புகளின்படி 1993-94 ஆம் ஆண்டிற்கான போனஸ் தொகை கணக்கிடப்பட்டு நிலுவைத் தொகையும் வழங்கப்படும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார்.

தமிழ்நாட்டில் உள்ள கூட்டுறவு மற்றும் பொதுத் துறையில் உள்ள சர்க்கரை ஆலைகளில் பணிபுரியும் 15,000 ஊழியர்கள் மற்றும் அலுவலர்களுக்குச் சுமார் 10 கோடி ரூபாய் அளவிலான போனஸ் தொகையை வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

பொறுமை என்னும் செடி கசப்பானதுதான். ஆனால் அதன் பழங்களோ இனிப்பானவை!

—ஜெர்மானியப் பழமொழி

உன்னைத் தாழ்ந்தவனாக எண்ண வைப்பதில், உன்னுடைய ஒப்புதலின்றி யாரும் வெற்றி பெற முடியாது.

—எலினார் ரூஸ்வெல்ட்

பணிதல் என்னும் பண்பு அறியாதவனுக்கு, அதிகாரத்துடன் ஆணையிட உரிமை கிடையாது.

—பிலிப்பைன்ஸ் பழமொழி

மின் வாரிய ஊழியர்களுக்கு போனஸ்

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் ஒரு இலட்சம் தொழிலாளர்கள் மற்றும் அலுவலர்களுக்கு, இந்த ஆண்டிற்கான போனஸ் தொகையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அறிவித்துள்ளார்.

போனஸ் சட்டத்தின்படி, போனஸ் பெறத் தகுதி உள்ள அனைவருக்கும் 8.33 சதவிகிதம் போனஸ் தொகையும், 8.67 சதவிகிதம் கருணைத் தொகையாகவும் வழங்கப்படும். குறைந்தபட்சம் கருணைத் தொகை 1,050 ரூபாயாக இருக்கும்படி பார்த்துக்கொள்ளப்படும்.

போனஸ் சட்டத்தின்படி, போனஸ் பெறுவதற்கு வாய்ப்பு அற்ற தமிழ்நாடு மின்சார வாரியத்தின் ஊழியர்கள் மற்றும் அலுவலர்களில் மாதம் 6,000 ரூபாய்க்குள் மாத ஊதியம் பெறும் ஊழியர்களுக்குக் கருணைத் தொகையாக 2,500 ரூபாய் வழங்கப்படும். மாதம் 6,000 ரூபாய்க்கும் மேலாக ஊதியம் பெறும் இதர அலுவலர்களுக்குக் கருணைத் தொகையாக 1,500 ரூபாயாக வழங்கப்படும்.

இவ்வாறு, அனைத்துத் தரப்பினருக்கும் இந்த ஆண்டு போனஸ் வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார். இவ்வாறு மாண்புமிகு தமிழக முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட போனஸ் மற்றும் கருணைத் தொகையான 28 கோடி ரூபாய் தமிழ்நாடு மின்சார வாரிய ஊழியர்களுக்கு விரைவில் பட்டுவாடா செய்யப்படும்.

வனக்கழக ஊழியர்களுக்கு போனஸ்

தமிழ்நாடு வனத்துறையின் கீழ் நாகர்கோவிலில் அரசு ரப்பர் கழகம், குன்னூரில் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகம் மற்றும் திருச்சியில் தமிழ்நாடு வனத்தோட்டக் கழகமும் செயல்பட்டு வருகின்றன.

இம்மூன்று அரசுக் கழகங்களின் 16,836 பணியாளர்களும், தொழிலாளர்களும் பணியாற்றி வருகிறார்கள். இவர்களின் செயற்பாடுகளை உன்னிப்பாகக் கவனித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அரசு, ரப்பர் கழகம் மற்றும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகங்களின் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 8.33 சதவிகிதம் போனஸ் மற்றும் தலா ரூ.1,075 கருணைத் தொகையாகவும், தமிழ்நாடு வனத் தோட்டக் கழகப் பணியாளர்கள் மற்றும் தொழிலாளர்களுக்கு 8.33 சதவிகிதம் போனஸ் மற்றும் 8.67 சதவிகிதம் கருணைத் தொகையும் வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்.

இதன் மூலம், மேற்சொன்ன மூன்று கழகங்களுக்கும் இரண்டு கோடியே முப்பத்திரண்டு இலட்சத்து எண்பத்தி ஓராயிரம் ரூபாய் போனஸ் மற்றும் கருணைத் தொகையாக வழங்கப்படுகிறது. இது சென்ற ஆண்டை விட ரூபாய் 31.73 இலட்சம் அதிகமாகும்.

இக்கழகங்களுடைய வரலாற்றில் போராட்டமோ, கதவடைப்போ, பேச்சு வார்த்தையோ நடைபெறாமல் தாயுள்ளம் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மேற்கண்டபடி போனசும், கருணைத்தொகையும் வழங்குவதன் மூலம் பணியாளர்கள் தொழிலாளர்களின் குடும்பங்களின் ஒளிவிளக்கை ஏற்றி வைத்துள்ளார்.

சென்னை ஔவை சண்முகம் சாலை, அனைத்திந்திய அண்ணா தி.மு.கழகத் தலைமையகத்தில் அமைந்துள்ள, பாரத ரத்னா அமரர் டாக்டர் எம்ஜி-ஆர். அவர்களின் திருவுருவச் சிலைக்கு,மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி ஜெ.ஜெயலலிதா அவர்கள், 17.10.95 அன்று, மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் உடன் இருந்தனர்.

படமும் செய்தியும்

1100 ஜோடி திருமண விழாவில், ஆயிரங்காலத்துப் பயிராய் வாழ்க! என்று ஆசி வழங்குகிறார் மாண்புமிகு முதல்வர் அவர்கள் (26.10.95, சிதம்பரம்)

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் பிறந்த நாளையொட்டி, சென்னை அண்ணாசாலை நந்தனம் சந்திப்பில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சிலைக்கு,மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். (30.10.95, சென்னை)

தமிழ்நாடு அரசின் சார்பில் திருச்சியில் 15.10.95 அன்று நடைபெற்ற காயிதேமில்லத் முகமது இஸ்மாயில் சாகிப் பிறந்தநாள் நூற்றாண்டு விழாவில், காயிதேமில்லத் திருவுருவப் படத்தை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் அவர்கள் திறந்து வைத்தார். மாண்புமிகு கல்வி அமைச்சர் திரு. க. பொன்னுசாமி, மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் திரு. எஸ். நாகூர் மீரான், இந்திய யூனியன் முஸ்லீம் லீக் அனைத்திந்தியப் பொதுச் செயலாளர் திரு. ஏ.கே.ஏ. அப்துல்சமது, சட்டமன்ற உறுப்பினர்கள் திருமதி. ஜீனத் சர்புதீன், திரு. டி. ரத்தினவேல், டாக்டர் ச. ஆரோக்கியசாமி, செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு. தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப. ஆகியோர் உடன் இருந்தனர்.

மாண்புமிகு நிதி அமைச்சர் டாக்டர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் உலகச்சிக்கன விழாவில் சிறுசேமிப்புத் திட்ட முதலீட்டாளர்களுக்குப் பரிசுகள் வழங்கினார்கள். மாண்புமிகு அரசுத்தலைமைக் கொறடா திரு. எஸ். ஜெயக்குமார் மாநிலத்தேசிய சேமிப்பு ஆலோசனைக் குழு துணைத் தலைவர் டாக்டர் ஜெ. பரந்தாமன் ஆகியோர் உடனுள்ளார்கள். (30.10.95 சென்னை)

தமிழ்நாடு அரசின் சார்பில், மறைந்த பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களை நினைவுகூரும் வகையில் 'தேசிய மறு சமர்ப்பண நாள்' நிகழ்ச்சி இராணி மேரிக் கல்லூரியில், மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு. மு. தென்னவன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. டி.எம். செல்வகணபதி அவர்கள் பேருரையாற்றினார்கள். மயிலாப்பூர் சட்டமன்ற உறுப்பினர் கராத்தே திரு. வெ. பாலசுப்பிரமணியம், திரு. தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, டாக்டர் திருமதி நிர்மலா தியாகராஜன், முதல்வர், இராணி மேரிக் கல்லூரி ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். (30.10.95 சென்னை)

"பசும்பொன் முத்துராமலிங்கத்தேவரின் இலட்சியத்தை நிறைவேற்றி வருபவர் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி"

-அமைச்சர்கள் புகழாரம்

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் பிறந்தநாள் விழா **30.10.95** அன்று பசும்பொன் கிராமத்தில் கொண்டாடப் பட்டது. இவ்விழாவிற்கு, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சான்வத்ராம், இ.ஆ.ப., அவர்கள் வரவேற்புரையாற்றினார்.

மாண்புமிகு செய்தி-விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"வெள்ளையர்களை எதிர்த்து, சுதந்திரம் இந்த மண்ணுக்கும், மக்களுக்கும் கிடைக்கவேண்டும் என்பதற்காகத் தன் உயிரை அர்ப்பணித்த மாவீரன் முத்துராமலிங்கத் தேவர். மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், நாட்டிற்காகப் பாடுபட்டவர்களின் பெருமையை எடுத்துச் சொல்வதற்காக இந்த விழாவை நடத்துகிறார். மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், இந்த நினைவகத்திற்கு வந்து சென்ற பிறகு ரூபாய் பத்து லட்சம் செலவில் புதுப்பிக்கப் பட்டு அழகு படுத்தப் பட்டுள்ளது. காலங்கள், யுகங்கள் மாறினாலும், மக்கள் மனதில் நிலைத்து நிற்கும் மனிதப் புனிதர் முத்துராமலிங்கத் தேவர் ஆவார்".

மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு அ.மா. பரமசிவன் அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"தேவருடைய புகழ் பரவும் வகையில் மறைந்த முதல்வர் எம்.ஜி.ஆர். அவர்கள் அன்னாருக்கு நினைவிடம் கட்டி பெருமைப்படுத்தினார். அவரது வழியில் வந்த மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், தேவர் பெருமகனுக்குச் சென்னையில் மிகவும் பிரம்மாண்டமான அளவில் சிலை அமைத்துப் பெருமைபடுத்தி உள்ளார். தேவர் பெருமகன் எந்த லட்சியத்திற்காகப் பாடுபட்டு வந்தாரோ, அந்த லட்சியத்தோடு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பணியாற்றி வருகிறார். தேசியத்தையும் தெய்வீகத்தையும் தேவர் பெருமகன் இரு கண்களாகப் போற்றி வந்தார். அவர் தேசியத் தலைவராகவும், சாதி மதப் பேதமின்றி அரிசன மற்றும் முஸ்லீம் மக்களை அரவணைத்து அனைவரின் நலனுக்காகப் பாடுபட்டவர். தொகுதிக்குச் செல்லாமலேயே ஒரே நேரத்தில் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரே தலைவர் முத்துராமலிங்கத் தேவர்தான். ஆதி திராவிட மக்களுக்காக 33 கிராமங்களை அவர் தானமாக வழங்கினார்".

மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர்
திரு வி. சத்தியமூர்த்தி அவர்கள் பேசும்போது குறிப்பிட்டதாவது:

"கடந்த ஆண்டு மாண்புமிகு டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், தேவருடைய நினைவிடம் வந்து சிறப்புற அழகு படுத்தினார். தேவரை அன்று எதிர்த்தவர்கள் இன்று மாண்புமிகு முதல்வர் அவர்களை எதிர்க்கிறார்கள். தேவருடைய அரசியல் வாழ்க்கை சுயநலம் அற்றது. அதுபோல் எதிர்கால ஆதாயம் தேடாமல், மாண்புமிகு முதல்வர் அவர்கள், தேவருக்குப் புகழாரம் சூட்டி வருகிறார். 'தேவர் இனம்' என அறிவிக்க வேண்டும் என்று முக்குல மக்களின் நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று, மாண்புமிகு முதல்வர் அவர்கள் முக்குலத்தைச் சேர்ந்த கள்ளர், மறவர், அகமுடையாரை ஒரே இனமாகத் தேவரினம் என அறிவித்துள்ளார். இதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும். ஜாதி, மத, பேதம் இல்லாமல் மாண்புமிகு முதல்வர் நல்லாட்சி நடத்தி வருகிறார். அவருடைய வழியில் தேவருடைய புகழ் காக்க நாம் அனைவரும் பாடுபடுவோம்".

இவ்விழாவில், நாடாளுமன்ற உறுப்பினர் திரு சீனிவாசன், சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. சுந்தரராஜன், திருமதி பாண்டியம்மாள், திருமதி மணிமேகலை, கோவில் வாரியத் தலைவர் திரு. ராஜேந்திரன், உதவி ஆட்சியர் திரு ராஜ்குமார், வட்டாட்சியர் திரு. லெட்சுமணப் பெருமாள், ஆகியோர் கலந்துகொண்டனர். விழா முடிவில், செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. நல்லதம்பி அவர்கள் நன்றி கூறினார்.

வடஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டம் பாதிக்கப்பட்ட விவசாய நிலங்களுக்கு நிலவரி ரத்து

வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில், தோல் பதனிடும் தொழிற்சாலைக் கழிவுகளால் பாதிக்கப்பட்டுள்ள விவசாய நிலங்களுக்குரிய நில வரி அனைத்தும் ரத்து செய்யப்படும் என்று கடந்த ஆண்டு 10.9.1994 அன்று வேலூரில் நடைபெற்ற அரசு விழா ஒன்றில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏற்கனவே அறிவித்திருந்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து மாவட்ட நிர்வாகம் தேவையான ஆய்வுகளை மேற்கொண்டு தனது கருத்துருவை அரசுக்கு அனுப்பி வைத்தது. அந்தச் செயற்குறிப்பை ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், வட ஆர்க்காடு அம்பேத்கர் மாவட்டத்தில் தொழிற்சாலைக் கழிவுகளால் பாதிப்புக்குள்ளாகி, விவசாயம் செய்ய முடியாத நிலைக்குள்ளான விவசாய நிலங்களுக்கு பசலிகள் 1388, 1389, 1391, 1392, 1393, 1396 மற்றும் 1397 ஆகியவற்றுக்கான நில வரியான 1,48,320/- ரூபாயைத் தள்ளுபடி செய்து ஆணை பிறப்பித்துள்ளார். அந்தப் பகுதி வாழ் விவசாயப் பெருங்குடி மக்களின் நீண்ட நாள் கோரிக்கை இதன் மூலம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

● நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

அபூர்வப் பஞ்சலோகச் சிலைகள் மீட்பு

காவல் துறைக்கு முதல்வர் பரிசு, பாராட்டு

விலைமதிக்கவொண்ணா அபூர்வமான ஐந்து பஞ்சலோகச் சிலைகளைக் களவாடப்பட்ட சில மாதங்களிலேயே கண்டுபிடித்துத் தமிழக காவல்துறை சாதனை படைத்துள்ளது. தமிழக முதலமைச்சர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் இதனைப் பாராட்டி, சிலைகளை மீட்ட காவல்துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் ரொக்கப் பரிசை வழங்கினார்.

பொருளாதாரக் குற்றத் தடுப்புப் பிரிவின் காவல் துறைக் கூடுதல் இயக்குநர் மற்றும் காவல் குழுவினர் தங்களுக்குக் கிடைத்த நுண்தகவல் ஒன்றின் அடிப்படையில், தென் ஆர்க்காடு வள்ளலார் மாவட்டத்தில் சோதனை ஒன்றினை மேற்கொண்டு, விருத்தாச்சலம் புகைப்பட்டிக் கிராமத்தைச் சேர்ந்த உத்திரக் கவுண்டர் என்பவரைக் கைது செய்தார்கள். இதனைத் தொடர்ந்து மேற்கொண்ட புலன் விசாரணையின் விளைவாக, ஆரம்பச்சோழர் காலத்தை (12-வது மற்றும் 13-வது

★ ஒருவரின் கடமை மற்றவரின் மனதை நிறைவு செய்வதாக இருந்தால், அதுவே அதற்குக் கிடைத்த பரிசாகும்.

\- சியார்ஜ் எலியட்

★ உறுதியும் அன்பும் நம்மிடம் தோன்றும் பெரிய கவலைச் சுமையை நீக்குவன.

\-எமர்சன்

★ உள்ளமும் உடலும் தூய்மையாக இருக்கும் அளவைப் பொறுத்துதான், உடல் ஆரோக்கியமும் மனவளமும் அதிகரிக்கிறது.

நூற்றாண்டு) சேர்ந்த ஸ்கந்தர் சிலை ஒன்று கைப்பற்றப்பட்டது. பின்னர் மேற்கொள்ளப் பட்ட தொடர் நடவடிக்கைகள், சோழர் காலத்தைச் சேர்ந்த அதாவது 12-வது மற்றும் 13-வது நூற்றாண்டைச் சேர்ந்த

சந்திரசேகரர் சிலை
யோகசக்தி அம்மன் சிலை
தனி அம்மன் சிலை
சிவகாமி அம்மன் சிலை
பாலஸ்கந்தர் சிலை

\- ஆகிய ஐந்து அபூர்வமான பஞ்சலோக சிலைகளைக் கைப்பற்ற வழிவகுத்தன.

பழமை அழகோடு பண்பாட்டுச் சின்னமாய் மிளிரும் இந்தச்சிலைகளில் தனி அம்மன் சிலை மட்டும் ஏறத்தாழ 3 அடி உயரம் உள்ளது. அடுத்துச்சந்திரசேகரர் சிலை சுமார் இரண்டரை அடி உயரமும், யோக சக்தி அம்மன் சிலை சுமார் ஒன்றரை அடி உயரமும், பாலஸ்கந்தர் சிலை முக்கால் அடி உயரமும் கொண்டுள்ளது.

புலன் விசாரணையில், கைப்பற்றப்பட்ட சிலைகள் விருத்தாச்சலத்தை அடுத்த நல்லூர் கிராமம் வில்வனேஸ்வரர் கோவிலைச் சேர்ந்தவை என்றும், 5.6.1995 அன்று களவாடப்பட்டவை என்றும் தெரியவந்தது.

காவல் துறைக் கூடுதல் இயக்குநர், திரு. எஸ்.ராஜகோபாலன் அவர்களின் தலைமையில் சிலைத் தடுப்புக் காவல் துறைப் பிரிவினரால் மீட்கப்பட்ட வெண்கலச் சிலைகளை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தலைமைச் செயலகத்தில் பார்வையிட்டார். திருட்டுப் போன அந்தச் சிலைகளை மீட்கத் திறம்படப் பணியாற்றிய காவல் துறை அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்டார்.

விலை மதிக்கமுடியாத பஞ்சலோகச் சிலைகளை, களவாடப்பட்ட சில மாதங்களிலேயே கண்டுபிடித்து மீட்டதற்காகக் காவல் துறை இயக்குநர் திரு. வால்டர் தேவாரம் மற்றும் காவல் துறையின் பொருளாதாரக் குற்றப் பிரிவுக் கூடுதல் இயக்குநர் திரு எஸ்ராஜகோபாலன், சிலைத் திருட்டுத் தடுப்புப் பிரிவு காவல்துறைக் கண்காணிப்பாளர் திரு லட்சுமணன், துணைக் கண்காணிப்பாளர் திரு ஆறுமுகம் மற்றும் தொடர்புடைய காவல்துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள் ஆகியோருக்குத் தனது பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்த நல்ல பணியில் ஈடுபட்டு, சிலைகளை மீட்ட கீழ்க்கண்ட காவல் துறை அலுவலர்கள் மற்றும் காவலர்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.5,000 ரொக்கப் பரிசு வழங்கினார்.

1. திரு காசிநாதன், ஆய்வாளர், 2. திரு ரங்காச்சாரி, உதவி ஆய்வாளர், 3. திரு டி.கலியபெருமாள், முதல் நிலைக் காவலர், 4. திரு ஏ.சேகர், முதல் நிலைக் காவலர், 5. திரு வி.குமார், காவலர், 6. திரு ஈ.ரவி சங்கர், காவலர், 7. திரு டி.காமராஜ், காவலர், 8. திரு எஸ்.ராஜேந்திரன், காவலர், 9. திரு வீரபரஞ்சோதி, காவலர், 10. திரு எம்.கிருஷ்ணமூர்த்தி, காவலர்

இந்த நிகழ்ச்சியின் போது தலைமைச் செயலாளர் திரு என்.ஹரிபாஸ்கர் மற்றும் உள்துறைச் செயலாளர் திரு ஆர்.வரதராஜுலு ஆகியோர் உடனிருந்தார்கள்.

மக்களுக்குச் சீரிய சேவையே முதல் நோக்கம்

காவல் துறையை மேம்படுத்திட மாண்புமிகு முதல்வர் பல்வேறு ஆணைகள்

காவல்துறையின் முதல் நோக்கமான, மக்களுக்குச் சீரிய சேவை செய்வதை உறுதிப்படுத்தும் வகையில், உலகின் தலைசிறந்த காவல்பிரிவுகளில் ஒன்றான தமிழகக் காவல்துறையை, வளர்ந்துவரும் கம்ப்யூட்டர் யுகத்தின் வேகத்திற்கு ஈடுகொடுக்கும் வகையில் நவீனப்படுத்தவும், காவல்துறையின் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் காவலர்களிடையே பணிச்சோர்வை நீக்கி, பணி ஆர்வத்தை அதிகப்படுத்தவும் பல்வேறு திட்டங்கள் வகுத்து ஓய்வின்றிப் பணியாற்றி வரும் முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், காவல்துறையை மேம்படுத்திட, கடந்த திங்களில் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகளும், பிறப்பித்த ஆணைகளும் வருமாறு:

குற்ற நிகழ்வைத் தடுக்க புள்ளி விவரம் அளிக்கும் குற்றவியல் ஆவணப் பிரிவு

குற்ற நிகழ்வைத் தடுத்து நிறுத்துவதற்கு உதவுகின்ற முறையிலும், குற்ற நிகழ்வுகள் தொடர்பான புள்ளி விவரங்கள் (Statistics) நாடு முழுவதும் (National Level) மாநில அளவிலும் (State Level) மற்றும் மாவட்டங்கள் அளவிலும் (District Level) ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்றும், மாநில அளவில் இயங்குகின்ற மாநிலக் குற்றவியல் ஆவணப் பிரிவு (District Crime Record Bureau) காவல்துறைத் துணைத் தலைவர் ஒருவரின் (DIG of Police) தலைமையில் இயங்க வேண்டும் என்றும், தேசியக் காவல் குழு (National Police Commission) தனது பரிந்துரையில் குறிப்பிட்டுள்ளது.

அந்தப் பரிந்துரையின் அடிப்படையில் தமிழ்நாட்டிலும் மாநிலக் குற்றவியல் ஆவணங்கள் பிரிவு (State Crime Records Bureau) ஒன்றும் காவல் மாவட்டங்கள் அனைத்திலும், மாவட்டக் குற்றவியல் ஆவணப் பிரிவுகளும் (District Crime Records Bureau) அமைத்து அவற்றைத் தேசிய அளவிலும், மாநில அளவிலும், மாவட்டங்களுக்கு இடையேயும் ஒருங்கிணைக்க கருத்துரு ஒன்றினை அரசுக்குக் காவல்துறை இயக்குநர் வழங்கியிருந்தார். காவல் துறை இயக்குநரின் இந்தப் பரிந்துரைகளை முற்றிலுமாக ஏற்றுக்கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மாநில அளவிலும், மாவட்ட அளவிலும், மாநகர அளவிலும் குற்றவியல் ஆவணப் பிரிவுகள் உடனடியாக அமைக்கப்பட வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளார். இதன்படி,

அ. காவல் கணினிப் பிரிவு (Computer Wing)

ஆ. கைரேகைப் பிரிவு (Finger Print Bureau)

இ. குற்றப் புலன் ஆய்வுப் பிரிவு மற்றும் குற்ற நிகழ்வு முறைப் பிரிவு(Modus Operandi Bureau, Criminal Investigation Department)

ஈ. புள்ளியல் பிரிவு (Stastical Cell)

இவற்றில் குற்றப் புலன் ஆய்வுப் பிரிவு, குற்ற நிகழ்வு முறை பிரிவு ஆகியவை குற்றப் பிரிவு காவல்துறைத் தலைவரின் நிர்வாகத்தின் (Inspector General of Police-Crime) கீழும், புள்ளியல் பிரிவு காவல்துறை இயக்குநரின் நிர்வாகத்தின் கீழும், மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களிலுள்ள குற்றவியல் ஆவணங்கள் பிரிவுகள் அந்தந்த மாநகரக் காவல்துறை ஆணையாளர் மற்றும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் (Commissioner of Police & Superintendent of Police) நிர்வாகத்தின் கீழும் இயங்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி அமைக்கப்படவிருக்கும் மாநிலக் குற்றவியல் ஆவணங்கள் பிரிவு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளும்:

1. தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் (National and International) இயங்கி வருகின்ற குற்றவாளி மற்றும் குற்றம் இழைக்கும் நேர்வுகள் ஆகியவற்றைப் பற்றிய அனைத்து விவரங்களைத் திரட்டி குற்றப்புலன் ஆய்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அந்தத் தகவல்களைக் கொடுத்து உதவுதல்.

2. மாநிலங்களுக்கிடையேயான மற்றும் சர்வதேச அளவில் இயங்கி வருகின்ற இது போன்ற அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு உதவி செய்தல்

3. மாநில அளவில் குற்ற நிகழ்வுகளைப் பற்றிப் புள்ளி விவரங்களைச் சேகரித்து ஆய்வு செய்தல்.

4. தண்டனை முடிவு பெற்றக் குற்றவாளிகளுடைய மறுவாழ்வுக்காக, அவர்களின் தண்டனை முடிவுறுவதற்கு முன்பு விடுதலை செய்தல், ஜாமீனில் விடுதலை செய்தல் போன்ற நிகழ்வுகளில், சிறைத் துறையினர் செயல்படத் தக்க விவரங்களை அளித்தல்

5. மாவட்ட அளவில், இயங்கும் குற்றவியல், ஆவணங்கள் பிரிவுகளை ஒருங்கிணைத்து அவற்றை திறம்படி பணிபுரியச் செய்தல்

6. அப்பிரிவுகளில் பணிபுரிபவர்களுக்குத் தக்க பயிற்சியினை அளித்தல்

எனது பேச்சுக்களுக்காக நான் பல முறை வருத்தப்பட்டதுண்டு. ஆனால், மௌனம் காத்தமைக்காக என்றைக்குமே வருந்தியதில்லை.

—பப்லியஸ் சைரஸ்

7. குற்றவியல் ஆவணங்களைச் சேகரித்து, அவற்றை ஆய்வு செய்தல்

போன்ற பணிகளைப் புதிதாக அமைக்கப் படவிருக்கும் மாநிலக் குற்றவியல் ஆவணங்கள் பிரிவு மேற்கொள்ளும்.

சிறிய தவறுக்குப் பெற்ற தண்டனை முழுமையாக ரத்து

காவல்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் பணியில் சேர்ந்த புதிதில் அனுபவமின்மை காரணமாக, சில சிறிய தவறுகளுக்காகப் பெற்ற தண்டனைகளை முழுமையாக ரத்து செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த இந்தத் தீபாவளி பரிசுத் திட்டத்தின்படி 1985-ஆம் ஆண்டிலிருந்து 1995-ஆம் ஆண்டு வரை, அதாவது கடந்த 10 ஆண்டுக் காலகட்டத்தில் எந்தவிதமான தண்டனைகளுக்கும் உள்ளாகாமல், நன்முறையில் செயலாற்றியவர்களுக்கு 1985 ஆம் ஆண்டுக்கு முன்பாக வழங்கப்பட்ட சிறு தண்டனைகளான, கண்டனக் குறிப்புகள் (Censure) கரும்புள்ளிக்ள் (Black Marks) மற்றும் கண்டனக் கடிதங்கள் (Reprimanding) போன்றவைகள் ஒட்டுமொத்தமாக நீக்கப்படும்.

புதிதாகப் பணியில் சேர்ந்திருந்த சூழ்நிலையில், அனுபவமின்மை காரணமாக ஏற்பட்ட சிறிய தவறுகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளை, அவர்கள் பணியில் சேர்ந்த பின்னர் 10 ஆண்டுகளில் புரிந்த சிறப்பான பணியைப் பாராட்டும் வண்ணம், அந்தச் சிறு தவறுகளுக்குண்டான தண்டனைகளை நீக்கி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பிறப்பித்துள்ள இந்த ஆணை, காவல்துறையில் பணிபுரியும் பல்வேறு அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் மேலும் பணி ஆர்வத்தை உயர்த்துவதற்கும், அவர்களின் பதவி உயர்வுகளுக்கும் வழிவகுக்கும்.

காவல்துறையின் பல மட்டங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் காவலர்கள், காவல் பணியில் உள்ள பணியின் கடினமான தன்மையைப் புரிந்து கொள்வதற்கு முன்பாக தாங்கள் பெற்றுவிட்ட தண்டனைகள், தற்போது தங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்போதும், விருதுகள் போன்றவை வழங்கப்படும் போதும் ஒரு நிரந்தர இடையூறாக அமைந்து விட்டதைச் சுட்டிக்காட்டி, இந்தக் குறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்துடன் தீர்த்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தனர். பல அலுவலர்கள் மற்றும் காவலர்களின் 10 ஆண்டுப் பணிகளின் ஆவணங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அந்த அலுவலர்கள் மீது 1985-ஆம் ஆண்டுக்கு முன்பு மிகச் சிறிய தவறுகளுக்காக வழங்கப்பட்ட தண்டனைகள் அவர்களது எதிர்காலத்தைப் பாதிப்பதை அறிந்து, அவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, இதுவரை எந்த ஒரு அரசாங்கத்தாலும் பிறப்பிக்கப்படாத இந்த ஆணையை வழங்கியுள்ளார்.

1985-ஆம் ஆண்டுக்கு முன்பு பெற்ற சிறிய தண்டனைகள் தங்களது எதிர்காலத்தைப் பாதிக்கும் என்று தெரியாமல் அனுபவமின்மை காரணமாக மேல்முறையீடு செய்யாமல் விட்டுவிட்ட பல நல்ல திறமையான அலுவலர்களின்

'கட்டபொம்மன்'; 'சிதம்பரனார்' சிறப்பு நீர்நிலை மேம்பாட்டுத் திட்டம்: ரூ. 42 கோடிக்கு மேம்பாடு

திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஏறத்தாழ 120 கிராமங்கள் பயன்பெறும் வகையிலான, 42 கோடி ரூபாய் செலவிலான டேனிடா (DANIDA) உதவி பெறும் சிறப்பு நீர்நிலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஒப்புதலளித்துள்ளார்.

விவசாயத்திற்காக நீர்நிலைகளைக் கண்டறியவும், அவற்றைப் பாதுகாக்கவும், முறையாகப் பயன்படுத்தப் படவும் உதவுகின்ற இத்திட்டம் இந்திய அரசுக்கும், டென்மார்க் நாட்டிற்கும் இடையிலான ஒப்பந்தத்தின் மூலம் செயலாக்கம் பெற்றது.

திருநெல்வேலியில் இத் திட்டத்தின் முதற்கட்டம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளதால், இரண்டாவது கட்டப் பணிக்கும் டென்மார்க் நாடு, தமிழக அரசுக்கு நிதியளிக்க முன் வந்துள்ளது. இதன்படி, டென்மார்க் அரசு வழங்கியுள்ள 32 கோடி ரூபாய் நிதி உதவியுடன், தமிழ்நாடு அரசு வழங்குகின்ற 10 கோடி ரூபாய் நிதியும் சேர்த்து ஏழு ஆண்டுகளில் நிறைவேற்றவுள்ள 42 கோடி ரூபாய் செலவிலான இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஒப்புதலளித்து ஆணையிட்டுள்ளார்.

ஆ. கைரேகைப் பிரிவு (Finger Print Bureau)

இ. குற்றப் புலன் ஆய்வுப் பிரிவு மற்றும் குற்ற நிகழ்வு முறைப் பிரிவு(Modus Operandi Bureau, Criminal Investigation Department)

ஈ. புள்ளியல் பிரிவு (Stastical Cell)

இவற்றில் குற்றப் புலன் ஆய்வுப் பிரிவு, குற்ற நிகழ்வு முறை பிரிவு ஆகியவை குற்றப் பிரிவு காவல்துறைத் தலைவரின் நிர்வாகத்தின் (Inspector General of Police-Crime) கீழும், புள்ளியல் பிரிவு காவல்துறை இயக்குநரின் நிர்வாகத்தின் கீழும், மாவட்டங்கள் மற்றும் மாநகரங்களிலுள்ள குற்றவியல் ஆவணங்கள் பிரிவுகள் அந்தந்த மாநகரக் காவல்துறை ஆணையாளர் மற்றும் மாவட்டக் காவல் துறைக் கண்காணிப்பாளர்கள் (Commissioner of Police & Superintendent of Police) நிர்வாகத்தின் கீழும் இயங்கும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் உத்தரவின்படி அமைக்கப்படவிருக்கும் மாநிலக் குற்றவியல் ஆவணங்கள் பிரிவு கீழ்க்கண்ட பணிகளை மேற்கொள்ளும்:

1. தேசிய அளவிலும் சர்வதேச அளவிலும் (National and International) இயங்கி வருகின்ற குற்றவாளி மற்றும் குற்றம் இழைக்கும் நேர்வுகள் ஆகியவற்றைப் பற்றிய அனைத்து விவரங்களைத் திரட்டி குற்றப்புலன் ஆய்வில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு அந்தத் தகவல்களைக் கொடுத்து உதவுதல்.

2. மாநிலங்களுக்கிடையேயான மற்றும் சர்வதேச அளவில் இயங்கி வருகின்ற இது போன்ற அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பதற்கு உதவி செய்தல்

3. மாநில அளவில் குற்ற நிகழ்வுகளைப் பற்றிப் புள்ளி விவரங்களைச் சேகரித்து ஆய்வு செய்தல்.

4. தண்டனை முடிவு பெற்றக் குற்றவாளிகளுடைய மறுவாழ்வுக்காக, அவர்களின் தண்டனை முடிவுறுவதற்கு முன்பு விடுதலை செய்தல், ஜாமீனில் விடுதலை செய்தல் போன்ற நிகழ்வுகளில், சிறைத் துறையினர் செயல்படத் தக்க விவரங்களை அளித்தல்

5. மாவட்ட அளவில், இயங்கும் குற்றவியல், ஆவணங்கள் பிரிவுகளை ஒருங்கிணைத்து அவற்றை திறம்படி பணிபுரியச் செய்தல்

6. அப்பிரிவுகளில் பணிபுரிபவர்களுக்குத் தக்க பயிற்சியினை அளித்தல்

எனது பேச்சுக்களுக்காக நான் பல முறை வருத்தப்பட்டதுண்டு. ஆனால், மௌனம் காத்தமைக்காக என்றைக்குமே வருந்தியதில்லை.

—பப்லியஸ் சைரஸ்

7. குற்றவியல் ஆவணங்களைச் சேகரித்து, அவற்றை ஆய்வு செய்தல்

போன்ற பணிகளைப் புதிதாக அமைக்கப் படவிருக்கும் மாநிலக் குற்றவியல் ஆவணங்கள் பிரிவு மேற்கொள்ளும்.

சிறிய தவறுக்குப் பெற்ற தண்டனை முழுமையாக ரத்து

காவல்துறையில் பணியாற்றும் அலுவலர்கள் மற்றும் காவலர்கள் பணியில் சேர்ந்த புதிதில் அனுபவமின்மை காரணமாக, சில சிறிய தவறுகளுக்காகப் பெற்ற தண்டனைகளை முழுமையாக ரத்து செய்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்த இந்தத் தீபாவளி பரிசுத் திட்டத்தின்படி 1985-ஆம் ஆண்டிலிருந்து 1995-ஆம் ஆண்டு வரை, அதாவது கடந்த 10 ஆண்டுக் காலகட்டத்தில் எந்தவிதமான தண்டனைகளுக்கும் உள்ளாகாமல், நன்முறையில் செயலாற்றியவர்களுக்கு 1985 ஆம் ஆண்டுக்கு முன்பாக வழங்கப்பட்ட சிறு தண்டனைகளான, கண்டனக் குறிப்புகள் (Censure) கரும்புள்ளிக்கள் (Black Marks) மற்றும் கண்டனக் கடிதங்கள் (Reprimanding) போன்றவைகள் ஒட்டுமொத்தமாக நீக்கப்படும்.

புதிதாகப் பணியில் சேர்ந்திருந்த சூழ்நிலையில், அனுபவமின்மை காரணமாக

‘கட்டபொம்மன்’; ‘சிதம்பரனார்’ சிறப்பு நீர்நிலை மேம்பாட்டுத் திட்டம்: ரூ. 42 கோடிக்கு மேம்பாடு

திருநெல்வேலி கட்டபொம்மன் மற்றும் சிதம்பரனார் மாவட்டங்களில் ஏறத்தாழ 120 கிராமங்கள் பயன்பெறும் வகையிலான, 42 கோடி ரூபாய் செலவிலான டேனிடா (DANIDA) உதவி பெறும் சிறப்பு நீர்நிலைகள் மேம்பாட்டுத் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஒப்புதலளித்துள்ளார்.

விவசாயத்திற்காக நீர்நிலைகளைக் கண்டறியவும், அவற்றைப் பாதுகாக்கவும், முறையாகப் பயன்படுத்தப் படவும் உதவுகின்ற இத்திட்டம் இந்திய அரசுக்கும், டென்மார்க் நாட்டிற்கும் இடையிலான ஒப்பந்தத்தின் மூலம் செயலாக்கம் பெற்றது.

திருநெல்வேலியில் இத் திட்டத்தின் முதற்கட்டம் வெற்றிகரமாக நிறைவேறியுள்ளதால், இரண்டாவது கட்டப் பணிக்கும் டென்மார்க் நாடு, தமிழக அரசுக்கு நிதியளிக்க முன் வந்துள்ளது. இதன்படி, டென்மார்க் அரசு வழங்கியுள்ள 32 கோடி ரூபாய் நிதி உதவியுடன், தமிழ்நாடு அரசு வழங்குகின்ற 10 கோடி ரூபாய் நிதியும் சேர்த்து ஏழு ஆண்டுகளில் நிறைவேற்றவுள்ள 42 கோடி ரூபாய் செலவிலான இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஒப்புதலளித்து ஆணையிட்டுள்ளார்.

ஏற்பட்ட சிறிய தவறுகளுக்கு வழங்கப்பட்ட தண்டனைகளை, அவர்கள் பணியில் சேர்ந்த பின்னர் 10 ஆண்டுகளில் புரிந்த சிறப்பான பணியைப் பாராட்டும் வண்ணம், அந்தச் சிறு தவறுகளுக்குண்டான தண்டனைகளை நீக்கி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பிறப்பித்துள்ள இந்த ஆணை, காவல்துறையில் பணிபுரியும் பல்வேறு அலுவலர்களுக்கும், காவலர்களுக்கும் மேலும் பணி ஆர்வத்தை உயர்த்துவதற்கும், அவர்களின் பதவி உயர்வுகளுக்கும் வழிவகுக்கும்.

காவல்துறையின் பல மட்டங்களில் பணிபுரியும் அலுவலர்கள் மற்றும் காவலர்கள், காவல் பணியில் உள்ள பணியின் கடினமான தன்மையைப் புரிந்து கொள்வதற்கு முன்பாக தாங்கள் பெற்றுவிட்ட தண்டனைகள், தற்போது தங்களுக்குப் பதவி உயர்வு கிடைக்கும்போதும், விருதுகள் போன்றவை வழங்கப்படும் போதும் ஒரு நிரந்தர இடையூறாக அமைந்துவிட்டதைச் சுட்டிக்காட்டி, இந்தக் குறையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தாயுள்ளத்துடன் தீர்த்து வைக்க வேண்டும் என்ற கோரிக்கையை வைத்திருந்தனர். பல அலுவலர்கள் மற்றும் காவலர்களின் 10 ஆண்டுப் பணிகளின் ஆவணங்களைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், அந்த அலுவலர்கள் மீது 1985-ஆம் ஆண்டுக்கு முன்பு மிகச் சிறிய தவறுகளுக்காக வழங்கப்பட்ட தண்டனைகள் அவர்களது எதிர்காலத்தைப் பாதிப்பதை அறிந்து, அவர்களது கோரிக்கையை ஏற்றுக்கொண்டு, இதுவரை எந்த ஒரு அரசாங்கத்தாலும் பிறப்பிக்கப்படாத இந்த ஆணையை வழங்கியுள்ளார்.

1985-ஆம் ஆண்டுக்கு முன்பு பெற்ற சிறிய தண்டனைகள் தங்களது எதிர்காலத்தைப் பாதிக்கும் என்று தெரியாமல் அனுபவமின்மை காரணமாக மேல்முறையீடு செய்யாமல் விட்டுவிட்ட பல நல்ல திறமையான அலுவலர்களின்

எதிர்காலப் பதவி உயர்வுக்கு இந்த ஆணை ஒரு வரப்பிரசாத மாக அமையும்.

மணியாச்சியில்
புதிய காவல் உட்கோட்டம்

சிதம்பரனார் மாவட்டம் மணியாச்சியில் ஒரு புதிய காவல் உட்கோட்டம் (Police Sub-Division) ஒன்று ஏற்படுத்த வேண்டுமென்று காவல்துறை இயக்குநர் அனுப்பிவைத்த செயற்குறிப்பினை ஏற்றுக் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மணியாச்சிப் பகுதியில் ஒரு புதிய உட்கோட்டத்தை ஏற் படுத்தி ஆணை பிறப்பித் துள்ளார். இதன்னால், அந்தப் பகுதியில் வாழும் மக்களுக்கு, காவல் துறையினரின் சேவை விரிந்து கிடைக்க இது வழி வகுக்கும்.

தற்போது தூத்துக்குடி காவல் உட்கோட்டத்திலுள்ள மணியாச்சி, நாரைக்கிணறு, ஒட்டப்பிடாரம் மற்றும் பசுவத்தர்னை ஆகிய காவல் நிலையமும், கோவில்பட்டி காவல் உட்கோட்டத்திலுள்ள கடம்பூர் காவல் நிலையமும் சேர்க்கப்பட்டு இந்தப் புதிய மணியாச்சி காவல் உட்கோட்டம் செயல்படும்.

கரியலூரில்
புதிய காவல் நிலையம்

கடந்த 23.8.1995 அன்று சென்னையில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில், நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் ஆகியோரின் மாநாட்டில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்டம் கல்ராயன் மலைப் பகுதி யிலுள்ள கரியலூர் என்ற இடத்தில் புதிய காவல் நிலையம் ஒன்று அமைக்கப்படும என்று அறிவித்திருந்தார்.

கல்ராயன் மலைப் பகுதியில் அமைந்துள்ள கரியலூர், விழுப்புரம் ராமசாமி படையாச்சியார் மாவட்டத் திற்கும், சேலம் மாவட்டத்திற்கு இடைப்பட்ட எல்லைப் பகுதி யில். அமைந்துள்ளது. இந்தக் கல்ராயன் மலைப் பகுதியில் 50 கிராமங்களும், 140 குக்கிராமங்களும் உள்ளன. இவை அனைத்துமே தற்போது கச்சிராப்பாளையம் காவல் நிலையத்தின் நிர்வாக ஆளு கைக்குள் அடங்கும். இந்தக் கரியலூர் பகுதியானது கச்சிராப் பாளையத்திலிருந்து 27 கிலோ மீட்டருக்கு அப்பால் அமைந் துள்ளது. ஆகவே, இந்த மலைப்பகுதியில் வாழும் மக்கள் தங்களுடைய பிரச்சினைகளைக் காவல் நிலையத்திற்கு எடுத்துச் சென்று, தீர்வு காண, சிரமப் படுகிறார்கள் என்பதை மாவட்ட ஆட்சித்தலைவர் மூலம் அறிந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கல்ராயன் பகுதியில் உள்ள கரியலூரில் ஒரு முழுமையான காவல் நிலையம் அமைக்க ஒப்புதல் வழங்கி அதற்காக நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்தப் புதிய காவல் நிலையத்தில் பணிபுரிய ஒரு உதவி ஆய்வாளர், இரண்டு தலைமைக் காவலர்கள், 3 முதல்நிலைக் காவலர்கள் மற்றும் 16 இரண்டாம் நிலைக் காவலர்கள் பணியிடங்களை ஏற்படுத்தி ஆணை வழங்கப் பட்டுள்ளது. மேலும் இந்தக் காவல் நிலையத்தின் உபயோ கத்திற்குப் புதிய ஜீப், தொலை பேசி, VHF தொலைத்தொடர்பு வசதி, மேஜை, நாற்காலிகள் மற்றும் ஆயுதங்கள் ஆகியவற்றை வாங்க 7,50,000 ரூபாய் ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணைபிறப்பித்துள்ளார்.

சீவலப்பேரி காவல் நிலையம்
ரூ.5 இலட்சம் ஒதுக்கீடு

திருநெல்வேலி கட்ட பொம்மன் மாவட்டத்திலுள்ள கங்கைக்கொண்டான் காவல் நிலையப் பகுதியைச் சார்ந்த மக்கள் சீவலப்பேரி காவல் நிலையமானது ஒரு முழுமை யான காவல் நிலைய் அந்தஸ் திற்கு உயர்த்தப்பட வேண்டு மென்ற கோரிக்கையை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு மனுக்கள் வாயி

உலகம் உனக்கு கடமைப் பட்டுள்ளதா ? அறிஞர் மார்க் ட்வெயினின் கருத்தறிய 36 ஆம் பக்கத்தைப் புரட்டிப் பாருங்கள்

வந்து குடியேறிய பம்பாய்த் தமிழர் வாழ்வு மணக்க முதல்வர் நிதி உதவி

கடந்த 1993-ஆம் ஆண்டு மகாராஷ்டிர மாநிலத்தின் தலைநகரான பம்பாய் நகரில் நடைபெற்ற இனக் கலவரங்களால் பாதிக்கப்பட்டு, தங்கள் உடைமைகளை இழந்து தமிழ்நாட்டில் வந்து குடியேறிய பம்பாய்த் தமிழர்களின் புது வாழ்விற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கடந்த ஆண்டு 62 பம்பாய்த் தமிழர் குடும்பங்களுக்குத் தலா 3,000 ரூபாய் வீதம் 1,86,000 ரூபாய் நிதி உதவி வழங்கினார்.

தற்போது, செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம் மேலமுதலம்பேடு என்ற கிராமத்தில் வ்சிக்கின்ற திரு கே. வீரராகவன் மற்றும் சிதம்பரனார் மாவட்டம் திருச்செந்தூர் வட்டம் ஆழ்வார்திருநகர் கிராமத்தில் வசிக்கும் திரு ராமசாமி ஆகிய இரண்டு பம்பாய்த் தமிழர்களும், தாங்கள் மிகவும் வறுமையில் வாடுவதாகவும், தங்களுக்கும் நிதி உதவி ஏதேனும் வழங்கப்பட வேண்டும் என்றும் கோரி கருணை மனு ஒன்றினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு அனுப்பி வைத்திருந்தார்கள். அவர்களது கருணை மனுக்களைப் பரிவோடு பரிசீலனை செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், அம்மனுதாரர் களின் நல்வாழ்விற்காக முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து தலா 3,000 ரூபாய் நிதி உதவி வழங்க ஆணை பிறப்பித் துள்ளார்.

லாகவும், கடிதங்கள் வாயி லாகவும் ஏற்கெனவே தெரிவித் திருந்தார்கள்.

தற்போது சீவலப்பேரியில் இயங்கி வருகின்ற புறக்காவல் நிலையத்தில் ஒரு தலைமைக் காவலரும், 6 இரண்டாம் நிலைக் காவலர்களும் பணிபுரிந்து வருகின்றனர். இந்தப் புறக் காவல் நிலையமானது அதற்கு அருகாமையிலுள்ள 7 கிராமங் களையும், 14 குக்கிராமங் களையும் நிர்வகித்து வருகின்றது.

இந்தப் பகுதியில் வாழுகின்ற பொதுமக்களுக்குக் காவல்துறை யினரின் சேவை அதிக அளவில் கிட்டுவதற்கும், காவல்துறை சீவலப்பேரிப் பகுதியில் அடிக்கடி திருவிழாக்கள் நடைபெறுவதற்குத் தேவையான பாதுகாப்புப் பணிகளை வழங்குவதற்கும், குற்றத் தடுப்புப் பணிகளைத் தீவிரப்படுத்தவும், சீவலப்பேரி புறக்காவல் நிலையத்தை ஒரு முழுமையான காவல் நிலையமாக மாற்றி அதற்குத் தேவையான பணி யாளர்கள், உபகரணங்கள் ஆகியவற்றை வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

இந்தக் காவல் நிலையத் திற்காக ஒரு உதவி ஆய்வாளர், ஒரு தலைமைக் காவலர், 3 முதல் நிலைக் காவலர்கள், 10 இரண்டாம் நிலைக் காவலர்கள் மற்றும் ஒரு ஓட்டுநர் பதவிகள் ஏற்படுத்தி ஆணை வழங்கப் பட்டுள்ளன. மேலும், இந்தக். காவல் நிலையத்தின் உபயோ கத்திற்கு ஒரு ஜீப், தொலைபேசி, ஆயுதங்கள் போன்றவற்றை வழங்குவதற்கும் 5,00,000 ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை வழங்கப்பட்டுள்ளது.

முழுமையான சீவலப்பேரி காவல் நிலையத்தின் நிர்வாக எல்லைகளுக்குள் குறவர் மனக்காடு, நொச்சிக்குளம், காஞ்சிபுரம், கீழதொணித்துறை மற்றும் மேலதொணித்துறை ஆகிய கிராமங்களும் கூடுதலாக கொண்டு வரப்படும்.

பொதுப்பணி நெடுஞ்சாலைத்துறை

மறைந்த அரசு ஊழியரின் வாரிசுகளுக்கு அரசுப்பணி

மாண்புமிகு முதல்வருக்கு நன்றி



மறைந்த அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்குக் காலதாமதமின்றி அரசுப்பணி அளித்திட வேண்டும் என்னும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் உத்தரவிற்குச் செயல் வடிவம் அளித்திட, மாண்புமிகு பொதுப்பணித்துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள் விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு நெடுஞ்சாலைத் துறையில் காலியாக உள்ள பணியிடங்களில் 56 இளநிலை உதவியாளர்கள், தட்டச்சர்கள் பணிநியமன உத்தரவினை மறைந்த அரசு ஊழியரின் வாரிசுதாரர்களுக்கு 16.10.1995 அன்று அளித்தார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான ஆட்சியில் நெடுஞ்சாலை கிராமப் பணித்துறையில் மட்டும் 86 இளநிலை உதவியாளர்கள், 88 அலுவலக உதவியாளர்கள், 20 உதவிப் பொறியாளர்கள் மற்றும் 13 உதவி வரை தொழில் அலுவலர்கள் என்று பல்வேறு பணித் தொகுதிகளின் 207 வாரிசுதாரர்களுக்குக் கருணையின் அடிப்படையில் பணிநியமன உத்தரவு இதுவரை வழங்கப்பட்டுள்ளது. 101 இளநிலை உதவியாளர்கள் மற்றும் 16 உதவிப் பொறியாளர்கள் பதவிக்கான விண்ணப்பங்கள் பரிசீலனையில் உள்ளன.

தங்களது நீண்ட நாள் கோரிக்கை நிறைவேற்றப்பட்டதற்கு, நியமன உத்தரவு பெற்ற வாரிசுதாரர்களும், அவர்களது சுற்றத்தாரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கும் மற்றும் மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களுக்கும் தங்களது நன்றியைத் தெரிவித்துக்கொண்டார்கள்.

இது குறித்து மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் அவர்கள், தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, தனது பணியாளர்களின் நலன் காக்கவும் வாழ்க்கை மேம்பட வழிவகை செய்யவும் ஏனைய அரசுகளுக்கு முன்னோடியாக அமைந்துள்ளது என்று தெரிவித்தார்.

இந்த உலகம் உன்னை வாழ வைக்கக் கடமைப்பட்டு இருக்கிறது என்று சொல்லிக் கொண்டு திரியாதே. இந்த உலகம் உனக்கு எந்த வகையிலும் கடமைப்பட்டு இருக்கவில்லை. உனக்கு முன்பிருந்தே அது இங்கு இருக்கிறது.

—மார்க் டுவைன்

மத்திய திட்டக்குழு ஒப்புதல்

நீர் ஆதாரங்களை மேம்படுத்த ரூ.808 கோடிக்குப் புதிய திட்டம்

தமிழ்நாட்டின் வேளாண்மை உற்பத்திப் பெருக்கத்திற்கும், தரிசாகக் கிடக்கின்ற நிலங்களை வேளாண்மைக்குக் கொண்டு வருவதற்கும், தற்போதுள்ள நீர் நிலைகளை நன்முறையில் பராமரிப்பதோடு, புதிய நீர் ஆதாரங்களைக் கண்டுபிடித்து அவற்றை நன்முறையில் மேம்படுத்த வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார்கள்.

அதன்படி, தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு நீர் நிலைகளையும், நீர் ஆதாரங்களையும் சிறப்பான முறையில் மேம்பாடு செய்வதற்காக 'தமிழ்நாடு ஒருங்கிணைந்த நீர் ஆதாரங்கள் திட்டம்' (Tamil Nadu Water Resoures Consolidated Project) ஒன்றை 808 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தயாரித்து மத்திய திட்டக் குழுவிற்கு ஒப்புதலுக்காகத் தமிழக அரசு அனுப்பி வைத்திருந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட பெரும் முயற்சியால் மத்திய திட்டக் குழு இந்த மிகச்சீரிய திட்டத்திற்கு, தனது ஒப்புதலை அளித்துள்ளது. இந்தத் தகவலை மத்திய நீர் ஆதாரங்கள் துணையின் இணை அமைச்சர் திரு பி.வி. ரங்கையா நாயுடு அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்தத் திட்டம், தமிழகத்தில் செயல்படுத்தப்படும்போது கிராமப் பகுதியிலுள்ள பல்வேறு பெரிய மற்றும் சிறிய நீர் ஆதாரங்கள் நன்முறையில் பராமரிக்கப்படுவதோடு, அதிலிருந்து கிடைக்கின்ற பாசன நீர், தமிழகத்தின் வேளாண்மைக்கும், வேளாண் உற்பத்திக்கும் வழி வகுக்கும் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

ரூ.18.4 இலட்சம் நிதி ஒதுக்கீடு

பாப்பன்குளத்திலும், ஆலப்பாளையத்திலும் ஆரம்பச் சுகாதார நிலையங்கள்

தமிழ்நாட்டில் கிராமப் பகுதிகள் அனைத்திலும் மருத்துவ வசதியை அனைத்துத் தரப்பு மக்களுக்கும் விரைந்து கொண்டு செல்லப்பட வேண்டும் என்னும் குறிக்கோளுடன் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் மருத்துவத் துறைக்கு அதிக முக்கியத்துவத்தை அளித்து செயல்பட்டு வருகிறார்.

இதன் அடிப்படையில், மாணவ, மாணவியர்கள் மற்றும் பள்ளிக் குழந்தைகளுக்கு மாணவ மாணவியர் சிறப்பு மருத்துவ முகாம்களை நடத்துதல் போன்ற பல்வேறு புதிய திட்டங்களை நடைமுறைப் படுத்தி வருவதோடு, கிராமப் புறங்களிலும் தேவையான அளவிற்கு ஆரம்பச் சுகாதார நிலையங்களை ஏற்படுத்த வேண்டும் என்ற கொள்கையில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் மிகுந்த ஈடுபாட்டைக் காட்டி வருகின்றார்.

இதே நோக்கில் தற்போது, கோயம்புத்தூர் மாவட்டம் உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ள ப்பாப்பன்குளம், பெரியார் மாவட்டம், பவானி வட்டத்தில் உள்ள ஆலம் பாளையம் ஆகிய இரண்டு இடங்களிலும் ஆரம்பச் சுகாதார நிலையங்களை (Primary Health Centre) அமைக்க 18.4 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், ஆணை பிறப்பித்துள்ளார். இவ்விரு இடங்களிலும் கட்டுமானப் பணிகள் விரைந்து மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவுறுத்தியுள்ளார்.

வீட்டுவசதி மேம்பாட்டுப் பணிகளைப் பாராட்டி தமிழ்நாட்டுக்கு இரண்டு தேசிய விருதுகள்!

80 ஆண்டுக் காலத்தை 4 1/2 ஆண்டு மிஞ்சியது!

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையின் கீழ் கடந்த 4 $1/_2$ ஆண்டுக்காலக் கட்டத்தில், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் (Tamil Nadu Co-operative Housing Federation) மொத்தம், 2,65,000 புதிய வீடுகள் கட்டுவதற்காக, இதுவரை 646 கோடி ரூபாய் மதிப்புடைய வீட்டுவசதி கடன்தொகையை வழங்கி, இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் இடத்தைப் பிடித்து, தேசிய அளவில் ஒரு மாபெரும் சாதனை படைத்துள்ளது.

மாநில அள்வில், வீட்டுவசதி மேம்பாட்டிற்காகப் பணியாற்றி வருகின்ற தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையமானது, தனது 80 ஆண்டுக் காலச் சேவையில் அதாவது 1910-ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது முதல் 1990 வரையிலான கால கட்டத்தில் மொத்தம் 578 கோடி ரூபாய் மதிப்புள்ள தொகையைத்தான், 4,80,000 வீடுகள் கட்டுவதற்குக் கடன் உதவி வழங்கியுள்ளது.

தனது 80 ஆண்டு காலச் சேவையில் வழங்கிய கடனுதவியர்ன 578 கோடி ரூபாயை விட அதிகமாக, கடந்த 4 $1/_2$ ஆண்டுக் காலத்தில் 646 கோடி ரூபாயாக வழங்கி, இமாலயச் சாதனையைத் தற்போது தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் சாதித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்க தாகும்.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவுசதி இணையமானது, இதுவரை 1,224 கோடி ரூபாய் கடனுதவித் தொகையை வழங்கி, அதாவது ஏனைய மாநிலங்களில் இயங்கி வரும் அனைத்து மாநிலக் கூட்டுறவு வீட்டுவசதி இணையங்களும் சேர்ந்து வழங்கியுள்ள தொகையை விட 50 சதவிகிதம் அதிகமாக வழங்கியுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்க சாதனை ஆகும்.

தமிழ்நாடு மாநிலக் கூட்டுறவு வீட்டுவசதி இணையம், தேசிய அளவில், அனைத்து மாநிலங்களைக் காட்டிலும் மிகச் சிறந்த பணியினை ஆற்றி, சீரிய சர்தனையைப் படைத்துள்ளதை பாராட்டி மத்திய அர்சின் வீட்டுவசதி இணை அமைச்சர் மாண்புமிகு திரு எஸ்.எஸ். அலுவாலியா அவர்கள் தலைமையில் 13.10.95 அன்று டெல்லியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் 1994-95-ஆம் ஆண்டிற்கான "தேசிய விருது" (National Award) தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு வழங்கப்பட்டது. தமிழகத்தின் சார்பில் மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் இந்த விருதினைப் பெற்றுக் கொண்டார்.

இதே விழாவில், கிராமிய வீட்டுவசதித் திட்டத்தைச் (Rural Housing Scheme) சிறந்த முறையில் நிறைவேற்றியதற்காக, 'தேசிய விருது' தர்மபுரி மாவட்டத்திலுள்ள பாலக்கோடு வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கிராமிய அளவிலே வீட்டுவசதியை மேம்படுத்த மிகச் சிறந்த சேவையினைக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ஆற்றியமைக்காக, அவரது திருப் பெயரில் "டாக்டர் ஜெ.ஜெயலலிதா விருது" (Dr.J.Jayalalitha Award) என்ற தேசிய விருது ஏற்படுத்தப்பட்டுள்ளது. அந்த விருதானது இந்த முறை பாலக்கோடு வட்டக் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு வழங்கப்பட்டது. இந்த விருதினையும், தமிழகத்தின் சார்பாக மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்கள் பெற்றுக் கொண்டார்.

தேசிய அளவிலான இரண்டு பெரிய விருதுகளையும், கூட்டுறவு வீட்டுவசதித் துறையில், தமிழகம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையின் கீழ் வென்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. இந்தத் தேசிய அளவிலான இரண்டு விருதுகளையும் மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் நேரில் காண்பித்து ஆசி பெற்றார்.

வட்ட அளவில், கிராமிய வீட்டுவசதித் திட்டத்தைச் சிறப்பான முறையில் நிறைவேற்றும் கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கத்திற்கு விருது வழங்க, "தேசிய கூட்டுறவு வீட்டுவசதி இணையம்" (National Co-operative Housing Federation) முடிவு செய்தபோது, தமிழ்நாடு வீட்டுவசதி இணையம் 10 இலட்சம் ரூபாய் பங்குத் தொகை வழங்கியதையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய சேவையைப் பாராட்டி, அவர்தம் திருப் பெயரிலேயே இந்த விருது வழங்கப் பட்டதாகவும், அந்த விருதினை முதல் ஆண்டில் தமிழ்நாடே பெற்று வந்ததையும், மாண்புமிகு தமிழக முதலமைச்சரிடம், மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் எடுத்துரைத்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், இந்தச் சாதனை தொடர்ந்திட வேண்டும் என்றும், தொடர்ந்து இதுபோன்று விருதுகளைத் தமிழகம் பெற்றிட வேண்டும் என்றும் இந்தச் சாதனைக்குக் காரணமான அலுவலர்கள் அனைவருக்கும் தனது பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணைப்படி

ஆதிதிராவிட மகளிர் நலன்காக்க அரும்பெரும் திட்டங்கள் செயலாக்கம்!

தமிழ்நாட்டில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின மக்கள் தங்களது வாழ்க்கையில் ஒட்டுமொத்த முன்னேற்றத்தினை விரைந்து பெற வேண்டும் என்பதற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின் பேரில், தமிழக அரசு பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றது. ஆதி திராவிடர் பொருளாதார முன்னேற்றத்திற்காகக் கடந்த திங்களில் அறிவிக்கப்பட்ட சில முக்கிய திட்டங்கள் மற்றும் நிதி ஒதுக்கீடு பற்றிய விவரம் வருமாறு:

சிறுசேமிப்பை ஊக்குவிக்க சிறப்புமிகு திட்டம்

ஆதிதிராவிடர் மகளிரிடையே சிறுசேமிப்புப் பழக்கத்தை ஊக்குவித்திட சீரிய திட்டம் ஒன்றைத் தமிழக அரசு விரைவில் செயல்படுத்தும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்திருந்தார். இதன்படி தற்போது தமிழ்நாட்டில் அனைத்து மாவட்டங்களிலும் உள்ள ஒரு இலட்சம் ஆதி திராவிடர் மகளிர் சிறு சேமிப்புத் திட்டத்தின் மூலமாக மானியத்தின் அடிப்படையில் பயன்பெறும் வகையில் 2.5 கோடி ரூபாய் மானியத்தோடு கூடிய நிதியினை வழங்கி ஆணை பிறப்பித்துள்ளார்.

தமிழகச் சிறுசேமிப்புத் துறை இயக்குநரால் செயல்படுத்தப் படவுள்ள இத்திட்டத்தின்படி 1000 ரூபாய் மதிப்புள்ள தேசிய சிறுசேமிப்புப் பத்திரம் வாங்குகின்ற பயனாளி ஒருவர் 750 ரூபாய் செலுத்த வேண்டும். மீதி 250 ரூபாய் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டுவசதி மற்றும் மேம்பாட்டுக் கழகத்தின் மூலம் TAHDCO மானியமாக வழங்கப்படும். இதேபோன்று 500 ரூபாய்க்கான தேசிய சிறுசேமிப்புப் பத்திரம் வாங்குவோர் ரூ.375ஐ பயனாளி, பங்காகச் செலுத்த வேண்டும். மீதி 125 ரூபாயை, தாட்கோ TAHDCO மானியமாக வழங்கும். தேசியச் சிறுசேமிப்புப் பத்திரத்தில் முதலீடு செய்பவர்களுக்குச் சிறுசேமிப்புத் துறையால் ஊக்கப் பரிசுத்தொகை வழங்கப் படும்.

32 ஆயிரம் பெண் பயனாளிகளுக்கு ரூ.2.3 கோடி உதவி

1995-96-ஆம் ஆண்டில், 10,000 இந்து ஆதிதிராவிடப் பெண்கள் ஒவ்வொருவருக்கும், ரூ.1,500 மதிப்புள்ள கலப்பு இன பசுங்கன்று ரூ.150 இலட்சம் செலவிலும், 10,000 இந்து ஆதிதிராவிடப் பெண்களுக்கு நபர் ஒன்றுக்கு முட்டை கொடுக்கும் 5 பெண் மற்றும் 1 ஆண் ஆசில் இனக் கோழிப் பறவை ரூ.12 இலட்சம் செலவிலும், 10,000 இந்து ஆதிதிராவிடப் பெண்களுக்கு நபர் ஒன்றுக்கு 10 கிரிராஜா கறிக்கோழிப் பறவைகள் ரூ.72 இலட்சம் செலவிலும் இலவசமாக வழங்கவும்,

2,000 இந்து ஆதிதிராவிடப் பெண்களுக்கு இவற்றை வளர்ப்பது குறித்து பயிற்சி அளிக்க ரூ.4 இலட்சமும்

ஆக மொத்தமாக ரூ.238 இலட்சம் ஒதுக்கி அரசு ஆணையிட்டுள்ளது.

இந்த 32,000 ஆதிதிராவிடப் பெண் பயனாளிகளை மாவட்ட ஆட்சியர் தலைமையில் உள்ள குழு தேர்ந்தெடுக்கும். இந்தத் திட்டம் கால்நடைத் துறை இயக்குநரால் நிறைவேற்றப் படும்.

8,500 பேருக்கு தலா ஒரு ஜோடி கறவை மாடு

பொருளாதாரத்தில் பின் தங்கியுள்ள ஆதிதிராவிட விவசாயிகள் தங்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்வதற்காக, தமிழக அரசு அறிவித்துள்ள பல்வேறு திட்டங்களில் கறவை மாடுகள் வழங்கும் திட்டமும் ஒன்றாகும். இத்திட்டத்தின் கீழ் 1995-96-ஆம் ஆண்டில் 8,500 ஆதிதிராவிட பயனாளிகள், ஒவ்வொருவரும் ஒரு ஜோடி கறவை மாடுகள் பெறுவார்கள். இத்திட்டத்திற்காக மத்தியச் சிறப்பு நிதியிலிருந்து மானியத்தொகை யாக ரூ.510 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

ஆதிதிராவிடக் குடியிருப்புகளுக்கு மின் வசதி

தமிழ்நாட்டில் ஆதிதிராவிட மக்கள் வசிக்கின்ற குடியிருப்புகளுக்கும், அவர்களது குடிசைகளுக்கும் அடிப்படை வசதிகள் அனைத்தும் செய்து தருகின்ற திட்டம், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அறிவுரையின்படி விரைவாகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

ஆதிதிராவிடர் குடியிருப்புகளுக்கும், குடிசைகளுக்கும் மின் வசதி செய்து தருகின்ற திட்டத்தின்கீழ் மொத்தம் 69,000 குடிசைகளுக்கு மின் வசதி செய்து தருவதற்காகவும், 50 சதவிகிதம் முன்பணமாக 3.45 கோடி ரூபாயினை 1994-95-ஆம் ஆண்டே தமிழ்நாடு மின்வாரியத்திற்கு வழங்கப்பட்டு பணிகள் தற்போது நடைபெற்று வருகின்றன. எஞ்சியுள்ள ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கும், குடிசைகளுக்கும் மின் வசதி செய்து தர வேண்டும் என்பதற்காக 1995-96-ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீடாக 3.45 கோடி ரூபாய் தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். ஆதி திராவிடர் குடியிருப்புகளுக்கு மின் வசதி அளிக்கின்ற பணிகள் விரைந்து நிறைவேற்றப்பட வேண்டும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

வேளாண் திட்டம் செயல்படுத்த உதவி

ஆதிதிராவிட வகுப்பினைச் சார்ந்த சிறு மற்றும் குறு விவசாயிகளின் உற்பத்தி உத்திகளை உயர்த்தவும், உற்பத்தி அணுகு முறைகளில் மாற்றங்களைக் கொண்டு வரவும், 'தாட்கோ' நிறுவனத்தின் மூலம் பல்வேறு வேளாண்மைத் திட்டங்களுக்கு 50 சதவிகிதமும், சில இனங்களுக்கு 25 சதவிகிதமும் மானியமாக வழங்க, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

மானிய உதவி பெறுகின்ற வேளாண்மைத் திட்டங்கள் வருமாறு:

★ கலப்பின மற்றும் உயர் விளைச்சல் தரக்கூடிய இரசாயனப்பதப்படுத்தப்பட்ட நெல், மக்காச் சோளம், சிறுதானியங்கள், எண்ணெய் வித்துக்கள், பருத்தி மற்றும் காய்கறிகள் ஆகிய விதைகளைப் பாக்கெட்டுகளில் வழங்குதல்.

★ விதைகளைப் பூச்சிக் கொல்லி இரசாயனங்களால் விவசாயிகளே நேர்த்தி செய்து பயன்படுத்திக் கொள்ள ஏதுவாக விதைப் பதப்படுத்தும் இரசாயன பூச்சிக் கொல்லி மருந்துகளை அவற்றைப் பயன் படுத்தும் முறையோடு தனியாகப் பாக்கெட்டு களில் விநியோகம் செய்தல்

★ உயிரின வேம்பு அடிப்படையிலான பூச்சிக்கொல்லிகள் மற்றும் பூச்சிக்கொல்லித் தாவரங்கள் வழங்குதல்

★ உயிரின உரங்கள் வழங்குதல்

★ நெற்பயிர்களுக்கு ஜிங்க் சல்பேட் வழங்குதல்

★ நுண்ணூட்டச் சத்துக்கள் கலவை வழங்குதல்.

—முதலான வேளாண் திட்டங்களுக்கு மானியத் தொகை வழங்கப்படும்.

1.06 கோடி மதிப்புடைய ஜெர்சி பசுக்கள் டென்மார்க் நாட்டிலிருந்து தமிழ் நாட்டுக்கு வந்தன

தமிழ்நாட்டில் கால்நடை அபிவிருத்திக்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆலோசனையின் பேரில், தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை பல வகையான திட்டங்களை, அரசு நிதி உதவியினைக் கொண்டும், உலக வங்கி, DANIDA போன்ற அயல்நாட்டு அமைப்புகளின் நிதி உதவியினைக் கொண்டும் நிறைவேற்றி வருகின்றது. குறிப்பாக, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், கால்நடை அபிவிருத்தியானது கிராமப் பொருளாதாரத்தை எங்ஙனம் வளர்ச்சியுறச் செய்யும் என்பதை விளக்கிப் பல்வேறு தருணங்களில் குறிப்பிட்டுள்ளார்கள். கிராமப்புறங்களில் வசிக்கும் மக்களின் வருமானத்தை அதிகரித்து, அவர்தம் பொருளாதார மேம்பாட்டிற்கு வழிவகுக்க, தற்போதைய நவீன கால்நடைப் பராமரிப்புத் தொழில் நுட்ப உதவிகளைக் கையாள வேண்டும் என்ற கருத்தினை, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் ஆலோசனையின் பெயரில் தமிழகக் கால்நடைப் பராமரிப்புத் துறை, டென்மார்க் நாட்டிலிருந்து 120 ஜெர்சி இன உயர் ரக சினைப் பசுக்களை இறக்குமதி செய்துள்ளது. உலக வங்கியின் நிதி உதவியுடன், தமிழ் நாடு வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ், பால் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்தோடு, உயர் மரபு அபிவிருத்திக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ளது. இவ்வுயர் ரக ஜெர்சி பசுக்களின் மொத்த மதிப்பு 1.06 கோடி ரூபாய் ஆகும்.

17.10.1995 அன்று இரவு டென்மார்க் நாட்டிலிருந்து சென்னைக்குத் தனி விமானத்தில் இந்த ஜெர்சி உயர் ரக பசுக்கள் வந்து இறங்கின. மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர், திரு.கு.ப. கிருஷ்ணன் அவர்களும், மாண்புமிகு கால்நடைத் துறை அமைச்சர், திரு.எம்.சி.. தாமோதரன் அவர்களும் இந்தப் பசுக்களை, தமிழக அரசின் சார்பில் பெற்றுக் கொண்டார்கள். சென்னையிலிருந்து இந்த உயர் ரக ஜெர்சி பசுக்கள் தஞ்சாவூர் மாவட்டம் ஈச்சங்கோட்டை கால்நடைப் பண்ணைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின்

ஆலேர்சனையின் அடிப்படையில் பெறப்பட்ட இந்த ஜெர்சி இன சினைப் பசுக்கள் ஒவ்வொன்றும் பால் தருகின்ற பருவத்தில் மொத்தமாக 5,000 முதல் 6,000 லிட்டர் வரை பால் கொடுக்கும். இந்த இன அபிவிருத்தித் திட்டத்தின் மூலம் தமிழகத்தில் பால் உற்பத்தி மேம்படுத்தப்பட்டு, தற்போதைய பால் உற்பத்தி அளவான 39.65 இலட்சம் டன்னிலிருந்து மேலும் அதிக அளவிற்கு உயர வாய்ப்புகள் ஏற்பட்டுள்ளன. இந்தத் திட்டத்தினை விரைந்து செயல்படுத்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

அரசு ஊழியர் மலைப்பகுதி பணிப்படி உயர்வு

தற்போது தமிழ்நாட்டில் மலைப் பகுதிகளில் பணிபுரியும் அரசு ஊழியர்களுக்கு, மலைப் பகுதிப் பணிப்படி Hill Allowance அடிப்படை ஊதியத்தில் 20 சதவிகிதம் மாதந்தோறும் 200 ரூபாய்க்கு மிகாமல் வழங்கப்பட்டு வருகின்றது. பல காலமாக உயர்த்தப்படாமல் உள்ள இந்த படித் தொகையை உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையைப் பல்வேறு அரசு ஊழியர் சங்கங்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன் வைத்தார்கள்.

நான்காவது ஊதியக் குழுவால் 1984-ஆம் ஆண்டு நிர்ணயிக்கப்பட்ட இந்த மலைப் பகுதி பணிப்படி, ஐந்தாவது ஊதியக் குழுவாலும் (1989) உயர்த்தப்படாமலும் அப்படியே பின்பற்றப்பட்டு வருகின்றது என்பதைக் கருத்தில் கொண்டும், பல்வேறு அரசு ஊழியர் சங்கங்கள் இது தொடர்பாக தமிழக அரசுக்கு விடுத்திருந்த கோரிக்கையில் உள்ள நியாயத்தைக் கருத்தில் கொண்டும். இந்தக் கோரிக்கை நிறைவேற்றப்பட வேண்டியது அவசியமானது என்ற கருத்தின் அடிப்படையிலும், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் Hill Allowance-ஐ தற்போது உள்ள 200 ரூபாயிலிருந்து மாதம் ஒன்றுக்கு 300 ரூபாயாக உயர்த்தி வழங்கி ஆணையிட்டுள்ளார்.

இது 1.9.1995 முதற்கொண்டு அமல் படுத்தப்படும்.

தமிழக அரசால் வழங்கப்படுகின்ற இந்த மலைப் பகுதி பயணப்படி இந்த இனத்தில் மத்திய அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகின்ற அதிகபட்சப் படியான 150 ரூபாயை விட இரு மடங்கு; மாநில அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தென்னக இசைக்கெல்லாம் அடியெடுத்துக் கொடுத்து வழிகாட்டிய தமிழ் மகளின் பெருமை போற்றுவோம்!

—டாக்டர் ஞானாம்பிகை குலேந்திரன்

எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில், மகளிர் கருத்தரங்கில், 'பெண்ணின் பெருமை' என்னும் தலைப்பில், 'கலை' என்னும் பொருளில் டாக்டர் ஞானாம்பிகை குலேந்திரன் அவர்கள் ஆற்றிய உரை:

பெண்ணின் பெருமையை புரட்சித்தலைவி அவர்கள் முன்னிலையில் பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் பெரும் மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமிதம் அடைகிறேன். ஆய கலைகள் 64 என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இன்று உலகப் புகழேட்டில் நிற்கும் எங்களுடைய ஆடற்கலை, இசைக்கலை ஆகிய இந்த இரண்டு கலைகளுக்கும் எங்கள் பெண்ணினம் சேர்த்துத் தந்த மாட்சிமையுடைய பெருமை பற்றி உங்களிடம் சிறிது பேசலாம் என்று விழைகின்றேன்.

பலநூறு ஆண்டுகள் தமிழ் மக்கள் பேணிப் பாதுகாத்த கலை

உலகக் கலை அரங்கிலே நம்முடைய இந்தியக் கலைகளுக்கு ஒரு தனிப்பெருமை உண்டு. அதனுடைய தொன்மை, அதனுடைய தொடர்ச்சியான பாரம்பரியப் பெருமை எல்லாவற்றிற்கும் மேலாக அதனுடைய தெய்வீகத் தன்மை, இத்தகைய தோர் சிறந்த கலை மரபு, இன்று இந்தியாவினுடைய சிறப்பு மிக்கதோர் அரங்கக் கலையாக உலகப் புகழீட்டி வருகின்றது. இந்த இரண்டு கலைகளையும் இந்திய நாட்டு மக்கள் மட்டுமின்றி இந்தியப் பண்பாட்டுப் பின்னணி அல்லாத வெளி நாட்டு மக்களும் விரும்பிக் கற்று அரங்குகளில் அரங்கேற்றி வருகிறார்கள். இத்தகைய அருமையான ஒரு ஆடல் முறை பரதநாட்டியம் என்ற பெயரோடும், இசை முறை கர்நாடக இசை என்ற பெயரோடும் விளங்கிக் கொண்டிருக்கிறது இன்று, உலகளாவிய நிலையில் புகழீட்டி நிற்கின்ற இந்தக் கலைகள் தமிழக மண்ணிலே உருவாகி பலநூறு ஆண்டுகளாகத் தமிழ் மக்களால் பேணிப் பாதுகாத்து இன்று பக்குவமாக உலகிற்குக் கொடுக்கப் பட்டுள்ளது என்று சொல்லுகின்றபோது நான் பெருமை அடைகிறேன்.

ஆதார மூல இசை தமிழ்ப்பண் இசையே

இன்று தென்னகத்திலே பயிலப்படுகின்ற இசை கர்நாடக இசை என்று சொல்லப்படுகிறது. தென்னகத்து மாநிலங்களிலே உள்ள, பயிலுகின்ற எல்லா மொழிகளிலும் இந்த இசையானது அவ்வப்போது இயல் இசை மேதைகளால் பக்குவமாகப் பொலிவு செய்யப் பட்டிருக்கிறது. தெலுங்கு மொழியிலும், வட மொழியிலும் அருமையான கீர்த்தனைகள் பாடிய தியாகய்யரையும், முத்துசாமி தீட்சிதரையும், சாமா சாஸ்திரிகளையும் நாங்கள் இன்று சங்கீத மும்மூர்த்திகள் என்று போற்றிப் பாராட்டுகின்றோம். அதேபோல தெலுங்கு மொழியில் அருமையான தெய்வீகப் பாடல்களைப் பதங்களாகப் பாடிய க்ஷேத்திரஞ்சனை நாங்கள் பதங்களின் சிற்பி என்று சொல்லுகிறோம். புரந்தர தாசரை நாங்கள் சங்கீத பிதாமகர் எனப் போற்றி வணங்குகிறோம். இந்த நிலையிலே இந்த இயல் இசை மேதைகள் பாடிய பாடல்கள் எல்லாம் தென் மாநிலத்திற்குரிய மொழிகளிலே இருப்பினும், இந்த இசை, தமிழ் மண்ணிலே தமிழ் மக்கள் பண்டு காலத்திலிருந்து பயன்படுத்தி வந்த பண்ணிசை முறைகளே என்பதை இன்றைக்கு நாம் உறுதி செய்துவிட்டோம். இதற்கு ஆதாரமாக விளங்குகின்றது நம்முடைய தேவார இசைகள். இன்று இந்திய இசையிலேயே முதன்மையான மூல இசைகளொடு கிடைக்கும் பாடல்கள்

தேவாரப் பாடல்கள், அப்பரும், சுந்தரும், ஆளுடைய பிள்ளையாரும் பாடிய அதே தேவாரப் பாடல்கள் தான். அந்தப் பண்ணிசையின் பெயரை மாற்றி இன்று கர்நாடக ராகங்களாகப் பொலிவு பெற்று கர்நாடக இசையாக விளங்குகின்றது.

மறந்து போன தமிழிசையை திரும்பப் பதிவு செய்து தந்த தெய்வத் தமிழ்மகள்

தேவாரப் பண்ணிசை என்று சொல்லி, தெய்வத் தமிழிசை பாடிய 63 நாயன்மார்களை நாங்கள் போற்றுகின்றோமே, இவர்களுடைய இசை வழி வந்தது தான் கர்நாடக இசை என்று சொல்லும்போது, முக்கியமான ஒரு செய்தியை நாங்கள் மறந்து விட்டோம். என்ன அந்தச் செய்தி என்று சொன்னால், இந்தத் தேவார நாயன்மார்கள் தெய்வத் தமிழிசையைப் பாடுவதற்கே முன்னோடியாகவும், முதன்மையானவராகவும், மூத்தவராகவும் விளங்கியவர் ஒரு அம்மையார். அவர் ஒரு பெண் மகள், தெய்வ மகள், தமிழ் மகள் என்பதையும், இந்தப் பண்ணிசையின் இந்தத் தென்னகத்தினுடைய இசையின் தொடர்ச்சி ஒரு கால கட்டத்தில் மறந்து போன நிலையில், அந்தத் தென்னக இசையைத் திரும்பவும் பதிவு செய்து கொடுத்தவர் அந்தத் தமிழ் மகளே என்பதையும் நாம் மறந்து விட்டோம்.

இந்தப் பண்ணிசைக்கு மூத்தவராக, தெய்வத் தமி[illegible] பாடிய தேவார நாயன்மார்களுக்கு மூத்தவராகவும் முன்னோடியாகவும் விளங்கியவர் காரைக்கால் அம்மையார். கி.பி. 5-ஆம் நூற்றாண்டில் இல்லறம் நல்லறமாகாத நிலையிலே, இறைவனுடைய திருவடிக்குக் கீழே இருந்து நான் பாட வேண்டும் என்று, அந்த இறையருளைப் பெற்று அற்புதமாக இரண்டு இசைகளைப் பாடினார் அம்மையார். அந்த இரண்டு இசைகளும் தான் இந்தத் தென்னகத்தின் அற்புதமான இசைகளாக இன்று விளங்குகின்றன.

பழந்தமிழ்ப் பண்களின் பெயர் மட்டும் மாறிவிட்டது

நட்டுவாடிப் பண் என்பதை, கர்நாடக இசையில் பெயர் மாற்றி கம்பீர நாட்டை என்று சொல்லுகிறோம். இறையம்மையின் பாலுண்ட அந்த மூன்று வயது பாலகன் தன்னுடைய திருவாய் மலர்ந்து 'தோடுடைய செவியன்' என்று பாடியது அந்த நட்டுவாடிப் பண்தான். அம்மையார் எடுத்துக் கொடுத்த அந்தப் பண்ணைத்தான் அந்தக் குழந்தை பாடியது. அந்தப் பண்தான் காலப்போக்கில் பெயர் மாறி இன்றைக்கு கம்பீர நாட்டை என்று ஆகியுள்ளது. உங்களுக்குத் தெரியும், நீங்கள் எந்த இசைக் கச்சேரிக்குப் போனாலும், நாட்டியக் கச்சேரிக்குப் போனாலும், காலட்சேபத்திற்குப் போனாலும், கம்பீர நாட்டையில் ஒரு உருப்படி ஆரம்பித்து விட்டால் அந்த நிகழ்ச்சி நிறையும்.

கோயிலில் பாருங்கள்: ஸ்வாமி புறப்படுகிறது. நாதஸ்வரத்தில் மல்லாரி வாசிக்கிறார்கள். அது எந்த இசை? அம்மையார் கொடுத்த அதே நட்டுவாடிப் பண்!

இசைக்கு ஒரு கம்பீரத்தை இயற்றித் தந்த அம்மை

தத்ததிதாம் தகஜதிதாம் என்று சுவாமி புறப்படுகிறது. அந்த இசையைக் கேட்கிற பொழுது, நமது உள்ளத்திலே ஒரு மங்களகரமான உணர்ச்சி, மகிழ்ச்சியான உணர்ச்சி, ஒரு கம்பீரமான உணர்ச்சி, தோன்றுகிறது. இந்த தென்னக இசையில், இந்த கம்பீர நாட்டையை, இவ்வளவு கம்பீரமான ஒரு இடத்தைப் பெற வைத்தவர் யார்? ஒரு பெண் மகள். நாம் போற்றி வணங்கும் காரைக்கால் அம்மையார்; அவர் தான் இந்த இசையை எடுத்துக் கொடுத்தார். அதேபோலப் பாருங்கள் 'இந்தளப்பண்' என்று அம்மையார் எடுத்துக் கொடுத்தார் ஒரு அருமையான இசை! சுந்தரர் இறைவனைப் பார்த்து, பித்தா என்று வாயைத் திறந்து முதன் முதல் திட்டினாரே, எந்த இசையில்? அம்மையார் எடுத்துக் கொடுத்த அந்த இந்தளப் பண்ணில்தான். அந்த இந்தளப் பண் காலப்போக்கில் என்ன ஆனது தெரியுமா? மாயாமாளவ கௌள என்று பெயர் கொண்டு

நம்பிக்கை என்பது ஒரு பறவை; புலருகின்ற பொழுது இருட்டாக இருக்கிறபோதே தனது விடியல் இன்னிசையை அது இசைக்கத் தொடங்கி விடுகிறது.

—ரவீந்திரநாத் தாகூர்

வீரன் அழகுமுத்துக்கோன் பெயரில் புதிய போக்குவரத்துக் கழகம்

19-ஆம் நூற்றாண்டில், ஆங்கிலேயர்களின் ஏகாதிபத்தியத்தை எதிர்த்துப் போராடியவரும், அந்தப் போராட்டத்தின் காரணமாக வீர மரணம் அடைந்தவருமான "வீரன் அழகுமுத்துக்கோன்" அவர்களின் தியாகத்தையும், ஆங்கிலேயரை எதிர்த்துப் போராடிய நல்லுணர்வையும் போற்றும் வண்ணம், வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் நினைவாக, அவரது திருவுருவச் சிலை ஒன்று அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் திருவுருவச் சிலை சென்னையில் ஒரு முக்கியப் பகுதியில் அமைக்கப்படும் என்றும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் அறிவித்துள்ளார்.

மதுரை முத்துக் கிருஷ்ணப்ப நாயக்கரின் திசைக் காவல் தளபதிகளில் ஒருவராக நெல்லைச் சீமையில், கரிசல் காட்டுப் பகுதியில் உள்ள காட்டாளங்குளத்தில் கோட்டைக் கட்டி வாழ்ந்தவர் வீரன் அழகுமுத்துக்கோன் அவர்கள். 19-ஆம் நூற்றாண்டில் கிழக்கிந்திய கம்பெனியின் சார்பில் எட்டையபுரம் மன்னரைக் கப்பம் கட்டச் சொல்லி வற்புறுத்தப்பட்டபோது, ஆங்கிலேயர்களின் ஆட்சியை எதிர்த்த காரணத்தினால், நடுக்காட்டூர் சீமையில் அவரோடு துணையாக இருந்த 6 துணைத் தளபதிகளோடு, ஆங்கிலேயர்களால் பீரங்கியில் கட்டி வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

வீரன் அழகுமுத்துக்கோன் அவர்களின் புகழுக்கு அணி சேர்க்க புதுக்கோட்டையைத் தலைமையிடமாகக் கொண்டு, தமிழக அரசின் சார்பில் புதிய போக்குவரத்துக் கழகம் ஒன்று, "வீரன் அழகுமுத்துக்கோன் போக்குவரத்துக் கழகம்" என்ற பெயரில் விரைவில் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அறிவித்துள்ளார். இதன் பூர்வாங்கப் பணிகளை விரைவில் மேற்கொள்ளவும் ஆணை பிறப்பித்துள்ளார்கள்.

விட்டது. இன்றைக்குச் சங்கீதப் பிதாமகர் என்று சொல்லக் கூடிய புரந்தரதாசர் அவர்கள், சங்கீதம் பயிலுவோர்களுக்கு எல்லாம் ஆரம்பப் பயிற்சிப் பாடங்களைக் கற்றுக் கொடுப்பதற்குத் தேர்ந்து எடுத்த அந்தப் பண், அந்த இசை, அம்மையார் எடுத்துக் கொடுத்த இந்தளப் பண்தான். தென்னக இசையில் உள்ள அத்தனை இயல் இசை மேதைகளும் இந்த மாயா மாளவ் கௌள ராகத்தில் இசை உருப்படிகளைப் பாடாதவரே இல்லை என்று சொல்லலாம்.

இசை பயிலுவோரில் இந்த மாயா மாளவ கௌள ராகம் தெரியாதவர்களே இல்லை என்று சொல்லுகின்ற அளவுக்கு ஒரு இசை முறையை எடுத்துக் கொடுத்தவர் அம்மையார். அந்த வகையிலே அம்மையார் எடுத்துக் கொடுத்த இந்த இசை வகைதான் பிறகு பண்ணிசை ஆகி, பண்ணிசை தான் இன்று கர்நாடக இசையாகி, அந்தக் கர்நாடக இசைதான் இன்று நாட்டியத்திற்கு அடித்தளம் ஆகவும், அடிமனையாகவும், அஸ்திவாரமாகவும் அமைந்திருக்கிறது.

கலை பண்பாட்டுக்கு வரும் தடை எதிர்ப்புகளை வெற்றி கொள்வோம்

பழைய காலத்திலே மாதவி நல்லாள், பண் என்ற கூத்து பதினொன்றை ஆடினாள் என்று சொல்லுகின்றோம். அந்தப் பண் என்ற கூத்து பதினொன்று ஆடுவதற்கு ஒரு அற்புதமான கலையை உருவாக்கியவர்கள் நமது பெண் மக்கள் தான்.

விரல் வல்லபம் காட்டி ஆடும் விரலியர் என்று சங்கக் கவிஞர்கள் பாடுகின்றனர். அந்த விரல் வல்லபம் காட்டி ஆடுகின்ற ஒரு ஆடல் முறை, இந்த உலகின் எந்த ஒரு நாட்டிலும் இல்லாத ஒரு அற்புதமான ஒரு கலை முறை. அதனைத்தான் இன்று நாங்கள் அஷ்ட அபிநயம் என்று சொல்லுகின்றோம், வட மொழியிலே. இதைத்தான் அன்று பிண்டிர் பிணையல் என்றும் ஒற்றைக் கை முத்திரை, இரட்டைக் கை முத்திரை என்றும் மாதவி நல்லாள் ஆடிக் கொடுத்தாள். இந்தப் பண்ணும் கூத்தும் இணைந்த இந்த உயர்ந்த ஒரு நிலையிலே நமது ஆடல் கலை இருந்தது என்பதற்கு அத்தாட்சியாக விளங்குகிறாள் மாதவியாள் என்னும் அந்த ஆடல் நங்கை. அவள் ஆடிய அந்த உயர்ந்த ஆடல் நிலையைப் பின்னர் 400 தேவரடியாட்களை வைத்து இந்தத் தமிழகம் எங்கும் பரப்பிய பெருமை, இந்தத் தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய ராஜராஜனுடைய புகழைச் சேர்த்து நிற்கின்றது. 400 கோவில் மகளிரை வைத்துப் பெண்கள் வழியாலேதான், பெண்கள் தான் இந்தக் கலைக்கு உரியவர்கள், இவர்கள் வழியாகத்தான் நாம் இந்த இசையை நாட்டியத்தில் பரப்ப வேண்டும், என்ற உயர் குறிக்கோளுடன் ஒரு தலைமுறையே உருவாக்கியவர் தான் ராஜராஜ சோழன். அந்த நிலையிலே இன்று உலகளாவிய நிலையில் இந்த ஆடலும் இசையும் பரவி இருக்கிற இந்தக் கால கட்டத்திலே நம்முடைய பெண் மக்களுக்கு ஒரு பெரிய ஒரு சவால் ஒன்று எதிர் நோக்கி நிற்கிறது. என்ன சவால் என்று சொன்னால், இன்று தொழில் நுட்பம், விஞ்ஞான முன்னேற்றங்களினால் நம்முடைய கலைகளிலும் பண்பாட்டிலும் பல தாக்கங்கள் எதிர்ப்புகள் வந்து கொண்டிருக்கின்றன.

கலை மரபை காத்து நிற்கும் வல்லமையும் தகுதியும் பெண்களுக்கே உண்டு

இதனால் நம்முடைய மரபுக் கலைகளுக்குப் பெரிய அழிவு ஏற்படுத்துகின்ற ஒரு சூழ்நிலை. இந்த ஒரு நிலையிலே இதைக் கட்டிக் காக்கின்ற ஒரு பெருமையும் பொறுப்பும் கடமையும் நம்முடைய பெண் மக்களுக்குத்தான் உரியது என்பதை ஏற்கெனவே சிந்தித்து விட்டார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். எப்படிச் சொன்னார் தெரியுமா? அறம் எது, மறம் எ்து என்று நீ தெரியாமல் மலைக்கின்ற போது, வன்மை சூழ்ந்த எளிமையான இந்த சூழலிலே, நீ அல்லல்பட்டுக் கொண்டிருக்கிறபோது, அம்மா குழந்தாய், பெண்ணே, நீ அன்றைய நற்றமிழ்க் கூத்தினை ஆடிக் காட்டு, எங்களுக்குத் துன்பம் வருகின்றபோது பெண்ணே- ஒரு ஆணைக் கேட்கவில்லை அவர். பெண்ணே என்று ஒரு பெண்ணிடம்தான் சொல்லுகிறார் பெண்ணே, எங்களுக்குத் துன்பம் வருகின்றபோது அந்த யாழை எடுத்து மீட்டிக் காட்டு என்று கேட்டார். எவ்வளவு அருமையாக அவர் ஏற்கெனவே சிந்தித்து விட்டார். கலையின் மரபு ஒன்று தொடர்ந்து வர வேண்டுமானால் அது பெண்ணினத்தினால்தான் முடியும்

> **கனவுகளை நனவாக்க ஒரே வழி, உடனே விழித்தெழுவதே.**
>
> **—ஜேம்பீ**

என்பதை அன்றே சிந்தித்துச் சொல்லி விட்டார் பாரதிதாசன் அவர்கள். எவ்வளவு அருமையாகச் சொல்லுகிறார் பாருங்கள்

வன்பும் எளிமையும் சூழும்
நாட்டிலே
வாழ்வில் உணர்வு சேர்க்க - என்
வாழ்வில் உணர்வு சேர்க்க நீ
அன்றை நற்றமிழ் கூத்தின்
முறையினால்
ஆடிக்காட்ட மாட்டாயா கண்ணே

'கண்ணே' என்பது பெண்ணைத் தான்.

துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ
இன்பம் சேர்க்க மாட்டாயா எமக்கு
இன்பம் சேர்க்க மாட்டாயா
கண்ணே, கண்ணே.

இந்த அருமை பெருமைகளைக் காக்கக் கூடிய தகுதி, தகைமை யாரிடம் உண்டு, பெண்களிடம் தான் உண்டு. ஒரு நாட்டினுடைய ஒரு இனத்தினுடைய, ஒரு வீட்டினுடைய பண்பையோ, கலாசாரத்தையோ தகைமையையோ கட்டிக் காக்கிற பெருமை பெண்ணினத்திற்குத்தான் உண்டு. ஆதலால் தான் நான் எங்களுடைய அன்புமிக்க புரட்சித்தலைவி அவர்களிடத்தில் ஒரு சின்ன வேண்டுகோள். நம்முடைய தெலுங்கு மொழியிலும் வட மொழியிலும் இந்த இசை முறையை வளமை செய்த சங்கீத மும்மூர்த்திகள் என்று நாம் பாராட்டுகின்றோம். பதங்களைத் தெலுங்கு மொழியில்

பாடிய க்ஷேத்திரஞ்சனை பதங்களின் சிற்பி என்று சொல்லுகின்றோம். இந்தக் கன்னட மொழியிலே நம்முடைய பயிற்சிப் பாடங்களை எல்லாம் அமைத்துக் கொடுத்த புரந்தர தாசரை சங்கீதப் பிதாமகர் என்று சொல்லுகின்றோம். தென்னகத்து மொழிகளில் எல்லாம் நாட்டிய இசை உருப்படிகளை இயக்கிக் கொடுத்த நாட்டிய சகோதரர்கள் நால்வரையும் சங்கீதப் பரத சிரேஷ்டர்கள் என்று பாராட்டுகிறோம். இந்த நிலையிலே, இவர்கள் எல்லாருக்கும் அடி எடுத்துக் கொடுத்தவர்; சொல்லப் போனால், அம்மையார் கொடுத்த இந்தளப் பண்ணிலே 'பித்தா பிறைசூடி' என்று சுந்தரர் பாடினார்; அம்மையார் பாடிய இந்தளப் பண்ணில் தான் முதன் முதலாக முத்துசாமி தீட்சிதர் 'ஸ்ரீ நாதாபிகுருவன' பாடினார்; இதே அம்மையார் பாடிய இந்தளப் பண்ணில் தான் முதன் முதலாக நாட்டிய சகோதரர் நால்வரும் தம்முடைய குருவான முத்துசாமி தீட்சிதருக்கு 'மாயா தீர்க்க சொரூபிணி' என்று மாயா மாளவ கௌளத்தில் பாடினார்கள்.

மற்றவர்களையெல்லாம் பரத சிரேஷ்டர் என்றும் சங்கீத சிரேஷ்டர் என்றும், சங்கீத மும்மூர்த்திகள் என்றும், பிதாமகர் என்றும் சொல்லுகின்ற பொழுது ஏன் இப்படி ஒரு நீண்ட ஒரு பாரம்பரியத் தலைமுறையை உருவாக்கிய நம் அம்மையாரை, நம்முடைய தமிழ் மகளை, இவர்கள் எல்லோருக்கும் வழிகாட்டிய மூத்த அம்மையாரைத் தென்னக இசையின் தாய் என்று ஏன் சொல்லிப் பாராட்டக் கூடாது? தமிழர்களாகிய நாம், தமிழ்ப் பெண்களாகிய நாம், இதை செய்தாக வேண்டும். இது யாருக்கும் தெரியாத ஒரு உண்மை, ஒரு நீண்ட பாரம்பரியப் பெருமையை உருவாக்கிய ஒரு அம்மையார், அந்தப் பெருமையை உலகறிய நாம் பறைசாற்ற வேண்டும். அந்த அம்மையாருடைய பெருமையைப் பறை சாற்றுவது மட்டுமல்ல, பரவலாகப் போற்றுவது மட்டுமல்ல, அதை நிலைநிறுத்த வேண்டும். வாயாரப் போற்ற வேண்டும் வாயாரச் சொல்ல வேண்டும். இதற்கு ஆவன முயற்சிகளை எங்களுடைய அன்புக்கினிய, எங்களுடைய நாட்டு மக்களின் தலைவியாகிய புரட்சித்தலைவி அவர்கள் ஆவன செய்து எங்களுடைய பெண்ணின் பெருமையைப் பெருமிதப்படச் செய்வார்கள். இது நிச்சயம்! ✻

நீங்கள் கடந்து வந்த வெற்றிப் பாதையைக் காட்டுகிற வரைபடம் இதோ:



இதே வரைபடத்தை பக்கம் 15 இல் கூட பார்த்திருக்கலாமே. எண்கள் குறிக்கப்படாமல் உங்கள் சிந்தனைக்கு வேலை வைத்த அதே வரைபடம்தான் இப்போது எண் வரிசை இணைக்கப்பட்டு மேலே கொடுக்கப்பட்டுள்ளது!

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சன்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

தூய
பட்டு

தூய
சரிகை

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்

தமிழரசு

பதிவு எண். M. [illegible]
Licence No.TN/MS(C)/PP-23

திருமதி பார்வதி ரவி கண்டசாலா - நாட்டிய நாடகம்

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு - தஞ்சாவூர் - 1995

யாதும் ஊரே யாவரும் கேளிர்!

நிகழ்ச்சிகளில் சில...

செல்வி ரீலா ஹோட்டா - நாட்டியம்

இந்த இதழில்...

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் தேசியவுடைமை 2

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் படைப்புகள் நாட்டுடைமை 5

கூட்டுறவுத்துறையின் மகத்தான சாதனைகள்
- மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு கா.ப. பட்டாபிராமன் 7

தமிழ்நாட்டில் பனைத்தொழில் 12

புரட்சித்தலைவியின் தலைமையில் இணைந்து நிற்போம்!
- மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் 18

பூவைத் தாங்கும் இதயம்
- டாக்டர் மு. தனபால் 21

ஒப்புயர்வற்ற இசை வடிவம் படைத்த சீர்காழித் தமிழிசை மூவர் 24

டான்பெட் - உழவர்க்கு ஒரு சேவை நிறுவனம் 32

மீன்வள மேம்பாடு 36

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம்பிள்ளை
பேராசிரியர் டாக்டர் இ. சுந்தரமூர்த்தி 39

குடும்பத்திற்கு ஒரு வீடு! 42

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் 46

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு (31)

அறம் சிறப்பையும் அளிக்கும்; செலவத்தையும் அளிக்கும்; ஆகையால், உயிர்க்கு அத்தகைய அறத்தை விட நன்மையான வேறு யாது?

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

ஐப்பசித் திங்கள் : 30

மலர்: 26 இதழ்: 10

16.11.1995

விலை ரூபாய் : 3

மக்கள் சமூகம் கவலையற்று வாழ ஒழுங்கான முறை, கூட்டுறவுத் தத்துவ வாழ்க்கை முறையேயாகும். இதற்கு மக்கள் தயாராகிவிட வேண்டும்.

பலருடைய நன்மை ஒன்றே கருதி வாழ்வில் இறங்க வேண்டும்.

–தந்தை பெரியார்



கூட்டுறவுச் சங்கத்தில் குடும்பத்துக்கு ஒருவர் வீதமாவது அங்கத்தினராய்ச் சேர வேண்டும். இந்த வகையிலும் இயக்கம் வளர்ந்தோங்கப் பாடுபட வேணுமாய் அனைவரையும் கேட்டுக் கொள்கிறேன். சமுதாயத்தில் தனி உடைமைக்கும், பொது உடைமைக்கும் மையமான ஒரு தங்குமிடமாகக் கூட்டுறவியக்கம் உருவாகியுள்ளது.

சமூக அமைதிக்கும் பொருளாதார நீதிக்கும் பயன்படும் கூட்டுறவு நமது நாட்டில் நன்கு பரவ வேண்டும், அதன் முழுப் பயனையும் அனைவரும் அடைய வேண்டும்.

–பேரறிஞர் அண்ணா

199919

N98 26-7-11

பேரறிஞர் அண்ணாவின் நூல்கள் தேசியவுடைமை:

மாண்புமிகு முதல்வர் பரிவுத் தொகையாக ரூ 75 இலட்சம் வழங்கினார்

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களையும், படைப்புகளையும் தேசியவுடைமையாக்கி, அதன்மூலம் அவரது எண்ணங்களும் கருத்துக்களும் விரைவில் பரவுவதற்கு வழிவகை செய்ய வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கருத்து தெரிவித்திருந்தார்.

அதன் அடிப்படையில், பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் எழுத்தோவியங்களைத் தேசியவுடைமை யாக்குவதற்காக வழங்கப்பட வேண்டிய பரிவுத் தொகையை நிர்ணயம் செய்ய ஒரு வல்லுநர் குழு அமைத்து ஆணையிட்டார். அந்தக் குழுவின் பரிந்துரையினை ஏற்று, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பேரறிஞர் அண்ணாவின் எழுத்தோவியங்களைத் தேசிய உடைமையாக்கி, அதற்கான பரிவுத் தொகையை (Consideration Amount for Nationalisation of the Works of Perarignar Anna) 75 இலட்சம் ரூபாய் என நிர்ணயம் செய்து

எது அழகு?

அழகு அழிந்து போகலாம். ஆனால், உங்களது ஒழுக்கம் அழியாமல் நிலைத்து நின்று உங்களை அழகு படுத்தும்

–ஒவிட்

சிக்கனத்தின் சிறப்பு.

சிக்கனத்தை உணர்ந்து செயல்படுத்து கிறவன், அபார வலிமையையும், வெற்றியையும் அடைகிறான்.

–ஜேம்ஸ் ஆலன்

ஆணையிட்டதோடு, அந்தப் பரிவுத் தொகை, திருமதி. ராணி அண்ணாதுரை அவர்களிடம் நேரில் வழங்கப்படும் என்றும் அறிவித்திருந்தார்.

2.11.1995 அன்று, மறைந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் இல்லத்திற்குச் சென்று, அவரது துணைவியார் திருமதி. ராணி அண்ணாதுரை அவர்களை, நேரில் சந்தித்து, பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் எண்ணங்களும், சிந்தனைகளும் எல்லா மக்களுக்கும் சென்றடைவதற்கு அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகளை விளக்கி, அவரது எழுத்தோவியங்களைத் தேசிவுடைமை ஆக்கியதற்கான பரிவுத் தொகையாக 75 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை நேரில் வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைப் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் வளர்ப்பு மகன்களும், அவர்தம் துணைவியரும் வீட்டு வாசலில் நின்று வரவேற்றார்கள். பின்னர் பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் குடும்பத்தாரிடம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறிது நேரம் அளவளாவினார்கள். மேலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடன் இந்த நிகழ்ச்சிக்கு வந்திருந்த மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர், மாண்புமிகு போக்குவரத்து மற்றும் வனத்துறை அமைச்சர், மாண்புமிகு உணவு அமைச்சர், மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர், மாண்புமிகு வணிகவரித் துறை அமைச்சர், மாண்புமிகு கல்வி அமைச்சர், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் மற்றும் மாண்புமிகு ஆதி திராவிட நலத்துறை அமைச்சர் ஆகியோரை பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் துணைவியார் திருமதி. ராணி அண்ணாதுரை அவர்களுக்கு அறிமுகப்படுத்தினார்கள். அந்த இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த பேரறிஞர் அண்ணா அவர்களின் படத்தின் முன்பு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நின்று வணங்கி, தனது மரியாதையைச் செலுத்தினார்.

பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்களின் வளர்ப்பு மகன்கள் டாக்டர் சி.என்.ஏ. பரிமளம், அவரது துணைவியார் திருமதி. சரோஜா, திரு. சி.என்.ஏ. இளங்கோவன் மற்றும் திருமதி. விஜயா, திரு. சி.என்.ஏ. கௌதமன் மற்றும் திருமதி துளசி, திரு. சி.என்.ஏ. ராஜேந்திரன் மற்றும் திருமதி. சாந்தா ஆகியோரும், அவர்களது மகன்களும் மகள்களும் இந்த நிகழ்ச்சியின்போது உடன் இருந்தார்கள். அவர்கள் அனைவரும் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டார்கள்.

திருமதி. ராணி அண்ணாதுரை அவர்கள் உடல்நலம் குறித்து விசாரித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், பின்னர், அங்கிருந்து விடைபெற்றுக் கொண்டார்.

● நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

அலோபதி மாணவர்களுக்கு இணையாக

சித்த மருத்துவக் கல்விக்கு பயிற்சி உதவித்தொகை உயர்வு

–மாண்புமிகு முதல்வர் அவர்கள் உத்தரவு

பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரியில், பயிலுகின்ற முதுகலை மருத்துவப் பட்டதாரி மாணவர்கள் சங்கம், சித்த மருத்துவத்தில் முதுகலைப் பட்டப்படிப்பு பயிலும் தங்களுக்கும், அலோபதி பிரிவில் முதுகலைப் பட்டப் படிப்புப் பயில்கின்ற மாணவர்களுக்கு இணையாகப் பயிற்சி உதவித் தொகை (Stipend) வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு அனுப்பி வைத்திருந்தது.

சித்த மருத்துவப் படிப்புப் பயில்கின்ற மாணவர்களுக்கும், அலோபதி மருத்துவப் படிப்புப் பயிலுகின்ற முதுநிலை மருத்துவப் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு வழங்குவதைப் போன்றே இணையாகப் பயிற்சி உதவித்தொகை (Stipend)வழங்கி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை வழங்கியிருந்தார். அதன்படி:

அ. முதுகலை மருத்துவப் பட்டப் படிப்புப் பயிலும் அரசுப் பணியில் இல்லாத மாணவ மாணவிகளுக்கு மாதம் ஒன்றுக்கு 1000 ரூபாய் உதவித்தொகை வழங்கப்படும்.

ஆ. அரசுப் பணியில் உள்ள, சித்த மருத்துவ முதுகலைப் பட்டப் படிப்புப் பயிலும் மாணவ மாணவிகளுக்குப் பாதி சம்பளம் மற்றும் 72 சதவிகிதம் அகவிலைப் படி அடங்கிய உதவித்தொகை வழங்கப்படும்.

இ. அலோபதி மருத்துவப் பட்டப்படிப்புப் பயில்கிற மாணவர்களுக்கு வழங்கப் படுவதைப் போன்றே, மாதம் ஒன்றுக்குப் பயிற்சி உதவித்தொகையாக (Stipend) 1,550 ரூபாய், சென்னை, பாளையங்கோட்டை அரசு சித்த மருத்துவக் கல்லூரிகள், திருமங்கலம், அரசு ஹோமியோபதி கல்லூரி, சென்னை,. அரசு யுனானி மருத்துவக் கல்லூரி ஆகியவற்றில் பயில்கின்ற மாணவ மாணவிகளுக்கும் வழங்கப்படும்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பிறப்பித்துள்ள ஆணையின் வாயிலாக, பல்வேறு மருத்துவப் படிப்புகளைப் பயில்கின்ற மாணவர்களுக்கு உதவித்தொகை (Stipend) வழங்கப்படுவதில் உள்ள வேறுபாடு (anomaly) முற்றிலும் களையப்பட்டுச் சித்த மருத்துவம், ஹோமியோபதி, யுனானி போன்ற இந்திய மருத்துவப் படிப்புப் பயில்கின்ற மாணவ மாணவிகளுக்கும் உதவித்தொகை முதன் முறையாக உயர்த்தி வழங்கப்படுகின்றது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் படைப்புகள் நாட்டுடைமை

மாண்புமிகு முதல்வர் ரூ.10 இலட்சம் பரிவுத் தொகை வழங்கினார்

தஞ்சாவூர் மாவட்டம் பட்டுக்கோட்டைப் பகுதியில் பிறந்து, சீரிய இலக்கியப் பணியாற்றி, தனது பாடல்கள் மூலம் தமிழக மக்களின் மனதில் நீங்காத இடத்தைப் பெற்ற பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களது எழுத்தோவியங்களையும், பாடல்களையும் அரசுடைமையாக்க வேண்டும் என்று அவரது துணைவியார் அவர்கள் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு கோரிக்கை அனுப்பிவைத்தார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களது எழுச்சிமிகு படைப்புகளை நாட்டுடைமையாக்கி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார். மேலும், அவர்களது எழுத்தோவியங்கள் அரசுடைமை யாக்கியதற்காக, பரிவுத் தொகையாக (Consideration Amount) ரூ.10 இலட்சம் வழங்கப்படும் என்று அறிவித்தார்.

அந்த அறிவிப்பினைத் தொடர்ந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் துணைவியார் திருமதி கௌரவம்மாள் அவர்களை நேரில் அழைத்து பரிவுத்தொகை ரூ.10 இலட்சத்தை வழங்கினார். திருமதி கௌரவம்மாள் அவர்களுக்கு ரூ.5 இலட்சமும், அவரது மகன் திரு குமாரவேலு அவர்களுக்கு ரூ.5 இலட்சமும், ஆக மொத்தம் ரூ.10 இலட்சம் காசோலைகளாக நேரில் வழங்கினார்.

பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களுடைய துணைவியாரும், மகனும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்குத் தங்களது குடும்பத்தின் சார்பாக நெஞ்சார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொண்டார்கள். பல காலமாக எவராலும் கவனிக்கப்படாமல் இருந்த தங்களது கோரிக்கையினை ஏற்று, பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம் அவர்களின் பாடல்களை நாட்டுடைமை யாக்கி, அவரது குடும்பம் தழைக்க ரூ.10 இலட்சம் பரிவுத்தொகை வழங்கியதற்குத் தாங்கள் எப்போதும் நன்றியுடையவர்களாக இருப்போம் என்று தெரிவித்துக் கொண்டார்கள்.

திரு குமாரவேலு அவர்கள் தற்போது தமிழக அரசின் செய்தி மற்றும் மக்கள் தொடர்புத் துறையில் உதவி மக்கள் தொடர்பு அலுவலராகப் பணியாற்றி வருகின்றார்.

'பூம்புகார்' கைவினைப் பொருள்கள்

'பூம்புகார்' எனும் சிறப்புப் பெயரோடு தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம், 1.8.1973 அன்று தொடங்கப்பட்டு ஒரு அரசு நிறுவனமாகச் செயல்பட்டு வருகிறது. கைவினைப் பொருட்கள் உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கைவினைஞர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதல், அவர்களது தயாரிப்புகளை விற்பனை செய்ய உதவுதல், இக்கழகத்தின் உற்பத்தி நிலையங்கள் மூலம் கைவினைப் பொருட்கள் உற்பத்தி செய்தல் போன்றவற்றை இந்நிறுவனம் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. இக்கழகம், தமிழ்நாட்டின் முக்கிய இடங்களிலும் மற்றும் புதுடெல்லி, பெங்களூர், கல்கத்தா, திருப்பதி போன்ற இடங்களிலுமாக 19 விற்பனை நிலையங்களைத் தன்னகத்தே கொண்டு உள்ளது. மேலும், கலைப் பொருட்களை உற்பத்தி செய்ய 10 உற்பத்தி நிலையங்களையும் பெற்றுள்ளது.

நாச்சியார்கோவில், மதுரை, வாகைகுளம், ஆயக்குடி ஆகிய இடங்களில் பித்தளை விளக்குகள் மற்றும் கலைப் பொருட்கள், நாச்சியார்கோவில் மற்றும் சுவாமிமலையில் பஞ்சலோக விக்ரகங்கள், கள்ளக்குறிச்சியில் சந்தன மர மற்றும் நாட்டு மரச் சிற்பங்கள், மாமல்லபுரத்தில் கற்சிற்பங்கள், தஞ்சாவூரில் கலைத்தட்டுகள் ஆகியவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

இக்கழகம் தனது 19 விற்பனை நிலையங்கள் மூலம் கைவினைப் பொருட்களை விற்பனை செய்வதோடல்லாமல், நாட்டில் பல இடங்களிலும் கண்காட்சிகள் நடத்தி கைவினைப் பொருட்களை அனைவரிடையேயும் பிரபலப்படுத்தி வருகிறது. சீரான முறையில் கண்காட்சிகளை நடத்துவதோடல்லாமல், பல சிறப்புமிக்க கண்காட்சிகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இவ்வழியில்,

ஒவ்வொரு ஆண்டும் கார்த்திகைத் தீபத்தை முன்னிட்டு அனைத்து பூம்புகார் விற்பனை நிலையங்களிலும் "விளக்குகளின் திருவிழா" என்ற பெயரில் கண்காட்சி நடத்தப்பட்டு வருகிறது. இந்தக் கண்காட்சியில் பாரம்பரியமான பித்தளை விளக்குகள், 2 1/2 அடி முதல் 6 அடி உயர அடிக் கிளை விளக்குகள் 8 1/2 முதல் 6 வரை உயரமுள்ள பாரம்பரிய மிக்க அன்னத்துடன் கூடிய குத்து விளக்குகள், அன்னம், சங்கு சக்கரம், கணபதி, தேவி முதலியவற்றைக் கொண்ட தொங்கு விளக்குகள், பல அளவுகளில் மலபார் விளக்குகள், படி விளக்குகள், வாசமாலை, அகல் விளக்கு, சுடர் விளக்கு, பாலாடை விளக்கு போன்றவை விற்பனைக்கு வைக்கப்பட்டு உள்ள விளக்குகளில் சில வகைகளாகும்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி
டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின்
நான்காண்டுப் பொற்கால ஆட்சியில்...

கூட்டுறவுத்துறையில் மகத்தான சாதனைகள்

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு கா.ப. பட்டாபிராமன்

அகில இந்தியக் கூட்டுறவு வார விழா கொண்டாடுகின்ற இந்த வேளையில், கடந்த நான்காண்டுகளில் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் தகுந்த வழிகாட்டுதலோடு கூட்டுறவுத் துறை பல பொற்காலச் சாதனைகளைப் படைத்துள்ளது. மேலும் சாதனைகள் தொடருகின்றன.

தமிழகத்திலுள்ள விவசாயிகளுக்குக் கடந்த நான்காண்டுகளில்-

குறுகிய காலக் கடன் ரூ.1954.78 கோடி.

மத்தியக் காலக் கடன் ரூ.224.90 கோடி.

நீண்ட காலக் கடன் ரூ.401.34 கோடி.

நகைக் கடன் ரூ.6050.37 கோடி வழங்கப்பட்டிருக்கிறது.

1995-96-இல் குறுகிய காலக் கடன் ரூ.560.00 கோடி-

மத்தியக் காலக் கடன் ரூ.60.00 கோடி.

நீண்ட காலக் கடன் ரூ.170.00 கோடி.

நகைக் கடன் ரூ.1645.00 கோடி வழங்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

ஆனால், இதுகாறும் நடப்பாண்டில் (செப்டம்பர் 95 வரையில்) குறுகிய காலக் கடன் ரூ.334.12 கோடியும், மத்தியக் காலக் கடன் ரூ.19.70 கோடியும், நீண்டகாலக் கடன் ரூ.32.70 கோடியும், நகைக்கடன் ரூ.957.89 கோடியும், சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணைசாராக் கடன் ரூ.30.25 கோடியும், இரசாயன உரங்கள் ரூ.120.68 கோடியும் வழங்கப்பட்டுள்ளன.

வேளாண் விளைபொருட்கள் விற்பனை ரூ.363.15 கோடியும், சிறப்பங்காடிகளின் மூலம் நுகர்பொருள் சில்லறை விற்பனை ரூ.743.70 கோடியும் நடைபெற்று இருக்கின்றது.

குறுகிய மத்தியக் காலக் கடன்கள் வழங்கியதில் நலிவடைந்த பிரிவினர் 65.6 சதவிகிதம் பயனடைந்து இருக்கிறார்கள்.

இதன்மூலம் குறுகிய காலக் கடன் 4,71,000 பேருக்கும், மத்தியக் காலக்கடன் 26,000 பேருக்கும், நீண்ட காலக்கடன் 3,306 பேருக்கும், நகைக்கடன் 13,36,000 பேருக்கும் சிறு மற்றும் குடிசைத் தொழில்கள் போன்ற பண்ணை சாராப் பிரிவுக் கடன்கள் 21,957 பேருக்கும், நலிந்த பிரிவினருக்குக் குறுகிய கால, மத்தியக் கால வேளாண்மைக் கடன்கள் 3,61,000 பேருக்கும் வழங்கப்

பட்டிருக்கின்றது.

விவசாயிகளுக்கு உடனடியாகக் கடன் வழங்குவதற்கு 3.00 இலட்சம் பேருக்குப் பச்சை வண்ண அட்டைகள் வழங்கி ரூ.586.87 கோடி கடன் வழங்கப் பட்டிருக்கிறது. நடப்பு நிதி ஆண்டில் மேலும் கூடுதலாக 20 சதவிகித அளவிற்குப் பச்சை வண்ண அட்டைகள் வழங்கிக் கடன் வழங்கப்பட இருக்கிறது. வாழ்வில் நலிவுற்றவர்களுக்கு குறுகிய, மத்தியக் காலக்கடன் ரூ.1439.96 கோடி வழங்கப் பட்டது.

1995-96-இல் நலிந்த பிரிவினருக்கு 70 சதவிகித அளவிற்குக் கடன் வழங்கப்பட இருக்கிறது.

ஆதிதிராவிடர்களுக்குக் கடன் வசதி

ஆதிதிராவிடர்களுக்குக் குறுகிய, மத்தியக் காலக் கடன்கள் ரூ.248.99 கோடி வழங்கப்பட்டது. நீண்ட காலக் கடன் ; ரூ.19.12 கோடி வழங்கப் பட்டது.

1995-96-இல் 16,000 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு, நபர் ஒன்றுக்கு ரூ.250 வீதம் வட்டியில்லாக் கடன் வழங்கப் பட இருக்கிறது. இதற்காக ரூ.40 இலட்சம் நிதி அனுமதிக்கப் பட்டுள்ளது.

நகரக் கூட்டுறவு வங்கிகளில் கூடுதலாகப் பங்குத் தொகை செலுத்த 4,000 பேருக்கு வட்டியில்லாக் கடனாகத் தனி நபருக்கு ரூ.500 வீதம் வழங்க ரூ.20 இலட்சம் அனுமதிக்கப் பட்டுள்ளது.

வறுமையைவிட, அறியாமையே அதிகத் துன்பத்தைத் தரும்.

–பர்மியப் பழமொழி

சிறு வியாபாரங்களுக்குக் கடன் வசதி

மத்தியக் கூட்டுறவு வங்கிகள் மூலம் சிறு வியாபாரங்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு ரூ.2.98 கோடி கடன் வழங்கப் பட்டிருக்கிறது. இதன்மூலம் 1.02 இலட்சம் பேர் பயன் பெற்றிருக் கிறார்கள். இதில் 50,000 மகளிருக்கு ரூ.8.27 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இவ்வாண்டு முதல இக்கடன ரூ.750 லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி சிறு தொழில் கடன்

இத்திட்டத்தின் கீழ், 5,67,103 பேருக்கு ரூ.260.18 கோடி கடன் வழங்கப்பட்டிருக்கிறது. இதில் 50 சதவிகிதம் மகளிர் பயன் பெற்றிருக்கிறார்கள். நடப்பாண்டில் இக்கடன் ரூ.750-லிருந்து ரூ.1,500 ஆக உயர்த்தி வ்ழங்கப்படுகிறது. நடப்பாண்டில் 2 இலட்சம் பேருக்கு இவ்வகைக் கடன் வழங்கப்படும்.

நகரக் கூட்டுறவு வங்கிகளின் சாதனைகள்

நகரக் கூட்டுறவு வங்கிகள் மூலம் ரூ.2270.81 கோடி பல்வகைக் கடன்களும், ரூ.1637.26 கோடி நகைக்கடனும் வழங்கப் பட்டுள்ளது.

நிலவளக் கூட்டுறவு வங்கிகள் நகைக் கடன் வழங்கும் திட்டம்

1994-95-ஆம் ஆண்டு முதல் பிரதம நிலவளக் கூட்டுறவு வங்கிகள் நகைக்கடன் வழங்க அனுமதிக்கப்பட்டுள்ளன. இவ்வகையில் 1994-95-ஆம் ஆண்டில் ரூ.22.48 கோடி கடனாக வழங்கப்பட்டுள்ளது. 1995-96-ஆம் ஆண்டிற்கு ரூ.60.00 கோடி நகைக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டு, செப்டம்பர் 1995 வரை ரூ.20.19 கோடி அளவிற்கு நகைக் கடன் வழங்கப்பட்டுள்ளது.

மகளிர் வங்கிக் கிளைகள்

22 மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் 25 மகளிர் வங்கிக் கிளைகள் தொடங்கப் பட்டுள்ளன. மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியின் சார்பில் ஒரு மகளிர் வங்கிக் கிளை தொடங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் மேலும் 12 மகளிர் வங்கிக் கிளைகள் தொடங்கப் படவுள்ளன.

கூட்டுறவு நியாயவிலைக் கடைகள்

தமிழகத்தில் உள்ள 20,960 கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் 1.37 கோடி குடும்ப அட்டைதாரர்களுக்கு ரூ.4,157 கோடி மதிப்புள்ள அத்தியாவசியப் பொருட்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. நியாயவிலைக் கடைகளில் பணிபுரிவோர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தி வழங்கியதோடு, தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளின் நியாய

கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு கருணைத்தொகை வழங்க மாண்புமிகு முதல்வர் ஆணை

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழ்நாட்டிலுள்ள கூட்டுறவுச் சங்கங்களில் பல்வேறு நிலைகளில் பணிபுரியும் அலுவலர்களுக்கும், பணியாளர்களுக்கும் இந்த ஆண்டு தீபாவளியையொட்டி கருணைத்தொகை வழங்க ஆணை பிறப்பித் துள்ளார்.

தமிழ்நாடு மாநிலத் தலைமைக் கூட்டுறவு வங்கியில் ரூ.3,750 வீதம் 688 பணியாளர்களுக்கு ரூ.25.80 இலட்சமும் சென்னை மத்தியக் கூட்டுறவு வங்கியில் ரூ.3,650 வீதம் 629 பணியாளர்களுக்கு ரூ.22.96 இலட்சமும், பிற மத்தியக் கூட்டுறவு வங்கிகள், நகரக் கூட்டுறவு வங்கிகளில் ரூ.1,600 வீதம் 7,019 பேருக்கு ரூ.112.30 இலட்சமும், கூட்டுறவுச் சங்கங்களில் போனஸ் சட்டப்படி ரூ.625 வீதம் 3,005 பேருக்கு ரூ.18.78 இலட்சமும், போனஸ் சட்டத்தில் வராத கூட்டுறவுச் சங்கங்களான பிரதமக் கூட்டுறவுச் சங்கங்களில் ரூ.375 வீதம் 40,168 பேருக்கு ரூ.150.63 இலட்சமும், மத்திய மற்றும் தலைமைக் கூட்டுறவுச்சங்கங்களில் ரூ.625 வீதம் 100 பேருக்கு ரூ.63 ஆயிரமும், கருணைத்தொகை வழங்கப்படுகிறது. இதன்மூலம் 51,609 பேருக்கு ரூ.331.10 இலட்சம் கருணைத்தொகை வழங்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆணை யிட்டுள்ளார்.

மேலும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், 22 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு விழா முன்பணம் (Festival Advance) ரூ.2,000 வழங்கப்பட்டு வருவதை இந்த ஆண்டு முதல் ரூ.3,000 ஆக உயர்த்தி வழங்க ஆணை பிறப்பித்துள்ளார்.

இதன்மூலம், தமிழகத்திலுள்ள 22 மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கிகளில் பணிபுரியும் 7,000 பணியாளர்கள் பயனடைவார்கள். இந்த வகையில், ரூ.2.10 கோடி விழா முன்பணமாக வழங்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை யிட்டுள்ளார்.

விலைக் கடைகளில் பணிபுரிகின்ற விற்பனையாளர்களின் சம்பளம், மாதச் சம்பளமாக மாற்றி ஆணை பிறப்பிக்கப் பட்டிருக்கிறது.

மேலும், 1,787 பகுதிநேர நியாயவிலைக் கடைகளும், பெண்களால் நடத்தப்படும் 142 துணைக் கூட்டுறவு விற்பனைக் கடைகளும் உருவாக்கப்பட்டுச் செயல்படுத்தப்படுகின்றன.

மலைவாழ் மக்களின் மேம்பாடு

மலைவாழ் மக்களின் பொருளாதார மேம்பாட்டினை உயர்த்தும் பொருட்டு, பெரும் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் கடந்த நான்கு ஆண்டுகளில் ரூ.316.01 இலட்சங்கள் நூறு சதவிகித மானியமாக வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் ரூ.98.30 இலட்சம் மானியம் வழங்கப்பட இருக்கிறது.

நுகர்பொருட்கள் விநியோகிப்பதற்காக 27 கூண்டு வண்டிகள் ரூ.91.50 இலட்சம் மதிப்பீட்டில் வழங்கப்பட்டிருக்கிறது.

விவசாய விளை பொருட்கள், இடு பொருட்கள் விற்பனை

விவசாய விளைபொருட்கள், நியாயமான முறையில், அதே

நேரத்தில் இலாபகரமான விலையில் விற்பனை செய்து, விவசாய உறுப்பினர்களுக்கு உதவி செய்யப்படுகிறது. ரூ.2170.55 கோடி மதிப்புள்ள வேளாண் விளைபொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

விவசாய இடுபொருட்கள் ரூ.896.85 கோடி அளவிற்கு விற்பனை செய்யப்பட்டது.

நுகர்பொருள் விற்பனை

கூட்டுறவு மூலம் கட்டுப்பாடான விலையில் நுகர்பொருள்கள் விற்பனை செய்யப்படுகிறது. ரூ.6186.25 கோடி மதிப்புள்ள நுகர்பொருட்கள் விற்பனை செய்யப்பட்டன.

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம்

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் காமராஜர் மாவட்டத்தில் ரூ.8.44 கோடி செலவில் நிறைவேற்றப்பட்டது. தென்னார்க்காடு வள்ளலார் மற்றும் விழுப்புரம் இராமசாமி படையாட்சியார் மாவட்டங்களில் ரூ.15.08 கோடி செலவில் திட்டப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. கோவை மாவட்டத்தில் ரூ.10.81 கோடி மதிப்பீட்டிலும், தருமபுரி மாவட்டத்தில் ரூ.11.60 கோடி மதிப்பீட்டிலும் நடப்பாண்டில் இத்திட்டப் பணிகள் நடைபெற இருக்கின்றன.

திருவண்ணாமலை சம்புவராயர், செங்கற்பட்டு எம்.ஜி.ஆர். ஆகிய மாவட்டங்களில் இத்திட்டப் பணிகள் நடைபெற உள்ளன.

கூட்டுறவுக் கல்வி

கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி 18,480 பேருக்குக் கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் மூலம் அளிக்கப்பட்டது. கூட்டுறவுப் பணியாளர்களுக்கு அஞ்சல் வழிக்கூட்டுறவுப் பட்டயப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன்மூலம் 21,132 பேர் பயன் அடைந்திருக்கிறார்கள்.

கூட்டுறவுப் பணியாளர்களுக்கு விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டது இதில் மாவட்ட, மாநில அளவில் பரிசுகள் வழங்கப்பட்டதோடு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா சுழற் கோப்பையும் அளிக்கப்பட்டது. இப்போட்டிகளில் 15,000 பேர் கலந்து கொண்டார்கள்.

உறுப்பினர் கல்வித் திட்டத்தின் மூலம் 16.80 இலட்சம் உறுப்பினர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. புதியதாகக் கூட்டுறவுச் சங்கங்களில் 32,300 உறுப்பினர்கள் சேர்ந்தார்கள். தமிழகத்திலுள்ள அனைத்து வானொலி நிலையங்கள் மூலமும் கூட்டுறவுக் கல்வி மாணவர்களுக்கு ஒலி பரப்பப்பட்டது. இதில் பல்லாயிரக் கணக்கான மாணவர்கள் பயன் பெற்றார்கள்.

பர்கூரிலும், பட்டுக்கோட்டையிலும் செயல்படுகின்ற தொழிற்பயிற்சிக் கூட்டுறவு நிலையங்கள் சுய வேலைவாய்ப்பினைத் தொடங்குகின்ற வகையில் தொழிற்பயிற்சி அளித்து வருகின்றன. 866 பேர் இதுகாறும் பயன் பெற்றிருக்கிறார்கள்.

விழுகின்ற விதை நல்ல விதையாக இருந்தால், அது கடலில் விழுந்தாலும் அங்கே ஒரு தீவு உருவாகும்.

–மலேசியப் பழமொழி

மேலும் மேம்பாட்டுப் பணிகள்

☆ நாகப்பட்டினத்தில் மகளிர் நகரக் கூட்டுறவு வங்கிக் கிளை தொடங்கப்படும்.

☆ ரூ.200 இலட்சம் செலவில் 1000 தொடக்க வேளாண்மைக் கூடடுறவு வங்கிகளுக்கு நவீன வசதிகளுடன் கூடிய வங்கி முகப்புகள் அமைக்கப்படும்.

☆ விழுப்புரத்தில் மாவட்ட மத்தியக் கூட்டுறவு வங்கியும், நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனைப் பண்டக சாலையும் புதிதாக உருவாக்கப்படும்.

☆ விவசாயிகளுக்கு இடுபொருட்கள் வழங்குவதற்கு 100 சிறப்பங்காடிகள் தொடங்கப்படும்.

☆ அனைத்துப் பல்கலைக் கழகங்களிலும் கூட்டுறவுச் சிறப்புப் பாடமாகக் கொண்டு இளங்கலை, முதுகலை பயிலுகின்ற மாணவர்களில் அதிகம் மதிப்பெண்கள் பெறுவோருக்குத் தங்கம், வெள்ளிப் பதக்கங்கள் ஒவ்வொரு ஆண்டும் வழங்கப்பட்டு வருகின்றன.

☆ [illegible]த்தில் கூட்டுறவுத் [illegible] மண்டபம் கட்டப்படும்.

☆ தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிகளில் முன்னெச்சரிக்கை மணி, தீயணைப்புக் கருவிகள் பொருத்துவதோடு சுற்றுச் சுவரும் எழுப்பப்படும்.

☆ மதுரையில் உள்ள கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையத்திற்கு ரூ.1.5 கோடியில் புதிய கட்டடம் கட்டப்படும்.

அலுவலர்களுக்குப் பதவி உயர்வு

கூட்டுறவுத்துறையின் மூலம் தமிழக மக்களுக்கு அளப்பரிய சாதனைகள் புரிவதில் பணியாளர்கள், அலுவலர்களின் பணி மகத்தானதாகும். கடந்த நான்காண்டுகளில் 1,127 இளநிலை ஆய்வாளர்கள் முதுநிலை ஆய்வாளர்களாகவும், 1,092 முதுநிலை ஆய்வாளர்கள் கூட்டுறவுச் சார்பதிவாளர்களாகவும், 347 சார்பதிவாளர்கள் துணைப் பதிவாளர்கள், 55 துணைப் பதிவாளர்கள் இணைப் பதிவாளர்களாகவும், 9 மண்டல இணைப்பதிவாளர்கள் கூடுதல் பதிவாளர்களாகவும் பதவி உயர்த்தப்பட்டு உற்சாகப் படுத்தப்பட்டுள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கடந்த 10 நாட்களுக்கு முன்னால் ஒரே நேரத்தில் வரலாறு காணாத வகையில் 45 கூட்டுறவுச் சார்பதிவாளர்கள் துணைப்பதிவாளர்களாகப் பதவி உயர்வு கொடுக்கப்பட்டுப் பணி அமர்த்தப்பட்டார்கள்.

இவ்வாறு கூட்டுறவுத் துறை, கோபுரமென வளர்ந்து, ஏழை எளியவர்கள் வாழ்வில் ஒளியேற்றி வருகின்றது என்றால் அது உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை.

தமிழக அரசின் திட்டங்களுக்குத் தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் பாராட்டு!

கடந்த 6.10.1995 அன்று தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவரான (Chairperson, National Commission for Women, New Delhi) திருமதி வி. மோகினிகிரி அவர்கள் இந்த ஆணையத்தின் உறுப்பினர்களோடு சென்னைக்கு வந்திருந்து மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைச் சந்தித்து உரையாடினார். அப்போது தமிழ்நாட்டில் மகளிர் முன்னேற்றத்திற்காக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில் தமிழக அரசினால் செயல்படுத்தப்பட்டு வரும் மகளிர் முன்னேற்றத் திட்டங்களைப் பற்றிக் கேட்டறிந்தார்.

அதன் பின்னர் டில்லி திரும்பிய தேசிய மகளிர் ஆணையத்தின் தலைவர் திருமதி மோகினிகிரி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு எழுதி அனுப்பிய கடிதத்தில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய தலைமையில் மகளிர் முன்னேற்றத் திட்டங்கள் தமிழ்நாட்டில் திறம்படச் செயல்படுத்தப்பட்டு வருவது குறித்து தன்னுடைய மகிழ்ச்சியையும, பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளார்கள்.

குறிப்பாக, "மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான 15 அம்சத் திட்டம்" (15 Point Programme for Women and Child) மகளிருடைய பிரத்யேகப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக மாநிலம் முழுமையும் அமைத்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் "குடும்ப நீதிமன்றங்கள்' (Family Courts)" மற்றும் அனைத்து மகளிர் காவல் நிலையங்கள்" (All Women Police Stations) ஆகிய அமைப்புகள் வெகு . சிறப்பாகச் செயல்பட்டு மகளிருடைய பிரச்சினைகளுக்கு உடனடியாக நிவாரணம் அளிக்கும் வகையில் வெற்றிகரமாகச் செயல்பட்டு வருவது குறித்து தான் பெருமகிழ்ச்சி அடைவதாகவும் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்கள்.

தமிழ் நாட்டில் பனைத்தொழில்

திரு. சோ. சௌரிராஜன்
இணை இயக்குநர்

தமிழ்நாடு மாநிலப் பனைவெல்லம் மற்றும் தும்பு விற்பனைக் கூட்டுறவு இணையம் ஒரு தொழில் கூட்டுறவு இணையம். மாநில அளவிலான இக்கூட்டுறவு இணையம் 1932-ஆம் ஆண்டு சென்னைக் கூட்டுறவுச் சட்டத்தின்படி 21.10.1957-இல் பதிவு செய்யப்பட்டு 16.11.1958 முதல் செயல்படத் தொடங்கியது. இவ்விணையம் தமிழகம் முழுவதையும் நிர்வாக எல்லையாகக் கொண்டுள்ளது. தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் தலைமைச்செயல் அலுவலரைப் பதிவாளராகக் கொண்டு, அதன் கட்டுப்பாட்டின்கீழ் செயல் பட்டுவந்த இக்கூட்டுறவு இணையம், தமிழக அரசு பனைத்தொழிலை அபிவிருத்தி செய்ய ஏற்படுத்தியுள்ள "தமிழ்நாடு பனைபொருள் அபிவிருத்தி வாரியத்தின் கீழ்" ஒரு மூத்த இந்திய ஆட்சிப்பணி அலுவலரைப் பதிவாளராகக் கொண்டு செயல்படவுள்ளது, இவ்வாரியம் கடந்த 6.1.1995 முதல் தனது பணியைத் தொடங்கியுள்ளது.

தமிழ்நாட்டில் பனைத் தொழிலை நம்பி வாழும் ஏராளமான பனைத் தொழிலாளர்களின் வளர்ச்சி மற்றும் அவர்களின் பொருளாதார வளர்ச்சியை நோக்கமாகக் கொண்டுள்ள இந்த இணையம் பனைத்தொழில் தொடர்பான அனைத்துப் பணிகளையும், மேற்கொண்டு தமிழகக் கிராமங்களின் பொருளாதார வளர்ச்சிக்குச் சிறப்பு பணிபுரிகின்றது.

இம்மாநிலப் பனைவெல்லக் கூட்டுறவு இணையம் ஒரு மூன்றடுக்கு முறையிலான நிர்வாக அமைப்பு முறையில் செயல்பட்டு வருகிறது. அதாவது, கிராமப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களை, சம்பந்தப்பட்ட அந்தந்த மாவட்டப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் நிர்வாகித்து வருகின்றன. அத்தகைய மாவட்ட சம்மேளனங்களை இம்மாநில இணையம் கட்டுப்படுத்தி வழி நடத்தி வருகின்றது. தமிழகம் முழுவதும் 1578 ஆரம்பப் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களும் ஏழு மாவட்ட அளவிலான பனைவெல்ல விற்பனைக் கூட்டுறவுச் சம்மேளனங்களும் செயல்பட்டு வருகின்றன:

இணையமும், கிளைகளும்:

இம்மாநிலச் சம்மேளனம் 22 கிளைகளைத் தமிழகமெங்கும் நிறுவி, செயல்படுத்தி வருகின்றது. இக்கிளை நிலையங்கள் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் அந்தந்த பகுதிகளில் கிடைக்கும் கச்சா பனைப் பொருட்களில் சிறப்பு வாய்ந்தவைகளைத் தேர்ந்தெடுத்து அவைகளை மூலப்பொருட்களாகக் கொண்டு பல்வேறு வகையான பனைப்பொருள்களை உற்பத்தி செய்து வருகின்றது. குறிப்பிடத்தக்கதாக தூத்துக்குடிப் பகுதியில் உள்ள குளச்சல், வேதாரண்யம் போன்ற கிளைகளின் மூலம் பனந்தும்பும் திருச்செந்தூர்ப் பகுதியில் வில்லிபுத்தூர் பகுதியில் பனங்கற்கண்டையும் மதுரைப் பகுதிகளாகிய மானாமதுரை, மதுரை, சிவகங்கை போன்ற கிளைகளின் மூலம் பனை ஓலைகளினால் செய்யப்படுகின்ற பொருட்களையும் தென்னிலை, மானாமதுரை, வேடந்தாங்கல், புதுக்கோட்டை போன்ற பகுதிக் கிளைகளில் தூரிகைகள் மற்றும் தும்பும் உற்பத்தி செய்து வருகின்றது. இதுவன்றி, மாநில இணையம் சில குறிப்பிட்ட திட்டக் கிளைகளின் மூலம் அனைத்துப் பனை உற்பத்திப் பொருட்களையும் உற்பத்தி செய்து வருகின்றது.

மாநில இணையம் மற்றும் கிளைகள் உற்பத்தி செய்திடும் பனைப்பொருட்களை இவ்விணையம் "பனைவிற்பனை அங்காடிகளின்" "PALM KRAFT" மூலம் விற்பனை செய்து வருகின்றது. சென்னை நகரின் சில பிரதான மையங்களிலும், சுற்றுலா மையங்கள் மற்றும் புனிதத் தலங்களிலும் இவ்விற்பனை மையங்கள் இயங்கி வருகின்றன.

பனைப்பொருட்கள்:

பனையிலிருந்து பல்வேறு உண்ணும் வகையான பொருட்களும், உண்ணாவகையான பொருட்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. உண்ணும் பொருட்களாகப் பனைவெல்லம், பனஞ்சர்க்கரை, பனங்கற்கண்டு, பதப்படுத்தப்பட்ட நுங்கு, பனஞ்சர்க்கரையால் தயாரிக்கப்பட்ட பிஸ்கட் வகைகள், மிட்டாய் வகைகள் போன்றவற்றுடன் குளிரூட்டப்பட்ட பதநீர் மற்றும் பானவகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன.

உண்ணாப்பொருட்களாக பனந்தும்பு, பனந்தும்பு தூரிகைகள், பனை ஓலைக் கைவினைப்பொருட்கள், பனைநார், கைவினைப்பொருட்கள் மற்றும் பொம்மைகள் போன்றவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

பனந்தும்பு:

பனைமடல்களிலிருந்து தயாரிக்கப்படும் பனந்தும்பு அன்னியச் செலாவணியை ஈட்டித்தரும் ஒன்றாகும். இது, மாநில இணைய கிளைகள் மற்றும் பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்களின் பனைத் தொழிலாளர்கள் உற்பத்தி செய்து தரும் பனந்தும்பினை நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்யப்பட்டு, அவைகள் இவ்விணைய கிளைகளின் மூலம் சுத்திகரிக்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றது. இதன் மூலம் பனைத்தும்பு உற்பத்தியாளர்கள், தான் உற்பத்தி செய்த தும்பிற்கு நியாயமான விலை பெறுவதுடன், தொடர்ந்து வேலை வாய்ப்பும் பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் இந்த இணையம் சுமார் ஒரு கோடி ரூபாய் அளவில் பனந்தும்பினை ஏற்றுமதி செய்து வருகின்றது.

பனந்தும்பு ஏற்றுமதி செய்யப்படுவதோடல்லாமல், இத்தும்பினால் பலவகையான தூரிகைகள் உற்பத்தி செய்யப்படுகின்றன. இந்த வகைத்தூரிகைகள் விலை மலிவானதாகவும், நீடித்து உழைக்கத்தக்கதாகவும் உள்ளதால், பல்வேறு தொழில் துறைகளில் இந்தத் தூரிகை வகைகள் பயன்படுத்தப்படுகின்றன. சென்னை மாநகராட்சியின் சாலைத் துப்புரவுப் பணிகளுக்கும் தமிழகம் மற்றும் ஆந்திரத்தில் போக்குவரத்து நிறுவனங்களின் வாகனங்களைத் துப்புரவு செய்யவும், மத்திய மற்றும் தென் தமிழகத்தின் நூற்பாலைகளுக்கான துப்புரவுப் பணிகளுக்கானதுமான பலவகைத் தூரிகைகளை இந்நிறுவனம் உற்பத்தி செய்து விநியோகிக்கிறது. இவ்வாறு பனந்தும்புத் தூரிகைகள் தொழில் துறைமட்டுமின்றி, வீட்டு உபயோகங்களுக்கான பலவகையான தூரிகைகளும் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தூரிகை உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் பனந்தும்பு, கிராமக் கைவினைஞர்கள் உற்பத்தி செய்யும் தும்பினால் செய்யப்படுவதால் இக்கிராமத் தொழிலாளர்கள் தொடர்ந்து வேலை வாய்ப்பும், பொருளதார உயர்வும் பெறுகின்றனர்.

ஈச்சங்கூடைகள் உற்பத்தி

இவ்விணைய தங்களிக்குப்பம் கிளையின் மூலம் சுமார் 200 ஈச்சங்கூடை முடையும் தொழிலாளர்களுக்குக் கடனுதவி செய்து அவர்கள் உற்பத்தி செய்யும் ஈச்சங்கூடைகளைக் கொள்முதல் செய்து அவற்றைச் சென்னை மாநகராட்சி போன்ற நகராட்சிகளுக்குத் துப்புரவுப் பணிகளுக்கு விநியோகித்து வருகின்றது. இதன் மூலம் கிராமக் கூடைமுடைவோரின் குடும்பங்கள் ஆண்டு முழுவதும் வேலைவாய்ப்பும் வருவாயும்

முதல் அட்டை சொல்லும் செய்தி:

இந்தியக் குடியரசுத் துணைத்தலைவரை மாண்புமிகு முதல்வர் வரவேற்றார்

மேதகு இந்தியக்குடியரசு துணைத்தலைவர் திரு.கே.ஆர்.நாராயணன் அவர்கள் இரண்டு நாள் பயணமாகச் சென்னை வந்தார். மதுரையில் இருந்து தனி விமானம் மூலம் புறப்பட்டு 7.11.95 அன்று மாலை 4.45 மணிக்குச் சென்னை விமான நிலையத்திற்கு வந்து சேர்ந்தார். அவருடன் அவருடைய துணைவியாரும் வந்திருந்தார்.

அவரை, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், பூச்செண்டு கொடுத்து வரவேற்றார். பின்னர், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களை அவருக்கு அறிமுகம் செய்து வைத்தார். மாண்புமிகு அமைச்சர்கள் சால்வை அணிவித்துக் குடியரசு துணைத்தலைவரை வரவேற்றனர்.

தலைமைச்செயலாளர் திரு.என். ஹரி பாஸ்கர் இ.ஆ.ப., காவல் துறைத்தலைவர் திரு.டபிள்யூ.ஐ.தேவாரம் இ.கா.ப. சென்னை நகரக்காவல் துறை ஆணையாளர், திரு.வீரராகவன் இ.கா.ப., ஆற்காடு இளவரசர் திரு.முகமது அப்துல் அலி உள்பட ஏராளமானவர்கள் மேதகு குடியரசுத் துணைத்தலைவரை வரவேற்றனர்.

செய்து அவர்கள் தொழில் செய்திட உதவி வருகின்றது. இவர்கள் உற்பத்தி செய்யும் பனைவெல்லத்தை, நியாயமான விலைக்குக் கொள்முதல் செய்து விற்பனை நடவடிக்கைகளைத் தானே மேற்கொள்ளுகின்றது. இதன் மூலம் ஏழைப் பனைத் தொழிலாளர்கள் தனியார் வியாபாரிகளின் பிடியில் சிக்கித் தனது உற்பத்திப்பொருட்களை வாங்கிய கடனுக்கு ஈடாகக் கொடுத்து ஏழ்மையில் உழலும் நிலை தவிர்க்கப்படுவது மட்டுமல்லாமல், தான் உற்பத்தி செய்த பனைவெல்லத்தை விற்க, விற்பனை மையங்களைத் தேட வேண்டிய அவசியமில்லாமலும், நட்டத்திற்கு விற்கும் நிலையிருந்து காப்பாற்றப்படவும் படுகின்றனர்.

இதேபோன்று பனைவெல்லம் காய்ச்சவும், பனைஓலை முடையவும் மத்திய அரசின் ஒப்புக் கொள்ளப்பட்டத் திட்டத்தின்கீழ், பம்பாய் கதர்க் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் நிதியுதவியைப் பெற்றுத் தொழில் நுட்ப வல்லுநர்களுக்குக் கடனுதவிகள் வழங்கப்படுகின்றன: இவை பெரிதும் பெண்கள் மேற்கொள்ளக்கூடிய தொழிலாக இருப்பதால், இக்கடனுதவி பெறும் பெண்தொழிலாளர்கள் தொடர்ந்து தொழில் செய்யவும், போதிய வருவாய் ஈட்டவும் வழிவகை ஏற்படுகின்றது. இப்பணியின் மூலம் ஏராளமான பெண்கள் வேலைவாய்ப்பும், வாழும் வழியும் பெறுகின்றனர். இவர்களின் உற்பத்திப் பொருட்களையும், மாநில இணையம் தனது கிளைகளின் மூலம் கொள்முதல் செய்து விற்பனை செய்து வருகின்றது.

தொழிற் கருவிகள்:

இவ்விணையம் பனைத் தொழிலாளர்களுக்குப் பல்வேறு தொழிற் கருவிகளை வழங்குவதுடன், கருவிகளைக் கொள்முதல் செய்யக் கடனுதவியும் செய்து வருகின்றது. பனை ஓலைத் தொழில் மற்றும் பனைநார்ப் பொருள்கள் தொழில் செய்யத் தேவையான கருவிகளைக் குறிப்பாக, பெண்களுக்கு வழங்கிப் பயிற்சி அளித்து, தொழில் செய்ய உதவி வருகின்றது.

தற்போது , மாநில அரசின் நிதியுதவியுடன் தமிழகத்தின் 1000 பனைத்தொழிலாளர்களுக்குப் பனை ஏறும் கருவி ஒன்றை அறிமுகம் செய்து மாதிரித் திட்டமாகச் செயல்படுத்த உள்ளது. இத்திட்ட வெற்றியின் அடிப்படையில் இது தமிழகத்தில் மேலும் விரிவுபடுத்தப்படும். இதனால் பனை ஏறுவதைக் கடினமாகக் கருதிடும் கிராம

இளைஞர்களுக்கு ஆர்வமேற்படும் நிலையும் கிராம இளைஞர்களுக்குப் பனைத்தொழிலில் ஈடுபாடும் கிராம இளைஞர்களின் வேலைவாய்ப்பும் கூடும். இதற்கு அரசு ரூ 10.00 லட்சம் நிதியுதவி அளித்திட இசைந்துள்ளது.

மாநில இணையப்பணிகள்:

மாநில அளவிலான இவ்விணையம், மாவட்டச் சம்மேளனங்களுக்கு அரசினன் நிதி உதவிகளைப் பெற்றுத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. தொழிற்கடன்கள் வழங்குவதும், அவற்றை வசூல் செய்வதுமான பணிகளுடன், உற்பத்தி, விற்பனை, ஆய்வு, அறிவுரை மற்றும் ஆலோசனைகள் வழங்குதல், கண்காணித்தல், பயிற்சி அளித்தல் போன்றவற்றுடன் தொழில் நுட்ப ஆலோசனைகளையும் வழங்கிவருகிறது. இத்துடன், கிராமப் பனைத்தொழில் கூட்டுறவு நிறுவனங்களை வளர்ப்பதும் விரிவுபடுத்துவதும் இதில் ஒன்றாகும்.

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி:

மாநில இணையம், உற்பத்தி செய்த மற்றும் தமிழகமெங்கும் பனைத்தொழிலாளர்களிடம் கொள்முதல் செய்த பனந்தும்பினைத் தரவாரியாக வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்து வருகிறது. 1994-ஆம் ஆண்டில் 125.83 இலட்சம் ரூபாய்க்குப் பனந்தும்பினைப் பல்வேறு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது. அத்துடன் ரூ 9.72 இலட்சம் மதிப்புள்ள பனை ஓலைப் பொருட்களையும் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துள்ளது.

நிதியுதவி:

மத்திய அரசின் கதர்க் கிராமத் தொழில் ஆணைக்குழு ஒவ்வொரு ஆண்டும் சுமார் ரூ 250 இலட்சம் கடன் மற்றும் மானியத்தொகையினை பனைத் தொழில் வளர்ச்சிக்காக அளித்து வருகிறது. 1994 -ஆம் ஆண்டுக்கானப் பனைத்தொழில் வளர்ச்சிக்காக மத்திய கதர் ஆணைக்குழு ரூ 15.29 இலட்சம் மானியமாகவும், ரூ 211.00 இலட்சம் கடனாகவும், ரூ 150.00 லட்சத்தினை வங்கிக் கடனாகவும் அங்கீகரித்துள்ளது.

பனைத் தொழில் பயிற்சி:

மாநில இணையம் தனது கடலூர் மண்டலப் பனைப் பொருள் பயிற்சி நிலையம் மூலம் ஆர்வமுள்ள கிராம இளைஞர்களுக்குப் பனைத் தொழில் பயிற்சி அளித்து வருகின்றது. இப்பயிற்சி நிலையத்தில் தென்னிந்திய மாநிலங்களான ஆந்திரம், கேரளம், கர்நாடகம் மற்றும் தமிழக மாநில இளைய சமுதாயத்தினருக்குப் பனைத் தொழில் பயிற்சி அளித்து வருகிறது. இப்பயிற்சித் திட்டத்திற்கு மத்திய அரசு கதர் ஆணைக்குழு நிதியுதவி அளித்து வருகிறது. இத்திட்டத்தில் பயிற்சி பெறும் பயிற்சியாளர்களுக்கு உதவித்தொகையாக மாதம் ரூ.350 பயிற்சி பெறும் மூன்று மாதங்களுக்கும் வழங்கப்படுகிறது. இத்துடன் மாநில அரசின் திட்டங்களின் மூலம் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் பனைத்தொழில் பயிற்சிகள் பல்வேறு பனைத்தொழில்களுக்கும் அளிக்கப்படுகின்றது.

பொருட்காட்சிகளின் பங்கீடு:

பனைத்தொழில் குறித்த

ரூ. 87 இலட்சம் மதிப்பில் திருப்பத்தூரில் புதிய நீதிமன்றக் கட்டடம்

நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிமன்ற அலுவலர்களுக்கான குடியிருப்புகள் கட்டுதல் போன்ற பணிகளை மேற்கொள்ளும் நீதி நிர்வாக மேம்பாட்டுத் திட்டத்திற்குத் (Scheme of Development of Judiciary) தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் தமிழக அரசு 1993-94-ஆம் ஆண்டு முதல் நிதி ஒதுக்கீடு செய்து செயல்படுத்திக் கொண்டு வருகிறது.

இந்த ஆண்டு வரை 25 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து, நீதிமன்றங்களுக்கும், நீதிமன்ற அலுவலர்களுக்குமான கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன.

1995-96-ஆம் ஆண்டிற்கான இத்திட்டத்தின் மூலம், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டம் திருப்பத்தூரில் புதிதாக நீதிமன்றக் கட்டடமும், சுற்றுச் சுவரும் கட்டுவதற்காக 87 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள இந்தப் பணி விரைவில் மேற்கொள்ளப்படும்.

இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்றுவீர்!

—மாண்புமிகு பிரதமருக்கு மாண்புமிகு முதல்வர் கடிதம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் 3.11.1995 அன்று மாண்புமிகு பாரதப் பிரமர் திரு பி.வி.நரசிம்மராவ் அவர்களுக்கு எழுதிய கடிதத்தில், இலங்கையில் மீண்டும் தலைதூக்கியுள்ள இனக்கலவரம் குறித்தும், இலங்கை இராணுவப் படைகளின் தாக்குதல்களினால் நாள்தோறும் அப்பாவித் தமிழர்கள் பலியாவதாக வெளிவரும் செய்திகளால் தமிழக மக்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்பு குறித்தும், மத்திய அரசு இது குறித்து இலங்கை அரசுடன் பேச்சு வார்த்தை நடத்தி அப்பாவித் தமிழர்களை இராணுவ தாக்குதல்களிலிருந்து காப்பாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டிருந்தார்.

மாண்புமிகு பிரதமர் அவர்கள், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குப் பதில் கடிதம் அனுப்பி வைத்துள்ளார். மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் எழுதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள விவரங்களைத் தான் குறித்துக் கொண்டதாக, மாண்புமிகு பிரதமர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

அறிவையும், பனைப்பொருட்களின் சிறப்பையும் மக்கள் உணரும் வகையில் அரசு நடத்தும் விழாக்களிலும், பொருட்காட்சிகளிலும், இவ்விணையம் பங்கேற்று சிறப்பதுடன் பனைப் பொருட்களுக்கு நல்ல விளம்பரம் கிடைக்கச் செய்கின்றது. சென்னையில் நடைபெறும் ஒவ்வொரு அகில இந்தியச் சுற்றுலா மற்றும் வர்த்தகப் பொருட்காட்சியின் கூட்டுறவு அரங்கினில் இவ்விணையம் பங்கேற்று, கணிசமான அளவு பனைப்பொருட்களை விற்பனையும் செய்து வருகிறது. இதனால் இது இவ்வரங்கு அமைப்பு பொறுப்புத் துறையான கூட்டுறவு ஒன்றியத்தின் பாராட்டையும் பெற்றுள்ளது. மேலும், ஒவ்வொரு ஆண்டும் கூட்டுறவு ஒன்றியம் நடத்தும் கூட்டுறவு வார விழாவின் போதும் தமிழகத்தில் சிறந்த பனைத் தொழில் கூட்டுறவு இணையமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டப் பெற்று வருகிறது.

மேலும், கதர்க் கிராமத் தொழில் ஆணைக்குழுவின் காதி கிராமோத்யோக் பவன் கிண்டி காந்தி மண்டபத்தில், நடத்தும் காந்தி பிறந்த நாளை முன்னிட்டு நடத்தப்பெறும் பொருட்காட்சியிலும் பங்கு பெற்று பொதுமக்களின் சிறப்பான வரவேற்பை ஒவ்வொரு ஆண்டும் பெற்று வருகிறது.

உற்பத்தி, விற்பனை:

1994 -95-ஆம் ஆண்டில் இவ்விணையம் இதரத் தமிழகக் கூட்டுறவு அமைப்புகள் மற்றும் தனிநபர் உற்பத்திகளின் மூலம் ரூ 121.90 இலட்சம் மதிப்புள்ள பனைப்பொருட்களை உற்பத்தி செய்து ரூ 241.77 இலட்சத்திற்கு விற்பனை செய்துள்ளது.

தமிழகம், இந்தியாவிலேயே மிக அதிக அளவு பனை மரங்களைக் கொண்டுள்ள சிறப்பினைப் பெற்றுள்ளதால் அரசு புதிதாக அமைத்துள்ள தமிழ்நாடு பனைப்பொருள் வளர்ச்சி வாரியத்தின் நேரடிக் கட்டுப்பாட்டின் கீழ் செயல்பட்டு கண்காணிப்பு மற்றும் ஆலோசனைகளின் மூலம், தற்போதுள்ள இவ்விணையத்தின் பணி எதிர்வருங்காலங்களில் மேன்மேலும் சிறப்பு பெறும் என்பதில் ஐயமேதும் இல்லை!

1 இலட்சத்து 40 ஆயிரம் கரும்பு விவசாயிகளுக்குப் பரிசு

கரும்புக்குக் கூடுதல் விலை மாண்புமிகு முதல்வர் ஆணை

தமிழகத்திலுள்ள 17 கூட்டுறவு மற்றும் பொதுத்துறைச் சர்க்கரை ஆலைகளுக்கு 1994-95-ஆம் ஆண்டு அரைவைப் பருவத்தில் கரும்பு வழங்கிய விவசாயிகளுக்கு ஒரு டன் கரும்புக்கு 10 ரூபாய் வீதம் கூடுதல் விலை கொடுக்க மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணையிட்டுள்ளார்.

இந்தக் கூடுதல் விலை தீபாவளிக்கு முன்னர் வழங்கப்படும். இந்தக் கூடுதல் விலை ஏற்கெனவே அரசால் நிர்ணயிக்கப்பட்ட மாநில அரசின் பரிந்துரை விலையான டன் ஒன்றுக்கு 525 ரூபாய்க்கும் (8.5 சதவிகித சர்க்கரை அளவிற்கு) மேலானதாகும்.

தமிழகத்திலுள்ள 14 கூட்டுறவு மற்றும் 3 பொதுத்துறைச் சர்க்கரை ஆலைகள் 1994-95-ஆம் பருவத்தில் ஈட்டிய லாப நட்ட அடிப்படையில் கரும்பிற்கு இந்தக் கூடுதல் விலை வழங்க ஆணையிடப்பட்டுள்ளது. 1994-95 அரைவைப் பருவத்தில் மாநில அரசு கரும்பு விலை நிர்ணயம் செய்யும்பொழுது மத்திய அரசின் விலையைவிட டன் ஒன்றுக்கு 134 ரூபாய் கூடுதலாகக் கொடுக்க ஆணையிட்டது. இது 1993-94-இல் மாநில அரசு மத்திய அரசு விலையைவிடக் கூடுதலாக நிர்ணயித்த 105-ஐ விட 29 ரூபாய் மேலும் கூடுதலாகும். எந்த ஒரு மாநில அரசும் கரும்பு விலையை மத்திய அரசு விலையைவிட இவ்வளவு கூடுதலாக இதுவரை நிர்ணயம் செய்ததில்லை.

விவசாயிகள் நலனைக் கருதி தமிழக அரசு, மாநில அரசு கரும்பு விலையை, மத்திய அரசின் விலையைவிட டன் ஒன்றுக்கு 134 ரூபாய் கூடுதலாகக் கொடுத்திருந்தும், அதை ஈடுகட்டும் அளவில் வெளிச் சந்தை சர்க்கரை விலை உயராததாலும், இந்த ஆண்டு அபரிதமாகத் தேவைக்கு மேல் தமிழகத்தில் உற்பத்திச் செய்யப்பட்ட பெருமளவு கரும்பை, விவசாயிகளின் நலன் கருதி, கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் எடுத்து அரைவை செய்ததன் காரணமாக ஆலை அரைவை, செப்டம்பர் 1995 வரை நீடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டு ஜூலை முதல் செப்டம்பர் 1995 வரை கரும்பு அரைவை செய்ததில், கரும்புச் சாற்றில் மிகக் குறைவான சர்க்கரை அளவே இருந்ததால், அனைத்து ஆலைகளுக்கும் கணிசமான நட்டம் ஏற்பட்டது.

இருப்பினும் கரும்பு விவசாயிகளின் நலனைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்கள் கரும்புக்குக் கூடுதல் விலையாக டன் ஒன்றுக்கு 10 ரூபாயாவது கொடுக்க வேண்டுமென முடிவெடுத்து அவ்வாறே அதற்கான ஆணையிட்டுள்ளார். இதனால் கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளைச் சேர்ந்த சுமார் 1,40,000 கரும்பு விவசாயிகள் மொத்தம் 11 கோடி ரூபாய் பெற்று பயனடைவார்கள்.

இந்தக் கூடுதல் கரும்பு விலையும் சேர்த்தால், 1994-95-ஆம் அரவைப் பருவத்தில் கரும்புக்கான சராசரி விலை டன் ஒன்றுக்கு குறைந்தபட்சம் 541.20 ரூபாயாகவும், அதிகபட்சம் 602.90 ரூபாயாகவும் இருக்கும்.

> **எல்லாக் கேடுகளும் பாடுகளும் துன்பங்களும் தொல்லைகளும் நீங்கி எல்லாரும் இன்பமாக வாழ வேண்டுமென்றும், இவ்வருள் நோக்கம் கொண்டே தெள்ளிய மனமும் ஒள்ளிய அறிவும் தின்னிய நெஞ்சும் நுண்ணிய மதியும் கொண்ட திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினார்.**
>
> -மொழிஞாயிறு
> ஞா. தேவ நேயப்பாவாணர்

தருணம் இதுவே, தவறவிட்டால் உலகம் நம்மை இகழும்!

தமிழர் இனிப் பிரியோம் என்றே தூளுரைப்போம்
புரட்சித்தலைவியின் தலைமையில் இணைந்து நிற்போம்!

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர்
திரு கு.ப. கிருஷ்ணன்

எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டில் 2.1.1995 அன்று இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள் எனும் தலைப்பில் நடைபெற்ற கவியரங்கைத் தொடங்கி வைத்து, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் திரு கு.ப. கிருஷ்ணன் அவர்கள் பாடிய கவிதை.

தமிழுக்கு ஆராதனை செய்வதற்கே
தரணித்தமிழர் எல்லாம் தஞ்சையில் கூட வைத்த
இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற பரணியே!
நீக்கமற என் நெஞ்சில் நிறைந்திருக்கும் பேரருளே!
நித்தமும் என் நெற்றியில்
நின் பாதமண்ணோ பற்றியிருக்கும்
துஞ்சும் பொழுதும்- தாயே, தமிழே,
நின்பதமே நெஞ்சில் கொண்டிருக்கும்
தொண்டன் நான் வணங்குகின்றேன்

தஞ்சையில் இத்தமிழ்ச் சபையில் மட்டுமல்ல;

தஞ்சையில் இத்தமிழ்ச் சபையில் மட்டுமல்ல;
அருளே! அமிழ்தென நீ அரசோச்சும் சபையிலும் என்னை
அமர வைத்து அழகு பார்க்கும் அன்னையே!
ஒவ்வொரு கணமும் உன்னையே வணங்கி
உன் செவ்விய சீரடி சிந்தையில் தாங்கி
கவியரங்கம் தொடங்கிக் கடைதிறப்பு முற்படுவேன்
தமிழாய் நின்று வாழ்த்து தாயே!

அல்லும் பகலும் அயராது வழி நடத்தி
அகில உலகம் எல்லாம் அழகாய்க்கூட வைத்தாய்
தமிழ்க்கூடம் நிகழ்த்தியுள்ள தாய்க்கொரு
வணக்கம் சொல்வோம் ஆயிரம் நன்றி ஏந்தி

தென்னவனே
காரைக்குடியில் தமிழ் உண்டவனே
இக்கவியரங்க முன்னவனே!
கலை வளர்க்கும் அன்னை என்னும்
துறை வளர்க்கும் நல்லமைச்சே!
நண்புநிறை அமைச்சர்களே!
தமிழ் வணக்கம் கூறுகின்றேன்
தட்டாமல் ஏற்பீர்கள் நட்பால்.

இருபதாம் நூற்றாண்டுக் கவிஞர்கள்!
இதுதானே கவியரங்கப் பாடுபொருள்

பித்தம் தலைக்கு ஏறியதால், தமிழ்ப்
பித்தம் தலைக்கு ஏறியதால்
வெள்ளிப்பனிமலை ஆகும் சித்தரைப் போல்;
வெள்ளித்திரை ஆண்டவனே!
ஆண்டவன் தலைமையில் அன்று ஒரு தமிழ்ச் சங்கம்
இன்றும் ஒரு தமிழ்ச் சங்கம்
இதுவே தொடர்கிறது அன்னையின் சக்தியால் இன்று.

சிவனடி பொன்னடி பூங்குன்றன்
மேத்தா முத்துலிங்கம் சண்முகம் எனக்
கொட்டும் தமிழ் அருவிகள் குவிந்துள்ளனர் இங்கே.
குற்றாலத்தில் கூட ஐந்தருவி தான்
அருவியே இல்லாத தஞ்சைக்கு
தமிழருவி 7 தந்திட்ட அன்னைக்கு
அறிவார்ந்த தமிழ் சுவைக்கும் வணக்கம்.

நஞ்சை செழிக்கும் நல்ல மண் தஞ்சை மண்
நெல், வாழை, கரும்புக்கும்
நிறை காவேரி வளம் சேர்க்கும்,
சொல்லுக்கும் வளம் பெருக்கும
சுந்தரக் கவிஞர்களோ

அணிவகுத்து அமர்ந்துள்ளார்;
அலைகடலாய்ச் சுவைஞர் கூட்டம்
தலைவி அவர் சொல்படியே தஞ்சை முழுவதுமே!

கவிதையே வாழ்க்கையாக
வாழ்க்கையே கவிதையாக
கூடு கட்டிய அக்கினிக் குஞ்சு
வாழ்த்துச் சொன்ன பாரதி.

தமிழ் எங்கள் உயிர், தமிழ் எங்கள் மூச்சாம்,
பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைவித்தால்
சங்காரம் நிஜம் எனச் சங்கு முழக்கிய
தீப்பந்தப் பாட்டுக்காரன்
தீந்தமிழ் இயக்கத்தின் நெருப்பு வித்து
திராவிட இயக்கத்தின் சொத்து
அவனே புரட்சிக் கவி பாரதிதாசன்.

உள்ளத்தில் உள்ளது கவிதை,
தெள்ளத்தெளிந்த தமிழில்
உண்மை தெரிந்துரைப்பது கவிதை என்று
நெஞ்சில்இட்டுக் காட்டிய நாஞ்சில் நாட்டுக் கவிஞன்
தேசிக விநாயகம் ஒரு மெல்லிய தமிழ் யாகம்.

"சத்தியின்றி, ரத்தம் இன்றி யுத்தம் ஒன்று வருகுது"
எனக் கட்டியம் கூறியவன்
"தமிழன் என்ற ஒரு இனம் உண்டு;
தனியே அவனுக்கு ஒரு குணம் உண்டு", என
தனி முத்திரை இட்டவன்
நாமக்கல் கவிஞன்.

அந்தி நேரத்து ஆனந்தக் காற்றாய்,
அன்பு மணக்கும் தேன் சுவைப் பாட்டாய்

அமுத விருந்து அளித்த பட்டுக்கோட்டை.
"ஆளும் வளரணும், அறிவும் வளரணும்
அதுதாண்டா வளர்ச்சி" என
ஆதங்கப்பட்ட ஆண்மைக் கவிஞன்
பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்

பாட்டுக்கோட்டையை மட்டுமின்றி தமிழ்
யாப்புக் கோட்டையும் பலப்படுத்திய
நாட்டுக்கோட்டைக் கவிஞன்
நல்ல தமிழ்க் கவியரசு கண்ணதாசன்.
பாட்டுக்கும், தமிழுக்கும் பாலம் அமைத்ததுடன்
மெட்டுக்கும் பாட்டு எழுதும் மேன்மையை நமக்கு அளித்தவன்.

கட்டுக்குள் வைக்காமல், தமிழைக்
கட்டுக்குள்ளே வைக்காமல்
கட்டவிழ்த்து விட்டதனால்,
எட்டு விரிந்து படர்ந்தது தமிழ் வேர்கள்.
இதோ விழுதுகளாம் இவர்கள்,
விழுதுகள் வீழ்ந்தாலும்
விழுதுகள் மண்ணில் வீழ்ந்தாலும்
என்றுமே தாழாத விழுதுகளே,
உங்கள் தமிழால் தமிழ் உலகை ஒன்று இணைப்பீர்.

இருபத்து ஒன்றாம் நூற்றாண்டின் தலைவாயிலில்
தமிழர்கள் இன்று தஞ்சையில் தூளுரைப்போம்!
தமிழர் இனிப்பிரியோம்!
தமிழ் இனமே ஒன்றிணைந்தால்
உலகமே நம் கையில்!
தருணம் இதுவே, தவற விட்டால்
சரித்திரம் நம்மை இகழும்.
எதிர்காலக் கப்பலுக்கு மாலுமியாக இருக்கின்றார்
இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள்.

தமிழர் ஒற்றுமைக்குத் தஞ்சையிலே விதையிடுவோம்
வேங்கைக்கு வீழ்ச்சியில்லை
தமிழர் எழுச்சிக்கு சாவு இல்லை.
வாழும்போதே அமைப்போம்,
வையகத்துத் தமிழர் ஒன்றுமையை!

உலகத் தமிழர்கள் எல்லாம் ஒன்றுபட்டு ஓங்க,
என்றும் இந்த நாட்டில் தமிழே ஆள
குஞ்சரம் எதிர்த்த கோழியூரில் பிறந்து,
(குஞ்சரம் எதிர்த்த கோழியூர்-உறையூர்)
கோபாலன் பள்ளிகொண்ட மண்ணில் தவழ்ந்து
வேதா நிலையத்தில் கூராகி,
தமிழகத்தை ஆளுகின்ற
தங்க மனத்தலைவி, எங்கள்
வெற்றித் தேவதையின் அருள்பெற்று
எதிர்வரும் தடைகள் ஏதேனும் இருப்பின்
பொடிப் பொடியாக்கிப் பொசுக்கிட
தம் உடலை விறகாக்க,
உதிரத்தை நெய்யாக்கத்
தயங்கிட மாட்டோம் நாம்.

மொழிக்காக முழங்கிடுவோம்,
தடை எதுவும் உடைத்திடுவோம்,
தலைவி சொல் வழி நடப்போம்.
எழுக தமிழ் இனமே.
இனி உலகமே உன் காலடியில்

சொல்லருவி பாய்ந்து சுவை சேர்க்கும் கவியரங்கம்
தொடங்கட்டும்
நந்தி போல் இல்லாமல்-தஞ்சை
நந்தி போல் இல்லாமல்
விலகுகிறேன். நன்றி, வணக்கம்.

மருத்துவக் கட்டுரை:

"பூவைத் தாங்கும் இதயம்"

டாக்டர் மு. தனபால் எம்.டி.டி.எம். (Cordio)

"எதையும் தாங்கும் இதயம் வேண்டும்" என்று பேரறிஞர் அண்ணா கூறினார். பூவைத் தாங்குகின்ற காம்பு மெல்லியதாக இருந்தாலும், உறுதியாக இருக்க வேண்டும். சுமைதாங்கி பழுதில்லாமல் இருந்தால்தான், சுமையைத் தாங்க முடியும். நாளைய உலகைப் படைக்கப் போகின்ற இளம் பிஞ்சுகளைத் தன் வயிற்றில் சுமக்கின்ற தாயின் உள்ளமும் இருதயமும் ஆரோக்கியமாக இருந்தால்தான் நல்ல இளம் சமுதாயத்தை உருவாக்க முடியும்.

கண்ணில் மின்னுகின்ற ஒளியோடும் மனதில் மிதக்கின்ற கனவுகளோடும் வந்து நின்ற மீனா, "டாக்டர் எனக்குத் திருமணம் நிச்சயமாகி இருக்கிறது, நான் திருமணம் செய்து கொள்ளலாமா?" என்று கேட்டாள். இந்த மகிழ்ச்சியின் ஊடே அவள் குரலில் சோகத்தின் சாயல் வெளிப்பட்டது.

வேதனையும் பயமும் நிறைந்த முகத்தோடு வந்து நின்ற நிலாவும், அவருடைய கணவரும் ஒன்று சேர்ந்து கேட்ட வார்த்தை இதுதான், "எங்க குழந்தை நல்லபடி பிறக்குமா?"

"தாயின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமானால், துளிர் விட்டுக் கொண்டிருக்கும் அந்தச் சின்னஞ்சிறிய உயிரை அழித்துதான் ஆக வேண்டும்" என்று தன் அருகே ராதாவைப் பார்த்துச் சொன்னார் டாக்டர் வனிதா.

மேலே குறிப்பிட்ட மூன்று இளம் பெண்களும் மற்ற பெண்களைப் போல் வாழ்வும், கனவும், எதிர் காலமும் எல்லோரையும் போல் நன்கு அமைய வேண்டுமென எதிர் பார்ப்பதில் தவறேதும் இல்லை. இயற்கை நியதிதான்.

பேறு காலமும் இதய நோயும்:

உலகம் முழுவதிலும் நாகரிகம் வளர்ந்து விட்ட முன்னேறிய நாடுகளிலும் கூட முடக்குவாத ஜுரத்தால் (Rheumatic fever) ஏற்பட்ட இருதய நோயினால் பெண்கள் பிரசவ காலத்தில் அவதிப்படுகிறார்கள். முதலில் கூறப்பட்ட மீனாவின் பிரச்சினையை எடுத்துக் கொள்வோம்.

ஐந்து வயது முதல் 12 வயது வரை திரும்பத் திரும்பத் தாக்கிய தொண்டைக் கமறல் நோயைச் (Streptococcal Pharyngitis) சரிவரக் கவனிக்காமல் விட்டு விட்டதால் மூட்டுகளையும் இருதயத்தையும் ஒருசேரப் பாதித்து, துடிக்கின்ற வால்வுகளை முடக்கி வைத்து, தன் வாழ்வையே நிலைகுலையச் செய்து விடுமோ, என்ற நிலைக்குத் தள்ளப்பட்டு விட்டாள் மீனா.

மீனாவின் இருதயத்தின் இடது புறத்தில் உள்ள Mitral valve என்கிற ஈரிதழ் வால்வு சுருங்கி நுரையீரலில் இருந்து சுத்திகரிக்கப்பட்ட இரத்தத்தின் ஓட்டத்தில் தேக்க நிலையை உருவாக்கி, உடலில் உள்ள பல பாகங்களுக்கும் நல்ல இரத்த ஓட்டம் சரிவரச் செல்ல இயலாத நிலை இந்தப் பெண்ணிற்கு. மீனா கண்டிப்பாக திருமணம் செய்து கொள்ளமுடியும். வாழ்வைச் சீராக அமைத்துக் கொள்ள முடியும். அதற்குமுன் சுருங்கிய வால்வை, Closed Mitral Commissurotomy என்னும் இருதய அறுவைச் சிகிச்சை மூலம், முடக்கப்பட்ட வால்வைச் சரிசெய்து கொண்டு, பெனிசிலின் தடுப்பூசியையும் முறைப்படிப் போட்டுக் கொண்டால், இந்த நோயின் கடுமையிலிருந்து விடுபடலாம். மேலும், இது ஒரு எளிதான அறுவைச் சிகிச்சை ஆகும்.

இரண்டாவதாகச் சொல்லப்பட்ட நிலாவின் நிலை என்ன? சிறிது விரிவாகப் பார்ப்போம். சிறுவயதிலேயே இருதய

நோயால் பாதிக்கப்பட்டார் நிலா. திருமணததிற்கு முன் அவருடைய பெற்றோர்க்கு அவருடைய திருமணத்தில் இருந்த நாட்டம் அவரது நோயைக் குணப்படுத்த வேண்டும் என்பதில் இல்லை. திருமணம் ஆனது, தாய்மை அடைந்தார். அதனோடு சோர்வும் அடைந்தார், ஏன் ?

அந்த இளம் மொட்டைத் தாங்கும் சக்திகூட அவரிடம் இல்லை. காரணம், அவரின் இருதயத்தின் இடது பக்கத் திலிருந்து மிகத் தீவிரமாக வேலை செய்யும் (Aortic Valve) மூவிதழ் வால்வு அடைப்பட்டு சரிவர இரத்த ஓட்டத்தை உடலின் மற்ற பாகங்களுக்கு அனுப்ப முடியாத நிலை. அதனோடு பழுதடைந்த அந்த வால்வில் கசிவும் இருந்தது. பழுதடைந்து கசிவுறும் இந்த வால்வைச் சீர் செய்துவிட முடியாது. மாற்றப்பட வேண்டும். திருமணத்திற்கு முன்பு. இந்த வால்வை அறுவைச் சிகிச்சை மூலம் மாற்றியிருந்தால், பேறு காத்திலும் குழந்தை பிறப்பின் போதும் இவ்வளவு கவலைப் பட வேண்டிய அவசியம் நிலாத் தம்பதியருக்கு இல்லை.

அடுத்து, ராதாவின் நிலையைப் பார்ப்போம். விதியின் விளையாட்டோ? முற்பிறவியின் வினையோ? இந்தக் கொடிய விநோத நோய்க்கு 'Primary Pulmonary Hypertension' என்று பெயர். இதயத்திலிருந்து நுரையீரலுக்கு இரத்தத்தைக் கொண்டு செல்லும் இரத்தக் குழாயிலும் அதன் சிற்சில பிரிவுகளிலும் பிறவியிலேயே அமைந்து விட்ட தசைநார்களின் அமைப்பின் குறையால் இந்த இரத்தக் குழாய்களில் இரத்த அழுத்தம் மிகமிஞ்சியே காணப்படும். அதனால் நுரையீரலில் சுத்தம் செய்யப்பட வேண்டிய இரதத ஓட்டத்தில் தேக்கநிலை ஏற்படுகிறது. நுரையீரலும் அதன இரத்தக் குழாய்களும் இயல்பாகச சுருங்கி விரிவடையும் தன்மை இருக்காது. ஆக்ஸிஜனை எடுத்துக் கொண்டு கார்பன் டை ஆக்ஸைடை வெளிவிடுவதில் கோளாறு; அதன்ால் ஆக்ஸிஜன பற்றாக்குறை. நாலடி நடந்தாலும் மூச்சுத்திணறல்; அதில் திருமணம்- குழந்தைப் பிறப்பு. பேறுகாலத்தைத் தாண்டி னாலும் குழந்தை பிறப்பு அவர்களுக்கு மறுபிறவி. இந்த நிலையில் தன்னுயிரைக் கூட தியாகம் செய்யத் துடிக்கும் தாய்மார்களை, தன்நிலை புரியாது குழந்தைப் பிறப்பை பற்றியே நினைத்து, அறியாமை யால் மூழ்கியிருக்கும் அபலை களை, தாயைப்பற்றி கவலை யின்றிச் சேயைப் பற்றி கவலைப்படும் கணவன்மார் களை, "திருமணம் நடந்து விட்டது; குழந்தையின்றியே நாங்கள் வாழ்வோம்" என்று உறுதியோடு வாழு தியாக புருஷர்களை. சுகம் தர முடியாத மனைவியை விலக்கி வைக்க கோர்ட்டுக்குச் சென்ற கொடுமைக்காரக் கணவரை நான் நேரில் சந்தித்துக் கொண்டிருக்கிறேன். ராதாவின் நிலையை மறைத்து திருமணம் செய்த பெற்றோரை எண்ணி வியப்பும் வேதனையும்பட்டிருக் கிறேன்.

இந்த நோயாளிகள் குறை வான ஆயுள் உடையவர்கள் என்ற முடிவிற்கு மக்கள் வந்து விட முடியாத அளவிற்கு நல்ல சிகிச்சையோடு பல ஆண்டுகள் வாழ்ந்து காட்டிய நோயாளிகள் நிறையபேர் இருக்கிறார்கள் என்று 'புண்ணுக்கு இட்ட மருந்தாக' புழுக்கத்திலே வந்த தென்றலாக' இதம் தரும் இந்த விரைத்தை நான் இங்கே சொல்லியாக வேண்டும்.

இருதயத்தில் பிறவியிலேயே ஏற்படும் பல சின்னச் சின்ன குறைகளை வளர்ந்து விட்ட விஞ்ஞானம் மூலம் மிக நுட்ப மாகக் கண்டறிந்து அறுவைச் சிகிச்சை மூலம் நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

உண்மை என்பது மேன்மையின் உச்சிதான். ஆனால், உண்மை யாக வாழ்வது என்பது அதனி னும் மேம்பட்டது.

—குருநானக்

ஆலோசனைகள்:

1. பிறவியிலேயே இருதயத்தில் உள்ள சில குறைபாடுகளோடு. திருமணம் புரிந்து கொண் டவர்கள், 'கருத்தரிப்பு' என்ற நிலை ஏற்படு முன்னரே சரிவரச் சிந்தித்துத் தனது நோயின் குறைகளை நிவர்த்தி செய்து கொள்ள வேண்டும்.

2. பேறு காலத்தில் ஏற்படும் கால்வீக்கம், சாதாரண வீக்கம் என்று நினையாது சிறுநீரில் கொழுப்புக் கசிவு, இரத்தத்தில் உள்ள உப்புச்சத்து இரத்த அழுத்தம் இவைகளைக் கண்டறிய வேண்டும். இதைக் கவனிக்காமல் அசட்டைச் செய்தவர்கள் பின் நிரந்தர இரத்த அழுத்த நோயாளியாக மாறிவிட வாய்ப்புண்டு.

3. பேறுகாலத்தின் போது இரத்த அழுத்தம் கால்வீக்கம் இவற்றை உடனடியாகத் தேர்ந்து) டாக்டர்களிடம் காண் பிப்பது நல்லது. இதனால் 'Eclampsia' எனும் பேறுகால வலிப்புநோய் ஏற்பட வாய்ப்புள்ளது.

4 'Valve Replacement' எனும் வால்வு மாற்றுச் சிகிச்சைப் பெற்றவர்கள் கொஞ்சம் முழுமையான அக்கறையுடன் முறையான மருத்துவமுறையைப் பின்பற்றுவது நல்லது.

5. 'Mitral Valve Commissurotomy' எனும் அறுவைச் சிகிச்சை மூலம் சுருக்கத்தைச் சீர் செய்து கொண்டவர்களுக்கு ஒழுங்கான சிகிச்சையும், பராமரிப்பும் இருந்தால் நல்ல சுகப்பிரசவம் உண்டாக (Normal Delivery) வாய்ப்புகள் அதிகம்.

6. இதயத்தில் வலதுபக்க அசுத்த இரத்த ஓட்டமும், இடது பக்க சுத்த இரத்த ஓட்டமும் கலந்து விடாமல் தடுப்புச் சுவர்கள் அமையப் பெற்றுள்ளது. இந்தத் தடுப்புச் சுவர்களில் பிறவியிலேயே ஒரு சிலருக்குச் சின்ன ஓட்டைகள் ஏற்பட்டு விடுகின்றன. (ASD, VSD). ஒருசிலருக்குச் சுத்த இரத்தத்தை எடுத்துச் செல்லும் மகா தமனிக்கும், அசுத்த இரத்தத்தை நுரையீரலுக்குக் கொண்டு செல்லும் இரத்தக் குழாயுக்கும் இடையே ஒரு சின்ன பாலமாக, இரு இரத்த ஓட்டங்களும் கலந்துவிட சிறுவழி அமைந்து விடும் (PDA). மேற்கூறிய அனைவரும் சிறு வயதிலியே இக்குறைகளைக் கண்டறிந்தால் அறுவைச்சிகிச்சை மூலம் முழு வதும் குணமடையலாம் தெரியாமல் திருமணம் செய்து பேறுகாலத்திற்கு வந்து விட்ட தாய்மார்கள் இதயத் தசை சீராகத் துடிக்க மருந்துகள் உட் கொண்டு, இன்னல்கள் குறைத்து சுகப்பிரசவம் காணலாம். ஆனால், மறுபிரசவத்திற்கு முன் அறுவைச் சிகிச்சைசெய்து கொள்வது அவசியம்.

7. அசுத்த இரத்தமும், சுத்த இரத்தமும் ஒன்றாக் கலந்து நீல நிறம் பாய்ந்த சிக்கலான இதய நோயாளிகள் பிரசவம் பற்றி மிகவும் சிந்திக்க வேண்டும். இதில் அதிகமாகக் காணப்படும் Tetialogy of Full of எனும் நான்கு வித அமைப்பு கோளாறுகள் கொண்ட இந்த நோயாளிகள் ஒரு சிலர் மருந்துகளும், அறுவைச் சிகிச்சையும் முறையாகப் பின்பற்றி பிரசவிக்கின்றனர். ஆனால், இரத்தக் குழாய்களின் மாற்றுத் தோற்றம், ஒரே ஒரு இடது இதய அறை, முளைக் காமலே, அழிந்த வால்வுகள் இப்படி பல சிக்கலான கோளாறுகளைக் கண்டவர்கள் பிரசவிக்காமல் இருத்தல் நல்லது.

தாய்மைக்கும், வாய்மைக்கும் என்றும் சோதனைதான், சாதாரணமாக, இளம் பிஞ்சுகளைச் சுமக்கின்ற தாய்மார்களுக்கு எவ்வளவு இன்னல்கள் இரத்தச் சோகை, சூழ்நிலையின் பாதிப்பால் ஏற்படுகின்ற நோய்கள் பாரம் பரிய பிறவிக் கோளாறுகள் இயற்கை தரும் வேதனை இவைகளைத் தாங்கி நிற்கின்ற தாய்மார்கள் தெய்வங்களை விடப் போற்றப்பட வேண்டி யவர்கள். பேறுகாலத்தில் அவர் களுடைய நோய்களைத் தீர்க்க மனிதாபிமான கண்ணோட்டத் தோடு, கனிவுடன் நோக்குவது சமுதாயத்தின் கடமை. ●

அறிவு, வீரம், நிதானம், நேர்மை
ஆகியவை நான்கும் நல்ல ஒழுக்கங்கள்.
—பிளேட்டோ

மாணவர்களிடையே சேவை உணர்ச்சி,
கட்டுப்பாடு ஆகியவற்றை வளர்ப்பது
ஆசிரியர்களின் கடமை.
—டாக்டர் ராதாகிருஷ்ணன்

சொற்சுவை, பொருட்சுவை, அணிநயம்,
பொருள்நயம் இவற்றுடன் இசை நுணுக்கம் மிகவே

ஒப்புயர்வற்ற இசை வடிவம் படைத்த சீர்காழித் தமிழிசை மூவர்

முனைவர் திருப்பாம்புரம் சோ. சண்முகசுந்தரம்

இசைத் தமிழே உயிர் மூச்செனக் கொண்டு, கீர்த்தனைகளும் பதங்களும் பாடி தமிழுலகைப் பரவசப்படுத்தி தெய்வீக அருள் செய்த தமிழிசை மூவரின் இவ்வரலாற்றுக் கட்டுரையை எழுதியுள்ள முனைவர் திருப்பாம்புரம் சோ. சண்முகசுந்தரம் அவர்கள் பாரம்பரிய மிக்க இசைக் குடும்பத்தைச் சார்ந்தவர். தமிழிசையின் பெருமையை உலகுக்கு உணர்த்தி சிறப்புடன் வளர்த்து அதற்கு சீர்செய்ய வேண்டும் என்னும் குறிக்கோளுடன் பணி செய்து வருபவர். தற்போது, சென்னை தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரியின் முதல்வராகப் பணியாற்றி வருகின்றார்.

இசை என்றால் இசைய வைப்பது. செவி கேட்கும், தலை தாளமிடும்; தனி இசைக்கு இம் மட்டு. அதுவே தமிழ் இசை எனில், அந்த நல்லிசை நம் செவி வழி புகுந்து, சிந்தையில் அமர்ந்து, நெஞ்சகத்தை நெக்குருக வைத்து, விழி வழி நீர் சொரியச் செய்திடும். தமிழிசைக்கே இவ் வல்லமை உண்டு.

தென்னக இசையின் தாய் காரைக்கால் அம்மையார்

உலக இசை வரலாற்றிலேயே, நமக்குக் கிடைத்துள்ள ராக, தாள அமைப்புகளுடன் கூடிய உருப்படிகளுள் தொன்மையானதாக, தென்னக இசையின் தாயாக, விளங்குவது காரைக்கால் அம்மையாருடைய பாடல்கள் ஆகும். காரைக்கால் அம்மையார் பாண்டிநாட்டுக்கு வெளியே சோழநாட்டில் பிறந்து, தொண்டை மண்டலத்துத் திருவாலங்காடு சென்று நடராசர் மீது "நட்டபாடை" "இந்தளம்" என்ற பண்களில் இரு பதிகங்களைப் பாடியுள்ளார். இதனால்தான் தமிழக முதல்வர் மாண்புமிகு டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டின் நிறைவு விழாவில், காரைக்கால் அம்மையார் அவர்களைப் பெருமைப்படுத்தி இனி அவர் 'தென்னக இசையின் தாய்' என்று அழைக்கப்படுவார் என்று கோடி மக்கள் கூட்டத்தின் நடுவே பிரகடனப் படுத்தினார். இவையே முதன் முதலாக சிலப்பதிகாரத்திற்கும் பரிபாடலுக்கும் பிறகு நமக்குக் கிடைக்கும் பண்கள். பரிபாடற் பண் வழக்கு மறைந்து விட்டது; இதன் காலம் 5-ஆம் நூற்றாண்டு ஆகும்.

அடுத்து, ஏழாம் நூற்றாண்டில் சம்பந்தர், அப்பர், சுந்தரர் ஆகியோர் சோழ நாட்டிலும் நடு நாட்டிலும் தோன்றிச் சிவனருள் பெற்று கணக்கற்ற பண்களை அருள்வெள்ளமாகப் பொழிந்துள்ளார்கள். இந்த இசை மரபுக்கு ஒட்டியவாறே 16-ஆம் நூற்றாண்டில் முத்துத்தாண்டவர் தமது கீர்த்தனை வடிவத்தை முதல் முதலில் அறிமுகப்படுத்தினார். நாயன்மார்கள், ஆழ்வார்கள் வகுத்தமைத்த வழியிலேயே இறைவனைத் துதிக்க பல்வேறு சொற்றொடர்களைத் தமது கீர்த்தனையில் முத்துத் தாண்டவர் கையாண்டுள்ளார்.

இராகங்களின் வளர்ச்சிக்கு உதவியது தேவாரப் பண்களே!

தற்காலத்தில் வழங்கு பல இராகங்களுக்கு தேவாரப் பண்கள்தான் அடிப்படையாகும். தேவாரப் பாடல்கள் எல்லாம் இசைவடிவங்களுடனேயே முதன் முதலில் உலகில் தோன்றின. செய்யுளாக முதலில் இயற்றப் பட்டுப் பின்னர் அவைகட்கு இசை வகுக்கப்படவில்லை. தேவாரப் பாடல்கள் சுரப்படுத்தி வைக்கப்படாமல் போயினும், குருசிஷ்ய பரம்பரை மூலமாகவும், ஓதுவார்கள் மூலமாகவும் அவைகளின் வர்ணமெட்டுகள் காப்பாற்றப்பட்டுள்ளன. பிற்காலத்தில், ராகங்களின் வளர்ச்சிக்குத் தேவாரப்பண்கள் மிக்க உதவியாய் இருந்தன.

இன்று 20-ஆம் நூற்றாண்டில் வழங்கிவரும் இசைக்கு முன்பு, ஒரே இசைதான் தமிழகத்தில் இருந்தது. தற்பொழுதுள்ள 'தென்னிந்திய இசை', 'கர்நாடக இசை', 'திராவிட இசை', 'இந்துஸ்தானி இசை', 'வடஇந்திய இசை', 'மேற்கிந்திய இசை', 'ஐரோப்பிய இசை' போன்ற பகுப்புகள் கிடையாது. இவைகள் எல்லாம் மிகவும் பிற்காலத்தில் பகுக்கப்பட்டுள்ளன. இவை அனைத்திற்கும் மூல இசை தமிழிசைதான்.

இத்தகு பெருமைமிகு தமிழிசையைப் போற்றிப் பாதுகாத்திடவும், புகழ்ந்து வளர்த்திடவும் தொண்டு செய்த பெரியோர் பலர். அவர்களுள் எண்ணற்ற கீர்த்தனைகளும் பதங்களும் பாடி இறவாப் புகழ் கொண்டவர்கள் அருள்மிகு முத்துத் தாண்டவர், அருள்மிகு மாரி முத்தாப்பிள்ளை, அருள்மிகு அருணாசலக்கவிராயர் என்னும் மூவர் ஆவர்.

அருள்மிகு முத்துத்தாண்டவர்

தென்னகத்தில் கிருதி, கீர்த்தனை மரபுக்கு வழிவகுத்தவர் அருள்மிகு முத்துத் தாண்டவர் ஆவார். இவர் சிதம்பரம் நடராசப் பெருமான்மீது எண்ணற்ற கீர்த்தனைகளையும் பதங்களையும் பாடியுள்ளார். இவரது பாடல்கள் இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை சங்கீத வித்வான்களால் அதிகமாகப் பாடப்பட்டு வந்தன. இவருடைய பதங்களும் அபிநயத்துக்கு மிகவும் சிறப்பு உடையனவாகக் கருதப்பட்டன.

அருள்மிகு முத்துத்தாண்டவர் சோழவள நாட்டில் சீர்காழி என்ற சிவத்தலத்தில் கி.பி. 1600-க்கு முன்னர் தோன்றினார். இவருக்கு இளமையில் 'தாண்டவன்' என்ற பெயர்தான் வழங்கப்பட்டது. சிவநாமக் கீர்த்தனங்களைப் பிறர்பாட இவர் கேட்டு இன்புற்று வந்தார்.

வழக்கம் போல் ஒரு நாள் மாலை இவர் கோயிலுக்குச் சென்று தன் வழிபாட்டை

தமிழிசை மூவரின் பெருமையை உலகுக்கு உணர்த்தும் வகையில், அம்மூவரின் திருவுருவங்களைத் தாங்கி, எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டு ஊர்வலத்தில் அணிவகுத்து வந்த அலங்கார ஊர்தி.



இசையின் வகை . . .

இசையின் வகை ஏழு ஆகும். அவை குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்பதாகும். இவற்றுள் இடத்தால் குரல், நாவினால் துத்தம், அண்ணத்தால் கைக்கிளை, சிரத்தால் உழை, நெற்றியால் இளி, நெஞ்சால் விளரி, மூக்கால் தாரம் இங்ஙனம் தனித்தனிப் பிறக்கும். இவையே ஏழ்சுரமெனவும் வீணையில் ஏழ்நரம்பெனவும் படும்.

இவற்றில் ஓசையுவமை மயில், இடபம், ஆடு, கொக்கு, குயில், குதிரை, யானை;

சுவையுவமை பால், தேன், கிழான், நெய், ஏலம், வாழை, மாதுளங்கனி;

வாசனையுவமை மௌவல், முல்லை, கடம்பு, வஞ்சி, நெய்தல், பொன்னாவிரை, புன்னை;

அக்கரம் ஆஅ, ஈஇ, ஊஉ, ஏஎ, ஐஇ, ஔஉ;

மாத்திரை நான்கு குரல், நான்கு துத்தம், இரண்டு கைக்கிளை, மூன்று உழை, நான்கு இளி, மூன்று விளரி, இரண்டு தாரம்.

இவற்றால் ஏழு பாலை பிறக்கும். அவையாவன: குரலே குயிலாகுமானால் செம்பாலை, துத்தமே குரலாயின் படுமலைப்பாலை, கைக்கிளையே குரலாயின் செவ்வழிப்பாலை, உழையே குரலாயின் அரும்பாலை, இளியே குரலாயின் கொடிப்பாலை, விளரியே குரலாயின் விளரிப்பாலை, தாரமே குரலாயின் மேற் செம்பாலை. இவற்றுள் செம்பாலைக்கு கொடிப்பாலை வலிது, கொடிப்பாலைக்கு விளரிப்பாலையும் மேற்செம்பாலையும் வலிது, அன்றியும் தாரத்துள் உழையும், உழையுள் குரலும், குரலுள் இளியும், இளியுள் துத்தமும், துத்தத்துள் விளரியும், விளரியுள் கைக்கிளையும் பிறப்பது தகுதி.

இவற்றிற்கு இறைவர் விசுவாமித்திரன், சமதக்கினி, சந்திரன், சூரியன், கௌதமன், காசிபன், ஈசன். இவற்றிற்கு உயிர் ஈசன்.

—பாளையங்கோட்டை வீரமாமுனிவர் ஆய்வுக்கழகம் வெளியிட்ட 'வீரமாமுனிவர் அருளிய சதுரகராதி' ஆய்வுப் பதிப்பிலிருந்து

நடத்தினார். களைப்பின் காரணமாக அங்கேயே படுத்து உறங்கினார். சிறிது நேரம் சென்றபின் விழித்தெழுந்த தாண்டவர், கோயில் குருக்களின் 10 வயது மகளைப் போன்ற ஓர் உருவத்தை அவர்முன் கண்டார். அப்பெண்மணி, தாண்டவரைத் தில்லையம்பதிக்குச் சென்று நடராசப் பெருமானை இன்னிசையால் வழிபடும்படிப் பணித்தாள். அதைக் கேட்ட தாண்டவர், என்ன செய்வது என்று திகைத்துக் கொண்டிருக்கும் போது, "நீ கூத்தப் பெருமான் திருமுன் வழிபாடு செய்யும் அன்பர் கூட்டத்திலிருந்து எச்சொல் முதன்முதலாக வெளிப்படுகின்றதோ அச்சொல்லையே முதலாக வைத்துப் பாடுக" என்று கூறியபின் அந்தப் பெண்மணி மறைந்தாள். அப்போது தான் தாண்டவருக்கு உண்மை தெரிய வந்தது; தன்னிடம் பேசியது இறைவியே என்றறிந்து மகிழ்ந்தார். இந்த நிகழ்ச்சியைக் கேள்வியுற்ற மக்கள் இவருக்கு "முத்துத் தாண்டவர்" எனப் பெயரிட்டனர்.

"பூலோக கயிலாசகிரி சிதம்பரமல்லால் வேறுண்டோ?"

முத்துத் தாண்டவர் சிதம்பரம் சென்று நடராசப் பெருமானைத் தொழுது நின்றார். அச்சமயம் அடியார் கூட்டத்திலிருந்து "பூலோக கயிலாசகிரி சிதம்பரம்" என்னும் தொடர் மொழி வெளிப்படவே அத்தொடரையே முதன்முதலாகக் கொண்டு, "பூலோக கயிலாசகிரி சிதம்பரமல்லால் புவனத்தில் வேறும் உண்டோ?" என்ற கீர்த்தனையைப் பாடி முடித்தார். மிச்ரஜம்பை தாளத்தில் பவப்ரியா இராகத்தில் அமைந்த இப்பாடல் சிந்தையை உருக வைத்துவிடும். ஒவ்வொரு நாளும் இவ்வாறே முத்துத் தாண்டவர் பாடல்கள் இயற்றிப் பாடி வந்தார்.

ஒருநாள் இறையடியாரிடமிருந்து யாதொரு சொல்லும் வெளிப்படவில்லை. இருப்பினும் தன் கடமையிலிருது தவற விரும்பாதவராய், அப்பேச்சின்மையையே முதலாகக் கொண்டு "பேசாத நெஞ்சமே" என்ற பாடலைப் பாடினார். மிச்ர ஜம்பை தாளத்தில் சூரியகாந்தம் இராகத்தில் இப்பாடல் அமைந்து உள்ளது. பின்பு, ஒரு நாள் சீர்காழியிலிருந்து சிதம்பரத்திற்கு வரும்பொழுது கொள்ளிடம் வெள்ளப் பெருக்கெடுத்து ஓடியது. தன்வழிபாட்டிற்கு இடையூறு நேர்ந்ததை எண்ணிக் கலக்கமுற்று, கொள்ளிடக் கரையிலேயே நின்று கொண்டு "காணாமல் வீணிலே காலம் கழித்தோமே" என்று பாடத் துவங்கினார். மிச்ர சாபு தாளத்தில் தன்னியாசி இராகத்தில் அமைந்துள்ளது இப்பாடல். இப்பாடல் தொடங்கியதும் வெள்ளம் குறைய ஆரம்பித்தது. ஆற்றைக் கடந்து கரையேறிக் களிப்பு நிரம்பியவராய் "தெரிசனம் செய்வனே" (வசந்தா - ஆதி) என்று பாடினார்.

அருமருந்தொரு
தனிமருந்திது
அம்பலத்தில்

பின் சிதம்பரம் அடைந்து, இறைவன் திருமுன் நின்று, "கண்டபின் கண் குளிர்ந்தேன்" (மலையமாருதம்) என்னும் பாடலைப் பாடி மகிழ்ந்தார்.

ஒருநாள் சீர்காழியிலிருந்து சிதம்பரத்திற்கு வரும் இடைவழியில் அவரைப் பாம்பொன்று தீண்டியது. சிறிதும் உள்ளம் கலங்காமல் "அருமருந்தொரு தனி மருந்திது அம்பலத்தில் கண்டேனே" (காம்போதி ரூபகம்) என்னும் பாடலைப்பாடி, விடம் நீங்கப் பெற்றார்.

இவ்வாறு பற்பல இசைப் பாடல்கள் பாடியும், அருஞ்செயல்கள் பல நிகழ்த்தியும் இறுதியில் ஆவணிப்பூச நன்னாளில் இறைவன் திருமுன் நின்று, "மாணிக்க வாசகர் பேறெனக்குத் தரவல்லாயோ அறியேன்" (கோகிலப்பிரியா ரூபகம்)

இராகங்கள் . . . இராகங்கள்

இராகங்கள் முப்பத்திரண்டு. பைரவி, தேவக்கிரியை, மேகவிரஞ்சி, குறிஞ்சி, பூபாளம், வேளாவளி, மலகரி, பௌளி, சீராகம், இந்தோளம், பல்லதி, சாவேரி, படமஞ்சரி, தேசி, இலலிதை, தோடி, வசந்தம், இராக்கிரியை, வராளி, கைசிகம், மாளவி, நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, பங்காளம், தன்னியாசி, காம்போதி, கௌளி, நாட்டை, தேசாட்சரி, காந்தாரி, சாராங்கம்

இவற்றுள்,

பைரவி புருடஇராகம். பிராம்மணம். இதன் மனைவிகள் தேவக்கிரியை மேகவிரஞ்சி, குறிஞ்சி. அதிதேவதை ஈசன்,

பூபாளம் புருட இராகம், பிராம்மணம். இதன் மனைவிகள் வேளாவளி, மலகிரி, பௌளி. அதிதேவதை திருமால்.

சீராகம் புருட இராகம், க்ஷத்திரியம். இதன் மனைவிகள் இந்தோளம், பல்லதி, காவேரி. அதிதேவதை சரசுவதி,

படமஞ்சரி புருட இராகம், க்ஷத்திரியம். இதன் மனைவிகள் தேசி, இலலிதை, தோடி. அதிதேவதை இலக்குமி,

வசந்தம் புருட இராகம், வைசியம். இதன் மனைவிகள் இராமக்கிரியை, வராளி, கைசிகம். அதிதேவதை சூரியன்

மாளவி புருட இராகம், வைசியம். இதன் மனைவிகள் நாராயணி, குண்டக்கிரியை, கூர்ச்சரி, அதிதேவதை நாரதன்.

பங்காளம் புருட இராகம். சூத்திரம். இதன் மனைவிகள் தன்னியாசி, காம்போதி, கௌளி. அதிதேவதை விநாயகன்

நாட்டை புருட இராகம், சூத்திரம். இதன் மனைவிகள் தேசாட்சரி, காந்தாரி, சாரங்கம். அதிதேவதை தும்புருவன்.

இவையன்றிப் பலவகைப்பட வழங்கும் இராகம் பலஉள. அவை கூறிற் பெருகும்.

—வீரமாமுனிவர் அருளிய 'சதுரகராதி' நூலிலிருந்து

என்னும் பாடலை மனம்விட்டுப் பாட சிதம்பரத்திலிருந்து பேரொளி யொன்று வெளிப்பட்டது. அருள்மிகு முத்துத்தாண்டவர் அப் பேரொளிப் பிழம்பில் இரண்டறக் கலந்தார்.

முத்துத் தாண்டவர் நூற்றுக் கணக்கான பாடல்களை இயற்றி உள்ளதாக நமக்குக் குறிப்புகள் உள்ளன. "தெருவில் வாரானோ" என்ற பதம் மற்றும் "ஆடிக் கொண்டார்", "சேவிக்க வேண்டுமையா", "ஆடின தெப்படியோ", "தெரிசித்தளவில்" முதலிய பாடல்கள் மிகவும் சிறப்பானவை. இவருடைய பாடல்கள் யாவும் கற்பவர், கேட்பவர் உள்ளங்களில் சிவபக்தியை விளைவிக்கும் ஆற்றல் கொண்டவை. மேலும், இவை சொற்சுவை, பொருட்சுவை, தொடை நயம், அணிநயம், பொர்ருள் நயம், இசை நுணுக்கம், எதுகை மோனை முதலிய நயங்களைக் கொண்ட ஒப்புயர்வற்ற இசை வடிவங்கள் ஆகும்.

அருள்மிகு முத்துத் தாண்டவர் இயற்றியுள்ள 60 கீர்த்தனைகள் திருப்பாம்புரம் N. சுவாமிநாத பிள்ளை அவர்களின் உதவியுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப் பட்டுள்ளன.

அருள்மிகு மாரிமுத்தாப்பிள்ளை

முத்துத் தாண்டவரைப் போல் தில்லை நடராசப் பெருமான்மீது கீர்த்தனைகளும் பதங்களும் பாடிய மற்றோர் இசைப் புலவர் தில்லை விடங்கன் மாரி முத்தாப்பிள்ளை. இவர் இளமையிலேயே பாடல்கள் எழுதும் ஆற்றல் பெற்றவர். 18-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த பெரும்புலவர் வரிசையில் வைத்துப் போற்றத் தக்கவர். இவர் பிறந்த ஆண்டு கி.பி. 1712.

இவர் தில்லை நடராசப் பெருமான் மீது மிக்க அன்பு உடையவராய் வாழ்த்துவந்த காலத்தில், இவருடைய மூத்தப் புதல்வர் தெய்வரங்கன் பெருமாள் பிள்ளை அறிவு மழுங்கி குடும்ப நினைவு சிறிதுமின்றி அலைத்து திரியலானார். மாரி முத்தாப்பிள்ளை பெரிதும் கவலையடைந்தார். நடராசப் பெருமானை வருந்தி வேண்டினார். நடராசர் இவரது கனவில் தோன்றி, "இவ்வூருக்கு ஒரு பிரபந்தம் இயற்றினால் உமது கவலை தீரும்" என்று கூறி மறைந்தார். பிள்ளையவர்கள் இறைவன் திருவருளை நினைந்து, வியந்து அவரை வழிபட்டு அவரிட்ட கட்டளைப்படி "புலியூர் வெண்பா" என்னும் நூலைப் பாடி முடித்தார். அவர்தம் மகனுக்கு நேர்ந்திருந்த மதி மயக்கமும் நீங்கியது.

பழிப்பது போலப் புகழும் பாடல் திறனைக் காணீர்!

மேலும், இவர் சிதம்பரேசர் விறலிவிடுதூது, வருணாபுரி ஆதிமூலீசர் குறவஞ்சி, ஆதிமூலீசர் நொண்டி நாடகம், புலியூர்ச் சிங்காரவேலர் பதிகம், வியங்கேசர் பதிகம் ஆகியவற்றையும் இயற்றியுள்ளார். இரத பந்தம் முதலிய சித்திரக் கவிகளும் படைத்துள்ளார். இவர் பாடிய கீர்த்தனைகள் நூற்றுக்கு மேற்பட்டவை; இவற்றில் 25 கீர்த்தனைகள் இன்று அச்சிடப்பட்டுள்ளன.

இவருடைய பாடல்கள் எல்லாம் சொற்பொருள் வளத்துடன் காணப்படுகின்றன. பழிப்பது போலப் புகழும் முறையில் இயற்றப்பட்டுள்ள "வீடும் அம்பலமாகி நீரும் அந்தரமானீர், வேளை பொல்லப்பாகியோ" (விலாசினி - சாபு); "என்ன பிழைப்புன்றன் பிழைப்பையா, இதை எண்ணிப் பார்த்தால் யார்க்கும் பழிப்பையா" (வேளாவளி - ஆதி) "உம்மைப் போல் ஆட்டையெடுத்து அம்பலத்தில் நிற்பார் ஒருவரைக் காணேன் ஐயா" (பாறுகீர்வாணி - ஆதி); "இன்னம் வயிரம் உன்றன் நெஞ்சிலேயிருப்பது என்ன காரணத்திற்கையா?" (ரத்ன காந்தி - ஆதி) என்று தொடங்கும் பாடல்களும், "எந்நேரமும் ஒரு காலைத் தூக்கிக் கொண்டு இருக்கிற வகை ஏதையா" (தோடி - ஆதி) என்னும் பாடலில் நடராசர் காலைத் தூக்கிக் கொண்டிருப்பதற்கு பலவாறு கூறும் காரணங்களும், "என்ன காரியத்துக்கு இந்தப் பேயாண்டி மேல் இச்சை கொண்டாய் மகளே" (தர்மாவதி - ஆதி) என இறைவனைக் கண்டு ஆசை கொண்ட மகளிடம் வெறுப்புத் தோன்றும்வண்ணம் ஒருதாய் கூறுவதாக அமைக்கப் பட்டிருக்கும் பாடலும் படித்துப் பாடி இன்புறத் தக்கவையாகும். இசைப்பாடல்களில் இவ்வளவு பொருள் செறிவு மிக்க பாடல்களைக் காண்பது அரிது.

இந்தப் பாடலைப் பாடும் இசைவாணர்கள் சொற்கள் தெளிவாக விளங்கும்படி பாடிக் காட்ட வேண்டும். அப்போது தான் எல்லோரும் கேட்டு இன்புற முடியும். தமிழிசைப் பாடல்கள் இயற்றிய பண்டைய புலவர்கள் யாவரும் தாங்கள் கூறும் அடிப்படையில் அரிய கருத்துகளைப் பாடுவோரும் கேட்போரும் நன்கு அறிந்து, அறிவு முதிர்ச்சியும் அகமகிழ்ச்சியும் ஆன்ம வளர்ச்சியும் ஒருங்கே அடைய வேண்டுமென்று கருதியே பல சரணங்களை அமைத்துள்ளார்கள்.

ஏதுக்கித்தனை மோடிதான் உனக்கு எந்தன் மேல் ஐயா!

"ஒருக்கால் சிவசிதம்பரம்" (ஆரபி - ஆதி) என்ற பாடலில் சிவசிதம்பரம் என்று ஒருமுறை சொன்னால் பாவபந்தத்திலிருந்து விடுபட்டு முத்தி அடையலாம் என்று கூறுகிறார். "காலைத் தூக்கி நின்றாடும் தெய்வமே" (யதுகுலகாம்போதி - ஆதி) என்ற பாடலில் நந்தி, நாரதர் போன்றவர்கள் யாழ், மத்தளம் போன்ற இசைக் கருவிகளைக் கையாண்டவர்கள் என்ற கருத்தை வெளிப்படுத்தி உள்ளார்.

"ஏதுக்கித்தனை மோடி தான் உனக்கு எந்தன் மேலையா" (சுருட்டி ரூபகம்) என்ற பாடலில் வேடிக்கையாக பேசியதற்காக நடராசர் தன்னைக் கடிந்து கொள்ளாதிருக்க வேண்டும் என்று மாரிமுத்தாப்பிள்ளை வேண்டுகிறார்.

இவ்வளவு சிறப்புகளைக் கொண்ட பாடல்களை இயற்றிய மாரிமுத்தாப்பிள்ளை கி.பி. 1787 ஆம் ஆண்டு சித்திரைத் திங்கள் 14-ஆம் நாள் இறைவனின் இணையடி இணைந்தார்.

இராமநாடகக் கீர்த்தனைகள் இயற்றிய சீர்காழி அருணாசல கவிராயரும் இவரும் ஒரு காலத்தவர் என்பது குறிப்பிடத் தக்கது. இவர் பரம்பரையில் தோன்றிய ஐயாத்துரைப் பிள்ளை என்பவர் ஓர் அருந்தமிழ்ப்புலவர். இவருக்குப் பின்வந்த வேலுசாமிப் பிள்ளை என்பவர் மாரி முத்தாப் பிள்ளையினுடைய நூல்கள் சிலவற்றை வெளியிட்டுள்ளார். இவர் வெண்பாப்புலி என்ற பட்டயம் பெற்றவர். இவருடைய திருமகனார் திரு T.V. மெய்கண்டார் என்பவர் இன்று சென்னை, நந்தனம் அரசு கலைக் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். அச்சில் வெளிவராத இவரது பாடல்கள் சிலவற்றை வெளிக் கொணர்வதற்கு, சென்னை, தமிழ்நாடு அரசு இசைக்கல்லூரி முயற்சி மேற் கொண்டுள்ளது.

மாரிமுத்தாப்பிள்ளையவர்கள் இயற்றிய சில பாடல்கள் புல்லாங்குழல் திருப்பாம்புரம் N. சுவாமிநாதப் பிள்ளை அவர்களின் உதவியுடன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பட்டுள்ளன.

அருள்மிகு அருணாசலக் கவிராயர்

மயிலாடுதுறைக்கு அருகே தில்லையாடி என்னும் சிற்றூரில் நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதியினருக்கு கி.பி. 1711-ஆம் ஆண்டு மகவாகப் பிறந்தார் அருணாசலக் கவிராயர்.

இளமையிலேயே பெற்றோர் காலமாகிவிட்டதால், இவர் தம் தமையன்மார் பாதுகாவலில் வளரலானார். தக்க முறையில் சிறிது காலம் கல்வி பயின்று, பின்னர், சீர்காழிக்கு அருகில் உள்ள மாயூரத்தை அடுத்த தருமபுரம் சென்று பல ஆண்டுகள் அங்கு தங்கி தமிழ் இலக்கிய இலக்கணத்திலும் சமய நூல்களிலும் தக்கப் புலமை பெற்றார். இவருக்குத் தமிழறிவு புகட்டிய முக்கிய ஆசிரியர் அம்பலவாணக் கவிராயர் என்னும் ப்ண்டார சந்நிதிகளே ஆகும். 12 ஆண்டுகள் சைவ மடத்திலிருந்து கல்வி பயின்ற பின் தம் ஊர் திரும்பினார்.

திருக்குறளையும் இராம காதையையும் இன்னிசையோடு பரப்பினார்

இவர் தமது 30-ஆம் ஆண்டில் திருமணம் செய்து கொண்டார். காசுக்கடை வைத்துப் பொருள் ஈட்ட முயன்று 12 ஆண்டுகள் தில்லையாடியிலும் 25 ஆண்டுகள் சீர்காழியிலும் வாழ்த்து வந்தார்.

இவர் கற்ற தமிழ் நூல்களில் இவரது உள்ளத்தைக் கவர்ந

தவை திருக்குறளும் கம்ப ராமாயணமும் ஆகும். இராமாயணம் கல்லாருக்கும் கற்றவர்க்கும் இன்பம் கொடுக்க வல்லது என்று உணர்ந்து அந்த நூலை அழுத்தமாகப் பயின்றும் பலருக்குக் கற்பித்தும் இன்னிசையோடு பிரசங்கித்தும் வந்தார்.

அருணாசலக் கவிராயர் இயற்றியவை அசோமுகி நாடகம், சீர்காழித் தலபுராணம், சீர்காழிக் கோவை, அநுமார்ப் பிள்ளைத்தமிழ், இராமநாடகக் கீர்த்தனைகள் ஆகியனவாகும். இவற்றில் மிகவும் சிறப்பு வாய்ந்தது "இராம நாடகக் கீர்த்தனைகள்" இசைநாடக நூலாகும். இதனுள் இசைப் பகுதிகள் 258 உள்ளன; 'தரு' என்ற இடைவடிவம் 197 தடவைகள் கையாளப்பட்டு உள்ளன. இரண்டடிக் கண்ணிகளால் ஆன "திபதை" என்ற பெயர் கொண்ட இசைப்பாட்டு 60 தடவைகள் கையாளப் பட்டுள்ளன. மற்றும் கடவுள் வணக்கத்தைக் குறிக்கும் தோடையும் நான்கடி கொண்ட விருத்தப்பாட்டு ஆகிய இசை வடிவங்களும் கையாளப்பட்டு உள்ளன. இந்நூலில் காணப் படும் மொத்த விருத்தங்கள் 268 மற்றும் கொச்சகம், வெண்பா, கலித்துறை போன்ற இசைப் பாடல்களும் காணப்படுகின்றன. இந்நூலில் ஆசிரியர் 40 இராகங்களைப் பயன்படுத்தியுள்ளார். அவற்றுள் சில: அசாவேரி, கல்யாணி, சாவேரி, தோடி, சங்கராபரணம், மத்தியமாவதி, மோகனம், பைரவி, ஆனந்த பைரவி, புன்னாகவராளி, நாட்டக்குறிஞ்சி, பிலஹரி, சௌராஷ்டிரம் முதலியன. அபூர்வ இராகங்களாகிய துவிஜாவந்தி, மங்களகைசிகம், சைந்தவி ஆகியனவற்றையும் பயன்படுத்தியுள்ளார். ஆதி, சாபு போன்ற பல தாளங்களையும் பயன்படுத்தியுள்ளார்.

இராமாயணத்தைச் செய்யுளாகச் செய்த கம்பர் அரங்கேற்றம் செய்த இடமான திருவரங்கத்திலேயே தானும் இராம நாடகக் கீர்த்தனைகளை அரங்கேற்றம் செய்ய ஆவல் கொண்டார் கவிராயர். முதலில் கோவில் அதிகாரிகள் மறுத்து விட்டனர். பின்னர், அரங்கநாதனின் துணையைக் கொண்டு அருணாசலக் கவிராயர் தமது நூலை அரங்கேற்றுவித்தார்.

அருணாசலக் கவிராயர் இராமநாடகத்தைப் பாடி முடித்தது தமது 60-ஆவது வயதில். தமிழ்நாடு முழுவதும் இராம கதையை இனிமையான தமிழிசையில் பாடிச் சீரும் சிறப்பும் பெற்று வாழ்ந்த கவிராயர் கி.பி. 1779-ஆம் ஆண்டு தமது

இராகத் தகுதிகள் . . .

இராகத் தகுதிகள் நான்கு ஆகும். அவை இடம், செய்யுள், குணம், காலம் ஆகியவை ஆகும்.

இவற்றில், இடம் பற்றிய இராகம் ஐந்திணை இராகம்;

செய்யுள் பற்றிய இராகத்துள் வெண்பா இராகம் சங்கராபரணம்; அகவல் இராகம் தோடி; கலியிராகம் பந்துவராளி; கலித்துறை இராகம் பைரவி; தாழிசையிராகம் தோடி; விருத்த இராகம் கலியாணி, காம்போதி, மத்தியமாவதி; உலா இராகம் சௌராட்டிரம்; தோடையவிராகம் சௌராட்டிரம், நாட்டை; மங்கள இராகம் மங்கள கௌசிகம்; தேவார இராகம் பூபாளம்; பிள்ளைக்கவி இராகம் கேதாரகௌளம்; பரணி இராகம் கண்டாரவம்.

குணம் பற்றிய இராகத்துள் இரக்கத்திற்கு ஆகரி, கண்டாரவம், நீலாம்புரி, பியாகடம், புன்னாகவராளி; துக்கத்திற்கு இரக்கராகங்களன்றி வராளியின் மேலாம்; மகிழ்ச்சி இராகம் காம்போதி, சாவேரி, தன்னியாசி, யுத்த இராகம் நாட்டை,

காலம் பற்றிய இராகத்துள் வசந்தகாலம் விராகம், காம்போதி, அசாவேரி, தன்னியாசி; அன்றியும் மாலை இராகம் கலியாணி, காபி, கன்னடம், காம்போதி; யாம இராகம் ஆகரி; விடியல் இராகம் இந்தோளம், இராமமலி, தேசாட்சரி, நாட்டை, பூபாளம்; உச்சி இராகம் சாரங்கம், தேசாட்சரி, அன்றியும் ஆகரி, இந்தோளம், இராமகவி சாரங்கம் பூபாளம் நீக்கிநின்ற மற்றவை எக்காலத்தும் பொதுமைய.

—வீரமாமுனிவர் அருளிய 'சதுரகராதி' நூலிலிருந்து.

தமிழகப் பளு தூக்கும் வீரர்கள் உலகப்போட்டியில் பங்கேற்க மாண்புமிகு முதல்வர் நிதிஉதவி.

உலக ஆண்கள் பளு தூக்கும் சாம்பியன் பட்டத்திற்கான (Men's Open World Power Lifting Championship) போட்டியில் இந்தியாவின் சார்பில் கலந்து கொள்வதற்காக, தமிழ்நாட்டில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இரண்டு வீரர்கள் திரு வி.சேவியர் மற்றும் ஆர்.மோகன கிருஷ்ணன் ஆகியோர் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் போட்டியில் கலந்து கொள்வதற்காகச் செலவுத் தொகையை வழங்கிட வேண்டும் என வேண்டுகோள் விடுத்திருந்தார்கள்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவர்களுடைய கோரிக்கைகளை உடனடியாக ஏற்றுக்கொண்டு, பின்லாந்து நாட்டில் இம்மாதம் 14-ஆம் தேதி முதல் 19-ஆம் தேதி வரை நடக்க உள்ள உலக ஆண்கள் பளுத் தூக்கும் பட்டத்திற்கான போட்டியில் இவர்கள் இருவரும் கலந்து கொள்ளுவதற்கு ஏதுவாக ஒவ்வொருவருக்கும் தலா 66,000 ரூபாய் வீதம் மொத்தம் 1,32,000 ரூபாயை தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தின் நிதியிலிருந்து வழங்க ஆணையிட்டார்கள். அந்த ஆணைப்படி அவர்களுக்குத் தலா 66,000 ரூபாய்க்கான காசோலை வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த இரு வீரர்களும், உலக அளவிலான பளு தூக்கும் போட்டியில் வெற்றிகளைப் பெற்று தமிழகத்திற்கும், இந்தியாவிற்கும் புகழையும் பெருமையையும் சேர்க்க வேண்டும் என்ற தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்கள்.

உலக ஆண்கள் பளு தூக்கும் போட்டியில் கலந்து கொள்வதற்காக, திரு.வி.சேவியரும், ஆர்.மோகன கிருஷ்ணனும் தற்போது பின்லாந்து நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றுள்ளார்கள்.

67-ஆவது வயதில் இறைவன் திருவடி நிழலை எய்தினார்.

இவருடைய பாடல்கள் பல அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தினரால் அச்சிடப்பட்டு வெளிவந்துள்ளன.

ஆண்டுதோறும் நடக்கும் அருமைமிகு பெருமைமிகு விழா!

தமிழிசை வளர்த்த தனிப் பெரும் தகைமையோரான இம் மூவரைப் போற்றி, ஆண்டு தோறும் சீர்காழித் திருத்தலத்தில் தமிழக அரசால் தமிழிசை மூவர் விழா சிறப்புடன் நடத்தப்பட்டு வருகிறது. தமிழ்நாடு அரசு இசைக் கல்லூரி, தமிழிசை வளர்க்கும் தொண்டாகக் கருதி மூன்று நாட்கள் இவ்விழாவை, சீர்காழி அருள்மிகு சட்டைநாதர் திருக்கோயிலில் நடத்தி வருகிறது. இசை வல்லுநர்களின் இசை நிகழ்ச்சிகள், இசைக் கல்லூரி மாணவியரின் பரத நாட்டியக் கலை நிகழ்ச்சிகள், இசைக் கல்லூரி மாணவர்களின் வாய்ப்பாட்டு, புல்லாங்குழல் முதலான இசைக் கருவிகளோடு இசைக்கும் நிகழ்ச்சிகள், நாதசுர இசைக் கச்சேரிகள் முதலான பல்வேறு நிகழ்ச்சிகளுடன் ஆண்டுதோறும் மூன்று நாட்கள் இசை வழிபாடாகவே இதனை நடத்தி வருகிறோம்.

இத்தகு சிறப்புமிகு தமிழிசை வர்ணமெட்டுகளிலேயே பிற்காலத்தில் வந்த பிறமொழிப் பாடல்கள் இயற்றப்பெற்றன. எடுத்துக்காட்டாக, தியாகராஜர், தீட்சதர், சியாமா சாஸ்திரி ஆகியோரின் உருப்படிகளில் தேவார வர்ண மெட்டுகளும் அருணகிரிநாதரின் சந்த அமைப்பும் விரவி இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் சந்தேகமற நிரூபித்து உள்ளார்கள்.

இன்றைய வளரும் தலைமுறையினர் மரபுமிக்க நம்முடைய இசைக்கலையின் வளத்தினையும் செறிவையும் நுணுக்கங்களையும் உணர்ந்தால், தமிழிசை மேலும் மிளிரும்.

டான்பெட் - உழவர்க்கு ஒரு சேவை நிறுவனம்

'**டா**ன்பெட்' என அனைவர்க்கும் அறிமுகமான 'தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்' இரசாயன உரம்-பூச்சி மருந்துகள் - விதை வேளாண் கருவிகள் ஆகிய விவசாய இடுபொருட்களை உழவர்க்கு வழங்குதல், உழவர் பெருமக்கள் உற்பத்தி செய்யும் வேளாண் விளைபொருட்களை விற்பனை செய்தல் போன்ற துறைகளில் **1959**-ஆம் ஆண்டு முதற் கொண்டு தமிழகத்தில் செயலாற்றி வருகின்றது. இவ்விணையத்தின் முக்கிய நோக்கங்கள் பின்வருமாறு:

☆ தொடக்கக் கூட்டுறவு விவசாய வங்கிகளில் தங்களை உறுப்பினர்களாக இணைத்துக் கொண்டு வேளாண் உற்பத்தியினைப் பெருக்கி வரும் விவசாயிகளின் இடுபொருள் தேவையறிந்து, அவற்றினைத் தேவையான அளவு இருப்பு வைத்து உரிய நேரத்தில் வழங்குதல்;

☆ இணையத்தில் அங்கம் வசிக்கும் உறுப்பினர் சங்கங்களுக்கு விளை பொருட்களைக் கொள்முதல் செய்வதிலும், அவற்றினைச் சேமிப்பு வைத்து விற்பனை செய்வதிலும் உதவி புரிதல்;

☆ அழுகுந்தன்மை கொண்ட விளைபொருட்களுக்கும் விவசாயம் சார்ந்த உற்பத்திப் பொருட்களுக்கும் உகந்த சேமிப்பு வசதியினைச் செய்து தருதல்;

☆ வேளாண் இடுபொருட்களான மணியுரம் - கலப்புரம் - தரமான விதை போன்றவற்றினைத் தயாரித்தளித்தல்.

இடுபொருள் விற்பனை உர விநியோகம்

தமிழ்நாடு முழுவதும் உள்ள பிரதமக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக உரம் முதலான

எஸ். தாமோதரன்

கூடுதல் பதிவாளர் - தனி அலுவலர்

தமிழ்நாடு கூட்டுறவு விற்பனை இணையம்

வேளாண் இடுபொருட்கள் அனைத்தும் 'டான்பெட்' மூலம் விநியோகிக்கப்படுகின்றன. தஞ்சை மற்றும் காயிதே மில்லத் மாவட்டங்களில் மட்டும் தஞ்சாவூர் கூட்டுறவு விற்பனை இணையமும், நீலகிரி மாவட்டத்தில் நீலகிரி கூட்டுறவு விற்பனைச் சங்கமும் இப்பணிகளை ஆற்றுகின்றன.

கடந்த **1994-95**-ஆம் ஆண்டில் ரூ. **16,277.00** இலட்சம் மதிப்பு கொண்ட **3,50,962** டன் அனைத்து வகை உரங்களை 'டான்பெட்' வழங்கியது. நடப்பு ஆண்டான **1995-96**-இல் செப்டம்பர் '**95** முடிந்த முதல் ஆறு மாதங்களில் இதுவரை ரூ. **9531.60** இலட்சம் மதிப்பு கொண்ட **1,83,366** டன் அனைத்து வகை உரங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

உர உற்பத்தி

"என்.பி.கே. இரசாயனச் சத்துக்களின் சரியான சேர்க்கையோடும் வேப்பம் பிண்ணாக்கு போன்று அத்தியாவசியக் கலவையுடனும் பாமணி **17:17:17** எனும் மணி உரத்தினை 'டான்பெட்' தயாரித்து அளித்து வருகிறது. மன்னார்குடியின் அருகாமையில் அமைந்துள்ள பாமணி எனும் ஊரில் அமையப்பெற்ற டான்பெட்டின் பாமணி உர ஆலை ஆண்டொன்றிற்குச் சுமார் **30,000** டன் அளவு உரத் தயாரிப்பு செய்யும் திறன் கொண்டதாகும். இவ்வாலையில் கடந்த **1994-95**-ஆம் ஆண்டு **18,025** டன் அளவிற்கு உரம் தயாரிக்கப்பெற்று ரூ. **1337.73** இலட்சம் மதிப்புள்ள **22,048** டன் உரம் விநியோகிக்கப்பட்டது. நடப்பாண்டின் **(1995-96)** முதல் அரையாண்டில் இதுவரை **10718** டன் அளவு பாமணி உரம் தயாரிக்கப்பெற்று ரூ. **817.48** இலட்சம் மதிப்புக் கொண்ட **11,888** டன் அளவு விநியோகிக்கப்பட்டுள்ளது.

வேளாண் சிறப்பங்காடிகள்

அனைத்து விவசாய இடுபொருட்களும் ஓர் அமைப்பின் கீழ் வழங்கப்படல் அவசியம் என்று அறிந்து இதற்கான வேளாண் சிறப்பங்காடிகளை அமைத்துத் தரும் வேலை, கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் அவர்களால் 'டான்பெட்' வசம் அளிக்கப் பெற்றது.

மேற்சொன்ன வேளாண் சிறப்பங்காடிகள் நன்கு இயங்க வேண்டி, உரிய முறையில் உரம் சேமித்து வைக்க வேண்டி தரை விரிப்புகள், பெயர்ப் பலகைகள், விலைப் பட்டியல் பலகைகள், விளம்பரப் பதாகைகள், மர அடுக்குச் சட்டங்கள், சைக்கிள் ஊர்திகள், விற்பனை ஊழியர்க்குச் சீருடைகள் ஆகியவற்றினை **100** பிரதமக் கூட்டுறவு வங்கிகளில் உள்ள **100** வேளாண் சிறப்பங்காடிகளுக்கு அமைத்து 'டான்பெட்' வழங்கியுள்ளது. மேலும், இச் சிறப்பங்காடிகளில் பணியாற்றும் பணியாளர்களுக்கு சென்னை மற்றும் மதுரையிலுள்ள கூட்டுறவுப் பயிற்சி நிலையங்கள் மூலம் உரிய பயிற்சி வழங்கவும் தீர்மானிக்கப் பெற்றுள்ளது. போதிய அளவு உரம் - விதை-பூச்சிமருந்துகள் வேளாண் கருவிகள் ஆகியன இவ்வங்காடிகளில் இருப்பில் வைப்பதற்கு ஆவன செய்யப் பெற்றுள்ளது. மேலும், இதுபோன்ற **100** சிறப்பங்காடிகளை உருவாக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வேளாண் விளைபொருள் விற்பனை

வேளாண் விளைபொருள் விற்பனை இணையமான இந்த நிறுவனம் பருத்திப்பஞ்சு, மிளகாய் வத்தல், கொத்து மல்லிவிதை, பயறுவகை போன்ற பொருட்களையும் மற்றும் ஓரளவிற்கு எண்ணெய் வித்துக்களையும் கொள்முதல் செய்து வருகிறது. விவசாயிகளுக்கு விற்பனைச் சந்தையில் நல்லாதரவு நல்குவதே டான்பெட்டின் தலையாய நோக்கமென்பதால், கூட்டுக் கொள்முதல் முகவர் அடிப்படைக் கொள்முதல் எனும் அனைத்து வகைகளிலும் கொள்முதல் செய்யப்படுகிறது.

கடந்த **1994-95**-ஆம் ஆண்டில் நிர்ணயிக்கப் பெற்ற குறியீடான ரூ. **2777.00** இலட்சத்தினையும் தாண்டி, மொத்தம் ரூ. **3974.65** இலட்சம் அளவிற்கு **31,229** டன் விளைபொருட்கள் கொள்முதல் செய்யப்பெற்ற. நடப்பாண்டான **1995-96**-இன்

பாமணி 17:17:17 என்னும் மணி உரங்கள்





கோயம்பேடு புதிய குளிர்ப்பதனச் சேமிப்பகம்

முதல் அரை ஆண்டில் மொத்தம் ரூ. **1589.53** இலட்சம் மதிப்பு கொண்ட **15748** டன் விளைபொருட்கள் இதுவரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

பூச்சிக்கொல்லி மருந்து, விதை மற்றும் விவசாயக் கருவிகள் விநியோகம்

உர விநியோகம் போன்றே பூச்சிக்கொல்லி மருந்து போன்ற பயிர்ப் பாதுகாப்பு மருந்துகளையும் மற்றும் விதை வேளாண்கருவிகள் ஆகிய வற்றினையும் விவசாயிகளின் தேவைக்கேற்ப பிரதமக் கூட்டுறவு வங்கிகள் வாயிலாக இணையம் விநியோகித்து வருகிறது. இவ்வகையில் **1994-95-ஆம்** ஆண்டில் ரூ.**17.95** இலட்சம் மதிப்பளவிற்கு விதைகளையும், ரூ. **357.53** இலட்சம் அளவிற்குப் பூச்சிமருந்துகளையும், ரூ. **1.56** இலட்சம் அளவிற்கு வேளாண்கருவிகளையும் 'டான்பெட்' விநியோகித்தது. நடப்பாண்டில் மேற்படிப் பொருட்கள் முறையே ரூ **12.17**, இலட்சம் ரூ. **62.12** இலட்சம், ரூ. **1.30** இலட்சம் அளவிற்கு முதல் ஆறு மாதங்களில் விநியோகிக்கப் பெற்றுள்ளன.

குளிர்ப்பதனச் சேமிப்பகம்

சென்னையில் பேசின்பாலம் சாலையில் அமைந்துள்ள டான்பெட்டின் குளிர்ப்பதனச் சேமிப்பகம் தனது முழு சேமிப்புத்திறனான **1250** டன் கொள்ளளவில் **50** விழுக்காடுகள் அளவிற்குத் தற்போது பயன்படுத்தப்பட்டு வருகிறது, மீதமுள்ள **50** விழுக்காடு கொள்திறன் கொண்ட ஓர் அறையினைப் புதுப்பிக்கும் பணியும் இதற்கு முன்னர் இயங்கி பழமை யடைந்து போன பனிக்கட்டித் தொழிற்சாலை இருந்த அறையினைச் சுமார் ரூ **26** இலட்சம் மதிப்பில் குளிர்ப்பதன சேமிப்பறையாக மாற்றியமைக்கும் வேலையும் தற்போது நடந்து கொண்டிருக்கின்றன.

இக்குறைவான உபயோக நிலையிலும் இவ்விஞ்ஞான ரீதியான இச்சேமிப்பக வசதி பற்றி நன்கறிந்துள்ள வணிகப் பெருமக்களில் நல்லாதரவு ஆர்வம் காரணமாகச் சிறப்புற இயங்கி வருகிறது. கடந்த **1994-95-ஆம்** ஆண்டில் ரூ. **17.40** இலட்சமும், நடப்பாண்டின் முதல் ஆறு மாதங்களில் இதுவரை ரூ. **8.91** இலட்சமும் வருமானமாக ஈட்டித் தந்துள்ளது இக்குளிர்ப்பதனச் சேமிப்பறை.

கோயம்பேடு புதிய குளிர்ப்பதனச் சேமிப்பகம்

சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தினரால் உருவாக்கப்பட்டு வரும் கோயம்பேடு மொத்த விற்பனை

வளாகத்தில் **2500** டன் கொள்ளளவு கொண்ட புதிய குளிர்ப்பதன நிலையம் ஒன்றினை 'டான்பெட்' உருவாக்கி தற்போது இயக்கி வருகிறது. இச்சிறப்புமிகு நிலையம் தமிழ்நாடு அரசு மற்றும் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழக ஒப்புதலுடனும் நிதியுதவியுடனும் மொத்தம் ரூ. **198.75** இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டுள்ளது. இதன் விவரம் பின்வருமாறு:

1. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகக் கடனுதவி ரூ. **44.00** இலட்சம்.

2. தமிழ்நாடு அரசு பங்குத் தொகை உதவி ரூ. **55.00** இலட்சம்.

3. 'டான்பெட்' பங்கு ரூ. **47.75** இலட்சம்.

4. உணவுப் பொருள் பதப் படுத்துத் தொழில் அமைச்சகம் (மத்திய அரசு) நிதியுதவி ரூ. **52.00** இலட்சம்.

ஆக மொத்தம் ரூ. **198.75** இலட்சம்.

இப்புதிய குளிர்ப்பதன நிலையம் கடந்த மே'95இல் இருந்து உபயோகப்படுத்தப்பட்டு வருகிறது. இது தொடங்கி முதல் ஐந்து மாதங்களில் **74** விழுக்காடுகள் அளவிற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது வரை வாடகை வருமானமாக ரூ. **13.29** இலட்சம் ஈட்டப் பட்டுள்ளது.

சேமிப்பு வசதி

'டான்பெட்' டிடம் விற்பனைப் பணிகளுக்கெனச் சேமிப்பு வசதிக்காக **26,560** டன் கொள்ளளவுக் கொண்ட **36** சொந்தச் சேமிப்புக் கிடங்குகள் உள்ளன. இவை முழுமையாகப் பயன்படுத்தப் பெற்று வருகின்றன.

மண்ணெண்ணெய் விநியோகம்

'டான்பெட்' வசம் சிறிய அளவிலான மண்ணெண்ணெய் கொள்கலன் நிலையம் ஒன்று சென்னையில் உள்ளது. கடந்த **1994-95-ஆம்** ஆண்டு ரூ. **73.78** இலட்சம் பெறுமானமுள்ள **2985** கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் விநியோகிக்கப்பட்டது. நடப்பு ஆண்டில் முதல் ஆறு மாதங்களில் ரூ. **37.23** இலட்சம் மதிப்பு கொண்ட **1505** கிலோ லிட்டர் மண்ணெண்ணெய் இதுவரை விநியோகிக்கப்பட்டுள்ளது.

வர்த்தக அளவு

தனது அனைத்து நடவடிக்கைகளிலும் குறிப்பாக இடுபொருள் விநியோகத்தில் சமீப கால ஆண்டுகளில் 'டான்பெட்' குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது.

42-வது அகில இந்தியக் கூட்டுறவு வார விழா

14.11.1995 கூட்டுறவு மறு பதிப்புகளின் மறுவடிவு நாள்

15.11.1995 கூட்டுறவுப் பயனுறுதி நாள்

16.11.1995 கூட்டுறவு விற்பனை, செயல்முறைப்படுத்துதல் மற்றும் நுகர்வோர் நாள்

17.11.1995 கூட்டுறவுக் கடன், சேமிப்பு மற்றும் ஊரக வளர்ச்சி நாள்

18.11.1995 கூட்டுறவு வீட்டுவசதி, மற்றும் கூட்டுறவுச் சேவைகள் நாள்

19.11.1995 மகளிர், இளைஞர்கள் மற்றும் நலிவுற்றோர் கூட்டுறவு நாள்

20.11.1995 கூட்டுறவு இயக்கத் தலைமைத் தன்மை நாள்



மீன்வள மேம்பாடு

லால் ரானா சைலோ, இ.ஆ.ப.,
மீன்துறை ஆணையாளர்

மீன்வளத்துறை, ஊரக வேலைவாய்ப்பை அதிகரித்தல், புரதம் மிகுந்த மீன் உணவைப் பெருக்குதல் மற்றும் அன்னியச் செலாவணியை அதிகரித்தல் ஆகியவற்றில் முக்கியப் பணியாற்றுகின்றது.

தமிழ்நாடு, 1000 கிலோ மீட்டருக்கு மேல் நீளமுடைய கடற்கரையைப் பெற்றுள்ளது. சுமார் 41,412 சதுரக் கிலோ மீட்டர் கடற்படு நீளத் தொடரைக் கொண்ட மாநிலக் கடற்கரை முழுவதும் கடல் மீன்வளம் பெருக நிறைய வாய்ப்புகள் உள்ளன. தமிழகத்தில் பெரும் நீர்த்தேக்கங்கள் ஏரி, குளம், உவர்நீர்க் கழிமுகங்கள் முதலியன உள்நாட்டு நீர்நிலைகளில் 3.71 இலட்சம் எக்டேர் பரப்பு மீன் வளர்ப்பதற்கு உகந்ததாக உள்ளது. தமிழகக் கடலோரத்தில் மொத்தம் 442 கடல் மீனவக் கிராமங்கள் உள்ளன. மொத்தமுள்ள சுமார் 5.22 இலட்சம் மீனவ மக்களில் 3.02 இலட்சம் பேர் தீவிர மீன்பிடிப்பிலும், 77,425 பேர் உள்நாட்டு மீன்பிடிப்பிலும் ஈடுபட்டுள்ளனர்.

மீனவர்களின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தவும், ஊரக வேலைவாய்ப்பை உருவாக்கவும் பல நலத் திட்டங்களை அரசு நிறைவேற்றி வருகிறது. தமிழ்நாடு திட்டங்களைச் சிறப்பாக நிறைவேற்றியதில் மீன் உற்பத்தியில் மிகுந்த முன்னேற்றம் அடைந்துள்ளது. 1992-93-இல் உற்பத்தி 4.06 இலட்சம் டன்களாக இருந்தது. 1993-94-இல் 4.25 இலட்சம் டன்களாக இருந்தது. 1994-95-இல் 4.38 இலட்சம் டன்களாக இருந்தது.

தற்போது சுமார் 7,195 விசைப்படகுகளும், இயந்திரம் பொருத்தப்பட்ட மீன்பிடிக் கலன்களும் தவிர, ஏறக்குறைய 24,367 இயந்திரம் பொருத்தப் படாத நாட்டுப் படகுகளும் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளன.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுத் திட்டங்களில் தொடர்ந்து முக்கியப் பங்கு வகிக்கின்றன. இக்கூட்டுறவுச் சங்கங்கள் மீனவர்களுக்குக் கடன் வசதி அளித்தல், மீன்பிடிக் கருவிகள், தளவாடங்கள் ஆகியவற்றை விநியோகம் செய்தல் ஆகியவைகளோடு அவர்கள் பிடிக்கும் மீன்களை விற்பனை செய்யவும் உதவுகிறது. அவைகளில் சில அத்தியாவசியப் பொருட்களை விநியோகம் செய்கின்றன. தமிழ்நாட்டில் தற்போது 775 பதிவு பெற்ற மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தலைமை மாநில மீனவர் கூட்டுறவு இணையம் ஒன்றும் இயங்கி வருகின்றது. இவற்றில் 3,02,254 மீனவர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பங்கு மூலதனமாக அரசு நிதி உதவி அளிக்கின்றது. நிதி உதவி வங்கிகளிலிருந்து கடன்பெறும் சக்தியை மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அதிகரிக்கச் செய்வதுதான், அரசு, பங்கு மூலதன உதவி செய்வதன் நோக்கமாகும்.

கடலோரப் பகுதிகளில் உள்ள கடல் மீனவர்களின் மேம்பாட்டிற்காக ஒரு புதிய திட்டம் தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் உதவியுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

கடலோர மீனவ ஒருங்கிணைந்த வளர்ச்சித் திட்டத்தின் மூலம் பல்வேறு வகையான மீன்பிடிக் கலன்கள், (கட்டு மரங்கள் மற்றும் படகுகள்) வலைகள், குளிர்சாதனப் பெட்டிகள், வெளிப்பொருத்தும் இயந்திரங்கள் ஆகியவை வழங்கப்படும்.

இத்திட்டத்தின் மூலம் மீனவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக அவர்களிடையே சிக்கனம் மற்றும் சேமிக்கும் பழக்கத்தை உண்டு பண்ணவும், மீன் உற்பத்தியைப் பெருக்கவும், பிடிக்கப்படும் மீன்களின் விற்பனைத் தொகைகளில் அதிக அளவில் பங்கு பெறவும் இத்திட்டம் தமிழ்நாட்டிலுள்ள 5 கடலோர மாவட்டங்களான செங்கல்பட்டு எம்.ஜி.ஆர்., தஞ்சாவூர், காயிதே மில்லத், இராமநாதபுரம், சிதம்பரனார், கன்னியாகுமரி ஆகியவற்றில் 34 ஆரம்ப மீனவக் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் செயலாக்கப்படும். இத்திட்டத்தின் மூலம் 6,050 மீனவர்கள் நேரிடைப் பயனாளிகளாக அமைவர்.

இத்திட்டத்தின் மொத்தத் தொகை 1588.20 இலட்சமாகும். இத்திட்டம், தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவர் கூட்டுறவு இணையத்தின் மூலம் அமலாக்கப்படும். இந்தத் தலைமை மீனவர் கூட்டுறவு இணையம் 6.11.91-இல் பதிவு செய்யப்பட்டது. தேசியக் கூட்டுறவு வளர்ச்சிக் கழகம் ரூ.1449.67 இலட்சம் கடனாகவும், ரூ.67.44 இலட்சத்தை மானியமாகவும் வழங்கியுள்ளது. இதனைத் தமிழக அரசு ரூ.786.66 இலட்சம் கடனாகவும், ரூ.458.38 இலட்சம் பங்குத் தொகையாகவும் ரூ.343.16 இலட்சம் மானிய

கிராமங்களுக்கு மேலும் 20 ஆயிரம்

தெரு விளக்குகள்

ரூ.7 கோடி ஒதுக்கி

முதல்வர் ஆணை

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து கிராமப் பஞ்சாயத்துகளிலும், ஏற்கெனவே சிறப்புத் தன்னிறைவுத் திட்டம் என்ற திட்டத்தின் மூலமாக தெரு விளக்குகள், ஊரக வளர்ச்சித் துறையினராலும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறையினராலும், அமைக்கப்பட்டு வருகின்றன.

இவற்றில், தமிழ்நாடு மின்சார வாரியத்தின் மூலமாக மொத்தம் 1,23,018 தெரு விளக்குகள் கடந்த 31.7.1995 வரை சுமார் 30 கோடி ரூபாய் செலவில் இந்தச் சிறப்புத் தன்னிறைவுத் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டிருக்கின்றன.

இத்திட்டப் பணிகளை ஆய்வு செய்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், இப்பணி முடிவு பெறாமல் உள்ள இடங்களில் உடனடியாகத் தெரு விளக்குகள் அமைத்துத் தரத்தக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இத்திட்டம் நிறைவேற்றப் படாத பகுதிகளில் மொத்தம் 20,000 தெரு விளக்குகள் விரைவில் அமைக்கப்பட வேண்டும் என்று உத்தரவிட்டு, அதற்காக 7 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்து ஆணை பிறப்பித்துள்ளார். இவற்றில், 10,000 தெரு விளக்குகள் ஊரக வளர்ச்சித் துறையின் வாயிலாகவும், மீதி 10,000 தெரு விளக்குகள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை மூலமாகவும், விடுபட்ட கிராமங்களில் அமைத்துத் தரப்படும்.

பெரிய மனிதன்.

அந்தஸ்தில் குறைந்தவனைப் பெருந் தன்மையுடன் நடத்துபவன்தான் உண்மையான பெரிய மனிதன்.

—கார்லைல்

வெற்றியின் ரகசியம்.

அன்பு, மென்மை, உறுதி, தூய்மை, பொறுமை ஆகிய ஐந்து குணங்களும் நிரம்பப் பெற்றவனே வெற்றிகரமான மனிதன்.

—சுதே

மாகவும் தலைமை மீனவர் கூட்டுறவு இணையத்தின் மூலம், பிரதம மீனவர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்குகிறது.

தொடக்கத்தில் அரசு இத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக வழி முறை முன்பணமாக ரூ.362.42 இலட்சம் வழங்கி உள்ளது. இத்திட்டம், 1992-93 முதல் 5 ஆண்டுகள் செயல் படுத்தப்படும். இத்திட்டத்தின் இரண்டாவது ஆண்டில் செயல் ப்படுத்த அரசு ரூ.301.89 இலட்சம் நிதி உதவி வழங்கியுள்ளது.

ஒருங்கிணைந்த கடன் மீன் வள மேம்பாட்டுத் திட்டத்தினை இதரக் கடலோர மாவட்டங் களிலும் செயல்படுத்த இத் திட்டத்தின் இரண்டாம் தொகுதி ரூ.48 கோடி செலவில் செயல் படுத்த கருத்துரு அரசின் பரிசீல னையில் உள்ளது.

தமிழ்நாட்டில் 111 மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் தற்போது இயங்கி வருகின்றன. அவைகளின் முக்கியப் பணி களாக மீன் விற்பனை செய்யும் பொருட்டு கடன் உதவி செய்து வருதல், கைவினைப் பொருட்கள் செய்வதற்குப் பயிற்சியளித்தல், நியாய விலைக் கடைகள் மூல மாக அத்தியாவசியப் பொருட் களை விற்பனை செய்தல், வேலைவாய்ப்பு அளித்தல் ஆகி யவை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

1993-94-ஆம் ஆண்டில் இந்த மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு 30,000 மூங்கில் கூடைகள் வழங்க ரூ.10 இலட்சம் அரசு அனுமதித்துள்ளது. மேலும், 1994-95-ஆம் ஆண்டில் 10,000 மீனவ மகளிருக்கு 50 சதவிகித மானிய விலையில். 10,000 அலுமினியக் கூடைகள் வழங்க ரூ.10 இலட்சம் அரசு அனுமதித்து, அவை வழங்கப் பட்டுள்ளன.

இடைத்தரகர்கள் பிடியி லிருந்து ஏழை மீனவர்களைக் காப்பாற்ற ஏதுவாகவும், மீன வர்கள் பிடித்த மீன்களை அவர்களுக்கு இலாபகரமாக விற்பனை செய்து கொள்ளவும் பிரதம மீனவக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு பங்குத் தொகை மூலதனம் அளிக்க அரசு 1991-92 முதல் முடிவெடுத்து 1991-92-இல் ரூ.10 இலட்சம் வழங்கியுள்ளது. 1993-94-இல் ரூ.5.00 இலட்சம் வழங்கப்பட்டது.

மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள்

கடலோர மீனவச் சங்கங்கள் 352, உள்நாட்டு மீனவச் சங் கங்கள் 278, இறால் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள் 5, மாவட்ட மீனவக் கூட்டுறவு இணையம் மற்றும் ஒன்றியம் 10, மீன் விற்பனைக் கூட்டுறவுச் சங்கங்கள் 17, மீனவ மகளிர் கூட்டுறவுச் சங்கங்கள் 111, அனை மில்லியன் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பாகு கட்டும் கூட்டுறவுச் சங்கம் 1, தமிழ்நாடு மாநிலத் தலைமை மீனவர் கூட்டுறவு இணையம் 1, ஆக மொத்தம் 775 மீனவர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன.

உறுப்பினர்கள்

கடலோர மீனவ உறுப் பினர்கள் 1,90,457 நபர்கள்

உள்நாட்டு மீனவ உறுப் பினர்கள் 77,425 நபர்கள்

மீனவ மகளிர் சங்கத்தின் உறுப்பினர்கள் 34,372 ஆக மொத்தம் 3,02,254 நபர்கள். சங்க உறுப்பினர்களாக உள்ளனர்.

இவ்வாறு மீன்வள மேம் பாட்டுக்கு, மீன்துறை முனைந்து செயலாற்றி வருவது குறிப்பிடத் தக்கது.

தமிழ்வளர்த்த பெரியார்

நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை

பேராசிரியர் டாக்டர் இ.சுந்தரமூர்த்தி
தமிழ் மொழித் துறை, சென்னைப் பல்கலைக் கழகம்

இந்திய விடுதலை வேள்விப் பணியில் ஈடுபட்டு, தமிழ்ப் பணியையும் நாட்டுப் பணியை யும் ஒருங்கே ஆற்றி உழைத்த தமிழ்ப் பெருமக்கள் பலராவர். அவர்களுள் 'அச்சமில்லை அச்சமில்லை' என்று ஆண்மைக் குரல் எழுப்பி சங்கநாதம் செய்தவரே பாட்டுக்கொரு புலவராம் பாரதியார். ஆனால், காந்தியின் சாந்தியைக் 'கத்தியின்றி இரத்தமின்றி யுத்தமொன்று வருகுது' என அமைதிக் குரலால் -- அகிம்சைக் குரலால் இசைத்தவர் காந்தியக் கவிஞர் இராமலிங்கனார். இருவரும் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்டு உழைத்தவர்கள். நாட்டுப்பற்றைக் கொண்டு மொழிப் பற்றையும், மொழிப்பற்றைக் கொண்டு நாட்டுப்பற்றையும் நன்கு வளர்த்த பெருமக்கள் எனப் பாராட்டுவர்.

பாரதிக்குப் பிறகு விடுதலைப் போர்க் கவிதைகள் தமிழுக்குக் கிடைக்க உழைத்தவர் இராமலிங்கர். பாரதியின் வழியிலேயே நின்று பாட்டைப் படைத்த காரணத்தைக் கவிஞரே பின்வருமாறு கூறுவார்:

"நாரதகீத மென்ன நயந்திகழ்
பாடலாலே
பாரத நாட்டை என்று
பணிந்திடும் சுப்ரமணிய
பாரதிபாட்டைக் கண்ட பழைய
இத்தமிழர் நாட்டில்
யாரது என்று கேட்க யாதுருக்
கவிகள் சொன்னேன்"

என்று தம் கூற்றாலேயே தாம் பாரதி வழிவந்தவர் என்பதைச் சுட்டுவார்.

காந்தியக் கவிஞர்

இராமலிங்கர் காந்தியக் கவிஞராய் விளங்கினார். அன்புநெறியில் உரிமை வாழ்வை வழங்கிய காந்தியடிகளாரின் அருள் நெறியைத் தம் கவிதை களால் பரப்பினார். நாமக்கல் கவிஞர் காந்தியடிகளின் கொள்கைக்கு ஒரு குரலாக விளங்கினார். காந்தியத்தை இனிய கவிகளால் ஒலிக்கும் தமிழ்ச்சங்கு என்று பாராட்டினார் அறிஞர் தூரன்.

புதியபார்வை

நாமக்கல்கவிஞர் கவிதை படைப்பதில் மட்டுமன்றி இலக் கியத் திறனாய்விலும் புகழ்பூத்து விளங்கினார். இவர் எழுதிய எழுபதிற்கும் மேற்பட்ட நூல்கள் இவருடைய புலமைத்திறனுக்குச் சான்றாய் ஒளிர்வன. இலக்கியங் களைப் புதிய பார்வையில் பார்த்தவர் இராமலிங்கர். இளங்கோவின் இன்பத் தமிழிலும், கம்பனின் கவிதை நயத்திலும் சங்கநூல்களின் இலக்கியச் சுவையிலும் இன்பங் கண்டவர் கவிஞர் என்பதை அவருடைய 'என் கதை' என்னும் நூல் காட்டும்.

சிறை தந்த உரை

வேலூர்ச் சிறையில் இருந்த போது உருவான புதிய சிந்தனைதான் இவர் திருக் குறளுக்கு யாத்த புது உரை. வேலூர்ச் சிறையில் தமிழ்க்கடல் இராய. சொக்கலிங்கம் அவர்களும் இவரும் தமிழ் வகுப்பு நடத்தினார்கள். ஓமந்தூர் ரெட்டியார், கோபி செட்டிப்பாளையம் சுப்பண்ணக் கவுண்டர், முத்துக் கவுண்டர், நல்லாக் கவுண்டர், தேவாரம் பாரதி, ஆசிரியர் நாராயணசாமி ஆகியோர் திருக்குறளில் நாள்தோறும் ஓர் அதிகாரம் படித்து வந்தனராம்.

திருக்குறளைப் பரிமேலழகர் உரையைக் கொண்டு படித்து

வந்தபோது பலருக்கும் ஐயங்கள் ஏற்பட்டன. ஒரு நாள் திருக்குறள் வகுப்பிற்கு திரு. சத்தியமூர்த்தி அவர்களும வருகை தந்தார் 'குன்றேறி யானைப் போர் கண்டற்றால்' என்னும் குறளுக்கு விளக்கம் தந்து கொணடிருந்தார், கவிஞர். அதற்கு அமைந்த பரிமேலழகர் உரையைக் கேட்ட அனைவரும் மற்றும் திரு சத்தியமூர்த்தி அவர்களும் இதன் உரை பொருநதாதிருப்பது குறித்து வினவினராம். இறுதியில் கவிஞரையே ஓமந்தூர் ரெட்டியார் ஒரு புதிய உரை எழுத வேண்டும் எனப் பணித்தாராம். அதற்குப் பின் உருவாகியதே அவருடைய திருக்குறள் புதிய உரையாகும். அவருடைய தன் வரலாற்றில் அது குறித்துப் பின்வருமாறு கூறுவார்:

"தப்போ தவறோ திருக்குறளுக்கு
வேறு உரை
எளிய நடையாகவாவது
எழுதிவிடுவது' என்ற
தீர்மானத்தை அன்றைக்கே
செய்துகொண்டேன்
அதற்குப்பின் எந்நேரமும் அதே
சிந்தனைதான்
ஒரே குறளைத் திருப்பித் திருப்பி
வெவ்வேறு
விதமாகப் பதம்பிரித்துப்
பார்த்துக் கொணடே.
சிற்சில இரவுகள் தூங்காமலேயே
விடிந்து போகும்"

என்று கூறுவதால் அவருக்கிருந்த குறளார்வம் புலனாகும். **1922**-இல் வேலூர்ச் சிறையில் உருவான இச்சிந்தனை **1954**-இல் கோவையில் நூல் வடிவம் கொண்டது. திருக்குறளைக் கவிஞர் காந்திய நெறியாகவே கொண்டார். அவருடைய வள்ளுவ விளக்கங்கள் காந்திய விளக்கங்களாகவே விளங்கின.

அண்ணல் காந்தியடிகளை நாமக்கல் கவிஞர், திருவள்ளுவர் எனவே போற்றுகின்றார்.

'வள்ளுவரின் வாழ்க்கை தனை
நினைப்பூட்டி
வான்புகழும் திருக்குறளை
நடந்துகாட்டும்
கள்ளமிலாக் காந்தி முனி'

எனப் பாராட்டுவார்.

'தெள்ளியநல் அறங்களையே
தெளிவாய்ச் சொல்லித்
திண்மையுளம் பிசகாமல் நடந்து
காட்ட
வள்ளுவனே மறுபடியும் வந்தான்
என்ன
வழிகாட்டித் திருக்குறளை
வாழ்த்த வள்ளல்
பிள்ளைமனப் பேரறிஞன்
பெம்மான் காந்தி'

என்று பாடும் அவர்தம் பாடல் தேசத்தந்தையே திருவள்ளுவர் என்று காட்டும். வள்ளுவத்தில் வையத்தை அளந்து காண விழையும் கவிஞர் இந்திய ஒருமைக்கும் இணைப்புப் பாலமாகத் திருவள்ளுவ நெறியையும் காந்தியையும் காணுகின்றார் போலும்- 'திருக்குறள் அறிவெலாம் ஒன்றாய்த் திரண்டுள நெறியனவாம் உருக்குறள் காந்திமகான்' எனப் போற்றுவார். அறிவும், காந்திய அடிப்படையில் தோன்றும் சமுதாய உணர்வும் சேர்ந்து அமைந்த மிகவும் புதிய கோணத்திலிருந்து நாமக்கல் கவிஞர் வள்ளுவரைக் காண்கிறார் என்பர.

நாகரிகம் என்பது திருந்திய வாழ்க்கை, அது எல்லாப் பொருள்களையும் தமக்கே பயன்படுத்துவது. பண்பாடு என்பது திருந்திய ஒழுக்கம். அது எல்லாப் பொருள்களையும் தமக்கும் பிறர்க்கும் பயன்படுத்துவது.

-மொழிஞாயிறு
ஞா. தேவநேயப்பாவாணர்

திறனாய்வுப் பண்பு

கவிஞர் எழுதிய 'திருவள்ளுவர் திடுக்கிடுவார்', 'திருவள்ளுவரும் பரிமேலழகரும்', 'வள்ளுவரின் உள்ளம்' ஆகிய மூன்று நூல்களும் திருக்குறள் பற்றிய ஆய்வு நூல்களானாலும் இவை வள்ளுவரின் குறட்பாக்களுக்குப் பரிமேலழகர் வழங்கிய உரைகளின் மறுப்புகளாகவே விளங்குகின்றன. பழைய உரையாசிரியர்களைப் பற்றிய இவருடைய மதிப்பீடு கவிஞரின் நுண்மாண் நுழைபுலத்தையும் ஆய்வு நெறியையும் காட்டும். பரிமேலழகர் கருத்துக்கு மறுப்புரைகள் எழுதியிருந்தாலும் அவரைப் பற்றி நடுவுநிலைமையோடு கவிஞர் கூறும் கருத்துகள் கவிஞரின் ஆய்வு நாகரிகத்தைக் காட்டுவன.

'பரிமேலழகர் உரை மற்றெல்லா உரைகளிலும் மிகச் சிறந்தது என்பதில் எட்டுணையும் ஐயமில்லை ... ஆனாலும் என்ன? பரிமேலழகரும் அவருக்கு முன்னாலிருந்தவர்கள் இயற்றியிருந்த உரைகளைச் சொந்தமாக ஆராயாமல், தவறான உரைகளைத் தந்து விட்டார் என்பதை எடுத்துச் சொல்லக் கூடாதா?' என்று கேட்கும்போது கவிஞரின் திருக்குறள் பற்றையும் நடுநிலைத் திறனாய்வுப் பண்பையும் ஒருங்கே கண்டு மகிழ முடிகிறது.

நேருவின் பொன்மொழிகள்

- சமுதாய நீதி வேண்டும் என்று இன்று மக்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள். ஏழையாகப் பிறந்தால் ஏழையாகவே இருக்க வேண்டும் என்று நினைத்து 'விதி', 'தலை எழுத்து' என்றெல்லாம் பேசுகிற பேச்சை இன்றைய மக்கள் குறைவாகவே மதிக்கிறார்கள். எனவே, செல்வர்க்கும் வறியவர்க்கும் இடையேயுள்ள வேற்றுமைகளை நீக்க முயற்சிப்பது தவிர வேறு வழியில்லை. எல்லாருக்கும் சமவாய்ப்பு ஏற்படுத்தும் வகையிலே நாம் முயலத்தான் வேண்டும்.
- மனிதனுடைய கை, மூளை ஆகியவற்றின் விரிந்த வளர்ச்சியே கருவிகள். கருவிகள் மூலமாகக் கைத்திறனையும் மூளைத் திறனையும் பெருக்கா விட்டால், ஆற்றலும் வளராமல் சுருங்கி விடும்.
- உண்மையான நம்பிக்கை மட்டுமே ஒருவனுக்கு இருக்குமாயின், அந்த நம்பிக்கையே மலைகளைக் கூட அசைத்து விடும்.
- விஞ்ஞானம் மனிதனுடைய அறிவை அதிகரித்ததுமட்டுமின்றி, இயற்கையின் மீது அவன் செலுத்தக் கூடிய ஆதிக்கத்தையும் அதிகரிக்கிறது.
- ஒரு குறிப்பிட்ட காலத்தைச் சேர்ந்த மக்களின் வாழ்வையும், நாகரிகத்தையும் உள்ளவாறு பிரதிபலிக்கும் கண்ணாடி, கலையாகும். இந்திய நாகரிகம் உயிராற்றல் பொங்கித் ததும்பிய காலத்தில், அது அழகுப் பொருள்களைப் படைத்தது. கலைகள் சிறந்தோங்கின; அவற்றின் எதிரொலி தொலை நாடுகளிலும் கேட்கப்பட்டது.

காந்தி தூவிய விதை

காந்திய நெறியைப் பின்பற்றி வாழ்ந்த கவிஞர் எல்லாத் துறைகளிலும் புகழ்பெற்று வாழ்ந்தவர். எழுத்தாளர், பேச்சாளர், அரசியலாளர், ஓவியக்கலைஞர், இசைக் கலைஞர், புதினக்கலைஞர், திறனாய்வாளர் எனப் பல்வேறு நிலைகளிலும் தன் முத்திரையைப் பதித்தவர். காந்திய அணுகுமுறையை எல்லாத் துறைகளிலும் பின்பற்றினார். எனவேதான் மூதறிஞர் இராஜாஜி அவர்கள், பாரதியையும், நாமக்கல்கவிஞரையும் பாராட்டும்போது 'திலகர் விதைத்த விதை பாரதியாக முளைத்தது. காந்தி தூவிய விதை நாமக்கல் கவிஞராகத் தோன்றியது' எனப் போற்றி மகிழ்ந்தார்.



குடும்பத்திற்கு ஒரு வீடு!

—கே. என். நஞ்சுண்டன்
சிறப்பு அலுவலர்/
மேலாண் இயக்குநர்

தமிழக அரசின் "குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற கொள்கையினை, கூட்டுறவுத் துறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்திவரும் தலைமை நிறுவனம்தான், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம். இது *18.3.1959*-இல் பதிவு செய்யப்பட்டு, *15.7.1959* முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழகம் முழுவதிலும் இணையத்தின் பணிகள்:

தமிழகம் முழுவதிலும் உள்ள 638 முதன்மைச் சங்கங்களின் மூலம் புதுவீடு கட்டுவதற்கும்/ மாநகராட்சிப் பகுதிகளில் அடுக்குமாடிவீடு வாங்கவும் (Purchase of flat), புதுவீடு வாங்கவும் (Purchase of new house) உயர்ந்தபட்சம் ரூ. 4 இலட்சம் வரை 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய நீண்டகாலக் கடன் வழங்கி வருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து நகரங்களும், பேரூர்களும், சிற்றூர்களும் முதன்மைச் சங்கங்களின் செயல் எல்லையில் (Area of Operation) இணைக்கப்பட்டுள்ளன.

471 நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கங்கள் நகர்ப்புறப் பகுதிகளிலும், 167 வட்ட வீட்டுவசதிச் சங்கங்கள் கிராமப்புறங்களிலும் செயல் பட்டு வருகின்றன. தமிழகத்தில் எந்த மூலை முடுக்கில் இருக்கும் தனிநபரும், ஏதாவது ஒரு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து வீடுகட்ட இயலும்.

இணையம், தமிழக அரசின் உத்தரவாதத்தின்பேரில், ஆயுள் காப்புறுதிக் கழகம், அட்கோ, எச்டிஎப்சி., தேசிய வீட்டுவசதி வங்கி ஆகிய நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று முதன்மைச் சங்கங்களின் மூலமாக வீடு கட்ட விரும்புபவர்களுக்குக் கடன் வழங்கி வருகிறது.

கிராமிய வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 31.10.95 முடிய 5,59,814 வீடுகள் கட்டி முடிக்க ஏதுவாக ரூ. 377 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 31.10.95 முடிய 1,85,189 வீடுகள் கட்டி முடிக்க ஏதுவாக ரூ. 847 கோடி கடன் வழங்கப் பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதலிடம்

இணையம், கடந்த $4\frac{1}{2}$ ஆண்டுகளில் ரூ 646 கோடி கடன் வழங்கி இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. இது தேசிய அளவில் மாபெரும் சாதனையாகும். இணையம் 1910 முதல் 1991 வரையிலான 80 ஆண்டுக்காலத்தில் ரூ 578 கோடி கடனாக வழங்கியது. இணையம் தனது 80 ஆண்டுக்காலத்தில் வழங்கிய கடன் ரூ.578 கோடியைவிடக் கடந்த நாலரை ஆண்டுகளில் ரூ. 646 கோடி கடன் வழங்கி இமாலயச் சாதனை புரிந்துள்ளது.

நாட்டிலேயே கூட்டுறவுத் துறை மூலம் ரூ. 1224 கோடிக்கு மேல் கடன் வழங்கிய இணையம் நமது இணையம் மட்டுமே. நாடு முழுவதிலும் கூட்டுறவுத்துறை மூலம் கட்டப்பட்ட 14 இலட்சம் வீடுகளில் 7 இலட்சம் வீடுகள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் வழங்கிய கடன் தொகை மூலம் கட்டப்பட்டவையாகும்.

கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடனுதவி

இத்திட்டத்தின் கீழ், கிராமப் புறங்களிலுள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு அவர்களுடைய வீடுகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் 3,080 வழங்கப்படுகிறது. இதன்படி ஓலை வேயப்பட்ட கூரைக்குப் பதிலாக ஓடு வேய்தல், சுவர்களை உறுதிப் படுத்துதல், சுகாதார வசதி மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றிக்குக் கடன் உதவி வழங்கப் படுகிறது.

1994-95-ஆம் ஆண்டு இந்திய அளவில் திறமையாக நிர்வகிக்கப்படும் இணையம் என தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தை, புது டெல்லியிலுள்ள தேசியக் கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தேர்வு செய்தது. அதற்கான தேசிய விருது 13.10.95 அன்று புது டெல்லியில் வழங்கப்பட்டது. இவ்விருதை மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி அவர்கள், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களிடம் காண்பித்து மகிழ்கின்றார். இணையத்தின் சிறப்பு அலுவலர் திரு. கே.என். நஞ்சுண்டன் உடன் இருக்கிறார்.

நடப்பு ஆண்டில் மேற்படித் திட்டத்தின் கீழ் 30,000 வீடுகள் மேம்படுத்த ரூ. 7.74 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் முழுமையாகப் பழுதடைந்த வீடுகளைக் கட்டிக்கொள்ள கடனுதவி.

1992 மற்றும் 1993-ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் முழுமையாக வீடு இழந்த, பொருளாதாரத்தில் நலிவுற்ற 18,000 உறுப்பினர்களுக்கு ரூ. 27 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டிக் கொள்ளக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம், இவ்வாண்டு டிசம்பர் திங்களுக்குள் நிறைவடையும்.

வெள்ளத்தால் பழுதடைந்த வீடுகளைப் புதுப்பிக்கக் கடனுதவி.

1992 மற்றும் 1993-ஆம் ஆண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளத்தினால் பெருமளவில் இடிந்துபோன செங்கற்களால் கட்டப்பட்டு ஓலை வேயப்பட்ட வீடுகள் மீண்டும் கட்டிக் கொள்ள ஏதுவாக ரூ. 3.44 கோடி மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் கடன் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மலைப் பிரதேசத்தில் வீடுகளைப் பழுதுபார்க்கக் கடன் உதவி

கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் நீலகிரி, ஏர்க்காடு மற்றும் கொடைக்கானல் ஆகிய மலைப் பிரதேசங்களில் இயங்கி வரும் வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் வீடுகளைப் பழுதுபார்க்க நடப்பு ஆண்டில் ரூ. 2.07 கோடி கடன் வழங்கிடத் திட்டமிடப் பட்டுள்ளது.



குடும்பத்திற்கு ஒரு வீடு!

–கே. என். நஞ்சுண்டன்
சிறப்பு அலுவலர்/
மேலாண் இயக்குநர்

தமிழக அரசின் "குடும்பத்திற்கு ஒரு வீடு" என்ற கொள்கையினை, கூட்டுறவுத் துறையில் வெற்றிகரமாகச் செயல்படுத்திவரும் தலைமை நிறுவனம்தான், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம். இது 18.3.1959-இல் பதிவு செய்யப்பட்டு, 15.7.1959 முதல் செயல்பட்டு வருகிறது.

தமிழகம் முழுவதிலும் இணையத்தின் பணிகள்:

தமிழகம் முழுவதிலும் உள்ள 638 முதன்மைச் சங்கங்களின் மூலம் புதுவீடு கட்டுவதற்கும்/ மாநகராட்சிப் பகுதிகளில் அடுக்குமாடிவீடு வாங்கவும் (Purchase of flat), புதுவீடு வாங்கவும் (Purchase of new house) உயர்ந்தபட்சம் ரூ. 4 இலட்சம் வரை 20 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தக்கூடிய நீண்டகாலக் கடன் வழங்கி வருகிறது. தமிழகத்திலுள்ள அனைத்து நகரங்களும், பேரூர்களும், சிற்றூர்களும் முதன்மைச் சங்கங்களின் செயல் எல்லையில் (Area of Operation) இணைக்கப்பட்டுள்ளன.

471 நகர்ப்புற வீட்டுவசதிச் சங்கங்கள் நகர்ப்புறப் பகுதிகளிலும், 167 வட்ட வீட்டுவசதிச் சங்கங்கள் கிராமப்புறங்களிலும் செயல் பட்டு வருகின்றன. தமிழகத்தில் எந்த மூலை முடுக்கில் இருக்கும் தனிநபரும், ஏதாவது ஒரு கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கத்தில் உறுப்பினராகச் சேர்ந்து வீடுகட்ட இயலும்.

இணையம், தமிழக அரசின் உத்தரவாதத்தின்பேரில், ஆயுள் காப்புறுதிக் கழகம், அட்கோ, எச்.டி.எப்.சி., தேசிய வீட்டுவசதி வங்கி ஆகிய நிறுவனங்களிடமிருந்து நிதியுதவி பெற்று முதன்மைச் சங்கங்களின் மூலமாக வீடு கட்ட விரும்புபவர்களுக்குக் கடன் வழங்கி வருகிறது.

கிராமிய வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 31.10.95 முடிய 5,59,814 வீடுகள் கட்டி முடிக்க ஏதுவாக ரூ. 377 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது. நகர்ப்புற வீட்டு வசதித் திட்டத்தின் கீழ் 31.10.95 முடிய 1,85,189 வீடுகள் கட்டி முடிக்க ஏதுவாக ரூ. 847 கோடி கடன் வழங்கப் பட்டுள்ளது.

இந்தியாவிலேயே முதலிடம்

இணையம், கடந்த 41/2 ஆண்டுகளில் ரூ 646 கோடி கடன் வழங்கி இந்தியத் துணைக் கண்டத்தில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது. இது தேசிய அளவில் மாபெரும் சாதனையாகும். இணையம் 1910 முதல் 1991 வரையிலான 80 ஆண்டுக்காலத்தில் ரூ 578 கோடி கடனாக வழங்கியது. இணையம் தனது 80 ஆண்டுக்காலத்தில் வழங்கிய கடன் ரூ.578 கோடியைவிடக் கடந்த நாலரை ஆண்டுகளில் ரூ. 646 கோடி கடன் வழங்கி இமாலயச் சாதனை புரிந்துள்ளது.

நாட்டிலேயே கூட்டுறவுத் துறை மூலம் ரூ. 1224 கோடிக்கு மேல் கடன் வழங்கிய இணையம் நமது இணையம் மட்டுமே. நாடு முழுவதிலும் கூட்டுறவுத்துறை மூலம் கட்டப்பட்ட 14 இலட்சம் வீடுகளில் 7 இலட்சம் வீடுகள் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் வழங்கிய கடன் தொகை மூலம் கட்டப்பட்டவையாகும்.

கிராமப்புறங்களுக்கான மாநில வீட்டுவசதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் கடனுதவி

இத்திட்டத்தின் கீழ், கிராமப் புறங்களிலுள்ள பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினர்களுக்கு அவர்களுடைய வீடுகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் 3,080 வழங்கப்படுகிறது. இதன்படி ஓலை வேயப்பட்ட கூரைக்குப் பதிலாக ஓடு வேய்தல், சுவர்களை உறுதிப் படுத்துதல், சுகாதார வசதி மற்றும் தண்ணீர் வசதி ஏற்படுத்திக் கொடுத்தல் போன்றவற்றிக்குக் கடன் உதவி வழங்கப் படுகிறது.

1994-95-ஆம் ஆண்டு இந்திய அளவில் திறமையாக நிர்வகிக்கப்படும் இணையம் என தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தை, புது டெல்லியிலுள்ள தேசியக் கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தேர்வு செய்தது. அதற்கான தேசிய விருது 13.10.95 அன்று புது டெல்லியில் வழங்கப்பட்டது. இவ்விருதை மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி அவர்கள், தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களிடம் காண்பித்து மகிழ்கின்றார். இணையத்தின் சிறப்பு அலுவலர் திரு. கே.என். நஞ்சுண்டன் உடன் இருக்கிறார்.

நடப்பு ஆண்டில் மேற்படித் திட்டத்தின் கீழ் 30,000 வீடுகள் மேம்படுத்த ரூ. 7.74 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் முழுமையாகப் பழுதடைந்த வீடுகளைக் கட்டிக்கொள்ள கடனுதவி.

1992 மற்றும் 1993-ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் கடலோர மாவட்டங்களில் புயல் வெள்ளத்தால் முழுமையாக வீடு இழந்த, பொருளாதாரத்தில் நலிவுற்ற 18,000 உறுப்பினர்களுக்கு ரூ. 27 கோடி மதிப்பீட்டில் வீடு கட்டிக் கொள்ளக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டம், இவ்வாண்டு டிசம்பர் திங்களுக்குள் நிறைவடையும்.

வெள்ளத்தால் பழுதடைந்த வீடுகளைப் புதுப்பிக்கக் கடனுதவி.

1992 மற்றும் 1993-ஆம் ஆண்டுகளில் கன்னியாகுமரி மாவட்டத்தில் புயல் மற்றும் வெள்ளத்தினால் பெருமளவில் இடிந்துபோன செங்கற்களால் கட்டப்பட்டு ஓலை வேயப்பட்ட வீடுகள் மீண்டும் கட்டிக் கொள்ள ஏதுவாக ரூ. 3.44 கோடி மதிப்பீட்டில் நடப்பு ஆண்டில் கடன் வழங்கிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

மலைப் பிரதேசத்தில் வீடுகளைப் பழுதுபார்க்கக் கடன் உதவி

கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் நீலகிரி, ஏர்க்காடு மற்றும் கொடைக்கானல் ஆகிய மலைப் பிரதேசங்களில் இயங்கி வரும் வீட்டுவசதிச் சங்கங்கள் மூலம் வீடுகளைப் பழுதுபார்க்க நடப்பு ஆண்டில் ரூ. 2.07 கோடி கடன் வழங்கிடத் திட்டமிடப் பட்டுள்ளது.

பீடித் தொழிலாளர்களுக்கு வீடு கட்டக் கடன் உதவி:

அம்பாசமுத்திரம் வட்டச் சங்கம் மூலம் முக்கூடல் கிராமத்திலும், பாளையங்கோட்டை வட்டச் சங்கம் மூலம் மேலப் பாளையம் கிராமத்திலும் வசிக்கின்ற பீடித் தொழிலாளர்களுக்கு நடப்பு ஆண்டில் ரூ. 2.05 கோடி கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழக அரசின் உதவி:

இவ்விணையம் தொடங்கிய போது ரூ.5 இலட்சத்தைத் தமிழக அரசு பங்கு மூலதனமாக அனுமதித்தது. தொடர்ந்து ரூ. 4.85 கோடி வரை முதலீடு செய்த அரசுப்பங்குத் தொகையில் தற்போது ரூ. 2,80 கோடி நிலுவையாக உள்ளது. பல்வேறு நிதி நிறுவனங்களிடமிருந்து பெறுகின்ற கடனுக்கு அரசு அளிக்கும் உத்தரவாதத்திற்கு எந்தவிதமான தொகையும் (Guarantee Commission) இணையத்திலிருந்து வசூலிக்கவில்லை. அத்துடன் அடமானச் சொத்துக்கள் ஆதாரத்தின் பேரில் ஆயுள் காப்பீட்டுக் கழகத்திற்கு எழுதித் தரும் அடமானம் பத்திரத்திற்கு முத்திரைக் கட்டணம், பதிவுக் கட்டணம் ஆகியவற்றிற்கும் அரசு விலக்களித்துள்ளது. உறுப்பினர்கள் முதன்மைச் சங்கங்களுக்கு எழுதித்தரும் அடமானப் பத்திரத்திற்கும் முத்திரைக் கட்டணம் செலுத்தவேண்டியதில்லை. கிராமிய வீட்டு வசதித் திட்டத்தின்கீழ் 'அட்கோ' நிறுவனத்திடமிருந்து கடனை குறித்த காலத்தில் திருப்பிச் செலுத்துவதற்கு ஏதுவாக இணையத்திற்கு வட்டியில்லாக் கடன் அரசு வழங்கி வருகிறது.

> **முதல் கிராமக் கூட்டுறவுச் சங்கம்**
>
> தமிழ்நாட்டில், ஏன், இந்தியாவிலேயே, செங்கல்பட்டு மாவட்டம் திருவள்ளூர் வட்டத்தில், திரூர் கிராமத்தில் தான் முதலாவதாகக் கூட்டுறவு சங்கம் எண் 1 என 30-8-1904-இல் பதிவு செய்யப் பட்டது.

வீட்டு வசதித் திட்டங்களைச் செம்மையாகச் செயல்படுத்துவதில், இந்தியாவிலுள்ள 23 இணையங்களில் இவ்விணையம் தொடர்ந்து முன்னிலை வகித்து வருகிறது.

இந்திய அளவில் வீட்டு வசதித் திட்டங்களை வெற்றிகரமாகச் செயல்படுத்தி வரும் வீட்டுவசதி நிறுவனங்களுக்கு "அட்கோ நிறுவனம்" ஆண்டு தோறும் விருதுகள் வழங்கிப் பாராட்டி வருகிறது. இவ்வகையில் தொடர்ந்து முதல் இடத்தை வகிக்கும் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு "அட்கோ நிறுவனம் 1992-93 மற்றும் 1993-94 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளது. இந்த இணையம் தொடங்கியதிலிருந்து சிறப்பாகச் செயல்பட்டு வருவதால் 1993-94-ஆம் ஆண்டிற்கு அதிகப் பட்சம் 16 சதவீதமும் ஈவுத்தொகை வழங்கியுள்ளது.

தொடர்ந்து இலாபத்தில் இயங்கிவரும் இணையம் 1992-93-ஆம் ஆண்டு ரூ. 10.76 கோடியும், 1993-94-ஆம் ஆண்டில் ரூ. 12.30 கோடியும் இலாபம் ஈட்டியுள்ளது. இத்துடன் ஆசியாவிலேயே சிறந்த விளையாட்டு அரங்கமான நேரு விளையாட்டு அரங்கின் கட்டுமானப் பணிக்கு இணையம் மற்றும் முதன்மைச் சங்கங்களின் சார்பில் ரூ. 50 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது. கோயில் புனரமைப்பு மற்றும் பராமரிப்பு நிதிக்காக ரூ. 4.17 இலட்சமும், மாண்புமிகு முதல்வர் அவர்களின் பொது நிவாரண நிதிக்கு ரூ.10 இலட்சமும் இணையம் வழங்கியுள்ளது. 1990-91 முதல் வழங்கப்படும் கடன் தொகைக்குக் கடன் பெற்ற உறுப்பினர் மாதந்தோறும் கட்டவேண்டிய தவணைத் தொகையில் பாதித் தொகையைச் செலுத்தினால் போதும். மீதிப் பாதியை அரசே ஏற்கும்.

இணையத்திற்குத் தேசிய விருது

அனைத்துலகக் கூட்டுறவு நிறுவனங்களின் ஒருங்கிணைப்பின் நூற்றாண்டு விழா மான்செஸ்டர் நகரில் 20.9.95 முதல் 23.9.95 வரை நடைபெற்றது. மாண்புமிகு தமிழக வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். ரகுபதி அவர்களையும், தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தின் சிறப்பு அலுவலர் திரு கே.என். நஞ்சுண்டன் அவர்களையும், இந்தியாவிலுள்ள கூட்டுறவு வீட்டுவசதிச் சங்கங்களின் சார்பில் இவ்விழாவில் கலந்துகொள்ள புதுடெல்லியிலுள்ள தேசியக் கூட்டுறவு வீட்டுவசதி இணையம் தேர்ந்தெடுத்து அனுப்பி வைத்தது.

ரூ. 15 கோடி நிதி ஒதுக்கீடு: அரசு மருத்துவமனைகளில் அவசிய மருந்துகள் அனைத்தும் கிடைக்க முதல்வர் ஆணை

தமிழ்நாட்டிலுள்ள அனைத்து அரசு மருத்துவ மனைகளிலும், குறிப்பாக கிராமப்புறங்களிலுள்ள ஆரம்பச் சுகாதார நிலையங்கள் (Primary Health Centres) போன்றவைகளில் உயிர்காக்கும் மருந்து வகைகள் உட்படப் பல்வேறு நோய்களுக்கான அனைத்து மருந்துகளும் தேவையான அளவுக்கு எப்போதும் இருப்பில் வைக்கப்பட வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆணையின் பேரில், அரசு மருத்துவமனைகளின் மருந்துகள் இருப்பினை ஒருங்கிணைந்த முறையில் கண்காணித்து கொள்முதல், விநியோகம் மற்றும் இருப்பு ஆகிய பணிகளைச் செம்மையாக மேற்கொள்வதற்காகத் தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழக (Tamil Nadu Medical Services Corporation) என்ற அமைப்பு 56 கோடி ரூபாய் செலவில் ஏற்படுத்தப்பட்டு, அந்தக் கழகம் தற்போது சீரிய முறையில் செயல்பட்டு வருகிறது. மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆலோசனையின் பேரில், தமிழ்நாட்டிலுள்ள ஒவ்வொரு அரசு மருத்துவமனையிலும் குறைந்தபட்சம் 6 மாதங்களுக்குத் தேவையான அவசிய மருந்துகளும், பொருட்களும் இருப்பில் வைத்திருக்க வேண்டும் என்பதற்காகத் திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்த 15 கோடி ரூபாய் நிதி, தமிழ்நாடு மருத்துவச் சேவைக் கழகத்திற்குத் தேவைப்பட்ட அளவுக்கு மருந்துகளை வாங்கிக் கொள்வதற்காக ஒதுக்கீடு செய்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

1994-95-ஆம் ஆண்டு இந்திய அளவில் திறமையாக நிர்வகிக்கப்படும் இணையம் என தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையம், தேசியக் கூட்டுறவு வீட்டு வசதி இணையத்தால் தேர்வு செய்யப்பட்டது. அதற்கான தேசிய விருது 13.10.95 அன்று புது டெல்லியில் வழங்கப்பட்டது. மேலும், இந்த ஆண்டு முதல் இந்தியாவிலேயே சிறப்பாகச் செயல்படும் ஒரு கிராமிய வீட்டு வசதிச் சங்கத்தைத் தேர்ந்தெடுத்து அதற்கு 'மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர், புரட்சித் தலைவி ஜெ.ஜெயலலிதா விருது' என்னும் தேசிய விருதை ஆண்டுதோறும் வழங்கத் தேசிய கூட்டுறவு வீட்டு வசதி இணையம் முடிவு செய்துள்ளது.

இந்தியாவிலேயே சிறந்த கிராமியக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கமாக, தர்மபுரி மாவட்டத்தில் உள்ள பாலக்கோடு வட்டக் கூட்டுறவு வீட்டு வசதிச் சங்கம்" தேர்ந்தெடுக்கப்பட்டு, அதற்குப் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா விருது வழங்கப்பட்டது. இவ்விருதினையும், தேசியக் கூட்டுறவு வீட்டுவசதி இணையத்தால் தமிழ்நாடு கூட்டுறவு வீட்டு வசதி இணையத்திற்கு வழங்கப்பட்ட சிறப்பு விருதினையும் மத்திய அரசின் மாண்புமிகு வீட்டுவசதித் துறை இணை அமைச்சர் மாண்புமிகு எஸ்.எஸ் அலுவாலியா அவர்கள், மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. எஸ். இரகுபதி அவர்களிடம் வழங்கினார்.

1995-96-ஆம் ஆண்டில் வழங்க உள்ள கடன்:

நடப்பு ஆண்டில் நகர்ப்புற மற்றும் கிராமிய வீட்டுவசதித் திட்டத்தின்கீழ் வீடுகள் கட்டி முடிக்கவும், பழுது பார்க்கவும், மேம்படுத்தவும் ரூ. 252 கோடி அளவிற்குக் கடன் வழங்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம், கடந்த 36 ஆண்டுகளில் சீராக வளர்ச்சிப் பெற்று தமிழக மக்களின் வீட்டுவசதித் தேவையைத் திட்டமிட்டு வெற்றிகரமாகச் செயல்படுத்தி வருகிறது. முதன்மைச் சங்கங்களுக்குக் கடன் வழங்குவதிலும், நிதி நிறுவனங்களிடமிருந்து கடன் தொகை பெறுவதிலும், பங்குத் தொகை வசூலிப்பதிலும், கட்டி முடிக்கப்பட்ட வீடுகளின் எண்ணிக்கையிலும் அகில இந்திய அளவில் இணையம் முதலிடம் வகிக்கிறது. ●

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் இயங்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்

திரு.பா. இராமகிருஷ்ண பரமஹம்சர்
கூடுதல் இயக்குநர்
தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்

கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை விரிவுபடுத்தி நல்ல முன்னேற்றம் அடையச் செய்யும் நோக்கத்துடன் 1960ஆம் ஆண்டு ஏப்ரல் திங்களில் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் என்ற அமைப்பு ஆரம்பிக்கப்பட்டது. குறைந்த மூலதனத்தில் நலிவுற்ற கைத்தொழில் கலைஞர்களுக்கு அவரவர் இருப்பிடங்களிலேயே தமிழ்நாடு முழுவதிலும் நிறுவப்பட்டுள்ள கதர் கிராமத்தொழில் வாரிய அலகுகள் மூலம் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தித் தருவது வாரியத்தின் தலையாய நோக்கமாகும்.

மத்திய அரசின், கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட 96 கிராமத் தொழில்களில் 59 கிராமத் தொழில்களையும் மற்றும் கதர்த் தொழிலையும், தனது நேரடி அலகுகள், தன் கீழ் செயல்படும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனி நபர் கைத்தொழில் கைவினைஞர்கள் மூலமாகவும் செயல்படுத்தி வருகிறது. அவ்வகையில், கதர்த்திட்டங்களையும் உண்ணா எண்ணெயிலிருந்து குளியல் மற்றும் சலவைச் சோப்பு செய்யும் தொழிலையும் வாரியம் தனது நேரடி அலகுகள் மூலம் மட்டுமே செயல்படுத்தி வருகிறது. இதரக் கிராமக் கைத்தொழில்களான மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தி, தச்சுக் கருமார் தொழில், பருப்பு மற்றும் நவதானியப் பொருட்கள் தயாரித்துப் பதப்படுத்துதல், சுண்ணாம்பு, கிளிஞ்சல் தயாரித்தல், தோல் பொருட்கள் தயாரித்தல், தேன் சேகரித்தல், கைமுறை காகிதம் தயாரித்தல், அலுமினிய வீட்டு உபயோகப் பொருட்கள் தயாரித்தல் போன்ற கிராம கைத்தொழில்கள் வாரியத்தின் நேரடி அலகுகள் மூலமாகவும், தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் தனி நபர் தொழில் கைவினைஞர்கள் மூலமாகவும் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

திட்டங்களைச் செயல்படுத்தி, தொழிலை மேம்படுத்தி, வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி, வருவாய் ஈட்டும் வகையில் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களுக்கும், தனி நபர் கைவினைஞர்களுக்கும் 4 சதமான குறைந்த வட்டியில் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவிலிருந்துக் கடன் மற்றும் மானயம் பெற்று வினியோகிக்கிறது. அத்துடன், அரசு சிறப்புத் திட்டங்களான ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம், மேற்கு மலைத்தொடர்ச்சி மேம்பாட்டுத்திட்டம், சிறப்பு மேம்பாட்டுத் திட்டம் பகுதி - 2 ஆகியவற்றையும் அரசு வழங்கும் தொகையினைக் கொண்டு செயல்படுத்தி வருகிறது.

தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் 1,289 அலகுகள் செயல்பட்டு வருகின்றன. 1994-95-ஆம் ஆண்டு முடியவுள்ள காலத்தில் 79,734 தனி நபர் கைவினைஞர்களுக்கு நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. 1994-95-ஆம் ஆண்டில் வாரியத்தின் நேரடி அலகுகள், வாரிய நிர்வாகத்தின் கீழ் செயல்படும் தொழிற்ச் சங்கங்கள் மற்றும் நிதியுதவி பெற்ற கைவினைஞர்கள் அனைவர்களாலும் ரூ.38,446.94

இலட்சம் மதிப்புள்ள கதர் மற்றும் கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தி செய்யப்பட்டு, ரூ.41,583.32 இலட்சம் மதிப்புள்ள பொருட்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன. 1994-95-ஆம் ஆண்டு முடியவுள்ள காலத்தில் 14,31,754 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கப்பட்டுள்ளது. அதில் 5,26,570 பேர் பெண்கள் 2,99,795 பேர் ஆதிதிராவிடர் இனத்தைச் சேர்ந்தவர்கள் மற்றும் 15,970 பேர் பழங்குடி இனத்தைச் சேர்ந்தவர்கள், அனைவருமாக 1994-95-ஆம் ஆண்டில் ரூ.19,744.15 இலட்சம் கூலியாக வருமானம் ஈட்டியுள்ளனர்.

அகில இந்திய அளவில் கதர் உற்பத்தியில் 2-வது இடத்தையும், கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தியில் 3வது இடத்தையும், கிராமத்தொழில்கள் மூலம் வேலை வாய்ப்பளிப்பதில் முதல் இடத்தையும், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் 1992-93-இல் வகித்துள்ளது. மேலும், வாரியக்கூட்டமைப்புத் திட்டங்களைச் செம்மையாக நிறைவேற்றும் பணியில் இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்தையும விட முன்னிலை வகித்து, மத்திய அரசின் கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டுள்ள எ கிரேடு என்னும் சிறப்பைத் தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியம் மட்டுமே பெற்றுள்ளது.

வாரியத்தின் நேரடி அலகுகள் தவிர ஆங்காங்கே கிடைக்கும் மூலப் பொருட்களைக் கொண்டு கிராமக் கைவினைஞர்களின் இருப்பிடங்களுக்கு அருகிலேயே கதர் கிராமத் தொழில் ஆணைக்குழு அனுமதித்துள்ள கைத்தொழில்களுக்கு, தொழிற் கூட்டுறவுச் சங்கங்களையும் பதிவு செய்து அத்தொழிலின் வளர்ச்சிக்கு வாரியம் நிதி உதவி, தொழில் நுட்ப உதவி மற்றும் நிர்வாக உதவி ஆகியவற்றை அளிக்கிறது. அவ்வகைக்கு கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்குள்ள அதிகாரங்கள் அனைத்தும், கதர் கிராமத் தொழில்களைப் பொருத்த வரையில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் தலைமைச் செயல் அலுவலருக்கு அரசினால் வழங்கப்பட்டுள்ளது. அப்பணியில் அவருக்கு உதவியாக வாரியத்தின் தலைமை அலுவலகத்தில் தொழிற் கூட்டுறவு உதவி இயக்குநர் ஒருவர் மற்றும் இணை் இயக்குநர் (மானிடரிங் செல்) ஆகியோருடன், பிற பணிகளுடன் தொழிற் கூட்டுறவு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளையும் நிர்வகித்து வரும் கூடுதல் இயக்குநர் செயல்பட்டு வருகின்றனர்.

> **மரத்தை வெட்டுகின்றவன், அது இதுவரை கொடுத்து வந்த நிழலையும் சேர்த்து வெட்டுகிறான் என்பதை மனதில் வையுங்கள்.** —*சீனப் பழமொழி*

தமிழ்நாடு முழுவதும் வேலூர், திருச்சி, திருப்பூர் மற்றும் மதுரை ஆகிய நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு மண்டலமும் ஒரு மண்டலத்துணை இயக்குநரால் நிர்வாகிக்கப்பட்டு வருகிறது. தொழிற் கூட்டுறவைப் பொருத்த வரையில், மண்டலத் துணை இயக்குநர்களுக்கு கூட்டுறவுத் துறையின் இணைப் பதிவாளருக்குண்டான அதிகாரமனைத்தும் வழங்கப்பட்டுள்ளது. அதேபோன்று மாவட்டங்களைப் பொருத்த வரையில், தொழிற் கூட்டுறவு உட்பட அனைத்துக் கதர் கிராமத் தொழில் திட்டங்களையும் செயல்படுத்த 30 உதவி இயக்குநர்கள் செயல்பட்டு வருகின்றனர். தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைப் பொருத்த வரையில் கூட்டுறவுத் துறையின் துணைப் பதிவாளருக்குண்டான அதிகாரங்கள் அன்னைத்தும் உதவி இயக்குநருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கூட்டுறவே நாட்டுயர்வு என்ற குறிக்கோளுடன் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் தொழிற் கூட்டுறவுச் சங்கங்களைப் பதிவு செய்து, அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருகிறது. அக்கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் கிராமக் கைவினைஞர்களுக்கு, குறிப்பாக ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கு வேலை வாய்ப்பளிப்பதுடன், அவர்கள் வாழ்க்கையில் முன்னேறுவதற்கான வழிவகைகளும் செய்யப்படுகின்றன. 31.3.95-இல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தின் கீழ் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் கீழே குறிப்பிட்டுள்ள படி செயற்பட்டு வருகின்றன.

மட்பாண்டம் இயங்கும் சங்கங்கள் 119 இதேபோல, நார் மற்றும் பாய் 78, தச்சு மற்றும் கருமார் 103, எண்ணெய் 41, தோல் 64, கைக்குத்தலரிசி,

உள்ளத் தூய்மை.

உள்ளத் தூய்மையுடன் கடமைகளைச் செய்கிறவனே உண்மையான மனிதன், தொண்டன், தலைவன் எல்லாம்.

—விநோபா

ஊக்கமுள்ள மனிதன்.

ஊக்கமுள்ள மனிதன், அங்கும் இங்கும் நிற்காமல் தன் கடமைகளைத் தொடர்ந்து செய்து கொண்டிருப்பான்.

—எமர்சன்

அன்பே உலகம்!

இந்த உலகமே அன்பினாலும், சமாதானத்தினாலும் இயங்கிக் கொண்டிருக்கிறது.

—ஏலன் போல்

பருப்பு நவதானியம் 33, பிரம்பு மற்றும் மூங்கில் 35, சுண்ணாம்பு 42, பல்வகைத் தொழில் 38, தேன் சேகரிப்பு 18, பனை ஓலைப் பொருட்கள் 27, கைமுறைக் காகிதம் 7, அகர்பத்தி 4, அலுமினியப் பொருட்கள் 14, பழப்பக்குவப்படுத்துல் 5, மின்னணுச் சாதனங்கள் தயாரிப்பு 13, முந்திரிப்பருப்பு பக்குவப்படுத்துல் 2, கடுக்காய்ச் சேகரிப்பு 1, மாலை தயாரித்தல் 1, கொம்பு மற்றும் எலும்புப்பொருட்கள் 1, எழுது பொருட்கள் 18, பாலிதீன் கவர் 1, செயற்கை வைரக்கல் பட்டைத்தீட்டுதல் 18, ஆயுர்வேத மருந்துத் தயாரிப்பு 1, குண்டூசி தயாரித்தல் 1, மெழுகுவர்த்தித் தயாரிப்பு 1, கதர்த்துணி 12, கதர்ப்பட்டு 3, கதர்த்துணி தைத்தல் 3, கம்பளி 3, பனைத்தொழில் 1173. மொத்தம் 1880.

மேற்குறிப்பிடப்பட்டுள்ள 1880 கூட்டுறவுச்சங்கங்களில் 2 மாநில அளவிலும், 7 மாவட்ட அளவிலும் மீதமுள்ள 1,871 ஆரம்பச் சங்கங்களாகவும் உள்ளன.

அனைத்துக்கூட்டுறவுச் சங்களிலுமாக 5,12,890 உறுப்பினர்கள் உள்ளனர். அதில் 72,916 பேர் பெண்கள் மற்றும் 52,442 பேர் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர், பங்குத் தொகையாக ரூ.248.63 இலட்சம் செலுத்தியுள்ளனர்.

1994-95-ஆம் ஆண்டில் அச்சகங்கள் ரூ.17,242.46 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை உற்பத்தி செய்துள்ளன. ரூ.19,045.27 இலட்சம் மதிப்புள்ள பொருட்களை விற்பனை செய்துள்ளன. அதன் மூலம் 31.3.95 முடியவுள்ள காலத்தில் 9,43,783 நபர்களுக்கு வேலை வாய்ப்பும், ரூ.10,635.88 இலட்சம் வருவாயும் அளித்துள்ளன.

இதுவரை தமிழ்நாடு கதர் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் செயல்பட்டு வந்த பனைத் தொழில், அத்தொழில் சம்பந்தப் பட்ட திட்டங்களை மேலும் சிறப்பாகச் செயல்படுத்தும் எண்ணத்துடன் தமிழ்நாடு பனைப்பொருட்கள் வாரியம் என்ற அமைப்பை ஏற்படுத்துவதற்குத் தேவையான சட்டத்தை தமிழ்நாடு அரசு நிறைவேற்றி, அதனைச் செயல்படுத்துவதற்கு முதுநிலை இந்திய ஆட்சி பணியாளர் ஒருவரை தமிழ்நாட்டிலுள்ள பனைத்தொழிலை பொறுத்த மட்டில் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் என்று நியமித்துள்ளது. அவ்வகைக்குத் தலைவர் மற்றும் உறுப்பினர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர். அவ்வாரியம் 6.1.95 முதல் செயல்பட்டு வருகிறது.

இவ்வாறாக, வறுமைக் கோட்டின் கீழ் வாழும் கைவினைஞர்களை ஊக்குவித்து, அவர்களுக்கு வேலை வாய்ப்பளித்து, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துவதற்குத் தமிழ்நாடு கதர்க் கிராமத்தொழில் வாரியத்தின் கீழ் செயல்படும் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் தனிச் சிறப்பான பங்கு வகிக்கின்றன.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927

தூய
பட்டு
தூய
சரிகை
ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ—ஆப்டெக்ஸ்.
கோ-ஆப்டெக்ஸ்

16.12.1995 ரூ.3



இந்த இதழில்...

விளையாட்டுத்துறைக்கு
ஒரு புதிய பரிமாணம்
மாண்புமிகு முதல்வர் உரை 2

இந்திய மண்ணெங்கும் வலம்வந்து
ஒளிவீசிய சுடரோட்டத்தின்
வெற்றிப் பயணம்.. 7

புதிய சகாப்தத்தின் தொடக்க விழா!
- மாண்புமிகு முதல்வர் உரை 9

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா
உள்ளுறை விளையாட்டரங்கம் 17

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப்
போட்டிகளின் நிகழ்ச்சி நிரல்..................... 22

கவினுறு கலைநிகழ்ச்சிகள் 24

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்:
பதக்கப் பட்டியல் 29

'சிட்கோ' படைக்கும் புதிய சாதனை 34

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

மார்கழித் திங்கள் : 1

மலர்: 26 இதழ்: 12

16.12.1995

விலை ரூபாய் : 3

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி



இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
ஊக்க முடையா னுழை.

★ சோர்வு இல்லாத ஊக்கம் உடைய வனிடத்தில் ஆக்கமானது தானே அவன் உள்ள இடத்திற்கு வழிகேட்டுக் கொண்டு போய்ச் சேரும்.

"விளையாட்டுத் துறைக்கு ஒரு புதிய பரிமாணம்"

- மாண்புமிகு முதல்வர்

சென்னை கோயம்பேட்டில் 13.12.1995 அன்று நடைபெற்ற ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான விளையாட்டு நகரம் திறப்பு விழா மற்றும் தமிழ்நாடு சட்டப்பேரவை உறுப்பினர்களுக்கான புதிய குடியிருப்புக் கட்டடங்கள் உள்பட புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டு விழாவில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் ஆற்றிய உரை.

இந்திய விளையாட்டு வரைபடத்தில், ஏன் சர்வதேச விளையாட்டு வரைபடத்திலும், தமிழகத்திற்கு ஒரு தனி இடத்தைப் பெற்றுத் தரும் வரலாற்றுச் சிறப்பு மிக்க, தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகளை யொட்டி, கவின்மிகு சென்னை மாநகரில், கலை அம்சங்களுடன் நிர்மாணிக்கப்பட்டுள்ள, SAF Games Village-ஐ விளையாட்டு நகரத்தைத் திறந்து வைத்து, தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர் களுக்கான புதிய அடுக்குமாடி குடியிருப்புக்கட்டடங்கள் உள்பட பல புதிய கட்டடங்களுக்கு அடிக்கல் நாட்டி உங்கள் அனைவரையும் காண்பதில் நான் பெருமகிழ்ச்சியும், பேரு வகையும் அடைகிறேன்.

தமிழகத்தில், நெடுங்காலமாகச் செயலற்று முடங்கிக்கிடந்த பல துறைகளுக்கு, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு, எங்கள் அரசு ஒரு புதிய ஆக்கத்தையும், ஊக்கத் தையும் கொடுத்து அந்தத் துறைகளில் விரைந்த வளர்ச்சிக் கும் வித்திட்டுள்ளது. அப்படி ஒதுக்கப்பட்டுக்கவனிப்பாரற்றுக் கிடந்த துறைகளில், விளை யாட்டுத் துறையும் ஒன்று. கவனிப்பாரற்று இருந்த விளையாட்டுத்துறை, இன்று நமது அனைவரின் கவனத்தை ஈர்த்துள்ளதோடு, ஒரு புதிய எழுச்சியையும், ஏற்றத்தையும் உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் பெற்றுள்ளது என்றால் அது மிகையாகாது.

தமிழ்நாட்டில் விளை யாட்டை விளையாட்டாகக் கருதுகின்ற காலம் இன்று மாறிவிட்டது. விளையாட்டுத் துறைக்கு இன்று ஒரு புதிய பரிமாணம் கிடைத்துள்ளது. தமிழகத்தில், பல இடங்களில் கட்டப்பட்டு வரும் விளையாட்டு அரங்கங்களும், விளையாட்டு களை ஊக்குவிக்கும் புதிய அமைப்புகளும் இன்று மக்கள் மத்தியில் ஒரு விளையாட்டு உணர்வை Sports Spirit-ஐ ஏற்படுத்தி உள்ளதை எவரும் மறுக்க முடியாது. குறிப்பாக, வளரும் தலைமுறையினர் இடையே, விளையாட்டு உணர் வையும், எதையும் Sportive-ஆக எடுத்துக் கொள்ள வேண்டிய பரந்த மனப்பான்மையையும், வளர்க்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து விளை யாட்டுத்துறைக்கு, நாங்கள் புதிய பொலிவினைக் கொடுத்துள் ளோம்.

ஒரு காலத்தில் அரசிட மிருந்து, ஏதேனும் உதவி கிடைக்காதா என்று விளை யாட்டுத் திறன் படைத்த இளைஞர் கூட்டம் சுற்றி வந்த நிலை, இன்று முழுவதுமாக மாறி எங்கள் ஆட்சிக்காலத்தில் அத்தகைய தகுதி படைத்த இளைய தலைமுறையினரை அரசே தேடிச் சென்று உதவிகளை வழங்கும் வர வேற்கத் தக்க சூழ்நிலை ஏற் பட்டுள்ளது. அவர்களது திறமை களை வளர்க்க நிதி கொடுப் பதில் ஆகட்டும், அவர்கள் போட்டிகளில் பங்கு கொள்ளவும் பல்கலைத் திறமை களை வளர்த்துக் கொள்ளவும் உதவிகள் அளிப்பதில் ஆகட்டும், விளையாட்டை மேம்படுத்த புதிய திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்துவதில் ஆகட்டும், நாங்கள் ஒரு தனி உற்சாகத் துடனேயே இதுவரை பணி யாற்றி வந்துள்ளோம். விளை யாட்டுத் துறைக்கு ஒரு புதிய மறுமலர்ச்சியை உண்டாக்க தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் Sports Development Authority of Tamil Nadu என்ற ஒரு அமைப்பு எங்கள் ஆட்சிக்காலத்தில் ஏற் படுத்தப்பட்டது. கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில், விளையாட்டு உணர்வு மக்கள் மத்தியில் மீண்டும் ஒரு புதிய மதிப்பையும், அங்கீகாரத்தையும் பெற் றுள்ளது. புதிய விளையாட்டு அரங்கங்களும், புதிய அமைப்பு களும் இன்று உருவாகி உள்ளன. மாநில அளவிலும், தேசிய அளவிலும் நடைபெற்ற விளையாட்டுப் போட்டிகளில் வெற்றி பெற்ற விளையாட்டு வீரர்களையும், வீராங்கனை களையும், நாங்கள் தேடிச் சென்று பரிசுகளை வழங்கி ஊக்குவித்து வருகின்றோம். தமிழக விளையாட்டுத்துறையின் வளர்ச்சிக்குச் சிகரம் வைத்தது போல, நடைபெற உள்ள ஏழாவது தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள், உண்மையில் நமக்கு மாபெரும் மகிழ்ச்சியைத் தரும் நிகழ்ச்சி ஆகும்.

ஒரு நாட்டின் தலைநகரத்தில் நடைபெற வேண்டிய மாபெரும் விளையாட்டுப் போட்டிகள், இங்கே. ஒரு மாநிலத்தின் தலைநகரத்தில் நடத்த முற்பட்ட போது, சர்வதேசத் தரத்தில் விளையாட்டு அரங்கங்களும்,

போட்டியாளர்கள் தங்குவதற்கு விடுதி வசதிகளும், சென்னையில் இல்லையே ? எப்படி இந்த விளையாட்டுப் போட்டிகளை நடத்த முடியும்? என்று, சிலர் கேள்விக் கணைகளைத் தொடுத்தார்கள். தமிழக மக்களின் பேராதரவு மட்டும் எங்களுக்குத்துணையாக இருந்தால், இந்த உலகத்தில் எங்களால் எதையும் சாதிக்க முடியும் என்று துணிவுடன் செயல்பட்டோம். நம்மிடம் இல்லாத விளையாட்டு வசதிகளை உருவாக்கி, சென்னை மாநகரம் ஒரு மாபெரும் Sports City என்பதை நிரூபிக்க வேண்டும் என்று உறுதி பூண்டோம். இன்று 240 கோடி ரூபாய்க்கும் அதிகமான செலவில் பல புதிய விளையாட்டு அரங்கங்கள், சர்வதேசத் தரத்தில் கட்டி முடிக்கப்பட்டுள்ளன.

டென்னிஸ் விளையாட்டரங்கம், ஹாக்கி விளையாட்டரங்கம், நீர் விளையாட்டு வளாகம், விளையாட்டு உள்ளரங்கம், கால்பந்து விளையாட்டரங்கம், சர்வதேசத் தரத்தில் ஓடு தளம் என்று, சென்னை நகரின் பல பாகங்களில், புதிய விளையாட்டுச் சின்னங்கள் உருவாகி உள்ளன. Our sole aim is to make Tamil Nadu the best destination for Sports in India and we have achieved our goal to a great extent. சர்வதேச அளவிலான விளையாட்டுப் போட்டிகளை எப்படி சென்னையில் நடத்த முடியும் என்று நம்மை வெளி மாநிலத்தினர் கேட்கும் நிலைமை இன்று அடியோடு மாற்றியுள்ளோம்.

☆ விளையாடுவது எந்த அளவிற்கு முக்கியமோ அதைவிட முக்கியம் வசதிகளோடு தங்குவது என்பதை உணர்ந்த மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அரசு 35 ஏக்கர் நிலப்பரப்பில், அண்ணாநகர் அருகே, கோயம்பேடு என்னுமிடத்தில் 70 கோடி ரூபாய் செலவில், விளையாட்டு வீரர்கள் தங்கிட விளையாட்டு நகரம் ஒன்றை உருவாக்கித் தந்துள்ளது.

இந்த தெற்காசிய விளையாட்டுப் .போட்டிகள் சென்னையில் நடைபெறுவதற்கு பெருமுயற்சிகளை மேற்கொண்டவர் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் திரு. பா சிவந்தி ஆதித்தன் அவர்கள். சென்னையில் இந்த ப்போட்டிகள் நடைபெறுவதில் அவருக்குப் பெரும் பங்கு உண்டு. எனவே, திரு. பா. சிவந்தி ஆதித்தன் அவர்களுக்கு எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த விளையாட்டு நகரம் அமைக்க க் கடனுதவி வழங்கி ஒத்துழைப்பு நல்கிய ஹட்கோ நிறுவனத்திற்கும், அதன் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.பட்நாகர் அவர்களுக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கைச் சூழல்கள் இயல்பாகப் பொருந்திய சில அமைப்புகளுடன் நிர்மா[illegible]ப்பட்ட இந்த விளையாட்டு நகரத்தில் வெளிநாட்டவரும் மற்ற மாநிலத்தவரும் வந்து தங்கியிருந்து, தமிழகத்தைப் பற்றிய, இனிய நினைவுகளுடன் திரும்பிச் செல்வார்கள் என்பது உறுதி. எல்லா அடிப்படை வசதிகளுடன், கவினுற அமைக்கப்பட்ட இந்த விளையாட்டு நகரம், சென்னை மாநகரத்தின் ஒரு முக்கியமான Land Mark-ஆக அமையும் என்று உறுதியாக நம்புகிறேன்.

சென்னையில், சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கியிருக்க, விடுதி வசதி மட்டுமே செய்து தரப்பட்டுள்ளது. ஆனால், குடும்பத்துடன் தங்கி இருக்க, குடியிருப்பு வசதிகள் செய்து தரப்படவில்லை. டெல்லியில் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளதைப் போலவே, தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும், எல்லா வசதிகளுடன் கூடிய குடியிருப்புகளில் தங்கி வாழ்வதற்குக் குடியிருப்பு வசதிகள் செய்து தர வேண்டும் என்று, நாங்கள் முடிவு செய்தோம். எதைச் செய்தாலும், அதை நன்றாகச் செய்தாக வேண்டும், அதையும் விரைந்து செய்தாக வேண்டும் என்பதே எங்கள் குறிக்கோள்.

எனவேதான் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் புதிய அடுக்குமாடிக் குடியிருப்புகளை, நகரத்தின் மையப் பகுதியில் கட்டித் தருவது என்று தீர்மானித்தோம். தற்போது ராஜாஜி ஹால் அமைந்துள்ள பகுதிக்கு அருகில் உள்ள நிலப்பரப்பில், 40 கோடி ரூபாய் செலவில் இந்த வானுயர்ந்த அடுக்கு மாடிக் குடியிருப்புக் கட்டடங்களை நிர்மாணிக்க முடிவு செய்தோம். அந்தச் சீரிய திட்டத்திற்கு இன்று அடிக்கல் நாட்டியதில் பெருமகழ்ச்சி அடைகிறேன்.

'ஒரு குடும்பம் ஒரு வீடு' என்கின்ற எங்களது கொள்கையை முனைப்புடன் செயல்படுத்தி வரும் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், இன்று ஒரு மாபெரும் இயக்கமாக மாறி உள்ளது. 1991-ஆம் ஆண்டில், 100 கோடி ரூபாய் அளவில் மட்டுமே, வீட்டு வசதிகளை உருவாக்கித் தந்த இந்த வாரியத்தின் நிதி ஒதுக்கீடு, ஆண்டுதோறும் படிப்படியாக, அதிகரித்து, இந்த நிதியாண்டில் மட்டும், 242 கோடி ரூபாய் அளவிற்கு உயர்ந்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இந்த நான்கரை ஆண்டு கால கட்டத்தில், இந்த வாரியத்தின் குடியிருப்பு வசதிகளுக்கான செலவினம் கிட்டத்தட்ட இரண்டரை மடங்காக அதிகரித்துள்ளது, நினைத்து மகிழத்தக்க ஒரு சாதனை ஆகும்.

சென்னை அம்பத்தூர் தொழிற்பேட்டைக்கு அருகே, 40 கோடி ரூபாய் செலவில், 160 ஹெக்டேர் நிலப்பரப்பில், உருவாக்கப்பட்டு வரும் 10,406 மேம்படுத்தப்பட்ட குடியிருப்பு மனைகள் வீட்டு வசதி வரலாற்றில் ஒரு புதிய மைல் கல்லாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆசிய கண்டத்திலேயே, ஒரே இடத்தில் கட்டப்பட்ட, மிகப்பெரிய வீட்டு வசதித்திட்டமாக 'Neighbourhood Scheme' ஆக, இத்திட்டம் அமையப் போகிறது என்பது உண்மையிலேயே நமக்குப் பெருமை தரக்கூடிய செய்தி ஆகும்.

ஆசிய வளர்ச்சி வங்கி அதாவது 'Asian Development Bank' மூலம் 1,055 கோடி ரூபாய் நிதி உதவி பெற்று, புதிய வீட்டு வசதித் திட்டங்களைச் செயல்படுத்த, எங்கள் அரசு ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

தமிழ்நாடு வீட்டு வசதி

தெற்காசிய விளையாட்டுப் போட்டி;

இந்திய கைப்பந்து அணி

சென்னையில் நடைபெறும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளும் இந்திய கைப்பந்து அணிகளின் பெயர்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. கைப்பந்து போட்டிகள் டிசம்பர் 22 முதல் 26 வரை கீழ்ப் பாக்கத்திலுள்ள புரட்சித்தலைவி டாக்டர் ஜெ. ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கில் நடைபெறுகிறது.

ஆண்கள் அணி	பெண்கள் அணி
ரவி காந்த் ரெட்டி	சலோமி ராமு
கே. வெங்கடநாராயணா	கே. சங்கீதா
ஜோபி ஜோசப்	பி.ஆர்.தேவி
பி.பி.அமன்	ஹேமலதா உர்சல்
ராஜ் வினோத்	மினி எலிசபெத்
மனோஜ் ரெட்டி	ஆஷாராணி
எம்.எஸ்.ராஜேஷ்	சுனு ஜேக்கப்
ரத்தன்லால்	மகமாய சமதார்
சந்திரசேகர்	ஆர். அனுராதா
சேகர்	பி.வைசாலி
சுர்ஜித் சிங்	மெர்சி அந்தோணி
சிங்கராவ்	எம். சுனிதா
மாற்று விளையாட்டு வீரர்கள்	**தலைமைப் பயிற்சியாளர்**
திரு.நாகராஜ் ஹெக்டே	திரு.வி.ஜி.நாயர்
பிரேம்ஜித்	**துணைப்பயிற்சியாளர்**
பிரவீண் குமார்	திருமதி. அனுராதா
தலைமைப்பயிற்சியாளர்	**மேலாளர்**
திரு.சியாம்சுந்தர் ராவ்	திரு. வெங்கடபதி
துணைப்பயிற்சியாளர்	
திரு. ஈ.ஆர்.ரெட்டி	
பயிற்றுநர்	
திரு. பாண்டியன்	
மேலாளர்	
திரு.ஆர்.கி.சர்மா	

★ விளையாட்டுப் போட்டிகளின் வெற்றிக்காக அமைக்கப்பட்டுள்ள புதிய விளையாட்டு அரங்கங்கள் ஏழு. எழும்பூரில் ரயில் நிலையம் அருகே மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டு அரங்கில் அதிநவீன ஆக்கி மைதானம், வள்ளுவர் கோட்டத்தின் அருகே நுங்கம்பாக்கத்தில் அதிநவீன டென்னிஸ் மைதானம், வேளச்சேரியில் நீச்சல் குளம், ஆவடி வீராபுரத்தில் துப்பாக்கி சுடும் மைதானம், ஜூடோ மற்றும் பளுதூக்கும் போட்டிகள் நடக்க கலைவாணர் அரங்கில் நவீன வசதிகள் அமைப்பு, சாந்தோமில், சாந்தோம் மேல்நிலைப்பள்ளியில் டேபிள் டென்னிஸ் அரங்கம்.

★ உலகத் தரத்தோடு கூடிய பல விளையாட்டு அரங்குகள், போட்டியில் பங்கேற்க வரும் வீரர்களும் வீராங்கனைகளும் தங்கிட இல்லங்கள். விளையாட்டுத் துறையில் அளப்பரிய வளர்ச்சி, அனைத்து விளையாட்டுகளிலும் இளைஞர்கள் பங்கேற்க ஆக்கபூர்வமான ஊக்கம், உலகின் பார்வையில், இந்தியாவுக்கும் தமிழகத்திற்கும் தனிப்பெருமை- இவையே தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதன் மூலம் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழகத்தின் மக்களுக்கு வழங்குகின்ற பரிசுகளாகும்.

வாரியம் வைத்துள்ள நிலங்களுக்கு, Urban Land Tax அதாவது, நகர்ப்புற நில வரி செலுத்த வேண்டியதில்லை என்கின்ற ஒரு சலுகை திரும்பப் பெறப்பட்டதால், அந்த நிலங்களுக்கான நகர்ப்புற நில வரியை, வாரியம் கட்ட வேண்டிய அவசியம் ஏற்பட்டு உள்ளதாகவும், இதனால் வாரியத்திற்குப் பொருளாதார இழப்பு ஏற்பட்டு வருவதாகவும் எனவே, இந்தச் சலுகையை, வாரியத்திற்கு மீண்டும் அளிக்க வேண்டும் என்று தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர் திரு என்.பாலகங்கா கேட்டுக்கொண்டார்.

ஏழை, எளிய மக்கள், நலன் பெற, குறைந்த விலையில் நிறைவான வீட்டு வசதியைப் பெற்றுத்தர உறுதி பூண்டுள்ள எங்கள் அரசு, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்திடம் உள்ள நிலங்களுக்கு நகர்ப்புற நில வரி அதாவது, Urban Land Taxலிருந்து முழுமையான விலக்கை, இன்று முதல் அளிக்கும் என்பதையும், இந்தச் சலுகை 1991-ஆம் ஆண்டிலிருந்தே முன் தேதியிட்டு வழங்கப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் பணியாளர்கள் மற்றும் ஊழியர்களின் குழந்தைகள் பயன்பெறும் வண்ணம், வாரியத்தின் சார்பில் ஒரு புதிய தொழில் நுட்பக்கல்லூரி அதாவது, Polytechnic ஒன்றை நிறுவ வேண்டும் என்ற கோரிக்கை, தமிழக அரசின் பரிசீலனையில் இருந்து வருகின்றது. இவ்வாரியத்தின் தொழிலாளர்கள் மற்றும் பணியாளர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, வாரியத்தின் சார்பில், ஒரு Polytechnic ஆரம்பிப்பதற்கு விரைவில் அரசுத் தரப்பிலிருந்து அனுமதி வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தச் சீரிய விழாவினை மிகக்குறுகிய காலத்தில் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்துள்ள, மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் அன்புச் சகோதரர் திரு எஸ். ரகுபதி, தமிழ்நாடு வீட்டு வசதி வாரியத்தின் தலைவர், திரு என். பாலகங்கா மற்றும் அரசு அலுவலர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுதல்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

தெற்காசிய நாடுகள் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் உருவாக்கியுள்ள ஒரு புதிய விளையாட்டு விழிப்புணர்ச்சி, தமிழகத்தை விளையாட்டுத் துறையில் என்றென்றும் முன்னணியில் நிறுத்தும் என்று உறுதியாக நம்புகிறேன். இந்த விளையாட்டு நகரம், உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, விளையாட்டுத்துறையில் கொண்டுள்ள ஆத்மார்த்த ஈடுபாட்டின் நினைவுச்சின்னமாக என்றென்றும் விளங்க வேண்டும் என்ற, எனது உள்ளக் கிடக்கையை எடுத்துரைத்து விடை பெறுகிறேன்.

உலகமே வியந்து நோக்க, ஈடும் இணையும் இல்லாத வகையில், 18.12.95 லிருந்து, 27.12.95 முடிய நடைபெறவிருக்கும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் பெருமைமிகு சுடர், இந்திய மண்ணெங்கும் வலம் வந்து, ஒளி வீசி வெற்றிப் பயணத்தை நிகழ்த்தியுள்ளது.

இந்திய மண்ணெங்கும் வலம் வந்து ஒளி வீசிய சுடரோட்டத்தின் வெற்றிப் பயணம்

ஆறாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி, வங்காளதேசத் தலைநகரான டாக்காவில் 1993-ஆம் ஆண்டு நடைபெற்றது. அங்கிருந்து தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடரை, மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆணையின் பேரில் பெற்று வந்தார். மீண்டும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் தொடங்கும்போது அதனை ஏற்றி வைப்பது மரபு. ஆனால், மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்கள், இவ்விளையாட்டுச் சுடர் இந்திய மண்ணெங்கும் வலம் வந்து அதன்மூலம் விளையாட்டு உணர்வுகளுக்குப் புதுமெருகும், இந்திய ஒருமைப்பாட்டுக்குப் புத்துணர்வும் வழங்கிட வேண்டும் என்று விரும்பினார்.

இதன்படி, 28.10.95 அன்று மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் சுடரோட்டம் சீர்மிகு சென்னையில் தொடக்கி வைக்கப்பட்டு பம்பாய், அகமதாபாத், ஜெய்ப்பூர், ஜம்மு, சண்டிகர், சிம்லா, டெல்லி, போபால், லக்னோ, பாட்னா, கல்கத்தா, அகர்தலா, காங்டாக், இம்பால், கொஹிமா, ஷில்லாங், கௌஹாத்தி, ஈட்டாநகர், ஜஸ்வால், புவனேஸ்வர், ஹைதராபாத், பெங்களூர், கோவா, திருவனந்தபுரம், பாண்டிச்சேரி ஆகிய இடங்களுக்கு வெற்றிப் பயணம் மேற்கொண்டு 17.12.95 அன்று மீண்டும் சென்னை வந்து அடைகிறது.

சென்ற இடமெல்லாம் சீரோடும் சிறப்போடும் வரவேற்கப்பட்டு, ஒருமைப்பாட்டு உணர்வுக்குப் புத்துணர்வு அளித்து, விளையாட்டு உணர்வுகளுக்குப் புதுமெருகு அளிக்க வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் எந்த எண்ணத்துடன் அனுப்பி வைத்தார்களோ, அந்த எண்ணத்தை வெற்றிகரமாக நிறைவேற்றியது, சிறப்புமிக்க இந்தச் சுடரோட்டம்.

பெருமைமிகு இச் சுடரோட்டம் பற்றிய சிறு தொகுப்பு இதோ:

பம்பாய்,

பம்பாய்

தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடர் ஓட்டம் பம்பாய் நகரில் 29.10.95 அன்று நடைபெற்றது. மாண்புமிகு மகாராஷ்டிர மாநிலத் துணை முதலமைச்சர் திரு கோபிநாத் முண்டே அவர்கள் இச்சுடர் ஓட்டத்தினைத் தொடங்கி வைத்தார்.

விழாவில், பம்பாய் மாநகர மேயர் திரு சுதம் அவர்கள் கலந்துகொண்டு, சுடரினை மராத்திய அரசின் சிவசத்திரபதி விருதினைப் பெற்ற விளையாட்டு வீரர் திரு அசோக் மடுஸ்கரிடம் வழங்கினார்.

பின்னர், முலுந்த் ஜிம்கானா மைதானாத்தில் நடைபெற்ற விழாவில் நாடாளுமன்ற உறுப்பினர் திரு சத்வி பிரதான் அவர்கள், சுடரினை அகமதாபாத்திற்கு எடுத்துச் செல்வதற்காக விளையாட்டு வீரர் திரு ஞான சேகரனிடம் வழங்கினார்.

அகமதாபாத்

தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடர் 31.10.95 அன்று குஜராத் மாநிலத் தலைநகரான அகமதாப்பாத் வந்தடைந்தது.

பம்பாயிலிருந்து கொண்டு வரப்பட்ட சுடரினைக் குஜராத் மாநில ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு தேவேந்திர சிங் சோலங்கி பெற்றுக் கொண்டார். ஒலிம்பிக் சங்கத்தின் நிரந்தரத் தலைவர் திரு பி.ஜே. சுதாளி விழாவில் வரவேற்புரை நிகழ்த்தினார். அகமதாபாத் மாநகராட்சி மேயர் திருமதி பாவனாபென் தவே அவர்கள் தொடங்கி வைக்க, விளையாட்டு வீரர்கள் திரு ஜெ.என். வாரியா மற்றும் செல்வி பரானாஸ் ஆகியோர் சுடரினைப் பெற்றுக் கொண்டார்கள்.

பின்னர், திரு ஞானசேகரன் அவர்களால் சுடர் பெற்றுக் கொள்ளப்பட்டு, ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

அகமதாபாத்

ஜெய்ப்பூர்

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான சுடரை மாண்புமிகு இராஜஸ்தான் மாநில முதலமைச்சர் திரு பைரோன் சிங் செகாவாத் அவர்கள் 2.11.1995 அன்று இராஜஸ்தான் மாநிலத் தலைநகரமான ஜெய்ப்பூரில் பெற்றுக் கொண்டு அதனை ஜெய்ப்பூருக்குக் கொண்டு வந்த தமிழ்நாட்டு விளையாட்டு வீரர் திரு ஞானசேகரனிடம் ஜம்முவுக்குக் கொண்டு செல்ல ஒப்படைத்தார். மாண்புமிகு இராஜஸ்தான் மாநில உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு பவன்லால் சர்மா அவர்கள் சுடர் ஓட்டத்தினை, கொடி அசைத்துத் துவக்கி வைத்தார்.

மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் திரு ரோதக் சர்மா, மாநில விளையாட்டுத் துறைச் செயலாளர் திரு பி.சி. மகதா, இ.ஆ.ப., இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் துணைத் தலைவர் திரு கேலாட் மற்றும் ராஜஸ்தான் விளையாட்டு இணையத்தின் தலைவர் மேஜர் மாத்தூர் ஆகியோர் இவ்விழாவில் கலந்து கொண்டனர்.

(தொடர்ச்சி 41-ஆம் பக்கம் பார்க்க)

புதிய சகாப்தத்தின் தொடக்க விழா!

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வெள்ளி விழா: மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் உரை

தமிழக நகர்ப்புற வளர்ச்சியின் ஒரு முக்கிய அங்கமாக விளங்குகின்ற தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, பெருந்திரளாகக் குழுமி இருக்கும் உங்கள் அனைவரையும் காண்பதில், நான் பெருமகிழ்ச்சியும் பேருவகையும் அடைகின்றேன்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், வெள்ளி விழா ஆண்டில் வெற்றிநடைபோட்டு வருகின்ற நல்லதொரு சூழ்நிலையில் இந்த அமைப்பின் அங்கங்களாகப் பணியாற்றி வரும் இயக்குநர்கள், பொறியாளர்கள், ஊழியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும்

எனது மனமார்ந்த பாராட்டுதல்களையும், நல் வாழ்த்துக்களையும் உரித்தாக்கிக் கொள்கிறேன்.

குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை எளிய மக்கள், நலிந்த பிரிவினர் ஆகியோருக்கு அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடங்களையும், அப்பகுதி வாழ் மக்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகளையும் வழங்கிவரும் இந்த வாரியம், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் பல புதிய எல்லைகளைத் தொட்டு அரிய சாதன்னகளைப் படைத்து வருவது ஒரு மகிழ்ச்சியான விஷயமாகும்.

குடிசைப் பகுதிவாழ் மக்களுக்கு அடுக்குமாடிக் குடியிருப்புகள் கட்டித் தருதல், அரசு நிலங்களில் ஆக்கிரமிப்புச் செய்து அடிப்படை வசதிகள் இன்றித் தவிக்கும் மக்களுக்கு அடிப்படை வசதிகளை உருவாக்கித் தருதல், மேம்படுத்தப்பட்ட மனைகளை உருவாக்கி, நில உரிமைகளை வழங்குதல், ஆட்சேபகரமான பகுதிகளில் வாழும் குடிசைப் பகுதிவாழ் மக்களைப் பாதுகாப்பான மாற்று இடங்களில் குடி அமர்த்துதல், இளைய தலைமுறையினருக்குத் தொழில் பயிற்சி வழங்குதல் போன்ற சமுதாய வளர்ச்சிப் பணிகளைச் சீரிய முறையில் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் நிறைவேற்றி வருகின்றது.

கடந்த 4 ஆண்டுகளில் மட்டும் இந்த வாரியம், இதுவரை 10 கோடி ரூபாய் செலவில் 15,445 அடுக்குமாடிக் குடியிருப்புகளைக் கட்டி, குடிசைவாழ் மக்களுக்கு வழங்கியுள்ளது. குடிசைப் பகுதிகளின் சுற்றுப்புறச் சூழ்லை மேம்படுத்துவதற்காக, பொதுக் குடிநீர்க் குழாய், தெரு விளக்குகள், கழிப்பறை வசதி ஆகியவை 8.5 கோடி ரூபாய் செலவில் அமைத்துத்தரப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 54,000 குடும்பங்கள், இத்திட்டத்தினால் பயன் அடைந்துள்ளன.

தமிழ்நாடு நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம், அதாவது 'Tamil Nadu Urban Development Project' கீழ் குடிசைப் பகுதிகளில் சாலைகள், குடிநீர், கழிவு நீர் வடிகால், தெரு விளக்குகள் போன்ற அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டு மனை உரிமைகளும் ஆக்கிரமிப்புதாரர்களுக்கு வழங்கப்பட்டு வருகின்றது. சென்னை, மதுரை, கோவை, திருச்சி, சேலம், வேலூர், ஈரோடு, திருப்பூர், தூத்துக்குடி மற்றும் திருநெல்வேலி ஆகிய நகரங்களிலும், 12.5 கோடி ரூபாய் செலவில் 36,000 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் இத்திட்டத்தின்கீழ் இதுவரை பயன் அடைந்துள்ளனர்.

நடைபாதை வாசிகளுக்கான வீட்டுவசதித் திட்டத்தை முதன்முதலாகச் செயல்படுத்திய பெருமை தமிழ்நாட்டையே

சாரும். தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்ட இத்திட்டத்தில் இதுவரை, 45,000 குடும்பங்கள் பயன் அடைந்துள்ளன. இந்த ஆண்டு, மேலும் 1,000 குடும்பங்கள் பயன்பெறும் வண்ணம் 50 இலட்சம் ரூபாய் செலவில் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, 20 ஆண்டுகளாகத் தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம் கட்டி முடித்த பல அடுக்கு மாடிக் கட்டடங்கள், மாநகராட்சி நிர்வாகத்திடம் ஒப்படைக்க முடியவில்லை. சென்னை மாநகராட்சி நிர்ணயம் செய்த அளவிலும், தகுதியிலும் இணைப்புச் சாலைகள் அமைக்கப்படாததால், மாநகராட்சி அந்தச் சாலைகளை ஏற்றுக்கொண்டு, நிர்வகிக்க முன்வரவில்லை. இந்த நிர்வாகப் பிரச்சினையினால், பல அடுக்கு மாடிக் குடியிருப்புத் திட்டப் பகுதிகளில் அடிப்படை வசதிகள் செய்து கொடுக்க இயலாத ஒரு சூழ்நிலை நிலவி வந்தது. ஆனால், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் கிட்டத்தட்ட 1,000 தனியார் சாலைகளை மாநகராட்சி தனது நிர்வாகத்தில் ஏற்றுக்கொண்டு அவற்றைச் சீர்படுத்தும் பணியிலும் மேம்படுத்தும் பணியிலும் ஈடுபட்டு வருகின்றது. அரசு இயந்திரம் என்பது மக்கள் நலன் காக்கத்தான் என்பதை உணர்த்தும் வண்ணம் உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் இந்தப் புதிய திட்டம் நல்ல விளைவுகளைத் தரும் என்பதில் ஐயமில்லை.

20 கோடி ரூபாய் செலவில், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தில், 12 புதிய திட்டங்களுக்கு இன்று அடிக்கல் நாட்டியதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். சென்னைப் பெருநகரில் மட்டுமின்றி திருச்சி, ஈரோடு, கோயம்புத்தூர், நாகப்பட்டினம் ஆகிய பகுதிகளிலும் இக்குடியிருப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட உள்ளதை அறிந்து நான் மனமகிழ்ச்சி அடைகின்றேன். இப்பணிக்ளை விரைவில் மேற்கொண்டு, அடிப்படை வசதி இன்றி வாழும் மக்களுக்கு நிரந்தரக் குடியிருப்புகளைக் கட்டித் தருவதோடு அனைத்து அடிப்படை வசதிகளையும் இத்திட்டப் பகுதிகளில் முறைப்படி செய்து தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் சார்பில், இன்று 4,338 பேருக்கு, குடியிருப்பு நில உரிமைப் பட்டாக்கள் வழங்கப்பட உள்ளன. சென்னை மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளைச் சேர்ந்த, 11 இடங்களில் வாழ்கின்ற மக்களுக்கு இந்தக்

குடியிருப்பு நில உரிமைகள் வழங்கப்படுகின்றன. அனைவருக்கும் நானே நேரில் நில உரிமைப் பத்திரங்களை வழங்க வேண்டுமென்று விரும்பினாலும், நேரத்தின் அருமையைக் கருதி அவர்களில் சிலருக்கு மட்டும் இந்த விழா மேடையில் வழங்க உள்ளேன் என்பதையும், மற்றவர்களுக்கு இன்றே, இந்த இலவசப் பட்டாக்கள் வாரியத்தால் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வெள்ளி விழாவை ஒட்டி வாரியத்தின் துப்புரவுப் பணியாளர்கள் 275 பேருக்கு மழைக் கோட்டுகளும், வாரியத்தில் பணிபுரியும் 1,632 ஊழியர்களுக்கு வெள்ளி விழா நினைவுப் பரிசும் இன்று வழங்கப்பட உள்ளன என்பதையும் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் 58,804 அடுக்குமாடிக் குடியிருப்புகளில் வசிப்பவர்களிடம் உரிமைத் தொகையாக மாதம் 22 ரூபாய் மட்டுமே வசூலிக்கப்படுகிறது. தவணை முறைத் திட்டத்தின் கீழ் குடியிருப்புகளின் உரிமையைப் பதிவு செய்துகொள்ள சிலர் மட்டுமே முன் வந்துள்ள காரணத்தால் எல்லா அடுக்குமாடிக் குடியிருப்புக் கட்டடங்களையும் வாரியமே தொடர்ந்து பராமரிக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்தக் குடியிருப்புக் கட்டடங்களில் ஏற்பட்டுள்ள பழுதுகளைச் சீர் செய்யவும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்ளவும் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு அரசின் உதவி

பெரிய இலட்சியங்கள் மட்டும் இருந்தால் போதாது. அவற்றை அடைய நாம் உழைக்க வேண்டும்.

—டாக்டர் ராதாகிருஷ்ணன்

தேவை என்பதை நான் நன்கு அறிவேன். எனவே, சென்னையில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்புகளைச் சீர் செய்வதற்கும், பராமரிப்புப் பணிகளை மேற்கொள்வதற்கும் 5 கோடி ரூபாய், தமிழக அரசின் சார்பில், மானியமாக குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சமீபத்தில் சென்னை மாநகரத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்கெடுப்பின்படி, 131 இடங்களில் சுமார் 24,000 குடும்பங்களைச் சேர்ந்தவர்கள் நடைபாதைகளிலும் ஆட்சேபகரமான பகுதிகளிலும் வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவருக்கும் பாதுகாப்பான மாற்றிடம் வழங்க, சென்னைக்கு அருகில், 100 ஏக்கர் அரசு நிலம் குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு விரைவில் வழங்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அந்த 100 ஏக்கர் நிலத்தில் இந்த வாரியம் மேம்படுத்தப்பட்ட மனைகளை அமைத்து அனைத்து அடிப்படை வசதிகளையும் செய்து கொடுத்து நடைபாதை வாழ்மக்களைப் பாதுகாப்பான பகுதியில் குடி அமர்த்தும் என்பதைத் தெரிவிப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். இந்தப் பணியை ஒரு சமுதாய உணர்வுடன் இந்த வாரியம் மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தனியார் நிலங்களை நில ஆர்ஜிதம் செய்து கையகப்படுத்துவதில் ஏற்படுகின்ற சிரமமான சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு தனியார் நிலங்களைப் பேச்சு வார்த்தையின் மூலம் நில மதிப்பை நிர்ணயம் செய்து கையகப்படுத்துவதற்கு இந்த வாரியத்திற்கு அனுமதி வழங்க வேண்டும் என்ற கோரிக்கை, அரசின் பரிசீலனையில் சில காலமாக இருந்து வருகிறது. அந்தக் கோரிக்கையை இன்று ஏற்றுக்கொண்டு இனி தனியார் நிலங்களையும் பேச்சுவார்த்தை மூலம், நில மதிப்பு நிர்ணயம் செய்து கையகப்படுத்த தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்திற்கு அனுமதி வழங்கப்படும் என்பதையும், அதற்குரிய அரசாணை மிக விரைவில் வெளியிடப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னைப் பெருநகர வளர்ச்சித் திட்டத்தின் கீழ் அதாவது, Madras Urban Development Project-ன்கீழ் குடிசைப் பகுதிகளில் மேம்பாட்டுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு நில மதிப்பை நிர்ணயம் செய்து அங்கு வாழ்கின்ற மக்களுக்கே நில உரிமம் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

இவ்வாறு, வாரியம் நிர்ணயம் செய்த நிலமதிப்பைச் செலுத்தி, நிலத்தைப் பெற்றுப் பத்திரப் பதிவு செய்யப்படும்போது, முத்திரைத்தாளும் Stamp Duty பத்திரக் கட்டணமும் Registration Fees அந்த நிலத்தின் சந்தை மதிப்பின் அடிப்படையில், கட்ட வேண்டிய சூழ்நிலை இருப்பதால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாக எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், நிர்ணயம் செய்த நில மதிப்பின் அடிப்படையிலேயே முத்திரைத் தாளும், பத்திரப் பதிவுக் கட்டணமும் அதாவது, Stamp Duty-யும் Registration Fee-யும் கட்ட ஆணை வழங்க வேண்டும் என்று பாதிக்கப்பட்ட மக்கள் பல காலமாகக் கோரி வருகின்றார்கள். இந்தச் சலுகை வழங்கப்பட்டால், அரசுக்குக் கிட்டத்தட்ட, 50 கோடி ரூபாய் வரை இழப்பு ஏற்படும் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இவர்களது கோரிக்கை கனிவுடன் பரிசீலிக்கப்பட்டு விரைவில் ஒரு நல்ல முடிவை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு அறிவிக்கும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வரவேற்புரை ஆற்றிய தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியத்தின் தலைவர் திரு KRV ரமணி அவர்கள் என் முன் வைக்காத கோரிக்கைகளுக்கு எல்லாம் அங்கீகாரம் அளித்து பல சலுகைகளை அறிவித்துள்ளேன். மேலும், வாரியம் மேற்கொள்ள உள்ள குழந்தைத் தொழிலாளர் ஒழிப்புத் திட்டத்திற்கு அனுமதி வழங்கி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற கோரிக்கையை இப்பொழுது என் முன் வைத்தார். அவரது அந்தக் கோரிக்கையையும் ஏற்றுக் கொண்டு, அத்திட்டத்தைச் செயல்படுத்த ஒரு கோடி ரூபாய் நிதி வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

வேளச்சேரியில் அதிநவீன தொழில்நுட்பம்

வேளச்சேரியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள நீச்சல்குள வளாகத்தில் சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஒமேகா நிறுவனம் அதிநவீன எலக்ட்ரானிக்ஸ் அறிவிப்புப் பலகையை 30 இலட்சம் ரூபாய் செலவில் அமைத்துள்ளது. இது முழுக்க முழுக்க கம்ப்யூட்டர் கட்டுப்பாட்டில் இயங்கும். சென்னையில் முதன்முதலாக அமைக்கப்படும் இந்த நவீனத் தொழில் நுட்பத்தின் மூலம் 1/1000 வினாடி துல்லியமான முடிவுகளைப் பெறமுடியும். அதாவது நீச்சல் வீரர் கரையைத் தொட்ட மாத்திரத்திலேயே முடிவைத்தெரிவித்துவிடும்.

திருவொற்றியூர் கடற்கரைப் பகுதியில் கடல் அரிப்பு ஏற்பட்டு கடற்கரை ஒட்டியப் பகுதிகளில் வாழ்ந்து வரும் மக்களுக்குப் பாதிப்பு ஏற்பட்டதை அறிந்து, கடல் அரிப்புத் தடுப்புத் திட்டப் பணிகளை மேற்கொள்ள ஏற்பாடுகள் செய்தேன். இருப்பினும், தொடர்ந்து அப்பகுதி வாழ் மக்கள் புயல், வெள்ளம் மற்றும் பெருமழை ஏற்படும் போது துயரத்திற்கு உள்ளாகிறார்கள். எனவே, அப்பகுதி வாழ் மக்கள் பாதுகாப்பான இடத்தில் நிரந்தரமாக வீடு கட்டிக்கொண்டு அமைதியாக வாழ்வதற்காகச் 'சடையான் குப்பம்' கிராமத்தில் நில ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஒவ்வொரு குடும்பத்திற்கும், 2 சென்ட் வீதம் வீட்டுமனைப் பட்டா இன்று இலவசமாக வழங்கப்படுகிறது என்பதையும், இதற்காக 50 இலட்சம் ரூபாய் மதிப்புள்ள 30 ஏக்கர் அரசு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஏற்கெனவே, நான் அறிவித்தபடி இன்று திருவொற்றியூர் கடற்கரைப் பகுதியைச் சார்ந்த 1,400 குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா இலவசமாக வழங்கப்படுகின்றது. அனைவருக்கும் எனது கையாலேயே வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க வேண்டும் என்று நான் விரும்பினாலும் காலத்தின் அருமையைக் கருதி 27 நபர்களுக்கு மட்டும் இதே விழா மேடையில் வழங்க

உள்ளேன் என்பதையும் மற்ற வர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் பெருமக்களும், அதிகாரிகளும் இன்றே வழங்கு வார்கள் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாற்றுக் குடியிருப்பு இடத் திற்குத் தேவையான இணைப்புச் சாலை வசதி, கழிவு நீர் அகற்று வசதி, குடிநீர் வசதி, தெரு விளக்கு, மின் வசதி போன்ற அனைத்து அடிப்படை வசதி களும் அரசின் செலவில் விரைவில் செய்து தரப்படும் என்பதையும், அது மட்டுமன்றி அப்பகுதிவாழ் மக்கள் அங்கே தங்களுக்கென்று சொந்தமாக வீடுகளைக் கட்டிக் கொள்வ தற்குத் தேவையான கடன் உதவி வழங்க, சிறப்புத் திட்டம் ஒன்றும் விரைவில் செயல்படுத்தப்படும் என்பதையும் மிக்க மகிழ்ச்சி யுடன் தெரிவித்துக் கொள் கிறேன்.

குடிசைப் பகுதி மாற்று வாரிய வெள்ளி விழா, இந்த வாரியத்தின் புதிய சகாப்தத்தின் தொடக்க விழாவாக அமைய வேண்டும் என்று நெஞ்சார வாழ்த்துகிறேன். இந்த வாரியம் மக்கள் பணியில் தன்னை மேலும் முழுமையாக ஈடு படுத்திக் கொண்டு புதிய சாதனைகளைப் படைக்கும் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த வாரியத்தின் வளர்ச்சிக் கும், இந்த வாரியத்தில் பணி புரிகின்ற ஊழியர்களின் வளர்ச் சிக்கும் தமிழக அரசு ஆக்கமும், ஊக்கமும் வழங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மீனவர்களுக்கு வேட்டி - சேலை

—மாண்புமிகு முதல்வர் ஆணை

இந்த ஆண்டு (1995) சென்னையில் நடைபெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டுக் கூட்டத்தில் பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மீனவர் சமுதாயத்தின் நலனைக் கருத்தில் கொண்டு, கட்டுமரங்களில் ஆழ்கடலுக்குச் சென்று மீன் பிடிக்கும் தொழிலில் ஈடுபட்டு வருகின்ற அனைத்து மீனவர்கள் மற்றும் மகளிருக்கும் இலவச சேலை, வேட்டிகள் வழங்கப்படும் என்று அறிவித்திருந்தார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுடைய அறிவிப்பினைத் தொடர்ந்து தமிழக மீன் வளத் துறை தமிழகத்தில் கடற்கரைப் பகுதிகள் அடங்கிய 10 மாவட்டங்களின் கடலோரப் பகுதிகளில் மீன் பிடிப்புத் தொழிலை மேற்கொண்டு வருகின்ற கட்டுமர மீனவர்களின் விவரங்களைச் சேகரித்து தமிழக அரசுக்குக் கருத்துரு ஒன்றினை அனுப்பி இருந்தது.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் இதனை ஆய்வு செய்து 2,07,000 கட்டுமர மீனவர்களுக்கும், 2,03,000 மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த மகளிருக்கும் ஆக மொத்தம் 4,10,000 மீனவப் பெருங்குடி மக்களுக்கு இந்த ஆண்டு இலவச வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம் ஒன்றிற்கு ஒப்புதல் அளித்து ஆணை பிறப்பித்துள்ளார். மேலும், ஏற்கெனவே தற்போது விவசாயத் தொழிலாளர்கள் மற்றும் நகர்ப்புற ஏழை, எளிய மக்கள் ஆகியோருக்கு வழங்கப்பட்டு வருவதுபோன்று, மொத்தம் 4,10,000 மீனவர்கள் மற்றும் மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த மகளிருக்கு இலவச வேட்டி சேலைகளை வழங்க 2 கோடியே 33 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும் ஆணை பிறப்பித்துள்ளார்.

எதிர்வரும் பொங்கல் திருநாளை யொட்டி, இந்த வேட்டி, சேலைகள், கட்டுமர மீனவர்களுக்கும், மீனவச் சமுதாயத்தைச் சேர்ந்த மகளிருக்கும் வழங்கப்பட வேண்டும் என மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆணை பிறப்பித்துள்ளார்.

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய வெள்ளி விழா

தமிழ்நாடு குடிசைப்பகுதி மாற்று வாரிய வெள்ளிவிழா 2.12.1995 அன்றுகலைவாணர் அரங்கில் கோலாகலமாக நடைபெற்றது.

இவ்விழாவினை, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு சேடப்பட்டி இரா.முத்தையா அவர்கள் தலைமையேற்றார். மாண்புமிகு வீட்டு வசதித்துறை அமைச்சர் திரு இரகுபதி [illegible] வாழ்த்துரை வழங்கினார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், [illegible] மதிப்பில் 12 புதிய திட்டங்களுக் [illegible] அடிக்கல் நாட்டுவதற்கு அடையாள மாக, ஒரு பொத்தானை அழுத்திய சமயத்தில், மேடையில் காட்சி தந்த அடுக்குமாடி [illegible]களில் விளக்கு எரிந்தது.

[illegible] வாரியத்தினால் [illegible] இலவச வீட்டு மனைப்பட்டா[illegible] பெற்றவர் களுக்கு குடிசைப் பகுதி வாரியத்தினால் வழங்கப்பட்ட தையல் இயந்திரங்களையும் [illegible] தொழிலாளர்களுக்கு மழைக் [illegible] மற்றவர்களுக்கு முடநீக்குக் கருவி[illegible]களையும் [illegible] மிகு முதல்வர் அவர்கள் வழங்கிச் சிற[illegible]

மேலும், குடிசைப்பகுதி வாழ் மக்களுக்கு நில உரிமம், நலிந்தோருக்கான [illegible] மற்றும் குடிசை மாற்று [illegible] சிறப்பாகப் பணியாற்றும் [illegible]களுக்கு [illegible] கடிகாரங்கள் [illegible] [illegible]மிகு முதல்வர் [illegible] வழங்கிச் [illegible]னார்.

அதைத் தொடர்ந்து, குடிசை மாற்று வாரியத்தின் வெள்ளி விழா மலரை, மாண்புமிகு முதல்வர் அவர்கள் வெளியிட்டு, விழாப் பேருரையாற்றினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா.முத்தையா அவர்கள் தம் தலைமையுரையில் —
"ஆண்டுக்குச் சராசரி 1500 வீடுகள் கட்டுவது என்ற நிலை இருந்ததை மாற்றி, ஆண்டுக்குச் சராசரியாக 8,500 வீடுகள் என்று புரட்சி செய்து சரித்திரம் படைத்தவர் புரட்சித்தலைவி" என்றார்.

மாண்புமிகு வீட்டுவசதித்துறை அமைச்சர் திரு எஸ். இரகுபதி அவர்கள் வாழ்த்துரையில் குறிப்பிட்டுப் பேசும் போது, "குடிசை மாற்று வாரியம் 21 ஆண்டுகளில் 56 கோடியே 89 லட்சம் ரூபாய் செலவில், 36 [illegible] குடியிருப்புகளைக் கட்டின. [illegible] தலைவி அவர்கள் ஆட்சிக்கு வந்[illegible]தப்பின், 4 ஆண்டுகளில் ரூ.30கோடி செலவில் 22 ஆயிரத்து 456 குடியிருப்புக்கள் கட்டப்பட்டு இருக்கின்றன" என்று குறிப்பிட்டார்.

முன்னதாக விழாவில், தமிழ்நாடு குடிசைப்பகுதி வாரியத்தலைவர் திரு கே.ஆர்.வி. ரமணி அவர்கள் வரவேற்புரையாற்றினார். வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அரசுச் செயலர், திரு தேவேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப. அவர்கள் நன்றியுரையாற்றினார். மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், வாரியத் தலைவர்கள், அரசு அலுவலர்கள் உட்பட பலர் விழாவில் கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சித் தொகுப்பு:
க. சண்முகசுந்தரம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தலைமையில் தலைமைச் செயலகத்தில் மாநில ஆதிதிராவிடர் நல உயர்மட்ட ஆலோசனைக் குழுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், ஆலோசனைக் குழு உறுப்பினர்கள், சமுதாயத் தலைவர்கள், தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (1.12.1995)

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கம்

"விளையாட்டுகளிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் நீங்கள் ஒவ்வொருவரும் தீவிர ஆர்வம் காட்ட வேண்டுமென்றும், அண்மைக் காலத்திலேயே மிகச் சிறப்பாக விளையாடிப் புதிய வாகைகளைத் தேசத்திற்குப் பெற்றுத் தர வேண்டும் என்றும் நான் விரும்புகிறேன். இந்த விருப்பத்தை நிறைவேற்றும் வகையில், அனைத்து வசதிகளையும் அளிக்க வேண்டுமென்பது என் விருப்பமாகும். ("சர்வதேச அழைப்புத் தடகளப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு 24.2.94இல் சென்னை நேரு விளையாட்டரங்கில் நடந்த பாராட்டு விழாவில் மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் ஆற்றிய உரையிலிருந்து)

கரை தெரியாமல் அலை கடலில் தவிக்கும் தோணிகளைத் தன்னொளியால் கரை சேர்க்கும் கலங்கரை விளக்கம் போல், திறமையிருந்தும், வசதியின்மையால் தவித்த தமிழகத்து விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளைத் த்தெடுத்து அவர்கள் சர்வதேசத் தகுதி பெற, சர்வதேசத் தரத்தில் விளையாட்டரங்கங்கள் அமைத்து தமிழகத்து விளையாட்டு வளர்ச்சியின் கலங்கரை விளக்கமாக மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி

வாகைசூடும் தமிழ்நாடு கூடைப்பந்தாட்டம்

உலகெங்கிலும் மிக அதிகமாக விளையாடக்கூடிய விளையாட்டு கூடைப் பந்தாட்டம், தமிழ்நாட்டுக்கு 1940-50-களில் வந்தது. இவ்விளையாட்டு அமெரிக்க நாட்டில் ஸ்பிரிங்பீல்டு எனுமிடத்தில் டாக்டர் ஜேம்ஸ் நைஸ்மித் என்பவரால் 1891-ஆம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்டது.

சென்னையிலுள்ள கிறித்துவ இளைஞர் சங்கமே தென்னிந்தியாவில் இவ் விளையாட்டு வரக் காரணமாயிருந்தது. டாக்டர் டெட் அர்னோல்டு எனும் அமெரிக்கக் கூடைப்பந்தாட்டப் பயிற்சி யாளரே இந்த விளையாட்டை நம் நாட்டுக்குக் கொண்டு வந்து இன்று எங்கும் விளையாடக் காரணமானவர்.

1952-53-களில் சென்னையில் நடைபெற்ற சென்னை மாகாணக் கூடைப்பந்தாட்ட அணி தேசிய அளவில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்றது. அதிலிருந்து தமிழ்நாடு மிகச் சிறந்த கூடைப்பந்தாட்ட வீரர்களை இந்தியக் கூடைப்பந்தாட்டக் குழுவிற்குத் தொடர்ந்து அளித்துவருகிறது.

நாற்பதாண்டுகளுக்குப் பிறகு தமிழ்நாடு கூடைப்பந்தாட்ட அணி, 1993-ஆம் ஆண்டு தேசிய அளவில் பெங்களூரில் நடைபெற்ற ஆடவர் அணியில் வெற்றி பெற்றது.

இளைஞர் (Junior) கூடைப்பந்து அணி தேசிய அளவில் 5 முறைகளும், கட்டாக், பூனா, பர்த்வான், பில்வாரா, சத்தாரா ஆகிய இடங்களில் நடைபெற்ற தேசிய அளவிலான போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது.

சிற்றிளைஞர் (Sub-Junior) கூடைப் பந்தாட்ட அணி 6 முறைகளும் தேசிய அளவிலான போட்டிகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுள்ளது.

இது தவிர, தென்மண்டலப் போட்டிகள், இணை மண்டலப் போட்டிகள், தேசிய கூட்டமைப்புப் (Basketball Federation) போட்டிகள் போன்றவைகளில் தமிழ்நாடு கூடைப் பந்தாட்ட அணி கலந்து கொண்டு வெற்றிவாகை சூடியுள்ளது.

சிற்றிளைஞர் பெண்கள் கூடைப் பந்தாட்ட அணி இதுவரை 6 முறை தேசிய அளவிலான போட்டிகளில் தாங்களும் சளைத்தவர்களல்ல என்று வெற்றி பெற்றுள்ளனர்.

—தகவல்
திரு ஏ.என். தியானேஸ்வரன், இ.ஆ.ப.,
தலைவர், தமிழ்நாடு கனிமவளத் தலைவர்

டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திகழ்கிறார். அவருடைய சீரிய முயற்சியால் சென்னையில் நடைபெறும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் கூடைப்பந்துப் போட்டிகள் (டிசம்பர் 19 முதல் 21 வரை) மற்றும் கைப்பந்துப் போட்டிகள் (டிசம்பர் 22 முதல் 26 வரை) புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கில் நடைபெற உள்ளன. இவ்விளையாட்டரங்கின் பின்னணியைப் பற்றி இக் கட்டுரை விளக்குகிறது.

ஆசிய கூடைப் பந்தாட்டப் போட்டி

இந்திய வரலாற்றில் 1967-ஆம் ஆண்டு மறக்க முடியாத ஆண்டு. ஆம், தென் கொரியாவிலுள்ள சியோலில் ஆசிய கூடைப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது. இதில் முதன்முதலாக இந்திய அணி கலந்து கொண்டது.

ஆசிய அளவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் எப்படியும் வெற்றியை ஈட்டியே தீர வேண்டும் என்பதே ஒவ்வொரு வீரரின் இதயத் துடிப்பு. இதற்காக, பாட்டியாலாவில் உள்ள விளையாட்டுப் பயிற்சி நிலையத்தில் கடும் பயிற்சி மேற்கொண்டார்கள்.

போட்டி நடைபெறும் அரங்கமோ சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்ட உள்ளரங்கம், ஏறக்குறைய 10,000 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய வசதி படைத்தது. மரத்தால் இழைக்கப்



பட்டு முகம் பார்க்கும் அளவுக்கு வழவழப்பான தரை. சாதாரணமாக, நம் ஊரில் உள்ள கூடைப்பந்தாட்டப் போர்டு போலல்லாமல், கண்ணாடியாலான போர்டு. இது தவிர, நம் வீரர்கள் முதன் முதலில் ரப்பராலான பந்தைக் கையாளப் போகிறார்கள்.

முடிச்சு ரகசியம்!

நம் இந்திய அணி வீரர் களைப் பற்றி இந்த இடத்தில் சொல்லியே ஆக வேண்டும்.

இந்திய அணியில் பெரும் பாலான வீரர்கள் சீக்கியர்கள், வாட்டசாட்டமானவர்கள். முப் படையைச் சேர்ந்தவர்கள். அணியின் தலைவர் திரு குர்தாயாள் சிங்,. துணைத் தலைவர் திரு ஏ.என் தியானேஸ்வரன் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்., தற்போதைய தமிழ்நாடு கனிமவள நிறு வனத்தின் தலைவர். நம் வீரர்களின் ஆஜானுபாகுவான உயரமும், சீக்கியர்களின் தலைகளில் கட்டிவைத்துள்ள முடிச்சும், அந்தக் குள்ளமான பெண்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தன. அழகிய கொரிய இளம்பெண்கள் நம் வீரர்கள் போகுமிடங்களிலெலாம் பின்னாலேயே சுற்றித் திரிந் தார்கள். அந்தத் தலை முடிச்சுக்குள் என்ன இருக்கிறது என்கிற வினாவே பலரையும் குலுக்கிக் கொண்டிருந்தது.

அது புரியத் தொடங்கு வதற்கான நேரம் வந்துவிட்டது. கூடைப்பந்தாட்டப் போட்டிகள் ஆரம்பமாகப் போகின்றன. முதல் நாள் ஆட்டம், ஜப்பானிய அணியுடன் இந்திய அணி மோதப் போகிறது. அரங்கில் என்றுமில்லாத அளவுக்குக் கூட்டம் நிறைந்து வழிந்தது. இளம் பெண்கள் கூட்டம் வழக்கத்துக்கு மாறாக இருந்தது.

‘புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப்பந்தாட்ட உள்ளுறை விளையாட்டரங்கம்’

- ☆ ஒரு ஏக்கர் பரப்பளவில் கீழ்ப்பாக்கத்தில், புது ஆவடிச் சாலைக்கருகில் அமைந்துள்ளது.
- ☆ 5,000 பேர் அமர்ந்து பார்க்கக்கூடிய வசதி
- ☆ 10,000 சதுர அடி பரப்பில் அமைந்துள்ள சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்ட மரத்தாலான ஆடுகளம்.
- ☆ ஏற்றவும், இறக்கவும் முன்னரும் பின்னரும் நகர்த்தக்கூடிய வசதி கொண்ட கூடைப்பந்தாட்ட போர்டு.
- ☆ 100 விளையாட்டு வீரர்கள் தங்குமளவுக்குப் படுக்கை வசதி கொண்ட கூடம்.
- ☆ அரங்கின் புறத்தே பயிற்சி பெறுவதற்கெனச் சிறப்பாக அமைக்கப்பட்ட சிமெண்ட்டாலான இரண்டு ஆடுகளங்கள்.
- ☆ இரவைப் பகலாக்கும் ஒளி வசதி.

ஆட்டம் தொடங்குவதற்கான விசில் சத்தம் கொடுக்கப்பட்டவுடன் அணிகள் இரண்டும் விளையாடத் தொடங்கின. அடுத்த சில , விநாடிகளில் இந்திய வீரர்கள் அத்தனைப் பேரும் ‘பொத்து பொத்தென்று’ வழுக்கி விழுந்தனர். சிலர் எழமுடியாமல் தவித்தனர். வெட்கம் தாளவில்லை. முகத்தை மூடிக்கொண்டனர். கூட்டத்தினரிடையே சிரிப்பொலி. பெண்கள் கை தட்டி வேறு சிரித்தனர்.

அதைவிட அரங்கைச் சிரிப்பில் குலுக்கியது என்ன என்றால், அது சீக்கிய வீரர்களின் பரிதாபமான கோலம். ஆஜானுபாகுவான அவர்களின் நீளக் கூந்தல் அடங்கிய தலை முடிச்சு அவிழ்ந்து அந்த ‘முடிச்சு ரகசியம்’ வெளியானதுதான். சீக்கிய , வீரர்கள் காட்டேரி வேடத்தில் விரித்த கூந்தலும் தலையுமாக அசடு வழிந்து நின்றதைக் கண்டு சத்தம் போட்டுச் சிரித்தது அந்த இளம் கொரியப் பெண்கள் கூட்டம். இந்த அலங்கோலத்தைத் தொலைக்காட்சி வேறு சற்று தூரத்திலிருந்தவர்களுக்கும் பெரிய அளவில் படம் போட்டுக் காட்டியது. கலைந்த கூந்தலை அவசர அவசரமாக அள்ளி முடிப்பதும், அது கலைவதும் பார்ப்போரைச் சிரிப்பில் ஆழ்த்தின.

சர்வதேசத் தரத்தில் காலணி

இந்திய வீரர்கள் அணிந்திருந்த கேன்வாஷ் ஷூவும் பார்ப்பதற்கு வேடிக்கையாக இருந்திருக்கிறது. மரப்பலகைத் தளத்தாளான விளையாட்டரங்கில் விளையாட முடியாத கேன்வாஸ் பழங்கால ஷூவை நம் வீரர்கள் போட்டிருந்ததைக் கண்ட அந்த இளம் பெண்கள் கிண்டல் செய்தார்கள். தொடர்ந்து, பிலிப்பைன்ஸ் அணி, கொரிய அணி என்று வரிசையாக மோதி தோல்வியைத் தழுவிய இந்திய அணியினர் கூனிக் குறுகிப் போனார்கள். பிறகு நிலைமை உணர்ந்த நம் அணியின் துணைத் தலைவர் திரு தியானேஸ்வரன், அப்போதைய இந்திய கூடைப் பந்தாட்டக் கழகத் தலைவர் திரு சோமானி என்பவரிடம் முறையிட்டு. வாதாடி சர்வதேசத் தரத்திலுள்ள, நவீன காலணிகளை இந்திய அணிக்குக் கிடைக்கச் செய்தார்.

மறுநாள் முதல் இந்திய அணியினர் எல்லோரும் மெச்சும் வகையில் பார்வையாளர்களை அசத்தினார்கள். தொடர்ந்து வெற்றி பெற்றார்கள். அன்று நமது வீரர்கள் மனதுக்குள் தாய்நாடு சென்றவுடன் எப்படியும் நம் நாட்டில் சர்வதேசத் தரத்தில் கூடைப்பந்தாட்ட விளையாட்டு உள்ளரங்கம் அமைக்க வேண்டும் என்ற வைராக்கியத்தை வளர்த்துக் கொண்டார்கள்.. அவர்களில் பல பேருக்கு அந்த வாய்ப்பு கிடைக்கவில்லை. ஆனால், திரு ஏ.என். தியானேஸ்வரன் அவர்களுக்கு அந்த நல்ல. வாய்ப்புக் கிடைத்தது. கடந்த 25 ஆண்டு

களாக மனதுக்குள் அடைகாத்துக் கொண்டிருந்த அந்த எண்ணம் , 1986-ஆம் ஆண்டு சர்வதேசத் தரம் வாய்ந்த கூடைப்பந்தாட்ட உள்ளரங்கத்தின் அடிக்கோள் நாட்டப்பட்டு மலர்ந்தது.

விளையாட்டுத் துறையின் பொற்காலம்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தமிழ்நாட்டில் விளையாட்டு வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் கொடுத்து விளையாட்டுத் துறையில் பொற்காலத்தைப் படைத்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் திருக்கரங்களால் திறந்து வைக்கப்பட்டதைப் போல, அவர்கள் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பேராசிரியர் பொன்னுசாமி அவர்களால் 26.11.93 அன்று டாக்டர் ஜெ.ஜெயலலிதா விளையாட்டு உள்ளரங்கம் (ரூ.1 கோடியே 65 இலட்சம்)) திறந்து வைக்கப்பட்டது. அன்று முதல் தமிழ்நாட்டு கூடைப்பந்தாட்ட விளையாட்டு வீரர்கள் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்ட இந்த அரங்கில் பயிற்சி பெறுகிற வாய்ப்பை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அளித்துள்ளார். தமிழ்நாட்டு வீரர்கள் இவ்வாய்ப்பைப் பயன்படுத்திக் கொண்டு பல்வேறு தேசிய அளவிலான கூடைப்பந்தாட்டப் போட்டிகளில் வாகை சூடி வருகிறார்கள்.

☆ சிலம்பம், கோகோ இவ்விரு விளையாட்டுக்களும் போட்டியில் இணைக்கப் படவில்லை. எனினும் வெளி நாட்டவர்களும், பார்வையாளர்களும் கண்டுகளிக்க இவை காட்சி விளையாட்டுகளாக நடத்தப்பட உள்ளன.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

பங்குபெற்ற நாடுகளும் வென்ற விளையாட்டுகளும்

விளையாட்டு	1984	1985	1987	1989	1991	1993
கால்பந்து	நேபாளம்	இந்தியா	இந்தியா	பாகிஸ்தான்	பாகிஸ்தான்	நேபாளம்
கபாடி	இந்தியா	இந்தியா	இந்தியா	பாகிஸ்தான்		
கூடைப்பந்து	இந்தியா	இந்தியா				
டேபிள் டென்னிஸ்	இந்தியா (ஆ/பெ)	இந்தியா (ஆ/பெ)	இந்தியா (ஆ)	இந்தியா (ஆ/பெ)	நேபாளம் (பெ)	
கைப்பந்து	இந்தியா	பாகிஸ்தான்	இந்தியா (ஆ)	பாகிஸ்தான் (ஆ)	இலங்கை (ஆ)	இந்தியா (ஆ)
டென்னிஸ்	இந்தியா (ஆ/பெ)	இந்தியா (ஆ)	இலங்கை (பெ)			

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்
நிகழ்ச்சி நிரல்

வரிசை எண்	விளையாட்டுகள்	நடைபெறும் நாள் (டிசம்பர்)	இடம்	பங்குபெறும் வீரர், வீராங்கனைகள்
1.	தடகளம்	20 முதல் 24 முடிய	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்	240
2.	கால்பந்து	19 முதல் 27 முடிய	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்	133
3.	ஹாக்கி	19 முதல் 23 முடிய	மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கம்	88
4.	நீச்சல்	20 முதல் 24 முடிய	வேளச்சேரி நீச்சல்குள விளையாட்டரங்கம்	53
5.	கூடைப்பந்து	19 முதல் 21 முடிய	புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கம்	49
6.	பளுதூக்குதல்	22 முதல் 26 முடிய	கலைவாணர் அரங்கம்	52
7.	கபாடி	19 முதல் 22 முடிய	நேரு பூங்கா விளையாட்டரங்கம்	60
8.	டென்னிஸ்	19 முதல் 23 முடிய	நுங்கம்பாக்கம் விளையாட்டரங்கம்	41
9.	டேபிள் டென்னிஸ்	19 முதல் 22 முடிய	சாந்தோம் மேல்நிலைப்பள்ளி	50
10.	மற்போர்	24 முதல் 26 முடிய	ஐ.ஐ.டி. வளாகம்	49
11.	கைப்பந்து	22 முதல் 26 முடிய	புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கம்	97
12.	குத்துச்சண்டை	22 முதல் 26 முடிய	சாந்தோம் மேல்நிலைப்பள்ளி வளாகம்	46
13.	ஜூடோ	19 முதல் 21 முடிய	ஐ.ஐ.டி. வளாகம்	35
14.	துப்பாக்கி சுடும் போட்டி	19 முதல் 26 முடிய	வீராபுரம் துப்பாக்கி சுடும் மைதானம்	102
15.	கோகோ	23 முதல் 24 முடிய	நேரு பூங்கா விளையாட்டரங்கம்	72
16.	சிலம்பம்	25 முதல் 26 முடிய	நேரு பூங்கா விளையாட்டரங்கம்	28

தொடக்க விழா	18.12.1995	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்
நிறைவு விழா	27.12.1995	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் விளையாட்டு வீரர்கள்

நாடு	விளையாட்டு வீரர்	வீராங்கனைகள்
இந்தியா	191	73
பாகிஸ்தான்	167	37
வங்காளம்	166	13
பூட்டான்	11	1
நேபாளம்	135	16
இலங்கை	165	52
மாலத்தீவுகள்	45	3
	880	195

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 1075 விளையாட்டு வீரர், வீராங்கனைகளும் 240 விளையாட்டு அலுவலர்களும் பங்கேற்கவுள்ளனர்

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நிகழ்ச்சி நிரல்

வரிசை எண்	விளையாட்டுகள்	நடைபெறும் நாள் (டிசம்பர்)	இடம்	பங்குபெறும் வீரர், வீராங்கனைகள்
1.	தடகளம்	20 முதல் 24 முடிய	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்	240
2.	கால்பந்து	19 முதல் 27 முடிய	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்	133
3.	ஹாக்கி	19 முதல் 23 முடிய	மேயர் இராதாகிருஷ்ணன் விளையாட்டரங்கம்	88
4.	நீச்சல்	20 முதல் 24 முடிய	வேளச்சேரி நீச்சல்குள விளையாட்டரங்கம்	53
5.	கூடைப்பந்து	19 முதல் 21 முடிய	புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கம்	49
6.	பளுதூக்குதல்	22 முதல் 26 முடிய	கலைவாணர் அரங்கம்	52
7.	கபாடி	19 முதல் 22 முடிய	நேரு பூங்கா விளையாட்டரங்கம்	60
8.	டென்னிஸ்	19 முதல் 23 முடிய	நுங்கம்பாக்கம் விளையாட்டரங்கம்	41
9.	டேபிள் டென்னிஸ்	19 முதல் 22 முடிய	சாந்தோம் மேல்நிலைப்பள்ளி	50
10.	மற்போர்	24 முதல் 26 முடிய	ஐ.ஐ.டி. வளாகம்	49
11.	கைப்பந்து	22 முதல் 26 முடிய	புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கம்	97
12.	குத்துச்சண்டை	22 முதல் 26 முடிய	சாந்தோம் மேல்நிலைப்பள்ளி வளாகம்	46
13.	ஜூடோ	19 முதல் 21 முடிய	ஐ.ஐ.டி. வளாகம்	35
14.	துப்பாக்கி சுடும் போட்டி	19 முதல் 26 முடிய	வீராபுரம் துப்பாக்கி சுடும் மைதானம்	102
15.	கோகோ	23 முதல் 24 முடிய	நேரு பூங்கா விளையாட்டரங்கம்	72
16.	சிலம்பம்	25 முதல் 26 முடிய	நேரு பூங்கா விளையாட்டரங்கம்	28

தொடக்க விழா	18.12.1995	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்
நிறைவு விழா	27.12.1995	ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம்

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்குபெறும் விளையாட்டு வீரர்கள்

நாடு	விளையாட்டு வீரர்	வீராங்கனைகள்
இந்தியா	191	73
பாகிஸ்தான்	167	37
வங்காளம்	166	13
பூட்டான்	11	1
நேபாளம்	135	16
இலங்கை	165	52
மாலத்தீவுகள்	45	3
	880	195

SA SF PEACE•PERSEVERANCE•PROGRESS

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் 1075 விளையாட்டு வீரர், வீராங்கனைகளும் 240 விளையாட்டு அலுவலர்களும் பங்கேற்கவுள்ளனர்

கவினுறு கலை நிகழ்ச்சிகள்

தமிழ்நாட்டு விளையாட்டுத் துறையின் விடிவெள்ளி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய முயற்சியால் உலகமே உற்று நோக்கும் வகையில், சென்னையில் ஏழாவது தெற்காசிய கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் சீரோடும் சிறப்போடும் நடைபெறும் வண்ணம் அனைத்து முயற்சிகளும் செய்யப்பட்டு வருகின்றன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தனிப்பட்ட முறையில் ஒவ்வொரு விளையாட்டு அரங்கத்தையும் மற்றும் நிகழ்ச்சிகளையும் கவனித்துத் தக்க ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.

கலை நிகழ்ச்சிகள்

உலகச் சிறப்புப் பெற்ற ஒலிம்பிக் போட்டிகளின் தொடக்க விழாவின்போதும், நிறைவு விழாவின்போதும் நடைபெறும் கண்கவரும் நிகழ்ச்சிகளைப் போல தற்போது சென்னையில் நடைபெறும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க நாள் மற்றும் நிறைவு நாளின்போதும் மிகச் சிறப்பான கலை நிகழ்ச்சிகளை நடத்திக் காட்டி பார்வையாளர்களுக்குக் கண் கொள்ளாக் காட்சிகளையும், செவிகொள்ளா இன்னிசையும் வழங்க முன்னேற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. கிட்டத்தட்ட, 4,500 மாணவ, மாணவிகள் இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள பிற மாநிலக் கலைஞர்கள் இவ்விழாவில் பங்கேற்க உள்ளார்கள்.

அண்மையில் புதுடெல்லியில் நடைபெற்ற ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் போது நடந்தேறிய கலை நிகழ்ச்சிகளை நடத்திய மேஜர் ஜெனரல் நரேந்திர சிங் அவர்களினுடைய நேரடிப் பார்வையில் கலை நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளன.

தொடக்க நாளன்று பார்வையாளர்களை அசத்துவதற்காகவே 18 விதமான கலை நிகழ்ச்சிகள் சுமார் 2 மணி நேரத்திற்கும் மேலாக நடைபெற உள்ளன. குறிப்பாக மயிர்க்கூச்செறியும் நிகழ்ச்சியான பாராசூட்டிலிருந்து குதித்தல், கரகாட்டம், சாரி நடனம், லெசியம், கச்சார், பிஹூ, ஒலிநயம் இணைந்த உடற்பயிற்சிகள், வாங்லா, டிப்பனி, செராவ், கௌட் மரியாஸ், லம்பாடி நடனம், தண்டியா ராஸ் நடனம், நாதசுரம், தவில், கூட்டிசை, பூஞ்சலம், சார்குலா, வாண வேடிக்கை ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

பாராசூட்டிலிருந்து குதித்தல்

இந்திய விமானப்படையைச் சேர்ந்த 30 வீரர்கள் பாரா[illegible] விளையாட்டுக்களை நடத்திக் காட்ட உள்ளார்கள். இவர்கள் ஆகாயத்தில் குழுக்களாகவும், தனித்தனியாகவும், பிரிந்தும், விரிந்தும், நடனமாடியும் காண்போரை மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கடிக்க உள்ளார்கள்.

கரகாட்டம்

தமிழ்நாடு காவல்துறையினர், காக்கும் தொழிலோடு, கவினுறு கலை நிகழ்ச்சிகளையும் நடத்திக் காட்ட வல்லவர்கள் என்பதற்கு ஒரு முத்தாய்ப்பான நிகழ்ச்சி இந்தக் கரகாட்டம் நிகழ்ச்சியாகும். இந்நிகழ்ச்சியில் 350 வீரர்கள் கலந்து கொண்டு தமிழ் நாட்டிற்கே உரிய கிராமிய நிகழ்ச்சியான கரகாட்டத்தை எல்லோரும் வியக்கும் வண்ணம் இனிமை சேர்த்து வழங்க உள்ளார்கள்.

இதுதவிர, மோட்டார் சைக்கிள் வீரர்கள் 65 பேர் பார்வையாளர்களைப் பரவசப்படுத்துவதற்காக மோட்டார் சைக்கிளில் இருந்தபடியே பல சாகசங்களைச் செய்துகாட்ட இருக்கிறார்கள்.

[illegible] இசைக்குழுவைப் (பேண்ட வாத்தியம்) பொறுத்தவரையில் 250 பேர்கள் இணைந்து நேரு விளையாட்டரங்கில் கூடியிருப்பவர்களை இசை வெள்ளத்தில் மூழ்கடிக்க உள்ளார்கள்.

மேலும், குதிரைப்படையில் 30 வீரர்கள் அழகுற அணி வகுப்பு நடத்த உள்ளார்கள்.

300-க்கும் மேற்பட்ட காவலர்கள் தீப்பந்தம் கையிலேந்தி மெல்லிய இருட்டுக்குள் பல விதமான நடனங்களையும், வீராவேசத்தோடு செய்துகாட்ட உள்ளார்கள்.

அடுத்தபடியாக, மனிதக் கோபுரம் (Pyramid) அமைக்கும் நிகழ்ச்சியில் சுமார் 370 காவல் துறை வீரர்கள் செயற்கையான மனிதக் கோபுரத்தை அமைத்து மக்களின் மனங்களில் இடம் பிடிக்கப் போகிறார்கள்.

சாரி நடனம்

சாரி நடனம் என்பது இராஜஸ்தான் மாநிலத்தில் கிராமப் பெண்களிடையே உள்ள ஒரு இனிய நடனமாகும். இந்நிகழ்ச்சியில் பங்கேற்கும் இளம் பெண்களின் கைகளில் சிறிய அகல் விளக்குகள் ஏந்தி, வட்டமாகவும், கூட்டமாகவும் பலவிதக் கோணங்களில் அமர்ந்தும், எழுந்தும் ஆடி மகிழ்விப்பார்கள். இந்நிகழ்ச்சியை தமிழ்நாட்டு மாணவ மாணவியர்கள் நடத்திக்காட்ட உள்ளார்கள்.

லெசியம்

மாவீரன் சிவாஜி தன்னுடைய படை வீரர்கள் போர்க்களங்களிலே வாளாவிருந்து சோம்பேறிகளாக இருந்துவிடக் கூடாது என்பதற்காகவும், அவர்களிடையே சுறுசுறுப்பையும், விருவிருப்பையும் உண்டாக்குவதற்காக நடன உத்திகளைக் கையாண்டு சில உடற்பயிற்சிகளைக் கொடுத்துள்ளான். இவைகள் பார்ப்பதற்கு நடனம் போல் தோன்றினாலும், உண்மையிலேயே இளைஞர் முதல் முதியவர்கள் வரை எல்லோருக்கும் பொருந்தக்கூடிய உடற்பயிற்சியாகும். இந்நிகழ்ச்சியினை மகாராஷ்டிராவிலிருந்து வந்துள்ள கலைஞர்கள் செய்து காட்ட உள்ளார்கள்.

கச்சார்

மத்தியப் பிரதேசத்திலுள்ள பஸ்தார் மாவட்டத்தைச் சேர்ந்த முரியா பழங்குடியினர் பெரும் பாலோனோர் விவசாயக் கூலிகளாவர். நெல் அறுவடையின் போது பெரும்பான்மையான நேரம் குனிந்து பணியாற்றுவதால் ஏற்படும் இடுப்பு வலியைப் போக்க, கச்சார் என்ற இவ்வகை நடனத்தை ஆடுகிறார்கள். பெண்கள் குனிந்தும் நிமிர்ந்தும் பல வகையான நடனங்களை ஆடும்போது, ஆண்களோ கைகளில் ஒலியெழுப்பக்கூடிய மணி மற்றும் தாம்பாளம் போன்ற கருவிகளை வைத்துக் கொண்டு இசை எழுப்பி நடனமாடி ஒத்துழைப்பார்கள். இந்த நடனத்தைப் பஸ்தார் மாவட்டத்திலிருந்து வந்துள்ள பழங்குடியினரே நடத்திக்காட்ட இருக்கிறார்கள்.

பிஹு

அஸ்ஸாம் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியினர் பிஹு என்ற வசந்தகால நடனத்தை ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் மாதம் 13-ஆம் நாள் தங்களுடைய புத்தாண்டு நிகழ்ச்சியாக ஆண்களும், பெண்களும் இணைந்து கைகளைப்பிணைத்து ஆடி மகிழ்வார்கள். இந்நிகழ்ச்சியினை நேரு விளையாட்டரங்கில் நடத்துவதற்காக அஸ்ஸாம் மாநிலத்திலிருந்து கலைஞர்கள் வந்துள்ளார்கள்.

ஒலிநயம் இணைந்த உடற்பயிற்சிகள்

சுவீடன் நாட்டில் வழக்கத்திலுள்ள உடற்பயிற்சிகள் நளினத்தோடு செய்யும்போது அதைப் பார்ப்பதற்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுக்கும். 1984-ஆம் ஆண்டு நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் இவ்வகையான நடனங்கள் பார்வையாளர்களிடையே மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளன. இந்நடனங்களில் குறிப்பாக, ரிப்பன்களைக் கொண்டு ஆடுதல், வண்ண கயிறுகளைக் கொண்டு ஆடுதல் போன்றவை இடம்பெறவுள்ளன. இவற்றோடு இசையும் இணைவதால் மேன் மேலும் இனிமை கூடி மகிழ்ச்சியை உண்டாக்குகிறது.

வாங்லா

மேகாலயா மாநிலத்தில் வழக்கத்திலுள்ள அறுவடை நடனத்திற்கு வாங்லா நடனம் என்று பெயர். பெண்களால் வரிசையாக நின்று கைகோத்தபடி முன்னும் பின்னும் அசைந்து இணைந்து இனிய மேளதாளத்திற்கு ஏற்ப வளைந்து ஆடுகின்ற இந்த நடனம் பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சியைத் தரும் என்பதில் ஐயமில்லை. அழகிய பெண்கள் வண்ண வண்ண உடைகளை அணிந்து பழங்குடியினருக்கே உரிய ஆபரணங்களைப் பூட்டி அழகுற ஆடும்போது அந் நடனத்திற்கு மயங்காதவர் யாவர்! இந்நடன மகளிருக்கு முன்னால் முதியவர் ஒருவர் கைகளில் ஆயுதங்கள் தாங்கி நின்று தீயன விளைவிக்கும் பேய், பிசாசுகளை விரட்டுவதாக ஒரு நம்பிக்கை, அப்பழங் குடியினரிடையே உள்ளது. வாங்லா நடனம் எல்லோரையும் கவர்ந்திடும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

டிப்பனி

குஜராத் மாநிலத்தைச் சேர்ந்த பழங்குடியினரிடையே வழக்கத்தில் உள்ள இந்த டிப்பனி நடனம் பெண்களால் ஆடப்படுகிறது. பாடலும் அதற்கேற்ற ஆடலும் அதை மெருகூட்ட இசைக்கப்படுகின்ற இசையும் எல்லோரையும் மகிழ்ச்சியால் ஆழ்த்தும். இதற்காகவே குஜராத்திலிருந்து வந்துள்ள கலைஞர்கள் நிகழ்ச்சியை நடத்திக்காட்ட உள்ளார்கள்.

செராவ்

கௌட் மரியாஸ், லம்பாடி நடனம், தண்டியா ராஸ் நடனம், நாதசுரம், தவில், கூட்டிசை, பூஞ் சலம், சார்குலா, வாண வேடிக்கை ஆகிய கலை நிகழ்ச்சிகள் இடம் பெறுகின்றன.

மூங்கில் கட்டைகளைக் கொண்டு முன்பின் நகர்த்தி, நகர்த்தப்படும் வேளையிலே குதித்துக் குதித்து இளம் பெண்களால் ஆடப்படுகின்ற இந்த நடனம் மிசோராம் மாநிலத்தைச் சேர்ந்தது. விழாக்களின் போதும், முக்கிய நிகழ்ச்சிகளின்போதும் இளைஞர்கள் மற்றும் பெண்கள் இந்நடனத்தை ஆடுவார்கள். தாமிரத்தாலான இசைக் கருவியைக் கொண்டு இசையெழுப்பி, வண்ண உடைகளை அணிந்து, இசைக் கேற்ப கட்டுக்கோப்பாக ஆடுவது இந்நடனத்தின் சிறப்பாகும். சிறு தவறு நேரிட்டால் கூட நடனமாடுவோரின் கால்களை மூங்கில் பதம் பார்த்துவிடும். மிசோராமிலிருந்து இந்நடனக் கலைஞர்கள் சென்னைக்கு வந்து தங்களது திறமைகளைக் காட்ட உள்ளார்கள்.

கௌட் மரியாஸ்

குஜராத் மாநிலத்திலுள்ள பஸ்தார் மாவட்டத்தில் உள்ள பழங்குடியினரிடையே வீரம் செறிந்த இந்நடன நிகழ்ச்சி வழக்கத்திலுள்ளது. கௌட் என்றால் முரட்டுக் காளை என்று பொருள். இந்நடனத்தில் பங்கேற்பவர்கள் தலையில் கொம்புகளும், தலைப்பாகையில் அழகாகப் பொறுத்தப்பட்ட சிறகுகளும் கைகளிலே வில்லும் அம்பும், ஏந்தி முரட்டுக் காளைகளை அடக்குகின்ற வீராவேசத்தை முகத்திலும் செயலிலும் காட்டி நடனம் ஆடும்போது பார்ப்பதற்கு இனிமையாக இருக்கும். இந்நடனத்தில் பெண்களும் வரிசையாக நின்று வலது கைகளை தன் அருகே நிற்கின்ற பெண்களின் தோள்களில் வைத்தபடி முன்னும் பின்னும் அசைந்து ஆடுவது வழக்கம். இந்த நடனங்கள் பாம்பைப் போல நெலிந்தும் வளைந்தும் ஆடுவதால் பார்ப்பதற்கு கண் கொள்ளாக் காட்சியாக இருக்கும். இந்நடனத்தைச் செயல்படுத்த குஜராத் மாநிலத்திலிருந்து வந்துள்ளனர்.

லம்பாடி நடனம்

ஆந்திர மாநிலத்தில் வழக்கத்திலுள்ள லம்பாடி நடனத்தை, சென்னையைச் சேர்ந்த 1000 பள்ளி மாணவிகள் தொடக்க நாளன்று ஆடி, காண்போரை மகிழ்ச்சி வெள்ளத்தில் ஆழ்த்தவுள்ளார்கள். ஆண்கள் தாளவாத்தியங்களை இசைக்க, பெண்கள் குழு குழுவாகப் பிரிந்து வட்டங்களாகவும், சதுரங்களாகவும், நேராகவும் நின்று இசைக்கேற்றபடி ஆடு

செராவ்

தோலு குனிதா

வார்கள். நடன மகளிர் பூட்டியிருக்கும் பழமையான ஆபரணங்கள் பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

தண்டியா ராஸ் நடனம்

கைகளில் சிறு சிறு குச்சிகளைக் கொண்டு கிருஷ்ணனை சுற்றிவந்து கோபியர்கள் ஆடுவது போன்ற இந்த நடனம் குஜராத் மாநிலத்திற்கு உரியது. பெண்கள் மயில் தோகையினை அணிந்தும் வண்ணவண்ண உடைகள் அணிந்தும் அழகாகக் காட்சியளிப்பார்கள். இந்த நிகழ்ச்சியை நடத்துவதற்காக குஜராத் மாநிலக் கலைஞர்கள் வந்துள்ளனர்.

தோலு குனிதா எனப்படும் நீளமான மேளங்கள் கர்நாடக மாநிலத்தில் கிராமப்புறங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இவ்வகை மேளங்களை இசைப்பவர்கள் இசைக்கும்போது ஆடுவது கண்களுக்கினிய காட்சியாகும்.

ஜான்ச் எனப்படும் மகாராஷ்டிர மேளக் கலைஞர்களும், மேற்கு வங்காளத்திலிருந்து வந்துள்ள தாக் இசைக் கலைஞர்களும், பஞ்சாப் மாநிலத்திலிருந்து பாங்ரா இசைக் கலைஞர்களும் இணைந்து தத்தம் கலைத் திறனைக் காட்ட உள்ளார்கள்.

தமிழ்நாட்டிலிருந்து தப்பாட்டம் எனப்படும் கிராமிய நிகழ்ச்சி அனைவரையும் கவர்ந்திழுக்கும் வகையில் இருக்கும். இதுதவிர, மணிப்பூரிலிருந்து வந்துள்ள பூஞ் சலம், கர்நாடக மாநிலத்தில் வழக்கிலுள்ள சார்குலா நடனம் ஆகியவை நடைபெறவுள்ளன. எல்லாவற்றிற்கும் மேலாக வண்ண வண்ண வான வேடிக்கைகள் கண்ணைக் கவரும் வகையில் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க நாளன்றும், நிறைவு நாளன்றும் சென்னை வாழ் பெருமக்களுக்கு, இந்தியாவிலுள்ள பல்வேறு மாநிலக் கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்கின்ற ஒரு உன்னத வாய்ப்பினை மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தந்துள்ளார். சென்னைக்குப் பல்வேறு விளையாட்டு அரங்கங்களை இப்போட்டிகள் மூலம் தமிழ்நாடு பெற்றுள்ளது என்றாலும், உலக அரங்கில் விளையாட்டுத் துறையைப் பொறுத்தவரையில் இந்தியாவுக்கு இன்னுமொரு வரலாற்றுச் சிறப்பையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தந்துள்ளார் என்பது இங்கே குறிப்பிடத்தக்கது.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி

பதக்கப் பட்டியல்

தெற்காசிய விளையாட்டு இணையத்தால் இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் உறுப்பு நாடுகள் பங்கேற்று வென்ற பதக்கங்களின் பட்டியல், நாடுகள் வாரியாக கீழே அளிக்கப்பட்டுள்ளது.

பட்டியலைப் பார்க்கும்பொழுது ஏழு நாடுகளிலும் இதுவரை நடைபெற்ற ஆறு போட்டிகளிலும் இந்தியத் திருநாடே பதக்கங்கள் குவிப்பதில் முதன்மையாக இருந்து வருகின்றது. தற்போது நடைபெறப்போகும் ஏழாவதுதெற்காசியப்போட்டிகளிலும் இந்திய அணியே முதன்மை இடத்தை வகிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஆண்டு	இடம்	நாடுகள்	தங்கம்	வெள்ளி	வெண்கலம்	கூடுதல்
1984	காட்மண்ட்	இந்தியா	44	28	16	88
		இலங்கை	7	11	12	30
		பாகிஸ்தான்	5	3	2	10
		நேபாளம்	3	12	8	23
		வங்காளம்	2	7	13	22
		பூடான்	0	0	2	2
		மாலத்தீவு	0	0	1	1
1985	டாக்கா	இந்தியா	46	29	14	89
		பாகிஸ்தான்	16	19	9	44
		வங்காளம்	9	16	34	59
		இலங்கை	2	4	7	13
		நேபாளம்	1	5	12	18
		பூடான்	0	0	4	4
1987	கல்கத்தா	இந்தியா	91	45	19	155
		பாகிஸ்தான்	16	36	13	65
		இலங்கை	4	8	23	35
		வங்காளம்	3	19	32	54
		நேபாளம்	2	7	33	42
		பூடான்	0	1	5	6

1989	இஸ்லாமாபாத்	இந்தியா	49	35	20	104
		பாகிஸ்தான்	34	25	19	78
		இலங்கை	6	10	21	37
		வங்காளம்	1	12	23	36
		நேபாளம்	1	9	17	27
		பூடான்	0	0	0	0
		மாலத்தீவு	0	0	0	0
1991	கொழும்பு					
		இந்தியா	64	59	41	164
		இலங்கை	44	33	41	118
		பாகிஸ்தான்	28	33	24	85
		வங்காளம்	4	8	29	41
		நேபாளம்	2	8	30	40
		மாலத்தீவு	0	1	0	1
		பூடான்	0	0	0	0
1993	டாக்கா					
		இந்தியா	61	47	38	146
		பாகிஸ்தான்	23	22	21	66
		இலங்கை	21	23	28	72
		வங்காளம்	11	19	34	64
		நேபாளம்	1	6	15	22

☆ South Asian Federation அமைப்பில் உள்ள நாடுகள் ஏழு. இந்தியா, பங்களாதேஷ், பூட்டான், மாலத்தீவு, நேபாளம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய ஏழு நாடுகளின் கூட்டமைப்பில் தான் இவ்விளையாட்டுப் போட்டிகள் நடைபெறுகின்றன.

☆ வீரமிகு இளஞ்சிங்கம் ஒன்று கையிலே சுடர் ஏந்தி, விளையாட்டு வீரனின் உடையணிந்து ஊக்கமுடன் ஓடி வருவதுதான் சென்னை மாநகரில் நடைபெறவிருக்கும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான சின்னம்.

☆ விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க வரும் போட்டியாளர்கள் தங்கிட, உலகத்திலேயே இதுபோல் இதுவரையில் எந்த நாடுமே குடியிருப்புகளைக் கட்டியது கிடையாது என்று பெருமையுடன் துணிந்து சொல்லக் கூடிய அளவுக்கு விளையாட்டு நகரம் உருவாகியுள்ளது.

தடகளப் போட்டி சாதனையாளர்கள்
ஆண்கள் பிரிவு

ஆண்கள் பிரிவு	வென்ற நேரம்	வீரர்	நாடு	இடம்	ஆண்டு
100 மீ.	10.61	விமலசந்தர தராப்தார்	வங்காளம்	டாக்கா	1993
200 மீ.	21.10 •	ராமிரெட்டி	இந்தியா	டாக்கா	1985
400 மீ.	46,58	எஸ்.திலகரத்தினே	இலங்கை	டாக்கா	1993
800 மீ.	1.47.56	ரஞ்சித் சுபாசிங்கே	இலங்கை	டாக்கா	1993
1500 மீ.	3.42.16	பகதூர் பிரசாத்	இந்தியா	டாக்கா	1993
5000 மீ.	14.12.25	பகதூர் பிரசாத்	இந்தியா	டாக்கா	1993
10000 மீ.	29.30.23	பகதூர் பிரசாத்	இந்தியா	டாக்கா	1993
மராத்தான்	2.15.03	வைகுந்தமணந்தார்	நேபாளம்	கல்கத்தா	1987
110 மீ. தடையோட்டம்	14.11	குலாம் அப்பாஸ்	பாகிஸ்தான்	இஸ்லாமபாத்	1989
400 மீ. தடையோட்டம்	50.14	குலாம் அப்பாஸ்	பாகிஸ்தான்	கொழும்பு	1991
உயரம் தாண்டுதல்	2.15	என்.அண்ணாவி	இந்தியா	கல்கத்தா	1987
கம்பு ஊன்றி தாண்டுதல்	4.80	என்.ஏ.எல்டோ	இந்தியா	இஸ்லாமாபாத்	1989
நீளம் தாண்டுதல்	7.79	முகமது உர்பாஃக்	பாகிஸ்தான்	இஸ்லாமாபாத்	1989
தத்தி தத்தி தாண்டுதல்	15.72	பனாரஸ்கான்	பாகிஸ்தான்	கொழும்பு	1981
குண்டெறிதல்	17.46 மீ.	குஃரான் ஹுசேன்	பாகிஸ்தான்	டாக்கா	1993
வட்டெறிதல்	55.48மீ.	சத்திசிங்	இந்தியா	டாக்கா	1993
சங்கிலி குண்டெறிதல்	62.18 மீ.	ரகுவீர்சிங்பால்	இந்தியா	இஸ்லாமாபாத்	1989
ஈட்டியெறிதல்	71.92மீ.	முகமது ரசீத்	பாகிஸ்தான்	கல்கத்தா	1987
4 x 100 தொடரோட்டம் பங்கேற்றவர்கள்	40.14	(ஆனந்த நடராஜன் பால் பிஜூ, ஆனந்த செட்டி, அர்ஜுன் தேவய்யா)	இந்தியா	இஸ்லாமாபாத்	1989
4 x 400 தொடரோட்டம் (பங்கேற்றவர்கள்	3.08.72	முகமது சதக்கத், பாகர் ஈகரம், பசீர் அஹமத், (முகமது டையாஸ்)	பாகிஸ்தான்	இஸ்லாமாபார்த்	1989

பெண்கள் பிரிவு

100 மீ.	11.72	தமதயந்தி தர்ஷா	இலங்கை	கொழும்பு	1991
200 மீ.	23.84	தமயந்தி தர்ஷா	இலங்கை	டாக்கா	1993
400 மீ.	53.42	பி.டி.உஷா	இந்தியா	கல்கத்தா	1987
800 மீ.	2.04.63	சைனி வில்சன்	இந்தியா	டாக்கா	1993
1500 மீ.	4.21.20	மோளிசாக்கோ	இந்தியா	டாக்கா	1993
3000 மீ.	9.29.01	மோளிசாக்கோ	இந்தியா	கொழும்பு	1991
10000மீ.	35.49.65	சுமன் ரவத்	இந்தியா	கல்கத்தா	1987
100 மீ தடையோட்டம்	13.73	எம்.ஏ.எஸ்.குலவன்சா	இலங்கை	டாக்கா	1993
400 மீ. தடையோட்டம்	57.18	பி.டி.உஷா	இந்தியா	கல்கத்தா	1987
உயரம் தாண்டுதல்	1.75	எம்.ஏ.எஸ்.குலவன்சா	இலங்கை	கொழும்பு	1991
நீளம் தாண்டுதல்	5.99	ரீத் ஆப்ரஹாம்	இந்தியா	இஸ்லாமாபாத்	1989
குண்டெறிதல்	14.57 மீ.	அமன்தீப் கௌர்	இந்தியா	டாக்கா	1993
வட்டெறிதல்	46.78 மீ.	விஜயமாலா பாண்ட்	இந்தியா	கல்கத்தா	1987
ஈட்டெறிதல்	53.06 மீ.	விஜிதா அமர சேகரா	இலங்கை	இஸ்லாமாபாத்	1989
4 x 100 மீ தொடரோட்டம் பங்கேற்றவர்கள்	45.10மீ.	(பீனா அகஸ்டீன், கே.சரஸ்சம்மா, ரஜூதா பாண்டா, ஈ.பி.சைலா)	இந்தியா	டாக்கா	1993
4 x 400 மீ. தொடரோட்டம் பங்கேற்றவர்கள்	3.37.04	(எச்.ஜி.அப்ஷரா கவுடா, கே.எம்.பீனா மோல், கே.சரசம்மா, சைனி வில்சன்)	இந்தியா	டாக்கா	1993

★ தெற்காசிய விளையாட்டுப் போட்டி, SAF என்பதன் விரிவு South Asian Federation என்பதாகும். இவ் விளையாட்டுப் போட்டிகள் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை நடைபெறுகிறது.

★ தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் முதன்முதலாக நடைபெற்ற இடம் நேபாளம். ஆண்டு 1984.

★ தெற்காசிய விளையாட்டுப் போட்டி, இதற்கு முன்னர் ஒரே ஒரு முறைதான் இந்தியாவில் நடைபெற்றிருக்கிறது. இடம் கல்கத்தா.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

இந்திய அணியின் நிர்வாகிகள் அறிவிப்பு

சென்னையில் நடக்க இருக்கும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான இந்திய அணியின் முறைப்படுத்தும்குழு (Chef-de-mission) மற்றும் நிர்வாகிகள் பெயர்களை இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தன் அறிவித்துள்ளார்.

வீரர்கள்

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் டிசம்பர் 18ந் தேதி தொடங்கி 27-ஆம் தேதி வரை சென்னையில் நடைபெற உள்ளது.

இந்தப் போட்டியில் இந்திய அணியின் சார்பில், வீரர்கள் வீராங்கனைகள் கலந்து கொள்கிறார்கள். காட்சிப் போட்டிகளான சிலம்பம், கோகோ ஆகியவற்றைச் சேர்ந்த 45 பேரும் இதில் அடங்குவார்கள்.

குழுத்தலைவர்கள்

சர்வதேசப் போட்டிகளுக்கான அணி களுக்கு முறைபடுத்தும் குழுத்தலைவர் நியமிக்கப்படுவது வழக்கம். போட்டியில் பங்குபெறும் வீரர்கள் வீராங்கனைகளின் ஒருங்கிணைப்புப் பணியை முறைப்படுத்தும் குழு, துணை முறைபடுத்தும் குழு மற்றும் நிர்வாகிகள் கவனித்துக் கொள்வார்கள்.

சென்னையில் நடைபெறும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான இந்திய அணியின் முறைபடுத்தும் குழு மற்றும்நிர்வாகிகள் பட்டியலை இந்திய ஒலிம்பிக் சங்கத் தலைவர் டாக்டர் பா.சிவந்தி ஆதித்தன் வெளியிட்டார்.

இந்திய டேபிள் டென்னிஸ் சங்கச் செயலாளர் திரு எம்.சி.சவுகான் முறைப்படுத்தும் குழுவாக நியமிக்கப் பட்டுள்ளார். அரியானா ஒலிம்பிக் சங்கச் செயலாளர் திரு ஹரிக்குமார், குஜராத் ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு தேவேந்திரசிங் சோலங்கி ஆகியோர் துணை முறைப்படுத்தும் குழுக்களாக நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்கள்.

கேரள ஒலிம்பிக் சங்க அலுவலகச் செயலாளர் திரு பாஸ்கரன், இந்தியக் குழுவின் செயலாளராகவும், பீகார் ஒலிம்பிக் சங்கப் பொருளாளர் திரு இஜாஜ் உசேன் இந்தியக் குழுவின் பொருளாளராகவும் பணியாற்றுவார்கள்.

இந்திய கபடி அணிக்குத் தலைவர் திரு பாஸ்கரன்

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் வருகிற டிசம்பர் மாதம் சென்னையில் நடக்க இருக்கிறது. இந்தப் போட்டிக்கான இந்தியக் கபடி அணிக்கு திரு பாஸ்கரன் அணித்தலைவர் பொறுப்பு ஏற்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. மற்ற வீரர்களையும் இந்திய கபடி சம்மேளனத் தலைவர் திரு ஜே.எஸ்.கலாட் வெளியிட்டார். அணி விவரம் வருமாறு;

திரு முருகானந்தன், திரு சாமியப்பன் (தமிழ்நாடு), திரு ராம்மெகர் சிங் (முப்படை), திரு ஓம்பிரகாஷ் (கர்நாடகம்), திரு ஹொனப்பா, துணைத் தலைவர், திரு ரமேஷ்பாங்கி (விளையாட்டுக் குழுமம்), திரு தரம்வீர் (உத்தரப்பிரதேசம்), திரு ரமேஷ் குமார் (இமாசலப்பிரதேசம்), திரு ஹிர்லால் ஹதாரியா (ராஜஸ்தான்), திரு லோகேந்தர் பால் (டெல்லி), திருவைத்தியலிங்கம் (துறைமுகம்), அணியின் மானேஜர் திரு கே.இ.பிரபாகர், பயிற்சியாளர்கள் திரு பிரசாத் ராவ், திரு எஸ்.பி.சிங்.

'சிட்கோ' படைக்கும் புதிய சாதனை!





கொண்ட தொழில்களின் வளர்ச்சிக்கு ஒரு புறமும், சிறுதொழில் மற்றும் அதிக தொழிலாளர்கள் பணிபுரியும் தொழில்களின் வளர்ச்சிக்கு மற்றொரு புறமும் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றோம். எங்கள் அரசு அறிவித்த, புதிய தொழில் கொள்கையின் காரணமாக, இன்று விரைந்த தொழில் முன்னேற்றம் தமிழகத்தில் ஏற்பட்டுள்ளது.

அதுமட்டுமின்றி, வளர்ந்து வரும் புதிய தலைமுறையின் உணர்வுகளைப் புரிந்துகொண்டு, 21-ஆம் நூற்றாண்டில் இந்தியத் துணைக் கண்டத்தில் எத்தகைய ஒரு சூழ்நிலை அமைய வேண்டும் என்று நாம் விரும்புகிறோமோ, எத்தகைய ஒரு சூழ்நிலை அமைய வேண்டும் என்று நம்மை நடத்திச் சென்ற இலட்சியத் தலைவர்கள் எதிர்பார்த்தார்களோ, அந்த உன்னதமான சூழ்நிலையை உருவாக்கிட நாங்கள் ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். எங்கள் ஆட்சியில், மகளிர் தொழில் முனைவோர்களுக்கு அதாவது, Women Entrepreneurகளுக்கு உதவிக் கரம் நீட்டி, அவர்களை உற்சாகப் படுத்தி, பாரதி கண்ட புதுமைப் பெண்களைத் தொழில் துறையிலும் உருவாக்கி வருகின்றோம்.

"பட்டங்கள் ஆள்வதும்,
சட்டங்கள் செய்வதும்,
பாரினில் பெண்கள்
நடத்த வந்தோம்"

—என்று, புரட்சிக் கவிஞர் பாரதியார் கண்ட கனவை உங்கள் அன்புச் சகோதரியின் அரசு ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் நனவாக்கி வருவதைச் சுட்டிக்காட்டுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

முடங்கிக் கிடந்த பல துறைகளுக்கு எங்கள் ஆட்சியில் நாங்கள் புத்துயிர் கொடுத்துள்ளோம். இயல்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த வளர்ச்சிப் பணிகளுக்கு ஒரு புதிய முனைப்பையும் உத்வேகத்தையும் அளித்துள்ளோம். இன்று, தமிழக அரசு செயல்படுத்தி வரும் சமூக நலத் திட்டங்களும், மக்கள் நல் வாழ்வுத் திட்டங்களும், வளர்ச்சிப் பணிகளும் மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டிகளாக அமைந்துள்ளதையும் நமது திட்டச் செயல்பாடுகளுக்குச் சர்வதேச நிறுவனங்களிடம் இருந்து பாராட்டுதல்கள் கிடைத்துள்ளதையும் பெருமிதத்துடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். போக்குவரத்து, சமூகநலம், வேளாண்மை, வீட்டுவசதி, தொழில், கூட்டுறவு என்று எல்லாத் துறைகளிலும் இன்று, அனைத்திந்திய அளவில் விருதுகளைத் தமிழகம் தொடர்ந்து பெற்று வருவதும், இந்தப் புதிய உற்சாகத்திற்கு உண்மையான சான்று என்பதையும் குறிப்பிடக் கடமைப் பட்டுள்ளேன்.

தமிழக அரசின் பல நிறுவனங்கள், தொடங்கப்பட்ட நாளிலிருந்து, நாங்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது வரை செய்துள்ள சாதனைகளையும், செயல்பாட்டையும், எனது தலைமையில் அமைந்த இந்த மக்கள் நல அரசு, கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில் ஆற்றிய பணிகளையும், சாதித்துக் காட்டிய புதிய சாதனைகளையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் அந்த நிறுவனங்களின் செயல்பாடு, எவ்வளவு சிறப்பாக அமைந்துள்ளது என்பது தெளிவாகும். இந்தக் குறுகிய கால கட்டத்தில், கடந்த 20 ஆண்டுகளின் செயல்பாட்டையே, மிஞ்சியுள்ள நிறுவனங்கள் இன்று, தமிழ்

நாட்டில் பல உள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

வெள்ளி விழாவைக் கொண்டாடிய, இந்த சிட்கோ நிறுவனம், துவக்கப்பட்ட நாளிலிருந்து கடந்த 20 ஆண்டுகளில் 19 தொழில் பேட்டைகளை அமைத்து, 2,297 தொழில் கூடங்களைக் கட்டித் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்துள்ளது. ஆனால், கடந்த நான்கரை ஆண்டுக் கால கட்டத்தில் உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் மட்டுமே, 11 தொழிற் பேட்டைகளையும், 1,080 தொழிற் கூடங்களையும் உருவாக்கி, ஒதுக்கீடும் செய்துள்ளது என்பதை ஒப்பிட்டு நோக்கும் போது, இந்த நான்கரை ஆண்டுக் காலச் சாதனை, மக்கள் நலனை மட்டுமே, மனதில் நிறுத்திச் செயல்பட ஒரு துடிப்புள்ள அரசுக்கு மட்டுமே, சொந்தமாக இருக்க முடியும் என்பது நன்கு தெளிவாகும்.

அதேபோல, இந்த இரண்டு வேறுபட்ட காலகட்டங்களில், குறுந்தொழில்கள் எனப்படும் Tiny Sector-ன் வளர்ச்சியைக் கருத்தில் கொண்டு சிட்கோ நிர்மாணித்து ஒதுக்கீடு செய்த, தொழிற்கூடங்களின் புள்ளி விவரங்களையும், ஒப்பிட்டு நோக்கும்போது எங்கள் ஆட்சிக் காலத்தில், சிட்கோ நிறுவனத்தின் செயல்பாடு, சிறப்பாக அமைந்திருப்பது எளிதில் புலனாகும். எங்கள் அரசு சோதனைகளையும், சவால்களையும் அடிக்கடிச் சந்தித்துப் பழகிப் போன அரசு. எனவேதான், நாங்கள் சங்கடங்களைத் துணிவோடு சந்தித்து, சாமர்த்தியமாகச் சமாளித்து, அவற்றையே சாதனைகளாக்கியும் வருகின்றோம்.

எங்கள் ஆட்சியில் தான், முதன் முதலாகப் பெண்களுக்கெனப் பிரத்தியேகமாக இரண்டு தொழிற்பேட்டைகள் தஞ்சாவூரில் ஒன்றும், பர்கூரில் ஒன்றும் அமைக்கப்பட்டு வருகின்றன.

1991-ஆம் ஆண்டுக்கு முன்பு, சிட்கோ மூலமாகத் தொழிற் கூடங்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பயன்பெற்ற பெண்களின் எண்ணிக்கை 26 மட்டுமே. ஆனால், கடந்த நான்கரை ஆண்டு, மகளிர் முன்னேற்ற ஆட்சியில், 292 தொழிற் கூடங்கள் மகளிர் தொழில் முனைவோர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிட்கோ அமைத்து, ஒதுக்கீடு செய்யும் தொழிற்கூடங்களில், 30 சதவிகிதத் தொழிற்கூடங்களை, மகளிருக்கு முன்னுரிமையின் அடிப்படையில் வழங்க வேண்டும் என்கின்ற, புரட்சிகரமான ஆணையை இந்த மக்கள் நல அரசுதான் வழங்கியது என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டுள்ளேன். அதுமட்டுமின்றி, 1994-ஆம் ஆண்டு, சிறுதொழில் முனைவோர்களுக்குத் தவணை முறையில் இயந்திரங்கள் வழங்கும் புதிய திட்டம் ஆரம்பிக்கப்பட்டதோடு, மூலப் பொருட்கள் உதவித் திட்டத்திலும், விற்பனை உதவித் திட்டத்திலும் இன்று பழைய குறியீட்டு அளவுகளைத் தாண்டி, புதிய இலக்குகளை அடைந்துள்ளோம் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிட்கோ நிறுவனம், தொழிற்

பேட்டைகளை அமைத்து ஒதுக்கீடு செய்கின்ற தொழிற் கூடங்களின் விலையைக் குறைப்பதற்காக, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு, அதிக விலை கொடுத்து, தனியார் நிலங்களைக் கையகப்படுத்தும் முறையை மாற்றிக் குறைந்த விலையில் அரசு நிலங்களைப் பெற்று, தொழிற் பேட்டைகளை உருவாக்கி வருகின்றது.

இதன் காரணமாகத் தொழிற் கூடங்களின் விலையும், கணிசமான அளவு குறைவதால் சிறு தொழில் முனைவோர்களுக்கு, இது ஒரு வரப்பிரசாதமாக அமைந் துள்ளது.

சிட்கோ தொழிற்பேட்டைகளில், தொழில் தொடங்குவோர், அனைத்து உதவிகளையும், உரிமங்களையும், ஒரே அமைப்பின் மூலம் பெறுவதற்கான Single Window Agency முறையும், சமீபத்தில் என்னால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இவை எல்லாம், விரைந்த சிறுதொழில் வளர்ச்சிக்காக உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சி மேற்கொண்டுள்ள ஆத்மார்த்த ஈடுபாட்டின் அடையாளங்கள் என்றால் அது மிகையாகாது.

இன்று 18 கோடி ரூபாய் மதிப்பில், தொழிற்பேட்டைகள் விரிவாக்கத் திட்டங்களைத் துவக்கி வைத்ததிலும், பல தொழில் முனைவோர்களுக்கு, தொழிற்கூட ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்குவதிலும், நலிந்த பிரிவினர்களுக்கு நலத் திட்ட உதவிகளை வழங்குவதிலும், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 13.35 கோடி ரூபாய் மதிப்பில், 270 தொழிற் கூடங்களும், கிண்டி திரு.வி.க. தொழிற்பேட்டையில் மூன்றே கால் கோடி ரூபாய் செலவில், 48 தொழிற்கூடங்கள் கொண்ட மற்றுமொரு ஆயத்த ஆடை வளாகமும் அமைய உள்ளதை எண்ணி, நான் உள்ளபடியே மகிழ்ச்சி அடைகிறேன்.

சிட்கோ நிறுவனத்தின் கடைநிலை ஊழியர்கள், 73 பேர்களுக்கு 60 இலட்சம் ரூபாய் மதிப்பில் வீட்டுமனைகளும், குடியிருப்புகளும் திரு.வி.க. தொழிற்பேட்டையில் உரிக்கார நாயக்கர் இனத்தைச் சேர்ந்த 58 குடும்பங்களுக்கு 14 இலட்சம் ரூபாய் மதிப்பில் வீட்டுமனைப் பட்டாக்களும் இன்று வழங்கப்படுவதை அறிந்து நான் மன மகிழ்ச்சி அடைகிறேன்.

1000 ஏக்கர் நிலப்பரப்பில் ஆவடியில் ஒரு தொழில் நகரம் உட்பட திருமுடிவாக்கம், மணலி, விச்சூர், போச்சம்பள்ளி, ஊத்தங்கரை, பெருந்துரை, ஆசனூர் வெண்மணி, ஆத்தூர், நாட்றாம்பள்ளி, மண்டலவாடி, பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் மாவட்டத்தின் திருப்பத்தூர், கோவையை அடுத்த மலுமிச்சம் பட்டி ஆகிய இடங்களில், 2,655 ஏக்கர் நிலப்பரப்பில் புதிய தொழிற்பேட்டைகள் அமைக்க, இன்று அடிக்கல் நாட்டியதில், நான் பெருமகிழ்ச்சி அடைகிறேன். 2,655 ஏக்கர் நிலப்பரப்பில், ஒரே நேரத்தில் தொழிற்பேட்டைகள் அமைக்க, எங்கள் அரசு மேற்கொள்ளும் முயற்சி இதுவரை எந்த அரசாலும், மேற்கொண்டிருக்க இயலாது என்பதைத் திட்டவட்டமாக என்னால் எடுத்துக் கூற முடியும். நிச்சயமாக இன்றைய விழா, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக மாறும் என்பதில் ஐயமில்லை. இந்தப் புதிய தொழிற்

பேட்டைகள் செயல்படத் துவங்கும்போது, 2 இலட்சம் பேருக்கு நேரடி வேலை வாய்ப்பும், 6 இலட்சம் பேருக்கு, மறைமுக வேலைவாய்ப்பும் கிடைக்கும் என்பதை எண்ணும் போது என் மனம் பெருமகிழ்ச்சி அடைகின்றது.

சென்னை மாநகர் மற்றும் புறநகர்ப் பகுதிகளில் வாழும் மகளிர், சிறு மற்றும் குறுந் தொழில்களைத் தொடங்குவதில், சமீப காலமாக, அதிக ஆர்வத்தைக் காட்டி வருகின்றனர்.

எனவே, சென்னைக்கு அருகில் மகளிருக்கு என பிரத்தியேகமாக ஒரு புதிய தொழிற்பேட்டையை அமைக்க எங்கள் அரசு முடிவு செய்துள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தத் தொழிற்பேட்டையை அமைக்க வேளச்சேரியை அடுத்துள்ளப் பகுதியில், 134 ஏக்கர் நிலப்பரப்பு தேர்வு செய்யப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

தொழிற்பேட்டைகளில், தவணை முறையில் தொழிற்கூடங்கள் பெற்று, தொழில் தொடங்குவோருக்கும், தவணை முறையில் இயந்திரங்களைப் பெற்று தொழில் தொடங்குவோருக்கும் ஊக்கத் தொகையாக அரசுத் தரப்பில் மானியம் வழங்கும் முறை, 1988-ஆம் ஆண்டு வரை கடைப் பிடிக்கப்பட்டு வந்தது. பின்னர், இந்த மானியம் வழங்கும் திட்டம் கைவிடப்பட்டது. சமீப காலமாக மிக அதிக அளவில் மகளிர் சிறுதொழில்கள் வளர்ச்சியில் அக்கறை காட்டி வருவதால் அவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு, அரசுத் தரப்பில் அவர்களுக்கு மானியம் வழங்கும் திட்டம் மீண்டும் அறிமுகப்படுத்தப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணையும், நிதி ஒதுக்கீடும் விரைவில் வழங்கப் படும்.

சிட்கோ தொழிற்பேட்டைகளில் மேம்படுத்தப்பட்ட மனைகள் மற்றும் தொழிற் கூடங்களுக்கு முத்திரைத் தீர்வையிலிருந்து அதாவது, Stamp Dutyலிருந்து ஏற்கெனவே முழுமையாக விலக்கு அளிக்கப் படடு உள்ளது. அவற்றின் சந்தை மதிப்பில் ஒரு சதவிகிதம் மட்டுமே, கட்டணமாக Registration Charge ஆக, பதிவுத்துறையால் தற்போது வசூலிக்கப்பட்டு வருகிறது. நிலத்தின் வெளிச் சந்தை மதிப்பில், இந்தக் கட்டணம் வசூலிக்கப்படுவதால், இந்தப் பதிவுக் கட்டணம், அதிக அளவில் செலுத்த வேண்டி உள்ளதாகவும், சிட்கோ நிர்ணயித்த நில மதிப்பின் அடிப்படையில், இந்த ஒரு சதவிகிதப் பதிவுக் கட்டணத்தைச் செலுத்துகிற சலுகையை வழங்க வேண்டும் என்று பல தொழில் முனைவோர்கள் கோரி வருவதையும் நான் நன்கு அறிவேன். அவர்களின் அந்தக் கோரிக்கையை இன்று ஏற்றுக் கொண்டு இனி சிட்கோ நிர்ணயம் செய்த நில மதிப்பின் அடிப்படையிலேயே பதிவுக் கட்டணம் நிர்ணயிக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இத்திட்டத்தை விரைவில் நடைமுறைக்குக் கொண்டு வர தமிழக அரசு நடவடிக்கை மேற்கொள்ளும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிட்கோ வின் 17 தொழிற் பேட்டைகளில், குறைந்த வருவாய் பெறுகின்ற, சிட்கோ தொழிலாளர்களுக்காக, 1,099 குடியிருப்புகள், கருணையின் அடிபபடையில் வழங்கப் பட்டுள்ளன. இந்தக் குடியிருப்புகள் அவர்களுக்கே சொந்தமாக்கிக் கொள்ள 1993-ஆம் ஆண்டில் ஆணை ஒன்றும் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இந்த ஆணையில் இத்தகைய நிலங்களின் மதிப்பை, ஒட்டு மொத்தமாகத் தமிழகம் முழுமைக்கும் சதுரமீட்டர் ஒன்றுக்கு 500 ரூபாய் என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு, மாநகராட்சி, நகராட்சி, பேரூராட்சி என்று வித்தியாசமின்றி நிர்ணயிக்கப்பட்ட நில மதிப்பீட்டை, இடத்தின் தன்மைக்கேற்ப குறைக்க வேண்டும் என்ற சிட்கோ ஊழியர்களது கோரிக்கை, எனது கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. அவர்களது குறைகளைத் தீர்க்க, எங்கள் அரசு தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாநிலத்தின் சிறுதொழில் வளர்ச்சிக்கு வித்திட்டுசிறு,குறுந் தொழில்களின் வளர்ச்சிக்குத் தன்னை முழுமையாக அர்ப் பணித்து, செயல்பட்டு வருகின்ற சிட்கோ நிறுவனம் மேலும் பல புதிய சாதனைகளைப் படைத்து விரைந்த தொழில் முன்னேற்றத்திற்கு ஒரு தூண்டுகோலாகவும், தொழில் முனைவோருக்கும், அரசாங்கத்திற்கும் இடையே ஒரு இணைப்புப் பாலமாகவும் விளங்க வேண்டும் என்ற எனது பேரவாவினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சிறுதொழில்களின் முன்னேற்றமே, சிட்கோ வின் முன்னேற்றம் என்பதை உணர்ந்து, இந்நிறுவனத்தின் அலுவலர்களும், பணியாளர்களும், ஊழியர்களும் செயல் படுவார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

இந்த எழுச்சியான விழாவில் கலந்துகொண்ட உங்கள் அனைவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

> அறமும், வாய்மையும் உள்ளவர்களின் முகம் எப்போதும் பேரொளியுடன் திகழும்
> —குருநானக்

> அமைதிக்கு உழைப்பதே, உலகிற்கு நாம் செய்யும் கடமை ஆகும்.
> —டாக்டர் ராதாகிருஷ்ணன்

எண்ணம் கவரும் வண்ண விழா

சிட்கோவின் ரூ.18 கோடிக்கான தொழிற் பேட்டைகள் விரிவாக்கத் திட்டங்கள் — தொடக்க விழா 2655 ஏக்கரில் புதிய தொழிற் பேட்டைகளுக்கான அடிக்கல் நாட்டு விழா 4.12.95 அன்று, சென்னை கலைவாணர் அரங்கத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

விழாவினையொட்டி, கலைவாணர் அரங்கம் வண்ண விளக்குகளால் அலங் கரிக்கப்பட்டிருந்தது.

விழா மேடை பல்வகை மலர்களால் பாங்குற அமைக்கப்பட்டிருந்தன. முகப்பில் தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, டாக்டர் எம்.ஜி.ஆர். மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா, ஆகியோரின் திருவுருவப்படங்கள் காட்சியளித்தன.

தொடக்கத்தில் கங்கை அமரன் குழுவினரின் 'புரட்சித்தலைவியின் ஆட்சியிலே' என்னும் பாடல் ஒலித்தபோது, பலத்த கையொலி எழுந்தது.

தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனத்தின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் திருமதி ஈ.வெ.கி. சுலோச்சனா சம்பத் அவர்கள் அனைவரையும் வரவேற்றுப் பேசினார். பிறகு, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அவர் பொன்னாடை போர்த்தினார்.

மாண்புமிகு ஊரகத் தொழில்துறை அமைச்சர் திரு.துரை இராமசாமி அவர்கள் முன்னிலை வகித்து உரையாற்றினார்.

மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் தலைமை வகித்து, தமிழகத் தொழில் வளர்ச்சி குறித்து விளக்கிப் பேசினார்.

மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், குத்துவிளக்கேற்றி திட்டங்களைத் தொடங்கி வைத்தபோது, 'கன்னித்தமிழ் நாட்டுக் கற்பகமே, உங்கள் கைபட்டதெல்லாம் அற்புதமே!' என்று தொடங்கும் பாடலை, பின்னணிப் பாடகி சுவர்ணலதா பாடினார்.

பிறகு, மாண்புமிகு முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், விழாப் பேருரை நிகழ்த்தினார்.

கவிஞர் இளந்தேவன், திருமதி சுதாசேஷய்யன் ஆகியோர் விழா நிகழ்ச்சிகளைத் தொகுத்து வழங்கினார்கள்.

—நிகழ்ச்சித் தொகுப்பு: பி.வி கிரி

தமிழக வீரர் இருவருக்கு மாண்புமிகு முதல்வர் உதவி

பின்லாந்தில் இம்மாதம் 14 முதல் 19ந் தேதி வரை நடைபெறவுள்ள உலக ஆடவர் பளு தூக்கும் பட்டத்திற்கான போட்டியில் இந்தியா சார்பில் கலந்துகொள்ள தமிழ்நாட்டிலிருந்து திரு வி.சேவியர் மற்றும் திரு ஆர்.மோகனகிருஷ்ணன் ஆகிய இருவரும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இப்போட்டியில் கலந்து கொள்வதற்கான செலவுத் தொகையை வழங்கிட வேண்டும் என இவ்விரு வீரர்களும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

தமிழ்நாட்டு விளையாட்டு வரலாற்றில் ஒரு மறுமலர்ச்சியை ஏற்படுத்தி விளையாட்டுத் துறையில் பொற்காலத்தை உருவாக்கி வரும் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் உடனடியாக அந்த இருவரின் வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு அவர்கள் கோரிய தொகையான தலா ரூ.66 ஆயிரம் என மொத்தம் ரூ.1,32,000 வழங்குமாறு ஆணை பிறப்பித்துள்ளார். மாண்புமிகு முதல்வரின் உத்தரவின்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டுக் கழகத்தின் நிதியிலிருந்து தலா ரூ.66 ஆயிரத்துக்கான காசோலை இரு வீரர்களுக்கும் வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தைச் சேர்ந்த இரு வீரர்களும், வெற்றிகளைப் பெற்றுத் தாய் நாட்டிற்குப் பெருமை சேர்க்க வேண்டும் என்ற தனது நெஞ்சார்ந்த வாழ்த்துக்களையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் தெரிவித்துக் கொண்டார்.

நிதி உதவியைப் பெற்ற திரு சேவியரும், திரு மோகனகிருஷ்ணனும் பின்லாந்து நாட்டிற்குப் புறப்பட்டுச் சென்றுள்ளனர்.

இந்தியத் தடகள அணியில் அதிவேக ஓட்டக்காரர் ஆனந்த நடராஜன், சோலைமதி தேர்வு 146 வீரர்கள் பயிற்சி

சென்னையில் நடைபெற உள்ள தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கான இந்தியத் தடகள அணியை தயார் செய்ய பயிற்சி முகாமுக்கு 146 பேரை இந்தியத் தடகளச் சங்கம் தேர்வு செய்துள்ளது. அவர்களில் 58 வீராங்கனைகள் அடங்குவர்.

இந்த வீரர், வீராங்கனைகள் அக்டோபர் 5-ந் தேதி தொடங்கி தெற்காசிய விளையாட்டுப் போட்டி தொடங்கும் வரை பாட்டியாலாவிலும், பெங்களூரிலும் பயிற்சி பெறுகிறார்கள். தமிழக வீரர் ஆனந்த நடராஜன், வீராங்கனைகள் சோலைமதி, ஜெயலட்சுமி, ஆன்சி பிலிப்ஸ், அனுசுயா ராய், ஜெயந்தி ஆகியோர் இந்த முகாமுக்குத் தேர்வு பெற்றவர்கள் பட்டியலில் இடம் பெற்றுள்ளனர்.

(8-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஜம்மு

தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் சுடர் 4.11.1995 அன்று காலை 8 மணிக்கு ஜம்மு நகருக்குக் கொண்டு வரப்பட்டது. தமிழ்நாடு கைப்பந்துக் கழகத்தினைச் சார்ந்த திரு. சுதாகர், சுடரைக் கொண்டு வந்தார். சுடர், ஜம்மு காஷ்மீர் மாநில ஆளுநரின் ஆலோசகர் திரு மோகன்தாஸ் மோசஸ் அவர்களிடம் அர்ஜூனா விருது மற்றும் துரோணாச்சார்யா விருது பெற்ற திரு ரமணராவ் அவர்களால் அளிக்கப்பட்டது.

ஜம்மு காஷ்மீர் கைப்பந்து கழகத்தின் தலைவர் திரு ராஜ்தனூரிஜா, பொதுச் செயலர் திரு குல்தீப் மல்ஹோத்ரா, ஜம்மு மாநில ஒலிம்பிக் கழகத்தின் தலைவர் மற்றும் உறுப்பினர்கள், பங்கேற்றார்கள்.

சண்டிகர்

தெற்கு ஆசிய விளையாட்டுப் போட்டிகளின் சுடர் 6.11.95 அன்று சண்டிகர் வந்தடைந்தது. மேதகு ஆளுநரின் ஆலோசகர் திரு பிரதாப் மெஹரா அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டார்.

சண்டிகர் நகர ஆட்சியாளரும், பஞ்சாப் மாநில ஆளுநருமான லெப்டினன்ட் ஜெனரல் திரு பி.கே.என். கிப்பார் அவர்கள் தெற்கு ஆசிய விளையாட்டுச் சுடரை 'பறக்கும் சீக்கியர்' என்று பாராட்டப் பெறும் புகழ்பெற்ற ஒலிம்பிக் ஓட்டப்பந்தய வீரர் திரு மில்கா சிங் அவர்களிடம் ஒப்படைத்தார்.

மாண்புமிகு அரியானா கல்வித்துறை அமைச்சர் திரு பூல்சந்த் முல்லானா தொடர் ஓட்டத்தைக் கொடி அசைத்து இமாசல பிரதேசத்திற்கு வழி அனுப்பி வைத்தார்.

சிம்லா

தெற்கு ஆசிய விளையாட்டுச் சுடர் 8.11.95 அன்று இமாசல பிரதேசம் சிம்லா நகருக்கு வந்தடைந்தது.

இமாசல பிரதேச அரசின் மாண்புமிகு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர், திரு அனில் சர்மா அவர்களிடம் சுடரை வழங்க, அவர் இமாசல பிரதேச மாநிலத்தின் சர்வதேச மராத்தான் ஓட்ட வீராங்கனையும், அர்ஜுனா விருது பெற்றவருமான திருமதி சுமன் ரவாட் மேத்தா அவர்களிடம் வழங்கினார்.

பின்னர், மாண்புமிகு அமைச்சர் திரு சர்மா அவர்கள் கொடியசைத்து, சுடர் ஓட்டத்தைத் தொடக்கி வைத்தார்.

சண்டிகர்

டெல்லி

சிறப்புமிகு தெற்காசிய விளை யாட்டுச் சுடர் 11.11.95 அன்று டெல்லி வந்து சேர்ந்தது.

தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு பி. குழந்தைவேலு அவர்களிடம் செங்கோட்டையில் சுடர் ஒப்படைக்கப்பட்டது. சுடரை, சர்வதேச மல்யுத்த வீரர் ஆசிஷ் சொகீலிடம் தமிழக அரசின் சிறப்புப் பிரதிநிதி திரு பி. குழந்தைவேலு அவர்கள் கொடுத்தார்.

சுடரைப் பெற்றுக்கொண்ட ஆசிஷ் கொகீல் மற்றும் ஏராள மான வீரர் வீராங்கனைகள் தொடர் ஓட்டமாகச் சுடரைக் கொண்டு சென்றனர்.

தொடர் ஓட்ட முடிவில் டெல்லி கல்வி அமைச்சர் சாகிப் சிங் வர்மா சுடரைப் பெற்றுக் கொண்ட பின்னர் அதனை கொடியசைத்து வழியனுப்பி வைத்தார்.

சிம்லா

பின்னர், இந்தச் சுடர் மத்திய பிரதேச மாநில தலைநகர் போபாலுக்குப் புறப்பட்டது.

போபால்

12-11-95 அன்று சுடர் மத்தியப் பிரதேச மாநிலம் போபால் நகர் வந்தடைந்தது. மத்தியப் பிரதேச மாநில ஒலிம்பிக் சங்கத் தலைவர் திரு.பி.எஸ்.சௌகான், சுடரைப் பெற்றுக்கொண்டார்,

மத்தியப் பிரதேச மாநில விளை யாட்டுத்துறை மற்றும் மேல் நிலைக் கல்வித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு முகேஷ் நாயக் அவர்கள் சுடரினைத் தானே ஏந்தி தொடர் ஓட்டத்தில் ஓடினார்.

பின்னர் சுடரினை மத்தியப் பிரதேச மாநில விளையாட்டு மற்றும் வேளாண்மைத்துறைச் செயலாளர் திரு. ரவீந்திர சர்மா இ.ஆ.ப., பெற்று, அர்ஜுனா விருது பெற்ற திருமதி சுனிதா சந்தரா அவர்களிடம் சுடரினை வழங்கினார்கள். பின்னர் சுடர் லக்னோ மாநகருக்கு எடுத்துச் செல்லப்பட்டது.

லக்னோ

தெற்காசிய விளையாட்டுச் சுடர், 14.11.95 அன்று லக்னோ நகரின் கே.டி.சிங்பாபு விளை யாட்டு அரங்கை வந்தடைந்தது.

கஸ்ரத் கன் எனப்படும் இடத்தின் வழியே ஏறத்தாழ 4 கிலோ மீட்டர் தூரத்தைக் கடந்து சுடர் ஓட்டம் ஆளுநர் மாளி கையை அடைந்தது. அங்கு உத்திரபிரதேச மாநில மேதகு ஆளுநர் திரு.மோதிலால் வோரா அவர்களிடம் முன்னாள் ஒலிம்பிக் விளையாட்டு வீரர் பத்ம ஜமன்லால் சர்மா அவர்கள் சுடரை வழங்கினார்.

லக்னோ

பாட்னா

ஏழாவது தெற்காசிய விளை யாட்டுச் சுடர், 15.11.95 அன்று பீகார் மாநிலத் தலைநகர் பாட்னாவை வந்தடைந்தது. மறு நாள் காலை மேதகு ஆளுநர் மாளிகையில் விளையாட்டுச் சுடரினை மேதகு பீகார் மாநில ஆளுநர் டாக்டர் ஏ.ஆர்.கித்வாய் அவர்களிடம் சுடரை ஏந்தி வந்த திரு மனோகர் மற்றும் திரு சண்முகம் ஆகிய இருவரும் ஒப்படைத்தார்கள்.

மேதகு ஆளுநர் அவர்கள் சுடர் ஓட்டம் வெற்றிபெற வாழ்த்திய பின் விளையாட்டுச் சுடர், காந்தி மைதானத்தைத் தொடரோட்டம் மூலம் வந் தடைந்தது. காந்தி மைதானத்தில் மாண்புமிகு பீகார் மாநில கலை கலாச்சாரத் துறை, செய்தி மக்கள் தொடர்பு மற்றும் கூட்டுறவு அமைச்சர் திரு அப்துல் பாரி சித்திக் சுடரைப் பெற்றுக் கொண்டார்.

பின்னர்சுடர், கல்கத்தா நோக்கித் தன் பயணத்தைத் தொடர்ந்தது.

போபால்

கல்கத்தா

மாண்புமிகு மேற்கு வங்க முதலமைச்சர் திரு ஜோதிபாசு அவர்கள், 18.11.1995 அன்று கல்கத்தா நகரைச் சென்றடைந்த தெற்காசிய விளையாட்டு வீரர் திரு லெஸ்லி கிளாடியஸ் அவர்களிடம் சுடரினை வழங்கி சுடர் ஓட்டத்தினைத் தொடக்கி வைத்தார். மாண்புமிகு மேற்கு வங்க விளையாட்டுத் துறை அமைச்சர் திரு சுபாஷ் சக்ரபோர்த்தி, மேற்கு வங்க மாநில விளையாட்டு கவுன்சி லின் தலைவர் திரு கமால் குமார் பாசு, இந்திய விளை யாட்டுக் கழகத்தின் மண்டல இயக்குநர் திரு சி.ஆர். கோபிநாத், ஆகியோர் கலந்து கொண்டனர்.

அகர்தலா

20.11.95 அன்று, தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடரை, திரிபுரா மாநிலத் தலை நகரான அகர்தலாவில் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு கேசப் மஜும்தர் பெற்றுக்கொண்டார்.

பின்னர், மாண்புமிகு விளையாட்டுத்துறை அமைச்சர் திரு ஜிதேந்திர சவுத்ரி கொ்டி

பாட்னா

அசைக்க, மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு கேசப் மஜூம்தர் சுடரை, வடகிழக்குப் பகுதியின் அதிவேக வீரர் திரு பிபிளா தத்தாவிடம் வழங்கி சுடர் ஓட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

காங்டாக்

தெற்காசிய விளையாட்டுச் சுடர் சிக்கிம் மாநிலத்தை 23.11.95 அன்று வந்தடைந்தது. பெங்கால் ஒலிம்பிக் சங்கத் துணைத் தலைவர் திரு எச்.பி. கோஷ், சுடரைப் பெற்று மாண்புமிகு சிக்கிம் மாநில முதலமைச்சர் திரு சாம்ளிங்கிடம் ஒப்படைத்தார்.

சிக்கிம் மாநிலத் தலைநகர் காங்டாக்கில் நடந்த கோலாகலமான விழாவில் மேளதாளத்துடன் வாணவேடிக்கைகள் முழங்க, தொடர் ஓட்டத்தை மாண்புமிகு சிக்கிம் மாநில முதல்வர் அவர்கள் தொடங்கி வைத்தார். அவரிடமிருந்து திரு ஜிக்மே யூசர் லெப்சா, திரு பாண்டே (ஓட்டப்பந்தயம்), திரு ஜிக்மே (தேசிய வில்வித்தையில் தங்கம் வென்றவர்), ஆகியோர் சுடரைப் பெற்று நகரின் முக்கிய வீதிகள் வழியாக தொடர் ஓட்டமாகக் கொண்டு சென்றனர்.

ஜப்பானைச் சேர்ந்த சர்வ தேச ஓட்டப்பந்தய வீரர்

திரு ஹிஜிமே ரிஷியும் தொடர் ஓட்டத்தில் கலந்து கொண்டார்.

பின்னர் இச்சுடர் மணிப்பூரை நோக்கிப் பயணமாகியது.

இம்பால்

27.11.95 அன்று காலை 8 மணியளவில் மணிப்பூர் மாநிலத்தின் தலை நகரான இம்பால் நகரைச் சுடர் வந்தடைந்தது. சரித்திரச் சிறப்பு மிக்க இச்சுடர் மணிப்பூர் மாநிலத்திற்கு வந்ததை, அம்மாநில முதல் அமைச்சர் மாண்புமிகு திரு ரிசாங் கேசிங் அவர்கள் தன் மகிழ்ச்சியினைத் தெரிவித்து வரவேற்றார்.

பின்னர் தெற்காசிய விளையாட்டுப் போட்டிச் சுடரினை மாநிலத்தின் ஒலிம்பிக் விளையாட்டு வீரர் திரு பி. நீல்கமல் சிங் அவர்களிடம் மாநில முதலமைச்சர் திரு ரிசாங் கேசிங் வழங்கினார்.

கொஹிமா

நாகாலாந்து மாநிலம் கொகிமா நகரில் 29.11.95 அன்று சுடர் ஓட்டம் நடைபெற்றது. கொகிமா நகர் பூப்பந்தாட்ட பாட்மிட்டன் விளையாட்டரங்கில் நடைபெற்ற சுடர் ஓட்ட நிகழ்ச்சியில் நாகாலாந்து மாநில உயர்நிலை தொழிற்கல்வி மற்றும் மின்துறை அமைச்சர் திரு சிகிஹோ அவர்கள் கலந்துகொண்டு சுடர் ஓட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

நாகாலாந்து மாநில சர்வதேச ஓட்டப்பந்தய வீரரான திரு கேரி இலாகுவோலிம் மற்றும் நாகாலாந்து விளையாட்டு வீரர்களுமாக சுமார் 200 பேர் இச்சுடர் ஓட்டத்தில் கலந்து கொண்டனர்.

பின்னர் சுடர் மேகாலயா மாநிலம் ஷில்லாங் நகர் நோக்கிப் புறப்பட்டுச் சென்றது.

ஷில்லாங்

மேகாலயா மாநிலம், ஷில்லாங் நகரின் மையப் பகுதியில் உள்ள ஜவகர்லால் நேரு விளையாட்டுக் குழுமத்தின் போலோ விளையாட்டு அரங்கில் 2.12.95 அன்று காலை 9 அணி அளவில் சுடர் ஓட்டம் தொடரும் நிகழ்ச்சி ஆரம்பமானது.

மேகாலயா அரசின் மாண்புமிகு இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு டி.சி. லிங்டோ அவர்கள் கொடி அசைத்துச் சுடர் ஓட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

பின்னர் மாண்புமிகு மேகாலயா முதலமைச்சர் திரு எஸ்.சி. மராக் அவர்கள் சுடரைப் பெற்றுக்கொண்டு வாழ்த்தி உரையாற்றினார்.

கௌஹாத்தி

விளையாட்டுச் சுடர், 3.12.95 அன்று, அஸ்ஸாம் மாநிலத்தின் தலை நகரான கௌஹாத்தியை வந்தடைந்தது.

இச்சுடரை மேதகு அஸ்ஸாம் மாநில ஆளுநர் லோக்நய்யா மிஸ்ரா அவர்கள் இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் உறுப்பினர் திரு டி. முகர்ஜி அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார். மேதகு ஆளுநர் அவர்கள் அச்சுடரை அர்ஜினா விருது பெற்ற வீரர் திரு போகேஸ்வர் பர்வா என்பவரிடம் ஒப்படைத்தார்.

நிகழ்ச்சியில் அஸ்ஸாம் மாநில மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் திரு பைஜாஜ் சைக்கியா, முன்னாள் அஸ்ஸாம் மாநில விளையாட்டுத்துறை இயக்குநர் திரு நில்மோய் சௌத்ரே, ஆகியோர் கலந்து கொண்டார்கள்.

ஈடா நகர்

மாண்புமிகு அருணாசலப் பிரதேச முதலமைச்சர் திரு ஜியேகோங்ஸ் அப்பாங் அவர்களால் 5.12.95 அன்று இந்திய ஒலிம்பிக் சங்க உறுப்பினர் டி. முகர்ஜி அவர்களிடமிருந்து ஈடாநகரில் நடைபெற்ற வண்ணமிகு நிகழ்ச்சியில் சுடர் பெறப்பட்டது.

மாண்புமிகு அருணாச்சல

பிரதேச முதலமைச்சர் அவர்கள், அதனை மற்போர் வீராங்கனை திருமதி பி. தையோபியாவிடம் தொடரோட்டமாக எடுத்துச் செல்லும்படி ஒப்படைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் நல அமைச்சர் திரு டோய் அடோ, மாண்புமிகு ஊரக நலத் துறை துணை அமைச்சர் திரு லாகி மாண்புமிகு வரி மற்றும் சுங்கத் தீர்வை அமைச்சர் திரு கே. தைபோடியா, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் ஆர்.கே. கிரிமே, மாண்புமிகு அருணாசலப்பிரதேச முதல்வர் அவர்களின் துணைவியார் திருமதி ஒய். அப்பாங், சட்டமன்ற உறுப்பினர் திரு தெலி ஆகியோர் உரை ஆற்றினார்கள். சுடர் தொடர் ஓட்டத்தின் மூலம் மிசோரம் மாநிலத்திற்குப் பயணமாகியது.

ஐஸ்வால்

மிசோரம் மாநிலத்தின் தலை நகரான ஐஸாலுக்கு தெற்காசிய விளையாட்டுச் சுடர் 5.12.95 அன்று வந்து சேர்ந்தது.

மிசோரம் மாநில முதல் அமைச்சர் திரு லால் தங் ஆலா சுடரை உலகக் கோப்பை குத்துச்சண்டை வீரர் திரு ஜோராம் தங்கா அவர்களிடம் வழங்கி சுடர் ஓட்டத்தை தொடங்கி வைத்தார். 3 கிலோ மீட்டர் தூரம் வரை நடந்த இச்சுடர் ஓட்டத்தில் மிசோரம் மாநில விளையாட்டு வீரர்களும் மாணவர்களும் பெரும் அளவில் பங்குகொண்டனர்.

புவனேஸ்வர்

சுடர் 6.12.95 அன்று ஒரிசா மாநிலத் தலைநகர் புவனேஸ்வரத்திற்கு, மேற்கு வங்காள ஒலிம்பிக் சங்கத்தின் துணைத் தலைவர் திரு எச்.பி. கோஷ் அவர்களால் கொண்டு வரப் பட்டது.

மாண்புமிகு ஊராட்சித்துறை அமைச்சர் திரு ந்பீன் சந்திர தாஸ் அவர்கள் சுடரைப் பெற்றுக் கொண்டார். பின்னர் 7.12.95 அன்று புவனேஸ்வரத்தில் நடைபெற்ற

விழாவில் மாண்புமிகு ஒரிசா மாநில விளையாட்டுத்துறை இயக்குநர் கேஎம். லால் அவர்களிடமிருந்து சுடரை. மாண்புமிகு விளையாட்டுத் துறை அமைச்சர் திரு சுரேஷ் குமார் ரவுத்ராய் பெற்று, அதனை விளையாட்டு வீரர் திரு எஸ்.கே. குல்ஜாரிடம் கொடுத்தார். சுடரோட்டத்தின் இறுதியில் ஒரிசா மாநில விளையாட்டுத்துறையின் முதன்மைப் பயிற்சியாளர் திரு ஏ.என். சாகுல் அந்தச் சுடரை தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கத்தின் துணைத் தலைவர் திரு அன்சாரிடம் ஒப்படைத்தார்.

ஹைதராபாத்

ஏழாவது தெற்காசிய விளை யாட்டுச் சுடர் ஆந்திர மாநிலத் தலைநகரான ஹைதராபாத் திற்கு 9.12.95 அன்று காலை 9.15 மணியளவில் வந்தடைந்தது. அங்கு சார்மினாரில் நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆந்திர மாநில மாண்புமிகு உள்துறை மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் திரு மாதவரெட்டி தெற்காசிய விளையாட்டுச் சுடர் ஓட்டத்தைத் தொடங்கி வைக்கும்முன் விளை யாட்டுத் துறையின் முன்னோடி யாக விளங்கும தமிழக அரசைப் பாராட்டி ஆந்திர மாநிலமும் தமிழகத்தைப் போல் விளை யாட்டுத் துறையில் மேம்பாடு அடையவேண்டும் எனக் கூறினார்.

இந்தச் சுடர் ஓட்டத் தொடரினை மாண்புமிகு உள் துறை மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் திரு மாதவரெட்டி அவர்கள் கொடி அசைத்துத் தொடங்கி வைத்தார்.

பெங்களூர்

கர்நாடக மாநிலத் தலைநகர் பெங்களூருக்கு 10.12.95 அன்று

விளையாட்டுச் சுடர் வந்து சேர்ந்தது.

அச்சுடரை மாண்புமிகு கர்நாடக விளையாட்டுத்துறை அமைச்சர் திரு அஜய்குமார் சின்மயக் அவர்களிடமிருந்து, மாண்புமிகு கர்நாடக மாநில முதலமைச்சர் திரு எச்.டி. தேவகௌடா அவர்கள் பெற்றுக் கொண்டார்.

பின்னர், தேசிய விளை யாட்டு வீரர் திரு டி.ஒய். பிரதார் அவர்கள் சுடரைப் பெற்றுக் கொள்ள, மாண்புமிகு கர்நாடக முதலமைச்சீர் அவர்கள் கொடி அசைத்துச் சுடரோட்டத்தை விதான் சவுதா வளாகத்தி லிருந்து தொடங்கி வைத்தார். மாண்புமிகு கர்நாடக விளை யாட்டு மற்றும் செய்தித்துறைச் செயலர் திரு என்.விஸ்வநாதன், இ.ஆ.ப., இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

கோவா

கோவா மாநிலத்தில் பஞ்சிம் நகரில் 12.12.95 அன்று இந்திய ஒலிம்பிக் சங்க உறுப்பினர் திரு ஞானவேல் அவர்கள் விளை யாட்டுச் சுடரை மாண்புமிகு கோவா மாநில முதலமைச்சர் திரு பிரிட் பாசிங் ரானே அவர்களிடம் வழங்கினார்.

மாண்புமிகு கோவா மாநில முதலமைச்சர் அவர்கள், கோவா ஒலிம்பிக் சங்கத் தலைவரும்,

மாண்புமிகு போக்குவரத்துறை அமைச்சருமான திரு சுபாஷ் சிஷோஸ்கர், மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு சோம்நாத் ஜார்கர் ஆகியோரிடம் வழங்கினார். பின்னர் அமைச்சர்கள் கோவா மாநில கால்பந்து விளையாட்டு வீரர் திரு பிரம்மணர் சன் கோல்கரிடம் வழங்கினார்கள். சுடர் தொடரோட்டமாய்ப் புறப்பட்டது.

தொடரோட்டத்தின் முடிவில் மாண்புமிகு கோவா மாநில விளையாட்டுத்துறை அமைச்சர் டாக்டர் வில்ப்ரட் மெஸ்கிடா, சுடரை மரபுப்படி இந்திய ஒலிம்பிக் சங்க உறுப்பினர் திரு ஞானவேல் அவர்களிடம் வழங்கினார். அவர்கள் இச் சுடரைப் பெற்றுக் கொண்டு, தொடர்ந்து பயணம் மேற்கொள்ள தமிழக ஒலிம்பிக் சங்கப் பிரதிநிதி திரு சண்முகம் அவர்களிடம் வழங்கினார். பின் புதுவை நகரை நோக்கிப் புறப்பட்டது சுடர்.

திருவனந்தபுரம்

14.12.95 அன்று தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் சுடர் திருவனந்தபுரம் வந்தடைந்தது.

திருவனந்தபுரம் கிழக்குக் கோட்டை, பத்மநாப சுவாமி கோயில் அருகிலிருந்து சுடரை, திருவனந்தபுரம் நகர மேயர் திரு சிவன்குட்டி, விளையாட்டு வீரர் திரு சுபாஷ் ஜார்ஜ் அவர்களிடமிருந்து பெற்றுக் கொண்டார்.

பின்னர் சென்ட்ரல் ஸ்டேடியம் அருகே நடைபெற்ற விழாவில், மாண்புமிகு கேரள மாநில முதல்வர் திரு ஏ.கே. அந்தோணி அவர்கள் இச் சுடரைப் பெற்றுக் கொண்டார். பின்னர் சுடரோட்டப் பயணத்தின் நிறைவாக சென்னை மாநகரை சுடர் வந்தடையும் வகையில், மாண்புமிகு புதுவை அரசு கல்வி அமைச்சர் அவர்கள் கொடி அசைத்துச் சுடரோட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

பாண்டிச்சேரி

இந்திய மண்ணின் அனைத்து மாநிலத் தலைநகரங்களிலும் உலா வந்த சுடர், சென்னை திரும்பு முன்னதாக புதுவை யூனியன் பகுதிக்கு **16.12.95** அன்று வந்து சேர்ந்தது.

மாண்புமிகு புதுவை அரசு கல்வி அமைச்சர் திரு ப. ஆனந்த பாஸ்கரன், திருவனந்தபுரத்திலிருந்து வந்த சுடரைப் பெற்றுக் கொண்டார்.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களின் சிந்தனை ஓட்டத்தால், இந்திய மண்ணெங்கும் வலம் வந்து, ஒளிவீசிய பெருமைமிகு தெற்காசிய நாடுகளின் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிச் சுடரோட்டம் *17.12.95* அன்று சென்னையை மீண்டும் வந்தடைந்தது. விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் நாட்களில் மட்டுமல்லாமல், இனி வரும் காலங்கள் முழுவதும் இந்திய மண்ணெங்கும் இச் சுடரின் ஒளிவீசும் என்பதில் ஐயமில்லை. ★

ஆசிரியரும் வெளியிடுபவரும் : தி. சண்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம் அரசினர் தோட்டம், சென்னை ... தொலைபேசி எண் : 536926, 536927

ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
... கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ-ஆப்டெக்ஸ்.



PEACE•PERSEVERANCE•PROGRESS
SAASF

தமிழரசு

1996
தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
எழும்பூர், சென்னை-600 008

இந்த இதழில்...



துரித ரயில் திட்டம் ஒரு சரித்திரச் சிறப்பு வைபவம்
- மாண்புமிகு முதல்வர் உரை 9

நிலைத்துப் புகழ் பரப்பும் விளையாட்டரங்கங்கள் 2

'கலைமாமணி' விருது வழங்கும் விழா 26

வியக்க வைக்கும் விளையாட்டு நகரம் 39

தங்கமாய் வென்று குவிப்போம்! 41

தெற்காசிய விளையாட்டுப் போட்டி: தயாராகவுள்ள பதக்கங்கள் ... 47

தடகளப் போட்டி - இந்திய அணி 48

மாநிலத் திரைப்பட விருது வழங்கும் விழா 17

இதழ்தோறும் ஓர் இனிய குறள்:

அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு. (32)

★ ஒருவருடைய வாழ்க்கைக்கு அறத்தைவிட நன்மையானதும் இல்லை; அறத்தைப் போற்றாமல் மறப்பதை விடக் கெடுதி யானதும் இல்லை.

தமிழரசு

திருவள்ளுவராண்டு - 2026

கார்த்திகைத் திங்கள் : 15

மலர்: 26 இதழ்: 11

1.12.1995

விலை ரூபாய் : 3

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்களின்...

தமிழகத்து விளையாட்டுத் துறை வளர்ச்சியின் விடிவெள்ளி, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய முயற்சியால் இந்தியத் துணைக் கண்டத்திற்கு சர்வதேச அரங்கில் புகழ்பரப்பும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை சென்னையில் டிசம்பர் மாதம்

நிலைத்துப் புகழ்பரப்பும் விளையாட்டரங்கங்கள்

18ஆம் நாள் முதல் 10 நாட்களுக்கு சிறப்பான முறையில் நடத்திட அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் தனிப்பட்ட முறையில் கவனம் செலுத்தி செய்து வருகிறார்.

விளையாட்டு வீரர்கள் சர்வதேச அரங்கில் பங்கேற்க வேண்டுமென்றால், அவர்களுக்குத் திறமையும் முயற்சியும் மட்டுமே இருந்தால் போதாது. அவர்களுக்குப் பயிற்சி மேற்கொள்ள சர்வதேசத் தரமுள்ள விளையாட்டு அரங்கங்களும், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளும் அமைத்து நடத்தப்பட வேண்டும் என்று விரும்பிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், இதுவரை தமிழ்நாட்டில் எந்த முதல்வரும் செய்யாத விளையாட்டுத்துறை வளர்ச்சிப் பணிகளை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு சரித்திரச் சாதனையாகச் செய்து காட்டி வருகிறார். அவருடைய முயற்சியின் முதற் பயனாக, சென்னையில் அனைவரும் மகிழத்தக்க ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கை, ஏழே மாதத்தில் ரூ.44 கோடி மதிப்பீட்டில் அமைத்து, அங்கே சர்வதேச தடகளப் போட்டிகளையும், சர்வதேசக் கால்

...தொலைநோக்குப் பார்வை



பந்தாட்டப் போட்டிகளையும், அனைவரும் வியக்கும் வண்ணம் வெகு சிறப்பாக நடத்திக் காட்டினார். அந்த வெற்றிப் பாதையின் தொடர்ச்சியாகத் தற்போது ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுவ்தற்காகவும், தமிழ் நாட்டு வீரர் வீராங்கனைகள் சர்வதேசத் தரத்தில் பயிற்சிப் பெறுவதற்காகவும், சர்வதேசத் தரத்தில் ஏழு புதிய விளையாட்டரங்கங்களையும், ஒலிம்பிக் விளையாட்டுகளின்போது அமைக்கப்படுகின்ற விளையாட்டுக் கிராமத்தையும் கிட்டத்தட்ட ரூ.175 கோடி மதிப்பீட்டில் அமைத்துள்ளார்.

தமிழ்நாட்டு வரலாற்றில் ஒளிவீசும் தஞ்சைப் பெரிய கோவிலை அமைத்த இராஜராஜ சோழன் புகழைப் போலவும், கற்கோயில்கள் அமைத்த, மகேந்திரப் பல்லவன் புகழைப் போலவும், மதுரையிலே சிறப்புச் செய்யும் மீனாட்சியம்மன் திருக்கோயிலை அமைத்த நாயக்கர்கள் புகழைப்போலவும் தமிழக வரலாற்றில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் புகழை என்றென்றும் நிலைத்துப் பாட இந்த விளையாட்டு அரங்கங்கள் அமைந்து அங்கே பயிற்சிப் பெறும் விளையாட்டு வீரர் வீராங்கனைகள் சர்வதேச அரங்கில் புகழ்க்கொடி நாட்டுவதற்குப் பெரும் பணியாற்றும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

அந்த விளையாட்டரங்கங்களுள் புதியதாக அமைக்கப்பட்ட ஏழு அரங்கங்களைப் பற்றிய செய்திகளை இக்கட்டுரை தரமுயலுகிறது.

44 கோடி ரூ. மதிப்பில் நேரு அரங்கம்
40 ஆயிரம் பேர் இங்கே அமர்ந்து ரசிக்கலாம்

ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம்

இரண்டாண்டுகளுக்கு முன்னர் சர்வதேசத் தரத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் அரிய முயற்சியால் ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம் சென்னை மாநகராட்சிக் கட்டடத்தின் பின்புறம் அமைக்கப்பட்டுள்ளது. சர்வதேசத் தரத்திலான இவ்விளையாட்டரங்கத்தை ஏழே மாதத்திற்குள் ரூபாய் 44 கோடி மதிப்பீட்டில் விளையாட்டு வல்லுநர்கள் பாராட்டும் விதத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அமைத்துள்ளார். இதில் கால்பந்து விளையாடுவதற்கேற்ற புல்தளமும், தடகளப் போட்டிகள் நடத்துவதற்கேற்ற செயற்கை இழையூட்டப்பட்ட

ஓடுதளமும் சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ளன.

நாற்பதாயிரம் பார்வையாளர்கள் பார்க்கக்கூடிய வகையில் இருக்கை வசதிகள் இடம்பெற்றுள்ளன. இரவு நேரத்திலும் தெள்ளத்தெளிவாகக் காணக்கூடிய வகையில் சிறப்பு ஒளி வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்வரங்கில் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்கும் தனித்தனி அறைகள், நடுவர்கள் தங்கும் அறை, உடை மாற்றும் அறைகள், முதலுதவி அறை, போட்டியை நடத்தும் இயக்குநருக்கான அறை, முக்கியப் பிரமுகர்களுக்கான அறை, செய்தியாளர்கள் அறை, தொலைபேசி, கணிணி அறை, மாநாட்டு அறை, நேர்முக வர்ணனையாளர் அறை, தொலைக்காட்சி ஒலி,ஒளி பரப்பும் அறை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

இவ்விளையாட்டரங்கில் ஏழாவது தெற்காசிய போட்டிகளின் போது தடகளப் போட்டிகள், டிசம்பர் 20 முதல் 24 வரையிலும், கால் பந்து போட்டிகள் டிசம்பர் 19 முதல் 27 வரையிலும் நடைபெற உள்ளன. தடகளப் போட்டிகளில் 240 வீரர், வீராங்கனைகளும், கால்பந்து போட்டிகளில் 133 வீராங்கனைகளும் பங்கு கொள்வார்கள் என எதிர்பார்க்கப் படுகிறது. இது தவிர, ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் தொடக்க விழா மற்றும் நிறைவு விழாக்கள் நடைபெறவுள்ளன.

டென்னிஸ் விளையாட்டரங்கம்

நுங்கம்பாக்கத்தில் வள்ளுவர் கோட்டத்திற்கருகே, 9.89 ஏக்கர் நிலப்பரப்பில் ரூ.8.5 கோடி செலவில் சர்வதேசத் தரத்தில் டென்னிஸ் விளையாட்டரங்கம் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வளாகத்தில் மொத்தம் ஏழு விளையாட்டுத் தளங்கள் உள்ளன. அவற்றுள் ஒன்று மையமானதும் மற்ற ஆறும் பயிற்சிக்காகவும் அமைக்கப் பட்டுள்ளன. எல்லாவற்றிலும் சர்வதேசத் தரத்திலான டெக்கோடர்ப் (Deco-Turf) அமைக்கப் பட்டுள்ளது. மையத் தளத்தில் பார்வையாளர்களுக்காக 5000 இருக்கைகளும், மற்ற தளங்களில் 2000 இருக்கைகளும் அமைக்கப் பட்டுள்ளன.

அரங்கினுள் மின்னணு அறிவிப்பு பலகை, பார்வையாளர்கள் எங்கிருந்தாலும் தடையின்றிப் பார்க்கும் படியான எண்கோண வடிவமைப்பு, விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்கும் தனித்தனி அறைகள், நடுவர்கள் தங்கும் அறை, உடை மாற்றும் அறைகள், முதலுதவி அறை, போட்டியை நடத்தும் இயக்குநருக்கான அறை, முக்கியப் பிரமுகர்களுக்கான அறை, செய்தியாளர்கள் அறை, தொலைபேசி, கணிணி அறை, மாநாட்டு அறை, நேர்முக வர்ணனையாளர் அறை, தொலைக்காட்சி ஒலி, ஒளி பரப்பும் அறை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன. எதிரொலிக்காத ஒலி பெருக்கிகள், பார்வையாளர்களின் பார்வைக்குத் தடை செய்யாத உயரத்தில் அமைக்கப்

உன்னத ஆட்டக்காரர்களை உருவாக்கும் தளம்
உலகத்தரமுடைய டென்னிஸ் ஆட்ட அரங்கம்





சீராட்டித் தமிழன்னை பெற்ற மக்கள்
நீர் ஆட்டம் ஆடிடவே நிறைவான நீச்சல் அரங்கம்

பட்டுள்ளன. பாதுகாப்புக்கெனக் காவல் துறையினருக்காகத் தனியே ஒரு பாதுகாப்பு அறையும் அமைக்கப்பட்டுள்ளது.

சர்வதேசத் தரத்தில் அமைக்கப்பட்டுள்ள இந்த டென்னிஸ் விளையாட்டரங்கத்தில் அமெரிக்க ஓபன் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் நடத்த முடியும் என்று, வல்லுநர்கள் தெரிவித்துள்ளார்கள். இந்த விளையாட்டரங்கத்தில் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் டிசம்பர் 19 முதல் 23 முடிய டென்னிஸ் போட்டிகள் நடைபெறவுள்ளன.

வேளச்சேரி நீச்சல் குள விளையாட்டரங்கம்

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் நீச்சல் விளையாட்டு போட்டி நடைபெற சிறப்புமிகு வசதியாகவும், எதிர்காலத்தில் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் நீச்சலில் பயிற்சி பெற மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் சர்வதேசத் தரத்தில் 12 கோடி ரூபாய் செலவில் 5 ஏக்கர் நிலப்பரப்பில் குதிரைப் பந்தய

மைதானத்திற்கருகில் நீச்சல் விளையாட்டரங்கம்வேளச்சேரியில் கட்டப்பட்டுள்ளது.

இவ்விளையாட்டரங்கில், மூன்று நீச்சல் குளங்கள் உள்ளன. அதில் ஒன்று 50 மீட்டர் நீளமும், 25 மீட்டர் அகலமும் 2 மீட்டர் ஆழமும் கொண்டுள்ளது. இன்னொன்று நீருக்குள் உயரத்திலிருந்து பாய்ந்து குதிப்பதற்கு 18 மீ.நீளமும், 25 மீ.அகலமும், 5.5 மீ. ஆழமும் மற்றொன்று 20 மீ. நீளமும், 25 மீ. அகலமும், 2மீ. ஆழமும் கொண்டு அமைக்கப் பட்டுள்ளன. இந்த மூன்று குளங்களுமே சர்வதேச நீச்சல் சங்க (FINA Standard) விதிகளுக்கேற்ப கட்டப்பட்டுள்ளன.

ஒலிம்பிக் போட்டிகளில் இடம் பெறுகின்ற சுவிட்சர்லாந்து நாட்டைச் சேர்ந்த ஓமேகா நிறுவனத்தால் ரூபாய் 30 லட்சம் மதிப்பீட்டில் மின்னணு அறிவிப்புப் பலகை அமைக்கப் பட்டுள்ளது. இது நீச்சல் வீரர்கள் கரையைத் தொட்ட மாத்திரத்திலேயே போட்டியின் முடிவைத் தெரிவித்துவிடும்.

இதுதவிர, நீருக்கடியில் ஒளி சிந்தும் மின் விளக்குகளும், நீருக்கடியிலிருந்து புகைப்பட மெடுக்கும் வசதியும், ஆண் பெண் விளையாட்டு வீரர்களுக்கு, தனித் தனியான அறைகளும், அவர்களுக்கெனத் தனித்தனி நுழைவு வாயில்களும், ஓய்வு அறைகளும், முதலுதவி அறைகளும் பயிற்சியாளர், நடுவர், முக்கிய விருந்தினர்கள், செய்தியாளர்களுக்கான தனி அறையும், தொலைத் தொடர்பு வசதிகளும், தொலைக்காட்சி மற்றும் வானொலிகளுக்கான அறைகளும், உணவு அறைகளும் கட்டப்பட்டுள்ளன. பார்வையாளர்கள் அமர்ந்து வசதியாகப் பார்க்கும் வண்ணம் 4500 இருக்கைகள் அமைக்கப் பட்டுள்ளன.

சிறப்பு வசதி

சிறப்பாக மேல்தளங்களுக்குச் சென்றுவர மின்தூக்கி (Lift) வசதிகள் செய்யப் பட்டுள்ளன. மூன்று நீச்சல் குளங்களிலும் தினமும் சுத்திகரிக்கப்பட்டு ஆக்ஸிஜன்

ஏற்றப்பட்ட பாலாற்றுத்தண்ணீர் நிரப்பப்படும். சர்வதேசத் தரத்தில் தென்னிந்தியாவில் உள்ள ஒரே நீச்சல் குளம் இதுதான் என்று நீச்சல் வீரர்கள் குறிப்பிட்டுள்ளார்கள். ஏழாவது தெற்காசிய விளையாட்டின் போது நீச்சல் போட்டிகள் டிசம்பர் 20 முதல் 24 முடிய நடக்கிறது. 53 வீரர்கள் நீச்சல் போட்டிகளில் கலந்து கொள்கிறார்கள். இந்திய வீரர்களான செபாஸ்டியன் சேவியர் மற்றும் அபிஜித் ஆகியோர் இப்போட்டிகளில் கலந்துகொள்ளும் நம்பிக்கை நட்சத்திரங்களாவார்கள்.

ஹாக்கி விளையாட்டரங்கம்

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றில் முதன்முறையாக ஹாக்கி விளையாட்டு, இடம் பெறுகின்றது. சர்வதேசத் தரத்தில் ஹாக்கி விளையாட்டரங்கம் சென்னையில் இல்லை. டெல்லி போன்ற பிற இடங்களுக்குச் சென்று ஹாக்கி விளையாட்டுப் போட்டியை நடத்தலாம் என்று தெற்காசிய விளையாட்டுப் போட்டி நடத்தும் குழுவினர் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் சொன்னபோது, உடனடியாக சென்னைக்கு சர்வதேசத் தரத்தில் ஒரு விளையாட்டரங்கம் அமைக்கப்படவேண்டும் எனத் திட்டமிட்டு அதனைச் செயல் படுத்திக் காட்டியுள்ளார் மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்.

எழும்பூரிலுள்ள மேயர் ராதாகிருஷ்ணன் அரங்கில் சர்வதேசத் தரத்தில் புதிய ஹாக்கி விளையாட்டரங்கம் 8.8 ஏக்கர் நிலப்பரப்பில் ரூபாய் 11 கோடி மதிப்பீட்டில் 5500 பார்வையாளர்கள் அமர்ந்து பார்க்கக்கூடிய வசதியுடன் அமைக்கப்பட்டுள்ளது. இந்த அரங்கத்தை ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த தொழில் நுட்ப அறிஞர்களின் நேரடிப் பார்வையில் தமிழ்நாட்டுக் கட்டடக் கலைஞர்கள் சர்வதேசத் தரத்தில் கட்டி முடித்துள்ளார்கள்.

இவ்வரங்கில் அஸ்ட்ரோ டர்ப் என்று அழைக்கப்படும் செயற்கைப் புல்தரை அமைக்கப் பட்டுள்ளது. இதற்காக தரைக்குள் இருக்கும் நீரை உறிஞ்சி, கருங்கல் சல்லி பரப்பி, அல்லும் பகலும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பணியில் ஈடுபட்டு கட்டி முடித்துள்ளார்கள்.



தேக்கிய திறமைகளைக் காட்டியாடும் ஆக்கி ஆட்டத்திற்கான அழகு அரங்கம்

இவ்விளையாட்டரங்கில் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்கும் தனித்தனி அறைகள், நடுவர்கள் தங்கும் அறை, உடை மாற்றும் அறைகள், முதலுதவி அறை, போட்டியை நடத்தும் இயக்குநருக்கான அறை, முக்கியப் பிரமுகர்களுக் கான அறை, செய்தியாளர்கள் அறை, தொலைபேசி, கணிணி அறை, மாநாட்டு அறை, நேர்முக வர்ணனையாளர் அறை, தொலைக்காட்சி ஒலி,ஒளி பரப்பும் அறை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

உள்ளுறை விளையாட்டரங்கம்

சென்னை பழைய மிருகக் காட்சி சாலை அமைந்துள்ள இடத்தில் சர்வ தேசத்தரத்தில் 25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 10000 பேர் கண்டுகளிக்கக் கூடிய உள்ளுறை விளையாட்டு அரங்கம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது.



முழுக்க குளிர்சாதன வசதி கொண்ட இவ்வரங்கத்தின் தரைத்தளம் வழவழப்பாக்கப்பட்ட தேக்கு மரத்தாலானது. இத்தளம் 59 மீ.நீளமும், 37 மீ. அகலமும் கொண்டுள்ளது. இரவைப் பகலாக்கும் ஒளி விளக்குகள் பொருத்தப்பட்டுள்ளன. இவ்வரங்கில் சர்வதேச உள்ளுறை விளையாட்டுகள் நடத்துவதற்கான அனைத்து வசதிகளும் ஒருங்கே அமைக்கப்பட்டுள்ளன. இவ்வரங்கில் விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்கும் தனித்தனி அறைகள், நடுவர்கள் தங்கும் அறை, உடை மாற்றும் அறைகள், முதலுதவி அறை, போட்டியை நடத்தும் இயக்குநருக்கான அறை, முக்கியப் பிரமுகர்களுக்கான அறை, செய்தியாளர்கள் அறை, தொலைபேசி, கணிணி அறை, மாநாட்டு அறை, நேர்முக வர்ணனையாளர் அறை, தொலைக்காட்சி ஒலி,ஒளி பரப்பும் அறை போன்றவை அமைக்கப்பட்டுள்ளன.

வீராபுரம், அலமாதி துப்பாக்கிச் சுடும் தளங்கள்

ஆவடியை அடுத்த வீராபுரத்தில் ரூ.1.5 கோடி மதிப்பீட்டில் துப்பாக்கி சுடும் போட்டிக்கான தளம் அமைக்கப் பட்டுள்ளது. மத்திய ஆயுதப் படையினரின் தொழில்நுட்ப உதவியோடு சர்வதேசத் தரத்தில் இந்தத் தளம் அமைக்கப் பட்டுள்ளது.

இந்தியாவிலுள்ள துப்பாக்கிச் சுடும் போட்டிக்கான தளங்களில் இரண்டாவது இடத்தைப் பெறுவதாக விளையாட்டு ஆர்வலர்களால் கருதப்படுகிறது.

புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப்பந்தாட்ட - உள்ளுறை விளையாட்டரங்கம்

கீழ்ப்பாக்கத்தில் புது ஆவடிச் சாலைக்கருகில் ஒரு ஏக்கர் பரப்பளவில் சர்வதேசத் தரத்தில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா கூடைப் பந்தாட்ட உள்ளுறை விளையாட்டரங்கம் அமைக்கப் பட்டுள்ளது. இவ்விளையாட்டரங்கம் 26.11.93 அன்று திறந்து வைக்கப்பட்டது.

5000 பேர் அமர்ந்து பார்க்கக் கூடிய வசதியும், 10000 சதுர அடி பரப்பில் சர்வ தேசத் தரத்தில் வழவழப்பாக்கப் பட்ட உயர்ரகத் தேக்குமரத்தாலான ஆடுகளமும் உள்ளன.

ஏற்றவும், இறக்கவும் முன்னரும், பின்னரும் நகர்த்தக்கூடிய வசதி கொண்ட கூடைப்பந்தாட்டப் போர்டு, 100 விளையாட்டு வீரர்கள் தங்கும் அளவுக்குப் படுக்கை வசதி கொண்ட கூடங்கள் உள்ளன. அரங்கில் பயிற்சிப் பெறுவதற்காக பக்கவாட்டில் இரண்டு சிமெண்ட்டாலான ஆடு தளங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

இரவில் விளையாட்டுகள் நடத்துவதற்கு வசதியான ஒளி வசதி செய்யப்பட்டுள்ளது. இவ்விளையாட்டரங்கத்தில் ஏழாவது விளையாட்டு தெற்காசிய போட்டியின்போது கூடைப்பந்து டிசம்பர் 19 முதல் 21 முடிய

நடைபெறவுள்ளது. அதேபோல், கைப்பந்து போட்டி டிசம்பர் 22 முதல் 26 முடிய நடைபெற உள்ளது.

நேரு பூங்கா விளையாட்டரங்கம்

பூந்தமல்லி நெடுஞ்சாலையில் அமைந்துள்ள தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத் திற்குப்பின்னால் நேரு பூங்கா விளையாட்டரங்கம் அமைந் துள்ளது. இங்கு தற்காலிகமாக, கிட்டத்தட்ட 8000 பார்வை யாளர்கள் பார்க்கும் அளவிற்குக் கேலரி வசதியும், உடனுக்குடன் போட்டியின் முடிவுகளை தெரியப்படுத்தும் ஓமேகா மின்னணு அறிவிப்புப் பலகையும் சர்வதேசத் தரத்திலான கபடிப் போட்டிக்கான ஆடுகளமும் உள்ளன. இரவு நேரத்தில் ஆட்டங்களைக் கண்டு களிக்கும் வண்ணம் சிறப்பான ஒளி வசதி செய்யப்பட்டுள்ளது. இவ் விளையாட்டரங்கில் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி – கபடிப் போட்டிகள், டிசம்பர் 19 முதல் 22 முடிய நடைபெறவுள்ளது. இதுதவிர, காட்சி விளையாட்டுகளான கோகோ டிசம்பர் 23 முதல் 24 முடியவும், சிலம்பம் போட்டிகள் டிசம்பர் 25 முதல் 26 முடியவும், நடைபெறவுள்ளன.

துப்பாக்கி சுடுகின்ற வீரர்களை உருவாக்கும் வீராபுரம் துப்பாக்கி சுடுகின்ற தளம்

இதுதவிர, ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் சிறப்பாக நடைபெற கலை வாணர் அரங்கம், சாந்தோம் மேனிலைப்பள்ளி, ஐஐடிவளாகம், போன்ற அரங்கங்களும் பயன் படுத்தப்படுகின்றன. கலைவாணர் அரங்கத்தில் பளுதூக்கும் போட்டிகள் டிசம்பர் 22 முதல் 26 முடியவும், சாந்தோம் மேனிலை வளாகத்தில் டேபிள் டென்னிஸ் மற்றும் குத்துச் சண்டை போட்டிகளும், ஜுடோ மற்றும் மற்போர் போட்டிகள் ஐஐடிவளாகத்திலும் நடைபெற உள்ளன.

வண்டுகள் போல் பறந்தாடும் ஆட்டமல்ல குண்டுகளைப் பாயவிட்டு வெல்லுகிற ஆட்டம்



மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை பொது மக்கள் கண்டுகளிக்க எல்லா அரங்குகளிலும் இலவச அனுமதி தந்துள்ளார். சர்வதேசத் தரத்தில் நடத்தப்படும் இப்போட்டிகளால் சென்னைக்குப் பல சர்வதேசத் தர விளையாட்டு அரங்கங்கள் கிடைப்பதோடு, சென்னை நகர மக்களுக்கும், சர்வதேச விளையாட்டுப் போட்டிகளைக் காணுகின்ற வசதியையும் தமிழக விளையாட்டுத்துறையின் விடி வெள்ளியாக திகழும் மாண்புமிகு புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் அளித்துள்ளார்கள்.

– மா. அசோகன்

துரித ரயில் திட்டம் ஒரு சரித்திரச் சிறப்பு வைபவம்

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் 16.11.1995 அன்று துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தை (MRTS) துவக்கி வைத்து ஆற்றிய சிறப்புரை

தொன்மையான வரலாற்றையும், பல்வேறு சிறப்பியல்புகளையும் தன்னகத்தே கொண்ட சென்னை மாநகரின் எழிலுக்கு, மேலும் எழில் சேர்க்க 'எழில்மிகு சென்னை 2000' என்கின்ற சீரிய திட்டத்தை 1,250 கோடி ரூபாய் செலவில் எங்கள் அரசு முனைப்புடன் செயல் படுத்தி வருகின்ற இந்த வேளையில், சென்னை மாநகரின் சிறப்பிற்கு அணி சேர்க்கும் வகையில், இந்தியத் துணைக் கண்டத்தின் முதல் துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தினை, இன்று தமிழக மக்களுக்கு அர்ப்பணித்து வைப்பதில் நான் பெரு மகிழ்ச்சியும் பேருவகையும் அடைகிறேன்.

இந்தியா சுதந்திரம் அடைந்த போது, 7 இலட்சம் மக்கள் மட்டுமே, வசித்த இந்த நகரம், அரை நூற்றாண்டுக்கால கட்டத்தில், 50 இலட்சம் மக்கள் வசிக்கும், ஒரு மாபெரும் மாநகரமாக விரிவடைந்துள்ளது. பெருகி வரும் மக்கள் தொகை, போக்குவரத்துத் தேவை சுற்றுப்புறச் சூழல் மேம்பாடு, சுகாதாரமான வாழ்க்கை போன்ற பிரச்சினைகள் தலை தூக்கத் தொடங்கியதால் தான்,

அவற்றைச் சமாளிக்க சென்னை நகருக்கு மேலும் அழகு சேர்க்க, "எழில்மிகு சென்னை 2000 " என்ற திட்டத்தை எங்கள் அரசு செயல்படுத்தி வருகின்றது. கடந்த நான்காண்டுகளாகச் சென்னை நகரம், ஒரு புதியப் பொலிவைப் பெற்று வருவதை ஈடு செய்யும் வண்ணம், சென்னைக் கடற்கரை ரயில் நிலையத்திலிருந்து லஸ் முனை வரையில், 8.55 கிலோ மீட்டர் தூரத்திற்குத் துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் முதல் கட்டம், இன்று துவக்கி வைக்கப்பட்டிருப்பது ஏற்புடைய தொன்றாகும்.

1983-84-ஆம் ஆண்டில், மத்திய திட்டக் குழுவின் அங்கீகாரமும், ரயில்வே வாரியத்தின் ஒப்புதலும் எப்போது இத்திட்டத்திற்குக் கிடைத்ததோ, அன்றிலிருந்து தமிழக அரசு, இத்திட்டச் செயலாக்கத்தின் ஒருங்கிணைப் பிற்கு எல்லா உதவிகளையும் ஆர்வத்துடன் வழங்கி வந்துள்ளது என்பதைச் சுட்டிக் காட்ட கடமைப்பட்டுள்ளேன்.

இத்திட்டத்தைச் செயல் படுத்தத் தேவையான நிலத்தை, இலவசமாக வழங்க மாநில அரசு துவக்கத்திலேயே தனது ஒப்புதலை அளித்திருந்தது. அதன்படி முதல் கட்டப் பணிக்கு அரசு நிலமும், தனியார் நிலமும் சேர்த்து 20.22 எக்டேர் நிலம், தேவைப்படுவதாகக் கணக்கெடுக்கப்பட்டது. கிட்டத் தட்ட 50 கோடி ரூபாய் மதிப் புள்ள இந்த நிலப்பரப்பில் இதுவரை 19.68 எக்டேர் நிலம் முழுமையாக இத்திட்டத்திற்கு என வழங்கப்பட்டுள்ளது என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இன்று 4.68 கிலோ மீட்டர் நீளத்திற்கு, சேப்பாக்கம் ரயில் நிலையம் வரை துரித ரயில் போக்குவரத்து துவக்கி வைக்கப்படும் நிகழ்ச்சி நிச்சயமாக ஒரு சரித்திரச் சிறப்பு மிக்க வைபவம் என்பதில் சந்தேகம் இல்லை.

பல்முனை விரிவாக்கத்தினால் சென்னை போன்ற பெருநகரங்களில், நகர்ப்புற நிலங்களின் மதிப்பு நாளுக்கு நாள் உயர்ந்து வருகின்றது. இந்தச் சூழ்நிலையில் இது போன்ற திட்டங்களைச் செயல்படுத்த, நிலம் கிடைப்பது அரிதாகி வருகின்றது. எனவே தான் இந்தத் துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தைச் செயல்படுத்தத் தேவையான அரசு நிலத்தை அளித்ததோடு, தனியார் நிலத்திற்கும் நஷ்டஈடு வழங்கி கையகப்படுத்தி இலவசமாகத் தமிழக அரசு அளித்துள்ளது.

அரசு நிலங்களில் குடியிருந்த மக்களுக்கு மாற்றுக் குடியிருப்பு களுக்கு ஏற்பாடு செய்யும் சமுதாயப் பிரச்சினைகள் நிறைந்த மாபெரும் பொறுப் பையும் தமிழக அரசு மன முவந்து ஏற்றுக்கொண்டதைச் சுட்டிக்காட்ட நான் கடமைப் பட்டுள்ளேன்.

● முதல் அட்டை

சொல்லும்

செய்தி:

Madras Metropolitan Development Authority - அதாவது சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் இத் திட்டத்தைச் செயல்படுத்தும் ஒருங்கிணைப்புப் பணிகளை இதுவரை மேற்கொண்டு வந்துள்ளது. துரித ரயில் போக்குவரத்துத் திட்டத்தின் கீழ் ரயில்வே நிலையங்களை வடிவமைப்பதற்குக் கட்டடக் கலை நிபுணர்கள் மற்றும் ஆலோசகர்களின் சேவையையும் இந்தக் குழுமம் ரயில்வே நிர்வாகத்திற்கு வழங்கியதையும் நினைவுகூர விரும்புகிறேன்.

ஆகவே, என்னால் தான் இந்தத் திட்டம் நிறைவேறியது என்று ஒருவர் கூறுவது ஏற்புடையது அல்ல. ஒரு வருடைய சொந்த முயற்சி யினால் இந்தத்திட்டம் நிறை வேறவில்லை. அப்படி உரிமை கொண்டாடுவது சற்றும் ஏற்புடையதாகாது. தமிழக அரசு வழங்கிய ஒத்துழைப்பினால் தான் இந்தத் திட்டம் இன்று நிறைவேறியுள்ளது என்பதை நினைவுகூரக் கடமைப்பட்டிருக் கிறேன். நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி இந்தத் திட்டத்திற்குத் தேவை என்று கணக்கிடப்பட்ட 20.22 எக்டேர் அரசு நிலத்தில் 509 கோடி ரூபாய் மதிப்புள்ள 19.68 எக்டேர் நிலம் ரயில்வே துறைக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆகவே மீதமிருப்பது 0.54 எக்டேர் நிலம் தான். 0.54 எக்டேர் என்பது மிகச் சிறிய அளவிலான நிலப்பரப்பு. அதற்குத் தேவையான நிதியும் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே, நிலத்தினால் இந்தத் திட்டத்திற்கு எந்த விதத்திலும் காலத் தாமதம் ஏற்படவில்லை என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். At no point of time the progress of project was affected for not handing over the land in time.

"ஆகவே, நிலத்தினால் இந்தத் திட்டத்திற்கு எந்த விதத்திலும் காலத் தாமதம் ஏற்படவில்லை"

- புரட்சித்தலைவி

மேலும், இந்த விழாவிற்கு வரலாமா, வேண்டாமா, வந்திருக்க வேண்டுமா என்று சிலர் நினைக்கிறார்கள். சிலர் இந்த விழாவிற்கு வரவேண்டாம் என்று முடிவு செய்து விட்டார்கள். ஆனால், யார் வந்தாலும், வராவிட்டாலும் இத்திட்டம் நின்று விடப் போவதில்லை. இந்தத் திட்டம் மக்களுக்காக, பொதுமக்களின் உபயோகத்திற்கு உருவாக்கப் பட்ட ஒரு மாபெரும் திட்டம். இம்மாபெரும் திட்டம் நிறைவேற்றப்பட்டுத் துவக்கி வைக்கப்படும்போது, அதில் மக்கள் மீது உண்மையான அக்கறைக் கொண்டவர்கள் நிச்சயமாகக் கலந்து கொள்ள வேண்டும். இத்தகைய விழாக் களில் கலந்து கொள்வதில் தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் பாராட்டுவது என்பது தேசிய உணர்வு அற்றவர்களுக்குத் தான் பொருந்தும் என்று சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். அதாவது தேசிய உணர்வு இருந்தால், உண்மையான தேசிய வாதியாக இருந்தால், மிகப் பெரிய செலவில் ஒரு மகத்தானத் திட்டம் அதிலும் இந்தியாவிற்கே முன்னோடி யான ஒரு திட்டம் முதல் முறையாக இந்தியாவில் நிறை வேற்றப்படும்போது அவசியம் இதில் பொது நன்மையில் அக்கறை உள்ளவர்கள் கலந்து கொள்ளவேண்டும் அப்படி கலந்து கொள்ளவில்லை என்றால் உண்மையான அக்கறை மக்கள் மீது இல்லை என்று தான் நாம் புரிந்து கொள்ளவேண்டும்.

இந்தத் துரித ரயில் போக்கு வரத்தை உபயோகப்படுத்தும் மக்கள், இந்த ரயில் நிலையங் களிலிருந்து, பேருந்துகளுக்கு மாறி மாநகருக்குள் செல்வ தற்குத் தேவையான போக்குவ ரத்து வசதியையும், எங்கள் அரசு ஒரு ஒருங்கிணைப்புப் பணி யாகத் திட்டமிட்டு தனது செலவில் நிறைவேற்றி வரு கின்றது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமின்றி, இந்த ரயில்வே நிலையங்கள் அமைந்துள்ள பகுதிகளின் சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுத் திட்டங்களையும் எங்கள் அரசு செயல்படுத்தி வருகின்றது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்னை மாநகரப் போக்குவரத்துத் தேவையைப் பூர்த்தி செய்யும் இந்தத் திட்டத்தை இன்று எனதருமைத் தமிழக மக்களுக்கு அர்ப்பணித்து வைப்பதில் நான் பெருமகிழ்ச்சி அடைகின்றேன். இந்தத் துரித ரயில் போக்குவரத்துத் திட்டத் தின் பயன்கள் சென்னை மாநகர மக்களுக்கு முழுமை யாகச் சென்றடைய வேண்டும் என்றால் இத்திட்டத்தை லஸ் முனையிலிருந்து தரமணி வரை மேலும் 8.5 கிலோமீட்டர் நீளத்திற்கும் விரிவாக்கம் செய்தாக வேண்டும். எனவே இந்த விரிவாக்கத்தை விரைவில் மேற்கொள்ள வேண்டும் என்று மத்திய அரசையும் ரயில்வே நிர்வாகத்தையும் கேட்டுக் கொள்கிறேன்.

உலகிலேயே மிகப் பெரிய ரயில்வே நிறுவனமான இந்திய ரயில்வே துறைக்குப் பொறு பேற்றுச் சீரிய முறையில் செயலாற்றி வரும் மாண்புமிகு மத்திய ரயில்வே இணை அமைச்சர் திரு சுரேஷ் கல்மாடி அவர்கள் தமிழக மக்கள் சார்பாக நான் முன் வைத்தக் கோரிக்கையை ஏற்று இத்திட்டத்தின் அடுத்தடுத்தக் கட்டங்களை மிக விரைவில் செயல்படுத்துவார் என்று நம்புகிறேன்.

As Mr. Suresh Kalmadi himself and during his address we are colleagues in the Rajya Sabha together and I am indeed very happy that Mr. Suresh Kalmadi has assumed charge as Minister of State for Railways, I congratulate him, felicitate him and wish him a very successful career and I express the hope that he will accede the requests I made on behalf of the people of Tamil Nadu.

அவ்வாறு, இரண்டாம் மற்றும் மூன்றாம் கட்ட விரி வாக்கம் மேற்கொள்ளப்பட்டு வில்லிவாக்கம் வரை இத்

ஒய்.எம்.சி.ஏ. உடற்பயிற்சிக் கல்லூரிக்கு முதல்வர் பாராட்டு

சென்னை YMCA உடற்பயிற்சிக் கல்லூரியானது 75 ஆண்டுகள் தனது உயரிய சேவையைத் தமிழகத்திற்கு மட்டுமன்றி, இந்தியாவின் அனைத்து மாநிலங்களுக்கும் அளித்து நமது நாட்டின் முதல்தர உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக் கல்லூரிகளில் ஒன்றாகத் திகழ்ந்து வருவதையொட்டி YMCA கல்லூரியின் முதல்வர் டாக்டர் ராஜசீலி ஜான், கல்லூரிப் பேராசிரியர்கள் மற்றும் மாணவ மாணவியர் அடங்கிய குழு ஒன்று, மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைச் சந்தித்தது.

மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களைச் சந்தித்த இந்தக் குழுவானது. தங்களது சென்னை உடற்பயிற்சிக் கல்லூரியானது கடந்த 75 ஆண்டுக் காலமாகத், தமிழகத்தை விளையாட்டுத் துறையில் முன்னணிக்குக் கொண்டு வரச் செய்திருப்பதோடு, தமிழக இளைய தலைமுறையினர் விளையாட்டுத் துறையின் முக்கியத்துவத்தைப் பரவிடச் செய்து, அரிய சேவை ஆற்றி உள்ளதை YMCA உடற்பயிற்சி கல்லூரியின் முதல் பெண் முதல்வர் டாக்டர் ராஜசீலி ஜான், மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களிடம் எடுத்துக் கூறினார்.

YMCA-ன் வரலாற்றினை கேட்டறிந்த மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழகத்திற்கு YMCA ஆற்றியுள்ள 75 ஆண்டுக்காலச் சேவையினைப் பாராட்டி, தனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களையும், ஆசிகளையும் YMCA முதல்வர், பேராசிரியைகள், மாணவ, மாணவியர் ஆகிய அனைவருக்கும் தெரிவித்துக் கொண்டார்கள். அப்போது, YMCA முதல்வர் கல்லூரி வளர்ச்சிக்காகச் சில கோரிக்கைகளை மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் முன்பு வைத்தார். கோரிக்கைகள் அனைத்தையும் தமிழக அரசு கனிவோடு பரிசீலனை செய்யும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் YMCA கல்லூரிக் குழுவினருக்குத் தெரிவித்தார்.

திட்டத்தை விரிவுபடுத்தத் தேவையான நிலத்தைத் தமிழக அரசு இலவசமாக வழங்கும் என்பதையும் அதற்கான ஒருங்கிணைப்புப் பணிகளை தமிழக அரசு முனைப்புடன் மேற்கொள்ளும் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். அதுமட்டுமின்றி, இந்த விரிவாக்கத்தைக் கருத்தில் கொண்டு Rail India Technical and Economic Services அதாவது, RITES என்ற நிறுவனத்தின் மூலம் பூர்வாங்க ஆய்வுப் பணிகளை மேற்கொண்டு துரித ரயில் பாதைக்கான நிலத்தை அடையாளம் கண்டு அவற்றை இத்திட்டத்திற்காக ஒதுக்கீடு செய்து சென்னைப் பெருநகரத்தின் Master Planகள் தயார் செய்யப்பட்டுள்ளன என்பதையும் இந்த நேரத்தில் சுட்டிக் காட்டுவது ஏற்புடையதாக இருக்கும் என்று கருதுகிறேன். இத்திட்டத்திற்குத் தேவையான அரசு நிலம் மட்டுமின்றி, தனியார் நிலத்தையும் கையகப் படுத்தி ரயில்வே துறைக்கு வழங்க எங்கள் அரசு தயாராக உள்ளது. இத்திட்டப் பணிகளில் அரசு நிலங்களில் வாழும் மக்களுக்கு மாற்றிடம் வழங்கிடவும் இடப் பெயர்ச்சியால் எழும் பிரச்சினைகளை எதிர்கொள்ளவும் திட்டம் தயாராக உள்ளது என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தியாவிலேயே முதன் முதலாக மாநகரங்களில் உயர்வான பகுதிகளில் செல்லும்படி அமைக்கப்பட்ட இந்தத் துரித ரயில் திட்டம் சென்னையின் எழிலுக்கு மேலும் எழிலைச் சேர்க்கும் என்பதிலும்,

சென்னை மாநகரத்தின், மிக முக்கிய Land Mark-களில் ஒன்றாகத் திகழும் என்பதிலும், ஐயமில்லை. இத்திட்டத்தைச் செயல்படுத்தத் தங்களது உழைப்பை நல்கிய தொழில் நுட்ப வல்லுநர்களுக்கும், பொறியாளர்களுக்கும், நிர்வாகிகளுக்கும், தொழிலாளப் பெருமக்களுக்கும் எனது மனமார்ந்த பாராட்டுக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

உயர்வான பகுதிகளில், ரயில் நிலையங்கள் அமைக்கப்படும் போது அப்பகுதியின் கீழ்ப் பகுதிகள் ஆக்கிரமிப்புகளுக்கு உள்ளாகும் அபாயம் உண்டு. எனவே, இந்தப் பகுதிகளின் சுற்றுப்புறச் சூழல் கெடாமல் ஒரு அழகுணர்வுடன் பாதுகாத்துப் பராமரிக்கும் திட்டத்தை (Madras Metropolitan Development Authority) அதாவது சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம் வகுத்துச் செயல்படுத்த வேண்டும் என்று ஆணை பிறப்பித்துள்ளேன் என்பதையும் மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

I wish to point out to the Hon'ble Minister of State for Railways that the Tamil Nadu Government has taken all the necessary steps to clear the remaining land that is necessary for the completion of this project for the final expansion. And the Hon'ble Minister of State for Railways has expressed concern about the encroachments in the lower areas of this project. We have drawn up a Master Plan for clearing the encroachments also and orders have been issued.

போக்குவரத்துத் துறையில் ஒரு விழிப்புணர்ச்சி பெற்ற மாநிலம் தமிழகம் என்பதையும் மற்ற மாநிலங்களைவிடத் தமிழகத்தில் உள்ள பேருந்துகளும் சாலை வசதிகளும் சிறப்பாக அமைந்துள்ளதையும் எவரும் மறுக்க முடியாது. 1991-ஆம் ஆண்டு சென்னை மாநகரத்தில் 2,296 பேருந்துகளும், மாநிலத்தின் இதரப் பகுதிகளில் 11,190 பேருந்துகளும் இயங்கிக் கொண்டு இருந்தன. ஆனால், இன்றைய அளவில், சென்னை மாநகரத்தில் மட்டும் 2,580 பேருந்துகளும், மாநிலத்தின் இதரப் பகுதிகளில் 13,278 பேருந்துகளும் ஆக மொத்தம் 15,858 பேருந்துகள் இயங்கி வருகின்றன. போக்குவரத்து மேம்பாட்டில் தமிழக அரசு மேற்கொண்டுள்ள ஈடுபாட்டை, இந்தப் புள்ளி விவரங்கள் விளக்கும் என்று நம்புகிறேன்.

சாலைப் போக்குவரத்தைப் பொருத்தவரையில் டீசல் விலை உயர்வு பொருட்களின் விலை உயர்வு ஊழியர்களின் சம்பள உயர்வு லாபம் ஈட்டாத பகுதிகளில் பேருந்துகள் இயக்கம் என்று பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி இருந்தபோதிலும் பேருந்துகளை ஏழை எளிய மக்கள் மிக அதிகமாக உபயோகப்படுத்துவதைக் கருத்தில் கொண்டு, அவர்கள் பாதிக்கப்படாத வகையில் கட்டண உயர்வை தவிர்த்து வருகின்றோம். எனவே, இந்தத் துரித ரயில் போக்குவரத்தினை ஏழை எளிய மக்கள் கூடுதலாகப் பயன்படுத்தும் சூழ்நிலைகள் இருப்பதைக் கருத்தில் கொண்டு குறைந்த கட்டணத்தில் இயக்க வேண்டும் என்று தென்னிந்திய ரயில்வே நிர்வாகத்தைக் கேட்டுக் கொள்கிறேன். பொதுவாகவே ரயில் கட்டண உயர்வைத் தவிர்க்க வேண்டும் என்று மத்திய அரசையும் ரயில்வே நிர்வாகத்தையும் கேட்டுக் கொள்கிறேன்.

I would like to point out to the Hon'ble Minister of State for Railways that though we have faced many constraints in the operation of our Public transport system due to frequent hike in the price rise of diesel, rise in salaries and several other factors we have not raised the rates of bus fare, so that the common man can make full use of the transport system. In the same way, I would like to point out that this Mass Rapid Transist System will be used by the common man. Therefore, I request the Railway Minister to keep the rates low. And generally I would like to make a general request to the Railway Minister to see that all passenger train fares may be reduced.

சென்னை மாநகர் வாழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு ஏற்ப இந்தத் துரித ரயில் போக்குவரத்து சீரிய முறையில் செயலாற்றும் என்ற எனது நம்பிக்கையை வெளிப்படுத்தி விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் எனது நெஞ்சார்ந்த நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.





சென்னை நகர மக்களின் கனவு நனவாகியது!

பறக்கும் ரயிலைத் தொடங்கி வைத்தார் மாண்புமிகு புரட்சித்தலைவி

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கடந்த **16.11.95** அன்று, இந்தியாவிலேயே முதன் முறையாக அமைக்கப்பட்ட பறக்கும் இரயில் போக்குவரத்தை, சென்னை மக்களுக்காகத் தொடங்கி வைத்தார்.

இதற்கான விழா சென்னை, சிந்தாதிரிப்பேட்டை இரயில் நிலைய வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் வரும் பாதையெங்கிலும் வண்ண, வண்ணத் தோரணங்கள் காற்றில் அசைந்தபடி வரவேற்றன. மங்கள இசை காற்றில் கலந்து ஒலித்தன. ஏராளமான பெண்கள் இந்த விழாவில் பங்கேற்றது குறிப்பிடத்தக்கது. மாண்புமிகு முதல்வர் அவர்களின் வருகை தெரிந்தவுடன் அனைவரும் எழுந்துநின்று, கைதட்டி, வாழ்த்துக் குரலெழுப்பி வரவேற்றார்கள்.

வரவேற்பு

மேடையில், மாண்புமிகு முதல்வர் அவர்களை,

மாண்புமிகு மத்திய இரயில்வேத் துறை இணையமைச்சர் திரு.சுரேஷ்கல்மாடி, மாண்புமிகு மத்திய நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.கே.வி.தங்கபாலு, தென்னக ரயில்வே பொது மேலாளர் திரு.வி.கே. அக்னி ஹோத்ரி ஆகியோர் வரவேற்றார்கள்.

பின்னர், மேடையிலிருந்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், மற்றவர்களுக்கும் புகழ்பெற்ற விளையாட்டு வீரர், வீராங்கனைகள் மலர்ச்செண்டு அளித்து வரவேற்றார்கள். அர்ச்சுனா விருதுபெற்ற திருமதி ரோசாகுட்டி, மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மலர்ச் செண்டு வழங்கினார்.

மேடையின் முன்னால் வலப்புறமாக இந்நிகழ்ச்சிக்காகவே அமைக்கப்பட்டிருந்த விளக்குக் கம்பத்தில் சிவப்பு விளக்கு ஒளிர்ந்து கொண்டிருந்தது.

பறக்கும் ரயிலால் பிறக்கும் சிறப்பு!

இந்திய ரயில்வே இந்திய அளவில் இரண்டு சிறப்புக்களைப் பெற்றுள்ளது. ஒன்று கல்கத்தா நகரில் ஓடும் பாதாள இரயில் போக்குவரத்து, இன்னொன்று சென்னையில் இந்தியாவிலேயே முதன்முதலாக ஓடும் பறக்கும் இரயில். கடந்த பத்தாண்டுகளாக, என்று நடைபெறும்?-இந்த வரலாற்று நிகழ்ச்சியென்று, நாட்களை எண்ணிக்கொண்டிருந்த சென்னைப் பொதுமக்களுக்கு இந்நிகழ்ச்சி சொல்லொண்ணா மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கிறது. அந்த வகையில் இந்தப் பறக்கும் ரயில் சென்னைக்கு மற்றுமொரு புகழையும் சுமந்து ஓடுகிறது.

சரியாக 12 மணியளவில் வரலாற்றுச் சிறப்புப்பெற்ற இந்த நிகழ்ச்சி குறித்த கல்வெட்டை மேடையிலிருந்தபடியே ஒரு பொத்தானை அழுத்தி, மாண்புமிகு முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறந்து வைத்தார்.

பறக்கும் இரயில் ஓட்டுநர் மற்றும் அலுவலர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கப்பட்டார்கள். தொடர்ந்து பாராளுமன்ற உறுப்பினர் திரு.இரா.அன்பரசு மாண்புமிகு மத்திய நல்வாழ்வுத்துறை இணை அமைச்சர் திரு.கே.வி.தங்கபாலு அவர்கள், மாண்புமிகு மத்திய இரயில்வேத்துறை இணை அமைச்சர் திரு.சுரேஷ் கல்மாடி அவர்கள் ஆகியோர் பேசினார்கள். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தென்னக ரயில்வே பொது மேலாளர் திரு.வி.கே. அக்னி ஹோத்திரி வரவேற்புரையாற்றினார்.

தமிழக அரசுக்கு நன்றி

மாண்புமிகு மத்திய இரயில்வே இணையமைச்சர் இந்த விழாவில், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கலந்து கொண்டமைக்காகத் தனது நன்றியைத் தெரிவித்தார். மேலும், இந்தப் பறக்கும் இரயில் திட்டத்திற்குத் தேவையான நிலத்தை வழங்கியுள்ள தமிழக முதல்வருக்கு நன்றியையும் பாராட்டையும் தெரிவித்தார். இந்தத் திட்டத்திற்கு வேண்டிய அனைத்து நிலத்தையும் தமிழக அரசு வழங்கிவிட்டது., மிகமிகக் குறைந்த நிலமே பாக்கியுள்ளது, அதுவும் உடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக முதல்வர் தன்னிடம் கூறியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். நிலப் பிரச்சினை யாலோ அல்லது பணத்தட்டுப் பாட்டாலோ லஸ் வரை போடப்பட்டுள்ள இத்திட்டம் தடைபடாது. இத்திட்டம் இரண்டு மாதங்களுக்குள் முடிந்து விடும் என்று கூறினார்.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, இத்திட்டத்தை, தரமணி வரை நீட்டிக்கும் முயற்சி பரிசீலிக்கப்படும் என்றும் அமைச்சர் திரு.சுரேஷ் கல்மாடி அவர்கள் தெரிவித்தார்.

பின்னர், மாண்புமிகு முதல்வர் அவர்கள் விழாப் பேருரையாற்றினார். உரையினைத் தொடர்ந்து, மாண்புமிகு முதல்வர் அவர்கள், மேடை

யிலிருந்தபடியே ஒரு விசையை அழுத்தினார். சட்டென மேடையின் முன்னாலிருந்து கம்பத்தில் எரிந்த சிவப்பு விளக்கு மாறி பச்சை விளக்கு பளிச்சிட்டது.

பொதுமக்கள் கைதட்டி, வாழ்த்தொலி எழுப்பினர். "பச்சைவிளக்கு எரியத்தொடங்கி விட்டது. பறக்கும் இரயில் தயார் நிலையில் உள்ளேன்" என்று ஒலியெழுப்பியது. உடன் மாண்புமிகு மத்திய இரயில்வேத் துறை இணையமைச்சர் பச்சைக் கொடி காட்டினார்.

மணப்பெண்ணைப்போல் பூக்களால் அலங்கரிக்கப்பட்ட பறக்கும் இரயில், பூக்கள் குலுங்க புறப்பட்டது. உள்ளே ஏராளமான பொதுமக்கள் அந்த இரயிலின் முதல் பயணத்தை முழுதாய் அனுபவிக்க அமர்ந்திருந்தார்கள்.

பறக்கும் இரயில் தற்போது சென்னைக் கடற்கரையிலிருந்து சேப்பாக்கம் வரை செல்கிறது. விரைவில் லஸ்வரை செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு புரட்சித்தலைவி அவர்கள் பொதுமக்களின் தேவையைக் கருதி, தரமணி வரை செல்ல வேண்டும் என்று மத்திய இரயில்வே இணை அமைச்சரைக் கேட்டுக் கொண்டார். மாண்புமிகு புரட்சித் தலைவியின் எண்ணம் நிறைவேறும் நன்னாளே சென்னை மக்களுக்குப் பொன் நாளாகும்!

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

கலைநிகழ்ச்சிகள்



கோயம்பேட்டில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் அமைக்கப் பட்டுள்ள விளையாட்டுக் கிராமத்தில் தங்கியிருக்கும் விளையாட்டு வீரர் வீராங்கனைகளுக்கு பொழுது போக்கு அம்சமாக தினந்தோறும் மாலை வேளையில் கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளன. கலை நிகழ்ச்சிகளில். தனஞ்செயனின் நாட்டிய நாடகம், திருமதி ஸ்ரீநிதி ரங்கராஜன் அவர்களின் பரத நாட்டியம், மற்றும் அபசுரம் ராம்ஜி அவர்களின் இசைக் கச்சேரி முதலானவை நடைபெறவுள்ளன.



அதி நவீனத் தொழில்நுட்பங்களால்
சர்வதேசத் தரத்தை எட்டுகின்ற அதே வேளையில்

தமிழ்த் திரைப்பட உலகம்
சமுதாய நன்மைக்கே பாடுபடுகிறது எனும்
பாராட்டைத் தொடர்ந்து பெற்றிடுவோம்

1993-ஆம் ஆண்டுக்கான திரைப்பட விருதுகள் வழங்கி
மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள்
ஆற்றிய உரை

1993-ஆம் ஆண்டிற்கான மாநிலத் திரைப்பட விருதுகள் வழங்கும், வண்ணமிகு விழாவில் கலந்துகொண்டு, பெருந்திரளாகக் குழுமி இருக்கும் உங்கள் அனை வரையும் ஒருங்கே காண்பதில் நான் பெருமகிழ்சியும் பேரு வகையும் அடைகின்றேன்.

கலைத் துறையின் மாபெரும் அங்கமான திரைப்படத்துறை, குறிப்பாகத் தென்னிந்தியத் திரைப்படத் துறை தனக்கே உரித்தான பாரம்பரியமிக்க பெயரையும் புகழையும் கொண்ட ஒரு மாபெரும் துறையாகும். கலைகளையும், கலைகளின் பல்வேறு அழகிய வெளிப்பாடுகளையும் தங்கள் வாழ்க்கையின் அங்கமாக்கி, மகிழ்ச்சியானதொரு வாழ்க்கையை வாழும், மன வளம் படைத்த மக்கள், தமிழக மக்கள். கலைகளை ரசித்து மகிழும் மனப் பக்குவமும், கலை வடிவங்களுக்கும் கலை வித்தகர்களுக்கும் ஆதரவளித்து, மகிழ்ச்சி அடையும் மனப் பாங்கும், தமிழ்நாட்டிற்கே உரித்தான பாரம்பரியமிக்க குணமாகும். இயல்பாகவே எதையும் கலைக் கண்ணோட்டத்துடன் கண்டு மகிழும் தன்மை படைத்த தமிழக மக்களிடையே திரைப்படத் துறையின் ஆதிக்கம்

அதிகரித்து வருவது, எந்த வகையிலும் ஆச்சரியமில்லை!

தமிழக மக்களின் உள் உணர்வுகளை நன்முறையில் புரிந்து, அவற்றைப் பிரதிபலிக்கின்ற வகையில் நடைபெற்ற வருகின்ற உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் திரைப்படத்துறை உட்பட கலைத் துறையில் எல்லாப் பிரிவுகளும், சீரான வளர்ச்சியை அடைந்து, சிறப்பெய்தி வருகின்றன. கலைத் துறையின் முன்னேற்றத்தை அரசே முன்னின்று கண்காணித்து வருகின்ற, நல்லதொரு சூழ்நிலையில் கலை வித்தகர்களின் கலைத்திறமையைப் பாராட்டி, அவர்களது தனித்தன்மையை அங்கீகரித்து வழங்கப்படும் இந்த விருதுகள், மேலும் பல புதிய சாதனைகளைப் படைக்க கலைத் துறையினருக்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

எனவே, 6 கோடி தமிழக மக்களின், ஏகோபித்த பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும், தன்னகத்தே பெற்றுள்ள இந்த விருதுகளைக் கலையுலக நட்சத்திரங்களுக்கும், கலை வித்தகர்களுக்கும், தொழில் நுட்பக் கலைஞர்களுக்கும், தமிழக மக்களின் சார்பில் வழங்குவதில் நான் ஆனந்தம் அடைகின்றேன்.

இன்று விருதுகளைப் பெறுகின்ற கலை வித்தகர்களும், தொழில்நுட்பக் கலைஞர்களும், தாங்கள் மேற்கொண்டுள்ள கலைத்துறையில், புதிய பரிமாணங்களைக் கண்டு மென்மேலும் பெயரும் புகழும் பெற்று நீண்ட ஆயுளுடன் கலைச் சேவை புரிய வேண்டும் என்று நிறைந்த மனதுடன் நெஞ்சார வாழ்த்துகிறேன்.

அசுர வேகத்தில் வளர்ந்து வரும் தொழில்நுட்பமும், அறிவியலும், இன்று திரைப்பட உலகத்தின் மீது ஏற்படுத்தி உள்ள தவிர்க்க முடியாத தாக்கத்தையும் அதே நேரத்தில் திரைப்பட உலகம், புதிய கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்பி, அவர்களின் மனங்களிலும், உணர்வுகளிலும் உண்டாக்கி வரும் தாக்கத்தையும் நாம் குறைத்து மதிப்பிட முடியாது. ஒரு புறம் மக்கள் மத்தியிலே கலை உணர்வையும், விஞ்ஞான உணர்வையும், சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களையும் வழங்கி, புதிய சிந்தனைகள் தோன்ற வழி வகுத்து வரும் அதே திரைப் படங்கள், சில நேரங்களில் மக்கள் மனதிலே வன்முறை உணர்வையும், மத இன வேறுபாட்டுப் பகை உணர்வையும், தங்களை அறியாமலேயே தூண்டி விடுகின்ற ஒரு போக்கையும் சமீப காலமாகத் திரைப்படங்களில் காண முடிகிறது.

அதி நவீனத் தொழில் நுட்பத்தைக் கையாள்வதன் மூலம், நமது திரைப்படங்கள், சர்வதேசத் தரத்தை அடைய வேண்டும் என்கின்ற ஒரு நியாயமான உந்துதல் நம்மிடம் இருந்தாலும், தமிழகத் திரைப்படங்கள் மூலம், சமுதாய நன்மைகள் தான் அதிகமாகக் கிடைக்கின்ற என்ற ஒரு பாராட்டும் தொடர்ந்து நமக்குக் கிடைத்தாக வேண்டும் என்பதையும் நான் நினைவுப்படுத்தக் கடமைப்பட்டுள்ளேன்.

பொழுதுபோக்குச் சாதனமாக மட்டும் இல்லாமல், தமிழகத்தின் உரிய கலாச்சாரம், குடும்பப் பாச உணர்வை, நியாய தர்ம நல் உணர்வு ஆகியவற்றிற்குக் குந்தகம் ஏற்படாத வண்ணம் பாதுகாக்கவும் நமது திரைப்படங்கள் பயன்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பொழுது போக்குச் சாதனமாகவும், கலைகளை வளர்க்கும் சாதனமாகவும் விளங்கும் திரைப்படத்துறை ஆயிரக்கணக்கான மக்களுக்கு வாழ்க்கையை அளிக்கும் ஒரு மாபெரும் தொழிலாகவும் இருந்து வருகின்றது.

எனவேதான், திரைப்படத் துறையினுடைய வளர்ச்சிக்கு முட்டுக்கட்டைகள் ஏற்பட்ட போதெல்லாம் அவற்றைத் தீர்த்து வைப்பதற்கு, நான் ஒரு ஆத்மார்த்த ஈடுபாட்டுடன் முயற்சிகளை மேற்கொண்டேன். அதே உணர்வுடன், திரைப்படத் துறையின் வளர்ச்சியை நிலைப் படுத்தப் பல்வேறு திட்டங்களையும் அறிவித்தேன்.

திரைப்படத் துறையில் பணியாற்றி வருகின்ற, பல்லாயிரக் கணக்கான தொழில்நுட்பக் கலைஞர்களும், தொழிலாளர்களும் கூட்டுறவு வீடு கட்டும் சங்கங்களின் மூலம், தங்களுக்கு என்று சொந்தமாக, வீடுகளைக் கட்டிக் கொள்வதற்காக

சென்னைக்கு அருகில் 10 கோடி ரூபாய் மதிப்பில் 85 ஏக்கர் நிலம் தமிழக அரசின் சார்பில் இலவசமாக வழங்கப்பட்டது. திரைப்படத் தயாரிப்புகளுக்குத் தேவையான எல்லா வசதிகளையும் ஒரே இடத்தில் தயாரிப்பாளர்களுக்கு ஏற்படுத்தித் தர வேண்டும் என்ற எண்ணத்தில் எங்கள் ஆட்சிக் காலத்தில் 26 கோடி ரூபாய் செலவில், திரைப்பட நகர், Film City ஒன்று தமிழகத்தில் ஏற்படுத்தப்பட்டு இன்று சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இந்தியாவிலேயே, வேறு எந்த ஒரு இடத்திலும் இத்தனை நவீன வசதிகளுடன் ஒரு திரைப்பட நகரம் இல்லை என்று பலரும் பாராட்டி வருகின்றனர். குறைந்த செலவில் தயாரிக்கப்படும் தரமான தமிழ்ப் படங்களுக்கு, மானியத் தொகை வழங்கும் திட்டத்தை, நாங்கள் ஆட்சிக்கு வந்த பின்பு விரிவுபடுத்தி இன்று அத்தகைய படங்களுக்குத் தலா 3 இலட்சம் ரூபாய் வீதம், 75 திரைப்படங்கள் வரை மானியத்தொகை வழங்கப்பட்டு வருகின்றது.

திரைப்படத் தயாரிப்பில் உள்ள பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க, எல்லா இடங்களிலும் படப்பிடிப்பு நடத்த ஒரே

இடத்தில் அனுமதி வழங்கும். Single Window Clearance முறையும், உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் தொடங்கப்பட்டு, சீரிய முறையில் நடைமுறைப்படுத்தப் பட்டு வருகின்றது. வளர்ந்து வரும் விண்கோள் தொலைக் காட்சிகளின் ஆதிக்கத்தினால், திரைப்படத்துறை நசிந்து விடாமல் இருப்பதற்காக, திரையரங்குக் கட்டணத்தை மாற்றி அமைத்துக் கொள்ள, ஒரு புதிய முறைக்குத் தமிழக அரசால் அனுமதி வழங்கப் பட்டுள்ளது.

இந்த ஆண்டு முதல், திரைப்படத் தொழிலாளர் களுக்கும், ஆயுள் காப்புறுதித் திட்டத்தை விரிவுபடுத்தி, விபத்தில் மரணமடைய நேரும், தொழிலாளர்களின் குடும்பங்களுக்குத் தலா 50,000 ரூபாய் நிவாரணத் தொகை வழங்கும் திட்டமும், திரைப்படத் தொழிலாளர்கள் நல்வாழ்வு நல நிதித் திட்டமும், செயல் படுத்தப்பட்டு வருகின்றன. திரைப்படத் தொழிலாளர்களின் சமூகப் பாதுகாப்பிற்காக நலிந்த திரைப்படத் தொழிலாளர்கள் 1,000 பேருக்கு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கும் திட்டம் ஒன்றையும், இந்த ஆண்டு முதல் உங்கள் அன்புச் சகோதரியின் அரசு செயல்படுத்தி வருகிறது.

22.11.1995 அன்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் கலைமாமணி விருது வழங்கும் விழாவில் கலந்து கொண்ட போது, வயது முதிர்ந்த நலிந்த நிலையில் உள்ள கலைமாமணி விருது பெற்ற கலை வித்த கர்களில் சிலர் தங்களுக்கு அரசுப் பேருந்துகளில் இலவச மாகப் பயணம் செய்ய சிறப்புச் சலுகையை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை என் முன் வைத்தார்கள். அந்தக் கோரிக்கையை நான் ஏற்றுக் கொண்டு, 45 வயதைக் கடந்த கலைமாமணி விருது பெற்ற நலிந்த கலைவித்தகர்கள் அனைவரும் தமிழக அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய ஆணை வழங்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கான அரசாணை, மிக விரைவில் வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

பொழுதுபோக்கு என்ற குறுகிய வட்டத்தை விட்டு திரைப்படங்கள் மக்களின் எண்ணங்களையும், மனங் களையும் பண்படுத்துகின்ற கலைப் பொக்கிஷங்களாகத் திகழ்ந்திட வேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு விருது பெற்ற அனைவருக்கும், மீண்டும் எனது நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

கல்வியின் மேன்மை

வாழ்வில் அணியாகவும்,
துணையாகவும் விளங்குவது
நாம் கற்ற கல்வி மட்டுமே. .

—அரிஸ்டாடில்

"மாநில திரைப்பட விருது" வழங்கும் விழா

சிறந்த திரைப்படங்கள் நடிகர், நடிகை, மற்றும் கலைஞர்களைத் தேர்ந்தெடுத்து தமிழக அரசு ஆண்டுதோறும் விருது வழங்கி வருகிறது.

1993-ஆம் ஆண்டிற்கான சிறந்த திரைப் படங்கள் மற்றும் திரைப்படக் கலைஞர் களுக்கான விருது வழங்கும் விழா 24.11.1995 அன்று மாலை சென்னை கலைவாணர் அரங்கில் நடந்தது.

● நான்காம் அட்டை சொல்லும் செய்தி:

விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் கலந்து கொண்டு சிறந்த திரைப்படங்கள் மற்றும் திரைப்படக் கலைஞர்களுக்கான விருதுகளை வழங்கினார்.

1993-ஆம் ஆண்டின் சிறந்த திரைப்படமாக "ஜாதி மல்லி" படம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தது. இதற்கான தங்கப் பதக்கத்தையும், ரூ. 1¼ இலட்சம் ரொக்கப் பரிசையும், பத்திரத்தையும் திரைப்பட இயக்குநர் திரு கே. பாலசந்தரிடம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் வழங்கினார். 2வது பரிசுக்கு உரிய படமாக "பத்தினிப் பெண்" படம் தேர்ந்தெடுக்கப்பட்டு இருந்தது. இதற்கான பதக்கத்தையும், ரூ.75 ஆயிரத்தையும் பட அதிபர் திரு கஸ்தூரி வாசு பெற்றுக் கொண்டார். 3வது பரிசுக்கான பதக்கம் ரூ.50 ஆயிரம் ரொக்கம் ஆகியவை "கோகுலம்" படத்துக்குக் கிடைத்தது. அதைப் பட அதிபர் திரு ஆர்.பி. சவுத்திரி பெற்றுக் கொண்டார்.

"மகாநதி" படத்துக்குச் சிறப்புப் பரிசு கிடைத்தது. இதற்கான பதக்கம், ரூ.50 ஆயிரம்

1993-ஆம் ஆண்டிற்கான திரைப்பட விருதுகள்

சிறந்த திரைப்படங்கள்

1. முதல் பரிசு	:	ஜாதி மல்லி
2. இரண்டாம் பரிசு	:	பத்தினிப் பெண்
3. மூன்றாம் பரிசு	:	கோகுலம்
4. சிறப்புப் பரிசு	:	மகா நதி

கலைஞர்களுக்கான பரிசுகள்

1. சிறந்த நடிகர்	:	அர்ஜுன் (ஜென்டில்மேன்)
2. சிறந்த நடிகை	:	மீனா (சேதுபதி ஐ.பி.எஸ்., எஜமான்)
3. சிறந்த நடிகர் (சிறப்புப் பரிசு)	:	விஜயகுமார் (கிழக்கு சீமையிலே)
4. சிறந்த நடிகை (சிறப்புப் பரிசு)	:	ரூபிணி (பத்தினிப் பெண்)
5. சிறந்த இயக்குநர்	:	ஷங்கர் (ஜென்டில்மேன்)
6. சிறந்த கதையாசிரியர்	:	சுஜாதா உதயகுமார் (பொன்னுமணி, எஜமான்)
7. சிறந்த உரையாடல் ஆசிரியர்	:	ஆர்.சி. சக்தி (பத்தினிப் பெண்)
8. சிறந்த இசை அமைப்பாளர்	:	ஏ.ஆர். ரகுமான் (ஜென்டில்மேன்)
9. சிறந்த பாடலாசிரியர்	:	புலமைப்பித்தன் (பத்தினிப் பெண்)
10. சிறந்த பின்னணிப் பாடகர்	:	ஜெயச்சந்திரன் (கிழக்கு சீமையிலே, செவ்வந்தி)
11. சிறந்த பின்னணிப் பாடகி	:	சுஜாதா (புதிய முகம்)
12. சிறந்த ஒளிப்பதிவாளர்	:	எம்.சி. சேகர் (வால்ட்டர் வெற்றிவேல்)
13. சிறந்த ஒலிப்பதிவாளர்	:	சம்பத் (எஜமான், சேதுபதி ஐ.பி.எஸ்.)
14. சிறந்த திரைப்படத் தொகுப்பாளர் (எடிட்டர்)	:	சுரேஷ் அர்ஸ் (திருடா திருடா)
15. சிறந்த ஆர்ட் டைரக்டர்	:	சலம் (வால்ட்டர் வெற்றிவேல்)
16. சிறந்த சண்டைப் பயிற்சியாளர்	:	விக்ரம் தர்மா (மகா நதி)
17. சிறந்த நடன ஆசிரியர்	:	சுந்தரம் (ஜென்டில்மேன்)
18. சிறந்த ஒப்பனைக் கலைஞர்	:	என். பத்மநாபன் (சின்னஜமீன், பொன்னுமணி)
19. சிறந்த தையற் கலைஞர்	:	சி.கே. கண்ணன் (வீட்ல விசேஷங்க)



ரொக்கம் ஆகியவற்றைப் பட அதிபர் திரு எஸ்.ஏ. ராஜ்கண்ணுவிடம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் வழங்கினார்.

அதன் பிறகு சிறந்த நடிகர் நடிகைகளுக்கான பரிசளிப்பு நிகழ்ச்சி நடந்தது.

இவர்கள் அனைவருக்கும் தலா 5 பவுன் தங்கப்பதக்கம் மற்றும் விருதும் வழங்கப்பட்டது.

1993-ஆம் ஆண்டிற்கான கலை வித்தகர் விருதுகள்

அறிஞர் அண்ணா விருது	:	டாக்டர் ஏ. நாகேஸ்வர ராவ்
பாவேந்தர் பாரதிதாசன் விருது	:	பி. சுசிலா
கலைவாணர் விருது	:	வடிவேலு
ராஜா சாண்டோ விருது	:	பாபு (ஒளிப்பதிவாளர்)
எம்.ஜி.ஆர். விருது	:	பி. சரோஜாதேவி
ஜெயலலிதா விருது	:	கே. பாலாஜி
சிவாஜி கணேசன் விருது	:	சிவகுமார்

விழாவில், மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன், திரைப்படத் தேர்வுக்குழுத் தலைவர் நீதிபதி எஸ். பிரதாப் சிங், செய்தித்துறைச் செயலாளர் திரு. எஸ். இராமகிருஷ்ணன் இ.ஆ.ப., ஆகியோர் பேசினார்கள்.

செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன் இ.ஆ.ப., அவர்கள் நன்றி கூறினார்.

விழாவில், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு, மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு மு. தென்னவன் அவர்கள், செய்தி-மக்கள் தொடர்புத்துறை இயக்குநர் திரு தி. சண்முக ராஜேஸ்வரன். இ.ஆ.ப., ஆகியோர் நினைவுப் பரிசு வழங்கினார்கள்.

விளையட்டும் வீரம்! குவியட்டும் வெற்றி!!

–கவிஞர் முருகுவண்ணன்

இளமைதான் ஆற்றல் விளைநிலமாம்! ஆண் - பெண்
இருபாலர் வாழ்வின் அடித்தளமாம்!
இளமைக்கு வாய்க்கும் களம்பலவாம்! வாய்த்த
இளமை விளையாட்டும் பற்பல வாம்!

"வாய்த்த இளமை விளையாடற்கே' - என்று
வாழ்வைக் குலைக்கும் வகைதவிர்த்தே
வாய்த்த இளமை நிலைபெறவே - செய்யும்
வகைவகை ஆடல் கொண் டாடுவமே!

தமிழர் விளையாட்டாம், 'காவடி'யும் - 'ஒயில்'
தனித்த விளையாட்டாம் ஆடிடலாம்!
தமிழர் இன் றாடும் 'கபடி'யுண்டாம்! - புறம்
தள்ளிமுன் னோடல்போல் ஓடிடலாம்!



நாநீளம் நேர்நெடு 'நீள'மும் - வானினை
நண்ணும் 'உயர'மும் தாண்டிடுவீர்!
பாநாலும் செய் கவி வாணர்தம் - வாழ்வீடர்
போன்ற பல தடை வென்றோடுவீர்!

காலம் வெல் 'நம்பிக்கை', 'பந்து' எனலாம் - வெற்றி
கைப்பட, காலமாம் கைகளினால்,
நாளும் தடுத்தாண்டுக் கொண்டு - செலல்போலும்
நடந்துசெல் காலால், கால்'பந்துஆடு வீர்'!

நெஞ்சத்தில் மேவும் சுமைதாங்கி - வாழ்க்கைசெய்
நேர்மைத் திறத்தீர்! எழுச்சிகொண்டு
நெஞ்சம் நிமிர்ந்திரு தோளுயர்த்தி - கையால்
நிறை 'பளு தூக்கி' நிறுத்திடுவீர்!

கையில் கிடைத்ததை வாயினிலே - சேர்க்கும்
கைத்திறம் போல் 'கூடைப் பந்தா'டுவீர்!
கையில் பறவைச் சிறகினால் - ஆகிய
கவர்ச்சி 'சிறகுப் பந்து'ம் ஆடிடுவீர்!

பூவை நிகர்மென்மை பொன்மை - நிறம்கொண்ட
'பூப்பந்து'ம் பாங்குடன் ஆடிடுவீர்!
மேவி உயர்ந்து செல் 'கைப்பந்தை'க் கையாலே
மேன்மேல் உயர - தட்டி ஆடிடுவீர்!

மெய்ம்மை உரம்கொண்ட ஆண் தகையீர்! - உம்போல்
மெய்கொண்டோர் தம்மோடு 'மற்போர்' செய்வீர்!
மெய்த்தடந் தோளும் கரங்களும் - கொண்டோரே!
வீழாத கைக் 'குத்துச் சண்டை' செய்வீர்!

மெய்வலி காட்டிடும் கைகளுடன்-வன்மை
மேவும் இருதோளும் கொண்டவல்லீர்!
மெய்வலி காட்டுவோர் தம்மை அடித்துமண்
மேல்விழச் செய், 'குத்துச் சண்டை' செய்வீர்!

தமிழ்இளங் காளையீர் வாருங்களே! - தன்னேர்
தமிழ்இளம் பூவையீர் வாருங்களே!
தமிழ்நாடு பேர் புகழ் பெற்றிடவே - நல்ல
தருணம் வந் துற்றது கேளுங்களே!

நல்ல தருணம் இது! "தெற்காசிய - நாடுகள்
விளையாட்டுப் போட்டிகள்" நம் சென்னையில்...!
நல்இளங் காளையீர்! பாவையீர்! - பங்கேற்று
நமக்கே வெற்றியெல்லாம் சேருங்களே!

கலை வித்தகரின் நலம் காக்க முனைப்புடன் செயல்படும் தமிழக அரசு

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் ‘கலைமாமணி’ விருது வழங்கும் விழாவில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் ஆற்றிய உரை

முத்தமிழ்க் கலைகளையும், அவற்றை முனைப்புடன் வளர்த்த முதன்மைக் கலை வித்தகர்களையும் பாராட்டிச் சிறப்பிக்கும் வண்ணம், ஆண்டுதோறும் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் நடத்தும், கலைமாமணி விருது வழங்கும் விழாவில் பங்கு கொண்டு, உங்கள் அனைவரையும் காண்பதில் நான் பெருமகிழ்ச்சியும், பேருவகையும் அடைகின்றேன்.

மன வளம் நிறைந்த மக்கள் எங்கே வாழ்கிறார்களோ, அங்கே தான் கலை வளம் மிகுந்து காணப்படும் என்பது, சரித்திரம் காட்டும் உண்மை ஆகும். தமிழகம் என்றும் அருங்கலைகளின் இருப்பிடமாக இருந்து வந்துள்ளது. கலைகளை வளர்ப்பதிலும், கலை வித்தகர்களை ஊக்குவிப்பதிலும், தமிழ்நாட்டிற்கு என்றும் ஒரு தனி இடம் உண்டு. அத்தகைய மாபெரும் கலை உணர்வுக்குச் சொந்தக்காரர்கள் நாம் என்பதையும், நமது முன்னோர்கள் கலைகளோடு இணைந்த வாழ்க்கையை நடத்தி வந்தார்கள் என்பதையும், எண்ணிப் பார்க்கும்போது மனம் மகிழ்ச்சி அடைகிறது.

கவிதை, பாட்டு, காவியம், கதை, நுண் கலைகள், ஓவியம், சிற்பம் என்று பழந்தமிழ் இலக்கியங்களின் வெளிப்பாடுகளைத் தங்கள் வாழ்வின் ஒரு அங்கமாகவே கொண்டு, கண்டவர்கள் நம் முன்னோர்கள்.. காதலாகிக் கசிந்து உருகி, கண்ணீர் மல்கிப் பாடி, இறைவனையே இசை வடிவமாகக் கண்டவர்கள், நம் மூதாதையர்கள்.

பன்னெடுங்காலமாக, நமது முன்னோர்களால் போற்றப்படும் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழின் மேன்மையை மென்மேலும் கட்டிக்காக்கும் வகையில், தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம் செயல்பட்டு வருகிறது. இந்த மன்றம், பழம் பெரும் கலைகளைப் பாதுகாக்கும் ஒரு பண்பாட்டு மையமாகவும், கலை வித்தகர்களின் வாழ்வில்,

ஒளியை ஏற்றி வைக்கும். ஒரு தூண்டுகோலாகவும் விளங்கி வருகிறது.

உலகத்தின் மிகத்தொன்மை வாய்ந்த மொழிகளில் ஒன்று தமிழ் மொழி ஆகும். லத்தீன் மொழியைச் சட்ட மொழி என்றும், கிரேக்க மொழியை இசை மொழி என்றும், ஜெர்மன் மொழியைத் தத்துவ மொழி என்றும், ஆங்கில மொழியை வணிக மொழி என்றும் மொழி வல்லுநர்கள் வகைப்படுத்தி, புகழ்வதைப்போல், தமிழ் மொழியை இலக்கிய மொழி என்று பாராட்டி மகிழ்கின்றனர்.

கலை வளர்க்கும் முயற்சியில் இதுவரை 884 கலைஞர்களுக்குக் கலைமாமணி விருதுகள். தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் மூலம், வழங்கப்பட்டுள்ளன. தமிழகத்தின் கலைஞர்களுக்கு மட்டுமே வழங்கப்பட்டு வந்த இந்த விருது, தமிழகத்தில் வாழும், மற்ற மாநிலங்களைச் சேர்ந்த, சாதனை புரியும் கலைஞர்களுக்கும், வழங்குகின்ற முறையைக் கொண்டு வந்து, கலைக்கு எல்லையில்லை என்பதை உங்கள் அன்புச் சகோதரியின் அரசு நிரூபித்துள்ளது.

இதுவரை 228 கலை மேதைகளின் திருவுருவப் படங்கள் திறந்து வைக்கப் பட்டுள்ளன என்பதை அறியும் போது எனது மனம் மகிழ்ச்சி அடைகிறது. நலிவுற்ற கலைஞர்களுக்குத் தமிழக அரசால் வழங்கப்பட்டு வந்த மாதாந்திர ஓய்வூதியத் தொகையை, 250 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக நாங்கள் உயர்த்தினோம். மேலும் ஆண்டொன்றுக்கு 135 கலை வித்தகர்கள் மட்டுமே ஓய்வூதியம் பெற்று வந்த நிலையை மாற்றி, இன்று ஆண்டொன்றுக்கு 300 நலிந்த கலைஞர்கள் ஓய்வூதியத்தைப் பெறுகின்ற வகையில், பயனாளிகளின் எண்ணிக்கையை, உங்கள் அன்புச் சகோதரியின் அரசு உயர்த்தியுள்ளது. நாங்கள் ஆட்சிக்கு வருவதற்கு முன்பு, கடந்த 20 ஆண்டுகளில், 2,800 நலிந்த கலைஞர்கள் மட்டுமே ஓய்வூதியம் பெற்றுப் பயனடைந்துள்ளனர். ஆனால், 1991-ஆம் ஆண்டு தொடங்கி, உங்கள் அன்புச் சகோதரியின் ஆட்சியில் மட்டும் மொத்தம் 1,500 நலிந்த கலைஞர்கள் ஓய்வூதியம் பெற்று பயனடைந்துள்ளார்கள் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் சுட்டிக்காட்டக் கடமைப் பட்டுள்ளேன்.

அசுர வேகத்தில் மாறுதல்களைக் கண்டு வருகின்ற விஞ்ஞான உலகில், பல அரிய கலைகள் பாதுகாக்கப்படவில்லை என்றால், முழுவதுமாக மறைந்து விடும் அபாயம் இருந்து வருகின்றது. குறிப்பாக, சில அபூர்வமான கிராமியக் கலை வடிவங்கள் இத்தகைய அபாயத்தை எப்போதும் எதிர் நோக்கி உள்ளதால் அத்தகைய கலைகளை நாம் பேணிப் பராமரிப்பதோடு, அந்த கலை வடிவங்களை எதிர்காலத்தின்

தேவைக்காகப் பாதுகாத்து, நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று, இயல் இசை நாடக மன்றத்தை, நான் கேட்டுக் கொண்டதன் பேரில், அந்தக் கலை வடிவங்களை ஆவணங் களாக்கிப் பாதுகாக்கும் பணி, தற்போது நடைபெற்று வருகின்றது. எதிர்காலக் கலை வளர்ச்சிக்கு உதவும் இந்தச் சீரிய பணியை, இயல் இசை நாடக மன்றம், ஒரு கலை வேள்வியாக மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

சென்னை போன்ற பெரு நகரங்களில் மட்டுமே கலை நிகழ்ச்சிகளைக் கண்டு களிக்க முடியும் என்றிருந்த நிலையை எங்கள் அரசு மாற்றி அமைத் துள்ளது. தமிழகத்தின் கிராமப் புறப் பகுதிகள் சூழ்ந்த சிறு நகரங்களிலும் இன்று தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம், கலை நிகழ்ச்சிகளை நடத்தி, அங்கு வாழ்கின்ற மக்களும், பல்வேறு கலை நிகழ்ச்சிகளை கண்டு களிப்பதற்கு வழி வகுத்துள்ளது. சலங்கை விழா, ஐம்பெரும் விழா போன்ற பெரிய விழாக்கள், இன்று தமிழகத்தின் பல்வேறு பகுதி களில், சீரிய முறையில் நடைபெற்று, தமிழக மக்கள் மத்தியில் கலை, கலாச்சாரம் ஆகியவற்றைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தியுள்ளதை எண்ணி மன மகிழ்ச்சி அடைகிறேன்.

அருங்கலைகளை வளர்க்க தங்கள் தனித்திறமைகளை வெளிப்படுத்தி, கலைமாமணி விருது பெறுகின்ற கலை வித்த

கர்கள் அனைவருக்கும் எனது மனமார்ந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன். அவர்கள் கலைச்சேவையில் மேற்கொள்ளும் எல்லா முயற்சி களிலும் வெற்றி பெற்று, மேலும் பெயரோடும், புகழோடும், நீண்ட ஆயுளுடனும், வாழ்வாங்கு வாழ வேண்டும் என்று நிறைந்த மனதுடன் நெஞ்சார வாழ்த்து கிறேன்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றச் செயலாளர், நாடகச் செம்மல் திரு. R.S.மனோகர் அவர்கள் சற்று முன்பு பேசும்போது. இரண்டு கோரிக் கைகளை, என் முன் வைத் தார்கள். மன்றத்தால் ஆண்டு தோறும் திறந்து வைக்கப் படுகின்ற. கலைவித்தகர்களின் திருவுருவப்படங்களை நன் முறையில் பராமரிப்பதற்கும், பார்வையாளர்கள் அனைவரும் அவற்றை. ஒரே இடத்தில் கண்டு மகிழ்வதற்கு வழி வகுக்கவும், அரிய இசைக் கருவிகளைப் பாதுகாத்து வைக்கவும் கலைக் கூடம் - Art Gallery ஒன்றை, அமைத்துத்தர வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். தமிழகத்தின் பாரம்பரியமிக்க கலைகளை வளர்ப்பதிலும் கலை வித்தகர்களின் வாழ்க் கையை மேம்படுத்துவதிலும், ஆழ்ந்த ஈடுபாட்டையும், அக் கறையையும், செலுத்தி வருகின்ற அரசு எங்கள் அரசு. அந்த உணர்வைப் பிரதிபலிக்கின்ற வண்ணம், மன்றத்திற்கெனத் தனியே கலைக்கூடம் - Art Gallery ஒன்று, . தமிழக அரசின் சார்பில் கட்டித்தரப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன், இதற் கான ஆயத்தப்பணிகள் விரைவில் மேற்கொள்ளப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

நாடகக் கலையை, நலிந்து விடாமல் பாதுகாக்கப் பல

நடவடிக்கைகளை மேற்கொண்ட எங்கள் அரசு, நாடகக் கலைக் குழுவினர். அரசு பேருந்துகளில் பயணம் செய்யும் போது, 50 சதவீதக் கட்டணச் சலுகையை யும் வழங்கி வருகின்றது. இந்தச் சலுகையை, இசைக் கலைஞர் களுக்கும், நாட்டிய மற்றும் கிராமியத்துறை கலைஞர் களுக்கும் வழங்க வேண்டும் என்று திரு. R.S.மனோகர் அவர்கள் வைத்த இரண்டாவது கோரிக்கையையும், ஏற்றுக் கொண்டு, இனி இசைக்கலைக் குழுவினர்களும், நாட்டிய மற்றும் கிராமியக் கலைக் குழுவினர்களும் அரசுப் பேருந்துகளில் பயணம் செய்யும் போது, கட்டணத்தில் 50 சதவீத சலுகை வழங்கப்படும் என்பதை, மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்து கொள்கிறேன்.

எங்கள் அரசைப்பொறுத்த வரையில், கேட்டால்தான் கிடைக்கும் என்பதையும் மீறி, தேவை என்பதை அறிந்தால் விரைந்து செயல்பட எப்போதும் தயாராக உள்ளது. நலிந்த கலை வித்தகர்களுக்குப் பொற்கிழித் தொகையான 5,000 ரூபாயிலிருந்து 10,000 ரூபாயாக உயர்த்தி வழங்கப்படும்; அந்த உயர்வு, இந்த ஆண்டு முதலே அமல்படுத்தப்படும் என்பதை யும், தமிழ்நாடு இயல், இசை நாடக மன்றத்தின் காப்பாளர் என்ற முறையில் மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருங்கலைகளை வளர்ப்ப திலும், நலிந்த கலை வித்த கர்களின் நலம் காப்பதிலும், எங்கள் அரசு எப்போதும் முனைப்புடன் செயல்படும் என்பதைத் தெரிவித்துக் கொண்டு, கலைமாமணி விருது பெற்ற கலைமாமணிகள் அனைவருக்கும், மீண்டும் எனது நல்வாழ்த்துக்களை உரித்தாக்கிக் கொள்கிறேன்.

தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்

'பொன்னி', 31, கிரீன்வேஸ் சாலை, சென்னை - 600 028. தொலைபேசி எண் : 4937471

1994 - 95 ஆம் ஆண்டில் "கலைமாமணி" விருது பெறும் கலைஞர்கள்

டாக்டர் இரா. நாகசாமி	-	இயற்கலை - பண்பாட்டு அறிஞர்
திருமதி ஆர். வேதவல்லி	-	கர்நாடக இசைக் கலைஞர்
மகாராஜபுரம் திரு. கே. நாகராஜன்	-	கர்நாடக இசைக் கலைஞர்
திரு. பி. உன்னிகிருஷ்ணன்	-	கர்நாடக இசைக் கலைஞர்
போழகுடி திரு. பி.வி. கணேசய்யர்	-	கர்நாடக இசை ஆசிரியர்
திருப்பாற்கடல் திரு. எஸ். வீரராகவன்	-	வயலின் இசைக் கலைஞர்
சுசீந்திரம் திரு. கிருஷ்ணன்	-	மிருதங்க இசைக் கலைஞர்
உமையாள்புரம் திரு. கே. நாராயணசாமி	-	கடம் இசைக் கலைஞர்
திரு. ஜி. ஹரிசங்கர்	-	கஞ்சிரா இசைக் கலைஞர்
மாயவரம் திரு. டி. எஸ். ராஜாராம்	-	முகர்சிங் இசைக் கலைஞர்
டாக்டர் சுமா சுதிந்திரா	-	வீணை இசைக் கலைஞர்
சிக்கில் திருமதி. மாலா சந்திரசேகர்	-	புல்லாங்குழல் இசைக் கலைஞர்
ஆண்டாங்கோயில் திரு. ஏ.வி. செல்வரத்தினம்	-	நாதசுர இசைக் கலைஞர்
மாம்பலம் திரு. எம். கே. எஸ். சிவா	-	நாதசுர இசைக் கலைஞர்
திருக்கோகர்ணம் திரு. கே. செல்லையா	-	தவில் இசைக் கலைஞர்
தஞ்சாவூர் திரு. என். வீராசாமி	-	கிளாரினெட் இசைக் கலைஞர்
கோவை திருமதி கமலா	-	இறையருட் பாடற் கலைஞர்
திருக்கோயிலூர் சகோதரிகள் திருமதி எஸ். அலமேலு திருமதி எஸ். புஷ்பா	-	தெய்வீக பக்திப் பாடற் கலைஞர்கள்
ஆவுடையார் கோவில் திரு. டி. என். சோமசுந்தர ஓதுவார்	-	தேவார இசைக் கலைஞர்
திரு. பி.டி. செல்லத்துரை	-	இசை ஆராய்ச்சிக் கலைஞர்
கல்யாணபுரம் திரு. ஆர். ஆராவமுதன்	-	கதா காலட்சேபக் கலைஞர்
திருமதி கே. ஜே. சீதா ராஜகோபால்	-	பரதநாட்டிய ஆசிரியை
திருமதி ரங்கநாயகி ஜெயராமன்	-	பரதநாட்டிய ஆசிரியை
திருமதி சாந்தா தனஞ்செயன்	-	பரதநாட்டியக் கலைஞர்
டாக்டர் ஸ்ரீநிதி ரங்கராஜன்	-	பரதநாட்டியக் கலைஞர்
டாக்டர் ராஜலட்சுமி சந்தானம்	-	பரதநாட்டிய இசைக் கலைஞர்
திரு. கே. முத்துக்கிருஷ்ணன்	-	பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர்
திரு. என். எஸ். ரவிசங்கர்	-	நாடக ஆசிரியர்
திரு. எஸ். வி. வெங்கடராமன்	-	நாடகத் தயாரிப்பாளர்
திரு. பீலி சிவம்	-	நாடக நடிகர்

திருமதி ராணி சோமநாதன்	-	நாடக நடிகை
திரு. எஸ். வி. சண்முகம்	-	நாடக நகைச் சுவைக் கலைஞர்
திரு. ஜெமினி மகாலிங்கம்	-	தொழில்முறையல்லாத நாடக நடிகர்
திரு. வி.டி. அரசு	-	திரைப்படத் தயாரிப்பாளர்
திரு. மணிரத்னம்	-	திரைப்பட இயக்குநர்
திரு. அர்விந்த்ஸ்வாமி	-	திரைப்பட நடிகர்
செல்வி குஷ்பு	-	திரைப்பட நடிகை
திரு. ஏ.ஆர். ரகுமான்	-	திரைப்பட இசையமைப்பாளர்
திரு. மனோ	-	திரைப்படப் பின்னணிப் பாடகர்
திருமதி ஜிக்கி	-	திரைப்படப் பின்னணிப் பாடகி
புரிசை திரு. பி.கே. சம்பந்தன்	-	தெருக்கூத்துக் கலைஞர்
புலவர் டி. முத்துசுவாமி	-	வில்லுப்பாட்டுக் கலைஞர்
மதுரை திரு. என். தவசியா பிள்ளை	-	கரக ஆட்டக் கலைஞர்
திரு. ஏ.பி. ஸ்ரீனிவாசன்	-	இசை நாடக நடிகர்
கரூர் திருமதி ஏ. சாரதா	-	இசை நாடக நடிகை
திரு. ஆர். ஏ. அய்யாச்சாமி தேசிகர்	-	பழம்பெரும் இசை நாடக நடிகர்
திரு. என். எஸ். வரதராஜன்	-	இசை நாடகப் பாடலாசிரியர்
திரு. டி.எஸ். மருதப்பா	-	இசை நாடக மிருதங்கக் கலைஞர்
சேலம் திரு. என்.எம்.வி. வேலன்	-	இசை நாடக ஆர்மோனியக் கலைஞர்
திரு. ஏ. எஸ். மாணிக்கவாசகம்	-	பொம்மலாட்டக் கலைஞர்
திரு. கே. ஆர். சுந்தர ஸ்தபதி	-	கோயிற் சிற்பக் கலைஞர்
சிற்பி திரு. டி. கே. செல்லதுரை	-	பாரம்பரிய சிற்பக் கலைஞர்
திரு. ஏ. பி. சந்தான்ராஜ்	-	ஓவியக் கலைஞர்

பொற்கிழி பெறும் கலைஞர்கள்

"கலைமாமணி" திரு. எஸ். சி. பாலசுப்பிரமணியம்	-	இசை நாடக நடிகர்
"கலைமாமணி" திருமதி. டி.எம். பங்கஜா	-	இசை நாடக நடிகை
"கலைமாமணி" திரு. டி.பி. வேணுகோபால் பிள்ளை	-	பரதநாட்டிய மிருதங்கக் கலைஞர்

சுழற்கேடயம் பெறும்

சிறந்த நாடகக் குழு

"பூமகள் கலை மன்றம்" - கோவை

சிறந்த கலை நிறுவனம்

"பிரம்ம கான சபா" - சென்னை.

கலைவளர்ச்சிக்கு வளமூட்டும்

கலைமாமணி விருது வழங்கு விழா

● இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், கலை உலகம் வளமாக வளர வேண்டும் என்ற உயர்ந்த நோக்கோடு, பல ஆக்க பூர்வமான வளர்ச்சிப் பணிகளைச் செய்துவருகிறார்கள். அவற்றில் சிறப்பு பெறும் ஒரு நிகழ்ச்சி, கலை உலகத்து வித்தகர்களை ஊக்குவிக்கும் உந்துதளமான 'கலைமாமணி' விருது வழங்கும் விழா என்றால் அதுமிகையல்ல. இவ்வாண்டில் சிறப்புப் பெற்ற, தான் மேற்கொண்ட கலைகளில் சாதனைபுரிந்த சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா, சென்னை கலைவாணர் அரங்கில் 22.11.95 அன்று மாலை சீரோடும் சிறப்போடும் நடந்தேறியது.

கலைவாணர் அரங்க வளாகம் முழுவதும் காண்போரின் கண்கள் கவரும் வண்ணம் விதவிதமான வண்ணத் தோரணங்களும், வானுலகத்து நட்சத்திரங்கள் பல நிறங்களில் மண்ணுலகுக்கு வந்தது போல் மின்னுகின்ற வண்ண, வண்ணச் சரவிளக்குகளும் நிரம்பியிருந்தன. செவிக்கினிய மெல்லிய நாயன இசை அரங்கமெங்கும் தென்றலைப் போல் உலவியது.

தமிழ்த்தாய் வாழ்த்தோடு கலைத்தாய்க்குத் தொண்டு செய்யும் கலைமாமணி விருது வழங்கும் விழா தொடங்கியது. மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், மறைந்த கலைமேதைகளின் திருவுருவப் படங்களைத் திறந்து வைத்தார். அம்மேதைகளில் திருமுருக கிருபானந்த வாரியார் உட்பட 14 மேதைகளின் திருவுருவப் படங்கள் இடம் பெற்றிருந்தன. மாண்புமிகு முதல்வர் அவர்கள், அப்படங்களைத் திறந்து வைத்ததும், வந்திருந்த பொதுமக்களில், குறிப்பாக, பெண்கள் வாழ்த்தொலி எழுப்பி கரவொலி செய்தனர். பின்னர் நிகழ்ச்சிக்கு வந்திருந்த பார்வையாளர்களை நோக்கி மாண்புமிகு முதல்வர் அவர்கள் கையசைத்து அவர்களின் வாழ்த்தொலியை ஏற்றுக் கொண்டார்கள். பின்னர் இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழிலும் வித்தகம் புரிந்த சாதனையாளர்கள் 54 பேர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொன்னாடை போர்த்தி, 'கலைமாமணி' விருதுகளை வழங்கினார்.

இசையமைப்பாளர் ஏ.ஆர். ரகுமான்

முதலில் இயற்கலை - பண்பாட்டு அறிஞர் டாக்டர் இரா. நாகசாமி விருதைப் பெற்றுக்கொண்டார். அவரைத் தொடர்ந்து வரிசையாகக் கலைஞர்கள் வந்து விருதுகளைப் பெற்றுக் கொண்டார்கள். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் சேடபட்டி திரு இரா. முத்தையா அவர்கள் பொற்பதக்கங்களைக் கலைஞர்களுக்கு அணிவிக்க மாண்புமிகு முதல்வர் அவர்கள் விருதுகளை வழங்கினார். திரைப்பட இயக்குநர் திரு மணிரத்தினம், திரைப்பட நடிகர் திரு அர்விந்தஸ்வாமி, திரைப்பட இசையமைப்பாளர் திரு ஏ.ஆர். ரகுமான், பின்னணிப் பாடகர்கள் திரு மனோ மற்றும் திருமதி ஜிக்கி ஆகியோர் விருது பெறும்போது அரங்கத்துள் இருந்த பார்வையாளர்கள் தங்களுடைய மகிழ்ச்சியையும், பாராட்டையும் உரத்த குரலிலும், ஓங்கிய கையோசையாலும் தெரிவித்துக் கொண்டார்கள்.

ஸ்ரீநிதி ரங்கராஜன்

புகழ்பெற்ற பரத நாட்டியக் கலைஞர் டாக்டர் ஸ்ரீநிதி ரங்கராஜன் அவர்கள் மாண்புமிகு முதல்வர் அவர்களை வணங்கி விருதை ஏற்றுக் கொண்டார். உணர்ச்சி வயப்பட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள், திருமதி ஸ்ரீநிதி ரங்கராஜனை உச்சிமுகர்ந்து தாய்ப்பாசத்தோடு அணைத்துக்கொண்ட போது அரங்கமே ஒரு நிமிடம் மௌன மாகியது.

பொற்கிழி

முன்னரே கலைமாமணி விருது பெற்ற மூத்த கலைஞர்கள் மூன்று பேர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் பொற்கிழி வழங்கினார். கோவையைச் சேர்ந்த பூமகள் கலைமன்றம் சிறந்த மன்றமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு சுழற்கேடயம் வழங்கப் பட்டது. அதேபோல் சிறந்த கலைத்தொண்டு புரிந்த சென்னையைச் சேர்ந்த பிரம்ம கான சபாவிற்குச் சிறந்த கலை நிறுவனத்திற்கான விருது வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியின் தொடக்கத்தில் தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றத்தின் தலைவர் திரு குன்னக்குடி வைத்தியநாதன் அவர்கள், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தாயுள்ளத்தோடு இயல் இசை நாடக மன்றத்திற்கும் கலையுலகத்திற்கும் ஆற்றி வரும் பணிகளைப் புகழ்ந்துரைத்தார். தொடர்ந்து மன்ற உறுப்பினர் செயலாளர் திரு ஆர்.எஸ். மனோகர் அவர்கள் கடந்த ஆண்டு மன்றம் ஆற்றிய பல்வேறு பணிகளைப் பற்றித் திட்ட அறிக்கை வாசித்தார். இயல் இசை நாடக மன்றத்திற்குப் புகழ் பெற்ற கலைஞர்களின் புகைப் படங்களை வைத்துப் பராமரிக்க அருங் காட்சி அறை வேண்டும் என்று கோரிக்கை வைத்தார். மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் திரு சேடபட்டி இரா. முத்தையா அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்தார். மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க. பொன்னுசாமி அவர்கள் வாழ்த்துரை வழங்கினார். இறுதியாக, மன்ற உறுப்பினர் - செயலர் திரு ஆர்.எஸ். மனோகர் அவர்கள் தனது கோரிக்கையினை உடன் ஏற்றுச் செயல்படுத்த ஆணை பிறப்பித்த மாண்புமிகு முதல்வர் அவர்களை நன்றிப் பெருமிதத்தோடு பாராட்டி நன்றியுரை ஆற்றினார்.

பல்வேறு துறைகளில் கலைத் தொண்டாற்றிய பெருமக்களுக்குப் பாராட்டு முகத்தான் எடுக்கப்படும் இந்த விழா உண்மையிலேயே கலைத்தாய்க்கு பூட்டப்படும் ஒரு பொன் அணியைப் போல, இந்தக் கலைமாமணி விழா, இருந்தது என்றால் அது மிகையல்ல!

நிகழ்ச்சித் தொகுப்பு:
மா. அசோகன்

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

முதன் முதலாக..

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் வரலாற்றில் முதன்முதலாக ஆக்கி விளையாட்டு இடம்பெறுகின்றது. முதன்முறையாக கைப்பந்துப் போட்டிகளில் பாகிஸ்தான் பெண்கள் அணி இடம் பெறுகின்றது. முதன்முதலாக காட்சி விளையாட்டுகளாக

தமிழ்நாட்டைச் சேர்ந்த சிலம்பம் விளையாட்டும், கோகோ விளையாட்டும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்க உள்ளன. முதன்முறையாக 14 விளையாட்டுகள் இப்போட்டி களில் நடைபெறவுள்ளன.

22.11.95 அன்று சீரோடும் சிறப்போடும் நடைபெற்ற
கலைமாமணி விருது வழங்கும் விழாவில்
மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால்
திறந்து வைக்கப்பட்ட மறைந்தும் மறையாத, புகழ்மிக்க கலை மேதைகளின்
திருவுருவப் படங்கள்

சுவாதித் திருநாள் மகாராஜா	-	சாகித்தியகர்த்தா
திருமுருக கிருபானந்த வாரியார்	-	கதா காலட்சேபக் கலைஞர்
திருக்குறள் முனிசாமி	-	இயற்றமிழ்க் கலைஞர்
துவாரம் வெங்கடசாமி நாயுடு	-	வயலின் கலைஞர்
திருவீழிமிழலை எஸ். நடராஜ சுந்தரம் பிள்ளை	-	நாதஸ்வரக் கலைஞர்
வலங்கைமான் ஏ. சண்முகசுந்தரம்	-	தவில் கலைஞர்
கவி. கா. மு. ஷெரீஃப்	-	திரைப்படப் பாடலாசிரியர்
டி. ஏ. சண்முகசுந்தரப் புலவர்	-	பழம்பெரும் இசை நாடக நடிகர்
எல். வி. பிரசாத்	-	திரைப்பட இயக்குநர்
பஞ்சு	-	திரைப்பட இயக்குநர்
எஸ். எஸ். சாப்ஜான்	-	பழம்பெரும் இசை நாடக நடிகர்
எஸ். டி. சுப்புலட்சுமி	-	பழம்பெரும் இசை நாடக நடிகை
ஓ. என். கிட்டு	-	நாடக நடிகர்
ஹெரான் ராமசாமி	-	நாடக நடிகர்

'சுவாதித் திருநாள்'

16.4.1813-ல் திருவனந்தபுரம் அரசு குடும்பத்தில் மகாராணி லட்சுமி பாய்க்குப் பிறந்த சுவாதித்திருநாள், இளமையிலேயே ஆங்கிலம் உட்பட 13 மொழிகளைக் கற்றுத் தேர்ந்தவர். தனது 16-வது வயதிலேயே அரியணை ஏறியது மட்டுமின்றி, பல மொழிகளில் இசைப்பாடல்கள் இயற்றும் ஆற்றலும் பெற்று விளங்கியவர்.

தனது அரசவையில் நாதப்பிரம்மம் தியாகய்யரின் சீடர் கன்னையா உட்பட, அரும்பெரும் கலைஞர்களுக்குச் சரியாசனம் தந்து, கர்நாடக இசையைக் காத்து வளர்த்தவர்.

ஸ்வரஜதிகள், தானவர்ணங்கள், பதவர்ணங்கள், கிருதிகள், பதங்கள், தில்லானாக்கள், ஜாவளிகள், இராகமாலிகைகள் மற்றும் எல்லா வகையான இசைகளையும், இந்துஸ்தானி இசையில் துருவபதங்கள், கயல்கள் ஆகியவற்றையும் இயற்றிய பெருமைக்குரியவர். பக்திரசம் பொங்க அவர் படைத்த நவராத்திரி கீர்த்தனைகளும் நவரத்தின மாலிகைக் கீர்த்தனைகளும் பாவலர்களையும் மயக்கத் தக்கவை.

கதா காலட்சேபக் கலைஞர்
திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள்

முத்தமிழ்வித்தகர் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள் வட ஆற்காடு, காங்கேய நல்லூரில் 25.8.1906ல் பாரம்பரைச் சிறப்புமிக்க புலவர் குலத்தில் அவதரித்தவராவார். தாயார் திருமதி கனகவல்லியம்மையார். தந்தையார் திருமல்லையதாச பாகவதர்.

அவர் பெற்ற சிறப்புகள், சாதனைகள், ஆற்றிய திருப்பணிகள் எண்ணற்றவை. இத்தகைய பேறுபெற்ற பெரியார் காஷ்மீர் முதல் கன்னியாகுமரி வரை, எண்ணரிய மூர்த்தி தலங்கள் தீர்த்தங்களைக் கண்டு வழிபட்ட பெரும் பண்பாளர். அவரது கலை கடவுட் கலை. அவரது கதைகள் யாவும் இறைவன் புகழ்பேசும் இன்னருட் தமிழ்ச் செல்வங்கள் 'அழகிய எளிய இனிய இலக்கியத் தமிழில்' அவர் வரைந்த நூல்கள் பலப்பலவாகும். அருணகிரிநாதரின் திருப்புகழுக்கு அவர் வரைந்த உரைநூல் என்றும் நின்று நிலைப்பதாகும்.

முத்தமிழ் முறுவலுடன் அருவி நடை வாய்ந்த அவரது ஹரிதைகள் பண்டிதர் முதல் பாமரர் உட்பட பல்லாயிரக்கணக்கான மக்களைப் பரவசப் படுத்துவதோடு, பண்பாளர்களாக்கும் ஆற்றலும் பெற்றவை.

மறைந்தும்
மறையாத
புகழ்மிகு
கலைமேதை

இயற்றமிழ்க் கலைஞர்
திருக்குறள் வீ. முனிசாமி அவர்கள்

திருக்குறள் வீ முனிசாமி அவர்கள் 9.11.1916-ஆம் நாள் தென்னாற்காடு மாவட்டம் விழுப்புரத்தில் பிறந்தார். தாயார் வீரம்மாள். தந்தையார் திருவீராசாமி.

1951-ஆம் ஆண்டு குடந்தையில் பெரும் புலவர்களும் பேராசிரியர்களும் கூடிய விழாவில், 'திருக்குறளார்' என்ற பட்டமும், 1954-ஆம் ஆண்டில் சேலத்தில் சர்.பி.டி.ராஜன் அவர்களால் "தமிழ் மறைக் காவலர்" என்ற பட்டமும், 1956-ஆம் ஆண்டில் ரிஷிகேசம் மகரிஷி சிவானந்தர் அவர்களால் "திருக்குறள் கேசரி" என்ற பட்டமும் வழங்கப்பட்டவர். பல அரசியல் தலைவர்களாலும், ஆதீன மடத் தலைவர்களாலும் பொன்னாடைகள், போர்த்திச் சிறப்பிக்கப் பட்டவர். விழுப்புரம் நகராட்சி உறுப்பினராகச் சிறிது காலமும், நாடாளுமன்ற உறுப்பினராக 5 ஆண்டுகளும் தொண்டாற்றிய அவர் தமிழக அரசின் தமிழ்ப் பழங்கலை இயக்கக இயக்குநராகவும் 3 ஆண்டுகள் பணியாற்றியுள்ளார்.

மறைந்தும்
மறையாத
புகழ்மிகு
கலைமேதை

வயலின் இசை மேதை
துவாரம் வெங்கடசாமி நாயுடு அவர்கள்

ஆண்டவன் அளித்த அந்தகப் பிறவியை அரும்பேறாகவும், ஆசானாகவும் தன் மீது அன்பு செலுத்திய அண்ணனை அதினினும் உயர்வாகவும் எண்ணி இறைவனுக்கு நன்றி செலுத்தும் வண்ணம் தனது இடைவிடா முயற்சியால், அதிமேதை வயலின் கலைஞராக, அகிலம் புகழ பவனிவந்தவர் துவாரம் வெங்கடசாமி அவர்கள்.

கஞ்சிரா வாசிப்பதிலும் கைதேர்ந்த பயிற்சி பெற்றிருந்த அவர், கர்நாடக இசைத் தத்துவத்தின் அடிப்படையில் வடநாட்டு மேற்கத்திய இசையை நம் நாட்டு இசைக்குப் பங்கம் வராதவாறு வாசித்து வான்புகழ் எய்தியவராவார்.

தனக்கெனத் தேர்ந்ததோர்த் தனிப்பாணியை வகுத்துக்கொண்டு எண்ணற்ற மாணவர்களுக்கு அவ்வழியில் பயிற்சியளித்து ஒரு புதிய பாரம்பரியத்தை உருவாக்கியவர். தனது காலத்தில் புகழ்க்கொடி நாட்டிய பெருமைக்குரிய இசைவாணர்களுக்குப் பக்கவாத்தியம் வாசிப்பதோடு நில்லாமல் தனி வயலின் இசை நிகழ்ச்சிகளையும் கலை விற்பன்னர்கள் கூடிய சபைகளின் முன் நடத்திக்காட்டி, இறுதி வரை யாரும் போற்றும் வண்ணம் பேரும் புகழுமாக வாழ்ந்தவர். தனது வளமான வயலின் இசைக்கலைப் பெருமையை அயல் நாட்டினரும் அறிந்து போற்றச்செய்தவர்.

மறைந்தும் மறையாத புகழ்மிகு கலைமேதை

நாதசுரக் கலைஞர் திருவீழிமிழலை
திரு. எஸ் .நடராஜ சுந்தரம் பிள்ளை அவர்கள்

திரு. திருவீழிமிழலை எஸ்நடராஜசுந்தரம் பிள்ளை அவர்கள் 14.7.1898-ல் தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருவீழிமிழலை என்ற ஊரில் பிறந்தார்,

தமிழ்நாட்டில் மட்டுமின்றி, ஆந்திரம், கேரளம், கன்னடம் ஆகிய மாநிலங்களிலும் விஜயநகரம், மைசூர் ஆகிய சமஸ்தானங்களிலும், தருமபுரம் திருவாவடுதுறை ஆகிய ஆதீனங்களிலும் மற்றும் அகில இந்திய மாநிலங்களின் முக்கிய சங்கீத சபைகளிலும் தமது சகோதரரோடு கச்சேரிகள் செய்து, பரிசுகளும் பாராட்டுதல்களும் பெற்றுப் புகழடைந்தவர். பலருக்குக் கலைப்பயிற்சியும் அளித்தவர்.

தவில் கலைஞர்
வலங்கைமான் திரு. ஏ. சண்முகசுந்தரம் அவர்கள்

வலங்கைமான் திரு.ஏ.சண்முகசுந்தரம் அவர்கள் தஞ்சை மாவட்டச் சேகல்மடப்புரம் என்ற ஊரில் பிறந்தார். தனது ஏழாவது வயதில் அவரது தகப்பனார் ஏ.வி.ஆறுமுகம் பிள்ளையிடம் யாழ்ப்பாணத்தில் தவில் கலை பயில ஆரம்பித்தார்.

தாய்நாடு திரும்பி நாச்சியார் கோயில் பிரபல தவில் வித்வான் திரு.என்.பி.இராகவ பிள்ளையிடமும் கீரனூர் பிரதர்ஸ் திரு.சின்னத்தம்பி பிள்ளை, திரு கண்ணப்பா பிள்ளையிடமும் மேலும் கலைப் பயிற்சி பெற்று அவர்களுடனும் வாசித்தும், புகழ் பெற்றுள்ளார்.



திரைப்படப் பாடலாசிரியர்
கவி. கா.மு. ஷெரீஃப் அவர்கள்

கவி.கா.மு.ஷெரீஃப் அவர்கள் தஞ்சை மாவட்டம் அபிவிருத்தீஸ்வரத்தில் 1914-ல் பிறந்தார்.

நாடகத் தொண்டில் ஈடுபட்டிருந்த அவர் கால்நூற்றாண்டு காலமாகத் தமிழ்த் திரைப்படங்களுக்கு 400-க்கும் மேற்பட்ட பாடல்கள் புனைந்தவர். சில திரைப்படங்களுக்குக் கதை வசனமும் எழுதியவர். பல்லாண்டுகளாகப் பத்திரிகை ஆசிரியராகவும், பணியாற்றியவர். நாடகம், நாவல், சிறுகதை, கவிதை, கட்டுரை, அரசியல் ஆகிய பல துறைகளிலும் இருபதுக்கும் மேற்பட்ட நூல்களை இயற்றியவர். அவர் இயற்கை எய்திய ஆண்டு 1994. மக்கள் பாராட்டும் பல பாடல்களை எழுதிப் புகழ்பெற்றுச் சிறந்த திரைப்படப் பாடலாசிரியராக விளங்கினார்.

பழம்பெரும் இசை நாடக நடிகர்
திரு. டி.ஏ. சண்முகசுந்தரப் புலவர் அவர்கள்

பழம்பெரும் இசை நாடக நடிகர் திரு.டி.ஏ.சண்முகசுந்தரப் புலவர் 1909-ஆம் ஆண்டு ஜனவரி மாதம் நான்காம் நாள் தென்காசியில் பிறந்தார்.

தஞ்சை தில்பாதோஸ், அமீர்கான் அலி சாகிப் நாடகக் குழுவிலும், திரு.வள்ளி வைத்தியநாதய்யர் அவர்களின் நாடகக் குழுவிலும் தொடக்கத்தில் நடிக்கப் பயிற்சி பெற்று, பின்னர் மதுரை பால மீனரஞ்சனி சங்கீத நாடக சபாவிலும், திரு.கிருஷ்ணய்யர் அவர்கள் கம்பெனியிலும் ஸ்பெஷல் நாடகங்களிலும் பல்வேறு வேடங்களில் நடித்துப் பலராலும் பாராட்டப் பெற்றவர்.

மறைந்தும் மறையாத புகழ்மிகு கலைமேதை



திரைப்படத் தயாரிப்பாளர்
எல்.வி. பிரசாத்

அக்கினேனி லட்சுமி வரபிரசாத ராவ் என்ற திரு.எல்.வி.பிரசாத் அவர்கள், திரைப்பட வரலாற்றில் மூத்தக் கலைஞராகவும், சிறந்த நிபுணராகவும் விளங்கியவராவார்.

, 1970ல் 'மிலோனா' என்ற இந்திப் படத்தைத் தயாரித்ததற்காக "பிலிம் ஃபேர்" நிறுவன விருதையும், 1980 ல் 'உத்யோக் பத்ரா' விருதையும், 1978 ல் ராஜா சாண்டோ நினைவு விருதையும், 1980ல் 'ரகுபதி வெங்கையா' விருதையும், 1983ல் 'ராம்நாத்' விருதையும், 1983ல் 'கலாதபஸ்வி' விருதையும், 1982ல் 'தாதா சாஹிப் பால்கே' விருதையும், 1985ல் 'கலா பிரபூர்ணா' விருதையும், 1987ல் 'ஆந்திர ரத்னா' விருதையும் மற்றும் பல பரிசுகளையும் பாராட்டுகளையும் பெற்று விளங்கியவராவார்.



திரைப்பட இயக்குநர்
திரு. பஞ்சு அவர்கள்,

தஞ்சை மாவட்டம் உமையாள்புரத்தில் திருமதி சுப்புலட்சுமி, திரு.சுப்பிரமணியன் தம்பதியர்க்குப் பிறந்தவர் திரு பஞ்சு அவர்கள்

அவரது உழைப்பால் பிறந்த முதற்படம் 'பூம்பாவை' அதுவே 100 நாட்களுக்கு மேல் திரை அரங்குகளில் பிரகாசித்ததாகும் அடுத்தடுத்து அவர் படைத்தவைகளுள் உயர்ந்தவை என்று துவங்கினால் 'தெய்வப் பிறவி', 'குலதெய்வம்', 'குழந்தையும் தெய்வமும்', 'அன்னை', 'உயர்ந்த மனிதன்', 'பைத்தியக்காரன்', 'பராசக்தி', 'சர்வர் சுந்தரம்', 'பிள்ளையோ பிள்ளை' என்று பட்டியல் வளர்ந்து வருமே தவிர முற்றுப் பெறாது அவற்றில் பலவற்றிற்காகத் தமிழக, மத்திய, அரசின் பரிசுகளையும் பல விருதுகளையும் பெற்றவர்

இசை நாடக நடிகர்
திரு.எஸ்.எஸ். சர்ப்ஜான் அவர்கள்

திரு.எஸ்.எஸ்.சாப்ஜான் 1906-ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் மதுரை மாவட்டம் ஒரத்தட்டு என்னும் கிராமத்தில் பிறந்தார். தாயார் உசேன் பீவி தந்தையார் சந்தாமியான் சாயபு.

தமது 12-வது வயது முதல்-சங்கரதாஸ் சுவாமிகள். பீர் முகம்மது பாவலர். சங்கரலிங்கக் கவிராயர் ஆகிய புகழ்பெற்ற ஆசிரியர்களிடம் நாடக நடிப்புத் துறையில் பயிற்சி பெற்றவர். அந்நாளில், நாடகங்களில் பெண் வேடம் மட்டுமே ஏற்று நடித்த ஆண் நடிகர்கள், வெகு சிலரில் திரு.சாப்ஜான் அவர்கள் சிறப்பு மிக்கவராவார். புராணசரித்திர நாடகங்களில் பெண் பாத்திரங்களில் இணையின்றி நடித்துப் புகழ்பெற்றவர்.

நாடகத் திரைப்பட நடிகை
திருமதி எஸ்.டி. சுப்புலட்சுமி.

17.11.1918 ஆம் ஆண்டில் திருநெல்வேலி திரு துரைசாமி அவர்களின் மகளாகத் தோன்றிய திருமதி எஸ்.டி.சுப்புலட்சுமி அவர்கள் தனது 5-வது வயதிலேயே சிறந்த இசைக்கலைஞராகத் தமிழகத்தில் அறிமுகமானவர்.

பின்னர் மதுரை திரு சுப்பையாப்பிள்ளை அவர்களின் நாடக மன்றத்தில் இணைந்து முன்னாள் முதுபெருங்கலைஞர் எழிசை மன்னர் திரு எம்.கே.தியாகராஜ பாகவதருடன் அல்லி தர்பார், பவளக்கொடி ஹரிதாஸ் கிருஷ்ண துலாபாரம் ஆகிய பிரபல இசை நாடகங்களில் முக்கியப் பாத்திரங்களேற்று நடித்துக் கலையன்பர்களின் பேராதரவைப் பெற்றுப் பிரபலமானவர்

நாடக நடிகர்

திரு. ஓ.என். கிட்டு அவர்கள்

திரு.ஓ.என்.கிட்டு அவர்கள் சிதம்பரம் தாலுக்கா ஒடாக்கநல்லூர் கிராமத்தில் பிறந்தவர். தாயார் திருமதி சிவபாக்கியம். தந்தையார் திரு.நடராஜன் தமது பத்தாவது வயதிலேயே கிராமத்தில் நடந்த காமன் பண்டிகைத் திருவிழாவில் மன்மதனாக நடித்தவர் பின்னர், நாடகாசிரியர் திரு.யதார்த்தம் பொன்னுசாமி பிள்ளை அவர்களின் மதுரை ஸ்ரீ பாலகான சபாவில் சுமார் 12 ஆண்டுகள் நடிகராகப் பணியாற்றி மனோகரா, பதிபக்தி, பம்பாய் மெயில், இழந்த காதல், விமலா, கண்டிராஜா மற்றும் பல நாடகங்களில் கதாநாயகனாக ஆயிரக்கணக்கான தடவைகள் நடித்துப் புகழ்பெற்றவர்.

மறைந்தும் மறையாத புகழ்மிகு கலைமேதை

நாடக நடிகர்

திரு. ஹெரான் ராமசாமி அவர்கள்

திரு.ஹெரான் ராமசாமி அவர்கள் 26.8.1933 அன்று நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஆய்க்குடி கிராமத்தில் பிறந்தவர். தாயார் திருமதி கருப்பாயி அம்மாள். தந்தையார் திரு.சுடலை முத்து [illegible]லியார்.

[illegible]து சொந்த நாடகக் குழுவான 'ஹெரான் தியேட்டர்ஸ்' நிறுவனத்தின் மூலமாகச் சிறந்த புராண சரித்திர நாடகங்களைத் தயாரித்துப் பல கலைஞர்களுக்கு நடிப்புப் பயிற்சியும் அளி[illegible]னார். அவர் மாணவர்களில் பலர் நாடக[illegible]ரில் மட்டுமின்றி திரைப்படங்களிலும் நடித்துப் புகழ்பெற்று விளங்கி வருகின்றனர். 'நாட[illegible] காவலர்' திரு.ஆர்.எஸ்.மனோகர் அவர்களது 'சூரபத்மன்' நாடகத்தில் சுக்கிராச்சாரியார் வேடத்தில் திறம்பட நடித்துப் பத்திரிகைகளால் பாராட்டப் பெற்றதுடன் மயிலை [illegible]ர் அகாடமியால் 'சிறந்த நடிகர்' எனப் பட்டமும் பெற்றவராவார்.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி

பேருந்து வசதிகள்

சென்னையில் நடைபெறும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்காக மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் பொதுமக்கள் விளையாட்டுப் போட்டிகளைக் கண்டு களிக்க வசதியாக சிறப்புப் பேருந்துகளை அனைத்து விளையாட்டரங்கங்களுக்கும் இயக்க ஆணை பிறப்பித்துள்ளார். அதற்கிணங்க டாக்டர் அம்பேத்கர் போக்குவரத்துக் கழகம் சிறப்புப் பேருந்துகளை ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கம், புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கம், நுங்கம்பாக்கம் டென்னிஸ் விளையாட்டரங்கம், வேளச்சேரி நீச்சல்குள விளையாட்டரங்கம், எழும்பூர் ஆக்கி விளையாட்டரங்கம், வீராபுரம், அலமாதி துப்பாக்கிச் சுடும் களம், கலைவாணர் அரங்கம், ஐ.ஐ.டி. வளாகம், சாந்தோம் மேல்நிலைப்பள்ளி ஆகிய இடங்களுக்குச் சென்று வர இயக்க உள்ளது.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை முன்னிட்டு சென்னையில் முக்கியத் தடங்களில் ஓடுகின்ற பேருந்துகளில் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளின் இலச்சினையான பாயும் இளஞ்சிங்க உருவப்படம் பொறிக்கப்பட்டுள்ளது.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்

வியக்க வைக்கும் விளையாட்டு நகரம்

தமிழ்நாட்டு விளையாட்டு வளர்ச்சியின் விடிவெள்ளி மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள், தமிழகத்து விளையாட்டு வீரர்கள் சர்வதேசப் விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெற்று வெற்றிவாகை தூடிட [illegible]யாக, தொலை நோக்குச் சிந்தனையோடு தமிழ் நாட்டில் சர்வதேசத் தரத்தில் விளையாட்டு அரங்கங்களை நிறுவி, சர்வதேசப் போட்டிகளையும் நடத்தி, தமிழகத்து விளையாட்டு வீரர்களுக்கு ஒரு புதிய உற்சாகத்தை உருவாக்கி வருகிறார். அந்த வரிசையில் தற்போது உலகமே உற்று நோக்கும் விதத்தில் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை சென்னை மாநகரத்தில் சீரோடும் சிறப்போடும் நடத்திட அனைத்து முயற்சிகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் மேற்கொண்டுள்ளார்.

சர்வதேசத் தரத்தில் ஏழே மாதத்தில் ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கத்தை அமைத்து சாதனைபுரிந்த மாண்புமிகு முதல்வர் அவர்கள், தற்போது ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளை சென்னையில் நடத்தத் தேவையான விளையாட்டு அரங்கங்களை சர்வதேசத்தரத்தில் அமைத்துள்ளார்.



உலகம் போற்றும் ஒலிம்பிக் போட்டிகளில் அமைக்கப்படும், வீரர் - வீராங்கனைகள் தங்குவதற்கான விளையாட்டுக் கிராமத்தைப் போல், தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் வரலாற்றில் முதன்முறையாக சென்னையில் விளையாட்டு வீரர்களுக்காகத் தனியே அனைத்து வசதிகளுடன் கொண்ட விளையாட்டுக் கிராமத்தை மாண்புமிகு முதல்வர் அவர்கள் ரூ.101 கோடி மதிப்பீட்டில் சென்னை

கோயம்பேட்டில் அமைத்துள்ளார்.

குடியிருப்புகள்

பதினொரு மாதங்களுக்கு முன்னால் குண்டும் குழியுமாக புதர்கள் மண்டிக்கிடந்த கோயம்பேடு பகுதியில் 35 ஏக்கர் பரப்பளவில் 560 குடியிருப்புகளை காண்போரின் கண்கள் அதிசயிக்கத்தக்க வகையிலே கட்டிமுடித்து இன்னுமொரு சாதனையையும் செய்துள்ளார்.

இந்தக் குடியிருப்புகளில் 304 குடியிருப்புகள் மூன்று படுக்கையறை வசதிகளையும், மீதமுள்ள குடியிருப்புகள் இரண்டு படுக்கையறை வசதிகளையும் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. மேலும் 2,000 பேர் ஒரே சமயத்தில் உணவு அருந்துகின்ற வகையில் மிகப்பெரிய உணவருந்தும் கூடமும், தந்தி மற்றும் தபால் அலுவலகமும், வங்கி வசதியும், வணிக வளாகமும் கட்டப்பட்டுள்ளன.

பூங்கா

விளையாட்டு நகர வளாகத்தில் ரூ.25 இலட்சம் மதிப்பீட்டில் 9 பூங்காக்கள் உலகப் புகழ்பெற்ற தோட்டக் கலை நிபுணர் திருமதி மஞ்சுளா ராவ் அவர்களின் நேரடிப் பார்வையில் அமைக்கப்பட்டுள்ளன.

விளையாட்டு நகருக்குள் அனைத்துப் பகுதிகளுக்கும் சென்று வர அனைத்துச்சாலை வசதிகளும், காற்றோட்டமான குடியிருப்பு வசதிகளும் அமைக்கப்பட்டுள்ளன. கிட்டத்தட்ட 2,000 விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் தங்க முடியும்.

சர்வதேசத் தரத்தில் விளையாட்டுக் கருவிகள்

சர்வதேசத்தரத்தில் விளையாட்டரங்கங்களும், விளையாட்டுக் கருவிகளும் இருக்க வேண்டும் என்பதற்காக, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி, ரூ.5 கோடி மதிப்புள்ள விளையாட்டுக் கருவிகள் வெளிநாடுகளிலிருந்து ஏழாவது தெற்காசியப் போட்டிக்காக இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

செயற்கை இழையிடப்பட்ட ஹாக்கி விளையாட்டுத்தளமும், துப்பாக்கிச் சுடுவதற்குப் பயன்படும் குறிப்பலகை மற்றும் குத்துச்சண்டைக்குப் பயன்படும் கையுறைகள் முதலியன ஜெர்மனி நாட்டிலிருந்து தருவிக்கப்பட்டுள்ளன.

ஜூடோ விளையாட்டுக்கான தரை விரிப்புகள், கூடைப்பந்தாட்டப் போர்டுகள், பெல்ஜியத்திலிருந்தும், மற்போருக்குப் பயன்படும் தரைவிரிப்புகள், கைப்பந்து ஆடுதளத்திற்கு வேண்டிய பொருள்கள் முதலியவை பிரான்ஸ் நாட்டிலிருந்தும், வேளச்சேரி நீச்சல் விளையாட்டரங்கில் பொருத்தப்பட்டுள்ள எலக்ட்ரானிக் அறிவிப்புப் பலகை சுவிட்சர்லாந்திலுள்ள ஓமேகா நிறுவனத்திலிருந்தும், கைப்பந்துக் கம்பங்கள், வலைகள் ஜப்பான் நாட்டிலிருந்தும், இறக்குமதி செய்யப்பட்டுள்ளன.

சென்னையில் நடைபெறும் 7-ஆவது தெற்காசியப் போட்டிகளில் பயன்படும் பந்துகள் (அதாவது கைப்பந்துகள், கூடைப் பந்துகள், ஹாக்கிப்பந்துகள், கால்பந்துகள்) யாவும் சிங்கப்பூரிலிருந்து வந்துள்ளன. இது தவிர, சிங்கப்பூரிலிருந்து வரவழைக்கப்பட்ட எடையைத்தான் பளுதூக்கும் போட்டியில் கலந்து கொள்பவர்கள் தூக்கப்போகிறார்கள் என்பதும் கனமான செய்திதானே!

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டி

இந்திய அணியினர் நம்பிக்கை

தெற்காசியக் கூட்டமைப்பு விளையாட்டுப் போட்டிகள் இதுவரை 6 முறை நடைபெற்று தற்போது ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் வரும் டிசம்பர் 18 முதல் 27 வரை நடைபெற உள்ளது. இதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்கள் திறம்படச் செய்து வருகிறார்கள்.

இதுவரை நடந்த தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் அனைத்திலும் இந்தியா பதக்கம் குவிப்பதில் முன்னணியில் திகழ்ந்து வந்திருக்கிறது. தற்போது நடைபெறப் போகும் இப்போட்டியிலும் இந்தியத் திருநாட்டிற்குத் தங்கப்பதக்கங்களைக் குவிக்க நமது அணிகள் தயாராக இருக்கின்றன.

இப்போட்டிகளில் மொத்தம் 14 விளையாட்டுகளும் சிலம்பம் மற்றும் கோகோ ஆகிய இரு விளையாட்டுகள் காட்சி விளையாட்டுகளாகவும் சேர்க்கப்பட்டுள்ளன. போட்டிகளின் அனைத்து விளையாட்டுப் பிரிவுகளிலும் இந்திய அணி இடம் பெற்றிருப்பது சிறப்பம்சமாகும். அனைத்துப் போட்டிகளிலும் நம் வீரர்களும், வீராங்கனைகளும் வெற்றிகளைக் குவிப்பதற்காகத் தயாராகி வருகிறார்கள்.

கபடிப் போட்டி

தொடர்ந்து 4 முறை தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியக் கபடி அணி பங்கேற்று தங்கப் பதக்கங்களைக் குவித்த வீர வரலாறு உண்டு. ஆனால், அண்மையில் ஆறாவது

கபடிப்போட்டி

தெற்காசிய விளையாட்டுப் போட்டி நடந்த டாக்கா நகரில் எதிர்பாரா விதமாக இந்திய அணி பாகிஸ்தான் அணியிடம் வெற்றி வாய்ப்பை இழக்க நேரிட்டது. அதன் பின்னர், எந்தெந்த நுணுக்கங்களைக் கையாளுவதற்குத் தவறிவிட்டார்களோ, அவற்றையெல்லாம் சரிசெய்து ஆட்ட வீரர்களின் திறமையை அதிகப்படுத்தும் வகையில் கடுமையான பயிற்சிகளை அளித்து, புதிய இளம் வீரர்களையும் சேர்த்திருப்பதன் காரணமாகத் தற்போது இந்திய அணிக்கு வெற்றி வாய்ப்பு ஒளிமயமாக உள்ளது.

இந்தியக் கபடி அணியில் பல முறை தங்கத்தை வென்று சர்வதேச அளவில் போட்டிகளில் பங்கேற்ற பட்டறிவுப் படைத்த தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு பாஸ்கரன் அணியின் தலைவராக நியமிக்கப் படடுள்ளார். அவரைத் தவிர தமிழ்நாட்டைச் சேர்ந்த திரு முருகானந்தம், திரு சாமியப்பன், திரு வைத்தியலிங்கம் ஆகியோர் இடம் பெற்றிருக்கிறார்கள்.

திரு ஹொன்னப்பா, திரு ராம்மேகர், திரு ஓம்பிரகாஷ், திரு ரமேஷ், திரு தரம்வீர் சிங்,

கூடைப்பந்தாட்டம்

திரு ராகேஷ்குமார், திரு லோகேந்தர்பால், திரு எச்.என். கட்டாரியா ஆகியோர் இந்திய அணியில் உள்ள மற்ற வீரர்கள் ஆவர்.

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் கபடிப் போட்டியின் தலைவர் திரு பி. பாண்டியன், இ.கா.ப. அவர்கள், "இந்த முறை நிச்சயம் இந்தியக் கபடி அணி தங்கம் வெல்லும். அதற்கான கடும் பயிற்சிகளை நம் அணியினர் பெற்றுள்ளார்கள்" என்று தெரிவித்தார். அணியின் தலைவர் திரு பாஸ்கரன் பேசும்போது, "நமது அணி வீரர்கள் குறிப்பாக சாமியப்பன், முருகானந்தம், வைத்தியலிங்கம், கட்டாரியா, லோகேந்திரபால், ஹொன்னப்பா ஆகியோர் களத்தில் பாடிச் சென்று (ride) எதிர் அணியை வீழ்த்துவதில் வல்லவர்கள். இதுதவிர, நமது அணி வீரர்கள் தற்காப்புக் கட்டுக்கோப்பிலும் கடுமையான, பயிற்சிகளைப் பெற்றுள்ளார்கள். எனவே இம்முறை நிச்சயமாகத் தங்கத்தை வென்று வாகை சூடுவோம். கபடி விளையாட்டிற்கும் மற்ற விளையாட்டு வளர்ச்சிக்கும் காப்பரணாகத் திகழும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கு பெருமை சேர்ப்போம்" என்று உறுதியோடு கூறினார்.

கபடிப் போட்டிகள் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள நேரு பூங்காவில் 19.12.95 முதல் 22.12.95 முடிய நானகு நாட்களுக்கு நடைபெறும். இப்போட்டிக்காகவே சிறப்பாக

அமைக்கப்பட்ட மின்னொளி ஆடுகளத்தில் ஆட்டங்கள் நடைபெறுகின்றன.

கூடைப்பந்துப் போட்டி

கூடைப்பந்து விளையாட்டு, தெற்காசிய விளையாட்டுப் போட்டி வரலாற்றில் 1987-ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற போதுதான் சேர்க்கப் பட்டது. இந்தியக் கூடைப்பந்து அணி 1987-ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளிலும், பின்னர் 1991-இல் பாகிஸ்தான், இஸ்லாமாபாத்தில் நடைபெற்ற போட்டிகளிலும் வெற்றிவாகை சூடி தங்கத்தை வென்றது. தற்போது இளம் வீரர்களை அணியில் சேர்த்து அணியின் திறமையை அதிகப்படுத்தி பல்வேறு சர்வதேசப் போட்டிகளில் பங்கேற்ற, திரு. சன்னி அவர்கள் தலைமையில் அமைக்கப்பட்டுள்ளது. இப்போட்டிகள் சென்னை கீழ்ப்பாக்கத்தில் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா உள்ளுறை விளையாட்டரங்கத்தில் டிசம்பர் 19 முதல் 21 முடிய 3 நாட்களுக்கு நடை பெறவுள்ளது. இப்போட்டிகளில் இந்தியா, வங்காளதேசம், பாகிஸ்தான், இலங்கை ஆகிய நான்கு நாடுகளே பங்கு பெற்றாலும் கடும் போட்டி இந்தியாவிற்கும் பாகிஸ்தானுக்கும் தான் நடைபெறும் என்று எதிர் பார்க்கப்படுகிறது.

இந்தியக் கூடைப்பந்துப் அணியின் தலைவர் திரு சன்னி அவர்கள் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில்

கைப்பந்துப்போட்டி

நிச்சயமாக இந்தியக் கூடைப் பந்து அணி தங்கத்தை வெல்லும் என்று நம்பிக்கையோடு தெரிவித்துள்ளார்.

இந்தியக் கைப்பந்து அணி

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிக்கு இந்தியக் கைப்பந்து ஆண்கள் அணியும் மற்றும் பெண்கள் அணியும் கலந்துகொள்கின்றன. 1987-ஆம் ஆண்டு கல்கத்தாவில் நடைபெற்ற போட்டிகளிலும், 1991-ஆம் ஆண்டு இஸ்லாமாபாத்தில் நடைபெற்றப் போட்டிகளில் மட்டுமே இந்திய ஆண்கள் கைப்பந்து அணி வெற்றி பெற்றுள்ளது. சென்றமுறை டாக்காவில் நடைபெற்ற ஆறாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியக் கைப்பந்து ஆண்கள் அணி வெற்றிவாய்ப்பை இழந்துவிட்டதால், தற்போது வீரர்களிடையே கடுமையான பயிற்சிகளையும், புதிய நுணுக்கங்களையும் கற்றுக்கொடுத்துள்ளதாக அணியின் பயிற்றுநர் திரு பாண்டியன் அவர்கள் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெண்கள் கைப்பந்து அணி 1993-ஆம் ஆண்டு டாக்காவில் நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் தங்கப்பதக்கத்தை வென்று வந்தது. அதே நிலையில் வலுவுள்ள அணியாக இருந்து வருவதாலும், தொடர்ந்து பெங்களூரில் கடும் பயிற்சிகள் கொடுக்கப்பட்டதாலும் இந்தியப் பெண்கள் கைப்பந்து அணி இம்முறையும் தொடர்ந்து தங்கத்தைத் தக்கவைத்துக் கொள்ளும் என்று அணியின் பயிற்சியாளர் திரு பிஜி. நாயர் தெரிவித்துள்ளார்.

கைப்பந்துப் போட்டியைப் பொறுத்தவரையில் இந்தியாவுக்கும் இலங்கைக்குமே கடும் போட்டி இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. சென்னையில் நடைபெறும் போட்டிகளில் இந்தியா, நேப்பாளம், பாகிஸ்தான், இலங்கை, வங்காளதேசம் ஆகிய நான்கு நாடுகள் பங்கேற்கின்றன.

போட்டிகள் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா

உள்ளுறை விளையாட்டரங்கில் டிசம்பர் மாதம் 22 முதல் 26 முடிய ஐந்து நாட்களுக்கு நடைபெறும்.

இந்திய நீச்சல் வீரர்கள்

நீச்சல் போட்டியைப் பொறுத்தவரை இந்தியாவின் நம்பிக்கை நட்சத்திரங்களான சபாஸ்டியன் சேவியர், சுரேஷ் குமார், அபிஜித் ஆகியோர் இம்முறையும் நிச்சயம் தங்கத்தை வெல்வோம் என்று நம்பிக்கைத் தெரிவித்துள்ளார்கள். சபாஸ்டியன் சேவியர் 1991-ஆம் ஆண்டு கொழும்பில் நடைபெற்ற போட்டிகளில் தங்கத்தை வென்றவர். அதேபோல் அபிஜித் 1993-ஆம் ஆண்டு டாக்காவில் நடைபெற்ற நீச்சல் போட்டியில் தங்கத்தை வென்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

சபாஸ்டியன் சேவியர்

மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் முயற்சியினால் சர்வதேசத் தரத்தில் வேளச்சேரியில் புதிதாகக் கட்டப்பட்ட நீச்சல் விளையாட்டரங்கம், தங்களுக்குக் கிடைத்த வரப்பிரசாதம் என்று பெருமையோடு வீரர்கள் தெரிவித்தார்கள். இவ்விளையாட்டரங்கம் மூலம் தங்களுடைய நீச்சல் திறமைகளைப் பன்மடங்காகப் பெருக்கி தாய் நாட்டிற்குத் தங்கத்தை எளிதில் கொண்டு வருவோம் என்று கூறியுள்ளார்கள்.

நீச்சல்

டென்னிஸ்

இந்திய டென்னிஸ் விளையாட்டின் நம்பிக்கை நட்சத்திரமான தமிழ்நாட்டைச் சேர்ந்த நிருபமா நிச்சயம் தங்கத்தை வெல்லுவார் என்று எல்லோராலும் எதிர்பார்க்கப்படுகிறது. சென்ற முறை நடைபெற்ற தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இலங்கை அணி வெற்றி பெற்றாலும் இம்முறை இந்திய டென்னிஸ் விளையாட்டில் தங்கம் வெல்லும் என்று நிருபமா தெரிவித்துள்ளார்.

மகளிருக்கான டென்னிஸ் போட்டியில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகள் மட்டுமே மோதுகின்றன. டென்னிஸ் விளையாட்டுகள் சர்வதேசத் தரத்தில் நுங்கம்பாக்கத்தில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய முயற்சியால் கட்டப்பட்டுள்ள டென்னிஸ் விளையாட்டரங்கத்தில் டிசம்பர் மாதம் 19 முதல் 23 முடிய நடைபெறவுள்ளது. அனைத்துப் போட்டிகளிலும் 41 வீரர் வீராங்கனைகள் பங்குபெற உள்ளார்கள்.

இந்திய ஆக்கி அணி

சர்வதேசத் தரத்தில் சென்னை, எழும்பூரில் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் சீரிய முயற்சியால் அமைக்கப்பட்டுள்ள ஆக்கி விளையாட்டரங்கில் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் வரலாற்றில் முதன்முறையாக ஹாக்கி விளையாட்டு இடம் பெற்று நடைபெறப்போகிறது. ஹாக்கி விளையாட்டில் இந்திய அணிக்கு திரு பர்கத் சிங் தலைவராக இருக்கிறார். அவருக்கு உறுதுணையாக திரு முகேஷ் குமார் எனும் முன்னணி ஆட்டக்காரர் இருக்கிறார். ஹாக்கி விளையாட்டைப் பொறுத்தவரையில் "கோல்டன் பாய்" என்று அழைக்கப்படும் பாகிஸ்தானைச் சேர்ந்த ஷாபாஸ் அகமது என்பவருக்குச் சவாலாக திரு முகேஷ்குமார் இருப்பார் என்று ஹாக்கி விளையாட்டு ஆர்வலர்களால் எதிர்பார்க்கப்படுகிறது. ஹாக்கி விளையாட்டில் நிச்சயமாகப் பாகிஸ்தானை முறியடித்து தங்கத்தைச் சேர்ப்போம் என்று அணியின் தலைவர் திரு பர்கத் சிங் கூறியுள்ளார்.

டென்னிஸ் நட்சத்திரம் நிருபமா

தடகளப் போட்டிகள்

தடகளப் போட்டிகளில் இந்திய அணியின் அதிவேக ஓட்டக் காரர்களான திரு ராஜீவ் பாலகிருஷ்ணன், திரு ஆனந்த நடராஜன், திருமதி ஷைனி வில்சன் ரோசாகுட்டி, சோலைமதி, பகதூர் பிரசாத் ஆகியோர் நிச்சயம் தங்கத்தை இந்தியாவுக்காகத் தக்க வைப்பார்கள் என்பது திண்ணம்.

இந்திய அணியின் தலைவராக உள்ள திருமதி பி.டி. உஷா நிச்சயம் தங்கத்தை வென்று சிறப்பைத் தருவார் என்று எதிர்பார்க்கலாம்.



தடகளப் போட்டிகள் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களால் அமைக்கப்பட்ட ஜவகர்லால் நேரு விளையாட்டரங்கில் டிசம்பர் மாதம் 20 முதல் 24 முடிய நடைபெறவுள்ளது. உறுப்பு நாடுகளிலிருந்து 240 வீரர் வீராங்கனைகள் இப்போட்டிகளில் பங்குபெறுகிறார்கள்.

குத்துச் சண்டை

சென்னையைச் சேர்ந்த குத்துச் சண்டை வீரர் தேவராஜன் மற்றும் 10 பேர் கொண்ட இந்திய அணி சாந்தோம் மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் டிசம்பர் மாதம் 22 முதல் 26 முடிய நடைபெறவுள்ள குத்துச் சண்டைப் போட்டிகளில் பங்குபெற உள்ளார்கள். இந்தியாவிற்கு

ஆக்கி விளையாட்டு

நிச்சயம் தங்கத்தைத் தருவோம் என்று திரு தேவராஜன் நம்பிக்கைத் தெரிவித்துள்ளார். இதேபோல் ஜூடோ மற்றும் துப்பாக்கிச் சுடும் போட்டிகளில் இந்திய அணியினர் குறிப்பிடத் தக்க வெற்றிகளைப் பெறுவார்கள் என்பதில் ஐயமில்லை.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் சென்னையில் நடைபெறுவதால் இந்திய மண்ணுக்குச் சிறப்பைத் தரும் நம் அணி வீரர்கள் சிறப்பாக பங்கேற்று வெற்றி வாகைச் சூடித்தருவார்கள். இம்முறையும் தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள் வரலாற்றில் இந்தியாவை முன்னிலைப்படுத்துவார்கள். இந்த வெற்றி வாய்ப்புக் கெல்லாம் பின்னணியில் இருந்து ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளைச் சென்னையில் நடத்த வேண்டும் என்று கடுமையான முயற்சி களை மேற்கொண்டு, தமிழகத் திற்கும், இந்தியத் திரு நாட்டிற்கும் சர்வதேச அளவில் புகழைத் தேடித்தரும் வகையில் ஈடும் இணையும் இல்லாத வகையில் செயல்பட்டுவரும் மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித்தலைவி டாக்டர் ஜெ.ஜெயலலிதா அவர்களுக்கே எல்லாப் புகழும் உரித்தாகும்.

— மா. அசோகக

பங்கு பெறாத போட்டிகள்

தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் ஒரு விளையாட்டு இடம்பெற வேண்டுமானால் தெற்காசிய விளையாட்டு இணையத்திலுள்ள ஏழு உறுப்பு நாடுகளில் குறைந்தது மூன்று நாடுகள் அந்த விளையாட்டில் பங்குபெற வேண்டும். இல்லையேல் அந்தக் குறிப்பிட்ட விளையாட்டு, போட்டிகளில் இடம் பெறாது. போட்டி யிலிருந்து நீக்கப்படும்.

அந்த வரிசையில் சென்னையில் நடைபெறும் ஏழாவது தெற்காசிய விளை யாட்டுப் போட்டிகளில் 5 கி.மீ. நடைப்போட்டி, உயரம் தாண்டுதல், கம்பு ஊன்றித் தாண்டுதல் (Pole vault) சங்கிலிக் குண்டு எறிதல் ஆகியவை இடம்பெறா.

பெண்கள் பிரிவில் 100 மீ. தடை ஓட்டம், மராத்தான், 10 கி.மீ நடைப்போட்டி ஹெப்டத்லான், கூடைப்பந்து மகளிர் நீச்சல் ஆகியவை இடம்பெறா.

ஆண்களுக்கான துப்பாக்கிச் சுடும் போட்டியில் நடுவில் சுடுதல் (Centre Fire) போட்டி இடம்பெறவில்லை. நீச்சலில் உயரத்திலிருந்து பாய்ந்து குதித்தல் (Diving) இடம்பெறாது.

ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகள்: தயாராக உள்ள பதக்கங்கள்

சென்னையில் நடைபெற விருக்கும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டியில் 14 பிரிவுகளில் போட்டிகள் நடைபெற உள்ளன. மொத்தம் 916 பதக்கங்கள் வழங்கப்பட உள்ளன.

இதில் 285 தங்கப் பதக்கங்களும், 292 வெள்ளிப் பதக்கங்களும், 339 வெண்கலப் பதக்கங்களும் அடங்கும். ஒவ்வொரு பிரிவிலும் வழங்கப்படும் பதக்கங்கள் விவரம் வருமாறு:

விளையாட்டு	தங்கம்	வெள்ளி	வெண்கலம்
தடகளம்			
ஆண்கள்	24	28	28
பெண்கள்	21	24	24
குத்துச்சண்டை	12	12	24
கூடைப்பந்து	12	12	12
கால்பந்து	20	20	20
ஜூடோ	9	9	18
ஆக்கி	16	16	16
கபடி	12	12	12
துப்பாக்கி சுடுதல்			
ஆண்கள்	36	36	36
பெண்கள்	20	20	20
நீச்சல்	25	25	25
டேபிள் டென்னிஸ்	17	17	25
டென்னிஸ்	17	17	25
கைப்பந்து			
ஆண்கள்	12	12	12
பெண்கள்	12	12	12
பளுதூக்குதல்	10	10	10
மல்யுத்தம்	10	10	20
மொத்தம்	285	292	339

தடகளப் போட்டி-இந்திய அணி

சென்னையில் நடைபெறும் ஏழாவது தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளில் இந்தியாவின் தடகள அணிக்கு திருமதி.பி.டி.உஷா தலைமை வகிப்பார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இவர் ஏற்கெனவே ஒலிம்பிக் போட்டிகளிலும் 1987ஆம் ஆண்டு நடந்த தெற்காசியப் போட்டிகளிலும் தடகளப் போட்டிகளில் வென்று இந்தியாவிற்குத் தங்கம் தேடித் தந்தவர்.

ஆண்கள் அணி:

திருவாளர்கள்:

ராஜீவ் பாலகிருஷ்ணன்
ஆனந்த நடராஜன்
விக்ரம்சிங்
அமிட்கன்னா
ரூடி வர்கீஸ்
பரம்ஜித் சிங்
சித்தார்த் பஸக்
ஜோராசிங்
ராஜ்வீர்சிங்
பகதுர் பிரசாத்
அமந்தீப்சிங்
குலாப்சந்த்
கே.சங்கர்
பி.எஸ்.லோனே
பல்கார்சிங்
நரீந்தர்சிங்
ரஞ்சித் நந்தாவா
பாலமுருகன்
மனீந்தர்சிங்
ஜோஜி மாத்யு
எஸ்.சஞ்சீவன்
கே.எம்.போப்பையா
சந்தர் பால்
பிரேம்சந்தர் சிங்
பி.எஸ்.வினோத்
சக்திசிங்
பகதூர் சிங்
அஜித் பதுராரியா
ஜகதீஷ்சிங்

பெண்கள் அணி:

அனுராதா பிஸ்வால்
ஈ.பி.ஷைலா
எம்.கே.ஆஷா
டி.லாவண்யா,
கமலா சித்து
பாண்டீஸ்வரி,
ஆன்சி பிலிப்
ஜெபிமோல் ஆபிரஹாம்
பாபி அலோசியஸ்
கே.கே.சுனிதா,
எஸ்.ஜெயந்தி
பி.டி.உஷா,
அமன்தீப்கவுர்
சைனி வில்ஸன்,
ஹர்பன்ஸ் கவுர்
ரோசாகுட்டி,
நீலம் ஜே.சிங்
கே.எம்.பீனாமோல்,
ஸ்வரன்ஜித் கவுர்
சுஷ்மா பேரா
சசிகலா யாதவ்,
எம்.ஏ.மோலி
மாதுரி சேக்ஸனா
கல்பனா மொண்டல்
எல்.லீலாம்மா
உஷா வர்மா
பி.என்.சுமாவதி
குர்மித் கவுர்
வனஜா,

இந்தியத் தடகள அணிக்கு திரு.பகதூர் சிங் பயிற்சியாளராக இருப்பார். திரு. ஹர்பன்ஸ் சிங், பி.கந்தியாட், ஹர்கோபிந் சிங், டி.பி.யோசப், . எஸ்.பிச்சையா, ஆகியோர் பயிற்சி உதவியாளர்களாக இருப்பார்கள்.

Verified
தமிழ்நாடு ஆவணக் காப்பக
199917.

ஆசிரியரும் வெளியிடுபவரும் : இ. சன்முக ராஜேஸ்வரன், இ.ஆ.ப., தமிழ்நாடு அரசு செய்தி-மக்கள் தொடர்பு இயக்குநர், சென்னை.
அரசினர் தோட்டம் தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
முகவரி : தமிழரசு அலுவலகம், அரசினர் தோட்டம், சென்னை-600 002. தொலைபேசி எண்: 568926, 568927



மாநில திரைப்பட விருது
வழங்கும் விழா